31196

திருவாரூர்த் திருக்கோயில்

குடவாயில் பாலசுப்ரமணியன்., B.Sc., M.A.,



திருவாரூர் ஸ்ரீ தியாகராஜ சுவாமி
திருக்கோயில் வெளியீடு

திருவாரூர்த் திருக்கோயில்

குடவாயில் பாலசுப்ரமணியன் B.Sc., M. A.,
(சரஸ்வதி மகால் நூலகம்—தஞ்சாவூர்)

திருவாரூர் அருள்மிகு தியாகராஜசுவாமி
திருக்கோயில் வெளியீடு

திருவாரூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில்
புனித திருக்குட நன்னீராட்டு விழா வெளியீடு

ஆசிரியர் : குடவாயில் பாலசுப்ரமணியன் B.Sc., M. A.,

முகவரி : எண் 6, மத்திய சேமிப்பு கிடங்கு எதிர்புறம்
வல்லம்சாலை—தஞ்சாவூர்.

© ஆசிரியர்க்கு

விலை : ரூ 25-00

கிடைக்குமிடம் :

அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில்
திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டம்.

அச்சிட்டோர் :

சர்மாஸ் ஸானடோரியம் ப்ரஸ்,
கணேஷ்நகர், புதுக்கோட்டை.
போன்: 2659

முதலாம் இராஜேந்திர சோழன் கங்கை வரை கொண்ட
வெற்றியையும் அணுக்கி பரவை தியாகேசர் கோயிலை
கற்றளியாக எடுத்ததையும் மையமாகக் கொண்டு
டாக்டர் இரா. நாகசாமி அவர்கள் இயற்றிய

"கங்கை கொண்ட சோழவைபவம்"

என்னும் நாட்டிய நாடகத்திலிருந்து ஒரு பாடல்

பல்லவி — இராகம்: சிம்மேந்திரமத்திமம்

திருவாரூர் பெருமானின் திருவடி தொழ விழைந்தான்
தினந்தொறும் அவர் புகழ் கருத்தினில் இருத்தியே

—திருவாரூர்

சரணம்

முசுகுத்த சோழனார் முன்னர் வணங்கியதும்
மனுநீதி மன்னனார் மகனைக் கடிந்ததும்
இணையிலா ஆரூரன் எழில்மிகு சுந்தரன்
அடியவர் தொகை தனை இசைத்ததும் எண்ணியே

—திருவாரூர் பெருமானின்

அணுக்கி பரவையை அன்பினால் அழைத்துடன்
தேரினில் ஏற்றியே திருஉலா வந்தனன்
திருக்கோயிலை யடைந்து தியாகரின் முன்னின்று
இருவருமே யிணைந்து ஏத்தி வணங்கிட

—திருவாரூர் பெருமானின்

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் — தருமபுரம்
26—ஆவது குருமகாசந்நிதானம் — மயிலாடுதுறை (அஞ்சல்)
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த — 609 001
பரமாசாரிய சுவாமிகள்

''ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே''

ஆசியுரை

தமிழகத்துச் சைவத் திருக்கோயில்களுள் சாலப் பழமையும், சாலப் பெருமையும் கொண்டு விளங்குவது திருவாரூர் அருள்மிகு தியாகராஜ சுவாமிதிருக்கோயில். 'கோயில்'என்பது தில்லையையும் 'பெரிய கோயில்' என்பது திருவாரூரையும் குறித்து வழங்கும் சப்தவிடங்கத்தலங்களுள் தலையாயதாய், பஞ்ச பூதத்தலங்களுள் பிருதுவி (மனா)த் தலமாய்,முத்தித்தலங்கள் ஐந்தனும் 'பிறகக முதலி' தரும் பெருமை பெற்றது திருவாரூர், சங்ககாலச் சோழ மன்னர்களின் தலைநகராகவும் பிற்காலச் சோழ மன்னர்கள் முடி சூடிக் கொள்ளும் எழில் நகராகவும் விளங்கிய திருவாரூர், மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றாலும் சிறந்து விளங்குவது. மனுநீதிச் சோழனின் அருள் வரலாறு நிகழ்ந்தேறிய திருவாரூர், மூவர் முதல்வர்களாலும் பாடப்பெற்றது. சுந்தரமூர்த்தி சுவாமி கள் அருள் வாழ்வு மலர்ந்த திருவாரூரில் தான் பெரியபுராண ஆக்கத்திற்கு முதன்மையான 'திருத்தொண்டத் தொகை' களாகக் கொண்டு பிறந்தது,

கோயில் ஐந்து வேலி, குளம் ஐந்து வேலி. செங்கழுநீர் ஓடை ஐந்து வேலியாகச் சிறந்து விளங்கும் திருவாரூர்த் திருக்கோயில், தமிழகக்கலை வரலாற்றிலும், இசை வரலாறறிலும் பெரும் பங்கு வகிப்பது. அறநெறி, சித்திச்சரம், போன்ற பல சிவாலயங் களையும், நாற்பதுக்கு மேறபட்ட சுற்றுக் கோயில்களையும கொணடு விளங்கும் இப் பெரிய் கோயிலின் குடமுழுக்குப் பெரு விழா 130 ஆணடுகளுகுப் பின திருப்பணி செய்து தற்போது நடைபெறவுளளது. இடையில 40 ஆண்டுகளுக்கு முன முக்கிய மாவ சந்நிதிகட்கு மட்டும அஷடபநதனம் சார்த்தி மகாகும்பாபி ஷேகம நடைபெற்றுள்ளது.

திருக்கயிலாயபரம்பரைத் தருமபுர ஆதீனத்திற்கும் திருவாரூர் ஊர்க்கும் இடையே நிலவும் உறவும் தொடர்பும் பெரிது. நம்மீது ஆதீனக் குரு முதல்வரின் ஞானாசிரியர் சுவாமிகள் ஞானப்பிரகாசர் அருள் வாழ்வு அமைந்த தலம் இது. தருமை ஆதீன மடத்திருவாரூர் இராஜன் கட்டளைச் சாரபில் தியாகேசர் கோயில் நித்தியநிற மித்துப் பூசை முறைகள், சிறப்புறப் பரிபாலிக்கப்பெற்று வருகின்றது. தருமை ஆதீனத்திருக்காட்டத்து அடியவர்களுள் திருவாரூர் புராணம் அருளிய சம்பந்த முனிவரும் கமலாம்பிகைப் பிள்ளைத் தமிழ் பாடிய சிதம்பர முனிவரும், திருவாரூர்த் திருக் கோயில் தெற்கு இராஜ கோபுரத்தை கி. பி. 1897 இல் திருப்பணி செய்து நிறைவித்த அருணாசலத் தம்பிரானும், பல ஆண்டு களாக ஓடாதிருந்த திருவாரூர்த் தேரை தருமையாதீன 12-வது குரு மூர்த்திகள் காலத்தில் வாழ்ந்திருந்து ஓடச்செய்வித்த முத்துக் குமார சுவாமித் தம்பிரானும் குறிப்பிடத்தக்க அரும் பணிகளாற்றியவர்கள்.

பாரம்பரிய பெருமைமிக்க திருவாரூர் வரலாற்றையும் அரிதின் முயன்று திரட்டி அன்பர் குடவாயில் பாலசுப்பிரமணியன் 'திருவாரூர் திருக்கோயில்' எனற தலைப்பில் ஆய்வு நூல் ஒன்றை வெளியிடவிருப்பது மகிழ்ச்சி தருகிறது. தருமையாதீனம், மகா வித்துவான் தண்டபாணி தேசிகரைக் கொண்டு 'திருவாரூர்' எனற தலைப்பில் விரிவான ஆய்வு நூல ஒன்றை 1949-ல் வெளி யிட்டது. பின்னரும் திருக்கோயில தொடர்பான நூல்கள் பல தருமையாதீனத்தால் வெளியிடப் பெற்றது.

குடவாயில் பாலசுப்பிரமணியன் 20 உள் தலைப்புக்களில் விரிவாக இந்நூலை ஏறத்தாழ 550 பக்க அளவில் உருவாகி யுள்ளார். ஆராயசசி என்பது என்றுமே முற்றுப் பெறாது மேலும் நீண்டு கொண்டே செல்லத்தக்கது. இவர் காண்டு காட்டி யிருக்கும் முடிவுகள் பல மேலும் நிகழ்த்தப்பெறும் ஆய்வுகளால முழுமை பெறுதல் கூடும். இந்நூல் திருவாரூர் தேவஸ்தான வெளியீடாக குடமுழுக்கு விழாவில் வெளிவருவது மகிழ்ச்சி தருகிறது.

'திருவாரூர் திருக்கோயில்' நூலாசிரியர் குடவாயில் பால சுப்பிரமணியன் மேலும் பல ஆய்வுகளை நிகழ்த்தி நீடு இனிது வாழவும், நூல் இனிதே வெளிவந்து மக்களுக்குப் பயன் நல்கவும் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

ஆளுடையபிள்ளை, இ.ஆ.ப.,
துணையர் (ம) செயலாளர்
வணிகவரி மற்றும் அறநிலையத்துறை,
சென்னை.

அணிந்துரை

திருவாரூர் திருக்கோயில் என்னும் இந்நூல் திரு. குடவாயில் பாலசுப்பிரமணியன் அவர்களால் எழுதப்பட்டு, அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில் வெளியீடாக வந்துள்ளது.

இருபது தலைப்புகளில் திருவாரூர் கோயிலின் வரலாற்றை இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள், பட்டயங்கள், வரலாற்றறிஞர்களின் கூற்றுகள் இவற்றைத் துணையாகக் கொண்டு செம்மையான முறையில் விளக்கியுள்ளார்.

'ஆரூர் ஓர் அறிமுகம்' என்னும் முதல் தலைப்பு திருவாரூரின் தொன்மைச் சிறப்பினை எடுத்தியம்புகின்றது. தில்லைக் கோயிலுக்கும் முந்தியது திருவாரூர்க் கோயில் என்று நாவுக்கரசர் வழிநின்று நிறுவுகின்றார்.

திருவாரூர்க் கோயிலுக்குப் பெருமை தரும் திருக்கோபுரங் களைப் பற்றி அடுத்துக் காண்கிறோம். இராச கோபுரத்தின் அமைப்பு,கட்டிடநிர்மாணச்சிறப்பு, அதில் இடம்பெறும் கவினுயர் சிற்பங்களின் மாண்பு இவற்றைப் பற்றிவிரிவாக விளக்குகின்றார். கலைப்படைப்புகள் அதிகமுடைய ஓர் கலைக் களஞ்சியமாகக் கீழை இராசகோபுரம் விளங்குவதை அறிந்து வியக்கின்றோம். இக் கோபுரத்தில் இடம் பெறும் கல்வெட்டுச் செய்திகளின் தமிழாக்கம் எளிய தமிழில் வழங்கப்பட்டுள்ளமை பாராட்டுதற் குரியது. இக்கல்வெட்டுக்களைக் கொண்டு கீழைக் கோபுரத்தின் காலம் பற்றி ஆராய்ந்து, இது மூன்றாம் குலோத்துங்கனால்

(கி.பி. 1178-1218) கட்டப்பட்டது என்பதை விளக்கும் பகுதி ஆசிரியரின் வரலாற்றறிவுக்குச் சான்றாகும்.

'நம் தோழன்' என்று இறைவன் கூறும் பேறு நாயன்மார்களில் சுந்தரமூர்த்தி நாயனாருக்கும், மன்னர்களில் மூன்றாம் குலோத்துங்கனுக்கும் தான் கிட்டியது' என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆரூர் கோயிலில் உள்ள பிற கோபுரங்களின் வரலாற்றையும் விளக்கியுள்ளார்.

நம்பி ஆரூரர் அடியவர்களைக் கண்டு வணங்கி திருத்தொண்டத் தொகை பாடிய தேவாசிரிய மண்டபம் குறித்து அடுத்த இயல் விளக்குகிறது. 'தேவாசிரியன்' என்ற சொல் தமிழ் இலக்கியங்களில் முதன் முதலாகச் சேக்கிழாரின் பெரியபுராணத்தில்தான் காணப்படுகிறது என்பது புதிய செய்தி. இங்குள்ள கல்வெட்டுக்களில் காணப்படும் திருக்காவணம் என்றசொல் பந்தல் என்பதைக் குறிக்கும் எனவும், 'தக்கார்க்குத் தக்கான்' என்றபெயர் தகுதியுடையவர்களுக்குத் தகுதியுடையவன் எனும் பொருளில் ஆரூரின் அருட்சோதியான திருமூலட்டானரின் பெயர் எனவும் ஆசிரியர் விளக்கியுள்ளது அன்னாரின் ஆய்வுத் திறனைப் புலப்படுத்தும்.

நமிநந்தியடிகள் திருக்குளத்து நீரால் திருவிளக்கேற்றிய அரநெறி (அசலேசம்) என்னும் கோயில் வரலாற்றுப் பெட்டகமாக விளங்கும் சிறப்பு, தமிழ் வடமொழி இலக்கியங்களில் புகழப்படும் பூங்கோயிலின் சிறப்பு, புற்றிடங்கொண்ட ஈசனின் புகழ் இவற்றை விளக்கிய பின் தியாகராஜர் திருக்கோயிலை அறிமுகப்படுத்துகிறார்.

அரநெறி, பூங்கோயில் இவைகளைத் தன்னகத்தே கொண்ட ஆரூர்த் திருக்கோயிலைத் தியாகராஜர் திருக்கோயில் என்றழைக்கின்றோம். முதலாம் இராஜேந்திரனால், பரவை என்ற நங்கையின் வேண்டுகோளுக்கிணங்க 1029-31-இல் இது கட்டப்பட்டதாகக் கல்வெட்டு கூறுகிறது.

தியாகராஜர் வழிபாடு என்னும் பகுதியில், திருமாலுக்கு உமையவளால் எற்பட்ட சாபத்தைப் போக்குவதற்காகச் சிவபெருமானால் அளிக்கப்பட்டத் திருமேனியே சோமாஸ்கந்த மூர்த்தி (இளமுருகு உடனுறையும் அம்மையப்பர்) என்பதைப்

புராண வாயில்களாகச் சுவைபட விளக்கியுள்ளார் ஆசிரியர். இத்திருமேனியைத் திருமாலிடமிருந்து இந்திரன் பெற்றதாகவும், அதனை முசுகுந்தன் தன் திறமையால் பெற்று திருவாரூரில் தாபித்ததாகவும் அறிகிறோம். மேலும், இந்திரனிடமிருந்து முசுகுந்தன் இத்திருமேனியைப் பெறுப்போது மேலும் ஆறு திரு மேனிகளைப் பெற்றதாகவும், அவை வழிபடப்படும திருத்தலங் களே சப்தவிடங்கத் தலங்களாகுமென்றும் அறிகிறோம்.

மேலும் கி.பி ஏழாம் நூற்றாண்டு முதல் கி பி. 14-ஆம் நூற்றாண்டு வரை தியாகராஜன் என்ற சொல்லாட்சியே காணப் படவில்லை. தியாக வினோதன் என்ற பெயரே காணப்பட்டது என்பதையும், வீதிவிடங்கப் பெருமானின் திருமேனி தற்போது அர்த்த மண்டபத்தில் இருப்பது போலல்லாமல் கருவறையில்தான் இருந்திருக்க வேண்டும் என்பதையும் ஆசிரியர் ஆராய்ந்து கூறுகின்றார்.

திருமாலின் மார்பில் இறைவன் அமர்ந்துள்ளமையால், அம் மாலவனின் மூச்சுத்துடிப்பால் மேலும் கீழும் இவ்விறை உருவம் செல்லும் பாங்கே 'அஜபா நடனம்' ஆகும். ஆனால், பழந்தமிழ் இலக்கியங்களோ, மூவர் தேவாரமோ, வீதிவிடங்கன் திருமேனி பற்றி எப்புராணச் செய்திகளையும் குறிப்பிடவில்லை; பெரிய புராணமும் குறிக்கவில்லை; கி.பி. 13-ஆம் நூற்றாண்டு வரை உள்ள கல்வெட்டுக்களோ, சிற்பங்களோ, தியாகராஜர் பற்றிக் குறிக்கவில்லை. தியாகராஜர் திருமேனியை மூடியே வழிபடுகின்ற முறையும், முசுகுந்தன் புராண வரலாறும் கி பி. 15-ஆம் நூற் றாண்டில் தொடங்கி, கி.பி. 16, 17-இல் முழுவடிவம் பெற்றது என்பதை வரலாற்றுச் சான்றுகளால் ஆசிரியர் நிறுவுகின்றார்.

14-ஆம் நூற்றாண்டில் மாலிக்காபூர் தமிழகத்தின் கோயில் களைக் கொள்ளையிட்டுச் சூறையாடினான் மீண்டும் விஜயநகரப் பெருமன்னர்கள் காலத்தில் சைவம் மலரத் தொடங்கியது. அப் போது முன்பு வீதிவிடங்கனாய் இருந்த சோமாஸ்கந்த திருமேனி- தியாகராஜர் என்ற பெயர் மாற்றம் பெற்றது; வழிபாட்டு நெறிகள் மாறின; புதிய புராணக்கதைகள் மக்களைக் கவர்வதற் காகத் தோன்றின என்பனவற்றைச் சுவையுடன் விளக்கிச் சொல் கின்றார் ஆசிரியர்.

பல்லவர் காலத்திலும் சோழர் காலத்திலும் இறைவனுக்குக் கோயில் எழுப்பும்போது, மூலக் கோயிலைச் சுற்றிய திருச்சுற்றில்

(பிரகாரம்) பரிவார தேவதைகளுக்குக் கோயில் அமைக்கும் பழக்கம் இருந்தது. ஆனால் இராஜேந்திர சோழனின் இறுதிக் காலம் முதலே ஒவ்வொரு சிவாலயங்களிலும் தனித்த அம்மன் கோயில் அமைக்கும் முறை தோன்றியதாகவும், இது ''திருக்காமக் கோட்டம்'' என்றழைக்கப்பட்டதாகவும் ஆசிரியர் கூறுகிறார். இப்பகுதியில் அல்லியங்கோதை (நீலோத்பலாம்பாள்) திருக் கோயில், கமலாம்பாள் திருக்கோயில் அமைப்பு முறைகள் விளக்கப்படுகின்றன.

திருக்கோயில்கள் எந்த அளவிற்குச் சிறப்புற்றிருந்தனவோ, அதே அளவு திருக்கோயில் மண்டபங்களும் சிறப்புற்றிருந்தமையை அடுத்துக் காண்கிறோம்.

'ஆரூர் வளர்த்த ஆடற்கலை' என்னும் பகுதியில் முதலில் ஆடவல்லானின் கூத்து முறைகள் விளக்கப்படுகின்றன.

தேவாசிரிய மண்டபம் சிவனடியார் பலர் உறைந்த இடம் மட்டுமன்று, தியாக வினோதனாம் வீதி விடங்கப் பெருமான் இங்கெழுந்தருளி ஆடலும் பாடலும் கண்டு களிப்பாரெனக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இராஜராஜன் நடனக் கலைக்கு ஆற்றிய பணியும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

அடுத்துள்ள பகுதியில், ஆவின் கடைநீர் நெஞ்சு சுடத் தன் பெறற்கரும் புதல்வனை ஆழியின் மடித்த மனுநீதிச் சோழனின் வரலாற்றைப் பல்வேறு இலக்கியங்கள், கல்வெட்டுக்கள் வழி ஆராய்ந்துள்ளார் ஆசிரியர். மனுவின் வரலாற்றை உணர்த்தும் சிற்பங்கள் அடங்கிய கல்தேர், அதன் அமைப்பு, சிறப்பு, விளங்கு மிடம் இவற்றையும் விளக்குகிறார்.

'திருக்கோயிலும் வரலாற்று மாமன்னர்களும்' என்னும் தலைப்பில் திருவாரூர்க் கோயில் வரலாற்றில் பெறும் இடமும், பல தலைமுறைகளைச் சார்ந்த மன்னர்களுக்கும், இக் கோயிலுக்கும் இருந்த தொடர்புகளும், அவற்றை விளக்கும் சான்றுகளும் மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

சோழர் காலத்தில் ஆரூர்க் கோயிலின் நிர்வாகம் அமைந்த நிலை, ஆரூர்க் கோயிலுக்கு அளிக்கப்பட்ட இறையிலி நிலங்கள், பொன், வெள்ளி ஆபரணங்கள், திருக்கோயில் பூசை நெறிகள்

அனைத்தும் 'கல்வெட்டில் காணும் சோழர் காலச் சமுதாய நிலை' எனும் தலைப்பில் ஆராயப்படுகின்றன.

'ஆரூரின் சிறப்பு அட்சங்கள்' என்னும் பகுதி மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டுகிறது. சுமலாலயம், ஆரூர்க் கோயிலில் உள்ள திருவுருவச் சிலைகள், செப்புத் திருமேனிகள், ஓவியங்கள் இசை ஞானியாரும், சங்கீத மும்மூர்த்திகளும் பிறந்த தலம், பூத நிருத்தம், ஆரூர் கோயிலில் திரைக்குப்பின் சுத்தமத்தளம் வாசிக்கப்படல், இப்படியாக 29 சிறப்பம்சங்களை சிறப்பாகச் சுட்டிக் காட்டுகிறார்.

பொதுவாக தேவாரங்களைப் பாடி முடித்ததும் 'திருசிற்றம் பலம்' என்றே முடிப்பர். ஆனால், ஆரூரில் இங்ஙனம் கூறி முடிப்பதில்லை. ஏனெனில் தில்லைக்கும் மூத்தபதி திருவாரூர் என்பதால் இங்கு தில்லையைச் சிறப்பித்துக் கூறல் இல்லை. தியாக ராஜர் இங்கு இராஜ கோலத்திலிருப்பதால், அவருக்குப் பூசை செய்யும் நயினார்கள் யோக வேஷ்டியை மார்பில் போர்த்திய வண்ணம் பூசை புரிதல் ஆரூரில் மட்டுமே காணக்கூடியது. திருநீற்றை ஆரூர் கோயிலில் 'திருமந்திரம்' என்று அழைப்பதே மரபாக உள்ளது. ''ஆரூரில் உள்ள வாதாபி விநாயகர் திருமுன்பு தான் முத்துசுவாமி தீட்சிதர் 'வாதாபி கணபதிம் பஜேஹம்' என்ற பாடலைப் பாடினார்'' என்பன சுவையான செய்திகள்.

பேசிடும் பொற்சித்திரங்கள் என்னும் தலைப்பில் ஆரூர் திருக் கோயிலில் காணப்படும் ஓவியங்களின் சிறப்புகள் மிகத் தெளிவாக விளக்கப்படுகின்றன.

ஆடல், பாடலுக்குப் புகழ் பெற்றது ஆரூர். பாரிநாயனம் என்ற நாதசுரக் கருவி ஆரூர் கோயிலில் அன்றி வேறெங்கும் காண இயலாது என்கிறார். 'ஆரூர் தந்த இசைக் கருவிகள்' என்னும் இப்பகுதியில் குடமுழா (பஞ்சமுக வாத்தியம்) எனனும் ஆரூருக்கே உரிய சிறப்புக் கருவியின் வரலாற்றை ஆசிரியர் ஆராய்ந்துள்ள விதம் அவருடைய இலக்கியப் புலமையைக் காட்டுகின்றது.

கி.பி. 7 முதல் 19 ஆம் நூற்றாண்டு வரை ஆரூர் தந்த அரும் பெரும் இலக்கியங்களை அடுக்கித் தொடுத்து மாலையாக்கியுள்ளது பாராட்டுதற்குரியது.

ஆரூர் திருக்கோயிலில் அமைந்துள்ள அற்புதமான செப்புத் திருமேனிகள், கல்வெட்டுக்கள், சாசனங்கள் அனைத்தையும் இறுதிப் பகுதிகள் விளக்குகின்றன.

இந்நூலைப் படித்து முடித்ததும் திருவாரூர்க் கோயிலை நன்றாகச் சுற்றிப் பார்த்துவிட்டு வந்த உணர்வும், மனநிறைவும் ஏற்படுகின்றன.

ஆசிரியரின் இலக்கியப் புலமை, வரலாற்றறிவுச் செய்திகளைத் தேடி, சேகரித்து, வகைப்படுத்தி, தொகைப்படுத்தி வழங்கியுள்ள பாங்கு அனைத்தும் பாராட்டுதற்குரியன.

இந்நூல் திருவாரூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக் கோயில் குடமுழுக்கு விழாவினையொட்டி வெளியிடப்படுவது மகிழ்ச்சிக்குரியது.

24-3-88

கு. ஆறுடையபிள்ளை

தி. இரா.சு. கல்யாணசுந்தரம் ஐ.ஏ.எஸ்.,
ஆணையாளர்,
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை–600 034.

அணிந்துரை

திருவாரூர் அருள்மிகு தியாகராஜ சுவாமித் திருக்கோயிலின் திருக்குட நீராட்டு விழாவை ஒட்டி, திரு குடவாயில் பாலசுப்பிர மணியம் எம்.ஏ., அவர்கள் எழுதியுள்ள திருவாரூர்த் திருக் கோயில் தலவரலாற்றினை வெளியிடுவது அறிந்து மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இருபது பகுதிகளாக இந்நூலை ஆசிரியர் பகுத்துக்கொண்டு 500-க்கும் அதிகமான பக்கங்களில் திருவாரூர் கோயில் வரலாற்றை மிக விரிவாக ஆய்ந்து நமக்கு வழங்கியிருக்கிறார்.

திருவாரூர் திருக்கோயில் பற்றிய செப்பேடுகள் கல்வெட்டுகள் உள்ளிட்ட அனைத்துச் செய்திகளையும் முழுமையாகத் தாங்கி வரும் முதல் நூலாக இந்நூல் அமைந்திருப்பது பாராட்டத்தக்கது

திருவாரூர்த் திருக்கோயிலே சிதம்பரம் திருக்கோயிலைவிட மிகப் பழமையானது என்பதற்கு

> ''மாடமொடு மாளிகைகள் மல்கு தில்லை
> மணிதிகழும் அம்பலத்தே மன்னிக் கூத்தை
> ஆடுவான் புகுதற்கு முன்னோ பின்னோ
> அணியாரூர் கோயிலாக் கொண்டநாளே''

என்ற அப்பர் தேவாரத்தை ஆசிரியர் சான்று காட்டியிருக்கிறார். மேலும் அவர் ''எல்லாத் தமிழ்நாட்டுத் தேவாரத்தலங்களிலும் ஓதுவார்கள் தேவாரப் பாடல்கள் பாடும்போது பதிகம் முடிந்த பின் திருச்சிற்றம்பலம் என்றே கூறிமுடிப்பர். ஆனால் ஆரூரில் தேவாரப் பாடல்கள் பாடும்போது இவ்வாறு கூறப்படாதது

சிறப்பு அம்சமாகும். ஏனெனில் தில்லைக்கும் மூத்தபதி திருவாரூர் என்பதால் இங்குத் தில்லையைச் சிறப்பித்துக் கூறப்படுவது இல்லை.'' என்று நடைமுறையில் இருந்து வரும் பழக்கத்தையும் தம் கருத்துக்குச சான்றாகக் காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இன்னும் இத்தலத்தின் பழமையைக் காட்ட, பெர்குசன்என்ற வரலாற்று ஆசிரியர் தெரிவித்துள்ள

> ''மக்கள் கல்லாலும் உலோகப் பொருள்களாலும் கடவுள் உருவத்தை அமைத்து வழிபடுவதற்கு முன்பே மரத்தையும் புற்றுக்களையும் வழிபட்டார்கள். ஆதலின் புற்று வழிபாடு தொன்மையானது.

சமய நாகரீகத்திற்குத் தலை அதுவே'' என்ற கருத்தையும் சான்று காட்டி புற்றிடங் கொண்ட புனிதன் திருக் கோயிலின் தொன்மையை விளக்கி இருப்பது மிகச் சிறப்பாக உள்ளது.

செப்புப்பட்டயங்கள் மற்றும் கல்வெட்டுக்களின் துணைக் கொண்டு திருவாரூத் திருக் கோயிலின் மெய்யான வரலாற்றை ஆசிரியர் இந்நூலில் நிறுவ முயன்று அதில் முழு வெற்றியும் பெற்றுள்ளார். அவர் எத்தகைய நுட்பமான ஆய்வினை இந் நூலில் மேற்கொண்டு மிகக் கடுமையாக உழைத்திருக்கிறார் என்பதற்குக் கீழ்க்கண்ட ஒரு பகுதியைச் சான்றாகக் காட்டலாம்.

''கி.பி. 884இல் தொடங்கும் சோழமன்னனின் கல்வெட்டிலே தொடங்கி கி.பி. 1342ஆம் ஆண்டு பாண்டிய மன்னன் ஒருவனது கல்வெட்டுவரைத் தொடர்ந்து பல கல்வெட்டுகள் இக்கோயில் பெற்ற ஏற்றத்தையும் தெளிவுறத் தெரிவிக்கின்றன. இப்பாண்டி யனது கல்வெட்டிற்குப்பிறகு 100 ஆண்டுகள் வரை இத்திருக் கோயிலில் எந்த ஒரு கல்வெட்டும் காணப்படவில்லை. பின்பு கி.பி. 1429ல் விஜயநகர மன்னர்கள் காலத்து வீரபூபதி உடை யாரின் கல்வெட்டில் தொடங்கி பிற்காலம் வரை தொடர்ந்து நாயக்க மன்னர்கள் மற்றும் மராட்டிய மன்னர்களின் கல்வெட்டு களும் செப்பேடுகளும் கிடைத்துள்ளன. இவற்றைக் கூர்ந்து நோக்கும்போது இடையில் ஒரு நூறு ஆண்டுகள் இத்திருக்கோயில் ஓர் இருண்ட காலத்தைச் சந்தித்துள்ளது.'' என்று காட்டும் நூலாசிரியர் அந்த இருண்ட காலத்திற்குக் காரணமானவன் மாலிக்காபூரே என்பதை விளக்கும்போது இவருடைய ஆய்வின் சிறப்பை நம்மால் மிக நன்றாக உணரமுடிகிறது.

இந்நூலில் இடம் பெற்றுள்ள ''ஆரூர் வளர்த்த ஆடற்கலை'' ''ஆரூர் தந்த இசைக்கருவிகள்'' ''ஆரூர் தந்த அரும்பெரும் இலக்கியங்கள்'' போன்ற பகுதிகள் மிகச்சிறப்பானவை. இராஜ ராஜன் தான் கட்டிய தஞ்சைப் பெருங்கோயிலில் நடனமாட 400க்கு மேற்பட்ட ஆடல் அரசிகளைத் தேர்ந்தெடுத்தான் அதில் 51 பேர் திருவாரூர் திருக்கோயிலில் இருந்து தேர்ந் தெடுக்கப்பட்டனர் என்று குறிப்பிடும் ஆசிரியர் அவ்வாடல் அரசிகளின் பெயர் விவரங்களைத் தொகுத்து வழங்கியிருப்பது சிறப்பான ஒன்று. சங்க இலக்கியங்கள் போற்றும் குடமுழாவைப் பஞ்சமுக வாத்தியமாக விளக்கி அவ்வாத்தியம் இன்று திருவாரூர் மற்றும் திருத்துறைப்பூண்டி ஆகிய இருகோயில்களில் மட்டுமே இருப்பதையும் நமக்கு எடுத்துக்காட்டியிருக்கிறார் ஆசிரியர். ''ஆரூர் தந்த அரும்பெரும் இலக்கியங்கள்'' ஒரு மிகச்சிறந்த பகுதி. திருவாரூர் பற்றிய எண்ணற்ற தமிழ் மற்றும் வடமொழி நூல்களைப் பட்டியலிட்டுக் காட்டியுள்ள ஆசிரியர், அச்சில் வாராத சுவடிகளில் காணப்படும் ஆரூர்ப்பாடல்களையும்கூட நமக்கு எடுத்துக் காட்டத்தவறவில்லை.

''ஆரூரன் சன்னதிபோல் ஆரூரன் ஆலயம் போல்
ஆரூரன் பாதத் தழகுபோல்-ஆரூர்
மருவெடுத்த கஞ்சமலர் வாவிபோல் நெஞ்சே
ஒருவிடத்தி லுண்டோ உரை''

என்று ஆசிரியர் காட்டியிருப்பதைப் போல் திருவாரூர்க் கோயிலும் மிகச் சிறப்பான ஒன்று. திருவாரூர் வரலாற்றை விவரிக்கும் எண்ணற்ற நூல்களுள் திரு குடவாயில் பாலசுப்பிர மணியம் அவர்கள் எழுதியுள்ள இந்நூலும் மிகச் சிறப்பான ஒன்று

திருவாரூர் அருள்மிகு தியாகராஜப் பெருமான் திருவருளால் இச்சிறப்புமிகு நூலைப் படைத்திருக்கும் நூலாசிரியரையும், நூலைத்தக்க தருணத்தில் வெளியிடும் அருள்மிகு தியாகராஜ சுவாமி ஆலய பொறுப்பாளர்களையும் நான் மனம் மகிழ்ந்து பாராட்டி என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

28-3-88 தி இராச. கல்யாணசுந்தரம், இ.அ.ப.

டாக்டர். நாகசாமி, M.A., Ph.D.,
இயக்குநர் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை,
சென்னை-28

அணிந்துரை

திருவாரூர் தியாகேசப் பெருமானின் பெரும் திருக்கோயில் சோழர் வரலாறோடு இணைந்து வளர்ந்த மாபெரும் கோயிலாகும். பண்பில் திளைத்த பல அடியார்கள் வீதிவிடங்கப் பெருமானின் முன்னிலையில் நின்று பக்திப் பரவசம் எய்தி பல திருப்பதிகங்களைப் பாடி உய்ந்துள்ள புண்ணியத் தலம். சைவ சித்தாந்த தத்துவங்களை கடைந்தெடுத்த வெண்ணெய் போல அப்பர் பெருமான் தனது பாடலில்

''முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள் மூர்த்தி
அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னம் அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவருக்கே பிச்சி ஆனாள்
அன்னையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகழ்விடத்தார் ஆசாரத்தை
தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் தலைவன் நங்கை தாளே''

என்று பாடிய பாடல் ஆரூர்ப்பெருமானின் மீது பாடப்பட்டது. கோயிலிலே ஆடல் புரிந்த பரவையை, ஆலால சுந்தரம் விரும்பி மணந்து 'திருத்தொண்டத்தொகை' பாடிய இடமும் இதுவே. திருவாரூர் வரலாற்றை விரிவாக எழுத சுந்தரமூர்த்தி நாயனார் தொடங்கினார் என்றே கூறலாம். 'ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே' என்ற பாடல் வரலாற்றை சித்தரிக்கும் பாடல் தான். அடியார்களின் வரலாற்றைச் சித்தரிக்கும் அற்புதப் பாடல். இதிலிருந்து எழுந்தவை நம்பியாண்டார் நம்பி பாடிய ''திருத் தொண்ட திருவந்தாதி'' சேக்கிழார் பெருமான் இயற்றிய பெரிய புராணம்'', முதலிய வரலாற்று நூல்களாகும்.

அன்றிலிருந்து இன்று வரையில் எம்மான் உரையும் இக் கோயிலைப் பற்றி எத்தனையோ பெரியார்கள் எழுதிய நூல்கள் பல உண்டு. சோழப் பெருமன்னர்கள் கருங்கல்லிலே செதுக்கி வைத்த வரலாற்றுச் செய்திகளும் இக்கோயிலில் ஏராளமாக

உள்ளன. இப்போது தியாகேசப் பெருமான் அமர்ந்து அருள் பாலிக்கும் ஆலயத்தை இராஜேந்திர சோழனுடைய அன்புக் குகந்த நங்கை பரவை என்பாள் கட்டி வைத்தாள் என்ற அரும் செய்தியைக் கல்வெட்டு கூறுகிறது, அது மட்டுந் தானா? இராஜேந்திர சோழன் அவளுடன் வந்து தியாகேசனை வணங்கிய இடத்திலேயே ஒரு குத்து விளக்கு வைத்தான் என்று ''உடையார் ஸ்ரீஇராஜேந்திர சோழ தேவரும் அறுக்கியர் பரவை நங்கையும் நிற்குமிடம் தெரிய எடுத்த குத்துவிளக்கு'' என்று கல்வெட்டுக் கூறுகிறது. அத்துடன் இரண்டு பாவை விளக்கை அங்கே செய்து வைத்ததை அறிகிறோம். ஒன்றன் பெயர் 'பச்சைப்பாவை உமை நங்கை'. மற்றொன்றின் பெயர் 'பாவை சரியாமுலை நங்கை' என்பது. சோழ மன்னர்களிலே சிறந்த இராஜராஜன், இராஜேந்திரன், குலோத்துங்கன், பராந்தக பேரரசர்கள் எல்லோரும் பெரும் தொண்டு புரிந்திருக்கின்றார்கள். பிற் காலத்தில் முராட்டிய மன்னர்கள் தஞ்சையை ஆண்டபோது, அவர்களும் குறிப்பாகச் சகஜி மன்னரும் இக்கோயிலிலே சிறந்த ஈடுபாடோடு வழிபாட்டு திருப்பணிகள் செய்து சிறந்துள்ளனர். 18-ம் நூற்றாண்டின் இறுதியில் முத்துசுவாமி தீட்சிதர் தியாகேசப் பெருமானின் அருளால் அற்புதமான கீர்த்தனைகளைப் பாடி சிறந்து உள்ளனர். அண்மைக்காலம் வரையில் 'தியாகேசர் குறவஞ்சி' என்ற நாட்டியம் இங்கு ஆடப்பட்டு வந்துள்ளது. இராஜராஜன் காலத்துக்கு முன்பு இருந்து திருவாரூர் பரத நாட்டியக் கலையில் மிகச் சிறந்த இடம் வகித்து வந்துள்ளது. ஆரூர்ப் பெருமான் ஆடுகின்றபாங்கு ஆங்கே 'அஜபா' நாட்டியம் என்றும், அது 'யோக தத்துவங்களின்' உன்னதக் கருத்து, என்றும் ஆன்றோர் கூறுவர்.

இவ்வுன்னதக் கோயிலைப்பற்றிப் பல தல வரலாறுகள், புராணங்கள், கட்டுரைகள், பாடல்கள், இலக்கியங்கள் உள்ளன. ஏறக்குறைய 25 ஆண்டுகளுக்கு முன்னர் எனது குருவும், முன்னாள் இந்திய அரசு தொல்லியல் துறை இணை டைரக்டர் ஜெனரல் ஆகவும் இருந்த, காலம் சென்ற பத்மபூஷன் தி. நா. ராமச்சந்திரன் அவர்கள் இக்கோவிலுக்கு என்னை அழைத்துச் சென்று இதன் பல்வேறு சிறப்புக்களையும் எடுத்துப் புகட்டியது இன்னும் என் கண் முன்னே நிற்கிறது. தேவாசிரிய மண்டபத்திற்கு அழைத்துச் சென்று அங்கு நாட்டியத்தைக் குறிக்கும் 'நட்டுமுட்டுக்காரர்' களுடைய ஓவியத்தையும், பிற ஓவியங்களையும் அவர் எனக்கு எடுத்துரைத்தார். அதிலிருந்து இக்கோயிலின் கலை வரலாற்றில் சிறந்த ஈடுபாடு எனக்கு

ஏற்பட்டது எனில் மிகையாகாது. ஆதலின் 'திருவாரூர் தியாகராசர்' கோயிலைப் பற்றி, எஸ். பொன்னுசாமி எழுதிய ஆங்கில ஆய்வு நூலை 1972ல் எனது துறையில் முதன் முதலில் அச்சிட்டு வெளியிடும் பேறு பெற்றேன். நல்ல ஆராய்ச்சித் திறனோடு கல்வெட்டுக்களையும், கலையையும் தொகுத்துப்பல கல்வெட்டுக்களையும் மத்திய கல்வெட்டு ஆய்வுத்துறைக்குச் சென்று அவற்றைப் படித்துத் திறமையோடு இவ்விளைஞர் அந்த நூலை ஆக்கினார்,

ஆயினும் இப்பெரும் திருக்கோயிலைப் பற்றி கட்டிடங்கள், கலை, கல்வெட்டு, இலக்கியங்கள், ஓவியங்கள் முதலிய அனைத்துச் செய்திகளையும் தாங்கி முழு நூலாகத் தமிழில் இதுவரை ஒரு நூலும் வெளி வரவில்லை. இளைஞரே ஆயினும் நல்ல ஆர்வமும், துடிப்பும், அதே சமயம் வரலாற்று நெறி பிறழாது சம நோக்கோடு எழுதக்கூடிய ஆற்றலும், இலக்கிய ரசனையும் உடைய குடவாயில் பாலசுப்ரமணியம் இப்பெரும் கோயிலைப் பற்றி அருமையாக இந்தத் தமிழ் நூலை எழுதியிருக்கிறார். இது நல்ல நூல் என்று படித்தவர்கள் பாராட்டுவர் என்பதில் ஐயம் இல்லை. எத்தனையோ புதிய புதிய செய்திகளை அரும் பாடுபட்டுத் தேடி அழகுற இவர் அமைத்திருப்பது மிகவும் சிறப்பாகப் பாராட்டுதற் குரிய ஒன்று. ஒவ்வொரு பிரிவும் சுவையாக சான்றுகளோடு அழகாக எழுதப்பட்டுள்ளது, இந்நூலின் சிறப்பு ஆகும். கோயிலின் வரலாறு, பண்டைய வரலாறு மட்டும் அல்ல. இன்னும் நம்முடைய மக்களிடத்திலே நம்மை வியப்பில் ஆழ்த்தும் வண்ணம் வாழ்ந்து வரும் பல வரலாறுகள் இருக்கின்றன என்பதற்குச் சான்றாக இவரது நூலில் ''ஆரூரின் சிறப்பு அம்சங்கள்'' என்ற தலைப்பின் கீழ் உள்ளதைக் காணலாம். மூவர் முதலிகளுக்கு முதலிடம் கொடுத்துள்ளதும், தேவாரம் பாடும் முறைகளும் இவற்றுள் அடங்கும். திருவாரூர்க் கோயிலுக்கு விழுப்பரையர் என்று இன்றும் அழைக்கப்படும் பெருமக்கள் உள்ள தொடர்பைப் படிக்கும்போது வாழ்கின்ற வரலாற்றைக் காண்கிறோம். யானை ஏறுவார் என்ற பகுதியை படித்துப் பாருங்கள். அதைப் போல தெய்வத் திருமேனிகளை எடுத்து விழாவாக உலா எடுத்து வரும் பாங்கு பல கோயில்களில் பல விதமாக மிளிர்ந்து வருகின்றன. 'மணித்தண்டு' என்ற பகுதி கலையை சித்தரிக்கிறது. பணி என்ற ஒரு தமிழ்ச்சொல் உண்டு. அதற்கு ஆபரணம் என்றும், மலர்களால் அலங்கரித்தல் என்றும் தமிழ் அகராதியில் பொருள் குறிக்கப்படுகின்றன; தியாகேசர்

கோயிலில் மலர்களைத் தூவி அலங்கரிக்கும் மரபை இன்றும் திருப்பணி சாந்துதல் என்று கூறுவதை ஆசிரியர் மிக அழகாக எடுத்துரைத்துள்ளார். பூதங்கிருத்தம் என்ற ஒரு வகை நிருத்தத்தையும் இவர் குறிப்பிட்டுள்ளது இன்னும் இக் கோயிலிலிருந்து நாம் பல செய்திகளை அறிய இயலும் என்பதற்கு எடுத்துக்காட்டு.

பாலு அவர்கள் சோழமண்டலத்து வரலாற்று நாயகர்களைப் பற்றியும் அவர்களது படிமங்கள் எங்கெல்லாம் உள்ளன என்பது பற்றியும் வியக்கத்தகும் வகையில் ஆராய்ந்து வெளியிட்டுள்ள நூல், ஓர் உயர்ந்த நூல் என்பதில் ஐயமில்லை. அதற்கும் முன்னர் கருணாகரத் தொண்டமானைப் பற்றியும் குடவாயில் பற்றியும் எழுதியுள்ளார். நல்ல வரலாற்று நூல்கள் எழுதுவதில் இவருக்குள்ள ஆர்வத்தை இது காட்டுகிறது. இவர் போன்றே ஒரு சீடன் கிடைக்க இவரது குருவல்லவா பாக்யம் செய்திருக்க வேண்டும்!

தேவாசிரிய மண்டபத்துத் தியாகேசப் பெருமானின் முன்னிலையில் நடைபெற்ற நாட்டியங்களைப் பக்தியோடு தெய்வ முன்னிலையிலே நமது சோழ மன்னர்கள் கண்டு களித்துள்ளதை பல இடங்களிலே இந்நூலில் சுட்டிக் காட்டியுள்ளார். அங்கு ஆடியுள்ள பெண்களின் பெயர்களையும் கல்வெட்டுக்களிலிருந்து அங்காங்கே எடுத்துக் கொடுத்துள்ளார். அம்மன் உறைகின்ற ஆலயத்தை குலோத்துங்க சோழன் காலத்து இருந்து 'உலகுய்ய கொண்ட காமகோட்டம்' என்று அழகாக அழைத்ததை நமக்கு எடுத்துக் காட்டுகிறது. மண்டபங்களின் வரலாறு சிறப்புப் பெறுகின்றன. இறுதியில் செப்பேடுகள், கல்வெட்டுக்கள் ஆகியவற்றையும் செய்தியாக இணைத்துள்ளார். சுருங்கக் கூறின் நல்ல சுவையான (விதை இல்லாத) திராட்சை கனி கொத்தை நம்மிடத்திலே கொடுத்தால் எப்படி சுவைத்து இன்புறுவோமோ அதுபோல சுவையான நூலாக இதை நமக்கு அளித்துள்ளார். இது போன்ற நூல்கள் பல கோயில்களைப் பற்றி இவர் இயற்றி அதனால் வரலாறு வளமும் பெற, தியாகேசப் பெருமானின் பேரருள் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தித்து இவ்விளைஞர் சீரும், சிறப்பும் பெற்று 'நீடு வாழ்ந்து நற்பணிகள் பல தொடர ஆசி கூறுவதில் பெரும் மகிழ்வு எய்துகிறேன்.

14-3-88

இரா நாகசாமி

திரு. மா. இராமு, இ. ஆ. ப.
மாவட்ட ஆட்சியர்
தஞ்சாவூர்

அணிந்துரை

''தண்ணீரும் காவிரியே தார் வேந்தன் சோழனே
மண்ணாவதும் சோழமண்டலமே''-எனப் புகழ்பெற்ற சோழ மண்டலத்தில், ''ஊராவதும் திருஆரூரான் அணியூரே', என்ற பெருமையுடையது திருவாரூர். பேரும் பெயரும் பெற்று விளங்கிவரும் சோழமண்டலத்திற்கு வானும் நிலவும்போல் கால காலமாகப் புகழும் பொலிவும் வழங்கிவருவன வளமிகு திருக் கோயில்களே. ஆடவல்லான் தில்லையில் ஆடத்துவங்கியதற்கு முன்னோ பின்னோ என அறுதியிட்டுச்சொல்ல இயலாத அளவிற்கு ஆனந்தக் கூத்தாடி அணிசெய்து மணம் பரப்ப ஆரூரைத் தேர்ந்தெடுத்தான் பரமன். பூவாட மணமாட, பொன்னாட மணியாட, விண்ணோடும் முகிலோடும் விளையாடும் வெந்நிலா வாக, நம் கண்ணிலே நடம்புரியும் கலைஞான வடிவாகத் தியாகேசன் அமர்ந்த தலம் திருவாரூர் திருத்தலம்.

மேல் தஞ்சைக்குப் பெருவுடையார்; கீழ்த் தஞ்சைக்கு திருவாரூர் உடையார் வீதிவிடங்க தேவர். பெருங்கோயில் படைத்து தஞ்சைக்கு பெருமை சேர்த்தவன் இராஜராஜன்; பொன்வேய்ந்து திருவாரூர்க்குப் பெருமை சேர்த்தவன் அவன் மகன் இராஜேந்திரன் மற்றும் மூன்றாம் குலோத்துங்கசோழன்

காவிரித்தாய் ஐமுக வடிவெடுத்து அழகுற ஓடி விளையாடி, மக்களோடு கூடித் தழுவி, நஞ்சைப் பண நலம்பாடி, பசுமை வெளிதனிலே பவளச் சிரிப்பெடுத்து, விரைந்தோடி கடல் புகுதற்குத் தயங்கிய வளாய்மக்களின் வாழ்வோடு ஒன்றெனக் கலந்து நீடுவாழும் பேறு தஞ்சை தரணி பெற்ற பெரும்பேறு. சில ஆறுகள் விரைந்து சென்று கடலில் கலந்துவிடக்கூடும் ஆனால் காவிரியோ தரணிமக்களின் தாகம் தவிர்த்து, தாலாட்டுப் பாட்டிசைத்து, இல்லந்தோறும் நலம் குவித்து, மாந்தர்க்குத் தாயாய், மனங்கவர் தோழியாய், கலைகள் பல வளர்க்கும் கருவூலமாய்த்

திகழ்வதனானன்றோ "தண்ணீரும் காவிரியே" என பாடினார்ஸ் சங்கப்புலவன்,

சிறப்புகள் பல பெற்ற சோழமண்டலத்திற்கு மணிமகுடம் சூட்டி மகிழ்வன எண்ணற்ற திருக்கோயில்கள். கோவிலில்லா ஊர், நீரில்லா குளத்தையும், நிலவில்லா வானத்தையும் போன்ற தாகும். ஊருக்குப் பெருமை கோவில் கோவிலுக்குப் பெருமை ஊர்நலம், இவ்வகையில், திருவாரூர் வீற்றிருந்து திருவனைத்தும் வழங்கும் பெருமானாகி, மக்களின் வாழ்வோடும் வளத்தோடும் கலந்து, கலை வளர்த்து நலம் வழங்கும் தியாகேசன் அருள் பெருகும் இத்தலத்தின் பெருமைக்கு ஈடுயிணை உண்டோ? தொன்மைத் தன்மையும் பெருமையும் கமழும் இத்திருக்கோயிலைக் காண்போர் நலம் பெறுவர். கோவிலுறை தியாகேசனை வணங்குவோர் வாழ்வு பெறுவர்,

இத்தகைய சிறப்புமிக்க திருக்கோயிலுக்கு நம்மை சீரோடு அழைத்துச் சென்று பெயர்விளங்கு பெருமான் தியாகேசன் மனங்குளிர கீழைக்கோபுர முகத்துவாரத்திலிருந்து தொடங்கி வளாகம் முழுமைக்கும் நமக்கு வழிகாட்டியாக, நண்பனாக, நல்லாசிரியனாக, சிரமம் பாராமல் நம் சிந்தனைக்கு விருந்தளித்து சிந்தையில் நிலைபெறுகின்றார் இந்நூலாசிரியர் குடவாயில் பெற்ற குணக்கொழுந்து.

கோவிலுக்குப் பெருமை கோபுரங்கள்; கோபுரங்களுக்குத் தலைமை இராசகோபுரம். திருவாரூர் இராசகோபுரத்தின் கம்பீரத்தோற்றமும், நெடிதுயர்ந்த வாயிலின் சிறப்பும் கூறி ஆசிரியர் நம்மை கோவிலுக்குள் அழைத்துச் செல்கின்றார். கோபுர வாயிலில் குவிந்துகிடக்கும் சிற்ப அமைப்புகள், கோபுரத்தின் வெளிப்புறமும் உட்புறமும் அமைந்துள்ள சிற்பங்கள் அனைத்தையும் ஒவ்வொன்றாக விளக்கிவரும் ஆசிரியர், சிற்ப வரிசைகளை ஒன்றும் விடுபடாமல் புகழ்ந்து விளக்குகின்றார். சிங்க உடலும் மனிதத்தலையும் உள்ள அதிசய விலங்கு மனிதன் இருக்கும் இடம் காட்டி நம்மை சிந்தனையில் ஆழ்த்துகின்றார். மனிதனிடத்து விலங்கின்குணம் இருந்தாலும் அவன் சிங்கமெனச் சிறந்து கம்பீரமாக வாழவேண்டும் என நினைத்தே குலோத்துங்க சோழன் இவ்வடிவினை அவ்விடத்தில் செய்வித்தானோ என நினைத்து மனம் களிக்கின்றது.

குதிரைகள் இரண்டு முன்கால்களை உயர்த்தி பாயும் நிலையில் இருக்க அவற்றின் மீது இரு போர் வீரர்கள் வாளேந்தி

போரிடத் தயார் நிலையில் உள்ள சிற்ப விளக்கம் பறவை, வடிவங்கள், யாழிமுக அமைப்பு, தயிர்க்கடையும் பெண்ணருகில் குழந்தைக் கண்ணன், பாவையரின் பல்வகைக் கூத்துக்கள், நான்கு கரத்தினராய் சிவபெருமான் அருள்பாலிக்கும் திருக்கோலங்கள், ஐந்தலை அரவோடு நாகராசனின் நல்தோற்றம் இன்னும் பிறவும் அமைந்த கோபுர வெளித்தோற்றம் நம் நெஞ்சை நிரப்ப, துவார பாலகர் காவல்புரியும் எழில் வாயில் கடந்து உள்ளே செல்கிறோம்.

கோபுரத்தின் மறுபாதியான உட்புறத்தில் முழுமுதற் கடவுளின் பல்வகை கோல நிலைகளும், யாழி முகங்களும், சிங்கக் கால்களையே தூண்களாக்கி மேடையமைத்து ஆடல் புரியும் ஆடல் அரசிகளின் நடனக் கோலங்களும், பாயும் சிங்கத்தின் மீது பாய்குடன் வீற்றிருக்கும் கொற்றவையின் சீற்றமும் சற்றே சீற்றம் தணிந்து அருள்பாலிக்கும் அருட் கோலமும் மிளிர்கின்றன. இதுபோன்றே மற்ற அனைத்து கோபுரங்களிலும் உள்ள சிற்ப நுணுக்கங்களையும் விளக்கி மகிழும் ஆசிரியரின் ஆய்வுநோக்கு போற்றுதற்குரியது. சில சிற்பங்கள் சிதைவுற்று நம்மனத்தை சற்றே கனக்கச் செய்கின்றது. இச் சிதைவுகள் காலத்தினாலும், கலையுணர்வற்ற சிலர் தம் கோரத் தினாலும் ஏற்பட்டிருக்கக் கூடும். ஆயினும் 'தங்கத்திலே ஒரு குறையிருந்தாலும் தரத்தில் குறைவதுண்டோ; சிங்கத்தின் கால்கள் பழுதுபட்டாலும் சிற்றம் குறைவதுண்டோ' என்ற கவியரசு கண்ணதாசனின் கவிவரிகளை நினைவுகூர்ந்து, சிற்ப அங்கத்திலே ஒரு குறையிருந்தாலும் அழகு குறைவதுண்டோ, என ஆறுதல் அடைகின்றது மனம்.

கோவிலுக்கு எடுப்புத் தருவன எழிலான மண்டபங்கள். அவற்றுள் தேவாசிரியன் எனப்புகழ் பெற்ற திருமண்டபமே இக்கோவிலின் பெரிய மண்டபமாகும். சித்திரை தோறும் தியாகராஜ சுவாமியின் செப்புத் திருமேனி இம்மண்டபத்தில் கொலு வீற்றிருக்க நடத்தப்பெறும் சித்திரைப் பெருவிழா காலகாலமாக இத்தலத்தில் புகழ்பெற்று வருகிறது. ஆரூர் பெருமான் தன்தேவியுடன் அமர்ந்து அழகுப் பாவையரின் நடனம் கண்ட இடம் இதுவே. சேக்கிழாரின் பெரிய புராணத்திற்கு அடிப்படை யாய்த் திகழ்ந்த சுந்தரரின் திருத்தொண்டத் தொகை மலர்ந்ததுவும் பல சைவ சமய நிகழ்ச்சிகள் நடந்தேறியதுவும் இத்திருமண்ட பத்திலேதான் என்றால் இதன் புகழினை விரித்துக் கூற வார்த் தைகள் ஏது? கல்வெட்டுச் சான்றுகளுடனும், சேக்கிழார் பெருமானின் பாடல்களில் பவனிவந்த தேவாசிரியம் பற்றிய

குறிப்புகளையும் விளக்கங்களையும் நல்கி நூலாசிரியர் தேவாசிரி யத்தின் புகழ்கூறும் பகுதி நெஞ்சை நிறைத்து நம் நினைவைக் குளிர வைக்கின்றது. அத்துடன் சபாபதி மண்டபம், கமலாம்பாள் மண்டபம் இராஜநாராயணன் மண்டபம் போன்ற புகழ் பெற்ற மண்டபங்களின் வரலாற்றையும் விரித்துக்கூறி மண்டபங்களுக்கு புகழ்மாலை சூட்டி மகிழ்கின்றார் ஆசிரியர்.

காலகாலமாக புற்று வழிபாடு தமிழகத்தின் குக்கிராமங்களில் இன்றளவும் நிலைத்து நீடித்து வருகின்றது. ஒருமுறை யாகம் விளைவித்து தவ வலிமையால் சிவதனுசு பெற்று, தேவர்களைத் தோற்கச் செய்து விடுகிறார் திருமால். வில்லினைப் பெற்ற திருமால் தேவர்களை மென்மேலும் துரத்தியதால் களைப்புற்று திருவாரூர் வந்தடைந்து, நாணேற்றிய வில்லை புற்று ஒன்றின் அருகில் வைத்து அதன்மேல் சாய்ந்த வண்ணம் உறக்கமுற்றார். உறக்கம் கண்ட தேவர்கள் கறையானாக உருவெடுத்து சுறுசுறுப் பாக ஆனால் தொடர்ச்சியாக முயன்று வில்லின் நாணறுக்க நாணறுந்த வில் விசையுடன் நிமிர, அவ்விசையின் விளைவாக திருமால் தலையகன்று சாய, செய்வதறியாது தேவர்கள் கலங்கி கயிலைநாதனை வேண்ட, ஈசன் தோன்றி திருமாலை உயிர்ப் பித்து பின் அத்தேவர்கள் தோற்றுவித்த புற்றையே லிங்க உருவாக்கி புற்றிடங்கொண்டான் எனப்பெயர் பெற்றதாகத் தல புராணம் கூறுகின்றது. மூலவராகிய ஈசன் புற்றிடம் கொண்டு புகழ்பெற்ற நிகழ்ச்சி புராணக் கதையாக விளங்கியபோதும், புராதனமான புற்று வழிபாடு இப்புவியில் காலகாலமாக நிலவி வரும் மகத்துவத்தினை ஆசிரியர் எடுத்துரைக்கும் பாங்கு அற்புதம்.

அப்பரால் புற்றிடம் கொண்டான் எனவும் வடமொழியில் வன்மீகநாதனெனவும் அழைக்கப்பட்டவர் மூலவர். நீ கோலம் கொள்வதற்கு முன்னோ பின்னோ குளிராரூர் கோயிலாகக் கொண்ட நாளே'' எனவும் ''வேதத்தை விரிப்பதற்கு முன்னோ பின்னோ விழவாரூர் கோயிலாகக் கொண்ட நாளே'' எனவும் 7-ஆம் நூற்றாண்டிலேயே அப்பர் பாடியுள்ள தேவார வரிகள் பகருவதிலிருந்து புற்றிடங்கொண்ட ஈசனும் பூங்கோயிலும் எத்தனை தொன்மை மிக்கது என்பதறிந்து புவ்வரிக்கின்றது மனம். பூங்கோயிலின் கருவறைப்பாங்கு, முற்கால சோழர் காலத்து கற்கோயில் கட்டுமானங்களுக்கும் கலைச்சிற்ப அமைப்பு களுக்கும் சான்றுகளாகின்றன, இப்பூங்கோயிலுக்கு பொன் வேய்ந்து புகழ்பெற்றான் மூன்றாம் குலோத்துங்க மன்னன். அகமலராம் அறவணார் பூங்கோயில் வாழ்க வாழ்கவே!

பூங்கோயிலுக்கு அருகாமையில் தென்புறமாக அமைந்த கற்றளியே தியாகராஜர் திருக்கோயிலாகும். இரண்டு திருக் கோயில்களின் மண்டபங்களும் ஒரு சேர இணைக்கப்பெற்று ஒரே கோயிலாகக் காட்சியளிப்பது சிறப்பிலும் சிறப்பாகும். மூலவர் பூங்கோயிலும், வீதி விடங்கர் தியாகராசரின் கற்றவியும் காலத்தை இணைத்து வளம் காட்டுகின்றன. முன்னது தொன்மைக்கும் தொன்மையானது: பின்னது தொன்மைக்கு விளக்கமானது, தொன்மை விளக்கத்திற்கு பவனி கூறுவது. செங்கற்கோவிலாக இருந்த தியாகேசன் சன்னதிக்கு, தன் அன்புக்காதலி அருள் நெறி நங்கை பரவை என்பாளின் விருப்பத் திற்கேற்ப விமானத்திற்கும் கருவறையின் சுவர்களுக்கும் கங்கை கடாரம் கொண்ட இராசேந்திரன் பொன் வேய்ந்து புகழ் கொண்டான்.

வரலாற்று சான்றுகளின்படி உற்சவ மூர்த்தியான தியாகேசன் வழிவழியாக வீதிவிடங்கள் என்றே அழைக்கப்பட்டான். கி.பி ஏழாம் நூற்றாண்டு தொடங்கி 14-ஆம் நூற்றாண்டு வரையில் கல்வெட்டிலோ, செப்பேடுகளிலோ தியாகேசன் என்ற பெயர் பொறிக்கப்படவில்லை. 7-ஆம் நூற்றாண்டில் திருவாரூர் எழுந்தருளிய அப்பர் பெருமான் ''ஆரூரான் எனும் பவனி வீதிவிடங்கனை''த் தான் கண்டது குறித்து பாடுகின்றார். முதற் குலோத்துங்கன் காலத்து கல்வெட்டுக்களில் ''தியாகவினோதன், ''தியாக வினோதன் மாடை'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளதாக நூலாசிரியர் ஆய்ந்து கூறுகின்றார்.

மராட்டிய மன்னர்கள் வரிசையில் இரண்டாவது மன்னராகிய சகசி மன்னர் (1684—1710) வழங்கிய செப்பேடு ஒன்றில் ''தியாகராஜ சுவாமி'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வீதி விடங்கனாக வெளிப்பட்டு, பல நூற்றாண்டு காலம் தியாக வினோதனாக விளங்கி கடந்த முன்னூறு ஆண்டுகாலமாக தியாக ராஜ சுவாமியாக அருள்பாலித்து வரும் இறையருளை மன்னன் சகசியே தான் வடித்துள்ள கீர்த்தனைகளில் 'தியாகேசா' 'தியா கையா' என்ற முத்திரைகளுடன் போற்றியிருப்பது ஆய்வுக்கு மேலும் துணைநிற்கும் எனக் கருதுகின்றேன்.

அக்கீர்த்தனைகளும் முன்னூறு ஆண்டுகளாக சரஸ்வதி மகாலில் காத்திருந்து காலம் பார்த்து தியாகேசர் கோயில் குட முழுக்கின் போதுதான் நூல் வடிவம் பெற்று வெளிவருவது விந்தையிலும் விந்தையன்றோ!

கோவில் சிறப்பையும் கோபுர அமைப்புக்களையும் மண்டபப் பொலிவையும், மகேசன் அருளையும் கூறிய ஆசிரியர் குடவாயிலார், ஆரூர் வளர்த்த ஆடற்கலையை அழகுற விளக்கும் பாங்கு இந்நூலுக்கு மேலும் பொலிவினைத் தருகின்றது.

ஆடவல்லான் ஆட்டுவித்தால் ஆடாதார் யாரே? தில்லையில் நடம்புரியும் திருக்கோலம்; திருவாரூரில் நடனம் புரிந்து நடனம் களித்துரையும் தெய்வீக திருக்கோலம்.தேவாசிரிய மண்டபத்தில், அரங்கிற்கு அடிகூட்டும் விதானத்தில் முகப்பில் ஓர் அற்புத சிற்பத் தொகுதி இடம் பெற்றுள்ளது. சபை நடுவே சோமாஸ்கந்தராய் ஆடலரசன் வீற்றிருக்க, உமையவள் அருகிருக்க, மாயவன் தன் தேவியர்களுடன் நின்றமுகமாய் கண்டுகளித்திருக்க முருகனும் விநாயகப்பெருமானும் ஆடல் காண்கின்ற காட்சியது. நந்தி தேவரின் குடமுழவ இசைக் கேறப ஆடிவரும் ஆடவல்லான், ஆட்ட உச்சத்தில் தனதுவலதுகாலை மேல்நோக்கி வீசியவண்ணம் அப்படியே நிறுத்தி வெற்றி முத்திரைப் பதித்து, ஆடற்கலைக்கு மகத்துவம் படைக்கிறான். போட்டியில் தோல்விசண்ட காளிதேவி தோல்வியின் நாணத்தால் தன் கரங்களை கீழ்நோக்கி விடுத்த வண்ணம் நாணுகிறாள். உடனே ஆரூர் போற்றிய ஆடல மகளிர் பல நாட்டிய முத்திரைகளை அள்ளி வழங்கி ஆடுகின்றனர். இக்காட்சியை நம் கண்களுக்கும் கருத்துக்கும் விருந்தாகவழங்கும் நூலாசிரியர், அக்காலத்தில் திருவாரூரில் மலர்ந்து மணம்பரப்பிய ஆடற் கலையின் மேன்மைதனை நம் மனக்கண்ணில் படம் பிடித்துக்காட்டி மகிழ்விக்கின்றார்.

ஆடவல்லான் களித்திருக்க ஆடி மகிழ்ந்த ஆரூர் நங்கையரின் பெருமைகளை குடவாயிலார் குன்றென காட்டுகிறார். கலை வளர்க்கும் கண்களாக அந்நாளில் ஆடல்மகளிர் சமூதாயத்தில் மதிப்பினைப் பெற்றிருந்தனர். சோழர் குலத் திலகம் இராஜ ராஜசோழன் எழுப்பிவித்த தஞ்சை பெருங்கோவிலில் இயல்,இசை கூத்துமுறைகள் வளர்ந்தோங்கின. சோழமண்டலத்து புகழ் பெற்ற கோவில்களில் ஆடல் திறமிக்க ஆரணங்குகளில் சிறந்தோர் எனப்புகழ்பெற்ற நானூறு நங்கங்கைளைத் தேர்ந்தெடுத்து தஞ்சைக் கோவிலில் கலைப்பணிபுரிய மன்னன் நியமித்தான். ஆடல் மகளிருக்காக கோவிலுக்கருகே இராச வீதிகளையே உருவாக்கி அவர்களைக் குடியமர்த்தவும் செய்தான். இவர்களில் திருவாரூர் கோவிலிலிருந்துமட்டுமே ஐம்பத்தோறு ஆடல்அரசிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு இருந்தனர் என்றால் திருவாரூர் வளர்த்த

ஆடற்கலையை பகர வேறு சான்று வேண்டுமோ! ஆடற்கலை வளர்த்த ஆரூரான் போற்றி! போற்றி!!

மன்னன் எவ்வழி, மன்னுயிர் அவ்வழி; நீதியின் விளக்கமாக செங்கோல் வழுவாது ஆட்சிநலம் காத்துவந்த ஆரூர் வேந்தன் மனுநீதிச் சோழனின் மைந்தன் ஒருநாள் தன் தோழர்களுடன் தேரேறி மணிமாட வீதியில் பவனிவந்த கானல, துள்ளிப்பாய்ந்து வந்த இளம் பசுங்கன்றொன்று தேர்க்காலில் பட்டு உயிர் நீத்தது. கன்றினை இழந்த தாய்ப்பசு கதறி கண்ணீர் உகுத்தது. நீதி கேட்க மன்னவன் அரண்மனை அடைந்து 'வாயிற்கடைமணி நடுநா நடுங்க' பசு அபயக்குரல் கொடுக்க, அதிர்ச்சியுற்ற மன்னன் தன் அரியணை விட்டு இறங்கி வாயிலுக்கு ஓடினான். அருகிருந்த அமைச்சர் நிகழ்ந்ததுரைக்க பசுவின் துயரறிந்த மன்னவன் தானும் துயருற்றான். பசுவதை பழி நீங்க மறைவழி காட்டினர் அமைச்சர் பெருமக்கள். கன்றினை இழந்த பசுவுக்கு மறைவழி தவமுறைகள் மருந்தாகுமோ என நெஞ்சம் நெஞ்சம் நெகிழ்ந்த மன்னன், ''பசு அடைந்த அதே துயரை தானும் தன் மகவை இழந்து பெறுதலே நீதியாகும்'' என முடிவு கூறி, தான் அருந்தவம் புரிந்து பெற்ற குலக்கொழுந்தினை தேர்க்காலில் கிடத்தி தேரை செலுத்துமாறு அமைச்சருக்கு கட்டளையிட, அரச கட்டளையை நிறைவேற்ற துணியாமல் அமைச்சரும் உயிர் நீத்தது கண்ட மன்னன் தானே தேரில் ஏறி கண்ணீர் சொரிய தன் மகன்மீது தேரினை செலுத்தி மனுநீதி சோழனாக மங்காப் புகழ்கொண்டான். மனுநெறியும், மன்னவன் செங்கோலும் உயர்வுபெற அவ்விடத்தே வீதிவிடங்கப் பெருமான் உமையவளுடன் எழுந்தருளி, இறந்த பசுவின் கன்றினையும் உயிர் நீத்த அமைச்சரையும் ஒருசேர உயிர்ப்பித்து, என்றென்றும் மனுநீதிசோழன் புகழ் மண்ணுலகில் நிலைபெறவே அருள்செய்து அகங்குளிர்ந்தான். ஊர்பெற்ற பேரும் திருவாரூர் தேர்பெற்ற புகழும் நீடு வாழ்க.

இத்தகைய சிறப்புமிக்க திருவாரூர் தல வரலாறு இதுகாறும் நமக்கு அமையாதிருந்தது பெருங்குறையே. இக்குறைபோக்க, பல ஆண்டுகள் முனைந்து சரித்திர, கல்வெட்டு மற்றும் இலக்கிய ஆராய்ச்சியில் திளைத்து ஆசிரியரின் அருமுயற்சியால் இந்நூல் தற்போது வெளிவருவது கண்டு பேர்உவகை கொள்கிறேன். கோவில் வரலாறு; கோவில் வளர்த்த இறை வழிபாடு ஊர் வளர்த்த கலை, கலாச்சார பண்பாடு மற்றும்

ஆடல் பாடல் மேம்பாடு; சான்றோர் வளர்த்த இலக்கிய ஆக்கங்கள் இவை அனைத்தையும் ஒருங்கு திரட்டி, திருவாரூர் பெயர் என்றென்றும் விளங்க ஆசிரியர் சரித்திரம் படைத்துள்ளார். அரிய இசைக்கருவிகளில் குடமுழா குறித்த ஆய்வுதனை இலக்கிய மேற்கோள்களுடன் விளக்கியுள்ளார். கோபுர விளக்கங்கள், அக்கோபுரங்களை கட்டுவித்த மாமன்னர்களின் வரலாற்று சாதனைகள், பூங்கோயில் மற்றும் உமையவள் உறையும் திருக்காமக் கோட்ட வரலாறு இவை அனைத்தையும் கல்வெட்டுக்களின் துணைகொண்டும் செப்பேடுகளை ஆய்ந்தும் ஆசிரியர் மிக நுட்பமாக இந்நூலை உருவாக்கியுள்ளார்.

இந்நூலின் பக்கங்களில் சரித்திரம் கூவுகின்றது; சைவம் தழைக்கின்றது; இசைக்கருவிகள் இன்னிசை எழுப்புகின்றன; ஆடல் பாடல்கள் அரங்கங்களை நிரப்புகின்றன; சித்திரங்கள் பேசுகின்றன; செப்பேடுகள் சிலிர்த்து மகிழ்கின்றன; கல்வெட்டுகள் காலத்தை படம்பிடித்து காட்டுகின்றன. கற்றளிகள் மன்னர்களுக்கு மலராரம் சூட்டுகின்றன. கற்சிலைகள் கவிதை படைக்கின்றன; பொற்சிலைகளோ பூமாரி பொழிகின்றன; சான்றோர் இலக்கியம் படைக்கின்றனர்; சமய நெறியாளர்கள் மக்களுக்கு நல்வழி காட்டுகின்றனர். மத்தளங்கள் முழங்குகின்றன; அத்தாணி மண்டபத்தில் பாவையர் அழகு நடனம் புரிகின்றனர். இவையனைத்திலும் இயக்கமாக தியாகேசன் உமையாளுடன் வீற்றிருந்து அருள்பொழிந்து வானளாவிய கோபுரங்களாக மலர்ந்து கலசங்களாக ஒளிவீசி மிளிருகின்றான்.

திருக்கோயில் நலம்பாடும் இவ்வரிய நூல் சுமார் நூற்று முப்பது ஆண்டுகளுக்குப் பின் இவ்வாண்டு நடைபெறும் சிறப்பான குடமுழுக்கினையொட்டி வெளிவருவதுவும் தியாகேசன் அருளே யாகும். நூலாசிரியர் குடவாயில் பாலசுப்ரமணியன், எம். ஏ., அவர்களின் சிறப்புமிகு இப்பணி செப்பேடுகளில் பதிக்கத்தக்கது. வாழ்க அவர் புகழ்;

ஓங்குக பூங்கோயில்

அன்பன்.

மா. இராமு

29—3—88

வெளியிடுவோர் உரை

அருள்மிகு ஆரூர் தியாகப் பெருமான் திருக்கோயில் திருப்பணியை துவக்கியவுடன் இத்திருக்கோயில் பற்றிய வரலாற்று அடிப்படையில் ஒரு நல்ல நூல் வெளியிட வேண்டும் என விரும்பினோம். இதற்கான முயற்சியில் ஈடுபட்டபோது நண்பர் திரு குடவாயில் பாலசுப்ர மணியன் அவர்கள் பல ஆண்டு காலமாக இக்கோயில்பற்றி பல்வேறு துறைகளில் ஆய்வு செய்து ஒரு நூல் எழுதி அச்சிடப் பெறாமல் இருப்பதாக அறிந்தோம். உடன் தொடர்புகொண்டு, அவர் படைத்த நூலை கண்ணுறறோம். தமிழக திருக்கோயில்கள் பற்றிய நூல்கள் வரிசையில் இவரது படைப்பு ஒரு தனித் தன்மையுடன் இருப்பது கண்டு மகிழ்ந்தோம். உடன் எப்படியும் ஆரூரன் திருக்குட முழுக்கு விழாவில் இதனை அச்சிட்டு வெளியிட வேண்டுமென நினைத்தோம். அதே சமயம் திரு பாலு அவர்கள் சில கல்வெட்டுக்கள் இதுவரை படி எடுக்கப் பெறாமல் இருப்பதாகவும், சில செப்பேடுகள் பற்றிய செய்திகள் கிடைக்கப் பெறாமல் இருப்பதாகவும் கூறினார். எங்களது ஒரே விருப்பம் எப்படியும் இந்நூல் எந்த செய்திகளும் விடுபடாமல் முழுமையாக இருக்க வேண்டும் என்பதே. அவருக்கு தேவையான எல்லா வசதிகளையும் நல்கி படி எடுக்கப் பெறாமல் உள்ள கல்வெட் டுக்களை எல்லாம் படி எடுக்க உதவினோம் மேலும் திருநீலகண்டர் கோயில் செப்பேட்டு செய்திகளும் அவருக்கு கிடைக்குமாறு செய்தோம்.

இதன்பயனாய்தமிழகத்தில் எந்த திருக்கோயிலிலும் இப்படி ஒரு நூல் மலர்ந்ததில்லை என்று சொல்லுமளவுக்கு கட்டிடக் கலை, சிற்பங்கள், ஓவியம், இசை, நாட்டியம், செப்பேடுகள், கல்வெட்டுக்கள் என்று அனைத்து துறைகளையும் அலசி ஆய்ந்து ஒரு முழு நூலாகப் படைத்துள்ளார். இந்த திருக்கோயிலுக்கு ஒரு குடமுழுக்கு செய்யப் பெறுவதால் எந்த அளவு சிறப்பு உண்டோ அதே அளவு இந்நூல் தியாகப் பெருமானுக்கு சமர்ப்பிக்கப்படுவதாலும் ஏற்படுகிறது. இத் திருக்கோயில் வரலாற்றில் இது ஒரு அழியா பெட்டகம். 1500 ஆண்டுகால வரலாறு மிகச் சிறப்பாக வெளிவந்துள்ளது.

கல்வெட்டில் காணும் சோழர்கால சமுதாயநிலை, ஆரூரின் சிறப்பு அம்சங்கள் போன்ற தலைப்புகளில் எழுதப் பெற்றுள்ள செய்திகள் பொன்னேட்டில் பொறிக்கத்தக்க சிறப்புடையவையாகும். இத்திருக் கோயிலில் மரபு சிதையாமல் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளை இந்நூலாசிரியர் மிகச்சிறப்பாக எடுத்துக் கூறியுள்ளார். புராணக் கதைகளைக் கூட மிகத்துல்லியமாக ஆய்ந்து சிறப்புகளை வெளியிட்டுள்ளார்.

இந்நூலில் இத்திருக்கோயிலில் மலர்ந்த இலக்கிய முத்துக்களை எல்லாம் கால அடிப்படையில் ஆய்ந்து அதன் சிறப்புகளை கூறி யுள்ளார். இந்நூலாசிரியரின் பணி தனி ஒரு மனிதன் இத்திருக் கோயிலுக்கு திருப்பணி செய்த ஒரு செயலுக்கு ஈடாகும் என்பதில் ஐயமேயில்லை. பாலசுப்பிரமணியன் அவாகளின் பணி மேலும் தொடர்ந்து வாழ்க்கையில் எல்லா நலன்களும் பெற தியாகப் பெரு மானை பிராத்திக்கிறோம். இந்நூலை சிறப்பாக பதிப்பிக்க உதவிய புதுக்கோட்டை சர்மா ஸானடோரியம் ப்ரஸ் அச்சகத்தார்க்கு எங்கள் நன்றிகள். இந்நூலினை அனைத்து அன்பர்களும படித்துப் பயன்பெற வேண்டி தியாகேசன் திருவடிகளில் சமர்பிக்கின்றோம்.

சு. தென்கோவன்
திருப்பணிக் குழுத்தலைவர்

சு. ஸ்ரீதரன்
நிர்வாக அலுவலர்
அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில்
திருவாரூர்

நூலாசிரியன் உரை

தமிழகத்து வரலாறு என்பது திருக்கோயில்கள்தான் அங்கு வரலாறு கல்வெட்டுக்களாக செப்பேடுகளாக காட்சி நல்குகின்றன. தமிழனின் கவின் கலைகள், இயல், இசை, நாட்டியம் இத்தனையும் உறைவது திருக்கோயில்களில்தான். இத்தகைய கோயில்களின் வரலாற்றை நாம் முறையாக அறிந்தோமா? அல்லது வரலாற்றுப் பெட்டகங்களாகத் திகழும் இத்திருக்கோயில் களைத்தான் பேணிக் காத்தோமா? இல்லை. இதற்கு காரணம் கோயில்களின் பெருமையறியாத நம் பாமரர்களின் நிலைதான். அவர்களுக்கு முறையான வரலாற்று அடிப்படையில் திருக்கோயில் பெருமைகளை எழுதி, நூலாக்கி அவர்கள் தம் திருக்கரங்களில் அளித்தால், இந்நிலை நிச்சயம் மாறும். தனது கலாச்சாரப் பெருமையினை மதிக்க யாரும் பின்வாங்கமாட்டார்கள். இதற்கு நாமே ஒரு முன் உதாரணமாக இருக்கலாமே என நினைத்தேன். இந்நூலையும் எழுதி தியாகப் பெருமானின் திருவடிக்கு அர்பணித் தேன்.

இந்நூல் ஒரு தகவல் களஞ்சியமாக உருவாகியுள்ளது. இரண்டாண்டு காலம் அனைத்துக் கல்வெட்டுக்களையும் படித்து இங்கு தந்துள்ளேன். ஆரூர் பற்றிய செப்பேடுகள், ஓலைச் சுவடிகள் இன்னபிற தகவல்கள் எல்லாம் தேடிக்கண்டு எழுதி யுள்ளேன். இப்பணிக்கு எனக்கு வழிகாட்டிய பெருமகனார் எனது குருவும் தமிழக அரசு தொல்லியல் துறைத் தலைவருமான டாக்டர் இரா. நாகசாமி அவர்களே. அவரது பாதக் கமலங்களுக்கு எனது பணிவான வணக்கங்கள்.

தியாகப் பெருமானின் திருக்கோயிலின் முழு வரலாறும் சுமந்து தமிழகத்து மக்களின் உள்ளங்களில் பவனிவரத் துவங்கி யுள்ள இந்நூலாம் திருத்தேரை உருவாக்க என்னுடன் உழைத்த பலரை இங்கு நினைவு கூறல் எம் கடமை. இப்பணியின் முதல் கட்டமாக எனக்கு அரசுமுறை அனுமதி தந்த முன்னாள் ஆணையர் திரு. உ. சுப்ரமணியம் I. A. S. அவர்களுக்கும், ஆரூர் திருக்கோயில் ஊழியர்கள் அனைவர்க்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகள். திருக்கோயில் நிர்வாக அலுவலரிலிருந்து கடைநிலை ஊழியர்கள் வரை அனைத்து தரப்பினரும் மனமுவந்து நல்கிய உதவிகளும், தகவல்களும் நெஞ்சைவிட்டகலாதவை.

நூற்றுக்கும் மேற்பட்ட கல்வெட்டுக்களை படி எடுக்கவும், ஓவியங்கள் பற்றி குறிப்பெழுதவும் என்னுடன் எப்போதுமே இருந்து எனது இருகரங்களாக, கண்களாக செயல்பட்ட என் நண்பர்கள் திரு. ச, ஜெயக்குமார், திரு. க, மனோகரன் ஆகிய வர்களின் பணி இந்நூல் உள்ளளவும் நிலைக்கும்,

இந்நூலை அச்சிட்டு வெளியிட முனைந்த இத்திருக்கோயில் முன்னாள் தக்காரும், திருப்பணிக்குழு தலைவருமான திரு. சு. தென்கோவன் அவர்கட்க்கும், திருக்கோயில் நிர்வாக அலுவலர் திரு. சு. ஸ்ரீதரன் அவர்கட்க்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகள். திரு. தென்கோவன் அவர்கள் காட்டிய ஆர்வமும், திரு. ஸ்ரீதரன் அவர்களின் வரலாற்று ஆர்வமும் என்னை நெகிழ வைத்தன. இத்தகைய வரலாற்று ஆர்வம் மிக்கோர் தமிழக மெங்கும் இருந்தால் நிச்சயம் நமது பழம் பெருமையும் கவின் கலைகளும் மங்காது ஒளிவிடும் கல்வெட்டுக்களைப் படிக்குங்கால் உதவிபுரிந்து கருத்துப் பரிமாற்றங்களுக்கு உதவிய பேராசிரியர் நண்பர் திரு. எல். தியாகராஜன் அவர்களுக்கும் அச்சுப்பணிகளின் போது உதவிய எமது நண்பர் திரு. அ. பஞ்சநதம் அவர்களுக்கும் நன்றி பல.

நூல் செப்பமுற அச்சிட்டு தந்த புதுக்கோட்டை சர்மா'ஸ் சானடோரியம் அச்சகத்தார்க்கும் எனது அன்பு வணக்கங்கள்.

நூலுக்கு முன்னுரை நல்கிய டாக்டர் இரா. நாகசாமி அவர் களுக்கும் அணிந்துரை நல்கிய தமிழக அரசு அறநிலையத்துறை செயலர் திரு ஆளுடைய பிள்ளை இ. ஆ. ப. அவர்களுக்கும், அறநிலையத் துறை ஆணையர் திரு இராச. கல்யாண சுந்தரம் இ. ஆ. ப. அவர்களுக்கும் தஞ்சை மாவட்டத்து ஆட்சித் தலைவர் திரு மா. இராமு அவர்களுக்கும் எனது பணிவான வணக்கங்கள்.

ஆரூரனின் கருணையால் இப்பூவுலகு மேலும் செழிக்க எனது பிரார்த்தனைகள்.

அன்பன்

27—3—88

குடவாயில் பாலசுப்ரமணியன்

உள்ளுறை

1	ஆரூர் ஓர் அறிமுகம்	—	1
2	திருக்கோபுரங்கள்	—	7
3	தேவாசிரியம் எனும் திருமண்டபம்	—	33
4	அரநெறி (அசலேசம்)	—	45
5	பூங்கோயிலும் புற்றிடங் கொண்ட ஈசனும்	—	55
6	தியாகராஜர் திருக்கோயிலும் தியாகேசனும்	—	65
7	திருக்காமக் கோட்டம்		89
8	திருமண்டபங்கள்	—	95
9	ஆரூர் வளர்த்த ஆடற்கலை	—	105
10	மனுநெறியும் மன்னவன் செங்கோலும்	—	127
11	திருக்கோயிலும் வரலாற்று மாமன்னர்களும்	—	147
12	கல்வெட்டில் காணும் சோழர் கால சமுதாய நிலை	—	165

திருக்கோயில் நிர்வாகம்—ஆலய ஊழியர்களும் அவர்கள் பெற்ற சலுகைகளும்—சோழர்கள் காலத்தில் ஆரூர்—ஊர் சபைகளும் சதுர்வேதி மங்கலங்களும்—நில அளவையும் பதி வேடுகளும்—நிலவிற்பனை — சாசனங்கள்— அளவைகள்— கருவூலம் — ஸ்ரீமுகங்கள் — எடுக்கப்பட்ட திருமேனிகளும் திருக்கோயில்களும்— திருமடங்கள் —சிவயோகிகள்—வேத பாராயணம்—திருவிழாக்கள்—திருக்கோயில் பூஜைநெறிகள் —திருவிளக்கு தர்மங்கள்—சாவாமூவாப் பேராடு—காசுகள் நிலங்கள்—இராஜேந்திரன் அளித்த விளக்குகள்.

13	ஆருரின் சிறப்பு அம்சங்கள்	—	185

தீர்த்தக்குளம்—மாமன்னர்களின் படிமங்களும் ஓவியங்களும் —நடுகல் வழிபாடு—ஆரூர் ஆவணத்துறை —தம்பிரான்

தோழரின் தாய் அவதரித்ததலம் — சங்கீதமும்மூர்த்திகள் உதித்ததலம் — தஞ்சை கெசட்டியர் கூறுவது—மூவர் முதலிகளுக்கு முக்கியத்துவம் — தேவாரம் பாடும் முறை—திருவாரூர்ப் பதினென் வகைப் பண்கள்—ஆரூரில் சரபமூர்த்தி—காமிகாகமம் போற்றும் நயினார்கள்—பிரமராயர்கள்—விழுப்பரையர்—பாரசைவர்—யானை ஏறுவார்—மணித்தண்டு—இண்டை மாலை—திருப்பணி சாத்துதலும் நிறைபணித்திருநாளும்— பூதநிருத்தம் — கட்டியங்கூறல் — திரைக்குப்பின் சுத்தமத்தளம்—திருமந்திரம்—வாதாபி விநாயகர்—உச்சிஷ்ட கணபதி—மூலதார கணபதி—வல்லபை விநாயகர் மாற்றுரைத்த விநாயகர்—கஸ்தி விடம்பனம்.

14 பேசிடும் பொற் சித்திரங்கள் — 215

15 ஆரூர் தந்த இசைக் கருவிகள் — 247

பாரிநாயணம்—பஞ்சமுகவாத்தியம் (குடமுழா)—சுத்தமத்தளம்—கொடுகொட்டி

16 ஆரூர் தந்த அரும் பெரும் இலக்கியங்கள் — 269

17 செப்புத் திருமேனிகள் — 295

18 செப்பேடுகள் — 301

19 கல்வெட்டுக்கள் — 341

20 பின் இணைப்பு — 352

அணிந்துரை

சைவ சமயத்தில் பெரிய கோவில் என்றால் அது திருவாரூர் அருள்மிகு தியாகேசப் பெருமான் திருக் கோயிலைக் குறிக்கும். தமிழகத்தில் செங்கோலோச்சிய அத்தனை மன்னர்களின் கலைப்பாங்கின் கைவண்ணம் திருவாரூர் திருக்கோவில் முழுவதும் மிளிர்வது கண்ணுக்கு விருந்தாகும். இந்த விருந்தினை தமிழ் மக்களுக்கு அறுசுவையோடு 'திருவாரூர் திருக்கோவில்' எனும் புத்தகமாகப் படைத்துள்ளார் திரு. குடவாயில் பாலசுப்ரமணியன். திருவாரூர் திருக்கோயில் எந்த அளவிற்கு விரிந்து பரந்து அமைந்துள்ளதோ அதே போன்று திரு. குடவாயில் பாலசுப்ரமணியன் எழுதி யுள்ள புத்தகமும் இத்திருக்கோவிலின் பெருமை முழுவதையும் விரிவாக விவரிக்கின்றது. சுமார் 20 தலைப்புகளில் இத்திருக்கோவிலின் கல்வெட்டுகள், சிற்பங்கள், ஓவியங்கள், செப்புப் பட்டயங்கள் போன்ற வற்றை துல்லியமாக ஆய்வுசெய்து தந்துள்ள விபரங்கள் தமிழர்களின் பொற்காலத்தையும், சைவ சமயத்தின் பெருமையினையும் அறுதியிட்டு கூறுவதாக அமைந்துள்ளது. செவிவழிச் செய்திகள், கர்ண பரம்பரைக் கதைகள், புராண வரலாறு இப்படியாக இத்திருக்கோவிலின் வரலாற்றினை அறிந்துகொண்ட

வர்களுக்கு, ஆதாரபூர்வமான உண்மைகளின் வாயிலாக இத்திருக்கோவிலின் பெருமையினைத் தெரிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பினை அளித்துள்ள திரு. குடவாயில் பாலசுப்ரமணியன் சைவத் தமிழ் நெஞ்சங்களின் பாராட்டிற்குரியவர். ஆய்வுத்திறன் மட்டுமின்றி அழகுத் தமிழ் நடையும் தனக்குச் சொந்தம் என்பதை இந்நூலின் வாயிலாக திரு. பாலசுப்ரமணியன் மெய்ப்பித்துள்ளார். இத்திருக்கோவிலின் விழாக் காலங்களிலும், மற்றைய சிறப்பு நிகழ்ச்சிகளின்போதும் அச்சிடப்படும் அழைப்பிதழ்களில் சைவ சமயத்தின் தலைமைப் பீடம் திருவாரூர் எனக்குறிப்பிடப்பட்டு இருக்கும். இதனை ஊர்ஜிதம் செய்யப் பல்வேறு உண்மைகளைக் கண்டறிந்து அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோவிலுக்குப் புகழாரம் சூட்டியுள்ள திரு. பாலசுப்ரமணியன் மேலும் புகழ்பெற தியாகேசன் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

அறநிலையத்துறை
நாகப்பட்டிணம்

தி. ஜெயராமன்
உதவி ஆணையர்

ஆசிரியர் ஓர் அறிமுகம்

ஆரூர் ஓர் அறிமுகம்

''எந்த மாதவஞ் செய்தனை நெஞ்சமே
பந்தம் வீடவை யாய பராபரன்
அந்தமில் புகழாரூ ரர னெனறி
சிந்தை யுள்ளுஞ் சிரத்துளுந் தங்கவே''

என அப்பர் பெருமான் கூறும் அதே மாதவம் செய்த பெரும் பயனால் அகிலம் புகழும் ஓர் அற்புதத் திருக்கோயிலை ஆரூரில் பெற்றுள்ளோம். 'கோயில்' என்றாலே சைவர்கள் தில்லைத் திருக்கோயிலைத்தான் குறிப்பர். அந்த தில்லைக்கோயிலுக்கும் முன் தோன்றிய கோயில் திருவாரூர் கோயில் என்றால் யாரே அதன் புகழையும், தொன்மைச் சிறப்பையும் அளவிட முடியும்? இதனைக் கூறும் நாவுக்கரசர்

''மாடமொடு மாளிகைகள் மல்கு தில்லை
மணி திகழும் அம்பலத்தே மன்னிக் கூத்தை
ஆடுவான் புகுவதற்கு முன்னோ பின்னோ
அணியாரூர் கோயிலாக் கொண்டநாளே''

எனப் பாடிப் பரவுகிறார்.

கி.பி. 7ம் நூற்றாண்டில் வாழ்ந்த இப்பெருமகனாராலேயே இத்திருக்கோயிலின் தோற்றத்தைக் கூறமுடியாத அளவு தொன்மைத்தன்மை வாய்ந்ததாகவும் போற்றுகிறார். அதனால்தான் அச்சிவபெருமான் ஒருவனாய் அவன் மட்டும் உலகத்தில் நின்றானே அப்போதே தோன்றியதோ இக்கோயில்? என வினவுகிறார். இதுமட்டுமின்றி 10 பாடல்களிலுமே அப்பெருமானது அத்தனை தீரச்செயல்களையும் குறிப்பிட்டு இவை அனைத்திற்கும் முன்தோன்றிய கோயில் எனக் கூறுகிறார்.

எனவே தமிழகத்திலுள்ள திருக்கோயில்களிலேயே எல்லாவற்றையும் விட (ஏன் தில்லையையும் விட) தொன்மையான திருக்கோயில் ஆரூர் என்பதைத் தெளிவாகக் கூறலாம்.

தொன்மைச் சிறப்பால் புகழ் பெற்ற ஆரூரில் புற்றையே வழிபடும் தொன்மைப்பாங்கை காண முடியும், பஞ்சபூதத் தலங்களாக பகுக்கப்பட்டுள்ள ஐந்து தலங்களுள் இது பிருதிவித்தலம், ''மக்கள் கல்லாலும் உலோகப் பொருள்களாலும் கடவுளுருவத்தை அமைத்து வழிபடுவதற்கு முன்பே மரத்தையும், புற்றுக்களையும் வழிபட்டார்கள். ஆதலின் புற்று வழிபாடு தொன்மையானது, சமய நாகரீகத்திற்குத் தலை அதுவே''என்று ஆங்கில வரலாற்றுஆசிரியர் பெர்குசன் என்பார் கூறுகிறார். இக்கூற்று ஒன்றே புற்றிடங் கொண்ட புனிதனின் திருக்கோயிலின் தொன்மைச் சிறப்பை தெள்ளிதின் விளக்கும்.

கற்கோயில்களும் (கற்றளி) கற்படிமங்களும் பல்லவர்கள் காலத்தில்தான் துவக்கம் பெற்றுள்ளன. மேலும் சோமாஸ்கந்தர் (இளமூருகு உடனுரையும் அம்மையப்பர்) உருவ அமைதியும் பல்லவர்களால்தான் தோற்றுவிக்கப்பட்ட ஒன்று, இவ்வகையில் ஆரூர் திருக்கோவிலுள் உள்ள வினாயகர், மகேசன், சப்தமாதர்கள், சண்டீசன் போன்ற எழில்மிகு பல்லவர்கால கற்சிலைகளும் தியாகப்பெருமான் என அழைக்கப்படும் சோமாஸ்கந்த செப்புத் திருமேனி வழிபாடும் கி.பி. 6-7ஆம் நூற்றாண்டில் ஆரூர்கோயில் பெற்ற ஏற்றத்தின் அடையாள முத்திரைகளாகும்.

பல்வகையாலும் தொன்மைச் சிறப்பும், சைவத்தின் கேந்திரமாயும் ஆரூர் திகழ்ந்த காரணத்தால்தான் சேக்கிழார் பெருமான் தன் திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணத்தில் திருமலைச்சிறப்பாகக் கயிலை மலையின் சிறப்பும், திருநாட்டின் சிறப்பாக சோழவள நாட்டின் சிறப்பும், திருநகரச்சிறப்பாக ஆரூரின் சிறப்பும் தான் கூறியுள்ளார், சோழவளநாட்டில் உள்ள மற்றெந்தத் திருநகரமும் கூறப்படாமல் ஆரூர் கூறப்பட்டமை அந்நகர் பெற்ற முக்கியத்துவம் தான் காரணமாகும்.

ஆரூர் எனும் இப்பெருநகர் கீழத்தஞ்சை மாவட்டத்தில் உள்ளது. இவ்வூரின் நடுநாயகமாக விளங்கும் ஆரூர் திருக்கோயில் ''ஸ்ரீதியாகராஜர் திருக்கோயில்'' என அழைக்கப்படுகிறது. இத் திருக்கோயில நால்வராலும் பாடல் பெற்றது. தேவாரத்தலங்களான ''மூங்கோயிலும்'' ''அரநெறியும்'' தியாகராசர் திருக்கோயிலிலுள்ளேயே அமைதுந்துள்ளன. சுந்தரரால் பாடல் பெற்ற

தேவாரத் தலமான ''பரவையுண் மண்டளி'' தியாகர் திருக் கோயிலை ஒட்டியே உள்ளது.


சைவ வரலாற்றைப் பொறுத்தவரை ஏயர்கோன் கலிக்காம நாயனார், கழற்சிங்கர், விறன்மிண்டார், செருத்துணையார், நமிநந்தியடிகள், தண்டியடிகள், சோமசிமாறர், சேரமான் பெருமாள் மற்றும் சுந்தரர், நாவுக்கரசர், ஞானசம்பந்தர் போன்றவர்களுடன் நெருங்கிய தொடர்புடைய தலம். ''திருக்கயிலை வீற்றிருந்த சிவபெருமான் திருக்கணத்தார், பெருகிய சீர்த் திருவாரூர்ப் பிறந்தார்களாதலினால்'' — எனப் பெரிய புராணம் பேசுகிறது. சப்தவிடங்கத் தலங்களான ஏழுத் தலங்களில் இதுவே தலைமைத்தலமாகும். இத்தலத்தின் ஆகமம் காமிகம்.

அருள்மிகு ஆரூர் திருக்கோயிலின் கட்டிடக்கலையின் சிறப்பு அம்சங்கள், சிற்பங்களின் சிறப்பு, வரலாற்றுததிறம், வழிபாட்டு நெறியின் தனித்தன்மைகள், கல்வெட்டுக்களில் காணும சமுதாய நிலை, செப்பேட்டுச்செய்திகள், பேசிடும் ஓவியங்கள், இத்திருக் கோயிலில் மலர்ந்துள்ள இலக்கியங்கள் இவைகளை விரிவாகக் காண்போம்.

ஆரூரின் சிறப்புக்குக் காரணமான மனுவேந்தனின் வரலாறு ஆரூர் வளர்த்த ஆடற்கலையின் அம்சங்கள், புதுமையான இசைக் கருவிகளின் முக்கியத்துவம், செப்புத்திருமேனிகளின் சிறப்புகள் போன்ற இன்ன பிற அம்சங்களையும் தெள்ளிதின் காண்போம். மேலும் இதுவரை கண்டுபிடிக்கப்படாத ஓர் புதிய கல்வெட்டு —அதுவும் இத்திருக்கோயிலில் உள்ள கல்வெட்டுக்களிலேயே காலத்தால் தொன்மையான ஒன்றின் சிறப்பியல்புகள், இசை நாடக நூலான ''மனுநீதி சோழ மகாராசா நாடகம்'* என்ற புதிய இலக்கிய நூல் அறிமுகம், தியாகர் வழிபாட்டு வரலாற்றில் சில புதிர்களின் விளக்கம் போன்ற அத்தனையும் சுவைப்போம்.

மாமன்னன் முதலாம் இராஜேந்திரன், அவன் அன்புக்காதலி பர்ன்வ நங்கை, மனுநீதி சோழன், அவன் மகன் பிரியவிருத்தன் அவனது மந்திரி இங்கனாட்டு உபயகுலாமலன், விக்கிரம சோழன், உபயகுலாமலன் வழித் தோன்றல் சந்திரசேகரன ஆதிவிடங்கன் மூன்றாங்குலோத்துங்கன், அவனது குருவான ஈஸ்வர சிவனார்

நாயக்க மன்னன் செவ்வப்பன், சைவச்செம்மல் கமலை ஞானப் பிரகாசர், முதலாம் சரபோஜி போன்ற பெருமக்களை படிமங் களாகக் காணும் பாக்கியம் ஆரூரில்அன்றி வேறுஎங்கும் கிடையாது. தமிழகத்தின் தலையாய பெருமைகள் பலவற்றை தன்னுள் கொண்டு தி கழ் ம் திருவாரூர்த் திருக்கோயிலின் பெருமைகள் அத்தனையும் இந்நூலில் காண்போம்.



திருக்கோபுரங்கள்

திருக்கோபுரங்கள்

இராசகோபுரம்

திருவாரூர் அருள்மிகு தியாகராசசுவாமி திருக்கோயில் கிழக்கு நோக்கிய திருக்கோயிலாகும். எனவே இத்திருக்கோயிலைப் பொறுத்தவரை பிரதான நுழைவாயில் (துவார கோபுரம்) கிழைத் திருக்கோபுரமேயாகும். இதுவே இத்திருக்கோயில் கோபுரங் களிலேயே பெரியது. 110×60 அடி அடித்தளமும் 120 அடி உயரமுடைய நெடி துயர்ந்த இந்த இராசகோபுரம் - தெற்கு வடக்கில் 666 அடிகளும், கிழக்கு மேற்கில் 846 அடிகளும், 30 அடி உயரமும் உடைய திருமதில்களைப்பெற்ற, மிகப் பரந்த நிலப் பரப்பைத்தன்னுள் கொண்ட பெருந்திருக்கோயிலின் பிரதான வாயிலாக அமைந்துள்ளது.

கட்டிட நிர்மாணச்சிறப்பும்—சிற்பங்களின் எழிலும்


இந்த இராச கோபுரத்தின் மகாதுவாரம் (வாயில்) நெடி துயர்ந்தும், ஒரே கல்லால் ஆன நிலைக் கால்களைப் பெற்ற இரண்டு நிலை வாயில்களுடன் திகழ்கிறது. முதல் நிலைக்கு முன்னே பகுதித் திற்கு மூன்றாக ஆறு கால்கள் பீடத்தில் சிம்ம சிற்பத்துடன உள்ளன. இதே போன்று இரண்டாம் நிலைக்கு அடுத்தும் ஆறு கால்கள் சிம்ம சிற்பத்துடன் உள்ளன. முதல் நிலையில் மரக் கதவம் பொருத்தப்பட்டுள்ளது. முதல் நிலைக்கும் இரண்டாம் நிலைக்கும் இடையேஉள்ள பகுதியில் இருபுறமும் இரு அடுக்குள்ள மாடமாகத் தடுக்கப்படுள்ளது. இதில் ஓர் புறம் கோபுரத்தின் மேல் நிலைக்குச் செல்லும் படிகள் உள்ளன.

மகாதுவாரமான பிரதான வாயிலின் மேல் தளம் (முதல் தளம்) வரை முற்றிலுமாகக் கருங்கற் கட்டுமானமாக அமைந்து உள்ளது. இதற்கு மேல் 6 பிரஸ்தானங்களும் 7 துவாரங்களும் உள்ளன. இவையனைத்தும் சிகரம் உட்பட செங்கற்கட்டுமானமே யாகும்.

உபபீடத்திலிருந்து முதல் தளம் வரை உள்ள கருங்கற்கட்டு மானப் பகுதி 12-13ஆம நூற்றாண்டின சோழர்கால, சிற்ப மற்றும் கட்டடக்கலையின் உயரிய எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது உபபீடம், வாயிற் படிகள், இவற்றை அழகு செய்யும் யானை சிற்பங்கள்;இவையனைத்தும் காலப்போக்கில் மண் மேடிட்டமை யாமல் பூமியில் புதைந்துள்ளன. இதே உபபீடம, கோயிலின் உள்ளே (பிரகாரத்துள்) புதைவு படவில்லை. தற்போது வெளிப் புறம் குமுதவரியில் இருந்து தொடங்குகிறது. அதன் மேல் கம்பு, கழுத்து, மற்றும் பாதவர்க்கம முதலியவை அமைந்துள்ளன. இதில் அடுத்தடுத்த சில கோஷடங்களும், கால்களும்; பாயும் சிம்மங்கள், குதிரைகள், யாளிகள், மற்றும் போர் வீரர்களின் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. ஆங்காங்கே உள்ள கால்களின் பலகைகளின் மேலும் பொதிகைகளை ஓட்டியும் ஈடிணையில்லா நடன மாதர்தம் சிற்பங்களும், மத்தளம் வாசிப்பான் சிலரது சிற்பங்களும் உள்ளன. இவற்றில் பெரும்பான்மையான சிற்பங்கள் சிதைவுற்றும் சில அகற்றப்பட்டும் உள்ளன. முதல் அடுக்குக் கபோதகத்திற்குக் கீழே உள்ள எழுதகம் என்னும் பகுதி பூத கணங்கள் அமையப்பெற்ற பூதவரிமாணமாகத் திகழ்கிறது.

கபோதம் கூடுகள் பெற்றும், அதற்கு மேலே யாளவரியும், அதனை ஓட்டி ஒருவர் நடந்து செல்லும் அளவு தளமும் அமைந்து உள்ளது. தளத்தின் மேல் கனதி, கம்பு ஊர்த்தபத்மம், கம்பு, குமுதம், கழுத்து, பலகை போன்ற வரிமானங்கள் மிகுந்த எழிலுடன் திகழ்கின்றன. இவற்றிற்கு மேலாக, கால்களும், கோஷ்ட தேவதைகளுடன் கூடிய கோஷ்டங்களும், கும்ப பஞ்சரங் களும் உள்ளன. கால்களின் மேல் பொதிகை சிறப்புடன் திகழ் வதுடன் எழுதகம், வாரி ஜனமும், கூடுகள் பெற்ற கபோதகமும் யாளவரியும் முதல் தளத்தைச் சிறப்புற எழில் செய்கின்றன.

துவார வாயிலுடன் கூடிய இந்த முதல் நிலை இராச கோபுர அமைப்பை மூன்றும் குலோத்துங்கனின் தனிப்பாணியாகவே கொள்ளலாம். அப்பெருமகன் கடடுவித்த திரிபுவன வீரேச்சரம் (தற்போது குடந்தைக்கருகில் திருபுவனம் எனும் ஊரில் கம்பகேஸ்வரர் திருக்கோயில எனஅழைக்கப்படுகிறது) போன்ற திருக்கோயில்களின் இராசகோபுரங்கள் அனைத்தும் இதே அமைப்பில் திகழ்கின்றன. இதுவரை கண்ட ஆரூர்திருக்கோயிலின் கீழை இராசகோபுரத்தின் வெளிப்புறமும், உடபுறமும் உள்ள சுவின்மிகு சிற்பங்களின் கலைச் சிறப்பை இனிக்காண்போம்.



கிழக்கு கோபுரம்



சுற்று கோபுரம்

முதல் அடுக்குக்கபோதகத்தின் கீழ் உள்ள பகுதியில வெளிப் புறமதிலை ஒட்டிய தென் புறமிருந்து தொடங்குவோம். சிமம பீடம் உளள தூண்களுக்கு இடையே சில விலங்குகளும வீரர்களின் சிற்பங்களும் உள்ளன. இத்தகைய சிற்பவரிசை பெரும் பாலும் மூன்றும் குலோத்துங்கனின் பாணியாகவே குறிப்பிடலாம். இதில இரண்டு குதிரைகள் முன் கால்களையும் தலையையும் உயர்த்திப் பாயும் நிலையில் காணபபடுகிறது. அதன் மேல் இரண்டு வீரர்கள வாளும் கேடயமும் ஏந்தி, போர் புரியத் தயாராய உள்ளனர். இதே போன்று குதிரைகளின் கீழ் இரண்டு வீரர்கள் உளளனா. இதனை ஒத்தே பாயும் இரண்டு சிங்கங்கள் மீது இரு டோர் வீரர் களும் கீழே இரண்டு வீரர்களும உள்ளனா. அடுதது சிங்க உடலும் மனிதத்தலையும் உள்ள விசித்திர விலஙகொனறு பாயந்து நிற்கிறது, அதன் மனித முகத்தில் அழகிய மீசைகளும் உள்ளன. தலையின் பின்னே ஒளிவட்டம் உள்ளது. கோஷடங்களை பஞ்சரங்கள் அணிசெய்கின்றன.

பஞ்சரங்களின் மத்தியில் உள்ள சிறபங்களில் தயிர் கடையும் பெண்ணணங்கு அருகே கண்ணன் குழந்தையாக நிற்பதும், பறவை ஒன்றின் வாயினைப் பிளப்பதாகவும் அமைந்த சிறபங்கள குறிப்பிடத்தக்கவையாகும். இத்தகைய சிற்பங்கள பலவற்றின இடையே, பலகைகளின் மேலும் கபோதகத்தின் கீழும் நடனக் கலையின் உயரிய முத்திரைகளைப் பிரதிபலிக்கும் பாவையர் அறுவர் ஆறுவித முத்திரைகளுடன் ஆடி நிற்கும இச்சிற்பங்கள் மிக அரியவையாகும். அறுவர் மத்தியில மத்தளம் வாசிப்பான் ஒருவனும் உள்ளான்.பரத இலகணங்களுகுரிய உடல வாகுடன் கயல்விழிகள் பேசிடும் இப்பாவையரைப் பார்க்க பார்க்க சலியாது இப்பாவையர்களை ஒட்டி, தலைக்கு மேலாக உள்ள பூதவரியில பலவகையான பூதங்கள் உள்ளன. சில தாளமிடுகின்றன. ஒரு பூதத்திற்குச் சிங்க முகம் உள்ளது. சில குரங்கு முகம் பெற்றுத் திகழ்கின்றன.

கபோதகத்திற்கு மேல் உள்ள சிறிய நடைதளத்திலிருந்து மேல் தளத்திற்கு இடைப்பகுதியில் ஐந்து தேவ கோஷ்டங்கள உள்ளன. இதில் ஒரு கோஷடத்தில் (மாடத்தில்) கோஷ்ட தேவதை இடம பெறவில்லை. முதல் கோஷ்டத்தில் முழு முதற் கடவுளான சிவபெருமானின திருவுருவம் நான்கு கரங்களும், கரண்ட மகுடமும் பெற்று மூன்று சிம்மங்கள் உள்ள பீடதின

மேல் நின்ற கோலத்தில் அருள்பாலிக்கும் வண்ணம் வடிக்கப் பட்டுள்ளது. வலது கரங்கள் அபய முத்திரையும், மழுவும் இடது கரங்கள் வரதமும், பாசமும் கொண்டு காணப்படுகிறது.

இதனை அடுத்து இரண்டாவது கோஷ்டத்தில் நாகராஜன் தலையின் மேல் ஐந்தலை அரவும், வலது கரங்கள் அபயமும் நாகமும் கொண்டு, இடது கரங்களில் ஒன்று உடைந்தும், நாகம் ஏந்தியும் நின்ற கோலத்தில் காட்சி அளிக்கிறார். மகுடம் கரண்ட மகுடமும், பீடத்தில் 3 சிம்மங்களும் உள்ளன: அடுத்து கோஷ்ட பஞ்சரம் ஒன்று உள்ளது. மூன்றாவதாக வலக்கரத்தில் குத்து வாளும், இடக்கரம் ஆகூய வரதமும கொண்டு கோரைப்பற்களும் கரண்ட மகுடமும் கொண்ட அழகியதோர் படிமம் காணப் படுகிறது. நான்காவதாக சிவபெருமான் சிம்ம பீடத்தின் மேல் ஜடா மகுடதாரியாக வலக்கரங்கள் அபய முத்திரையும் மழுவும் கொண்டு இடக் கரங்கள் ஆகூய வரத முத்திரையும் திரி சூலமும் கொண்டு காணப்படுகிறார்.

கோபுரத்தின் கீழ்புறம் வாயிலை ஒட்டிய வலது புறத்தின் கீழ் பகுதியில் பாயும் சிங்கத்தின் மேல உளள வீரன் சிற்பம் ஒன்றும்-4 கோஷ்டங்களும் உள்ளன. இதில் ஒரு கோஷ்டம் உள்ள பகுதியில் விநாயகர் கோவில் ஒன்று பிற்காலத்தில் இணைக்கப்பட்டுள்ளது. 4 கோஷ்டங்களுமே சிற்பங்கள் இடம் பெறாமல் உள்ளன. தென்புறம் போன்றே சிம்மங்கள் உள்ள கால்களின் பலகைகளில் ஐந்து மகளிர் நடனம் புரியும் எழிற் சிற்பங்கள்உள்ளன. இவை பெரும்பாலும் உடைந்த நிலையில் உள்ளமை சிற்பக் கலை உலகின் நிரந்தர பேரிழப்பாகும்.இது மட்டுமின்றி இதே பகுதியில்மேலும் நான்கு கால்களின் பலகையின் மேல் இருந்த நடன மாதர் சிற்பங்கள் முற்றிலுமாக அகற்றப்பட்டுள்ளது.இப்பகுதிக்கு மேலே நான்கு கோஷ்டங்களும் நான்கு கோஷ்ட பஞ்சரங்களும் உள்ளன. இதில் தென் புறக் கோஷ்டத்தில் நின்ற நிலையில் தேவி நான்கு கரங்களுடனும் சிம்ம பீடத்தின் மேல் காணப்படுகிறாள். வலது கரங்கள் அபய முத்திரையும் தாமரையும் இடது கரங்கள் ஒன்று உடைந்தும் மற்றதில் தாமரையும் காணப்படுகிறது.

இதனை அடுத்துள்ள கோஷ்டத்தில் சிவபெருமானின் சிற்பம் சிம்ம பீடத்தில் நின்ற கோலத்தில் கோரைப் பற்களும் சின விரிகளும் ஜுவாலா மகுடமும் பெற்று ஓர் கரத்தில் நாகமும் மறு கரத்தில் கபாலமும் கொண்டு காணப்படுகிறது. மூன்றாவது கோஷ்டத்தில் விரி சடை சடவுளர் நான்கு கரங்களுடன் நின்ற

கோலத்தில் கரந்த மகுடம் பெற்று வலக்கரங்களில் அபயமும் மழுவும்கொண்டு காணப்படுகிறார். இடக்கரம் ஒன்று உடைந்தும் மற்றதில் திரிசூலமும் உள்ளது.

வாயிலை ஒட்டிய கோஷ்டத்தில் எழில் கொஞ்சும் கறுப்பு வண்ணக் கல்லால் செய்யப்பட்ட துவார பாலகர் சிற்பம் அலங் கரிக்கிறது. இவ்வாயிற் காப்போன் சிற்பம் சோழர்கள் மற்றும் சாளுக்கியர்களின் கலை இணைப்பால் எழுந்த உன்னத கலைப் படைப்பாகும்.

இதே போன்று வாயிலை ஒட்டிய இடப் புறத்தில் கீழ்ப் பகுதியில் மூன்று யாளிகளும் போர் வீரர்களும் உள்ள சிற்பங்களும் கோஷ்டங்களும் உள்ளன. கோஷ்டங்களில் சிற்பங்கள் இல்லை. இவற்றின் தோரணங்களில் மிக அழகிய சிற்பங்களாக காளி, மகிஷாசுரமர்த்தினி போன்றவை வடிக்கப்பட்டுள்ளது. தென் புறம் போன்றே பிற்கால இணைப்பான சுப்ரமணியர் கோயில் ஒன்றும் இணைந்துள்ளது. சிம்மத் தூண்களின் பலகைகளின் மேல் மூன்று ஆடும் மகளிர் சிற்பங்கள் பொலிவிழந்து காணப்படு கிறது. மேலும் இம்மாதிரியான ஆடல் அணங்குகளின் சிற்பங் களாக ஆறு எழிற் படைப்புகள் முற்றிலுமாக அகற்றப்பட்டுள்ள சுவடுகள் தான் உள்ளன.

இதன் மேல் பகுதியில் நான்கு தேவ கோஷ்டங்களும் நான்கு கோஷ்டப் பஞ்சரங்களும் உள்ளன. வாயிலை ஒட்டிய கோஷ்டத் தில் தென்புறம் போன்றே துவார பாலகர் சிலை ஒன்று அலங்கரிக் கிறது. அடுத்துள்ள கோஷ்டத்தில் (சுப்ரமண்யர் கோயிலுக்கு மேலே) தலைசிறந்த அரிய சிற்பமான சூரிய தேவன் சிற்பம் உள்ளது. இதில் ஆதித்தன் நான்கு கரங்களுடன், ஒளி வட்டத் துடன், சிம்மபீடத்தின் மேல் நின்ற வண்ணம் அருள் பாலிக்கிறார். வலது கீழ்கரம் அபயமும், வலது மேல் கரம் தாமரையும், இடது கீழ்கரம் ஆகூய வரத முத்திரையும், மேல்கரம் தாமரையும் கொண்டு நிற்கும் கோலம் நோக்குதற்குரிய ஒன்று. இச் சிறப்பு மிகு சிற்பம் திருவாரூர் சிற்பங்களிலேயே-ஏன் சோழர்கால சிற்பங் களில் கூட தலை சிறந்த (Master P'eces) சிற்ப வரிசையில் இடம் பெறத்தக்கதாகும்.

இதனை அடுத்துள்ள கோஷ்டத்தில் இரண்டு கரங்களும்' கரண்ட மருடமும், காதில் அழகிய குண்டலங்களும் பூணூடு நின்ற கோலத்தில் உள்ள இறையுருவம் உள்ளது. இடக்கரத்தில மழுவும் வலக்கரத்தில் திரிசூலமும் உள்ளது.

நான்காவதாக அமைந்துள்ள கோஷ்டத்தில் ஜடா மகுடமும் நீள் செவிகளும் உடைய தேவியின் சிற்பம் நான்கு கரங்களுடன் காணப்படுகிறது. வலது கீழ்கரம் சின் முத்திரையும், மேல்கரம் அக்கமாலையும், இடது கீழ்கரம் உடைந்தும் மேல்கரம் ஜல கெண்டியுடனும் உள்ளது. தேவி சிம்ம பீடத்தின் மேல் நின்ற தோலத்தில் அருள் பாலிக்கிறாள்,

கீழ்புறம்கடந்து மதிலை ஒட்டிய வடபுறத்தில் தென்திசையில் உள்ளது போன்றே கோஷ்டங்களும் உள்ளன. அவற்றில் இரண்டில் தேவதைகள் இடம் பெறவில்லை. சிம்மத்தூண்களுக்கு இடையில் பாயும் யாளிகள் மூன்றும், சிங்கம் ஒன்றும், துதிக்கை உள்ள யாளிகள் இரண்டும் உள்ளன. இவைகளின் முதுகிலும் கீழும் வாளும் கேடயமும் ஏந்திய வீரர்களின் உருவங்கள் வடிக்கப் பெற்றுள்ளது. பலகைகளின் மேல் உடைந்த நிலையில் மூன்று நடனப்பாவைகளும் மத்தளம் அடிப்பவன் ஒருவன் சிற்பமும் உள்ளன. மூன்று நடனப் பாவையர் சிற்பம் அகற்றப்பட்ட சுவடு களும் உள்ளன.

இச் சிற்பத் தொகுதிக்கு மேலே இரண்டாம் அடுக்கில் ஐந்து கோஷ்டங்கள் உள்ளன. ஒன்றில் சிற்பமேதும் இடம் பெறவில்லை முதல் கோஷ்டத்தில் சிவபெருமான் நின்ற கோலத்தில் நான்கு கரங்களுடனும் நீள்செவியுடனும் காணப்படுகிறார். வலதுமேல் கரத்தில் மழுவும், கீழ்கரம் அபயம் அளித்தும், இடது மேல் கரம் திரிசூலம் ஏந்தியும், கீழ்கரம் உடைந்தும் காணப்படுகிறது.

அடுத்துள்ள கோஷ்டத்தில் நின்ற கோலத்தில் இறையுருவம் வடிக்கப்பட்டுள்ளது. ஜடா மகுடமும், வலக்கரம் திரிசூலம் ஏந்தியும், இடதுகரம் உடைந்தும் காணப்படும் இத்திருவுருவம் சிறப்புடைய ஒன்று.

மூன்றாவதாக உள்ள கோஷ்டத்தில் சக்தி காளியாக காட்சி நல்குகிறாள் நின்ற கோலத்தில் நான்கு கரங்களுடனும்,ஜுவாலா மகுடமும், ஓர் நீள் செவியில் குண்டலமும், கோரைப்பற்களும் கொண்டு திரிசூலம், டமருகம் பாசம் ஏந்தி அருள் பாலிக்கும் அன்னையாக காட்சி நல்குகிறாள்.

கடைசியாக உள்ள கோஷ்டத்தில்முக்கண் பெற்ற விரிசடைக் கடவுளர் ஜடா மகுட தாரியாக, நான்கு கரங்கள் பெற்று நின்ற கோலத்தில காணப்படுகிறார். வலது கீழ்கரம் அபயமும், மேல் கரம் மழுவும், இடது கீழ்கரம் உடைந்தும், மேல்கரம் திரிசூலம்

ஏத்தியும் காணப்படும் இத்திருவுருவம் ஏற்றம் பெற்ற சிற்பத் திறனின் எழிலோவியம் ஆகும். இதுகாறும் வெளியில் கண்ட சிற்பங்களை தொகுத்து நோக்கும் போது கோஷ்டங்களில் 16 இறையுருவங்களும், கபோதகத்தின் கீழ் 17 நாட்டிய அணங்கு களின் எழிற் கோலமும், மத்தளம் வாசிப்பான் இருவரது சிற்பங் களும் இடம் பெற்றுள்ளதைக் கண்டு மகிழலாம்,

வெளிப்புறம் கண்டு களித்த சிற்பங்களை எல்லாம் மனதில் கொண்டு மகாதுவாரம் (வாயில்) வழியாக உள்ளே செல்வோம். இராசகோபுரத்தின் மறு பாதியான உட்புறம் வெளியில் கண்டோமே! அதே சிற்ப வரிசைகள் - கோஷ்டங்கள் - இறை யுருவங்கள் - நடனம் புரியும் ஆரணங்குகள்-இத்தனையும் தெவிட் டாத சிற்பக் காட்சிகள்!!.

முதலில் நாம் வலப்புறமாகத் திரும்பி பிரகாரத்தின் வடபுறத் திலிருந்து தொடங்குவோம். இங்கு சிம்ம தூண்களுக்கு மத்தியில் பாயும் நிலையில் உள்ள யாளிகள் ஐந்தும், யானை முகம் உள்ள யாளி ஒன்றும், இவற்றின் மேலும்கீழும் போர் வீரர்களின் சிற்பங் களும் காணலாம். சிங்கத்தூண்களின் (கால்கள்) மேல் உள்ள பலகைகளில் நான்கு ஆடல்அரசிகள் அற்புத நடனம் புரிகின்றனர். மேலும் இருவர் ஆடிய சுவடுதான் உள்ளது. இது காலம் செய்த கோலம். இச் சிற்ப வரிசைக்கு மேல் நிலையில் ஐந்து கோஷ்டங் கள் உள்ளன. இவற்றில் நான்கில் மட்டும் இறைவனின் திரு மேனிகள் இடம் பெற்றுள்ளன. ஒரு கோஷ்ட பஞ்சரமும் உள்ளது

முதல் கோஷ்டத்தில் முழுமுதற் கடவுளர் ஜடா மகுடமும் நின்ற கோலமும்கொண்டு நான்குகரங்களுடன் காட்சி நல்குகிறார் வலது கீழ்கரம் அபய முத்திரையும், மேல்கரம் கத்தியும், இடது கீழ்க்கரம் உடைந்தும், மேல்கரம் கேடயமும் கொண்டு காணப் படுகிறது.

இதனை அடுத்துள்ள கோஷ்டத்தில் தேவி நின்ற கோலத்தில் நான்கு கரங்களும் ஜடா மகுடத்துடனும் காணப்படுகிறாள். வலது இடது கீழ் கரங்களும், கொங்கைகளும் உடைந்து பொலி விழுந்துள்ளது. வலது இடது மேல் கரங்களில் முறையே மழுவும் நாகமும் ஏந்திக் காணப்படுகிறது. இதனை அடுத்து ஓர் கோஷ்ட பஞ்சரமும் அணி செய்கிறது.

மூன்றாவதாக உள்ள கோஷ்டத்தில் இருகரங்களிலும் குமுதம் ஏந்திய சந்திரனின் படிமம் நின்ற கோலத்தில் உள்ளது. அடுத்து

உள்ள கோஷ்டத்தில் தெய்வ உருவம் இடம் பெறவில்லை. நான்காவதாக உள்ள கோஷ்டத்தில் விரிசடை பெருமான் நான்கு கரங்களும், ஜடா மகுடமும் பெற்று வலது கீழ்கரம் அபயமும் வலது மேல்கரம் கத்தியும், இடது கீழ்கரம் வரதமும், மேல்கரம் தேடையும் ஏந்திய நின்ற கோலம் பூண்டுள்ளார்.

கோபுர வாயிலை ஒட்டிய வலப்புறத்தின் கீழ்பகுதியில் மூன்று பாயும் யாளிகளும் போர் வீரர்களும் உள்ள சிற்பத் தொகுதி அணி செய்கிறது. இங்கு இடம் பெற்றுள்ள கோஷ்டங்களில் ஒன்றில் மட்டும் சடாமுடியும், தாடியும் மீசையும் கொண்டு இடுப்பிலே நீண்ட ஆடை, மார்பிலே ருத்திராட்ச மாலையும், பூணூலும் பூண்டு இரு கரங்களையும் இழந்த (பிற்காலத்தில் உடைக்கப்பட்டுள்ளது) முதியவர் ஒருவர் படிமம் இடம்பெற்று உள்ளது. அவர் நிற்கும் பீடத்தில் ஏதோ சில கல்வெட்டெழுத்துகள் உள்ளன. (இவை சிதைவுற்றமையால் முழுமையாகப் படிக்க இயலவில்லை.) வரலாற்றில் அழியா இடம் பெறும் இம் முதியவர் பற்றிய விரிவான செய்திகளை பிற்பு காண்போம்.

இதே வரிசையில் உள்ள கால்களின் பலகையில் இரண்டு நடனப் பெண்கள் இரண்டுவித அபிநயங்களில் ஆடுகின்றனர். இடையே ஒருவன் மத்தளம் வாசிக்கின்றான். மேலும் 8 பலகைகளின் மேல் ஆடிய ஆரணங்குகளின் சிற்பம் முற்றிலுமாக அழிக்கப்பட்டுவிட்டது கலையறிவில்லாதவர்களின் செய்கையே ஆகும். மேலே இரண்டாம் அடுக்கில் உள்ள கோஷ்டங்களில் நான்கு இறை உருவங்கள் இடம் பெற்றுள்ளன. முதலாவதாக வைஷ்ணவியின் எழிற் கோலம் சிறப்புடைய ஒன்று. நின்ற கோலத்தில் கரண்ட மகுடமும், வலது கீழ்கரம் அபயமும், மேல் கரம் சக்கரமும், இடது கீழ்கரம் ஊருஹஸ்தமும் (தொடைக்கை) மேல்கரம் சங்கு ஏந்தியும் அருள் புரியும் காட்சியின் நளினம் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அடுத்து கோஷ்ட பஞ்சரம் ஒன்று உள்ளது. இரண்டாவதாக கோஷ்டத்தில் இருகரம் பெற்ற தெய்வ உருவம் ஒன்று (எண்திசை காவலர்களில் ஒன்று) இரு கரங்களிலும் விசிறி ஏந்திய நிலையில் உள்ளது.

மூன்றாவது கோஷ்டத்தில் நின்ற கோலத்தில் அருள் பாலிக்கிறார். வலது கரங்கள் ஆழியும், அபயமும் கொண்டும், இடது கரங்கள் சங்கமும், ஊருஹஸ்தத்துடனும் திகழ்கின்றன. வாயிலை ஒட்டிய கோஷ்டத்தில் எழில் மிகுந்த துவாரபாலகர் படிமம் அழகு செய்கிறது.

மகா வாயிலின் இடதுபுறம் கீழ்பகுதியில் 5 கோஷ்டங்கள் உள்ளன. நான்காவது கோஷ்டத்தில் ஒரு பீடத்தின் மேலே தாடியும் மீசையும் பெற்ற மன்னன் ஒருவனது உருவச்சிலை இரு கரங்களையும் கூப்பிய நிலையில் உள்ளது. பீடத்தில் கல்வெட்டு இருந்து சிதைந்துள்ளது. ஒரு சில எழுத்துக்களே காணப்படுகின்றன இவ்வுருவச் சிலையைப் பற்றிய ஆய்வுக் கருத்துக்களையும் பின்பு விரிவாகக் காண்போம். இதே பகுதியை நடமிடும் நங்கைகளின் சிற்பங்கள் மூன்று அலங்கரிக்கின்றன. ஆனால் இங்கு நாம் இழந்த கலைச்செல்வியர்களின் படிமங்களின் எண்ணிக்கையோ எட்டாகும்.

மேலே இரண்டாம் அடுக்கில் ஐந்து கோஷ்டங்களும் ஒரு கோஷ்ட பஞ்சரமும் உள்ளன. இதில் நான்கில் மட்டுமே இறைவனின் திருமேனிகள் இடம் பெற்றுள்ளன. வாயிலை ஒட்டிய கோஷ்டத்தில் துவார பாலகர் சிலையும், அடுத்து நான் முகன் அக்கமாலையும்' ஜலகெண்டியும் ஏந்தி அபயம் அளிக்கும் அருட்கோலமும் காணப்படுகிறது. மூன்றாவது கோஷ்டத்தில் இருகரங்கள் மட்டுமே (ஓர் கரத்தில் பாசம்) உள்ள திருவுருவம் ஒன்று உள்ளது. கடைசியாக உள்ள கோஷ்டத்தில் முழுமுதற் கடவுளர் நின்ற கோலத்தில் ஓர் காதில் குண்டலமும், நான்கு கரங்களுடனும் அருள் புரிகிறார். வலதுகரம் அபயமும், மேல் கரம் திரிசூலமும், இடதுகரம் ஆகூய வரதமும் மேல்கரம் பாசத் துடனும் அருள் பாலிக்கும் காட்சியை காணக் கண்கோடி வேண்டும்.

தென் பகுதியை பாயும் யாளியின் மேல் உள்ள வீரர்களின் சிற்பங்கள் நான்கும், மீசையுள்ள மனிதத் தலையுடன் கூடிய சிங்கமும் அலங்கரிக்கின்றன. இவற்றின் இடையே சிற்ப வல்லுநர் களால் மிகவும் போற்றப்படும் எழில் வாய்ந்த சிற்பம் ஒன்றும் உள்ளது. பாயும் சிங்கத்தின் முதுகின்மேல் கொற்றவை தேவி சீற்றத்துடன் அமர்ந்துளளாள். அவளது சீற்றத்தால் கதிகலங்கிய மகிஷன் ஒருகையை மேலே தூக்கிய வண்ணம் பயந்தோடும் காட்சியை வடித்திருப்பதை எழுத்தால் வடிப்பது இயலாத ஒன்று. சிங்கத்தின் சிற்ற முகமே அவள் கொண்ட சினத்தின் பிரதி பலிப்பாகும். சினம்கொண்ட தேவியாயினும் அவள் அருள்நாயகி யாயிற்றே! அவளது முகத்தில் சினத்தின் நடுவே அருள் மழையும்

பொழிகின்றது. கொடுங்கையின் கீழ்உள்ள பலகைகளில் இரு மகளிர் ஆடுகின்றனர், நால்வர் ஆடிய சுவடு நம் கண்களில் நீர் துளிர்த்துச் செய்கின்றது.

இதே பகுதியில் மேல் நிலையில் ஐந்து கோஷ்டங்கள் உள்ளன ஒன்றில் சிற்பமேதும் இடம்பெறவில்லை. தென்மேற்கு மூலையில் சிவபெருமான் ஜடாமகுடதாரியாய் நான்கு கரங்களுடன் அருள் பாலிக்கிறார். வலது இடது மேற்கரங்களில் முறையே சூலமும் மழுவும் உள்ளன. கீழ்கரங்கள் அபயமும் வரதமும்சுட்டுகின்றன.

இதனை அடுத்து இருகரங்கள் பெற்ற தெய்வ உருவொன்று இடம்பெற்றுள்ளது. ஓர்கரத்தில் கத்தியும் மறுகரத்தில் கேடயமும் உள்ளன. மூன்றாவதாக தேவி நான்கு கரங்களுடன் காட்சி நல்குகிறாள். வலது கீழ்கரம் அபயமும், மேல்கரம் மழுவும் இடது கீழ்கரம் உடைந்தும் மேல்கரம் பாசமும் கொண்டு காணப் படுகிறாள். நான்காவது கோஷ்டத்தில் சிவபெருமான் மேல் கரங்களில் மழுவும் சூலமும் கொண்டு கீழ்கரங்கள் அபயமும், வரதமும் சுட்டி அருள்மழை பொழியும் காட்சி காண வேண்டிய ஒன்று.

இதுவரை கண்ட எழில்மிகுந்த சிற்பங்களை நோக்கும்போது இத்திருக்கோவிலிலேயே சிறந்த கலைப்படைப்புகள் அதிகம் பெற்ற ஓர் கலைக் களஞ்சியம் கீழை இராசகோபுரமே என்பது தெளிவாகும். அதேநேரத்தில் கலையறிவில்லாத புல்லர்களின் தாக்குதலுக்கு இரையான சிற்பங்கள் ஒன்றல்ல இரண்டல்ல. இங்கு மட்டும் எழிற்பாவையர்கள், சிவபெருமான் ஆடிய தாண்டவங்கள் பலவற்றை அபிநய முத்திரைகளாக நிறுத்தி நின்றனர். அவற்றில் இன்று 6 பாவையர்களின் படிமங்களே முற்றும் சேதமுறாமலும் எழில் குறையாமலும் உள்ளன. 22 படிமங்கள் கையிழந்தும், தலையிழந்தும் காணப்படுகின்றன. 35 படிமங்கள் முற்றிலுமாக அகற்றப்பட்டுவிட்டதைக் காணும்போது கண்ணீர்விடத்தான் செய்வோம். இதேபோன்று கோஷ்ட சிற்பங் களில் பல திருமேனிகள் தாக்குதலுக்கு இறையாகி உறுப்பிழந்து தோற்றமளிக்கின்றன. இவையனைத்தும் கலையறிவற்றவர்களின் கோரத்தாண்டவத்தினால் ஏற்பட்ட கோலமதான்.

கருங்கல்கட்டுமானமான முதல் தளத்திற்கு மேலாக ஆறு பிரஸ்தளங்களும் ஏழு துவாரங்களும் உள்ளன. இவையனைத்தும்

செங்கல் கட்டுமானமாகவே உள்ளன. முதல் மூன்று துவாரங் களையும் இரண்டிரண்டு கல்த்தூண்கள் அணிசெய்கின்றன. முதல் துவார தூண்களை மட்டும் இரண்டு சிம்மங்கள் தாங்கியுள்ளன, முதல் அடுக்குக் கோபுரத்தைத் கோஷ்டங்களும் கால்களும், பொதிகைகளுமே அணிசெய்கின்றன. இரண்டாம் அடுக்கில் சாலைகளும், பஞ்சரங்களும் கர்ணகூடுகளும் காணப்படுகின்றன. முதல் இரண்டு அடுக்குகளிலும் சிற்பங்களோ, சுதைகளோ (STUCCO) இடம்பெறவில்லை. மூன்றாம் அடுக்கு முதல் நான்கு அடுக்குகள் சாலைகளாலும், பஞ்சரங்களாலும், கர்ணகூடுகளாலும் அலங்கரிக்கப்பட்டுத் திகழ்கின்றது. ஒவ்வொரு அடுக்கின் துவார வாயிலையும் சுதைகளால் ஆன துவார பாலகர் சிற்பங்கள் காத்து நிற்கின்றன. 7 வது பிரஸ்தளத்தின் மேல் சிகரத்தின் கழுத்தடி அமைந்துள்ளது. இதனை ஒட்டிய தளம் சற்று அகன்று காணப் படுகிறது. இத்தளம் வரை கோபுரத்தின் உட்புறம் உள்ள படிகள் மூலம் செல்லலாம். இத்தளத்தின் நான்கு மூலைகளிலும் இரண்டிரண்டு நந்திகள் உள்ளன. சிகரம் நீண்டும் அதன் நடுவில் 7 ஆம் துவாரத்தின் மேல் மகாநாசி கூடு உள்ளது. இதனை அடுத்து இரண்டு புறங்களிலும் இரண்டு பண்டிகைகளும் அமைந்து உள்ளன. இவை அனைத்திற்கும் மேலாக ஸ்தூபி உள்ளது. இதன் இருமருங்கும் சந்திர வளைவுகளுடன் கூடிய சிம்ம வல்லாப கட்டடம் அமைந்துள்ளது. இதன் இடையே பதினோரு செப்புக் கலசங்கள் அணி செய்கின்றன.

வெளிப்புற வாயிலின் வலப்புறம் வினாயகர் திருக்கோயிலும் இடது புறம் முருகன் திருக்கோயிலும் உள்ளன. இவை இரண்டும் கருங்கற் திருப்பணியாய் (தளம்வரை) பெருங்கோபுரத்தின் உப பீடம், அதிஷ்டானம் இவைகளுடன் இணைத்துக் கட்டப்பட்டு உள்ளது.

கீழைக் கோபுரத்தில் காணப்படும் கல்வெட்டுக்கள்

கீழைக்கோபுரத்தின் வலப்புறத்தில் அமைந்துள்ள வினாயகர் கோயிலின் கருவரையினுள் உத்திரத்தில (வடக்குபகுதி) இராஜ கேசரிவர்மனின் (முதலாம் ஆதித்தன்) பதிமூன்றாம் ஆண்டு (கி பி. 874) கல்வெட்டொன்றுள்ளது. இதன் ஒரு பகுதி சுவற்றில் புதைந்துள்ளது. இதுவரை கிடைத்துள்ள கல்வெட்டுக் களிலேயே மிகத்தொன்மையான இக்கல்வெட்டுள்ள கற்பலகை

முன்பு திருக்கோயிலினுள் இருந்த அரநெறி என்ற கோயிலில் இருந்து பின்பு திருப்பணிகளால் இடம் பெயர்ந்து இங்கே கட்டப் பட்டுள்ளது. இக்கல்வெட்டில் அரநெறி பட்டாரகர்க்கு ஒரு நுந்தாவிளக்கு எரிப்பதற்காக அளிக்கப்பட்ட அறக்கொடை பற்றி குறிப்பிடுகிறது. இதன் முழு விபரங்களையும் இந்நூலில் ''கல் வெட்டுக்கள்'' என்ற பகுதியில் திருவாரூர் கல்வெட்டு எண் 1ல் விரிவாகத் காண்க.

அடுத்து கோபுர வாயிலின் வலதுபுறம் தரை மட்டத்தில் காணப்படும் கல்வெட்டொன்று விஜயநகர மன்னனான இராம ராய்ர் (கி.பி. 1542 - 1565) காலத்தில் தஞ்சையை ஆட்சிபுரிந்த சேவப்பநாயக்கனின் கட்டளையை வெளிப்படுத்துகிறது. இக் கல்வெட்டுச்செய்தியினை கல்வெட்டுக்கள் என்ற பகுதியில் திருவாரூர் கல்வெட்டு எண் 2-ல் விரிவாகக் காண்க.

கீழைக்கோபுரத்தின் காலமும் வரலாறும்

சோழப் பெருமன்னர்களின் வரலாற்றை ஆராயும்போது மிகவும் குறிப்பிடத்தக்க திறமை பெற்று திகழ்ந்த ஓரிரு மன்னர் களில் மூன்றாம் குலோத்துங்கன் குறிப்பிடத்தக்கவன் ஆவான். இப்பெருமகன் தன்வாழ்நாளில் கண்ட மிக உச்சக்கட்ட வெற்றி ஒன்றின் நினைவாக - அவ்வெற்றியினால் கிடைத்த பெரும் பொருளால் கட்டுவித்தது இந்த இராசகோபுரம் என்றால் அதன் பெருமை சாதாரண ஒன்றா.

கி.பி. 1178 முதல் 1218 வரை ஆட்சி புரிந்தவன் இவ் வேந்தனாவான். இவனது ஆட்சியில் கி. பி. 1180க்கு முன்பு பாண்டிய மன்னன் வீரபாண்டியனோடு போரிட்டான்[1]. இதில் வீரபாண்டியனும் அவனுக்கு துணை நின்ற சிங்களப் படைகளும் பெருந்தோல்வி அடைந்தன. குலோத்துங்கன் மதுரை நகரில் வெற்றித்தூண் ஒன்றினை நிறுவி, அம்மதுரையையும் அந்நாட்டை ஆளும் உரிமையையும் தன்னிடம் அடைக்கலம் அடைந்த விக்கிரம பாண்டியன் என்பவனுக்கு அளித்தான்[2].

பின்பு இரண்டாம் முறையாக கி.பி.1188ல் பாண்டிநாட்டுப் போர் நிகழ்ந்தது[3]. இப்போர் மதுரைக்கு கிழக்கேயுள்ள நெட்டூரில்[4] நடந்தது. இதில் பாண்டிய மன்னன் வீரபாண்டியன்

தோலவியுற்றான். அவனது உரிமையான மணிமுடியை குலோத்துங்கன கைப்பற்றினான். பின்பு சேரமன்னன் உதவியுடன் அடைக்கலம் புகுந்த அவனுக்கு அவன் நாட்டின் ஒரு பகுதியை மீண்டும அளித்தான். முதல போரில் குலோத்துங்கனிடம இருந்து பாண்டிய நாட்டைப் பரிசாகப் பெறற விக்கிரம பாண்டியனின் மகன் சடையவர்மன் குலசேகரபாண்டியன் தன்தந்தைக்காற்றிய நன்றியை மறந்து குலோத்துங்கனுடன் போர்புரியத் தலைப் பட்டான். இதனை உணர்ந்த குலோத்துங்கன கருவூரில விஜயா பிஷேகம் செய்து கொண்டு பாண்டிய நாட்டைத் தாக்கினான். இப்போர் கி.பி. 1202க்கு முன்பு திருப்பத்தூர் தாலுகா மட்டியூர் கழிகோட்டை என்னும இடங்களில் நிகழ்ந்தது. குலசேகர பாண்டியன் புறமுதுகிட்டு தப்பியோடினான் குலோத்துங்கனின் சினத்தீயின் முன்பு பாணடி நாட்டு அரண்மனையும், மாட மாளிகைகளும் தரைமட்டமாயின. அவ்விடத்தில் கழுதை கொண்டு உழுது வரகும் விதைத்து தன் வெறறியின் சிகரத்திற்கே சென்றனன். பின்பு சேரநாட்டையும் வென்று முப்பெரும் தமிழ் நாடுகளுக்கும் (சேர, சோழ, பாண்டிய) தானே தலைவனென அறிவித்தனன்.

மதுரை நகரின் சிம்மாசனத்தில் அமர்ந்து வீராபிஷேகம், விஜயாபிஷேகம் இரண்டும் செய்து கொண்டான். மேலும் ''திரிபுவன வீரதேவன்'' என்ற பட்டமும் புனைந்துகொண்டான், பினபு பாண்டி நாட்டு பண்டாரத்தில் குவிந்திருந்த பொன், மணி, முத்துக்கள் மேலும் இறையிலியாகவும் திரைப்பொருள்களாகவும் கிடைத்த அத்தனை செல்வங்களையும கைக்கொண்டான். இத்தனையும் செய்த திரிபுவன வீரதேவனாகிய இப்பெருமகன் ஆலவாய்ப்பெருமான் முன்பு தான் ஒரு அற்ப புழு என்ற உணர் வோடு நடந்துகொண்டான். திரிபுரம் எரித்த அப்பெருமானை மதுரை நகரின் திருவீதியில பவனி வரச்செய்து தானே திருவீதியில் நின்று சேவித்தானாம். இதனை அவனது வரலாறு கூறும் கல் வெட்டுக்கள் அழகான பாடல் ஒன்றின் வாயிலாகத் தெளிவு படுத்துகின்றன[5].

சிவனோடு தன்னை ஐக்கியப் படுத்திக்கொண்ட இப்பெரு மகன் தான் பாண்டி நாட்டில் இருந்தும் சேரநாட்டில் இருந்தும் கொண்டுவந்த பசும் பொன்னையும் மற்ற வருவாய்களையும் தான் தன் அரசுக்காக எடுத்துக்கொள்ளாமல் விரிசடைப் பெருமானாகிய சிவபெருமானுக்கு அளித்தமையை.....

''சிறை கொண்ட புனல் வையைச் சேர பாண்டியன் மண்டலத்து
இறை கொண்ட பசும் பொன்னும் இறையிலியும் எயிற்புலியூர்
ஆடும் அம்பலவாணர் கூடி வாய்ந்த திருநடம் கண்டருளும்
பாடகக்காற் பைங்கிளிக்கும் பைம்பொன் மதிள் திருவாரூர்
வானவற்கும் திரிபுவன வீரிச்சுர அருந்தவற்கும்
தேன் விரிசடைத் திருஆலவாய்ச் செழுஞ்சுடர்க்கும் கொடுத்தருளி''

என இவனதுமெய்கீர்த்திகள் கூறுகினறன[6].

பாண்டி நாட்டில் இருந்தும் சேரநாட்டில் இருந்தும் கொண்டு வந்த பசும் பொன்னும் இறையிலியும் திருவாரூர் வானவர்க்குக் கொடுத்ததாக அவனது கல்வெட்டுக்கள் கூறுவதை சற்று விரிவாக ஆராய முற்படுதற்கு அவன் கட்டுவித்த திரிபுவன வீரேச்சரம் என்னும் திருபுவனம் (திருவிடைமருதூர் அருகில்) திருக் கோயிலுக்குச் செல்வோம்.

திருபுவனம் திருக்கோயிலின் இராசகோபுரத்தின் கட்டுமானம் அப்படியே திருவாரூர்க் கோயிலின் கட்டுமானம் போன்றே காணப் படுகிறது. இதின் நுழைவு வாயிலின் இருபுறமும் (உட்புறம்) மற்றும் விமானத்தின் தென்புற அதிஷ்டானத்திலும் ஓர் நீண்ட வடமொழிக் கல்வெட்டொன்றுள்ளது[7]. அதில்

''வல்மீகேஸ்வர வேஸ்வதி நிகிலம்
நிர்மாய ஹைமேத நிருபோ
வல்மீகாதிபதேஸ்வகார ச சபா
திவ்யாம் மஹத் கோபுரம்''

—என்றுள்ளது.

இதன் மொழிப் பெயர்ப்பு :

''திரு வாரூரில் வன்மீக நாதருடைய கோயிலை இந்நில வுலகில் பொன்மயமாக விளங்கச் செய்தான். இன்னும் வன்மீகாதி பதியின் சபையையும் பெரிய கோபுரத்தையும் கட்டினான்.''

எனவே திரிபுவன வீரதேவனாகிய மூன்றாம் குலோத்துங்கன் பூங்கோயில் எனப்படும் புற்றிடங்கொண்டாரின் வன்மீகிஸ் வரத்தை பொற்றகடுகளால் போர்த்தி பொன்மயமாக விளங்கச் செய்ததோடன்றி வன்மீகாதிபதியின் சபையையும் கட்டுவித்தான். குலோத்துங்கனால் கட்டப்பட்ட வன்மீகாதிபதியின் சபை தேவாசிரிய மண்டபமாகும். தொன்மையான இத்தேவாசிரியம்

குலோத்துங்கனால் புதுப்பிக்கப் பெற்றது என்பதை நனகு அறிய முடிகிறது.' 'பெரிய கோபுரத்தைக் கட்டினான்' என்ற வடமொழி கல்வெட்டுகளும் மற்ற இவனது தமிழ்கல்வெடுகளாலும் சேர பாண்டிய நாட்டுப் பகும் பொன்னால் கட்டப்பட்டது என்பது தெள்ளிதின புலனாகிறது. மேலும் கடடிட நிர்மாணக்கலை, சிற்பங்கங்களின் கலைப்பணி இவை அனைத்தும பன்னிரண்டு பதின்மூன்றாம் நூற்றாண்டு சோழா காலக கலை அம்சம மட்டு மன்றி மூனறாம் குலோத்துங்கன் பின்பற்றிய தனிப்பாணியிலேயே இந்த இராசகோபுரம் அமைந்துள்ளது.

திரிபுவள வீரதேவனுகிய மூன்றாம் குலோத்துங்கனின் வீரத்தின் சின்னமாகிய இந்த இராச கோபுரத்தில அப்பெருமகனே யும அவனது ராஜ குருவான ஈஸ்வர சிவர் என்னும் சோமேஸ் வரரையும் படிமங்களாகக் காணும் பேறு அவன் கட்டுவித்த இந்த திருவாரூர் இராசகோபுரத்திலனறி வேறு எங்கும் காணமுடியாது.

சோழப் பெருமன்னர்களிலேயே மூன்றாம் குலோததுங்கன் மட்டும்தான் தான எடுத்த அல்லது திருப்பணி செய்த பல திருக் கோயில்களில் தன்னுடைய படிமத்தை எடுத்துள்ளான். இதுற்குச் சான்றாக திரிபுவனம் கோயில் விமானம, திருவாலங்காடு, கொருக்கை, திருமண்டங்குடி, திருவலஞ்சுழி, குடவாயில், குடந்தை போன்ற ஊர்களில் உள்ள திருக்கோயில்களில் இவனது திருவுருவச்சிலை இடம்பெறறுள்ளது. இவை அனைத்திலும இப் பெருமகன் தலையில் முடிந்த கொண்டையும், மீசை, தாடியும கொண்டு கூப்பிய கரங்களுடன் காணப்படுகிறான். திருவாலங் காட்டில் (தஞ்சை மாவட்டம்) மட்டும் திருக்கயிலையுறையும் அச் சிவபெருமானின் திருவடிகளைத் தன் தலையில் சுமந்த வண்ணம் காணப்படுகிறான. இவ்வாறு இப்பெருமகன் தான் விரும்பிப் போற்றிய அத்தனை கோயில்களிலும் தனது படிமத்தை எடுத்தவன் தன்னுடைய வெற்றிச்சின்னமான திருவாரூர் இராச கோபுரத்தில் தன்னுடைய படிமத்ந்தை எடுக்காமலா இருந் திருப்பான்?

இந்த கோபுரத்தின் உட்புறம் உபபீடத்திற்கு மேலே அதிஷ்டான வர்க்கத்தில பல கோஷடங்கள் இருபபதும் அதில் வலப்புறம் ஒன்றும் இடப்புறம் ஒனறும் இரண்டு படிமங்கள் சிதைந்த கல்வெட்டுக்களுடன் கூடிய பீடத்தில் இருப்பதும் முன்பு கண்டோம். அதில் வாயிலின் இடப்புற கோஷ்டத்தில் உள்ள

படிமம் முடிந்த கொண்டையும், தாடியும் மீசையும் பெற்று வன்மீகநாதனை எப்போதும் வணங்கும் கோலத்தில் உள்ள படிமம் மூன்றாம குலோத்துங்கனுடையதே என அறுதியிட்டுக் கூறலாம். துரதிருஷ்ட வசமாக கல்வெட்டுக்கள் சிதைந்ததால் மேலும் செய்திகள் அறிய முடியவில்லையாயினும தெளிவாக உள்ள ஓரிரு எழுத்துக்கள் 12–13-ஆம் நூற்றாண்டு தமிழ் எழுத்துக்கள் என்பதை எழுத்தமைதியால் (Palao graphiecally) உணர்த்து கின்றன.

இதே போன்று வலதுபுற கோஷ்டம் ஒன்றில் ஜடாமுடியும் தாடி மீசையும் கொண்டு இடுப்பிலே அழகிய வஸ்திரக் கட்டும், மார்பிலே முப்புரி நூலும், கழுத்திலே ருத்திராட்ச மாலையும கொண்ட பெரியவர் ஒருவரின் படிமம் உள்ளது. தலையில் பரிவட்டம் அழகிய பூ வேலைப் பாடுடன் காணப்படுகிறது. எழில்மிகு இப்படிமத்தின் கைகளிரண்டும், முற்றிலுமாக உடைக்கப்பட்டு உள்ளன. இப்படிமம் ஒரு சிவாகம வல்லார் ஒருவருடையதுதான் என்பதை தெள்ளிதின புலப்படுத்தும். இப்படிமத்தின் பீடத்திலும் இருந்த கல் எழுத்துக்கள சிதைந்துள்ளதை முன்பே கண்டோம்.

இத்திருவுருவச் சிலை மூன்றாம் குலோத்துங்கனுடைய ஞான குருவான ஈஸ்வர சிவனார் என்னும் சோமேஸ்வரர் என்பவருடைய தாகத்தான் இருக்க வேண்டும் என யூகிக்க பல சான்றுகள் உள்ளன. மன்னனது படிமம் இடம்பெற்றுள்ள கோஷ்ட வரிசையில் அதிலும் அவன் எடுத்த கோபுரத்தில் இடம் பெறத்தக்க தகுதி யுடையவர் அவனுடைய குருவாகத்தான் இருக்க முடியும். இதனை திரிபுவனம் திருக்கோயிலில் உள்ள வடமொழிக் கல்வெட்டுப்பகுதி யால் உறுதிப்படுத்தலாம். ஏனெனில் அக்கோபுரத்தை எடுத்த அப்பெருமகனின் புகழ் பாடும் அக்கல்வெட்டில் கைலாயப் பெருமானின புகழும் தனது புகழும் அக்கோயிலுக்கு கடவுண் மங்கலம் செய்த அவனது இராச குருவான ஈஸ்வர சிவனாருடைய புகழும்தான் கூறப்பட்டுள்ளன. ஈஸ்வர சிவர் திரிபுவனம் கோயிலுக்கு கடவுண் மங்கலம் செய்த செய்தியை,

ஸ்ரீ கண்ட சம்பு தநயேத பதிர்ந் ருபாணும்
பாண்டாரீ ரீசஸ்சிவே நமஹ.....
சோமேஸ்வரேண புருண புவநஸ்ய மித்ரோ
ஸ்ரேஷ்டாம காரயத ஸௌ
சிவயோ: பிரதிஷ்டாம்

வித்யா யேந மநீஷிணு நிகடிதா
விஸ்ப்ருஷ்டமஷ்டாதச
ஸதாணுேர்யேந விவிக்தமோப நிஷதம்
விஸ்வாஸகத்வம் பகோ :
வேதாகாரச சைவதர்சந த்ருசா
சித்தாந்ததே ரத் நாக ரோ
ராஜேந்திரரயஸ்ய குருஸ்ஸ ஈஸ்வர சிவ:
கஸ்தஸ்ய ம்ருக்யோ குண:

என்று கூறுகின்றது.[8]

தமிழாக்கம் :

ஸ்ரீகண்ட சம்பு என்பவருடைய குமாரரும் – தன்னுடைய குருவுமான ஈஸ்வர சிவர் என்னும் சோமேஸ்வரரை கொண்டு இவ வுலகத்துக்கே அம்மை அப்பராக விளங்கும் பரமசிவன் பார்வதி ஆகிய இருவரையும் மிகச் சிறந்த முறையில் ''பாண்டியாரி'' என்ற இவ்வரசன் பிரதிஷ்டை செய்வித்தான்.

இராஜ குருவான அந்த ஈஸ்வரசிவர் வித்துவான்களுள் சிறந்தவர்.பதினெட்டு சிவபுராணங்களையும் தெளிய அறிந்தவர். பெருமானின் உயர்வைச் சொல்லும் உபநிடதங்களை விரிவாக சொலபவர் சைவ தர்சனத்தைக் கண்டவர் ''சித்தாந்த ரத்னா ஹரம்'' என்னும் நூலை இயற்றியவர். யாரே அவரது குணத்தை தேடி அடைய முடியும்.

இவ்வாறு தான் எடுத்த கோவிலில் குலோத்துங்கனால் பெருமையாக சொல்லப்படும் மதிப்பிறகுரிய ஈஸ்வர சிவ பண்டிதரன்றி வேறு யார் அவனது திருவாரூர் இராச கோபுரத்திறகு கடவுண் மங்கலம் செய்திருக்க முடியும்? அதனால் தான் அச்சைவச் செம்மலை ஆரூரின் அருந் தெய்வத்தை என்றென்றும் வணங்கும் கோலத்தில் தன்னுடனேயே இராச கோபுரத்தில் ஐக்கியப்படுத்திக் கொண்டான் என்பதில் சந்தேகமே இல்லை.

திருவாரூர் இராசகோபுரம் பாண்டி நாட்டிலிருந்து கிடைத்த பெருஞ் செல்வத்தால் கட்டப்பட்ட வீர வரலாறு கூறும் இராச கோபுரம் மட்டுமல்ல. மூன்றாம் குலோத்துங்கன் பாண்டிய நாட்டில் வீராபிஷேகம், விஜயாபிஷேகம் செய்து கொண்டு

அரியாசனத்தில் அமர்ந்து ''திரிபுவன வீர தேவன்'' எனப் பட்டம் சூடிக்கொண்டதோடு பாண்டிநாட்டிற்கு சோழபாண்டிமண்டலம் என்றும், மதுரை நகரின் பெயரை முடிகொண்ட சோழபுரம் என்றும் மாற்றி ஆணையிட்டான். இவ்வாறு அழியாப புகழ் பெற்ற இப்பெருமகன் தான் சூடிக் கொண்ட ''திரிபுவன வீர தேவன்''என்ற பட்டத்தை முதன் முதலாக திருவாரூர் திருகோயிலில்தான் கல்வெட்டில் பொறித்துள்ளான்.[9] இச்சிறப்பு தமிழகத்திலுள்ள திருக்கோயிலகளிலேயே திருவாரூர் திருக்கோயிலுகுத்தான் கிட்டியது.இரண்டாம் பிரகாரத்தில் காணப்படும் குலோத்துங்கனின் இக்கல்வெட்டு கி.பி. 1201 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் வெட்டப்பட்டதாகும். இறைவனே கூறுவது போல் அமைந்துள்ள இச்சிறப்பு மிகு கல்வெட்டில் குலோத்துங்கனை ''நம் தோழன்'' என்று இறைவன் குறிப்பிடுவதாகவும் கூறப்பட்டுள்ளன. இக் கல்வெட்டின் சான்றைக் கொண்டுதான் மூன்றாம் முறையாக நடந்த பாண்டி நாட்டுப் போர் கி. பி. 1201க்கு முன்பு நிகழ்ந்து உள்ளது என வரலாற்று ஆசிரியர்களால் வரையறுக்க முடிந்தது. இக்கோபுரம் கட்டப்பட்ட ஆண்டும் கி. பி. 1201-ஐ ஒட்டியே இருத்தல் வேண்டும்.

நம் தோழன் என்று இறைவன் கூறும் பேறு நாயன்மார்களில் சுந்தரமூர்த்தி நாயனாருக்கும் மன்னர்களில் மூன்றாம் குலோத்துங்கனுக்கும்தான் கிட்டியுள்ளது. ''திருக்கயிலை சிவனருளால் தேசமெல்லாம் புகழ்ந்து பாட'' அரசோச்சியவனாயிற்றே இப்பெருமகன். அவனது திருவடிகளைச் சுமந்து கொண்டு நிற்கும் (திருவாலங்காட்டுப் படிமம்) குலோத்துங்கனை திருவாரூர் இறைவன் ''நம் தோழன்'' என அழைப்பது முற்றிலும் பொருத்தமான ஒன்றுதானே!

பெருவீரத்தின் முத்திரையாக வரலாறு படைத்திட்ட இந்த இராசகோபுரத்தையும், மாமன்னன் மூன்றாம் குலோத்துங்கனையும் அவனது இராசகுருவான ஈஸ்வர சிவனாரையும், எண்ணிறைந்த கலைப்படைப்புகளையும் கண்டு களித்த பின்பு மற்ற கோபுரங்களின் வரலாற்றையும் கலைச் சிறப்புகளையும் காண்போம்.

மற்ற திருக்கோபுரங்கள்

மேலைக் கோபுரம்

கீழை இராஜகோபுரத்தைப் போன்றே பெரிய கோபுரமாகவும் மேலைத் திருவாயிலாகவும் திகழ்வது மேற்கு கோபுரமாகும். இது காலத்தாலும் கலை அமசத்தாலும் கி. பி. 15--16ம நூற்றாண்டுக கலைப் பாணியைத் தழுவிக் காணப்படுகின்றது.

முதல் நிலை தளம் வரை கருங்கறகட்டுமானமாயும், அதற்கு மேல் 7 துவாரங்கள் உள்ள கோபுரமும் (செங்கற் கட்டுமானம்) உள்ளது. தளத்தின்மேல் அமைந்துள்ள முதல் இரண்டு துவார வாயில்களையும் இரண்டு கருங்கற் தூணகள் அணி செய்கின்றன. பீடம், உபபீடம், அதிஷ்டானப் பகுதிகளில் குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சங்களாக சிற்பங்கள் ஏதும் இடம் பெறவில்லை. கோஷ்டங்கள் இருப்பினும் கோஷ்ட தேவதைகள் ஏதும் இடம் பெறவில்லை.

மகா வாயிலின் நிலைக்காலில் பெரிய மரகததவங்கள் இரண்டு இடம் பெற்றுள்ளது. நிலைக்கு வெளியும் உள்ளும் இரணடு இரணடு கால்களில்தொடர் சிற்பமாகப்பல சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன. கோபுரத்தின் முதல் அடுக்கை கால்களும், கோஷ்டங்களும் அலங கரிக்கின்றன. அதற்கு மேல் உள்ள எலலா அடுக்குகளும் கர்ண கூடுகளாலும், பஞ்சரங்களாலும், சாலைகளாலும் அமைக்கப் பட்டுள்ளன. இதில் காணப்படும் சுதை சிற்பங்கள் மிகவும் பிற்காலத்தியதாயினும், பல சிவ கதைகளும, மாலவன், நான்முகன் மற்ற தேவர்களின் திருவுருவங்களும் இதில் இடம் பெற்றுள்ளன.

வடக்குக் கோபுரம்


மூன்றும் பிரகார்த்தின் வட பகுதியின் திருவாயிலாக இக் கோபுரம் அமைந்துள்ளது. இது கிழக்கு மற்றும் மேற்கு கோபுரங்களைவிட உயரத்தில் சற்று சிறிய ஒன்றுகும். இக்கோபுரங் களைப் போன்றே தளத்திற்கு மேல் 7 துவாரங்களைக் கொணட கோபுரமாகத் திகழ்கிறது. முதல் தளம வரை கற்பணியாயும அதற்கு மேல் சுதை கட்டுமானமாகவும் அமைந்துள்ளது. முதல்

அடுக்கு மட்டும் கோஷ்டங்களும், காலகளும், பஞ்சரங்களும் கொண்டுமை, அதற்கு மேல் உள்ள நான்கு அடுக்குகள் சாலைகளும், கர்ண கூடுகளும் பெற்றுள்ளன கடைசி அடுக்கு மட்டும் கோஷ்டங்களும், கும்ப பஞ்சரங்களும் அடங்கிக் காணப்படுகிறது. சிகரத்தை 11 கலசங்கள் அழகுபடுத்துகினறன.

பீடம, உபபீடம், அதிஷ்டான வர்கங்கள் எலலா உறுப்புகளும் பெற்றுத் திகழ்கின்றன கோஷ்டங்கள் இருப்பினும் கோஷ்ட தேவதைகள் இடம் பெறவில்லை. மகா வாயிலில் பெரிய மரக் கதவம் தாங்கிய நிலை ஒன்று உள்ளது. அதற்கு உள்ளும் வெளியும் இரணடிரண்டு கால்கள் அணி செயகின்றன. கோபுர வாயிலை ஒட்டி ஓர் பெரிய மாடமும், சிறிய மாடம் ஒன்றும் உள்ளன. அதில் இரண்டு திருவுருவங்கள இடம் பெற்றுள்ளன.

கி. பி. 15—16ஆம் நூற்றுண்டு கலைப் பாணியைத் தழுவிய இக்கோபுரத்தில் இடம் பெறறுள்ள இரண்டு திருவுருவங்களைப் பற்றி ஆராய்வது வரலாற்று ஆய்வுக்கு இன்றியமையாத ஒன்று. பெரிய பிறை மாடத்தில் ஓர் மன்னவன் இடுப்பில வேஷ்டி, கச்சையில் குத்துவாள், மார்பில் அணிகலன்கள், ஓர்புறம கொண்டை, காதுகளில் குண்டலங்கள், நெற்றியில் நாமம பூண்டு அஞ்சலி ஹஸ்தராய் நிற்கும் கோலத்தில் காட்சி நல்குகிறான். தனது வலக்கரத்தை ஓடடி நீண்ட வாள் ஒன்றும் கைகளில் அணைத்த வணணம் உள்ளது. இச்சிற்பம ஓர் நாயக்க மன்னனின் சிற்பம் என எந்த ஒரு வரலாற்றுச் சிற்ப வல்லுநராலும் எளிதில் கூறிட இயலும். இப்படிமத்தினைச் சில நூலாசிரியர்கள் தங்கள் நூல்களில் கருணாகரத் தொணடைமானின் உருவச்சிலை எனக் கூறியுள்ளனர். இது முற்றிலும் தவருன கருத்தாகும்.


அடுத்துள்ள பிறை மாடத்தில் ஓர் சிவனடியாரின் உருவச் சிலை உள்ளது. இவ்வடியவர் இடுப்பில் துண்டுபோன்ற அரையாடை உடுத்தியும் தலையிலும் மார்பிலும் உருத்திராக்க மாலை அணிந்தும் காணப்பெறுகிறார், கரங்கள் இரண்டும் இறைவனை வணங்கும் கோலத்தில் உள்ளன. சிற்ப அமைதி, கல்வெட்டுக்கள் கூறும் செய்திகள் ஆகிய அனைத்தையும் தொகுத்து நோக்கும்போது இவ்விரண்டு உருவச் சிலைகளும் முறையே தஞ்சை நாயக்க மன்னன் செவ்வப்பன் மற்றும் அதே காலத்தில் வாழ்ந்து சைவப்பணிகள் பல புரிந்த கமலை ஞானப் பிரகாசர் ஆகிய சான்றோர்களது திருவுருவங்களே என்பதை அறிய இயலுகிறது.



மேலைக் கோபுரம்



மேற்கு இரண்டாம் கோபுரம்



திருக்குளத்தில் நாகராஜர் திருக்கோயில்

கி. பி. 1532 லிருந்து 1563 வரை 31 ஆண்டுகள் சோழ நாட்டில் செங்கோலோச்சிய செவ்வப்ப நாயக்கர் தமிழகத்திலேயே மிக உயரமான கோபுரமான திருவண்ணாமலை இராசகோபுரத்தை எடுப்பித்து அழியாப் புகழ் அடைந்தவர். இவர் கட்டுவித்த கோபுரங்களும், திருமதில் பிரகாரங்களும் கோயிற் திருப்பணிகளும் மிகப் பலவாகும். இவற்றுள் குறிப்பிடத் தக்கவைகளாகக் காஞ்சி ஏகாம்பரநாதர்கோயில், தீர்க்கசைலம், விருத்தாசலம், திருவாரூர் போன்ற கோயில்களுக்கு கோபுரங்கள் கட்டித் திருப்பணிகள் செய்ததோடு ஸ்ரீசைலம் திருப்பதி போன்ற திருக்கோயில் விமானங்களுக்கு பொன் வேய்ந்தும் சமயப்பணிகள் செய்தனன்.

திருக்கோயில் திருப்பணிகள் செய்வதில் பேரார்வம் காட்டிய இம் மன்னவன் சுவாமிமலை திருக்கோயிலைத் திருப்பணி செய்யும் போது தனது உருவச்சிலையை சுவாமிநாதசுவாமி சன்னதியின் மகா மண்டபத் தூணில் இடம்பெறுமாறு செய்தான். அதே போன்று திருவாரூர் வடக்குக் கோபுரத்தை புதிய கட்டுமானமாக எடுத்தபோது இங்கும் தன் உருவச்சிலையை இடம்பெறுமாறு செய்தான். இம் மன்னவனின் அரசு ஆணையைக் குறிக்கும் கல்வெட்டொன்று திருவாரூர் கிழக்கு கோபுர வாயிலில் இன்றும் உள்ளது.

கமலை ஞானப்பிரகாசர் சைவ ஆசார்யர் பரம்பரையில் தோன்றியவர். திருவாரூர் செட்டித்தெருவில் வசித்த ஞானப் பிரகாசரிடத்தில் சிவஞான உபதேசம் அருளப்பெற்றார். இவரது இயற்பெயர் சிதம்பரநாத மாசிலாமணி ஞானப்பிரகாச பண்டாரம் என்பதாகும். பின்னாளில் கமலை ஞானப்பிரகாசர் என அழைக்கப்படலானார். திருவாரூர் சித்தீச்சரத்தில் உள்ள ஆலமர்ச்செல்வரையே (தெட்சிணாமூர்த்தி) வழிபாட்டுத் தெய்வமாகப் போற்றியவர். இவரது மாணாக்கர்களுள் குறிப்பிடத்தக்கவர் தருமபுர ஆதீனத்து ஆதி குருமூர்த்திகளாகிய குருஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகளாவார். ''தியாகப் பள்ளு'' என்னும் நூலை யாத்த பெருமகனாரும் இவரே.

செவ்வப்பநாயக்கன் தஞ்சையை ஆட்சிபுரிந்த காலத்தில் கமலை ஞானப்பிரகாசரின் அருளாட்சியின்கீழ் திருவாரூர், சிக்கல், வடகுடி போன்ற ஊர்களின் திருக்கோயில்கள் இருந்ததாக

கல்வெட்டு சாசனம் (104 of 1911) ஒன்று கூறுகிறது. எனவே தான் எடுத்த இந்த வடக்குத் திருக்கோபுரத்தில் தனது உருவச் சிலையோடு, ஆரூர் திருக்கோயிலோடு நெருங்கிய தொடர்புடைய சைவச் செம்மலாகத் திகழ்ந்த கமலை ஞானப்பிரகாசருடைய திருவுருவச் சிலையையும் எடுத்து இத் திருக்கோபுரம் உள்ளளவும் நிலைபெறுமாறுச் செய்த செல்வப்பனின் பணி போற்றுதற்குரிய தாகும்.

இக்கோபுர நுழைவாயிலின் கூரையில் (விதானத்தில்) நவக் கிரக சிற்பங்கள் அடங்கிய ராசி சக்கரம் ஒன்றும் உள்ளது. அருகே ராமநாத முதலியார் எனத் தொடங்கும் ஓர் கல்வெட்டு வரி ஒன்றும் உள்ளது.

கீழைச் சிறிய கோபுரம்

இது மூன்றாம் பிரகாரத்தின் கிழக்கு மதிலில் வட கீழ்த்திசை யில் உள்ளது. தேவாசிரிய மண்டபத்தின் கிழக்கு வாயிலை ஒட்டி யுள்ள இந்த கோபுரத்தின் வழியாகத் திருக்கோயிலின் வெளியே உள்ளே மனுநீதியின் கதை கூறும் கல் தேர் — பசு சிற்பங்களை அடையலாம். இக்கோபுரத்தில் சிற்பக் கலை அடிப்படையில் குறிப்பிடத்தக்க அம்சங்கள் காணப்பட வில்லையாயினும் கோபுர வாயிலை ஒட்டிய உள் பகுதியில் பிற்காலத்தில் இடம்பெயர்ந்த சண்டீசர் சிற்பம் ஒன்று வைக்கப் பட்டடுள்ளது. இது முற்கால சோழர்களின் எழிற் படைப்பாகும்.

தெற்குக் கோபுரம்

மூன்றாம் பிரகாரத்தின் வடமேற்கு மூலையில் அமைந்த இக் கோபுரம் கலை அம்சத்தாலோ அல்லது வரலாற்றுச் சிறப்பாலோ குறிப்பிடப்படும் எந்த அம்சங்களையும் பெறவில்லை. கட்டுமான அமைப்பை நோக்கும் போது மிகவும காலத்தால் பிற்பட்ட தோற்றமுடைய ஒன்றாகவே திகழ்கிறது.

இரண்டாம் பிரகார மேலைக் கோபுரம்

இரண்டாம் பிரகார திருமதிலை இரண்டே வாயில்கள்தான் அழகு செய்கினறன அவற்றில் மேற்கு வாயிலான இக்கோபுரத் திற்கு வரலாற்றுச் சிறப்பு உண்டு. கலை அம்சங்கள் சிறப்பாக

குறிப்பிடப்படும்படி இல்லாவிட்டாலும் முதல் தளம் வரை சற் கட்டுமானமாய் உள்ளது. அதன்மேல் செங்கற் கட்டுமானமாய் சிறிய கோபுரம் உள்ளது.

இக்கோபுர வாயிலின் வலதுபுறம் தமிழ்கிரந்தம் கலந்த கல்வெட்டொன்றும்[10] அதன் எதிர்புறம் இதே கல்வெட்டின் கன்னட மொழி பெயர்ப்பும் உள்ளன. இக்கல்வெட்டில் கி. பி. 1440-ஆம் ஆண்டு (சகாப்தம் 1362-ல்) செப்டம்பர் திங்கள் திங்கட்கிழமையில், அசனாலயன சூத்திரம், வஷிஷ்ட கோத்திரம் கித்தராசர் என்பவரின் மகனான நாகராசர் என்பவர்; தெட்சிண சமுத்திராதிபதி லக்கண்ண தண்ணநாயகர் என்ற விஜய நகர மன்னரின் பெயரால் இறைவன் வன்மீகநாதரின் திருத்தொண்டாக இந்த கோபுரத்தைக் கட்டியதாகக் கூறுகிறது. எனவே இக்கோபுரம் கி.பி. 1440-ல் கட்டப்பட்டது என்பதை வரலாற்றுச் சான்றோடு அறிய இயலுகிறது.

இரண்டாம் பிரகாரம் கீழைக்கோபுரம்

கீழ்த்திசையில் அமைந்துள்ள இந்த கோபுரத்திற்கு ''ஆரியன் கோபுரம்'' எனப்பெயர். இக்கோபுரம் பற்றிய வரலாற்றுத் தகவல்கள் கிடைத்தில. குறிப்பிடத் தகுந்த சிற்பங்களும் இதில் இடம் பெறவில்லை. இக்கோபுரத்தின் வெளிப்புறம் முறையே வினாயகர், முருகன் திருக்கோயில்கள் அமைந்துள்ளன. வெளிப்புற கோஷ்டத்தில் கண்ணப்ப நாயனார் சிலை ஒன்று இடம் பெற்று உள்ளது. கோபுர வாயிலின் இடதுபுறம் விறன் மீண்ட நாயனாரின் திருவுருவம் இடம் பெற்றுள்ளது. இந்நாயனாரை வணங்கியே திருக்கோயிலினுட் புகுதல் கோயில் வழிபாட்டு நெறிகளில் ஒன்றாகும்.

முதல் பிரகார திருக்கோபுரம்

முதல் பிரகாரத்தின் பிரதானவாயிலான இத்திருக்கோபுரம் மிகத்தொன்மையான ஒன்றாகும். இதன் அடித்தளம் பிரகார தரைகள் பிற்காலத்தில் உயர்த்தப்பட்டதால் புதைந்து காணப்படுகிறது. தளத்தின் மேல் உள்ள சிறிய கோபுரம் பிற்காலத் திருப்பணிகளுகு இலகுகாகி வண்ணச் சுதை சிற்பங்கள் பல பெற்றுத் திகழ்கின்றது. இகோபுரத்தின் பெயராக ''அனுக்கன்

திருவாயில்'' என சோழர் கல்வெட்டொன்று கூறுகிறது.[11] கி.பி. 1717ல் நடைபெற்ற முதலாம் சரபோஜியின் திருப்பணிக்கு இக் கோபுரம் இலக்காகியது என்பது கல்வெட்டுக்களால் உணரப்படு கிறது. மேலும் இக்கோபுர வாயிலின் இடதுபுறம் (உட் பகுதி யில்) தஞ்சைமராட்டிய மன்னனான முதலாம் சரபோஜி மன்னரின் திருவுருவம் வண்ண ஓவியமாக இன்றும் மிளிர்கிறது.

குறிப்புகள்

1. Ins. 190 of 1904
2. S. I. I Vol III No 86 and 87
   Vol III 436.
3. S. I. I Vol V No. 492
   Nellore Inscriptions No. 169.
4. நெட்டூர் – இராமநாதபுரம் ஜில்லா சிவகெங்கை தாலுக்காவில் இளையான்குடிக்கருகில் உள்ளது.
5. Inscriptions of Pudukkottai State No. 166.
6. Inscriptions of Pudukkottai State No. 166.
7. No. 190 of 1907. S. I. T. I Vol II No 1007
8. " " " "
9. Ins. No 554 of 1904. S. I. I Vol XVII No. 599.
10. A. R. No 566 of 1904
    S. I. I. Vol XVII No 611.
11. 675 of 1919.

தேவாசிரியம் எனும்
திருமண்டபம்

தேவாசிரியம் எனும் திருமண்டபம்

கிழக்குக் கோபுரத்தைக் கடந்து திருக்கோயிலின் மூன்றாம் பிரகாரத்தில் நுழைந்தால் வடதிசையில் நம்முன் காட்சியளிப்பது மிகப் பெரிய மண்டபம் ஒன்று, அதன் முன்பு 300க்கும் மேற்பட்ட கற்றூண்கள் நடப்பட்டு அழகுக்கு அழகூட்டுகின்றன. வடபுறம் காணப்படும் பெரிய மண்டபமே வரலாற்றுச் சிறப்புகள் பெற்ற 'தேவாசிரியன்' எனும் திருமண்டபமாகும். ஒவ்வோர் ஆண்டும் சித்திரைத் திருவிழாவின்போது அருள்மிகு தியாகராஜசுவாமியின் திருமேனியை இம்மண்டபத்திற்கு எழுந்தருளச் செய்து சித்திரைப் பெருவிழா நடத்தப்பெறுகிறது. இம்மண்டபத்தின் முன் உள்ள தூண்களையும் (300க்கு மேற்பட்ட தூண்கள்) சேர்த்து இப் பகுதியை ஆயிரங்கால் மண்டபம் எனக் குறிப்பிடுகின்றனர்.

தேவாசிரிய மண்டபமே இத்திருக்கோயிலில் உள்ள மண்டபங் களில் மிகப் பெரிது. 210 அடி நீளமும் 140 அடி அகலமும் உடைய இம்மண்டபம் உயர்ந்த மேடையின் மீது அமைக்கப் பட்டுள்ளது. அடித்தளம் பிரதமம், கம்பு, ஊர்த்தபத்மம், கம்பு, எழுதகம், கணதி, கம்பு, கண்டம், அதோபத்மம், கபோதகம், யாளவரி இவைகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

இம்மண்டபத்திற்கு, கீழைத் திருக்கோபுரத்தை ஒட்டி தென் புறம் பிரதான வாயிலும், வடகிழக்கில் இரண்டாம் கீழைத் திருக்கோபுரத்தை ஒட்டி கீழ்த்திசை வாயில் ஒன்றும் எழிலுறு படிகளுடன் அமைந்துள்ளன. கீழ்ப்புற வாயிலில் ஆறு படிகள் உள்ளன. தென்திசை வாயிலில் 3 படிகள் மட்டுமே வெளித் தோன்றுகின்றன; மற்றவை மண் மேடிட்டமையால் புதைந்து உள்ளன. இவ்விரண்டு வாயில்களின் படிகளை மிகச்சிறிய சிற்பத் தொகுப்புகள் அழகு செய்கின்றன. இது குறிப்பிடத்தக்க கலை அம்சம் பொருந்திய ஒன்றாகும்.

கீழ்ப்புற வாயிலின் முதற் படியை இரண்டு கால்களையும் முன்புறம் கொண்டு அமர்ந்த நிலை சிம்மங்கள் தாங்குகின்றன. இரண்டாம் படியைத் துதிக்கை பெற்ற யாளிகளும், மூன்றாம்

படியை ரிஷபங்களும், நான்காம் படியைக் குதிரைகளும், ஐந்தாம் படியை யானைகளும் ஆறாம் படியை யாளிகளும் அணி வகுத்து நின்று அழகு மிளிரச் செய்கின்றன. தென்புறப் பிரதான வாயிற் படிகளில் முறையே ரிஷபம், யானை, துதிக்கை உள்ள யாளி வரிசைகள் அழகு படுத்துகின்றன.

தென்புற வாயிலின் கொடுங்கைகள் மட்டுமே கருங்கற் கொடுங்கைகளாகவும் மற்ற பகுதி முழுவதும் செங்கற்சுண்ணாம்பு கட்டுமானத்தால் ஆன கொடுங்கைகளாகவும் உள்ளன. முன் மண்டபத்தின் கீழ்த்திசையிலும், மேற்றிசையிலும் சிறிய சுவர்த் தடுப்பு உள்ளது. இதன் வெளிப்புறம் இருமருங்கும் முறையே மும்மூன்று கோஷ்டங்கள் உள்ளன. இதனை அடுத்து வெளி விளிம்பில் 15 தூண்கள் உளள (இத்தூண்களின் மேலும் கீழும் சிம்ம சிற்பங்கள் உள்ளன) நீண்ட மணடபப் பகுதியும், அதனை அடுத்து மூன்று புறமும் சுவர்களுடன் கூடிய மேடையமப்புடைய சபையும் காணப்படுகிறது. இதன் வெளிப்புறம் கிழக்கிலும் மேற்கிலும் முறையே ஐந்து கோஷ்டங்களும் இரண்டு பலகணி களும் உள்ளன. வடபுறத்தில் 11 கோஷ்டங்களும், 6 பலகணி களும் உள்ளன. பலகணிகள் மட்டும் செங்கற் பணியாய் உள்ளது.

நடுவே மிக உயர்ந்த மேடையுடன் (சபை) கூடிய இம்மண்ட பத்தின் வடபகுதியை மட்டும், கட்டுமான அமைப்பைக்கொண்டு சில வரலாற்று ஆசிரியர்கள் முற்காலக் கட்டுமானமாயும் நீண்டு உள்ள முன பகுதிகளை (Hall & Front Portion) பிற்காலத்திய தாகவும் குறிப்பர்.

வடபுறத்தில் உள்ள சபைப் பகுதியின் (Stage) உயர்ந்த மேடையை 7 × 6 = 42 எழிலுறு தூண்கள் அலங்கரிக்கின்றன. இந்த 42 தூண்கள் மட்டும் கலை அமைப்பால் தனிப்பாணியாக உள்ளது குறிப்பிடத்தக்க ஒன்று. இம் மேடையின் மீது உள்ள 42 தூண்களைத் தவிர கீழ்ப்புறமும், மேல்புறமும் கலை அமைப்பால் மாறுபட்ட தூண்கள் அணி செய்கின்றன. பிரதான முன்புறத்திலுள்ள மிகப்பெரியமண்டபத்தை பலவரிசைத்தூண்கள் தாங்கி நிற்கின்றன.

நடுவே விளங்கும் உயர்ந்த மேடையினை ஐந்து படிகள் அலங் கரிக்கின்றன. இதனை ஒட்டிய இரண்டு தூண்களில் கீழ்ப்புறம் பதஞ்சலியும், மேல்புறம் வியர்க்கிர்பாதர் (புலிக்கால் மற்றும் பரம்புடல் முனிகள்) திருவுருவச் சிலைகள் வணங்கும் திருக்கோலத்

தில உள்ளன. இவையே இம்மண்டபம் ஆடும் அம்பலவாணனின் சபாமண்டபம் எனக் கூறும முத்திரைகளாகும்.

முன் பகுதியை மொத்தம் 324 தூண்கள் தாங்கி நிற்கின்றன. இவை பல வகையான வடிவமைப்புகளில் வடிக்கப்பட்டுள்ளன. முகமண்டப வாயிலுக்கும், நீள் மண்டபத்திற்கும் இடையில் மண்டபத்தின் விதானம் நடுவே உயாததப்பட்டுள்ளது. இப்பகுதியின் உள் விளிம்புகளில் ஆடும ஆரணங்குகளின எழில் ஓவியங்கள் புடைப்புச் சிற்பங்களாக வடிக்கப்பட்டுளளன..

இப்பகுதியைத்தான் ஆடல் அரசிகள் அற்புத நடனங்கள் நிகழ்த்திய இடமாகக் கொள்ளலாம். ஏனெனில இறைவன் எதிரே சபையில் எழுந்தருள, மககள் வெள்ளம் முன் மண்டபத்தில் பார்த்துமகிழ ஆரணங்குகள் இங்குதான் பண்நடம் புரிய இயலும.

ஆருர் இறையாம் வீதிவிடங்கப் பெருமான் அமரும் அற்புதச் சபையினை 42 தூண்கள் அணி செய்வதை முன்பே கண்டோம். இது பிற்காலச் சோழர்களால் தோற்றுவிக்கபபட்ட தனிப்பாணி என்பது தெளிவு; இதனை திரிபுவனம், திருவலஞ்சுழி போன்ற திருக்கோயில்களில் மூன்றாம குலோத்துங்கன் அமைத்திட்ட தனிச் சிறப்புடையதூண்களைமுழுதும் ஒத்துள்ளதாகவேகுறிப்பிடலாம்.

திரிபுவனக் கல்வெட்டில திருவாரூர் கோபுரத்துடன் வன்மீகாதி பதியின் சபையையும் மூன்றாம் குலோத்துங்கன் கட்டுவித்ததாக முன்பே கணடோம் அவன் குறிப்பிடும வன்மீகாதிபதியின் சபை இதுதான் என்று கூறப் பல சான்றுகள் உளளன தேவாசிரியம் என்னும் திருக்காவணம் பற்றி முதற்குலோத்துங்கனின் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டாலும் இமமணடபத்தை திருப்பணி செய்து சபையைப் புதுப்பித்தவன் மூன்றாம் குலோத்துங்கனே எனக் கொள்ளலாம்.

மேலைக் கோபுரத்தை ஒட்டியுள்ள சபாபதி மண்டபமே—மூன்றாம் குலோத்துங்கன் எடுத்த சபையெனச் சில வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.இம்மண்டபத்தின் தூண்களும்—அவற்றில் காணப்படும் சிற்பங்களும் கால அமைதியால் பிற்காலத்தியதாகவே தோன்றுகிறது.

இத்திருக்கோயிலைப் பொறுத்தவரை சபாபதியாக விளங்குபவன் ஆடவல்லான் (நடராசர்) அல்லன்.இளமுருகு உடனுறையும்

அம்மை அப்பரே (சோமாஸ்கந்தரே——தியாகராஜப்பெருமானே) இங்கு திருநடம் புரியும் தேவன்(அஜபா நடனம்).வீதிவிடங்கனாம் இப்பெருமான் விழாக்களின் போது தலைக்கோலியர் (தலைசிறந்த நாட்டிய அணங்குகளின்) பலரின் நடனங்களைக் காண இச்சபை யின் நடுவே அமரும் பண்புடையவன். இதுவே சோழர்கால வரலாறும் கூட, இதனைக் கலவெட்டுக்கள்[1] வலியுறுத்துவதோடு, நடுவமைந்த மேடையின் மேற்கூரையை ஒட்டிய விளிம்பில் அழகு செய்யும் எழில்மிகு சோழாகாலச் சிற்ப வரிசையும் சான்றாகக் காட்சியளிக்கிறது. இதன் நடுப்பகுதியில் வீதிவிடங்கப்பெருமான் (சோமாஸ்கந்தராக) உமையவளுடனும், உளம் கவர்ந்த முருகனு டனும் வீற்றிருக்கிறார். அப்பெருமானின் அருகே வலப்புறத்தில் உமையவளாம் சிவகாமியும் நிறகிறாள்.

அடுத்து வலப்புறம் உள்ள பகுதியில் திருமால் நான்கு கரங்களுடன் ஆழியும், சங்கமும் ஏந்தி, ஸ்ரீதேவி, பூதேவியருடன் அபயம் அளிக்கும் கோலமும், அதனை அடுத்து வினாயகப்பெரு மானின் அமர்ந்த திருக்கோலமும் உள்ளன. இதே போன்று நடுவமர்ந்த வீதிவிடங்கப்பெருமானின் இடப்புறம் மாலவன் குட முழவம் இசைக்கவும், நான்முகன் வணங்கி நிற்கவும் வலது காலை மேலுயர்த்தி ஊர்த்த தாண்டவத்துடன் விரிசடைப் பெருமான் ஆடுகின்றார், அருகே ஆட்டத்தில் தோல்வியுற்ற காளிதேவிதன் இருகரங்களையும் விரித்த நிலையில் நாணி நிற்கும் காட்சிஉள்ளது. இதனை அடுத்து முருகப்பெருமான் நின்ற கோலத்தில் அருள் பாலிக்கிறார்.

இவ்வெழிலுறு சிற்பங்களைக் காணும்போது இத்தலத்தில் சுந்தரர் பாடிய பாடல் ஒன்றின் அடிகள் நம் நினைவிற்கு வருகின்றன!

''குமரன் திருமால் பிரமன்
கூடித் தேவர் வணங்கும்
அமரன் இருப்பதும் ஆரூர்
அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர்.''

இச்சிற்ப தொகுதிக்கு இரண்டுபுறமும் பக்கத்திற்கு இரண்டு நடனப் பெண்கள் எழில் நடம் புரிகின்றனர்.

இக்காட்சி ஒன்றே தில்லையம்பலத்திலே தான் ஆடி அகில உலகங்களையும் ஆட்கொண்ட அந்த ஆடவல்ல மூர்த்தி ஆரூரில் தான் தன் தேவியுடன் அமர்ந்து அழகுப் பாவையரின் நடனம்

கண்டார் என்ற பேருண்மையைப் புலப்படுத்துகிறது. இதனை வலியுறுத்தம் கல்வெட்டுச்சான்றுகள் பின்பு விரித்துரைக்கப் பட்டுள்ளன, எனவே இம்மண்டபம் சைவம் வளர்த்த செம்மல்கள் (சுந்தரர் காலத்தில) முன்னொருக்கால் உறைந்த தேவாசிரியம் மட்டுமல்ல = ஆடுங் கூத்தன் எழில் நடம் கண்டு மகிழ்ந்த திருச் சபையும் இதுவே என்பதும் தெளிவாகிறது.

தேவாசிரியம் என்னும் இம்மண்டபம் சைவசமய நிகழ்ச்சிகள் பலவற்றோடு நெருங்கிய தொடர்புடைய ஒன்றாகும். மேலும் இது தொன்மையானதும் கூட. தேவாசிரியன் என்ற இச்சொல் தமிழ் இலக்கியங்களில் முதன் முதலாக சேக்கிழாரின் பெரிய புராணத்தில்தான் காணப்படுகிறது. சுந்தரர் ஆரூர் திருக்கோயிலி னுள் சென்று, திருவாயிலை நோக்கிக் கீழ்வீழ்ந்து வணங்கி, தேவாசிரியனைத் தொழுது இறைஞ்சி அன்பினாலே உச்சிமேற் கைகள் கூப்பி இறைவன் எழுந்தருளிய திருமூலட்டானத்தைச் சூழ்ந்த திருமாளிகை வாயிலினுட் புகுந்தார் என்பதை,

வானுற நீடிரு வாயின் நோக்கி மண்ணுற ஐந்துருப்பால் வணங்கித்
தேனுற கற்பக வ.சமாலைத் தேவாசிரி யன்தொழு திறைஞ்சி
ஊனும் உயிரும் உருக்குமன்பா லுச்சி குவிந்த செங்கைகளோடும்
தூநறும் கொன்றையன் மூலட்டானஞ் சூழ் திருமாளிகை வாயில்
புக்கார்.

—தடுத்தாள்கொண்ட புராணம் - 124

எனக் கூறுகின்றார்.

பின்பு சுந்தரர் பரவை என்னும்தன் அன்பு நாயகியைத் தேடிக் கொண்டு தேவாசிரிய மண்டபத்தின்அருகே சென்றார். இதனைச் சேக்கிழார்

''மன்றல் வார் குழல் வஞ்சியைத் தேடுவான்
சென்று தேவா சிரியனைச் சேர்ந்தபின்''

—301. த. ஆ. புராணம்.

எனக் குறிக்கின்றார். தேவாசிரியனில் வீற்றிருக்கும் அடியவர் களைக் கண்ணுற்ற சுந்தரர்,

''கண்ணுதல் கோயில் தேவா சிரியனாம் காவனத்து
விண்ணவர் ஒழிய மண்மேல் மிக்கசீ அடியார்கூடி
எண்ணிலார் இருந்தபோதில் ''இவர்க்குயான் அடியேனாகப்
பண்ணுநாள் எந்நாள்'' என்று பரமாதாள் பரவிச்சென்றார்,''

என்றும், இவ்வாறு ஆரூர் அருந்தவச்சோதியை வணங்கிய ஆரூரர் மீண்டும் தேவாசிரிய மண்டபத்திற்கு வந்து அடியவர்களைத் தொழுதபின் ''திருத்தொண்டத்தொகை'' என்றும் அருட் பாடல்களைப் பாடினார் என்பதை

''வீரத்தாரெல்லார்க்குந் தனித்தனிவேறடியேனென்
ஆர்வத்தால் திருத் தொண்டத்தொகை பதிகமருள் செய்வார்''

—347. த. ஆ. புராணம்

எனப்புகழ்கின்றார்,

இரண்டாம் குலோத்துங்கனின் அமைச்சர்களுள் ஒருவராகத் திகழ்ந்த அருண்மொழியார் தன் மன்னனான அனபாயன் சீவக சிந்தாமணி என்ற சமணக்காப்பியத்தைப் பெரிதும் பாராட்டியமை கண்டு; அவனைச் சைவமாகிய உண்மை நெறியில் ஆட்படுத்த எண்ணினார். சிவகதைகளே இம்மைக்கும் மறுமைக்கும் உறுதி தந்து வீடு தருவன என அறிவுறுத்தினார். அது கேட்ட அரசர் அவ்வாறாயின் அச்சிவ கதைகள் யாவை? எனக் கேட்டனன். இதற்குத் திருவாரூர் இறைவன் தாமே முதலடி எடுத்துக்கொடுத்து அறிவுணர்த்தி அருளிய படி நம்பியாரூரர் திருத்தொண்டத் தொகையைப் பாடியதாகவும், பின்பு இதனைவிரித்து திருநாறையூர் பொல்லாப் பிள்ளையாரின் அருளினால் நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதி பாடியதையும் எடுத்துக் கூறினார். இதனால் மகிழ்ந்த அனபாயனின் விருப்பப்படியே திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணத்தைப் பாடி முடித்தார்.

இத்தகைய சிறப்புகள் பல பெற்ற பெரிய புராணம் எனும் சைவ சமயக் காப்பியத்தின் மூலநூலாக அமைந்தது சுந்தரர் பாடிய ''திருத்தொண்டத் தொகையே'' ஆகும். இது அரும்பி மலர்ந்தஇடம் தேவாசிரியமண்டபம் என்றால்அதன் பெருமையை யாரே அளவிட முடியும்?.

தேவாசிரியத்தின் பெருமையை சேக்கிழார் மீண்டும் விரண் மீண்ட நாயனார் புராணத்தில் ''திருவார் பெருமை திகழ்கின்ற தேவாசிரியனிடைப் பொலிந்து மருவாநின்ற சிவனடியார்....'' எனப் போற்றிப் பரவுகிறார் அன்று தேவாசிரியத்தில் சுந்தரர் பாடியதால் சைவக்காப்பியங்கள மலர்ந்தன்;இதன்அடிப்படையில் எழில்மிகு திருக்கோயில்களும் தோன்றின. பெரிய புராணக் கதை யைக் கல்லெல்லாம் கூறுமாறு அமைத்திட்ட தாராசுரம திருக் கோயிலில் ''தேவாசிரிய மண்டபக் காட்சி'' புடைபடச் சிற்பமாக

படைக்கப்பட்டுள்ளமையே இதன் பெருமைக்கு மேலும் ஒரு சான்றாகும்.

சைவ இலக்கியங்கள் கண்ட பின்பு ஆரூர் கோயிலில் உள்ள கல்வெட்டுக்களை ஆராய்ந்தால் முதற் குலோத்துங்கனின் 44ஆம் ஆட்சியாண்டுக் (கி. பி. 1113 - 14) கல்வெட்டில்தான்[2] முதன் முதலாக தேவாசிரிய மண்டபம் குறிப்பிடப்பட்டுள்ளது. திருவாரூர் கூற்றத்து பிரமதேய கிராமமான புதுக்குடி ஊர்ச் சபையினர் தேவாசிரியனாம் காவணத்துக்கூடி ஆதி சண்டேசுவர தேவர் பெயரில் நிலவிலையாவணம் செய்த நிகழ்ச்சியைக் குறிப் பிடுகிறது. மேலும் இக்கல்வெட்டில் 'தியாகவிநோதன்பண்டாரம்' என்ற திருக்கோயில் பண்டாரத்தில் பொன் முதலீடு செய்தமையை யும் குறிப்பிடுகிறது. எனவே கி. பி. 1113ல் தேவாசிரிய மண்டபம் ஒரு பொது மன்றமாகவும், திருக்கோயிலின் கருவூலம் செயல்பட்ட இடமாகவும் இருந்திருக்கிறது.

அடுத்து, முதற் குலோத்துங்கனின் 49ஆம் ஆண்டுக் கல்வெட் டொன்றில்[3] திருவாரூர் உடையார் வீதிவிடங்க தேவர் தேவாசிரி யனில் எழுந்தருளியிருந்து புக்கத்துறை வல்லவத் தலைக்கோலி என்ற ஆடலணங்கின் நடனத்தைக் கண்டு மகிழ்ந்ததாகக் கூறப் பட்டுள்ளது.

இதனால் கி. பி, 1118 - 19 இல் வீதிவிடங்கத் தேவரின் திருமேனி தேவாசிரிய மண்டபத்தில் எழுந்தருளப்படும் என்பதும்; அப்போது நடன நிகழ்ச்சிகள் நடக்கும் என்பதும் தெளிவாகிறது. இதே போன்று மன்னன் பெயர் குறிப்பிடாத கல்வெட்டொன்றில்[4] ''ஸ்வஸ்தி ஸ்ரீ யாண்டு பதிமூன்றாவது நாள் 202 திருவாரூருடை யார் வீதிவிடங்கதேவர் தேவாசிரியன் திருக்காவணத்தே எழுந்தருளி யிருந்து பூங்கோயில் நாயகத் தலைக் கோலியை ஆட்டங்கண்டருளா நிற்க நம மக்கள் வீரசோழ அணுக்கரை வீரணுக்க விஜயம் பாடின பூங்கோயில் நம்பிககு பிரமதேயம் வாயற்றூரில் இறையிலி நிலமான கனகராயன் நிலமென்று போர் கூவப்பட்ட நிலத்திலே நிலமளந்தபடி அறையும் தென்குளக் கரையில் கூத்தன் மனைகளில் கிழக் கடைய மனை இவனுக்கும் இவன் வம்சத்தார்க்கும் காணியாக கொடுத்தோமென்று திருவாய் மொழிந்தருளி தியாகவிநோதன் கடிகமாராயன் கேள்வியால் கேட்பித்தபடிக்கு அருளால் இவை முத்திறத்தானெழுத்து'' என்றுள்ளது. இக்கல்வெட்டில் மன்னன் பெயர் குறிப்பிடப்பட வில்லையாயினும் எழுத்தமைதி 12-ஆம் நூற்றாண்டு சோழர் கால

எழுத்தாகவே உள்ளது. எனவே இவை பெரும்பாலும் முதல் அல்லது இரண்டாம் குலோத்துங்கன் காலத்தியதாக இருக்கலாம்.

மேற்குறித்த கல்வெட்டின்படி தேவாசிரிய மண்டபத்தில் வீதிவிடங்கப் பெருமான் எழுந்தருளியதாகவும்: அப்போது அவர் முன்பு பூங்கோயில்நாயகத் தலைக்கோலி என்ற ஆரணங்கு நடனமாடிக் கொண்டிருக்கும்போது பூங்கோயில் நம்பி என்பான் ''வீரணுக்க விஜயம்'' பாடியதற்காக அளிக்கப்பட்ட நிவந்தம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன. இக்கல்வெட்டிலும் தியாக வினோதனான வீதிவிடங்கப் பெருமானின் திருமேனி விழாக் காலங்களில் தேவாசிரிய மண்டபத்திற்கு எழுந்தருளச் செய்யப்படுமென்பதும்; அப்போது தலைசிறந்த நாட்டியமணிகளின் நடனமும், சிறந்த பாடல்களும் பாடப்பட்டன என்பதும் தெள்ளிதின் புலப்படுகின்றன. அடுத்து இரண்டாம் குலோத்துங்கனின் 10-ஆம் ஆண்டுக் கல்வெட்டொன்றில்,[5]

> ''கோவி ராஜகேசரிவர்மனான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழதேவருக்கு யாண்டு பத்தாவது தனுர் நாயற்று பூர்வபட்சத்து ஏகாதசியும் திங்கட் கிழமையும் பெற்ற அசுவதி நாள்

(அதாவது கி. பி. 1142-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் முப்பதாம் நாள்) கேயமாணிக்க வளநாட்டு திருவாரூர் கூற்றத்து பிரமதேயம் ராஜராஜ பிரமமங்கலத்துச் சபைக்குசமைந்த கூட்டப்பெருமக்கள். உள்ளிட்ட இவ்வணைவோம் தேவாசிரியன் திருக்காவணத்தே கூட்டம் ஈறைவறக்கூடியிருந்து குடிநீக்காக் காணியாக நில விலை யாவணம் உடையார் ஸ்ரீமூலஸ்தான முடையார் ஆதி சண்டேஸ்வரருக்கு இறையிலி செய்து கொடுத்த நிலமாவது. . . . .''—என்று தொடர்கின்றன. இச் சாஸனச் சான்றாலும், தேவாசிரியத் திருக்காவணம் ஊர்ச் சபையினர்கூடி முடிவெடுக்கும் பெருமன்றமாகவும் விளங்கியமை புலனாகின்றன.

இதே போன்று விக்கிரம சோழனின் ஐந்தாவது ஆண்டில் (கி. பி. 1123) வீதிவிடங்கப் பெருமானைச் சித்திரைத் திங்கள் சதயத் திருநாளன்று இம்மண்டபத்தில் எழுந்தருளச் செய்து; அவரை தியாகவினோதத் தலைக்கோலி என்ற ஆடலரசியின் நடனத்தைக் காணச் செய்து; பின்னரே ஒரு சாசனம் பதிவு செய்யப்பட்டமையைப் புகழ் பெற்ற மனுசரித்திரம் கூறும் இத் திருக்கோயில் கல்வெட்டும்[6] கூறுகின்றது.

திருக்காவணம் என்ற சொல் பந்தல் என்பதையே குறிப்பதாகும். இச்சொல்லாட்சியால் இம்மண்டபத்தின் முன்பு உள்ள தூண்களில் விழாக் காலங்களில் பந்தலிடப்பட்டு இருக்கலாம் என்று கருத முடிகிறது.

எழில்கொஞ்சும் இம்மண்டபத்தின் உட்புறக் கூரையில் சுமார் 250 ஆண்டுகளுக்கு முந்தைய எழில்மிக்க ஓவியங்கள் பல வண்ணங்களில் காணப்படுகின்றன. இவை தஞ்சையை ஆண்ட மராட்டியர்கள் காலத்தியதாகும். இதில் முசுகுந்த புராணம என்ற புராண நிகழ்ச்சியின காட்சிகள் முழுமையாக வரையப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஓவியத்தின் கிழும் அக்காட்சி விளக்கம் தமிழில் எழுதப்பட்டுள்ளன. இந்த ஓவியங்கள்; முசுகுந்தன் என்ற குரங்கின் முகம் படைத்த அயோத்தியாபுரி மன்னன ஒருவனைப் பற்றிய கற்பனைக காவியமாக இருந்தாலும் அந்தக் காவியத்தால் மலர்ந்த இந்த அரிய படைப்புகள் வரலாற்றுச் சிறப்புடைய தேவாசிரியத்தின் பெருமைக்கு மேலும் அணி சேர்க்கின்றன. ஓவியங்களை தீட்டிய ஓவியனின் திருவுருவமும் இங்கு உள்ளன.

இந்த ஓவியக் காட்சிகள்—இது பற்றிய விளக்கங்கள் இந்நூலில் **''பேசிடும் பொற்சித்திரங்கள்''** என்ற தலைப்பின்கீழ் விரித்துரைக்கப்பட்டுள்ளன.

தேவாசிரிய மண்டபத்தின் வெளிப்புறம் நடப்பட்டுள்ள தூண்கள் (மண்டபம இனறி) சிற்ப வேலைபாடுகளின்றி எண்பட்டை வடிவில் உள்ளன. இத்தூணகளின காலத்தை நிர்ணயிக்க அவைகளின் மேல்உள்ள கல்வெட்டுகள் பிகவும் துணைபுரிகின்றன. பெரும்பான்மையான தூண்களில் கி. பி. 12—ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியையுடைய எழுத்துக்கள் உளளன. இவை அனைத்திலுமே **''தக்கார்க்குத் தக்கான்''** என்ற சொல்லே காணப்படுகிறது. எனவே இவை கி. பி. 12ம் நூற்றாண்டில் சோழர் காலத்தில்தான் நடப்பட்டுள்ளன என்பதும்— இப்பகுதிக்கு பெயா தக்கார்க்குத் தக்கான் என்பதும் தெளிவாகிறது. **''தக்கார்க்குத் தக்கான்''**— தகுதியுடையவர்களுக்குத் தகுதியுடையவன் என்பது ஆரூரின் அருட்சோதியான திருமூலட்டானரின் பெயர் என்பதையும் உணர முடிகின்றது. இத்தூண்கள நிச்சயமாக மண்டபம் கட்டுவதற்காக நடப்பட்டவை அல்ல. இதே போன்று தூண்கள் தில்லைத் திருச்சி கோயில் பிரகாரத்திலும் காணப்படுகினறன இத்தூண்களும் பிற்றப் பந்தல்கள் வேயவே கால்களாக நடப்பட்டிருக்கலாம். பந்தல்

களுக்கு காவணம் என்ற பெயர் உண்டு என்பதை முன்னரே கண்டோம். தேவாசிரியத்தின் முன் பந்தல இருந்திருந்தமையால் தான் இலக்கியங்களிலும் கல்வெட்டுக்களிலும் ''தேவாசிரியன் திருக்காவணம்'' என்ற சொல்லாட்சி காணப்படுகின்றன. திருவாரூரின் தொன்மைச் சிறப்பையும் புராண வரலாறுகளையும் பல்வேறு வடமொழி நூல்களும்—தமிழ நூலகளும்—மிக அழகாக விரித்துரைக்கின்றன, இவ்வகையில்'' நாகர கண்டமென்பது-அலகை சம்பந்த முனிவர் எனும் வணிகர் பெருமானால் இயற்றப் பட்டு ''நாகரகண்ட'' மெனவும—''திருவாரூர்ப்புராண'' மெனவும் வழங்கப்படுகிறது. இந்நூலை அவர் இயற்றி அரங்கேற்றிய காலம் சாலிவாகன சகாப்தம் 1514 (கி. பி. 1592) பங்குனி மாதம் என்று அந்நூலின் பாயிரத்தில்உள்ள—35 ஆம் செய்யுளால் அறிகிறோம்.

''பார் புகழ் சகாப்தம் ஆயிரத்து ஐநூற்றுப்
பதினான்காகிய பிங்கலப் பேராண்டிற்
சீர்பரவும் பங்குனி உத்திரத்து **தேவாசிரியன்** எனுங்
காவணத்தில் தேவர் போற்றும் —
கார்பரவும் கணட ஆரூர்ப்பு ராண காதை
நாகரகண்டங் கூலவல் லோர்முன் —
நேர்பரவும் பேரளகை வணிகர் கோமான் இசை
வளர் சம்பந்தன் அரங்கேற்றினானே''

சுந்தரர் காலத்தில் ''திருத்தொண்டத் தொகை'' மலர்ந்த திலிருந்து அதன் தொடர்ச்சியாக பிற்காலத்தில் பல நூல்கள் தேவாசிரிய மண்டபத்தில் அரங்கேற இம்மீது அரங்கேற்று அவையாக இருந்தது என்பதை மேற்கண்ட செய்யுள் தெளிவாக்குகிறது.

குறிப்புகள்

1. A. R. No. 548 of 1904 S. I. I. Vol. XVII No. 593
   A. R. No. 561 of 1904 S. I. I. Vol. XVII No. 606
2. A. R. No. 541 of 1904 S. I. I. Vol. XVII 586
3. A. R. No. 561 of 1904 S. I. I. Vol. XVII 606
4. A. R. No. 548 of 1904 S. I. I. Vol. XVII 593
5. A. R. No. 553 of 1904 S. I. I. Vol. XVII 598
6. A. R. No. 164 of 1894 S. I. I. Vol. V. No. 456

அரசநீதி

அரநெறி

(அசலேசம்)

இரண்டாம் பிரகாரத்தின் தென்கிழக்கு மூலையில் அமைந்துள்ள திருக்கோயிலே அரநெறி எனப்படும். பிரகாரத்தில் உள்ள நான்கு முக்கியத் திருக்கோயில்களான அசலேசம், ஆடகேசம், அனந்தீஸ்வரம், சித்தீஸ்வரம் என்பனவற்றுள் அசலேசமே அரநெறி எனஅழைக்கப்படுகின்றது. திருவாரூர் திருக்கோயிலினுள் அமைந்துள்ள புற்றிடங்கொண்டானது பூங்கோயில் மட்டுமின்றி அரநெறியும் தொன்மையான திருக்கோயிலேயாகும். இதனை 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அருடகுரவராம் வாகீசப் பெருமானார் :

> ''போதியலும் பொழில் ஆரூர் மூலட் டானம் புற்றிடங்கொண்
> டிருந்தானை, போற்று வார்கள்
> ஆதியை அரநெறியில் அப்பன் தன்னை அடைந்து
> அடியேன் அருவினை நோய் அறுத்த வாரே''

எனப் போற்றிப் பரவுகிறார்.

இத்திருக்கோயிலில் நமிநந்தியடிகள் எனும் சைவப் பெரியார் ஒருவர் சைவத்தொண்டு புரிந்ததாக பெரிய புராணம் கூறுகிறது. ஏமாப்பேரூரில் அவதரித்த இப்பெரியார் திருவாரூர் அரநெறி நாதர்க்கு விளக்கிடும் பணியை பெரும்பேறாகக் கருதி விளக்கிட்டு வந்தார். ஒரு நாள் விளக்கெரிக்க நெய் கிடைக்காததால் பக்கத் திலிருந்த அமண் சமயத்தவர் ஒருவரிடம் நெய் கேட்க, அதற்கு அவ்வமணர் ''ஒளிக் கடவுளுக்கு விளக்கு ஏன்? வேண்டுமாயின் நீரைமுகந்து எரிப்பதுதானே'' என்று ஏளனஞ் செய்தாரம். மனம் வருந்திய நமிநந்தியடிகள் திருக்குளத்து நீரை முகந்து அகல்களில் இட்டு விளக்கேற்றினாராம். அரநெறியப்பனின் திருவருளால் விளக்குகள் சுடரொளி பரப்பியதாகப் பெரிய புராணம பேசுகிறது மேலும் 'திருவாரூர்ப் பிறந்தார்கள் அனைவருமே சிவகணத்தவர்' என்ற வரலாறும் இத்திருக்கோயிலிலேயே பிறந்த ஒன்றாகும்.

வணங்கத்தக்க நமிநந்தியடிகளின் பெருமையை நாவுக்கரசர்:

''ஆரூர் நறுமலர் நாதன் அடித்தொண்டன் நம்பிநந்தி
நீரால் திருவிளக் கிட்டமை நீனா டறியுமன்றே''

என்று திருவிருத்தத்திலும்

நந்திபணி கொண்டருளும் நம்பன் தன்னை''

என்ற தாண்டகப் பகுதியிலும் கூறுகிறார்.

நமிநந்தியடிகள் நீரால் விளக்கிடும் அரிய காட்சி சிற்பம் ஒன்று பெரிய புராணக் கதை சொல்லும் தாராசுரம் திருக்கோயிலில் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்க ஒன்று.

அடுத்து, இதே அரநெறியாம் திருக்கோயிலில் செருத்துணை நாயனார் இறைவனுக்குப் பூத்தொண்டு செய்யும் புனிதப் பணியை மேற்கொண்டதாகவும்; அவ்வாறு ஒரு நாள் மாலை தொடுத்துக் கொண்டிருக்கும்போது காடவகுல வேந்தனாகிய கழற்சிங்கன், தன் மனைவியுடன் அரநெறியப்பனை வணங்க வந்ததாகவும் பெரிய புராணம் கூறுகிறது. அப்போது செருத்துணையார்தான் தொடுத்துக்கொண்டிருந்த பூக்களை எடுத்து கழற்சிங்கனின் துணைவியார் முகர்ந்ததினால் வெகுண்டு தம் கையிலிருந்த கத்தியால் அரசியின் மூக்கையரிந்தார். இதுகண்ட கழற்சிங்கன் மூக்கை மட்டும் அரியலாமா? எடுத்த கையையுமன்றோ அரிய வேண்டும் எனக் கூறித் தன் உடைவாளால் தேவியின் கரங்களையும் வெட்டினான். இவர்களின் தீவிரமான சிவ பக்தியை மெச்சிய அரநெறியப்பர் அனைவரையும் ஆட்கொண்டதாகச் சேக்கிழார் விரித்துரைக்கிறார். இவ்வரிய புராணக் காட்சி இராஜராஜேஸ்வரம் எனும் தாராசுரத் திருக்கோயில சிற்பத் தொகுதியில் இடம் பெற்றுள்ளது.

நாவுக்கரசரால் போற்றப்பெறும் அரநெறியாம் இத்திருக்கோயில் கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் சிறந்ததொரு கோயிலாகத் திகழ்ந்திருக்கிறது என்பது தெளிவு. மேலும் வாகீசப் பெருமானால் இரண்டு தேவாரப் பதிகங்கள் பெற்ற பெருமையும் இதற்குண்டு. வாகீசர் காலத்திலிருந்து கி. பி. 10-ஆம் நூற்றாண்டு வரை இத்திருக்கோயில் செங்கற் கோயிலாகத்தான் இருந்திருக்கிறது. பின்னர் கி.பி. 10-ஆம் நூறறாண்டின் கடைசிப் பகுதியில் இராஜராஜனின் ஆட்சித தொடக்கத்தில் உபானாதி ஸ்தூபி வரை கற்றளியாக மாற்றப்பெற்றது.

இத்திருக்கோயில் முழுமையான கற்றளியாக்கப்பட்டது சோழப் பேரரசி செம்பியன் மாதேவியாரால் தான் என்பதை அரநெறியின் கருவறைத் தென்புற அதிஷ்டானத்தில் உள்ள முதலாம் இராச ராசனின் கல்வெட்டால் உணரலாம். இக்கல்வெட்டு:[1]

''திருவரநெறி ஆழ்வார்கோயில் திருக்கற்றளி
எழுந்தருளுவிச்ச ஸ்ரீசெம்பியன் மாதேவியார்....

என்று கூறுகிறது' எனவே இன்று நாம் நோக்கும் கருவறையும்– அந்தராளப் பகுதியும் பீடம் முதல் சிகரம் வரை கருங்கல்லால் இத்தேவியால் எடுக்கப்பட்டது என்பதை உணர முடிகிறது.

செம்பியன் மாதேவியார் செய்த திருப்பணிகள் பல. திருவல்லம், கோனேரிராஜபுரம், செம்பியன் மாதேவி (நாகை வட்டம்) ஆடுதுறை, திருநாகேசுவரம் திருமணஞ்சேரி போன்ற இடங்களில் இத்தேவி அழகிய கற்கோயில்களை எடுத்துள்ளார். இவ்வரிசையில் ஆரூர் அரநெறியும் இடம் பெற்றுள்ளது.

கல்வெட்டுக்களில் ''திருஅரநெறி பட்டாரகர்'' என்றும் ''அரநெறி ஆழ்வார்'' என்றும் இறைவன் பெயர்கள் குறிப்பிடப் பட்டுள்ளன.

கட்டிடக்கலையின் சிறப்புகள்

செம்பியன் மாதேவியாரால் எடுக்கப்பட்ட கருவறையும், அந்தராளமும்; உபபீடம், அதிஷ்டானம், பாதவர்க்கத்துடன் பிரஸ்தளத்தில் இரண்டு அடுக்குகளும், வட்டவடிவ சிகரமும், ஸ்தூபியும் கொண்டு திகழ்கிறது. உபபீடம் முதல் சிகரம் வரை முற்றிலும் கருங்கற் கட்டுமானமாக உள்ளது. விமானம் துவி பிரசாதவகையைச்சார்ந்தது. இவை இரண்டுஅடுக்கு தளங்களுடன் ஒவ்வோர் அடுக்கிலும் நான்கு சாலைகளும், நான்கு கர்ண கூடு களும் உள்ளன. விமானம் முழுவதும் சுதை சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன.

அந்தராளத்துடன் இணைந்த கருவறையின் வெளிப்புறம் முகப்பத்திர அமைப்புடன் காணப்படுகிறது. கருவறையைச் சுற்றி மூன்று புறங்களும் தேவ கோஷ்டங்கள இடம் பெற்றுள்ளன. கோஷ்டத்தின் மேலுள்ள பஞ்சர.ங்கள் வளைவுகள் பெற்றிராமல் உள்ளன.

வடபுற கோஷ்டத்திலுள்ள கொற்றவையின் சிலை குறிப்பிடத் தக்க ஒன்றாகும். கரங்களில் திரிசூலம், ஆழி, வாள், சங்கம், தனுசு, கேடயம் ஏந்தி, அபயக்கரம் அருள்பாலிக்க மகிஷன் தலைமேலும், வெண்கொற்றக் குடையின் கீழும் தோற்றமளிக்கும் இக்காட்சி உயரிய ஒன்றாகும். இத்தேவிக்கு இருமருங்கும் இரண்டு வீரர்களின் உருவங்கள் உள்ளன. இடதுபுறமுள்ள வீரன் கால்களை மண்டியிட்டுப் புன்முறுவல் தவழும் முகத்துடன் தன் கைகளால் உடைவாளை உருவும் கோலமும், வலதுபுறம் அதே வீரன் தன் தலைமுடியை ஒரு கரத்தால் பிடித்துக்கொண்டு முகமலர்ச்சியோடு மறுகரத்தில் ஏந்தியுள்ள வாளால் தன்கழுத்தை அரியும் கோலமும் அரிய ஒன்றாகும். மற்ற கோஷ்டங்களில் உள்ள அர்த்தநாரி, மன்னர்களின் திருவுருவங்கள் போன்றவையும் குறிப்பிடத்தக்க அழகு வாய்ந்தவைகளாகும். இவை அனைத்தும் சீனிவாசநல்லூர் கோரங்கநாதர்கோயில், மற்றும் குடந்தை நாகேஸ்வரன் கோயில் கோஷ்ட சிற்பங்களை ஒத்தே காணப்படுவது சிறப்பு அம்சமாகும்.

கற்றளி செம்பியன் மாதேவியாரால் எடுக்கப்பட்டது எனினும் இக்கோஷ்ட தேவதைகள் ஆதித்தன் காலத்துப் படைப்புகளாக இருக்கலாம் என யூகிக்க படிமஇயல் துணை புரிவதோடு, முதலாம் ஆதித்தனின் கல்வெட்டுக்கள் இவ்வரநெறியாம் திருக் கோயிலில் இடம் பெற்றுள்ளதாவ் வலியுறுத்த முடிகிறது.

நாவுக்கரசரால் போற்றப்படும் அரநெறியாம் இத்திருக் கோயில் கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் செங்கற் தளியாகத்தான் இருந்திருக்க வேண்டும். முதல் ஆதித்தன் காலத்தில் கோஷ்ட தேவதைகளான கற்சிற்பங்கள் இடம்பெற்றதோடன்றி முக மண்டபம் மட்டும் கருங்கற்பணியாக மாற்றி அமைக்கப்பட்டி ருக்கலாம். இதனை இந்நூலாசிரியரால் முதன் முதலில் கிழக்கு கோபுர வாயில் வினாயகர் கோயிலின் கருவறையில் கண்டுபிடித்த கல்வெட்டொன்றின் வரிகளால் அறியமுடிகிறது. இக்கல்வெட்டு முதல் ஆதித்த சோழனின் 13ஆம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்ட தாகும். இதுவே திருவாரூர் திருக்கோயில் உள்ள அனைத்துக் கல்வெட்டுக்களையும் விட காலத்தால் தொன்மையான ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

முதல் ஆதித்த சோழனின் 20 ஆம் ஆட்சியாண்டு குறிப்பிடப் பட்டுள்ள பிரிதொரு கல்வெட்டும், மதுரை கொண்ட பரகேசரி யான பராந்தகனின் கல்வெட்டொன்றும், பரகேசரிவர்மனான பராந்தகன் அல்லது இராஜேந்திரன் அல்லது விக்கிரம சோழனின்

6ஆம் ஆண்டு கல்வெட்டொன்றும் ஒரே விதமான எழுத்தமைதியுடன் முகமண்டபத்தில் காணப்படுகிறது.

இதனை ஆராய்ந்த கல்வெட்டாய்வாளர்கள் இம்முகமண்டபம் கி. பி. 12 ஆம் நூற்றாண்டில் கருங்கற்கட்டுமானமாய் திருப்பணி செய்யப்பட்டபோது முன்பு இதே மண்டபத்தில் இடம் பெற்றிருந்த, மேலே குறிப்பிடப்பட்ட முதல் ஆதித்தன், பராந்தகன் இவர்களுடைய கல்வெட்டுகளை மீண்டும் படியாகவெட்டுவிக்கப்பட்டுள்ளது என்பதை வலியுறுத்தியுள்ளார்கள்.

ஆனால் இந்நூலாசிரியரால் கண்டுபிடிக்கப்பட்ட முதல் ஆதித்தனின் 13 ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு (ORIGINAL) யாது காரணத்தாலோ மீண்டும் இதே மண்டபத்தில் 12ஆம் நூற்றாண்டுத் திருப்பணியின் போது இடம் பெறாமல் போய்விட்டது.

கல்வெட்டுக்கள்

(இத் திருக்கோயிலில் இடம் பெற்றுள்ள கல்வெட்டுக்களின் முழுத் தகவல்களையும் இந்நூலில் உள்ள கல்வெட்டுக்கள் என்னும் பகுதியில் காண்க.)

அரநெறியின் வடபுறச் சுவரில் இடம் பெற்றுள்ள கல்வெட்டுக்கள்

1. திருவாரூர் கல்வெட்டு எண்—15

விஜயநகர மன்னரான வீரபூபதி உடையார் காலத்தியது. கி.பி. 1429 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம 22 ஆம் நாள் வெட்டுவிக்கப்பட்டதாகும். இது மிகவும் சிதைந்து மகாமண்டபத்தில் காணப்படுகிறது.

2. தி. க. எண்—16

கருவறையின் வடபுற அதிட்டானத்திலுள்ள இக்கல்வெட்டு முதலாம் இராஜேந்திரனின் 8 ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1020) வெட்டுவிக்கப்பட்டது.

3. தி. க. எண்—16-A

16 ஆம் எண் கல்வெட்டிற்கு கீழாக மெய்கீர்த்திப் பகுதியின் மூன்று வரிகள் மட்டுமே உள்ளது.

4. தி. க. எண்—17

முதலாம் இராசராசனின் இருபத்தி மூன்றாம் ஆண்டு (கி.பி. 1007-8) வெட்டப்பட்டதாகும்.

5. தி. க. எண்—18

ஆண்டு, மன்னன் பெயர் அறிய இயலவில்லை. வாயற்றூர் ஊர் சபையினர் அளித்த நிவந்தம் பற்றிக் கூறுகிறது.

6. தி. க. எண் 19

முதலாம் இராசராசனின் இரண்டாம் ஆண்டு கல்வெட்டு.

அரநெறியின் தென்புறச் சுவரில் இடம்பெற்றுள்ள கல்வெட்டுகள்

7. தி. க. எண் 20

முதலாம் இராசராசனின் 7ஆம் ஆண்டு கல்வெட்டு அரநெறி யாழ்வார்கோயில் எனும் இத் திருக்கோயில் கற்கோயிலாக செம்பியன்மாதேவியாரால் எடுக்கப்பட்டது என்ற சிறப்புச் செய்தியை இக் கல்வெட்டு எடுத்தியம்புகிறது.

அரநெறியின் முகமண்டப மேற்கு வாயில்புறம் இடம் பெற்றுள்ள கல்வெட்டுக்கள்

8. தி. க. எண் – 12

முதலாம் பராந்தக சோழனின் 32ஆம் ஆட்சியாண்டை (கி. பி. 939) குறிப்பிடும் கல்வெட்டாகும். இது கி. பி 12ஆம் நூற்றாண்டில் படியாக மீண்டும் பொறிக்கப்பட்டது.

9. தி. க. எண் – 13

முதல் ஆதித்த சோழனின் 20ஆம் ஆட்சியாண்டு குறிப்பிடப் பட்டுள்ளது. இதுவும் கி. பி. 12ஆம் நூற்றாண்டில் பொரிக்கப் பட்ட படியேயாகும்.

10. தி. க. எண் – 14

பராந்தக சோழனின் 6ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டாகும். இல் கல்வெட்டும் பிற்காலத்தில் நகலாக பொறிக்கப்பட்ட ஒன்றே யாகும்.

சிறப்புச் செய்திகள்

தமிழகத்தில் உள்ள திருக்கோயில்களிலேயே மிகத் தொன்மையானதாகத் திருவாரூர் பூங்கோயில் இறைவனைக் குறிப்பிடும் அப்பர் அடிகள், ''ஆதியை'' அரநெறியில் கண்டதாகக் கூறுகிறார். தொன்மைக்கும் ஆதியான இறைவனைப் பெற்ற திருக்கோயில் அரநெறியேயாகும். செம்பியன்மாதேவியாரின் தனிப்பாணியான சோழர்காலச் சிற்பத்திறனை இங்கு காணலாம். சீனுவாசநல்லூர் குடந்தைக்கீழ்கோட்டம் போன்ற உன்னதக் கோயில்களின் சிற்ப எழிலையும், வடிவமைப்பையும் இங்கே காண முடிகிறது.

ஆரூர் தலத்தைப் பொறுத்தவரை நாயன்மார்களின் பலரது கதைகளுடன் நெருங்கிய தொடர்புடைய தலம் அரநெறியாம் திருக்கோயிலேயாகும். இங்கு செம்பியன் மாதேவியார், அமர சுந்தரதேவர், உமாபட்டாரகி போன்ற செப்புத் திருமேனிகளை எடுப்பித்தார் என்ற செய்திகளை கல்வெட்டுக்கள் எடுத்தியம்பு கின்றன.

கொற்றவை தேவியின் அருகே சிரபலி காட்சி கண்டோம். இதனை ஒத்த சிற்பமொன்று மிகச் சிறிய அளவில் பூங்கோயிலில் காணப்பட்டாலும் மிக எழிலுடன் திகழ்வது அரநெறியில்தான். இக் காட்சியை நோக்கும்போது திருவாரூரை ஒட்டிய ஊரான தீபங்குடியில் பிறந்த ஜெயங்கொண்டார் தம் கலிங்கத்துப் பரணியில்

''பலியாக உறுப்பரிந்து தருதும் என்று
பரவும் ஒலி கடல்ஒலிபோல் பரக்குமாலோ''
''அடிக்கமுத்துடன் சிரத்தை அரிவராலோ
அரிந்தசிரம் அனங்கின் கை கொடுப்பராலோ
கொடுத்தசிரம் கொற்றவையை பரவுமாலோ''

என்றெல்லாம் பாடியது இச் சிற்பங்களைப் பார்த்துத் தானோ? என்று எண்ணத் தோன்றுகிறது. மேலும் ஜெயங்கொண்டாரின் பிறந்த ஊரான தீபங்குடியினனாகிய நம்பன் இராமனான சோழ வித்தியாதர மூவேந்த வேளான் என்னும் ஸ்ரீகாரியம் ஆராய்கின்ற அதிகாரி ஒருவனுடைய பெயர் இக் கொற்றவை தேவியின் திருவடிகளுக்குக் கீழே பட்டிகையில் கல்லெழுத்துக்களால் குறிப்பிடப்பட்டுள்ளது எத்தனை பொருத்தமாக உள்ளது.

அரநெறியாம் இத் திருக்கோயிலின் மகா மண்டபத்து விதானத்தில் பல எழிலோவியக் காட்சிகள் இடம்பெற்றுள்ளன. தஞ்சை மராத்திய மன்னர்கள் காலத்தில் தீட்டப் பெறற இவ் வோவியங்கள் பற்றி விரிவாக ''பேசிடும் பொற்சித்திரங்கள்'' என்ற இந் நூலின் பிற்பகுதியில் காண்க.

செருத்துணை நாயனாரின் தொண்டான பூமாலை தொடுத்த இடம் என நம்பப்படும் முக மண்டபத்தின் ஒரு பகுதியிலேயே இன்றும் இத்திருக்கோயில் மாலைகள் தொடுக்கப்படுகின்றன. இத்தலத்திற்கே சிறப்புடைய செங்கழுநீர் பூ இம் மண்டபத்தில் தான் தினந்தோறும் தொடுக்கப்படுகிறது. மொத்தத்தில் அர நெறியாம் எழிற்கோயில் சிறந்த கலைக் கருவூலம் மட்டுமல்லாமல் வரலாற்றோடு பல்வேறு காலகட்டங்களில் நெருங்கிய தொடர்புடைய ஓர் வரலாற்றுப்பெட்டகமும் ஆகும்.



பூங்கோயிலும்
புற்றிடங் கொண்ட சுவரும்

பூங்கோயிலும்
புற்றிடங் கொண்ட ஈசனும்

திருவாரூர் திருகோயிலுக்கே நடுநாயகமாக வீற்றிருந்து மூலவராக அருள் பாலிக்கும இறைவனின திருநாமங்கள் பல. புற்றிடங்கொண்டான், வன்மீகநாதர், திருமூலஸ்தானஉடையார் ஆரூர் அதிபதி, பூவாரூர் வாசி ஸ்ரீ ஆரூரதிபஸ்ய என்பனவாகும். இவ்விறைவன் அமர்நதுள்ள திருக்கோயில் பூங்கோயில் என்றும் திருமூலட்டானம் என்றும் அழைகக்ப்படுகிறது.

'' தேங்காவி நாறுந் திருவாரூர் தொன்னகரில்
பூங்கோயில் உன்மகிழநது போகாதிருந்தாரே''

என கி.பி. 7 ஆம் நூற்றானடில் வாழந்த அபபர் பெருமான் போற்றும் சிறப்பும் வாயந்தது இத்திருக்கோயில் சமயக்குறவர்கள் நால்வரும் போற்றிப் பாமாலை தொடுத்துப் பரவிய ஆரூர் இறைவன இப்பூங்கோயில நாதனேயாவார். திருஞானசம்பநத ரால் 5 பதிகங்களும், அப்பரால் 21 பதிகங்களும, சுந்தரரால் 8 பதிகங்களும் பாடப்பெற்ற பெருமை இத்திருக்கோயிலுக்கு உண்டு.

புற்றிடங்கொண்டானின் பூங்கோயிலாம் திருக்கோயில் தனித்த திருச்சுற்றுடன் ''அனுக்கன வாயில்'' என்ற ஒரே திருக கோபுரத்தை கீழ் திசையில் பெற்றுத திகழ்கிறது இக்கோபுர வாசலில துவஜஸ்தம்பம் உள்ளது. இது தஞ்சை மராட்டிய மன்னன் முதலாம் சரபோஜி மன்னரால் கி.பி. 1717-ல் செய்த திருப்பணியின்போது புதுப்பிக்கப்பட்டதாகும். துவஜஸ்தம்பத் தின் பீடத்தில் மராட்டிய மன்னன் வணங்கும் கோலத்தில் உள்ள பிரதிமம் உள்ளது.

''அனுக்கன் வாயில்'' எனும் இத்திருக்கோபுரமே இத்திருக் கோயிலில் உள்ள கோபுரநகளில் எல்லாவற்றையும் விடத் தொன்மையானதாகும். பிரகாரத்தின் தளங்கள் பிற்காலத்திருப் பணிகளால் உயர்த்தப்பட்டமையால இக்கோபுரத்தின் உபபீடப் பகுதிகள் தளத்தினுள் புதைந்துள்ளது. வாயில் சிறியதாயினும் மேலே சிகரம் இரண்டு அடுக்குடன் திகழ்கிறது. பிற்கால சுதை சிற்பங்கள் இதனை அலங்கரிக்கின்றன. இக்கோபுரத்தின்

வாயிலின் வடபுறத்தில் ''சரபோஜி மன்னரின்'' வண்ண ஓவியம் எழில் குன்றாச் சிறப்புடன் உள்ளது, இக்கோபுரத்தின் சிறப்பு அம்சமாகும்.

இத்திருக்கோபுரம் கடந்து உளளே சென்றால் எதிரே வன்மீக நாதரின் பூங்கோயிலும் அதனுடன் இணைந்த வீதிவிடங்கனான தியாகேசனின் திருக்கோயிலும் உள்ளன. புற்றிடங்கொண்ட பெருமானின் திருமூலட்டானத்தைக் காணும் முன திருச்சுற்றை வலம் வருவோம். இத்திருச்சுற்றின் பெரும்பகுதி மண்டபங்களால் சூழப்பட்டுள்ளது. தென்புறமாக முதன் முதலில் நாம் காண்பது சேரமான் பெருமாள் மற்றும் சுந்தரமூர்த்தி ஆகிய இருபெரும் அருட்செலவர்களின் திருமேனிகளேயாகும். இதனையடுத்து தென் பிரகார துவக்கத்தில் வடக்கு நோக்கிய திருக்கோயிலினுள் அப்பர் பெருமான, சமபந்தர், மணிவாசகர் இவர்களது திரு வுருவங்கள் உள்ளன. இதனை அடுத்து தென்புற திருச்சுற்று மாளிகையிலே அறுபத்து மூவர்கற்படிமங்களும், செப்புத்திருமேனி களும் இடம் பெற்றுள்ளன.

மேலைப் பிரகாரத்தில் அன்னபூரணி, காட்சிக்கொடுத்தார், தலவினாயகர், பஞ்சமுக வினாயகர், சகஸ்ரலிங்கம், விஸ்வநாதர் போன்ற இறையுருவங்கள் இடம் பெறறுள்ளன. தலவினாயகர் அல்லது வாதாபிவினாயகர் என அழைக்கப்படும் திருவுருவம் கலை அம்சத்தால் சற்று வேறுபட்டுக் காணப்படுகிறது. சிறுத் தொண்டர் வாதாபியிலிருந்து கொண்டு வந்த வினாயகர் திரு வுருவம் இதுதான் என்பது சிலரது கருத்து. மேலும் தியாகராஜ லீலை 29 ஆம பாடலில் இவ்வினாயகர் கலிங்கதேசம் வரை சென்று மீண்டதாக ஓர் கதை கூறப்பட்டுள்ளதும் நோக்குதற் குரிய ஒன்று.

வடமேற்கில் முருகவேளின் திருக்கோயிலும், சகஸ்ரலிங்க வுருவும் இடம் பெற்றுள்ளன வடக்கு பிரகாரததில் ரணவிமோ சனர் என்ற லிங்கமும், ஒரே வரிசையில் அமைந்த நவகிரகங்களும் துர்கை போன்ற தெய்வங்களின் திருமேனிகளும் இடம் பெற்று உள்ளன. இதே பிரகாரத்தில் யமசணடிகேசர் என அழைக்கப் படும் சிறிய கோயிலும் ஆதி சண்டேசர் கோயிலும் உள்ளன.

யம சண்டேசர் என அழைக்கப்படும் திருவுருவம் ஜடாமுடி, தாடியுடன் உள்ளது. இது ஓர் பல்லவர்கால கருங்கற் படைப் பாகும், முன்பு யமனாக - பரிவாராலய தேவதையாக இடம்

பெற்றிருந்த இத்திருவுருவம் தற்போது யமசண்டீசர் என்ற பெயரில் அழைக்கப்படுகிறது

ஆதிசண்டீசுவரர் என்று அழைக்கப்படும் அற்புத செப்புத்திரு மேனி முற்கால சோழர்களின் எழில் படைப்பாகும். இச்சண்டி கேஸ்வரர் பெயரில் பல்நிவந்தங்கள் சாசனங்களாக வடிக்கப்பட்டு அத்திருமேனியின் திருக்கரங்களிலும், ஸ்ரீ பாதங்களிலும் மன்னர் களாலும், மக்களாலும் நிர்வார்த்து அளிக்கப்பட்ட அரிய செய்தி களை பல கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இதே பிரகாரத்தின் வடகீழ்கோடியில் சந்திரசேகரர் மண்டபம் உள்ளது. சந்திரசேகரர் அம்மன் செப்புத்திருமேனிகள் இங்கு இடம் பெற்றுள்ளன. இம் மண்டபம் பற்றி விரிவான செய்திகளை ''மண்டபங்கள்'' என்ற பகுதியில் காண்க.

வன்மீக நாதர் (புற்றிடங்கொண்ட புனிதர்)

வன்மீக நாதராம் புற்றிடங்கொண்ட பெருமானைப்பற்றிய புராண வரலாறுகள் பல இருப்பினும் குறிப்பிடத்தக்க இரண்டு புராணங்கள் உள்ளன. திருமால் தனது தவவலிமையால் தேவர் கள் அனைவரையும் தோற்கச் செய்து யாக குண்டத்திலிருந்து சிவதனுசை (வில்) பெறறதாகவும்; இதனை பெற்றவுடன் ஏற்பட்ட செருக்கால் தேவர்களைத் தாகக துரத்திக் கொண்டு வந்தபோது, இறுதியில் திருவாரூர் தலம் வந்தடைந்து சோர்வு அடைந்தாரம், இவ்வாறுசோர்வுறற திருமால் தனது நாணேற்றிய வில்லை தரையில் ஊனறிய வண்ணமே உறங்கினாராம், இவ்வாறு உறங்கிய போது தேவர்கள் அனைவரும எறும்பு உரு எடுத்து மாலவன் அறியாமலேயே வில்லின நாணைத் துண்டித்ததாகவும் நான்ற அறுந்த வில் நிமிர, அவவிசையால் திருமாலின் தலையகன்று மாண்டதாகவும், அப்போது செய்வதறியாது, அஞ்சிய தேவர்கள கயிலைநாதனைப் பணிந்தனர், உடன் ஈசனும் ஆடகேசன் என்ற திருநாமத்தோடு பாதாளத்திலிருந்து எழுந்தருளி திருமாலை உயிர்ப்பித்ததோடன்றி தேவர்கள் தோற்றுவித்த புற்றையே லிங்கஉருவமாகக் கொண்டு ''புற்றிடங்கொண்டான்''—என்ற திருநாமத்தோடு அருள்பாலித்தார் என்று திருவாரூர் தலமகாத்மியம் கூறுகிறது.

அடுத்து திருமகள் வருணனின் மகளாகப் பிறந்து, மதுகைடபர் களை வென்ற திருமாலை மணக்கவேண்டி வன்மீகநாதனை வழி பட்டு திருமாலை அடையும் வரம் பெற்றதாகவும் அதனால் இத்

தலத்திற்கு கமலாலயம் எனும் பெயர் வந்ததாக விவரிக்கின்றது. மேற்கூறிய புராண வரலாறுகள் வடமொழி மற்றும் தமிழ் இலக்கியங்களில் மிக அழகாகக் குறிப்பிடப்பெற்றுள்ளது.

''திருமகள் வழிப்பட்ட தலம் என்பதை

.....மலர் மென்பானவை
முழுதுள திருவும் என்னும் முடிவில் மங்கலமுமெய்த
விழுமிதி நோற்றுப் பெற்ற வியன் திருவாரூர்''

—என கந்த புராணம்

குமராபுரி படலமும்,

''சொன்ன நாட்டிடைத் தொன்மையின் மிக்கது
மன்னு மாமலராள் வழிபட்டது
வன்னியாறு மதிபொதி செஞ்சடைச்
சென்னியார் திருவாரூர் திருநகர்''

—எனப் பெரியபுராணமும் சிறப்புறக் குறிக்கின்றன.

புராண நூல்களின் பெருமையும் செறிவும் கண்ட பின்பு வரலாற்று அடிப்படையில இத் திருக்கோயிலை ஆராய்வோம். அப்பர் பெருமானோ

''கோலம் நீகொள்வதற்கு முன்னோ பின்னோ
குளிராரூர் கோயிலாக் கொணட நாளே''
''வேதத்தை விரிப்பதற்கு முன்னோ பின்னோ
விழுவாரூர் கோயிலாக் கொண்ட நாளே''

எனக்குறிப்பிடுகின்றார். இவர் குறிச்சும் காலம் கி. பி. 7ஆம் நூற்றாண்டு. எனவே 7 ஆம நூற்றாண்டிலேயே மிகத் தொன்மைத் தோற்றமாகவும், வேதகாலத்திற்கு முந்திய தலமாகவும் மதிக்கப்பட்ட திருக்கோயில் திரு மூலட்டானம் என்பது தெளிவு. மேலும் திருவாரூரில் வழிபட்ட இறைவனின் பெயர்களை எல்லாம் குறிப்பிடும் அப்பர் அடிகள்

''புற்றிடங் கொண்டான்றன் தொண்டர்க்குத்-தொண்டராம்
புண்ணியமே''—என்றும் கூறுகிறார்.

கி.பி.7-ம் நூற்றாண்டிலேயே புற்றிடங்கொண்டான், ஆரூரன், திருமூலட்டானன் என்ற பெயாகளை எல்லாம் இவ்விறை வனுக்கு வழங்கப்பற்றது எனபதனை தேவாரப் பதிகங்கள் கூறுகின்றன.

தேவர்கள் எழுப்பிய புற்றில் ஆடகேசத்து இறைவன் புகுந்ததாகக் கூறப்படும் புராணச் செய்தியை முன்பே கண்டோம், இதனை அப்பர்

''நீள் வான முகடதனைத் தாங்கி நின்ற நெடுந்தூண
பாதாளக் கருவை ஆரூர்
ஆள்வானை கடுகச் சென்று அடைவேன்''—என்பதாலும்

திருவாரூர் புராணம் ஆடகேஸ்வர சருக்கத்தாலும் அறியலாம். எனவே புற்றை லிங்கமாக—இறைவனாக வழிபடும் வழக்கம் மிகத் தொன்மைக் காலத்திலிருந்தே இருந்து வந்திருக்கிறது. மேலும் பஞ்ச பூதத்தலங்கள் எனக் கூறப்படும் தலங்கள் வரிசையில் ஆரூர் பிருதுவி தலமாக போற்றப்படுகிறது நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் என்பதில் நிலமாக இங்கு இறைவன் போற்றப் படுவதால் அவனது திருமேனி மண்ணாக—மண்ணில் எழுந்த புற்றாக வழிபடும் பாங்கு தொன்மைச் சான்றேயாகும்.

மேலும் பெரும்பாணாற்றுப்படை, பத்துப்பாட்டு, மலை படுகடாம் போன்ற சங்க நூல்களில் பாம்புரையும் புற்றை வழி படும் முறையை அறிய முடிகிறது. எனவே புற்றை வழிபடும் தொன்மைத் திருக்கோயிலாக இக்கோயில் தோன்றியது என்பது மிகத்தெளிவு. இன்றும் தமிழகத்துக் கிராமங்கள் பலவற்றில் புற்றை வழிபடும் வழக்கத்தைக் காணமுடிகிறது.

புற்றிடங்கொண்டான் என அப்பரால் குறிப்பிடப்படும் இப்பெருமானுக்கு வடமொழியில் வன்மீகநாதன் என்ற பெயரும் முற்காலத்தில் வழங்கப்பட்டதென்பதை கல்வெட்டுக்கள் வாயி லாக அறிய முடிகிறது. மூன்றாம் குலோத்துங்கனின் திரிபுவனம் வடமொழிக் கல்வெட்டுக்களில் ''வனமீகேஸ்வரர்''என்று குறிப் பிடப்பட்டுள்ளமையும, ஆரூர் கல்வெட்டுக்களில் உள்ள குறிப்பு களுமே இதற்கு சான்றாய் உள்ளன.

இவ்வாறு காலமே கணிக்க முடியாத அளவு,புற்றாக வழிபடும் காலத்திலிருந்தே தொன்மைச்சிறப்பு மிகுந்த கோயிலாகப் போற்றப்படும் இத்திருக்கோயிலை அப்பர் அடிகளே பூங்கோயில் என அழைக்கிறார் இவர் காலத்தின் கோயில் அமைப்பை உணரப் போதிய கல்வெட்டுச்சானறுகள் இல்லை. பின்பு முற்கால சோழர்களான விஜயாலயன், ஆதித்தன், பராந்தகன் போன்ற மன்னர்கள காலத்தில சிறப்புற இருந்திருக்க வேண்டும்.

இத்திருக்கோயிலில் முதல் ஆதித்தன் பராந்தகன் காலத்திய கல்வெட்டுகள் இருப்பினும் அவை அரநெறி பற்றியே கூறு

கின்றன. திருமூலட்டானம் பற்றிய இவர்கள் காலத்திய கல் வெட்டுகள் நமக்கு இதுவரை கிடைக்காததால் இக்கால கட்டத்திய வரலாற்றுச் செய்திகளை அறிய முடியவில்லை. இருப்பினும் பூங்கோயிலின் கட்டுமானங்கள் முற்கால சோழர் கலையின் சிறப்பு முத்திரையாகும்.

இரண்டாம் பிரகாரத்திலுள்ள சப்தமாதர்களின் சிலைகள் ஆனந்தேசத்திலுள்ள ஜேஷ்டாதேவி, மற்றும கிழை சிறிய திருக் கோபுர வரயிலின் உட் பகுதியில் உள்ள சண்டிகேஸ்வரர் சிலை இவையனைத்தும் முற்கால சோழர்களின் காலத்திய கலைப் படைப்புகளாகும். இவைகள் வன்மீகநாதரின் பிரகார தேவதை களாக முன்னர் இடம் பெற்று பின்னர் பிற்கால கட்டுமானங்களாலும, வழிபாட்டு மாறுதல்களாலும் இடம் பெயர்ந்திருக்கலாம் எனக் கருத இயலுகிறது.

பிற்கால சோழர்களின் பெரும்பான்மையான கல்வெட்டுக்கள் திருமூலட்டானமுடைய இந்த இறைவனின் வழிபாடுபற்றியே அதிகம் குறிப்பிடுகின்றன. எனவே பிற்கால சோழர்கள் காலத்தில் வீதிவிடங்கனின் (தியாகேசனின) திருமேனி விழாக்காலங்களில் முக்கியத்துவம் பெற்றதேயன்றி மற்றெல்லா காலங்களிலும் ஆரூருடையார், திருமூலட்டான முடையார் என்றெல்லாம் அழைக்கப்படும் இவ்விறைவனின் வழிபாடே முக்கியத்துவம் பெற்று திகழ்ந்தது என்பதை அறியமுடிகிறது.

பூங்கோயில் — கட்டிடக்கலையின் பாங்கு.

பூங்கோயிலின் கருவறையும அந்தராளமும் முற்கால சோழர்களின் எழில் மிகு கற்றளியாகப் பரிணமிக்கின்றது. முறகால சோழர்களின் கற்கோயிலுக்கே உரிய வண்ணம் உபானாதி ஸ்தூபி வரையில் கருங்கல்லாலேயே எடுக்கப் பட்டுள்ளது. அதிஷ்டான வர்க்கத்திற்கு மேலே கருவறையில் மூன்று புறமும் மூன்று தேவ கோஷ்டங்கள் உள்ளன. கோஷ்ட தேவதைகள் கோஷ்டத்தின் வெளிப்புறமாகவே உள்ளன பிறை மாடங்கள் பிறகால சோழர்காலக் கட்டுமானத்தில் இருப்பது போலல்லாமல வெளிப்புறமாகவே அமைந்துள்ளது. இக் கோஷ்டங்களில் முறையே தென்புறம் ஆலமர்ச் செல்வரும் மேல் திசையில் லிங்கோத்பவரும், வடதிசையில நான்முகனும் இடம் பெற்றுள்ளனர். கோஷ்டங்கள அனைத்தும ஸ்ரீனிவாசநல்லூர் கோரங்கநாதர் கோயிலையே முழுதும ஒத்துள்ளன. கோஷ்டங்களின் மேல்புறம் எழிலுறு மகர தோரணங்கள அணி

செய்கின்றன. உத்திரத்திற்கும் கொடுங்கைக்கும் இடையே பூதகணவரிமானம் அணி செய்கிறது. கொடுங்கை அமைப்பிற்கு மேலே ஏகதள விமானம் காணப்படுகிறது.

விமானத்தின் சிகரம் சதுரமாக நான்கு பட்டை வடிவில் உள்ளது. சிகரத்தை சாலைகளும், பண்டிகைகளும், பஞ்சரங் களும் அணி செய்கின்றன. இவற்றின் இடையே சுண்ணத்தால் அமைந்த வண்ண கதை சிற்பங்கள் உளளன. கிரீவத்தின் உச்சியில் பொற்றகடு போற்றப்பட்ட ஸ்தூபி (சூலசம்) எழிலுடன் திகழ்கிறது.

கருவறையில் புற்றிடங் கொண்ட இறைவன் கோயில் கொண்டுள்ளார். கருவறையுடன் இணைந்த அந்தராளம் நான்கு கற்றூண்களை உள்ளே பெற்றுத் திகழ்கிறது. அந்தராளத்தின் வாயிலின் வெளிப்புறம் முற்கால சோழர்களின் அற்புதக்கலைப் படைப்பான இரண்டு துவார பாலகர்களின் கற்படிமங்களும், நிலைபின் மேல் சிவபெருமானின் திருமணக் காட்சியும் வடிக்கப் பட்டுள்ளது. ஆநூர் திருகோயிலில் உள்ள தலைசிறந்த சிற்பங் களின் வரிசையில் இவை குறிப்பிடத்தக்கவையாகும். அந்தராளத் துடன் இணைந்த முக மண்டபம் பிற்கால சோழர்களின் திருப் பணியாகும். இம்மண்டபத்தின் தென்புறம் தியாகராசப் பெரு மானின் முகமண்டபத்துடன் இணைந்துள்ளது.

கருவறையின் கலைச் சிற்பங்கள்

தேவகோஷ்டத்தில் காணப்படும் ஆலமர்ச் செல்வர், லிங்கோத்பவர், நான்முகன் இவர்களுடைய கற்சிற்பங்கள் முற்காலசோழர்களின் கலைப்படைப்பாயினும் இவைகளின் மேல் ஆண்டு ஆண்டுகளாய் பூசப்பட்ட சுண்ணாம்புப் பூச்சுகளினால் எழிலுறு இப்படிமங்களின் இயல்பான அழகைக் காணமுடியவில்லை

அடுத்து அதிஷ்டானத்தின் குமுதப்படைக்கு மேலே உள்ள ஜகதிப்படையில் 5'' × 6'' அங்குல அளவுள்ள சிறிய சிற்பத் தொகுப் புகள் உள்ளன. இவை உலகப புகழ்பெறற முற்கால சோழர் களின் திருக்கோயில்களான கும்பகோணம் நாகேஸ்வரன் திருக் கோயில், மற்றும் புள்ளமங்கை திருக்கோயில்களில் உள்ள சிற்பத் தொகுப்பை ஒத்தே காணப்படுகிறது. குடநாதையிலும் புள்ள மங்கையிலும் இராமாயணக் காட்சிகள் நுண்சிற்பங்களாக உள்ளன. அதைப்போனறு பூங்கோயிலிலும் 50க்கும் மேற்பட்ட சிறபத்தொகுதிகள் இடம் பெற்றுள்ளன. இவற்றின் மேலும்

சுண்ணாம்புப் பூச்சு அளவுக்கு அதிகமாக உள்ளதால் சிற்பங்களை தெளிவுறக் காண இயலவில்லை. இவ்வரிசை சிற்பங்களுள் துர்கை, வடபத்ரசாயி (ஆலிலைக் கண்ணன்) கஜசம்கார மூர்த்தி, மகிஷாசுரமர்த்தினி போன்ற சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவை யாகும். கருவறையின் நுழைவாயிலில் உள்ள துவாரபாலகர்கள் விரிசடைக் கடவுளாம் சிவபெருமானின் திருமணக்காட்சி போன்றவை பூங்கோயிலின் சிறப்பை மேலும் உணர்த்தும் உன்னத முத்திரைகளாகும்'

பூங்கோயிலாம் இப்புனிதத் திருக்கோயிலை பொற்றகடுகளால் போர்த்திப் பொன்மயமாக விளங்கச் செய்த பெருமை மாமன்னன் மூன்றாம் குலோத்துங்கனுக்கே உரியதாகும். பாண்டிய நாட்டை வெற்றிகொண்டு, திரிபுவனவீரதேவன் என பட்டம் சூடி, பெருமையோடு திரும்பிய இம்மன்னவன் பாண்டி நாட்டுப் பண்டாரத்திலிருந்து கொண்டு வந்த பொன்னால் வன்மீக நாதரின் கோயிலைப் பொன்மயமாக மாற்றி அமைத் தான் இதனைத் திரிபுவனம் வடமொழிக் கல்வெட்டு

''வல்மீ கேஸ் வர வேஸ்வதி நிகிலம்
நிர்மாய ஹேமஞ்ச ந்நிருபோ ।
வல்மீகாதிபதேச் சகாரச விபாம்
திவ்யாம் மஹத் கோபுரம் ॥ – என

சிறப்பாகப் பேசுகிறது. மேலும் இவனது தமிழ் கல்வெட்டுக்களில் மெய் கீர்த்தியில் ஆரூர் அருந்தவர்க்குச் செய்த திருப்பணிகளைத் தெளிவாகக் காட்டுகின்றன.

திருத்தொண்டர் புராணத்தை இயற்றிய சேக்கிழார் பெருமான் கயிலயம் பதியின பெருமையை முதலில் பேசி பின்பு திருநாட்டுச் சிறப்பாக சோழ நாட்டின் பெருமைகளைக் கூறுகிறார். அடுத்து திருநகரச் சிறப்பாகத் தொன்மையின் மிக்க திருவாரூர் நகரின் பெருமை பேசி அதன் நடு நாயகமாகத் திகழும் பூங்கோயிலை,

இனையவகை அறநெறியில் எண்ணிறப்போர்க்
கருள்புரிந்து
முனைவரவர் மகிழ்ந்தருளப் பெற்றுடைய முதூராமேல்
புனையும் உரை நம்மளவில் புகலளந் தகைமையதோ?
அனையதனுக் கமலராம் அறவனார ''பூங்கோயில்''

என்று கூறும் பாங்கிலிருந்து இதன் பெருமையை நன்கறியலாம்.

தியாகராஜர் திருக்கோயிலும் தியாகேசனும்

தியாகராஜர் திருக்கோயிலும் தியாகேசனும்

பூங்கோயில் அல்லது திரு மூலட்டானம் என்ற மூலவர் திருக் கோயிலும், அரநெறியென்னும் அசலேசமும் இருவேறு பாடல் பெற்ற ஆரூர்க்கோயில்களாயினும், இவையனைத்தையும் கொண்ட ஆரூர்த்திருக்கோயிலைத் தியாகராஜர் திருக்கோயி லென்றே அழைக்கின்றனர். பூங்கோயிலுறைந்த பெருமானைப் புற்றிடங்கொண்டான், திருமூலஸ்தான முடையார், வன்மீக நாதர் என்றும், அரநெறியில் ஆட் கொள்ளும் இறைவனை அரநெறி மகாதேவ பட்டாரகர், அரநெறி ஆழ்வார் என்றும் கல்வெட்டுக்களும், தேவாரமும் குறிக்கும். பிற்காலத்தில் அரநெறி ஆழ்வாரை அசலேஸ்வரர் என அழைக்கத் தொடங்கினர். பூங்கோயிலாம் திரு மூலட்டானத்தின் உற்சவ மூர்த்தியான செப்புத் திருமேனியைத் 'தியாகராஜர்' என்றும்; அசலேசத்தின் உற்சவ மூர்த்தியான சோமாஸ்கந்தர் திருமேனியைத் ''தன்ம விடங்கதேவர்'' என்றும் அழைக்கலாயினர்.

தியாகேசனின் பொற்கோயில்

ஆரூர்க்கோயிலின் நடுநாயகமாக விளங்கும் புற்றிடங் கொண்டானின் பூங்கோயிலையொட்டி தென்புறமாக உள்ள கற்றளியே தியாகராஜர் திருக்கோயிலாகும். இவ்விரண்டு திருக் கோயில்களின் மகாமண்டபப்பகுதிகள் இணைக்கப்பட்டு ஒரே கோயிலாகக்காட்சி நல்குகிறது. பூங்கோயிலாம் கற்றளி தொன்மை யானவென்றாகும் தியாகராஜர் கற்றளி முதலாம் இராஜேந்திரனால். பரவை என்ற நங்கையின் வேண்டுகோளுக் கிணங்க, கி. பி. 1029-31ல் எடுக்கப்பட்டது, என்பதை இக் கோயிலில் உள்ள கல்வெட்டொன்று[1] கூறுகிறது. முன்பு செங்கற் கோயிலாக இருந்ததைக் கற்கோயிலாக எடுத்தது மட்டுமின்றி, பரவை என்ற அந்நங்கை நல்லாளின் விருப்பத்திற்காக ஸ்ரீ விமானத்திற்கும் கருவறையின சுவர்களுக்கும் இராசேந்திர சோழன் பொன்வேய்ந்தான். 26643 கழஞ்சு நிறையுள்ள பொற்றகடுகள் விமானத்தையும் சுற்றுச் சுவர்களையும் அலங்கரித்தன இதனை இக்கற்றளியில் உள்ள கல்வெட்டொன்று

''உடையார் வீதிவிடங்கதேவர் குடத்திலும் வாய்
மாடையிலும் நாலு நாசியிலும் உள் குடத்திலும்''

என்று கூறுகிறது.

கருவறையின் கதவுகளுக்கும், மண்டபத்தூண்களுக்கும் 42000பலம் எடையுள்ள செம்பினால் தகடு சாத்தப்பட்டதாகவும் இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. கங்கை முதல் கடாரம் வரை வென்ற ஒரு சோழப்பெருமன்னன் தன் அருமைக்காதலி பரவை நங்கை என்ற ஒரு பெண்ணரசியின் வேண்டுகோளுக்காக இத்தனையும் செய்த ஓர் திருக்கோயிலே இன்று நாம் காணும் இலவெழிலுறு கற்கோயில். அவன் வேய்ந்த பொற்றகடுகளைக் காலம் விழுங்கி விட்டாலும் இத்தனையும் கூறும் கல்வெட்டுக் களைக் கருவறையின் சுவர்களில் காணும்போது எத்தனைப் பெருமித உணர்வு உண்டாகிறது !

கட்டடக்கலையின் அம்சங்கள் :-

இத்திருக்கோயிலின் முதல் பிரகாரத்தின் தளம் பிற்காலத்தில் உயர்த்தப்பட்டதால்; கருவறையின் உபபீடப் பகுதி தளத்தில் புதைந்துள்ளது. தற்போது பத்ம பீடப் பகுதியில் இருந்துதான் நாம் காண முடிகிறது. பத்மபீடத்தின் இதழ்கள் அழகுற மேல் நோக்கி வளைந்து உள்ளன. பத்மத்திற்கு மேல் குமுதவரி வளைவுபடத் திகழ்கிறது. அதன் மேல் யாளிவரி மானம் பெரிய அளவில் தொடர்கிறது. இவற்றின் ஒவ்வொரு மூலையிலும் வீரர்களின் சிற்பங்கள் உள்ளன. யாளிவரி மானத்திற்கு மேல் வேதிகையும், கால், போதிகை, உத்திரம் எழுதகம் போன்றவை யும் அமைந்துள்ளன. கபோதம் யாளம் அடங்கிய பிரஸ்தளமாகத் தொடர்கிறது. மூன்று கோஷ்டங்கள் உள்ளன. அதில் முறையே தென்புறம் ஆலமர் செல்வரும், மேல்புறம் ஆறியும், சங்கும் ஏந்திய திருமாலும், வடபுறம் நான்முகனும் இடம்பெற்றுள்ளனர் கோஷ்டதோரணங்கள் இருபுறமும் வளைவுகளுடன் காணப் படுகிறது.

சிகரம் வட்ட வடிவ அமைப்பிலும் நான்கு மூலையிலும் நந்திகள் பெற்றும் திகழ்கிறது. தளத்தில் யாளிவரிமானம் ஒன்றும் உள்ளது. கிரீவமும், சிகரமும் அழகிய சுதைவேலைப் பாடுகளுடன் உள்ளன. மகாநாசிக்கூட்டுக்குக் கீழ் தேவதையர் களின் சிற்பங்கள் உள்ளன.

கருவறையுடன் இணைந்த அந்தராளம் ஆறு தூண்களுடன் அழகு மிக்க தேவ சபையாக மிளிர்கிறது. இதன் தென்புறமும், வடபுறமும் பலகணிகள் உள்ளன. இதற்கு முன்பு உள்ள மகா மண்டபம் பிறகாலத் திருப்பணிகளுக்கு உட்பட்டாலும், மூலத் தானத்தின் மகாமண்டபத்துடன் இணைந்தே உள்ளது. வாயிற் படிகள் தென்புறச் திருச்சுற்றில் உள்ளன.

தியாகராஜர் வழிபாடு

(இளமுருகு உடனுரையும் அம்மையப்பர்)

புராண நூல்களின் கூற்று.

திருமாலுக்கு உமையவளால் ஏற்பட்ட சாபத்தைப் போக்கு வதற்காக சிவபெருமானால் அளிக்கப்பட்டத் திருமேனியே சோமாஸ்கந்தமூர்த்தி எனப் புராண நூல்கள் கூறுகின்றன. அவ்வாறு தோற்றுவிக்கப்பட்டதாகக் கூறப்படும் இத்திருமேனியை பள்ளிகொண்டஇப்பெருமான் தன்மார்பில்வைத்துபூசித்ததாகவும் இதனால் விரிசடைக் கடவுள் மகிழ்ந்து தன் தேவியுடன் தோன்றி பாபவிமோசனம் அளித்ததாகவும் பின்பு இப்புனித சோமாஸ்கந்த மூர்த்தியை மாலவனிடம் இருந்து இந்திரன் பெற்றதாகவும், அதனை முசுகுந்தன் தன் திறமையால் பெற்று திருவாரூரில் தாபித்ததாகவும், தியாகராஜமாகாத்மியம்—லீலை போன்ற புராண நூல்களும பூசை முறைகளும், ஓவியங்களும், சிற்பங்களும், கூறுகின்றன. இந்திரனிடமிருந்து முசுகுந்தன் இப்பெருமான திருமேனியைப் பெறும் போது மேலும் ஆறு திருமேனிகளைப் பெற்றதாகவும், அவை சப்தவிடங்கத்தலங்களான திரு நள்ளாற்றில் நாக விடங்கராகவும், நாகை காரோணத்தில சுந்தர விடங்கராகவும், திருக்காராயிலில் ஆதிவிடங்கராகவும், திருக் கோளிலியில் அவனி விடங்கராகவும், திருவாய்மூரில் நில விடங்க ராகவும், திருமறைக் காட்டில் புவனி விடங்கராகவும் தாபிக்கப் பட்டதாகப் புராண நூல்கள் குறிக்கின்றன.

இன்று நாம் காணும் தியாகராஜமூர்த்தி அழகியதாரு சிம்மாசனத்தில் அமர்ந்து தியாகராஜர் திருக்கோயிலின் அர்த்த மண்டபத்தில் காட்சி நல்குகிறார். இத்திருமேனி மூலத்தானத்தில் இடம் பெறவில்லை. சுகாசனமாக வீற்றிருக்கும் விரிசடைப் பெருமானாம் வீதிவிடங்கனின் திருமுகத்தையும் அருகமர்ந்த

அருள் நாயகியின் திருமுகத்தையுமே காண இயலுகிறது. மற்ற அங்கங்கள் அனைத்தும் மூடப்பட்டு எழில் செய்யும் ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. அபிடேகங்களின் போது எழிற் கரத்தின் ஒரு பகுதியையும், மார்கழித் திருவாதிரையில் இடது பாதத்தையும, பங்குனி உத்திரத்தில் வலது பாதத்தையும்(சிறப்பு பூசைகளின போது மட்டுமே) தரிசிக்கலாம்,

இதேபோன்று மறற விடஙகத் தலங்களிலும,திருமேனிகளின் உடல் முடப்படடே வழிபாடு நடத்தப்படுகிறது. திருமேனிகளின் ஆடை, அணிகலன்களை முற்றுமாக அகற்றக் கூடாது என்பதனைக் கண்டிப்பான வழிபாட்டு நெறியாகக் கடைப்பிடிக்கின்றனர்.

தியாகக்கொடி, மணித்தண்டு, இரத்தினச் சிஙகாசனம், வீர கண்டயம, செங்கழுநீமாலை, பஞ்சமுகவாத்தியம், சுத்த மத்தளம், பாரிநாயனம், அயிராவதம், அழகுதேர், செவ்வந்திக்கிருத்தோடு போன்றவை இவர்க்குரிய சிறப்புக்கள் ஆகும, பஞ்சமுக வாத்தியம், சுத்த மத்தளம், பாரி நாயனம் போன்ற அரிய சிறப்பு வாத்தியங்கள் பூசைகளின்போது இசைக்கப் படுகின்றன, அயிராவதம் என்ற வெள்ளை யானை மட்டும் ஓவியத்தில் காட்டப்பட்டுள்ளது மற்ற எல்லா அம்சங்களும் குறைவு படாமல் ஆகமமுறைப்படி பூசைகள் நடைபெறுவது மிகவும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இப்பெருமானுக்கு அருகே உள்ள வெளளிப் பேழையில் மரகதலிங்கமாக உள்ள விடங்கர் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இந்த லிங்கத்திற்குக் காலை மாலை இரண்டு வேளைகளிலும் சிறப்புப் பூசைகள் நடைறெகின்றன.

வரலாற்று அடிப்படையில்.....

தியாகராஜர் என்ற பெயரையோ அல்லது மேலே குறிப்பிட்டுள்ள புராண வரலாறுகளையோ. வழிபாட்டு முறைகளையோ, தொகுத்து நோக்குமபோது கி. பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்து கி. பி. 14-ஆம் நூற்றாண்டு வரை எந்த ஒரு இலகியத்திலோ, கல்வெட்டுக்களிலோ, சிற்பங்களிலோ, ஓவியங்களிலோ, அல்லது செப்பேடுகளிலோ எவ்வகைக் குறிப்பும் கிடைக்கவில்லை. பின்பு கி. பி. 15-ஆம் நூற்றாண்டு தொடக்கத்திலிருந்து வரலாற்றைத் தெளிவுற ஆராயும்போது இன்றைய நடைமுறை வழிபாட்டு நெறியின் பல்வேறு அம்சங்களை – சிற்பங்கள், ஓவியங்கள், செப்பேடுகள், கல்

வெட்டுக்கள் போன்ற வரலாற்றுச் சான்றுகளோடு தெளிவுறக் காண முடிகிறது.

கி. பி. ஏழாம் நூற்றாண்டில் தொடங்கி கி. பி. 20-ஆம் நூற்றாண்டு இறுதியாக உள்ள காலகட்டத்தில் இவ் வழிபாடு பற்றிக் கிடைத்துள்ள சான்றுகளை வரிசையாக நோக்குவோம்.

அப்பர் பெருமான் கி. பி. 580 — 660 வரை உயிர் வாழ்ந்தவர் என வரலாற்று வல்லுநர்கள் கணித்துள்ளனர். இக் கால கட்டத்தில் தமிழகம் முழுவதும் பல்லவர்களின் ஆட்சி ஓங்கி இருந்தது. இவர் காலத்தில் வாழ்ந்த பெருமன்னர்கள் மகேந்திர பல்லவனும் நரசிம்மபல்லவனுமாவர். இப்பெருந்தகைகளின் காலத்தில் தான் இருண்ட இடைக்காலத்திற்கு பிறகு சைவம் தழைத்தோங்கத் துவங்கியது. எண்ணிலாக் கோயில்களும் குடை வரைகளும் நாடெங்கும் தோன்றின. இப்பொன்னான நேரத்தில் தான் தரும சேனனாக அமண்மதத்தைச் சார்ந்திருந்த அப்பர் அடிகள் சைவம் திரும்பி, தமிழகமெங்கும் உள்ள பல்வேறு திருத்தலங்களைப் புகழ்ந்துத் திருப்பதிகங்கள் பாடித் திருவாரூர் வருகிறார். இங்கு திருப்பதிகம் பாடும்போது வேறு எந்தத் திருக்கோயிலிலும் — ஏன் தில்லையிலும் கூடக் குறிப்பிடாத தொன்மைச் சிறப்பைப் பாடுகின்றார்.

''ஒருவனாய் உலகேத்த நின்றநாளோ''
''கோலமே நீ கொள்வதற்கு முன்னோ பின்னோ
அணியாரூர் கோயிலாக் கொண்ட நாளோ''
''நிலந்தரத்து நீண்டுருவம் ஆன நாளோ''

என்பன போன்ற பல பாவடிகள் வாயிலாக இறைவன் அருவ மாயும், உருவமாயும், கோயில் கொண்டது முதலில் ஆரூரில்தான் எனப் புகழ்கின்றார்.

மகேந்திர பல்லவனது ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த இப் பெருமகனாரின் கூற்றுக்களாலும் புற்றிடம் கொண்டான் (புற்றையே வழிபாடு செய்யும் இயற்கை வழிபாடு) என்ற வழிபாட்டின் தன்மையாலும் இக்கோயில் தொன்மைத் திருக் கோயிலாகத் திகழ்ந்திருக்கிறது என்பதை வலியுறுத்த முடிகிறது.

பல்லவர்களின் குடைவரைக் கோயில்களைக் கூர்ந்து நோக்கும்போது கருவறையில் சிவலிங்கங்கள் இருப்பினும் அவற்றிற்குப்பின், சுவரில் சோமாஸ் கந்த மூர்த்தியின் திருவுருவம்

காணப்படும் (மாமல்லை கடற்கரை கோயில் போன்றவை). சிவலிங்கத்துடன் சோமாஸ்கந்தரையும் ஒரே கருவறையில் வைத்து வணங்கும நெறி கி. பி. 6—7 ஆம் நூற்றாண்டளவிலேயே முக்கியத்துவம் பெற்றுத் திகழலாயிற்று

வீதிவிடங்கர்

கி. பி. ஏழாம் நூற்றாண்டில் திருவாரூர் வந்த அப்பர் பெருமான் திருவீதியில் பவனிவந்த ஆரூர் இறைவனை வழிபட்டுப் போற்றி,

''ஆரூரன் எனும் பவனி வீதி விடங்கனை....''
''பவனி வீதி விடங்கனை கண்டிவள்
தவனியாயின வாறென்றன் தையலே''
''ஊழித் தீயன்னனை ஓங்கொலிமாப் பூண்டதோர்
ஆழித்தேர் வித்தகனை நான் கண்டது ஆரூரே—''

என்று அழகு தமிழில் பாடுகிறார்.

விடங்கர் என்பதே திருவீதியில் பவனி வரும் திருமேனிகளே யாகும். தஞ்சைக் கல்வெட்டுக்களில் தெட்சிணமேரு விடங்கர் எனவும், திருவாரூர் அரநெறிக் கல்வெட்டில் ''தன்மவிடங்க தேவர்'' எனவும் சோமாஸ்கந்தர் திருமேனிகள் குறிப்பிடப் படுகின்றன, இவ்வாறு அப்பர் பெருமான் பூங்கோயிலுறைந்த சோமாஸ்கந்தரை ''வீதிவிடங்கன்'' எனப் போற்றுகின்றார். அப்பர் தன் கண்ணாரக் கண்டதாகக் குறிப்பிடும் வீதிவிடங்கப் பெருமான் இன்று நாம் போற்றும தியாகராஜர் திருமேனியாகத் தான் இருக்க வேண்டும். இது பல்லவர்கள் காலத்தில் அமைந்த ''இளமுருகன் உடனுரையும அம்மை அப்பனான — சோமாஸ் கந்தமூர்த்தியே எனக் கூறலாம். திருமேனி மறைக்கப்பட்டு வழிபாடு நடத்தப்படுவதால் படிமவியல் அடிப்படையில ஆராய்ந்து அறுதியிட்டுக் கூறுவதற்கு இயலவில்லை.

மூன்றாம் பிரகாரத்தில் உள்ள சப்த மாதர் கற்சிற்பங்கள் முற்றிலும் பல்லவர்பாணியில் அமைந்த சிற்பங்கள் என்பதை படிமஇயல் அடிப்படையில் அறுதியிட்டுக் கூறலாம். எனவே பரிவார தேவதைகளான இவைகளும், பூங்கோயிலும், வீதிவிடங் கன வழிபாடும் பல்லவர் காலத்தில் ஆரூரில் சிறப்பாகப் போற்றப் பட்டு வந்தவை என்பதை அப்பர் வாக்காலும், சிற்பச்சிறப்புக் களாலும் அறிய இயலுகிறது. வீதிவிடங்கப் பெருமானின் திருக்

கோயில் பூங்கோயிலையொட்டிய செங்கற்கோயிலும் இருந்த தென்பதையும், பின்பு இராஜேந்திரசோழன் காலத்தில் அணுக் கியர் பரவை நங்கையால கற்கோயிலாக எடுக்கப்பட்டதையும் கல் வெட்டின் மூலம முன்பே கணடோம். கற்றளியாக எடுக்கப்படும் முன்பு (11ஆம் நூற்றாண்டுக்கு முன்பு) வாழ்ந்தவரான சுந்தர மூர்த் திநாயனார் ஆரூர் மூலட்டானனை வணங்கிய பின்பு வீதி விடங்கனையும அவரது கோயிலினுள் சென்று வணங்கினார் என்பதை சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தில் (தடுத்தாட் கொண்ட புராணத்தில)

''என்று பலமுறை யால வணங்கி எய்திய
உள்ளக் களிப்பி னோடும்
வென்றி அடல்விடை போல்நடந்து வீதி
விடங்கப் பெருமான் முன்பு
சென்று தொழுது துதித்து வாழ்த்து
திருமாளி கைவலகு செய்துபோந்தார்....''

எனக் குறிப்பிடுகிறார். சுந்தர மூர்த்தி நாயனாரின் காலமான கி.பி. 9ஆம் நூறறாண்டில் வீதி விடங்கப் பெருமானுக்குத் தனித்த திருக்கோயில் இருந்தமையை அறிகிறோம். கி. பி. 8-10 ஆம் நூற்றாண்டு வரை இத்திருக்கோயிலில சோழ மன்னர்களைப் பற்றிய கல்வெட்டுகள் ஒன்றிரண்டே கிடைத்தமையால் கல் வெட்டுகள் வாயிலாக வீதி விடங்கனைப் பற்றி அறிய முடிய வில்லை.

பிற்காலச் சோழர்கள் காலத்தில்....

இராஜேந்திர சோழனின் அன்புக் காதலி பரவை நங்கையால் வீதிவிடங்கப் பெருமானின் திருக்கோயில் கற்றளியாக எடுக்கட் பட்டதோடனறி 26,643 கழஞ்சுப் பொன்னால் விமானமும் கருவறையின் சுவர்களும் பொற்றகடு போர்த்தப்பட்டதை முன்பே கண்டோம். 42,000 பலம் எடை உள்ள செம்பினால் வீதிவிடங்கத் தேவரின் கர்ப்ப அறைக்கதவுகளுக்கும் மண்டபத்தின் தூண்களுக்கும் தகடு போர்த்தப்பட்டது. இப்பெண்ணரசி ஆயிரக்கணக்கான கழஞ்சு எடையுள்ள பொன் அணிகளும் பாத்திரங்களும் அளித்துள்ளாள் இவள் அளித்த 428 முத்துக்களும் 7 மாலைக்கற்களும், 36 உயரிய வைரக் கற்களும் எணணற்ற மரகதக் கற்களும் வீதிவிடங்கனின் திருமேனியை அலங்கரித்தன. வீதிவிடங்கனின் சந்நிதியில் ''பச்சைபாவை உமைநங்கை'' ''பாவை

சரியா முலைநங்கை'' எனற இரு பாவை விளக்குகளையும், 15,579பலம்எடையுள்ள 28 வியக்கத்தக்கக்குத்துவிளக்குகளையும் வைகசச் செய்தாள். கற்றளியாக மாற்றப் பட்டதோடு குட முழுக்கு விழாவன்று உடையார் ஸ்ரீராஜேந்திரதேவரும் பரவை நங்கையும் திருவீதியில் தேரில் பவனிவந்திறங்கி இப்பெருமானைத் தரிசித்தார்களாம். தாங்கள இருவரும் தரிசித்து நின்ற இடத்தில் அப்பொன்னாள் நினைவாக குத்துவிளக்கு ஒன்றினையும் வைத்தனா இதனை — ''உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவரும் அணுக்கியர் பரவைநங்கையாரும் நிற்குமிடங் தெரியும் குத்து விளக் கொன்றும்'' என்று வீதிவிடங்கன் முன்பு வைக்கப்பட்ட விளக்கு பற்றி கல்வெட்டொனறு கூறுகிறது.[2]

முதலாம் ராஜேநதிரனாலும், அணுக்கியர் பரவைநங்கை யாலும்எந்தஅளவுக்கு வீதிவிடங்கப் பெருமான் போற்றப் பட்டாரென்பதைக்கல்வெட்டுகள் முழுதும் படிக்கும்போது மெய்சிலிர்க்கத்தான் செய்யும்.

தியாகராஜ சுவாமியின் கருவறையின் வடபுறச்சுவரில் உள்ள இராஜேந்திரசோழனின் எட்டாம்ஆட்சியாண்டுக்கல்வெட்டொன் றில்[3] கங்கை கொண்ட சோழபுரத்தைச் சேர்ந்த வேளான் செய்ய பாதம் என்பவன் விலை உயர்நத மணியாரம் ஒன்றினை வீதி விடங்க தேவரின் தேவியான சிவகாமசுந்தரிக்குப் பூட்டியதாகக் கூறப்பட்டுள்ளது,

. . . . பொன்னார மணி ஆரம் பூட்டினான் மின்னாரும்
திங்கையா வேல் செய்யபாதம் செழுமுகில் போல்
வண கையா னகமாக கையாரமன்
மெம்புகழ் ஆரூர் வீதி விடங்க பெருமான் பெதேவி சிவகாம
சுந்தரிக்கு வாகி அனிதருமாக்களூர் மன் செய்ய பாதம் அணி
ஆரம் பூட்டினான். . . . . . .''

இங்கு வேளான் செய்யபாதம் மணிஆரம் பூட்டியதாக கூறப்படும் தேவி வீதிவிடங்கப் பெருமானுக்கு அருகில் குழந்தை முருகன் இவர்களோடு அமர்ந்த நிலையில் இருக்கும் தேவியல்ல. இங்கு சிவகாம சுந்தரி எனக் குறிப்பிடப்பட்டுள்ளதால் சோமாஸ்கந்தர் திருமேனிகளோடு தனித்து, நின்ற கோலத்தில் உள்ள அம்மனின் செப்புத் திருமேனியே ஆகும். எல்லாத் திருக்கோயில்களிலும் சோமாஸ்கந்தர் செப்புத் திருமேனிகளோடு சிவகாம சுந்தரியின் செப்புத் திருமேனியும் போற்றப்படுவது மரபாகும்.

மேற்குறித்த இதே கல்வெட்டில 27-வது வரியில் ''வீதி விடங்கதேவர் நம்பிராட்டியார்'' எனக் குறிப்பிடப்பட்டுளளது. இது அமர்ந்துள்ள அண்ணலின அருகே வீற்றிருக்கும் உமையவ ளாகும். எனவே இராஜேந்திரசோழன் காலத்தில் வீதிவிடங்க தேவரின் செப்புத்திருமேனிகளின் அமைப்பும் அவைகளுக்குரிய பெயர்களையும் தெளிவாக அறியமுடிகிறது.

இத்தகைய புகழ் வாய்ந்த கல்வெட்டுகளில் இப் பெருமான் பெயர் 'வீதிவிடங்கன்' என்றே குறிப்பிடப்படுகின்றன. தியாகராசர் எனற பெயர் எந்த ஒரு இடத்திலும் குறிப்பிடப் படவில்லை சோழர் கால வடமொழிக் கல்வெட்டுகள் இரண்டில் ஆரூர் இறைவனின் பெயர்களாகப 'பூர்வாரூர் வாசி' எனவும் 'ஸ்ரீ ஆரூராதிபஸய' என்றும் குறிப்பிடப்படுகின்றன.

இராஜாதிராஜனுடைய கல்வெட்டொன்றில்[4] இவனது ஆட்சிக் காலததிலும் உயிர்வாழ்ந்த பரவையார் வீதிவிடங்கத் தேவருக்கு நிலம அளித்ததைக் குறிப்பிடுகிறது. மேலும் இதேக் கோயிலின் கருவறையில் உள்ள பிறிதொரு கல்வெட்டு[5] இராஜாதி ராஜன் தன்னுடைய 31-ஆம் ஆட்சியாண்டில் உடையார் வீதிவிடங்கத் தேவரின முன்புள்ள பகுதி முழுவதையும் பொற்ற கடுகளால் போர்த்துவதற்காக நேரிடையாக ஆணையிட்டதையும், இவ்வாணை இவனது அதிகாரி ஒருவனால் நிறைவேற்றப்பட்ட செய்தியையும் அறிவிச்கிறது.


முதற் குலோத்துங்கனுடைய கல்வெட்டொன்று[6] ''திருவாரூர் உடையார் வீதிவிடங்கத் தேவர் தேவாசிரியனில் எழுந்தருளியிருந்த போது புக்கதுரை வல்லவத் தலைக் கோலியை ஆட்டங் கண்டருளா நிற்க'' – என்று கூறுகிறது. எனவே வீதி விடங்கப் பெருமானின திருமேனி விழாக்காலங்களில் தேவாசிரிய மண்டபத்தில் எழுந்தருளப்படு மென்பதை அறிய முடிகிறது. மேலும் இதனைப் பிறிதொரு சோழ மன்னன் கல்வெட்டொன்றும் ''உடையார் வீதி விடங்கத் தேவர் தேவாசிரியன் திருக் காவணத் தே எழுந்தருளியிருந்து'' எனக் கூறி தேவாசிரிய மண்டபத்தில் எழுந்தருளுவதை வலியுறுத்துகிறது. இவ்வாறு தேவாசிரியனில் எழுந்தருளிவிக்கப்படும் போது தலைசிறந்த நடன மகளிரின் நடனங்கள் மற்றும் கூத்துக்கள் நடந்தமையையும் பிற கல் வெட்டுகள் செப்புகின்றன. இவ்வாறு நடைபெற்ற கூத்துகளில் ஒன்றாகப் பூங்கோயில் நம்பி என்பான் ''விரணுக்க விஜயம்'' எனும் கூத்தை வீதிவிடங்கன் முன்பாடியதாக அறிகிறோம்.

விக்கிரமசோழனது சல்வெட்டொன்றில்[7] உடையார் வீதி விடங்க தேவரே மனுநீதி சோழனது சரித்திரத்தைக் கூறுவது போல வெட்டப்பட்டுள்ளது. மூன்றாம் குலோதுங்கனது கல் வெடடொன்று "உடையார் வீதிவிடங்கப் பெருமான் தைப்பூசத் திருநாள் ஆட்டத்து வெளியில் திருவுலா செய்தருளா நிற்க" என்று கூறுகிறது. எனவே தைப்பூசத் திருநாளன்று இப்பெருமானின் திருமேனி திருவீதியில் பவனிவந்தமையும் அறிகிறோம்.

அருட்குழவியும அன்னை உமையும் அருகிருக்க அமர்ந்த பிரானாகிய இவ்வீதி விடங்கனின் பெயரை மக்கள் தங்கள் திருநாமங்களாகப் பெருமையுடன் கொண்டனர். இதற்கும் திருவாரூர் கல்வெட்டுகளே சான்று பகர்கின்றன. 11-12 ஆம நூறறாண்டில் திருவாரூர் ஊர்ச்சபையின் மத்தியஸ்தனாக "திருவாருர் கிழான் பரவை வீதிவிடங்கன்" என்பவன் இருந்தான் என்பதை அசலேசத்திலுள்ள கல்வெட்டும் முதற் குலோத்துங கனின் கல்வெட்டில் வீதிவிடங்க சீரெட்டி என்பான் பெயரும் விக்கிரமசோழன் கல்வெட்டில் கௌசிகன் அளியன் வீதிவிடங்கன் என்பவனும, மூன்றாம குலோத்துங்கன கல்வெட்டில வெள்ளாளன் மாராய மங்கலமுடையான் வீதிவிடங்கன் என்பவனது பெயர்களும் குறிப்பிடப்பட்டுளளமை நோக்குதறகுரிய ஒன்று.

தியாக வினோதன்.

தியாகராஜன் என்ற பெயர் கல்வெட்டுக்களிலும் தேவார இலக்கியங்களிலும் காணப்படாவிட்டாலும் தியாக வினோதன் என்ற பெயரை இத்திருகோயில் கல்வெட்டுகள் சுட்டுகினறன. முதற் குலோத்துங்கன் காலத்தில் இத்திருக்கோயிலில் இருந்த பண்டாரத்திற்கு (கருவூலம்) "தியாக வினோதன் பண்டாரம்" என்ற பெயர இருந்திருகிறது. இதனைத் "தியாக வினோதன் பண்டாரத்து ஒடுக்கின பொன் இருபத்தி நாற் கழஞ்சரையும்" எனக குறிப்பதிலிருந்து அறியலாம். இதே போன்று புழக்கத்தில் இருந்த எடைகளில் ஒன்று "தியாக வினோதன் மாடை" என அழைக்கப்பட்டதாகப் பிறிதொரு சோழ மனனனின் கல்வெட்டு எடுத்தியமபுகிறது. இவை மட்டுமின்றி தனி நபர்களும் தியாக வினோதன் என்ற பெயரைக்கொண்டு விளங்கினர். திருமந்திர ஓலை தியாகவினோத மூவேந்த வேளான் என்பான் மூன்றாம் குலோத்துங்கனின உயர் அதிகாரியாய் பணியாற்றியிருந்திருக் கிறான். மேலும் தியாகவினோதக் கடிகை மாராயன், தியாகத்



தியாகராஜர் விமானம்



அசலேசம் தூதை

தரையன் தியாக விநோதத் தலைக்கோலி (நாட்டியப்பெண்) தியாக வல்லி வேளைக்காரர் போன்ற பெயர்களும் கல்வெட்டு களில் காணப்படுகின்றன.

இவை அனைத்தையும் தொகுத்து நோக்கும் போது கி. பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்தே வீதிவிடங்சர்க்கு வழிபாடு நடத்தப் பட்டமையும், செங்கற் கோயிலாக இருந்து பின்பு பதினோராம் நூற்றாண்டில் கற்கோயிலாக எடுக்கப்பட்டவையும் இராஜேந்திர சோழன் காலத்தில் இத்திருக் கோயிலில் உள்ள இறைவருவங் களில் வீதி விடங்சனுக்கே மிகமுக்கியத்துவம் கொடுக்கப்பட்டதை யும் அறிகிறோம். பின்பு எல்லாச் சோழ மன்னர்கள் காலத்திலும் விழாக்காலங்களில் இப்பெருமானின் திருமேனி உற்சவமூர்த்தி யாய் எடுத்துச் செல்லப் பட்டமையும், தேவாசிரியனில் எழுந் தருளச் செய்யப்பட்டு இசையும் கூத்தும் நடைபெற்றன என்பதை யும் தெளிவாக அறிகிறோம். தியாகராஜன் என்ற சொல்லாட்சி காணப்படாவிட்டாலும் தியாகவினோதன் என்ற பெயர் பொது வாக இறைவனுக்கு இருந்திருக்கிறது என்பதையும் அறியமுடிகிறது மேலும் வீதிவிடங்கப்பெருமானின் திருமேனி தற்போது அர்த்த மண்டபத்தில் இருப்பது போலல்லாமல் கருவறையில்தான் இருந்திருக்க வேண்டும் என்பதையும் கட்டடக்கலை மற்றும் சில அச்சங்களால் உணர முடிகிறது.

இலக்கியங்களிலும் கல்வெட்டுக்களிலும் வீதிவிடங்கனைக் கண்டோம். இனி சிற்பங்களில் வீதிவிடங்கனின் திருமேனி எவ்வாறெல்லாம் படைக்கப்பட்டுள்ளது என்பது இவ்வழிபாடு பற்றிய ஆய்வின் முக்கிய அம்சமாகும். தேவாசிரிய மண்டபம், திருவிழாக்காலங்களில் வீதிவிடங்கப் பெருமான் எழுந்தருளும் சிறப்பு மண்டபமாகத் திகழ்ந்திருக்கிறது என்பதைப் பலகல்வெட்டு களில கண்டோம். அவ்வாறு அப்பெருமான் அம்மண்டபத்தில் வீற்றிருக்கும் பகுதி மிகச் சிறந்த சிற்ப அமைப்புகளுடன் சோழப் பெருமன்னர்களால் அமைக்கப்பட்டுள்ளது. இன்று நாம் காணும் அப்பகுதியின் திருப்பணி மூன்றாம் குலோத்துங்கன் காலத்தியதாக இருக்கலாம் என யூகிக்க முடிகிறது. இதற்குக் காரணமாக அவனது காலத்துச் சிற்ப அமைதியுடைய தூண்களே இம்மேடைப் பகுதியை அலங்கரிக்கின்றன சிறப்புடன் திகழும் இப்பகுதியின் முன்புறத்துக்கூரையை யொட்டி உட்புற விதானத்தை அழகுமிக்க சில சிற்பங்கள் அலங்கரிக்கின்றன. இதில் நடுநாயகமாக சோமாஸ்கந்தர் திருமேனி செப்புத்திருமேனிகளில உள்ளது

போன்றே வழங்கப்பட்டுள்ளது. இதன் அருகே உமை அன்னை, சிவகாமியாய் நிற்கும் கோலமும் காணப்படுகிறது. சிவபெருமானின் தாண்டவத்துடன் நடனமகளிர் பலர் நடனமாடும் சிற்பங்களும் உள்ளன,

இவற்றை நாம் காணும் போது கல்வெட்டுக்களிலே வீதி விடங்கப் பெருமாள் இம் மண்டபத்தில் வீர சிம்மாசனத்தில் அமர்ந்து நடனம்கண்டார் என்று அறியும் செய்திகள் எல்லாம் நம் கண் முன் நிறுத்துவது போன்றே உள்ளது இச் சிற்ப தொகுதி. இம்மண்டபத்தின் நடுநாயகமாகச் செதுக்கப் பட்டிருக்கும் இச் சிற்பத்தில் சோமாஸ்கந்தமூர்த்தி எந்த விதமறைப்புகளோ, அல்லது ஆபரண அலங்காரங்கள் பெற்றோ காணப்படவில்லை. இதிலிருந்து சோழர்கள் காலத்தில் இம் மண்டபத்தில் எழுந்தருளிவிக்கப் பட்ட வீதி விடங்கப் பெருமாள் திருமேனி இன்று நாம் (முகம் மட்டும் தெரியும் வண்ணம் மூடிய நிலையில்) வழிபடும் நிலையில் இல்லாமல் சாதாரணமாகத்தான் இருந்திருக்கிறது என்பது தெளிவாகிறது. மேலும் இதனை வலியுறுத்தும் வண்ணம் பிறிதோர் சிற்பத் தொகுதி சந்திரசேகரர் மண்டபத்து உத்திரத்தில் காணப்படுகிறது,

சந்திர சேகர மண்டபம் முதல் திருச் சுற்று மாளிகையின் வடகீழ்த் திசையில் உள்ளது. தெற்கு நோக்கிய இம் மண்டபத்தின் விதானத்தையொட்டிய விளிம்பில் உத்திரத்தில் மூன்று பக்கங்களிலும் ஓர் புராண காவியம் சிற்பமாகச் செதுக்கப் பட்டுள்ளது. 15 சிற்பத் தொகுதிகள் அடங்கி உள்ள இப்புராண காவியம் தியாகராஜர் வழிபாட்டின் (புராண அடிப்படையில்) முதல் கட்டமாகும். இதுவே பின்பு மேலும் புராணக் கதை அமைப்பில் வளர்ச்சி பெற்று சில மாறுதல்களுடன் மூகுகுந்தன் புராணமாக மாறியுள்ளது. மேலே குறிப்பிட்ட இச் சிற்ப புராணக் காட்சியை விரிவாகக் காண்போம்.

முதல் காட்சியாக திருமால் வேள்வி புரிவதாகவும், அதனை முனிவர்கள் ஆசீர்வதிப்பதாகவும், வேள்வித்தீயிலிருந்து விலலொன்று புறப்படுவதாகவும் அதைத் திருமால் பெறுவதாகவும் உள்ளது. அடுத்து வேள்வியில் இருந்து பெறற வில்லின் பெருமையால் செருக்குறற திருமால் தேவர்களைத் தாக்குவதாகவும் பின்னர் களைப்புற்ற மாலவன் நாணேற்றிய வில்லை புற்று ஒன்றின் அருகில் வைத்து அதன்மேல் தன் தலையைச் சாய்த்த வண்ணம் உறங்குவதாக அமைந்துள்ளது.

இவ்வாறு உறங்கிய மாலவனின் கொடுமை பொறுக்காத தேவர்கள் கறையான்உருப்பெற்று வில்லின் நாணைத்துண்டிக்கவே வில்நிமிர மாலவனின் தலைதுண்டிக்கப்பட்டதாகவும். பின்னரே சிவபெருமான் அப்புற்றில் புகுந்து புற்றிடங்கொண்டான் எனத் திருமேனி பெற்றதாகவும் புராணங்கள் கூறுகின்றன.

இதனை எடுத்துக்காட்டும் வண்ணம் அடுத்த சிற்பத் தொகுதிகள் உள்ளன. தலையிழந்த மாலவனுக்கு பிரமம் தலைகொடுத்து முடி சூடுவதாக ஒரு சிற்பமும். பின்பு திருமால் சிவலிங்க பிரதிஷ்டை செய்து பூஜிக்கவே,சிவபெருமான் உமையுடன் விடை மேல் காட்சி கொடுத்து திருமாலை ஆசீர்வதிப்பதாகவும், பின்னர் திருமால் சிவலிங்க பூஜை நடத்துவதாகவும் பல சிற்பங்கள் உள்ளன,

மாலவனின் பூசனைகளால் மகிழ்ந்த சிவபெருமான் மான் முழுஏந்திய நிலையில் அழகிய திருவாசியுடன் கூடிய சோமாஸ் கந்தர் திருமேனி ஒன்றினை திருமாலுக்கு அளிக்க அதனைப் பெற்று மாலவன் பூஜிப்பன சிற்பங்கள் விளக்குகின்றன. இந்திரனின் வேண்டுகோளுக்கிணங்க மாலவன் தான் பெற்ற சோமாஸ் கந்த மூர்த்தியை நான்முகனிடம் அளிக்கிறார். நான்முகன் ஒரு தட்டில் திருவாரூர் கோயில்களான 6 திருக் கோயில்களையும், மறு தட்டில் உலகில் உள்ள எல்லா திருக் கோயில்களையும் வைத்து நிறுக்க 6 கோயில்கள் உள்ள தட்டே எடை மிகுந்திருந்தது.

இவ்வாறு எடை மிகுதியில் சிறந்த தலம் ஆரூர்தான் எனக் கண்டு, தான்பெற்ற சோமாஸ்கந்த மூர்த்தியை புற்றிடங் கொண்டாரது திருக்கோயிலின் அருகில் வைத்ததாகவும், இதனை அடியவர் ஒருவர் கண்டு உச்சிமேற் கைகுவித்து வணங்குவதாகும் உள்ளது. எழில் மிகுந்த இச்சிற்பங்களே தியாகப்பெருமானின் புராணவழிபாட்டுஅடிப்படையில்தொடகக்காலக் சிற்பங்களாகும்.

சந்திர சேகரமண்டபத்தில் காணப்படும் இச்சிற்பங்களில் சோமாஸ்கந்தர் திருமேனி இன்று நாம் காண்பது போல் அலங்காரங்களால் உடல் மறைக்கப்படாமல் மற்ற திருக்கோயில் களில் உள்ள செப்புத்திருமேனிகளை யொத்துக்காணப்படுகிறது, மேலும் இறுதியாக பூங்கோயிலின் அருகில் உள்ளதாகக்காட்டப் படும் சிற்பத்தில், சோமாஸ் கந்தர் சிலை, இன்று உள்ளது போன்றே சிம்மாசனத்தில் தூண்களும், விதானங்களும் பெற்று

காணப்படுகிறது. இங்கு குரங்கு முகம் பெற்ற முசுகுந்தன் காணப்படவில்லை. சப்தவிடங்கர்களில மற்ற விடங்கர்களோ அல்லது அவை பற்றிய எந்த ஒரு காட்சியோ சிறபங்களில் வடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்க ஒன்று.


இச்சிற்பத் தொகுதிகளையும் மண்டபத்தின் கட்டுமான அமைப்பையும் நோக்கும் போது சோழர் காலத்திற்கு பிற்பட்டு (13-ஆம் நூற்றாண்டுக்கு பின்பும்) விஜய நகர ஆட்சிக்காலத்தை ஒட்டி அமைந்த ஓர் கலையம்சமாகவே காணப்படுகிறது. பிற் காலத்தில் கூறப்படும் முசுகுந்தனது புராணத்திலிருந்து சற்று வேறுபட்ட நிலையில் இச்சிற்பத் தொகுதி அமைந்துள்ளது. வீதி விடங்கரின் திருமேனி பற்றிய தியாகராஜர் புராணக்கதை இக்கால கட்டத்தில்தான் ஏற்பட்டிருக்க வேண்டும், மேலே குறிப்பிட்டுள்ள சிற்பத் தொகுதியில் சோமாஸ்கந்தர் திருமேனி மூடி மறைக்சப்படாமல் தேவாசிரிய மண்டபத்தில் உள்ளது போன்றே காணப்படுகிறது. முகங்கள் மட்டும் தெரியும் வண்ணம் மற்ற அங்கங்கள் மூடப்பட்டு வழிடடும் இன்றைய வழிபாட்டு நெறி கி.பி.17-ஆம் நூற்றாண்டில தஞ்சையை ஆளத்தொடங்கிய மராட்டிய மன்னர்கள் காலத்திலிருந்துதான் எழுந்தது என்பதைக் சில வரலாற்றுக் சான்றுகளால் உணரலாம்.

செப்பேடுகளிலும் கல்வெட்டுக்களிலும் .....

ஆரூர் திருக்கோயிலுக்கென மன்னர்களாலும் மக்களாலும் அளிக்கப்பட்ட பல செப்பேடுகளில் ''தியாகராஜ சுவாமியார்'' என்ற பெயர் காணப்படுகிறது. இவை அனைத்தும் தஞ்சை மராட்டியாகள், இராமநாதபுரம் சேதுபதி மன்னர்கள், மற்றும் குறுநில மன்னர்கள் சிலரால் வழங்கப்பட்டதாகும். இத்தகைய செப்பேடுகள் வரிசையில் மிகவும் குறிப்பிடத்தக்க செப்பேடு ஷாஜி (கி.பி. 1684-1710) மன்னன் வழங்கியதாகும். கி. பி. 1694ல் வடிக்கப்பட்ட இச்செப்பேட்டில் தியாசராஜ சுவாமியின் திருவுருவம் அழகிய ஓவியமாக தீட்டபபடடுள்ளது. எழிலுறு மாணிக்க அரியணையில் உலம மற்றும குழந்தை முருகனுடன சோமாஸகந்தராக தியாசப் டெருமான் வீறறிருக்க, எதிரே ஷாஜி மன்னனும் அவனது சகோதரர்களான முதலாம் சரபோஜி, மற்றும துளஜா ஆகிய மூவரும் கை கூப்பி நிற்க இவர்களுடன் இச்செபபேட்டு அரசக்கட்டளையை நிர்வகித்த அருணாசலப் பண்டாரமும், ஓர் அடியவரும் காணப்படுகின்றனர். செபபேடு



காகித சுவடி ஓவியங்களில் தியாகராஜர்







சந்திரசேகரர் மண்டபத்து சிற்பத்தில்
இந்திரனும், சோமாஸ்கந்தரும்




மேலைக் கோபுரத்தில் ஆடற்சிற்பம்



செப்பேட்டு ஓவியத்தில் தியாகராஜர்



காகிதச் சுவடி ஓவியத்தில் தியாகராஜர்



மேற்கு கோபுரமும். கமலாம்பாள் திருக்கோயிலும்

களில் இதுவே ''தியாகராஜ சுவாமி'' என்ற பெயரை குறிப்பிடும் முதல் செப்பேடாகும். மேலும் ஷாஜி மன்னன் காலத்தில் கூட தியாகப் பெருமானின் திருமேனி மூடி வழிபடாமல் சோமாஸ் கந்தராகவே வழிபடப்பட்டது என்பது தெளிவாகிறது.

இதனையடுத்து கி. பி. 1733-ல் இரகுநாத மேயக்கன் கோபாலர் என்ற குறுநில மன்னன் அளித்த இரண்டு செப்பேடு களிலும் ஸ்ரீ தியாகராஜர் என்ற பெயர் காணப்படுவதோடு ஒன்றில் தியாகப்பெருமானின் திருவுருவம் ஓவியமாகத் தீட்டப் பட்டுள்ளது. இதில் இறைவன், இறைவியின் திருமுகங்கள் மட்டுமே தெரியும் வண்ணம் அலங்கரிக்கப்பட்டுக்காணப்படுகிறது. இது போன்றே கி. பி. 1750ல் இராமநாதபுரம் மன்னரான இரகுநாத சேதுபதி முத்து வடுகநாத பெரியஉடையதேவர் என்பவர் அளித்த செப்பேட்டிலும் மூடிய நிலையிலேயே தியாகப் பெருமானின் உருவம் ஓவியமாக உள்ளது இதில் பட்டர் ஒருவர் அடுக்குத்தீபம் காட்டி பூஜைசெய்வது போன்று காட்டப்பட்டுள்ள தோடு ''தியாகராஜர்'' என்ற குறிப்பும் சாசனப் பகுதியில் காணப்படுகிறது. இவை மட்டுமின்றி கி.பி. 1740ல் வடிக்கப்பட்ட அறந்தாங்கி மன்னன் முத்து வணங்காமுடித் தொண்டைமானின் செப்பேடும், கி. பி. 1722-ல் எழுதப்பட்ட முத்து விஜயரகுநாத சேதுபதியின் செப்பேடும், கி.பி. 1821ல் தனி நபர்கள் சிலரால் அளிக்கப்பட்ட ஆரூர் செப்பேடு ஒன்றும் ''ஸ்ரீ தியாகராஜசுவாமி என்ற பெயரையே குறிப்பிடுகின்றன.

கி. பி. 1717ல் வெட்டுவிக்கப்பட்ட தஞ்சை மன்னன் முதலாம் சரபோஜியின் கல்வெட்டிலும் (ஸ்ரீமத் தியாகராஜ சுவாமியார் '' என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

ஓவியங்களில் தியாகேசன்

சந்திர சேகர மண்டபத்துச் சிற்பங்கள் கூறும் கதை போன்று தேவாசிரிய மண்டபத்து உட்புறக்கூரையில் முசுகுந்த சக்ர வர்த்தியின் புராணக்கதை முழுவதும் ஓவியமாக எழுதப்பட்டு உள்ளது. சுமார் 250 வருடங்களுக்கு முற்பட்ட இந்த ஓவியத் தொகுதியில் ஒவ்வொரு காட்சியின் கீழும் தமிழில் விளக்கங்கள் எழுதப்பட்டுள்ளன. இவ்வோவியங்கள பற்றி மிகவிரிவாக ''பேசும் பொற்சித்திரங்கள்'' என்ற தலைப்பின் கீழ் காண்க.

எழில்மிகு இவ்வோவியக் காட்சித் தொகுப்பு தியாகராசர் பற்றிய புராணக் கதையின் இரண்டாவது கட்ட நிலையாகும், இது சந்திரசேகர மண்டபத்துச் சிற்பத்தில் கூறப்படும் புராணக் கதையிலிருந்து வேறுபட்டும், கால வளர்ச்சியினால் கதை அமைப்பு வளர்ந்தும் காணப்படுகிறது.

முசுகுந்தன் எனும் குரங்கு முகம் படைத்த ஒரு மன்னன் அயோத்தியாபுரியில் கோசலையினோடும், நவவீரர்கள் எனும் ஒன்பது தம்பிமார்களுடனும் ஆட்சி புரிந்து வந்தபோது, வாலா அசுரன் என்பவனது தாக்குதலுக்கு இலக்கான தேவேந்திரன் முசுகுந்தனின் உதவியை நாடினான், முசுகுந்தனும் உதவிக்குச் சென்று வாலா அசுரனை அழிக்கிறான், இதனால் மகிழ்வுற்ற தேவேந்திரன் முசுகுந்தனை இந்திரலோகம் அழைத்துச் சென்று மரியாதைகள் பல செய்து உபசரிக்கும் போது, இந்திரன் பூஜித்த ''தியாகராச மூர்த்தியை'' முசுகுந்தன் தனக்கு அளிக்குமாறு வேண்டினான், இந்திரன் தியாகரை அளிக்க மனமின்றி விசுவ கர்மாவை அழைத்து தியாகரைப் போன்ற ஆறு மூர்த்திகளை செய்து, தியாகருடன் வைத்து வேண்டியதை எடுத்துச் செல்லும் படி கூறினான், தியாகர் முசுகுந்தன் கனவில் தோன்றி கூறியபடி உண்மையான மூர்த்தியை அடையாளம் கண்டு கொண்டமையால், இந்திரன் அனைத்து மூர்த்திகளையுமே முசுகுந்தனுக்குப் பரிசாக அளித்து விடுகிறான்.

பின்பு முசுகுந்தன் மற்ற மூர்த்திகளைச் செய்த விசுவ கர்மாவை அழைத்து பூலோகத்திற்குச் சென்று எந்தத் தலத்தில் தியாகரைத் தாபிக்கலாம் என அறிந்து வருமாறு அனுப்பினான். விசுவகர்மாவும் பூலோகம் வந்து திருவாரூரில் அமர்ந்து கையில் துலாக் கோலைப் பிடித்து (தராசு) ஒருதட்டில் திருவாரூரையும் மறுதட்டில் பூவுலகத்தையும் நிறுக்கவே, எடைமிகுதியாக திருவாரூர் உள்ள தட்டே திகழ்ந்தது. பின்பு தேவலோகம் சென்று இதனை முசுகுந்தனிடம் கூற அதன்படி தியாகராச சுவாமியை திருவாரூரில் தாபிக்கிறான்.

ஓவியத்தில் கூறப்படும் இப்புராண காவியத்தில் பிறிதோர் புராணக்கதையும் இணைத்துச் சொல்லப்பட்டுள்ளது. அதில் திருமால் தனக்கு புத்திரன் வேண்டி யாகம் செய்யவும், அதன்படி மன்மதன் திருமாலுக்குக் குழந்தையாய்ப் பிறக்கிறான். தேவியை

வணங்காமல் யாகம் மேற்கொண்டதால், சக்தியின் சாபத்துக்குத் திருமால் ஆளாகிறார். பின்பு சாப நிவர்த்தி பெறச் சிவனைப் பூஜிக்கவே சிவபெருமான் மகிழ்ந்து தான், உமை, குழந்தை முருகன் மூவரும் அமர்ந்துள்ள கோலமான சோமாஸ்கந்தர் திருமேனியைத் திருமாலுக்கு அளிக்க அதனைத் திருமால் பாற் கடலில் சென்று தனது மார்பில் வைத்து பூசனை செய்தார். இதை அறிந்த தேவேந்திரன் திருமாலிடம் இருந்து தியாகராசரைத் தான் பெற்றுப் பின்பே முசுகுந்தனுக்கு அளிப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

மேலே கூறப்பட்டுள்ள சிற்பங்கள் கூறும் புராணக்கதையையும், சித்திரங்கள் கூறும் புராணக் கதையையும் தொகுத்து நோக்கும் போது முற்றிலும் வேறுபட்ட பல்வேறு கருத்துக்கள் காணப்படுகின்றன. முன்னதில் திருமால் தனுசு வேண்டி யாகஞ்செய்து சிவனருள் பெறுகிறான். பின்னதில் புத்திரன் வேண்டி யாகம் செய்த பின்பு தான் சோமாஸ்கந்தரைப் பெறுகிறான். சிற்பம் கூறும் காவியத்தில் திருமாலின் தலை இழக்கப்படுவதும் நான்முகன் அருளால் தலையைப் பெற்ற பின்பு சோமாஸ்கந்தரை சிவனிடம் இருந்து பெறுவதும், கூறப்பட்டுள்ளது. நான்முகன் துலாத்தட்டில் நிறுத்தி ஆரூரைச் சிறந்த தலம் எனத்தேர்ந்தெடுக்கிறான். ஓவியத்திலோ விசுவகர்மா துலாத்தட்டு நிறுத்தி ஆரூரைத் தேர்ந்தெடுக்கிறான். சிற்பக்காவியத்தில் முசுகுந்தன் இல்லை, புற்று வழிபாடு கூறப்படுகிறது.

இரண்டு காவியங்களிலுமே கரு ஒன்றாய் இருப்பினும், இரண்டுமே இருவேறு காலகட்டங்களில் தோன்றிய கதைகளாகும். சிற்பத்தில் காட்டப்படும் புராணம் ஆரம்பநிலையாக விஜயநகர மன்னர்கள் காலத்தில் போற்றப்பட்ட ஒன்று என்பதை வரலாற்றுச் சான்றுகளோடு உணர முடிகிறது. ஓவியத்தில் கூறப்படும் புராண காவியமோ கதையமைப்பில் முழு வளர்ச்சி பெற்று தஞ்சை மராட்டிய மன்னர்களின் காலத்தில் பெரிதும் போற்றப்பட்டது என்பதைத் தெளிவாக அறிய முடிகிறது.

ஓவியத்தில் தியாகராச சுவாமி மூடி வழிபடும் (அலங்காரங்களால் மறைக்கப்பட்டு) நிலையைக் காணமுடிகிறது. இதே போன்று தாராசுரம் இராஜராஜேஸ்வரம் திருக்கோயிலின் விமானத்தின் மேற்குப் பகுதியில் காட்டப்பட்டுள்ள ஆரூர்

சிற்பங்களின் (சுதைச் சிற்பம்) தியாகப் பெருமான் அலங்காரங்களால் மறைக்கப்பட்டே காணப்படுகிறார். இச் சுதை சிற்பங்களும் மிகவும் பிற்காலத்திய சிற்பங்களாகும்.

திருமாலின் மார்பில் ஆரூர் இறைவன் அமர்ந்துள்ளமையால், அம்மாலவனின் மூச்சுத்துடிப்பால் மேலும் கீழும் இவ்விறை உருவம் செல்லும் போந்தே ''அஜபா நடனம்'' எனவும் குறிக்கப் படுகிறது.

இதுகாறும் கண்ட பழந்தமிழ் இலக்கியங்களைத் தொகுத்து நோக்கும்போது மூவர் முதலிகளான அப்பர், சம்பந்தர்' சுந்தரர் போன்றவர்கள வீதிவிடங்கனின் திருமேனி பற்றிய புராணச் செய்திகளை தம் தேவாரப் பதிகங்களில் எந்த ஒரு இடத்திலும் குறிப்பிடவில்லை. மனுவின் சரித்திரமும், திருநகரச் சிறப்பாக ஆருரின் அத்தனை அம்சங்களையும் குறிப் பிடும் சேக்கிழார் பெருமானும் கூட இதனை எடுத்துரைக்க வில்லை.

பிற்காலத்தில் (17ஆம் நூற்றாண்டில்) திருவாரூர் நான்மணி மாலை பாடிய குமரகுருபர சுவாமிகள்,

''சிங்கஞ் சுமந்த செழுமணித் தவிசிற்
சுங்குலும் பகலுங் கலந்தினி திருந்தாங்
கிடவலம் பொலிந்த விறைவியும் நீயும்
நடுவண் வைகு நாகிளங் குழவியை
ஒருவிரினெரு விருள்ள நெக்குருக.....''என

இளமுருகு உடனுறையும் அம்மையப்பனாகவே காட்டி தியாகர் என்று அழைத்து, தியாகராச சுவாமியின் பல்வேறு சிறப்பியல்புகளை காட்டுகின்றார். மிகப் பிற்கால இலக்கியங்களும், சம்ஸ்க்ருதம் மற்றும் மராத்திய புராண நூல்களுமே 'முசுகுந்தன் வரலாறு' பேசுகின்றன.

கி. பி. 13ஆம் நூற்றாண்டு இறுதிவரை உள்ள கல் வெட்டுக்களோ, சிற்பங்களோ தியாகராசர் என்ற பெயர் பற்றிக் குறிப்பிடவுமில்லை, மூடியவழிபாட்டுச் சிற்பத்தையோ காட்டவு மில்லை. மாறாக வீதிவிடங்கன் என்ற பெயரும் சோமாஸ் கந்தமூர்த்தி உருவமும் கல்வெட்டுகளிலும், சிற்பங்களிலும் காட்டப்பட்டுள்ளன.

கி. பி. 14 — 15 ஆம் நூற்றாண்டு சந்திரசேகர மண்டபத்து சிற்பத்தில் கூட சோமாஸ்கந்தமூர்த்தியாய்தான் சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது. இதில் முசுகுந்தன் காட்டப்படவில்லை. திருமாலின் தவ வலிமையால் சிவபெருமானிடம் இருந்து சோமாஸகந்தமூர்த்தியை பெறுவதாகவும், பின்னர் இந்திரன் பெற்று, துலாபாரம் நிறுத்தி, புற்றிடங் கொண்ட இறைவன் அருகில் சிம்மாசனத்துடன் உள்ளதாகவே காட்டப்பட்டுளளது.

இதுவே தொடர்ந்து பிற்கால ஓவியங்கள், புராண இலக்கியங்கள் ஆகியவற்றில் போற்றப்படுகிறது. எனவே இவ் வகை வழிபாட்டு நெறியும், முசுகுந்தன புராண வரலாறும் கி. பி. 15ஆம் நூற்றாண்டில் தொடங்கி கி. பி. 16, 17 ஆம் நூற்றாண்டில் முழுவடிவம் பெற்றது என்பதை வரலாற்றுச் சான்றுகளால் தெள்ளிதின் உணரலாம்.

இன்று தியாகராசர் திருக்கோயிலில் தியாகேசன் திருமேனி கருவறையில் இடம் பெறாமல் அர்த்த மணடபத்தில் உள்ள எழிலுறு சிம்மாசனத்தில் வைத்து வணங்கப்படுகிறது. கருவறை பூட்டப்பட்டு அணிகலன்களை வைக்கும் பாதுகாப்பு அறையாக மாற்றப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலை கற்றளியாக மாற்றிய இராஜேந்திர சோழன் காலத்தில் கருவறையினுள்தான் இத்திரு மேனி இடம் பெற்றிருக்க வேண்டும் என்பதை கருவறையின அடிடேக நீர்வெளியேறும் கோமுகக் கல்லினாலும், இராஜேந்திரனது கல்வெட்டுவரிகளான ''உடையார் வீதிவிடங்க தேவர் கோயில் குடத்திலும்''என்பதாலும் உய்த்துணரப் படுகிறது.

வழிபாட்டு நெறியில் மாறுதல்களும், பெயர் மாற்றமும், புராணக் கதைகளின் தோற்றமும கி. பி. 14ஆம் நூறறாண்டிற்கு பிறகே என்பதை கண்டோம். இம்மாறுதலகள ஏறபடக் காரண மாய் இருந்தது அன்றைய அரசியலில் ஏற்பட்ட மாறுதல்களே யாகும். கி. பி. 6-7 ஆம் நூற்றாண்டுகளில்தான், அமணம், புத்தம் போன்ற மதங்களின் பிடியிலிருந்து சைவம் பிழைத்து தழைத்தோங்கியது.இதற்குச் சமயகுரவர்களின் அருட்தொண்டே முக்கிய காரணமாய் அமைந்தது. அதன்பின் சோழப் பெரு மன்னர்களின் ஆட்சி கி.பி. 8 ஆம் நூற்றாண்டு தொடங்கி கி. பி. 13ஆம் நூற்றாண்டு வரை 450 ஆண்டுகளுக்கு மேலாக இடை வெளியின்றி செங்கோல் ஓச்சியது. இப்பெருமன்னர்கள் காலத்தில் ஆரூர் திருக்கோயிலையும், வீதிவிடங்கப் பெருமானையும்

கண்ணெனைப் போற்றினர். பின்பு பாண்டியமன்னாகளின ஆளுகையிலும் இத்திருக்கோயில் சிறப்பிடம பெற்றது.

கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் டெல்லி சுல்தானின் படைத் தலைவன் மாலிக்காபூர் என்பவன் பெரும் படையுடன் கிழக்கு கடற்கரையையொட்டிய தமிழகத்தின் உள்நாட்டில் புகுந்து கொள்ளையிட்டு சூறையாடினான். தில்லை போன்ற இடங்கள் இவனது தாக்குதலுக்கு உளளாகியது.பின்பு இவன் மதுரையையும் சூரையாடினான். இத்தாக்குதல்களால தமிழகத்து கோயில்கள் பலவும் சீர்கேடு அடைந்தன. அரிய கலைச்சிற்பங்களும், செப்புத் திருமேனிகளும், விலையுயர்ந்த ஆபரணங்களும் கொள்ளையடிக்கப்பட்டன. சமயப்பாதையில் ஓர் இருண்ட இடைக்காலம் தோன்றிற்று.

பின்பு 15-16 ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்தின் பொற் காலம் மீண்டும் விஜயநகரப் பெருமன்னாகளால் உதயமாயிற்று. இவவிருண்ட இடைக்காலம் எப்படி திருக்கோயில்களை பாதித்தது என்பதற்கு ஆரூர் திருக்கோயிலே ஓர் உதாரணமாகத் திகழ்கிறது. கி. பி. 884ல் தொடங்கும் சோழமன்னனின் கல்வெட்டிலே தொடங்கி கி.பி. 1342 ஆம் ஆண்டு பாண்டிய மன்னன் ஒருவனது கல்வெட்டுவரைத் தொடர்ந்து பல கல்வெட்டுகள், வரலாற்றையும்- இக்கோயில் பெற்ற ஏற்றத்தையும் தெளிவுற (பலகல்வெட்டுக்கள்வாயிலாகத்) தெரிவிக்கின்றன. இப் பாண்டியனது கல்வெட்டிற்குப பிறகு 100ஆண்டுகள் வரை இத் திருக்கோயிலில் எந்த ஒரு கல்வெட்டும் காணப்படவில்லை. பின்பு கி. பி. 1429ல் விஜயநகர மன்னர்கள் காலத்து வீரபூபதி உடையாரின் கல்வெட்டில் தொடங்கி பிற்காலம்வரை தொடர்ந்து நாயக்க மன்னர்கள் மற்றும் மராட்டிய மன்னர்களின் கல்வெட்டுக்களும் செப்பேடுகளும் கிடைத்துள்ளன,

இவற்றை கூர்ந்து நோக்கும் போது இடையில் ஒரு நூறு ஆண்டுகள் இத்திருக்கோயில் ஓர் இருண்ட காலத்தை சந்தித் துள்ளது என்பதைத் தெளிவாக உணரலாம். இவ்விருண்ட காலத்திற்குப் பின்பு சைவம் திரும்பவும் மலரத் தொடங்கியது. அப்போது முன்பு வீதிவிடங்கனாய் இருந்த சோமாஸ்கந்த திருமேனி – தியாகராஜன் என்ற பெயர் பெற்றது மட்டுமின்றி வழிபாட்டு நெறியிலும் மாறுதல்களைப்பெற்றது.

இரண்டு தலைமுறைகளுக்குமேலாக இருண்ட காலத்தைச் சந்தித்த ஒரு சமுதாயத்தில் சமயநெறி புதிய கோணத்துடன் புகழ்மணம் பரப்பத் தொடங்கியது. புதிய புராணக் கதைகள் மக்கள் மனதை சுவரும் வகையில் தோன்றின. மக்களை அறநெறிப் படுத்துவதற்காக அற்புத கற்பனை வளங்களுடன் வழிபாட்டு நெறிகள் படைக்கப்பட்டன. இதுவே இருண்ட காலத்தைச் சந்தித்த சமுதாயத்தை எளிதில் ஆட்படுத்தும் எளிய முறையாக அமைந்தது. அதனால் எழுந்ததே வீதிவிடங்கனின் பெயர் மாற்றம் – திருமேனியை மூடி வழிபடும் நெறி – மற்றும் இரண்டு விதமான புராண காவியங்கள் போன்றவையாகும்.

இப்புராண கதைகளில் கற்பனை வளம் மிகுந்து காணப் படினும் இதனால் எழுந்த இலக்கியங்கள்தான் எத்தனை! சிற்பங்களும், ஓவியங்களும், செப்பேட்டுச் சிதறிரங்களும் தான் எத்தனை! எத்தனை!!

கவின் கலைகள் வளர்ந்தன. பக்தி மார்க்கத்தில் புதிய நெறியைக் கைகொண்டனர். இதனால் எழுந்த சைவத்தின் புது மணம் இன்றும் இத் திருக்கோயிலில் தியாகப்பெருமான் சன்னதியில் வீசிக்கொண்டுதான் இருக்கிறது.

குறிப்புகள்

1. 680 of 919 – தி. க. எண் 72
2. 680 of 1919 – ,,
3. 676 of 1919. தி க எண் 68
4. 679 of 1919
5. 670 of 1919
6. 561 of 1904 S. I I. Vol 17 No. 586
7. 163 of 1894 S. I. I. Vol 5 No 435.

திருக்காமக்கோட்டம்

திருக்காமக்கோட்டம்

பல்லவர் காலத் தொடங்கி முற்காலச் சோழர்காலம் முடிய (கி. பி. - 10ஆம் நூற்றாண்டு முடிய) எல்லாத் திருக்கோயில் களிலும் இறைவனுக்கு மூலககோயிலும் அதனைச்சுற்றிய திருச் சுற்றில் பரிவார தேவதைகளுகுகு திருக்கோயிலகளுமே அமைந்து இருந்தன. இவ்வகையில் சப்தமாதர்கள் (பிராமி, வைஷ்ணவி, கௌமாரி, வராகி, சாமுண்டி, மகேஸ்வரி, இந்திராணி)ஜேஷ்டா தேவி,விநாயகர்,முருகன்,சூரியன்,சந்திரன் எண்திசைகாவலர்கள் போன்ற தேவதையர்கள் திருவுருவங்களே இடம்பெற்று இருந்தன. பின்பு கி.பி. 11 ஆம் நூற்றாண்டில் இராஜேந்திர சோழனின் இறுதிக் காலம் முதல் ஒவ்வொரு சிவாலயங்களிலும் தனித்த அம்மன் கோயில் அமைக்கும் முறை துவங்கியது. இதனை ''திருக்காமக்கோட்டம்'' என அழைத்தனர்.

திருக்காமக்கோட்டத்தில் இறைவியின் (உமையவளின்) திருவுருவம் இடம் பெற்ற பின்பு சப்தமாதர் வழிபாட்டின் முக்கியத்துவம் குறையலாயிற்று. யாது காரணமாகவோ ஜேஷ்டா தேவி (முகடி, தவ்வை, மூத்தாள என்றெல்லாம் அழைக்கப்படும் தேவி) யின் வழிபாடு முற்றிலுமாக நீக்கப்பட்டதுமின்றி. இத் தேவியின் சிலைகளும்அகற்றப்பட்டன. அல்லது சிதைக்கப்பட்டன. பல்லவர்காலத்திலேயே திருவாரூரில் வழிபாட்டில் இருந்த சப்த மாதர் சிலைகள் இன்றும் இத்திருக்கோயிலில் தனித்தத் திரு மண்டபத்தில் (இரண்டாம் தெற்குத் திருச்சுற்றில்) உள்ளன. இதே போன்று ஜேஷடா தேவியின் சிலை தற்போது ஆனந்தேச்சம் (ஆனந்தீஸ்வரம்) என்னும் இரண்டாம் திருச்சுற்றின். வடமேற்கு மூலையில் உள்ள தனித்த சிறிய கோவிலொன்றில் இடம் பெற்றுள்ளது.

முதல் ஆதித்தன் காலத்திலிருந்து இரண்டாம் இராசேந்திரன் காலம் வரை உள்ள அனைத்துக் கல்வெட்டுகளையும் நோக்கும் போது இத்திருக் கோயிலினுள் தனித்த அம்மன் கோயில் இருந்த தற்கான சான்றுகள் ஒன்றுகூட இல்லை. மேற்கூரிய கல்வெட்டுக் கள் மூலம் அரநெறியும், தியாகராஜர் திருக்கோயிலின் கருவறை களும் கற்கோயில்களாக மாற்றப்பட்டன, பலபுதிய மண்டபங்கள்



ஸ்ரீ நீலோத்பலாம்பாள்



உமா மகேஸ்வரி

எடுக்கப்பட்டன, தியாகேசர் மற்றும் வன்மீகநாதருடைய கருவறைகள், விமானம் ஆகியவை பொற்றகடுகளால் போர்த்தப் பட்டதுபோன்ற செய்திகளே உள்ளன.எனவே இக்காலகட்டத்தில் உறுதியாகத் தனித்த அம்மன் கோயில் இருந்திருக்க கூடும் என ஏற்றுக் கொளள இயலவில்லை.

முதற் குலோத்துங்கனின் 44-ஆம் ஆட்சியாண்டான கி பி. 1113 - 14ல வெட்டுவிக்கப்பட்ட கலவெட்டொன்றில் ''உலகுய்யக் கொண்ட காமக் கோட்டம்'' என்ற திருக்கோயில் திருவாரூர் கோயிலினுள் இருந்தது எனத்தெரியவருகிறது இக்கல் வெட்டு திருவாரூர்த் திருக்கோயிலில் உள்ள உலகுய்யக் கொண்ட காம கோட்டத்தில் எழுந்தருளியிருக்கும் ''உமை நங்கை'' என்ற இறைவியின் தினசரி பூஜை வழிபாட்டிற்காக நிலம் பெற வேண்டித் திருவாரூரில் இருக்கும் பணிமகன் திரிபுவனமுடையான் இராஜந்திரன்சோழனானகுலோத்துங்கசோழமலைய ராஜவன்மர் 24½ கழஞ்சு பொன்னை இக்கோயிலில் இருந்த தியாக வினோதன் பண்டாரத்தில் (Thiyagavinothan Treasury) முதலீடு செய்தான். இவ்வாறு முதலீடு செய்த பொன்னை புதுக்குடி ஊர்ச்சபையினர் பெறறுக் கொண்டு, தேவாசிரிய மண்டபத்தில் கூடி இத்தேவியின் பூஜைகளுக்காகத் தங்கள் ஊரில் உள்ள சில நிலங்களை ஆதி சண்டேஸ்வரர் பெயரில் விற்றுக் கொடுத்தனர் எனக் கூறுகிறது.

இதே போன்று இரண்டாம் இராஜாதி இராஜனின் 10-ஆம் ஆட்சியாண்டான கி.பி. 1173 ஆம ஆண்டுக்கல்வெட்டொன்று, இம்மாமன்னனின் அமைச்சர் தலைவனாகப் பணியாற்றிய வேதவன முடையார் அம்மையப்பனான பல்லவராஜன் என்பான் திருவாரூர்த் திருக்கோயிலுள் அமைந்துள்ள திருக் காமக்கோட்ட முடைய பெரிய நாச்சியார் கோயிலின் ''பரலோக. . . . . மென்மொழி நாச்சியார்க்கு'' திருவாரூர் கூற்றத்து சோழ கேரள நல்லூரில் நிலம் வாங்கி அளித்ததாகக் கூறுகிறது.

எனவே கி. பி, 1113ம் ஆண்டு கல்வெட்டில் ''உலகுய்ய கொண்ட காம கோட்டத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவியை உமைநங்கை என்றும்'' கி. பி. 1173 ஆம் ஆண்டு கல்வெட்டில் திருக்காம கோட்டமுடைய பெரிய நாச்சியார் கோயிலின் இறைவியை பரலோக. . . . . மென்மொழி நாச்சியார் என்றும் குறிப்புகள் காணக்கிடைக்கின்றன. 60 ஆண்டுகள் இடைவெளியுள் இந்த 12ஆம் நூற்றாண்டு கல்வெட்டுக்கள் இருவேறு பெயர்களை

யுடைய காமக் கோட்டங்களைக் கூறுகின்றன. எனவே கி பி. 11-ஆம் நூற்றாண்டில் தொடங்கிய காமக்கோட்ட வழிபாட்டின் படி, 12ஆம் நூற்றாண்டிலேயே இத்திருக்கோயிலில் இரண்டு காம கோட்டங்கள் வழிபாட்டில் இருந்திருக்கின்றன என்பது வரலாற்று உண்மை.


அல்லியங் கோதைத் (நீலோத்பலாம்பாள்) திருக்கோயில்

இத்திருக் கோயில், இரண்டாம் திருச்சுற்றில் வடபுறம் கொடிமரத்தின எதிரே அமைந்துள்ளது. திருக்கோயிலின் அமைப்பு சற்றுப் பழமையாகத்தோன்றினாலும் திருப்பணிகள் பலவும் நிகழ்ந்தமையால் கால அமைதியை, கட்டிட அமைப்பைக் கொண்டு கணிப்பது சறறுக் கடினம். கருவறை, அர்த்த மண்டபம், இவை பெரியதொரு முக மண்டபத்துடன் திகழ்கிறது.

இக் கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவியின் பெயரை நீலோத் பலாம்பாள் எனறும தமிழில் அல்லியங் கோதை என்றும் கூறுகின்றனர்.இத்தேவியின திருமேனி குறிப்பிடத்தக்கதொன்றாகும் அம்மையின் திருவுருவம் இரண்டு திருக்கைகளுடன் திகழ்கிறது. அவற்றுள் இடதுகை, தோழியொருத்தி தோளில் தூக்கி வைத்துக் கொண்டிருக்கும் குழநதை முருகனின சிரத்தை தீண்டிக் கொண்டு இருக்கும் வணணம வடிக்கப்பட்டுளளது. இவ்வாறு கந்தனின் தலையைத்தீண்டும் திருவுருவம் தமிழகத்தில் வேறு எங்கும் காண இயலாது. (காஞ்சி கைலாச நாதர் கோயிலில் மட்டும் இதனை ஒத்தசிற்பம் உள்ளது)இங்குதான் இத்திருக்கோயில்பள்ளியறையும் உள்ளது. முக மண்டபத்தின் உட்புறச் சுவரைப் பல எழிலுறு ஓவியங்கள் அலங்கரிக்கின்றன. இவை தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்களின் ஓவியங்களாயினும் பல சிறந்த புராண காவியங்களைப்பிரதிபலிப் பனவாக உள்ளன.

கமலாம்பாள் திருக்கோயில்

மூன்றாம் பிரகாரத்தின் வடமேற்கு மூலையில் வடகீழ் திசையை நோக்கிய வணணம் தனித்த திருமதில்களுடன் கூடிய இத்திருக்கோயில் கமலாம்பாள் திருக்கோயில் ஆகும். இத்திருக்கோயிலுக்கென தனித்த கொடிமரமும் கோபுரமும் திருச்சுற்றும், பரிவார தேவதைகளும் அமைந்துள்ளன. இக்



கோயிலின் அனைத்துக் கட்டுமானங்களும், கி, பி, 16-ஆம் நூற்றாண்டின் கலை அம்சமாகவே உள்ளன,

பராசக்தி பீடங்களில் இதுவும் ஒன்றாகப் போற்றப்படுகிறது, இங்குக் கோயில் கொண்டுள்ள கமலாம்பாள் என்னும் தேவியின் திருக்கோலமும் புதுமையாக உள்ளது. தேவியின் திருவுருவம் அமர்ந்த நிலையில் கால்களை ஒன்றினமேல் ஒன்றாக மடக்கி தொங்கிய நிலையில் யோகாசனமாய் நான்கு திருக்கைகளில் முறையே பாசம், அக்கமாலை, கமலம் ஏந்தி அபயமும் அளிக்கும் அருட்கோலத்தில் காணப்படுகிறது, இங்கு தேவி தவம் மேற் கொள்வதாகவே புராண நூல்கள் கூறுகினறன, இத்தேவியின் பெயராலேயே 'கமலாலயம்' என்று திருக்கோயிலுக்கும் திருக்குளத்துக்கும் பெயர்கள் அமைந்துள்ளன, ஆடிபூரவிழா இக்கோயிலின் சிறப்பான விழாவாகும்,

திருச்சுற்றில் தென்மேற்கு மூலையில் அட்சர பீடமும் திருவாசியும் உள்ளது திருவாசியில் ஐம்பத்தொரு அட்சரங்கள் எழுதப்பட்டுள்ளன வள்ளி தெய்வானையுடன் கருணை புரியும் முருகவேள், மற்றும் இளங்குமரன், சண்டேஸ்வரி முதலிய தெய்வப் படிமங்களும் இத் திருச் சுற்றிலேயே இடம் பெற்றுள்ளன. மகா மண்டபத்தில் உச்சிஷ்ட கணபதியின் திருவுருவம் இடம் பெற்றுள்ளதோடன்றி, பிற்கால ஓவியங்கள் பலவும் இம் மண்டபத்தில் இடம் பெற்றுள்ளன.

சோழர் காலக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ள காம கோட்டங்களில் இதுவும் ஒன்றா?என்ற வினாவுக்கு விடையளிக்கப் போதிய சான்றுகள் இதுவரை கிடைத்தில. மேலும் மற்ற திருக் கோயில்களில் உள்ள அம்மன் திருக்கோயில் போன்றல்லாது ஆரூரில் உள்ள இரண்டு அம்மன் திருக்கோயில்களிலும் உமையவளின் திருவுருவங்கள் இரு வேறுபட்ட நிலைகளில் காணப் படுவது (Iconographycally) மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான திருவாரூர் முத்துசாமி தீட்சிதர் அவர்கள் இத் திருக்கோயிலில் அருள்பாலிக்கும் அம்மையைப் பற்றி அழகிய கீர்த்தனைகள் பாடியுள்ளார். இவைகள் தொகுக்கப்பட்டு தினசரி தேவியின் முன் இசைக்கப் படுகிறது.

பராசக்தி இங்கு யோகாசனத்தில் அமர்ந்துள்ளாள் என்பதை கி. பி. 1684-1714 வரை தஞ்சையை ஆண்ட மாராட்டிய

மன்னன் சகசி மகாராஜாவின் காலத்தில் இயற்றப்பட்ட ''தியாகேசர் குறவஞ்சி'' எனும் நூலின் 20 ஆம் பாடலில்

''விளங்கு தென்னாரூர் வியன்பதி தழைக்க
உளங்கனிவாக யோகாசனத்தில்
அண்டருந் துதிக்க அரசிருந்தருள் பூ
மண்டலம் துதிக்க வளர் புராசக்தி..''

எனக் கூறுகிறது.

கமலை முனிவர் என்பவரால் தாபிக்கப்பட்ட இத்தேவி யோக நெறிகளில் குண்டலினி சக்தியை அடையும் அருள்நெறியைக் காட்டும் வண்ணம அன்னை பாரசக்தியே யோகத்தில் அமர்ந்து இருப்பதாக ஓர் வழிபாட்டு நெறியும் கூறுகிறது. இதனுடன் தொடர்புடையவண்ணம் இந்த யோக நெறியின் அம்சமாக ''அஜபாகல்பம்'' எனும் நூல் இதனை விரிவாக விளக்குகிறது.



திருமண்டபங்கள்

திருமண்டபங்கள்

திருக்கோயில்கள் எந்த அளவிற்கு வரலாற்றுச் சிறப்புப் பெற்று திகழ்ந்தனவோ, அந்த அளவிற்கு திருக்கோயில் மண்டபங்களும் சிறப்பிடம் பெற்றுத் திகழ்ந்திருக்கின்றன. தேவாசிரிய மண்டபம் பற்றி முன்பே விரிவாகக் கண்டோம். அடுத்துச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க மண்டபம் இராஜநாராயணன் திருமண்டபம் ஆகும்.

இராஜநாராயணன் திருமண்டபம்

கட்டுமான அமைப்பின் அடிப்படையில் நோக்கும்போது ஆரூர்க் கோயிலில் உள்ள அனைத்து மண்டபங்களிலும் மிகப் பழமையான கலையழகுடன் திகழ்வது இம்மண்டபமே. தேவாசிரிய மண்டபம் சுந்தரர் காலத்து 'திருத்தொண்டத் தொகை' அருளிய இடமென இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டிருப்பினும், இன்று நாம் காணும் கட்டுமானங்கள் 3ஆம் குலோத்துங்கனின் கலைத்திருப்பணியே. ஆனால் ராஜநாராயணன் மண்டபமோ பிற்காலத் திருப்பணிகளுக்கு உள்ளானாலும் பெரும் பகுதி பழமையின் கோலம் மாற்றப்படவில்லை. எனவே தொன்மை மண்டபங்களில் கட்டிடக் கலை அம்சத்தில் முதலிடம் வகிப்பது, இம்மண்டபமே.

155 × 57 அடி நீள் சதுர வடிவில் இரண்டாம் திருச்சுற்றில் கொடிக்கம்பத்திற்கும் ஆரியன் கோபுரத்திற்கும் இடையே அமைந்துள்ளது. அடித்தளம் 3 அடி உயர மேடையாக அமைந்து உள்ளது. இதனை அழகிய பத்மமும். அதன்மேல் குமுதமும் விளங்க, எழிலுறு கபோதம் அணி செய்கிறது. வரிசைக்கு 10 தூண்கள் வீதம் 9 வரிசைத் தூண்கள் மண்டபத்தைத் தாங்கி நிற்கின்றன. மண்டபத்தின் நடுப்பகுதி மட்டும் பிற்காலத் திருப்பணிகளின்போது (விஜயநகரமன்னர்கள் காலத்துப்பணி) சற்று உயர்த்திக் கட்டப்பட்டுள்ளது. இம்மண்டபத்தின் தென்புறமும், மேல்புறமும் உள்ள சிலதூண்கள், சிம்மங்கள் தாங்கிய தூண்களாக வடிக்கப்பட்டுள்ளன. இவற்றின் அடிப்பகுதியில் சிம்மங்களும் மேலே கால், பத்மபாதம், கலசம், பலகை போன்ற எழிலுறுப்புகளைப் பெற்று விளங்குகின்றன.

உத்திரத்தின் உள்விளிம்புகளில் நடனப் பெண்களின் சிற்பங்களும் வடிக்கப்பட்டுள்ளன.

வரலாற்றுச் சிறப்பு

தொன்மையானக் கட்டுமான அமைப்பு பெற்ற இம் மண்டபத்தைப்பற்றி சோழர்காலக் கல்வெட்டுகள், பேசுகின்றன. இரண்டாம் திருச்சுற்றின் தென்புறச் சுவரில் உள்ள இக் கல்வெட்டுகள் விக்ரமச் சோழனின் 4-ஆம் ஆட்சியாண்டான கி. பி. 1122 இல் வெட்டப்பட்டதாகும். இதில் ''திரிபுவனச் சக்ரவர்த்திகள் ஸ்ரீ விக்கிரம சோழ தேவர்க்கு யாண்டு நாலாவது இடபநாயற்று பூர்வ பட்சத்து திருதியையும் புதன்கிழமையும் பெற்ற திருவாதிரை நாள் குலோத்துங்க சோழவளநாட்டு வேளா நாட்டு பிரமதேயம், திருநல்லூர் பெருங் குறி மகா சபையோம் கேயமாணிக்க வளநாட்டு திருவாரூர் கூற்றத்து திருவாரூர் ஸ்ரீமூலஸ்தானமுடையார் கோயில் ராஜநாராயணன் திருமண்டபத்து கூட்டம் குறைவற கூடியிருந்து இக்கோயில் ஆதி சண்டேஸ்வர தேவர்க்கு நிலவிலையாவணம் செய்தோம்''—என்று வருகிறது. இம்மண்டபமும் தேவாசிரியன் போன்றே மக்கள் கூடும் பொது மன்றமாகச் செயல்பட்டதோடன்றி அரிய வரலாற்று நிகழ்ச்சிகள் நடந்த சிறப்பு வாய்ந்த இடமாகவும் திகழ்ந்தது என்பது தெளிவு. இம் மண்டபத்தின் வடபுறச் சுவரில் வடகிழக்குப் பகுதியில் நீண்டதொரு சேர்ழர்காலக் கல்வெட்டு ஒன்று உள்ளது.

இம் மண்டபம் விக்கிரமசோழன் காலத்தில் சிறப்பிடம் வகித்தமையை வரலாற்றுச் சான்றுகளோடு கண்டோம். மேலும் இம்மண்டபத்தில் பல விழாக்களும் நிகழ்ந்துள்ளன. இன்றும் பங்குனி உத்திரத் திருநாள் விழாஇறுதிநாளில், தியாகப்பெருமான் இம்மண்டபத்தில் எண்ணைக் காப்பு கொள்வார். திருவாதிரைத் திருநாளன்றும் இங்கு எழுந்தருள்வார். இம்மண்டபத்தின் வலப் பக்க முகப்பில் விநாயகர் கோயிலும், இடப் பக்கம் துர்கை கோயிலும் தென்புறம் சுரகரேசுவரர் கோயிலும் உள்ளன.

சபாபதி மண்டபம்

மேலைத் திருக்கோபுரத்தை அடுத்துத் தென்புறம் திருவாயில் கொண்டு திகழ்வது சபாபதி மண்டபம் ஆகும். இம்மண்டபம் பற்றிய வரலாற்றுச் சான்றுகள் இல்லையாயினும், கட்டிட நிர்மாணம் பிற்காலத் திருப்பணியாகவே திகழ்கிறது. மூன்றாம்

குலோத்துங்கனின் திரிபுவனக் கல்வெட்டுக்களில்[2] குறிப்பிடப்படும் ''வன்மீகாதிபதியின் சபை'' இச்சபாபதி மண்டபமே எனக்கூறும் சில வரலாற்று ஆசிரியர்களின் கூற்று ஏற்புடையதாக இல்லை. இம் மண்டபத்துத் தூண்கள் இரண்டில் பதஞ்சலி, வியாக்கிரபாதர் சிலைகளும், நடுவே மேடையுடன் கூடிய சபையும் உள்ளது. எனவே இது நடராசப் பெருமான் எழுந்தருளும் சபாபதி மண்டபமே ஆகும். இங்கு எழுந்தருளும் ஆடல்வல்லான் திருமேனி அரநெறியாம் திருக்கோயிலுக்குரியதாகும். இதுவும் இத்திருக்கோயிலில் உள்ள மிகப் பெரிய மண்டபங்களுள் ஒன்றாகும்.

125×75 அடி அளவில் இடம் பெற்றுள்ள இம்மண்டபம் 6" உயரமுடைய தளத்தின் மேல் குமுதம், கபோதம், கண்டம் போன்ற எழிலுறுப்புகளுடன் திகழ்கிறது.

சந்திரசேகரர் திருமண்டபம்

முதல் திருச்சுற்றில் திருமூலத்தானம் தியாகராஜர் திருக் கோயில் இவற்றைச் சுற்றித் திருச்சுற்று மண்டபம் உள்ளது இத் திருச்சுற்றாலையின் வடகீழ் திசையில்சந்திரசேகரர் திருமண்டபம் அமைந்துள்ளது. இதில் சந்திரசேகரர், அம்மன் செப்புத் திருமேனிகள் இடம் பெற்றுள்ளன. இம்மண்டபத்தினை முன்புறம் சிம்மங்கள் தாங்கிய தூண்கள் அலங்கரிக்கின்றது.

மண்டபத்தின் உட்புற விதானத்தில் உள்ள உத்திரத்தில் மூன்று புறங்களிலும் சிற்பத்தொகுதி தொடர்ச்சியாக அமைந்து உள்ளது. இச்சிற்பத் தொகுதி தியாகராஜர் வழிபாட்டின் ஒரு குறிப்பிட்ட புராணக்கதையை எடுத்துரைக்கும் வண்ணம் அமைந்துள்ளது. இம்மண்டபத்தின் சிற்ப அமைதியை நோக்கும் போது சோழர்காலக் கட்டமைப்பிலிருந்து சற்று மாறுபட்டு விஜய நகர காலத்தின் தொடக்க நிலை எனக்கூறுமாறு உள்ளது. எனவே இம்மண்டபத்தின் இன்றைய கட்டுமான அமைதி கி.பி. 14-ஆம் நூற்றாண்டு எனக் கூறலாம்.

15 பிரிவுகளாக இச்சிற்பத் தொகுதியினைப் பிரிக்கலாம். இதனைத் தனித்தனியே விரிவாகக் காண்போம்.

1 ஆழியும் சங்கும் ஏந்திய மாலவன் யாகக்குண்டத்தின் முன்பு அமர்ந்துள்ளார். கொழுந்துவிடும் வேள்வித் தீயில் மாலவனின் வலதுகை நெய்யைச் சொரிய தீயிலிருந்து

புறப்படும் வில்லினைத் தனது இடது கரத்தால் ஏந்தும் வண்ணம் உள்ளது. அருகே அமர்ந்துள்ள இரண்டு முனி புங்கவர்கள் தங்கள் கரங்களால் யாகக்குண்டத்திலிருந்து வில்லினைப் பெறும் மாலவனை ஆசீர்வதிக்கின்றனர்.

2. ஆழியும் சங்கும் தன் மேல்கரங்களில் ஏந்திய மாலவன் ஆணவத்தால் விளைந்த செருக்கினால் தன் எதிரே நின்ற தேவர்களை, யாகத்தினின்று பெற்ற வில்லால் தாக்கும் காட்சி உள்ளது.

3. மாலவனின் தாக்குதலுக்கு இலக்காகிய தேவர்கள் மூவர் உள்ளனர். நடுவில் உள்ளவர் தன் இருகரங்களையும் உச்சி மேற் கூப்பிய வண்ணம் காணப்படுகிறார். மற்ற இரு தேவர்களும் சாதாரணமாகக் கரங்கள் கூப்பிய நிலையில் உள்ளனர்.

4. புற்று ஒன்றின் அருகே, தன் மேல்கரங்களில் சங்கும் சக்கரமும் ஏந்திய மாலவன் தன்கீழ்கரங்களால் நாணேற்றிய வில்லை தரையில் ஊன்றி வில்லின் மேல் தனது கழுத்தை வைத்து உறங்கும் காட்சி வடிக்கப்பட்டுள்ளது. (உறங்கும் போது அறுபட்ட வில் நாணால் திருமாலின் தலை துண்டிக்கப்படுவதாக புராணக்கதை கூறப்படுகிறது)

5. ஆழியும் சங்கும் ஏந்திய மாலவனுக்கு (முன்பு தலை இழந்தவன்) நான்முகன் மூடிசூட்டுதலும் அருகே தேவன் ஒருவன் வணங்குதலும் சிறப்பாகக்காணப்படுகிறது

6. ஆழியும் சங்கும் ஏந்திய மாலவன் தன் மற்ற இருகரங்களால் அருகிலுள்ள சிவலிங்கத்தை அமர்ந்த நிலையில் பூஜிக்கும் வண்ணம் உள்ளது.

7. விடைமேல் அம்மையப்பராய் காட்சி நல்கும் இறைவனை மாலவன் ஆழியும் சங்கும் ஏந்தி நின்ற நிலையில் வழிபடும் காட்சி காணப்படுகிறது.

8. ஆழியும் சங்கும் ஏந்திய மாலவன் மறுபடியும் சிவலிங்க பூசை செய்யும் காட்சி.

9. அழகிய பீடத்தில், திருவாசி பின்புறம் ஒளிவீச சிவ பெருமான் அமர்ந்திருக்கவும் அருகே உமையவளும்,

குழந்தை முருகன் இவர்கள் இடையே இருக்கும் வண்ணம் உள்ள சோமாஸ்கந்த மூர்த்தியை மாலவன் சங்கும் சக்கரமும் ஏந்தி நின்ற நிலையில் வழிபாடு செய்யும் காட்சி உள்ளது.

10. ஆழியும் சங்கும் ஏந்திய மாலவன் அமர்நதிருக்க, மறுபுறம் மான், மழு ஏந்திய சிவபெருமான் சோமாஸ் கந்த மூர்த்தி படிமத்தைத் தூக்கி மாலவனிடம் அளிக்கும் காட்சிவடிக்கப் பட்டுள்ளது.

11, சோமாஸ்கந்த மூர்த்தியை அமர்ந்த நிலையில் ஆழியும் சங்கமும் ஏந்திய மாலவன் வழிபாடு செய்யும் வண்ணம் வடிக்கப்பட்டுள்ளது

12. இந்திரன் இருகரங்களுடன் கையில் எதையோ ஏந்தி நிற்கும் காட்சி.

13. ஆழியும் சங்கும் ஏந்தி அமர்ந்துள்ள மாலவனிடம் இருந்து இந்திரன் சோமாஸ்கந்தர்த் திருமேனியைப் பெறும் காட்சி

14. நான்முகன் துலாபாரம் ஏந்தி நிற்றல், துலாத்தட்டுகள் ஒன்றில் 6 கோயில்களும், மறுதட்டில் நிறைய கோயில் களும் உள்ளன. 6 கோயில்கள் உள்ள தட்டு எடை மிகுதி யால் கீழே இறங்கிக் காணப்படுகிறது. துலா ஏந்திய மாலவன் அருகே அடியவர் ஒருவர் மார்பில் புரிநூலும் இடுப்பில ஆடையுடனும் தன் இருகரங்களையும் உச்சிமேற் கூப்பி தொழும் காட்சியும், அவரை ஒட்டிய விளிம்பில் மேலும், கீழும் இரண்டு கோயில்களும் அவற்றின் உள்ளே சிவலிங்கங்களும் உள்ளன.

15. இறுதியாக உள்ள காட்சியில் இரண்டு நூண்களும். அழகிய விதானமும் பெற்ற எழிற சிங்காதனத்தில் சோமாஸ் கந்த மூர்த்தியின் திருவுருவம் உள்ளது. அடுத்தாற் போல் கோயில்ஒன்றும் அதன் உள்ளே சிவலிங்கம் ஒன்றும்உள்ளது.

இச்சிற்ப தொகுதி கூறும் சிறப்பான புராணக்கதையினைத் தியாகராசர் வழிபாடு என்ற தலைப்பின் கீழ் விரிவாகக் காண்க. இத்தொகுதியில் முசுகுந்தன் எனும் குரங்கு முகம் பெற்ற மன்னன் ஒருவனது உருவம் காட்டப்படவில்லை. மாறாக அடியவர் ஒருவரின் உருவம் மட்டுமே உள்ளது. தியாகராஜர் உருவ வழிபாடு பற்றிய வரலாற்று ஆய்வில் இம்மண்டபம் சிறப்பிடம் வகிக்கிறது.

இராஜேந்திர சோழன் மண்டபம்

இம்மண்டபம் இன்று இககோயிலில் உள்ள மண்டபங்களில் எது என்று கூற இயலவில்லை. ஆனால் கல்வெட்டுக்கள்[3] ''இராஜேந்திர சோழன் மண்டபம்'' ''இராஜேந்திர சோழ அத்தி'' எனக் குறிப்பிடுகின்றன. மாமன்னன் முதலாம் இராஜாதி ராஜனுடைய கல்வெட்டொன்று தன்தநதையின் அன்பு நாயகி யான அனுக்கியர் பரவை எனும் தேவியால் எடுக்கப்பட்ட ''இராஜேந்திர சோழ மண்டபத்தைப்'' பற்றி குறிப்பிடுகிறது. இப் பெயரினை அத்தேவியே இடடதாகவும் கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. இதுவும் பொதுமன்றமாக மக்கள கூடும் இடமாக இருந்திருக்கிறது. வரலாற்றில் கடாரம் வரை வென்று ஈடிணையில்லா வெற்றி பல குவித்த மாமன்னன் ஒருவன் பெயரால் அவனது தேவியால் எடுக்கப்பட்ட இம்மண்டபம் யாதுஎனஅறிய இயலாமை வருந்தத் தக்கது. எனினும் இத்திருக்கோயிலின் சிறப்பு களில் இம்மண்டபமும் ஒன்றாகும்.

இராஜாதிஇராஜ சோழனுக்குப் பின்பு விக்கிரம சோழன் காலத்தில் இம்மண்டபம் பற்றி ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது[4]. இரண்டாம் திருச்சுற்றில் உள்ள இக்கல்வெட்டில் ''விக்கிரம சோழ தேவருக்கு யாண்டு மூன்றாவது அருமொழி தேவ வளநாட்டுப் புலியூர் நாட்டு பிரமதேயம் புலிவலத்து பெருங்குறி மகா சபையோம் ராஜேந்திர சோழ அத்தியிலே கூட்டம் குறை வறக் கூடியிருந்து பணிப்பணியால் பணிக்கத் திருவாரூர் உடையார் ஸ்ரீ மூலஸ்தான உடையார்க்கு ஆதி சண்டேஸ்வர தேவருக்கு இறையிலியாகச் செய்து கொடுத்த நிலம். . . .'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே விக்கிரம சோழன் காலத்திலும் இம்மண்டபம் மக்கள் கூடும் பொது மன்றமாகச் செயல் பட்டிருந் திருக்கிறது, சோழர் காலக் கல்வெட்டுக்களை நோக்கும் போது தேவாசிரியம், ராஜநாராயண மண்டபம், ராஜேந்திர சோழன் திருமண்டபம் போன்றவை ஒரேகாலகட்டத்தில்கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படுவதால் ராஜேந்திர சோழன் திருமண்டபம்என்பது இன்றைய மண்டபங்களில் எதுவென்று கூறஇயலவில்லை. இருப்பினும் முன்பு குறிப்பிடப்பட்டுள்ள சபாபதி மண்டபம் முன்பு ராஜேந்திர சோழ மண்டபமாக இருந்து பின்பு திருப்பணிகளுக்கு இலக்காகிச் சபாபதி மண்டபமாக பெயர் மாற்ற மடைந்திருக்கலாம் என யூகிக்க முடிகிறது. மேலும் இது ஒன்றே ஊர்ச்சபையினர்கள் கூடும் அளவு வசதியுள்ள பெருமண்டபமு மாகும்,

கொங்கவேளார் திருமண்டபம்

ராஜநாராயணன் மண்டபம் போன்றே இனம் கண்டுகொள்ள இயலாத பிறிதொரு மண்டபம் பற்றி கல்வெட்டுகளில் குறிப்பிடப் பட்டுள்ளது[6]. கொங்க வேளார் திருமண்டபம் எனப்படும் இம மண்டபம் சோழர்கள் காலத்தில் ஊர்ச்சபையினர் கூடிப் பல முடிவுகளை எடுக்கும் பொது மனறமாகத் திகழ்ந்தது என்பதை அறிகிறோம்.

கமலாம்பாள் மண்டபம்

மூன்றாம் திருச்சுற்றின் வடமேற்கு மூலையில் வடகீழ்திசை நோக்கிய திருக்கோயிலே கமலாம்பாள் திருக்கோயில் உலகெலாம் காக்கும் அருள்நாயகி இங்கு தவக்கோலம் பூண்டு அருள்பாலிக் கிறாள் இத்திருக்கோயிலின வாயிலை மிகப்பெரிய மண்டபம் ஒன்று எழில் செய்கிறது.

இம்மண்டபமே கமலாமபாள் திருமண்டபமாகும். இதன் கட்டுமானம் முழுவதும் பிற்காலத் திருப்பணியாகும். விஜயநகரக் கலைப் பாணியே இதனைச் சிறப்புப்படுத்துகிறது. இம்மண்ட பத்தின் கீழ்திசையில் யாகமேடையுடன் கூடிய முகமண்டபம் ஒன்றும் உள்ளது.


பெரிய மண்டபத்தின் தூண்களின் மேல் அமைந்துள்ள உத்திரம் முழுவதையும் மிகச் சிறிய சிற்பங்கள் அலகங்கரிக் கின்றன. இவற்றில் வினாயகர், கஜலெக்ஷ்மி, ரிஷபவாகனர் மயில்மேல் அமர்ந்த முருகன், வள்ளி, தெய்வயானை, நாரதர், தும்புரு, நான்முகன் ஊர்த்த தாண்டவமூர்த்தி, காளி கஜசம்ஹாரமூர்த்தி, கிடந்த நிலையில் உள்ள திருமாலின் மார்பில் தியாகராஜர், சக்தி தேவி, விடைமேல் அருளும் அம்மை, அப்பர், அருகில் குடை, சாமரம் ஏந்தும் பூதங்கள் போன்ற தெய்வ உருவங்களும், இடையிடையே கோலாட்டம் விளையாடும் பெண்கள், நாட்டியம் ஆடும் பெணகள், வீணை ஏந்தும் பெண்கள், மத்தளம் வாசிப்போர்கள், பலிபீடம், ரிஷபம், மகரமீன்கள் போன்ற வைகள் வடிக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் பிற்கால விஜய நகரக்கலையின் சிறப்புக் கூறுகளாக பரிமளிப்பவையாகும். கூரையின் விதானத்தில் 12 ராசி மண்டலச் சிற்பங்களுடன் கூடிய ராசிக்கட்டமும், தொங்கும் கமல மொட்டை கொத்தும் கிளி போன்ற எழிற்படைப்புகளும் அணிசெயகின்றன. இம்மண்ட பத்தில் உச்சிஷ்ட கணபதியின் திருமேனி இடம் பெற்றுளளது.

மேடையுடன் கூடிய முக மண்டபத்திற்கு கீழ்த்திசையில் வாயிறபடிகள் உள்ளன. இம்மண்டபத்தின் கிழக்கு, தெற்கு, மற்றும் மேற்கு திசைகளில் வாயிலகளும், வடபுறம் சுவரும் அமைநதுள்ளன. இத ன்நடுப்பகுதி உயர்த்தப்பட்டு, உட்பகுதியில் தூண்கள் அமைக்கபபட்டுளளன. இவற்றில கீழைத் திருக்கோ புரத்திலிருந்து அகற்றப்பட்ட 6 நாட்டிய அணங்குகளின் சிறப்புகுச் சிற்பங்கள (மூன்றாம குலோத்துங்கன காலத்தியவை) உத்திர மட்டத்திறகு கீழாக வைத்துப் பொறுத்தப்பட்டுள்ளன. இது கீழைத் திருக்கோபுரத்திலிருந்து இங்கு இடம் பெற்றக் காரணம அறிய இயலவிலலை. இச்சிறபங்களும் சிதைக்கப்பட்டுள்ளன. இங்குள்ள தூண்களில் (தென்திசையில் உள்ளது) மூன்று மட்டும் முற்காலத்திய சிற்ப அமைதியுடன உள்ளது.

திருப்பள்ளித்தாம மண்டபம், ஊஞ்சல் மண்டபம், புராண மண்டபம், தட்டஞ்சுற்றி மண்டபம், மகாமண்டபம், வசந்தமண்டபம், பகுதக் காட்சி மண்டபம் மற்றும் உள்ள பல மண்டபங்கள் அனைத்தும் பிற்காலத் திருப்பணிகளேயாகும்.

குறிப்புகள்

1. 563 of 1904 S. I. I. Vol XVII No. 603.
2. 190 of 1907 S. I. T. I. Vol II No. 1007.
3. 679 of 1919.
4. 560 of 1904 S. I. I. Vol XVII No 605.
5. 671 of 1919.



ஆசிரியர் வளர்த்த ஆடற்கலை

ஆளுர் வளர்த்த ஆடற்கலை

கூத்து, நட்டம், நாடகம், என்றெல்லாம் சொல்லப்படும் ஆடல் தமிழரின் தனிப் பெரும் கலைகளுள் ஒன்று. பாவம், ராகம், தாளம் என்பன இதன் அடிப்படை. இவை மூன்றின் முதல் எழுத்துக்கள் தொடர்ந்தும், அனைத்தின் இறுதி எழுத்துக்கள் இணைந்தும் பரதம் என்ற சிறந்த சொல்லாயிற்றென்பர். இக்கலை மிகத் தொன்மையான ஒன்று என்பதற்கு எண்ணற்ற சான்றுகள் உள்ளன. தமிழ் நூல்களும், வடமொழி நூல்களும் இதற்கென வகுத்த இலக்கணங்கள் பலவாகும். அரிய இக் கலையினால் எழுந்ததே ஆடவல்லான் வழிபாடு. கூத்தியலை மூன்று வகையாகவும், ஐந்து வகையாகவும் கணிப்பர். நிருத்தம், நிருத்தியம், நாட்டியம் என்பது ஒருவகை. நடனம், நாட்டியம், தாண்டவம், நிருத்தியம், நிருத்தம் எனும ஐவகை ஆடலும் சக்திமார் ஐவருக்காக இறைவன் ஆடியது என்கிறது பரத சேனாபதீயம். தொல்காப்பியம், சிலப்பதிகாரம், அடியார்க்கு நல்லார் உரை, மற்றும் பரத சாத்திரம், அபிநய தர்ப்பணம், மகாபாரத சூடாமணி, பரத சேனாபதீயம், பரத சங்கிரகம், தச ரூபகம், சங்கித முக்தாவளி, சங்கீத சாராம்ருதம், பரதகலைச் சாத்திரம், போன்ற நூல்களின் வாயிலாக இக் கலையின் பல்வேறு அம்சங்களையும் தெளிவுபட உணரலாம். நாடகத் தமிழை சிறப்புறக் கூறும் அகத்தியமும் பரதமும் நாம் இழந்த அரிய கலை நூல்கள் என்பதை 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அடியார்க்கு நல்லாரின் சிலப்பதிகார உரையால் அறிய முடிகிறது. சிலம்பில் இளங்கோ அடிகள், ''கடைய மயிராணி மரக்கால் விந்தை சுந்தன் குடை, துடி, அல்லியம், மல், கும்பம், சுடர்விழியரற் பட்ட மதன்பேடு திருப்பாவை அரன் பாண்டரங்கம் கொட்டி இவை காண் பதினோர் கூத்து'' எனக் கூறுகிறார். அல்லியம், குடம், மல்லாடல் முதலி யவற்றைக் கண்ணனும், கொடு கொட்டியை சிவபெருமான் முப்புரம் எரித்தபோதும், 'குடை'யை முருகனும், பாண்ட ரங்கத்தை சிவனும், துடி என்பதை முருகன் அல்லது கன்னியர் எழுவரும், கடையம் என்பதை இந்திராணியும், பேடியைக் காமனும்; மரக்காலை துர்க்கையும், பாவையை திருமகளும் ஆடிய நடனங்களாக வகுத்துள்ளனர்.

இந்திரன் மகன் ஜயந்தனை காதலித்து தாளமும் சுருதியும் தப்பி ஆடியதால் ஊர்வசியை அகத்தியர் சாபமிட்டார். அவள் மாதவி என்ற நடனமாதாகப் பிறந்து கூத்துக் கலையை தமிழகத்துக்குக் கொணர்ந்தாள் எனத்தமிழ் இலக்கியங்கள்கூறும். இம்மாதவிமரபில் உதித்தவளே சிலம்பின் நாயகியாம் மாதவி.'நாட்டியசாஸ்திரம்' என்றவடமொழிநூல் பின்வருமாறு கூறுகிறது:பிரம்மன்நாட்டியக் கலையை உணர்ந்து பரதமுனிக்குக் கற்பித்ததோடன்றி அமமுனி வாயிலாக பலதேவநடனமகளிரைத் தோற்றுவித்து இக்கலையை வளர்த்தாராம்.' இதையுணர்ந்த, சிவபெருமான் தனது சிவகணங்களான தண்டு, நந்தி இவர்களிடம் இக்கலையை முழுதும் கற்றுணரும்படி கூறவும், அவ்விதம் அவர் களால் கற்பிக்கப்பட்டதே நாட்டியக்கலை. பரதமுனிவரின் மாணாக்கியருள் ஒருத்தியான ஊர்வசி தன கலையில் செய்த பிழையினால் பரதமுனிவரின் சாபம பெற்று, பூவுலகில் பிறந்து, புரூரவனை மணந்து நாட்டியக் கலையை பூவுலகுக்கு அளித்தாள் என்கிறது அந்த வடமொழி நூல்.

மேற்படி நூல்கள் அனைத்தும் நோக்கும் போது சிற்சில கருத்துக்களில் வேறுபாடு காணப்பட்டாலும் நாட்டியக்கலை என்பது தமிழகத்தைப் பொறுத்தவரை மிகத் தொன்மையான கலை என்பது தெளிவு. உலக நாடுகள் அனைத்தையும் நாகரீக அடிப்படையில் நோக்கும் போது இன்றைக்கு 2000 ஆணடு களுக்கு முன்பே இத்தகைய அரியதொரு கலையை இலக்கணப் படி வளர்த்த நம் முன்னவர்களின் பாங்கு போற்றுதற்குரியதாகும்

திருவாரூர்த் திருக்கோயிலைப் பொறுத்தவரை இக்கோயில் மிகத் தொன்மையான திருக்கோயில் என்பதை திருநாவுக்கரசர் வாக்கால் அறிந்தோம். மேலும் ''பவனி வீதிவிடங்கனைக் கண்டிவள் தவணியாயின வாரென்றென் தையலே'' என்றும் ''ஆரூரான் எனும் பவனி வீதி விடங்கனை'' என்றும்,''ஆரூரான் எனும் பவனி வீதி விடங்கனை'' எனறும,''ஊழித் தீ மன்னானை ஓங்கொலிமா பூண்டதோர் ஆழித்தேர் வித் தகனை நான் கண்டது ஆரூரே'' என்றெல்லாம் போற்றுகிறார். எனவே கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் இத்திருக்கோயிலில் வீதி விடங்கன் எனும் திருமேனி வீதியெல்லாம் பவனி வரும் திருமேனியாக இருந்து உள்ளது. இத்திருமேனியே இன்று தியாகேசர் என போற்றப்படும் சோமாஸ்கந்த மூர்த்தியின் திருவுருவமாகக் கொள்ளலாம். இப் பெருமானைப் போற்றும் அப்பரடிகள்,

''ஆடரவக் கிண்கிணிக் காலன்னோர்
ஆடுந்தீ கூத்தனை நான் கண்டதாரூரே''

என்றும் போற்றுகிறார். அப்பர் பெருமான் இவ்வாறு திருவாரூர் கண்ட அந்த ஆடுந்தீ கூத்தனின் கூத்தை

''செத்தவர்தந் தலைமாலை கையிலேந்திச்
சிரமாலை சூடிச் சிவந்த மேனி
மத்தகத் யானை யுரிவை மூடி
மடவா ளவளோடு மானொன் றேந்தி
அத்தவத்த தேவர் அறுப தின்மர்
ஆறுநூ றாயிரவர்க் காடல் காட்டி—''என்றும்,

''பிறநெறியாய்ப் பீடாகிப் பிஞ்ஞ கனுமாய்ப்
பித்தனாய்ப் பத்தர் மனத்தி னுள்ளே
உறநெறியாய் ஓமமாய் ஈமக் காட்டில்
ஓரிபல விட நட்ட மாடினானை''

என்றும் விளக்குகின்றார்.

பைரவராகவோ, வீரபத்ரராகவோ சுடுகாட்டில் பத்துக் கரங்களுடன் தேவியும் பூதகணங்களும் ஆட, ஊழிக் கூத்து ஆடும் தாண்டவம் மிகப் புகழ் வாய்ந்த ஒன்று. அடுத்து அந்தி மயங்கும் நேரத்தில் இமயத்தில் தெய்வீக இசையின் மத்தியில் ஆடும் நடனமாகும். இதனை ''சிவ ப்ரதோஷ ஸ்தோத்ரம்'' என்ற செய்யுள் நன்கு சித்தரிக்கின்றது. ''மூவுலகின் அன்னையாம் உமையைப்பொன்னாலும், மணியாலும் ஆன ஆசனத்தில் அமர்த்தி இமயத்தில் சூலபாணி நடனமாடுகிறார். கலைவாணி வீணை வாசிக்க, இந்திரன் குழலூத பிரமன் தாளம்போட, இலக்குமி பாட, விஷ்ணு மத்தளம் தட்ட, அண்ணல் ஆடும் நடனத்தை விண்ணவர் கண்டு களிக்கின்றனர்''- என்று கூறுகின்றது. இவ் விதம் ஆடும் சிவனின் உருவில் இரண்டு கரங்கள்தான் உண்டு. காலடியில் முயலகன் இல்லை.

மூன்றாவதாக தில்லையம்பதியில் பொன்னம்பலத்திலே சபையின் நடுவே ஆடும் நடனம் ஆனந்தத்தாண்டவமாகும். கோயிற்புராணம் நடராசர் வடிவத்தின் சின்னங்களுக்கு விளக்கம் தருகிறது. தாருகாவனத்தில் மீமாம்சை வழியைப் பின்பற்றி வாழ்ந்தனர் பல முனிவர்கள். இவர்களை நல்வழிப்படுத்தவிஷ்ணு

மோகினி வடிவிலும், சிவன் ஆடையற்ற ஆடவர் வடிவிலும் சென்றனர். மோகினியின் அழகில் தங்களை மறந்த முனிவர்கள் சிவனிடத்து தங்கள் மனைவியர் மயங்குதல் கண்டு கோபமுற்றனர். சிவனை அழிக்க மாபெரும் யாகம் செய்தனர். யாக குண்டத்திலிருந்து பயங்கர புலி ஒன்று தோன்றி சிவன் மீது பாய்ந்தது. அதை தன் விரல் நகத்தால் கொன்று, அதன் தோலை ஆடையாக அணிந்தார் அண்ணல். இதன் பின்னர் ஓர் கொடூரமான அரவைத் தோற்றுவித்தனர் முனிவர்கள். அதனை எடுத்து தன் கழுத்தைச் சுற்றி மாலையாக அணிந்து நடமாட ஆரம்பித்தார். பின்பு குள்ளமான பூதம் ஒன்று சிவன்மேல் பாய்ந்தது. முயலகன் எனும் அப்பூதனை தன் காலடியில் இருத்தி நடனமாடினார். யாகத்திலிருந்து வெளிப்பட்ட மானும், மழுவும் அண்ணலின் சின்னங்களாக மாறின. பின்பு அண்ணல் ஆடிய நடனத்தில் முனிவர்களும், தேவர்களும் தங்களை மறந்தனர். ஆதிசேடன் சிவனைப் போற்றி அந்த நடனத்தை காண வேண்டினார். தில்லையம்பதியில் வந்து காணக் கூறி சிவன் மறைந்தார். இதன்படி தில்லையில் ஆடிய வடிவே தென்னிந்திய செப்புப் படிமங்களில் நடராச வடிவமாக ''சபாபதி'' என்ற பெயரில் காட்சி நல்குகின்றது.

இவ்வாறு ஆனந்தத் தாண்டவம் புரியும் இப்பெருமான் :

''குட முழவம் வீணை தாளங்குறு
நடைய சிறு பூதம் முழக்க'' மாக்கூத்தாடுவதாகவும்
''குழலோடு கொக்கரை கைத்தாளம் மொந்தை
குறட்பூதம் முன் பாடத் தான் ஆடுவதாகவும்

அப்பர் பெருமான் திருவதிகையிலே குறிப்பிடுகிறார்.

''நம்பனே நான் மறை களாயினானே
நடமாட வல்லானே ஞானக் கூத்தா''
''இசையவன் காண் – இயலவன் காண்''

என்று வலிவலத்திலும் போற்றிப் பரவுகிறார்.

இப்பெருமானை இசைக் கருவிகள் ஒலிக்கும் இசையாக அதற்கேற்ப ஆடும் ஆடலாக வழிபடும் ஓர் தன்மையினால் எழுந்ததே இவ்வாடற் கலை. தில்லையமபதி ஆடவல்லான் திருமேனியால் முக்கியத்துவம் பெற்றது. தில்லைக்கு முன் தோன்றிய திருவாரூர்

பதியில் வீதிவிடங்கன் எனும் சோமாஸ்கந்தரின் திருவுருவே முக்கியத்துவம் பெற்றது என்பதனை தேவாரப் பதிகங்களாலும் கல்வெட்டுகளாலும் உணர முடிகிறது. தானாடி, உலகெலாம் மகிழ்வித்தபெருமான் ஆரூர்பதியில் தானமர்ந்து ஆடல்கண்டான். இது உண்மையான வரலாறும் கூட,

ஆரூர் பெருமான் ஆடல் கண்ட இடம்

தேவாசிரிய மண்டபம் சிவனடியார் பலர் உறைந்த இடம் மட்டுமன்று, தியாக வினோதனாம் வீதிவிடங்கப் பெருமான் இம்மண்டபத்தில் உள்ள சிம்மாசனத்தில் எழுந்தருளி ஆடலும், பாடலும் கண்டு களிப்பார் என பல கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

முதல் குலோத்துங்கனின் 49ஆம் ஆட்சியாண்டில் (கி. பி, 1118-19ல்) வீதிவிடங்கதேவர் தேவாசிரிய மண்டபத்தில் எழுந்தருள புக்கத்துரை வல்லவத் தலைக்கோலி என்ற ஆடல் அணங்கின் நடனத்தைக் கண்டு களித்ததாக கூறுகிறது. இதனை கல்வெட்டுக்கள்,

.....ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு 49-வது கேய மாணிக்க வளநாட்டு திருவாரூர் கூற்றத்து திருவாரூருடையார் வீதிவிடங்கு தேவர் தேவாசிரியனில் எழுந்தருளியிருந்து புக்கத்துறை வல்லவத் தலைக்கோலியை ஆட்டங் கண்டருளா நிற்க ... ...'' எனவும்; விக்கிரம சோழனின் 5 ஆம் ஆட்சியாண்டில் கண்டு களித்த நடனத்தை **''திரிபுவன சக்கரவர்த்தி ஸ்ரீவிக்கிரம சோழ தேவர்க்கு யாண்டு ஐந்தாவது மிதுன ஞாயிற்றுப் பூர்வபட்சத்து சப்தமியும் ஞாயிற்றுக்கிழமையும் அத்தமுமான நாள் 340 கேய மாணிக்க வளநாட்டு திருவாரூர் கூற்றத்து திருவாரூருடையார் வீதி விடங்கர் சித்திரை திங்கள் திருநாள் சதையத்தில் தேவாசிரியனாம் திருக்காவணத்தில் சிம்மாசனத்து எழுந்தருளியிருந்து பதியிளார் தியாக விநோதத் தலைக்கோலியை ஆட்டங்கண்டருளா நிற்ப''** எனவும் குறிப்பிடுகின்றன.

விக்கிரமனின் கல்வெட்டுத் தொடரால் 31—5—1123-ல் சித்திரை மாத சதய விழாவன்று. வீதி விடங்கப் பெருமான் தேவாசிரிய மண்டப சிம்மாசனத்தில் வீற்றிருந்தபோது தியாக வினோதத்தலைக்கோலி என்ற திருக்கோயில் ஆடல்மகள் (பதியிலார்) ஒருத்தி பன்னடம் புரிந்ததாக அறிகிறோம். மேலும் பிரிதொரு சோழ மன்னனின் கல்வெட்டொன்றில் வீதிவிடங்கர்

நடனம் கண்டதோடு ''வீரசோழ அனுக்க விஜயம்'' என்னும் கூத்தின் பாடலையும் ஒருங்கே கேட்டு மகிழ்ந்தாக குறிப்பிடுகிறது.

இதனை ''ஸ்வஸ்திஸ்ரீ யாண்டு 13வது நாள் 202. திருவாரூர் உடையார் வீதிவிடங்க தேவர் தேவாசிரியன் திருக்காவணத்தே எழுந்தருளி இருந்து பூங்கோயில் நாயகத் தலைக் கோலியை ஆட்டங் கண்டருள நம்மக்கள் வீரசோழ அனுக்கரை வீரனுக்க விஜயம் பாடின பூங்கோயில் நம்பிக்கு...'' எனத் தொடர்கிறது.

இதனால் பூங்கோயில் நாயகத் தலைக்கோலி என்ற ஆரணங்கு நடம் புரியும் போதே ''வீரனுக்க விஜயம்'' பூங்கோயில் நம்பி என்பவனால் பாடப்பட்டதையும் அறிய முடிகிறது. சோழ மன்னர்களின் மேற்குறித்த மூன்று கல்வெட்டுக்களால் விழாக் காலங்களில் வீதிவிடங்கனின் திருமேனி தேவாசிரிய மண்டபத்தின் சிம்மாசனத்தில் எழுந்தருளப்பட்டு அவர் முன்பு ஆடலும்பாடலும் ஒருங்கே நடைபெறும் என்பதை தெளிவாக உணரலாம்.

'பதியிளாளர்' எனக் இக்கல்வெட்டுக் கூறும் சொல், இறைவனின் திருக்கோயிலில் நடனம் புரிவதற்கென்றே தங்களை அர்ப்பணித்துக்கொண்டு அத்திருக் கோயிலில் பல உரிமைகளைப் பெற்ற ஆடல் மகளிரையே குறிக்கும். மேலும் 'தலைக்கோலி, என்ற விருது ஆடல் கலையின் அத்தனை அம்சங்களையும் கற்றுத் தேர்ந்த ஆரணங்குகளுக்கே வழங்கப்பட்டதாகும். முதல் குலோத்துங்கன் காலத்தில் புக்கத்துறை வல்லவத் தலைக் கோலியும், விக்கிரம சோழன் காலத்தில் தியாகவிநோதத்தலைக் கோலியும், பின்பு பூங்கோயில் நாயகத் தலைகோலியும், தலை சிறந்த ஆடல் அரசிகளாக விளங்கி 'பதியிளாளராக' திருக்கோயில் உரிமையும் பெற்றுத் திகழ்ந்தனர். இவர்களைப்பற்றி குறிப்பிடும் மேற்குறித்த கல்வெட்டுக்கள் மன்னனது நேர்முக ஆணையாகவும், நிவந்தம் பற்றிய சாசனமாகவும் இருப்பினும், அவை கல்லில் எழுதப்பட்டுள்ள பாங்கு இறைவனே வாய்மொழியாக கூறும் வண்ணம் அமைந்துள்ளது. இத்தகைய சிறப்புடன் (இறைவன் திருவாய் மொழியாக) வடிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்களில் ''இவ்வாடல் அரசிகளின் நடனத்தை நான் கண்டுகளிக்கும் வேளையிலே..'' என இறைவன் கூறுவது போல் அமைக்கப் பட்டிருப்பதிலிருந்து இம்மாமன்னர்கள் இவ்வாடல் அரசிகளுக்கு கொடுத்த முக்கியத்துவமும்'' புனிதத்துவமும் காண்டு நோக்குதற்குரியதாகும்.

ஆரூரில் அமர்ந்த கோலத்தில் தேவாசிரிய மண்டபத்தில் நடனம் கண்டுகளிக்கும் இப்பெருமான் அமர்ந்த சிம்மாசனம் இம்மண்டபத்தின் வடபுறம் உள்ள எழில் கொஞ்சும் மேடை மீது தான் இருந்திருக்க வேண்டும். இம்மேடையாம் எழில் அரங்கை அழகு செய்யும் விதானத்தின் விளிம்பின் முகப்பில் ஓர் அற்புத சிற்பு வரிசையுள்ளது, இது ஒன்றே திருவாரூரில் அமர்ந்த கோலத்தில்(சோமாஸ்கந்தர்)அருள்பாலிக்கும்இவ்வாடல் அரசன், கூத்தில் ஏவ்வளவு வலிமை பெற்றவன்.என்பதையும்–அப்பெரு மானே ஆரூர் ஆடல் அரசிகளின் கூத்தைக் காண்பதாகவும் கல்லிலே வடிக்கப்பட்டுள்ளது:

சபை நடுவே சோமாஸ்கந்தராய் அருட்பெரும் சோதி வீற்றிருக் கிறார். ஒருபுறம் மாலவன் தன் தேவியர்களுடன் நின்று அருள் பாலிக்கிறார். சோமாஸ்கந்த மூர்த்தியின் அருகே உமையவளாம் சிவகாம சுந்தரி நிற்கிறாள். முருகனும், வினாயகப் பெருமானும் ஆடல் காண்கின்றனர். நந்தி தேவர் குடமுழவம் இசைக்க விரிசடைப் பெருமான் ஊர்த்துவத்தாண்டவராய் தனது வலது காலை மேல் நோக்கி ஆடற்கலையின் உச்சகட்டத்தையே நிறுத்தி அனைவரையும் மெய்மறக்கச்செய்கிறார். அருகே ஆடலில் தோல்வியுற்ற காளிதேவி தன் நாணத்தாலும், தோல்வியாலும் சோர்வுற்ற தன் கரங்களைக் கீழ்நோக்கி விரித்த வண்ணம் நாணுறுகிறாள். இதனை அடுத்து ஆரூர் ஆடல் மகளிர் பலர் நடனக்கலையின் பல முத்திரைகளை எடுத்துணர்த்தி ஆடு கின்றனர். அண்ணலின் அருகே மட்டுமின்றி அம்மண்டபக் கூரை யின் விளிம்புகளில் எல்லாம் ஆடுகின்றனர்.

காளிதேவியே ஊர்த்துவ தாண்டவத்தின் முன்பு நாணி நிற்கும் போது, ஆரூர் அரசிகள் நடம்புரிவதை அமர்ந்த அண்ணல் (வீதிவிடங்கர்) தன்தேவி, அருமைக் குழந்தைகள், திருமால் சகிதம் தேவாசிரிய மண்டபத்தில் கண்டு களிக்கிறார் என்றால் இச்சிற்பம் கூறும் உண்மை சாதாரண ஒன்றா? முன்பு கல் வெட்டிலே கண்டதை சிற்பத்திலே காண்கிறோம். இன்றைக்கு 800 ஆண்டுகளுக்கு முன்பு இங்கு நிகழ்ந்த நடனங்களை கண்முன் நிறுத்துவோம். இம்மண்டபம் ஆடற்கலையை வளர்த்த ஓர் அற்புத கேந்திரமாய் இருந்திருக்கிறது. மாமன்னர்கள் கீழே வீற்றிருக்க அரியணையில் ஆரூர் பெருமான் அமர்ந்து நடனம்

கண்டு களித்திருக்கிறார். ஆடியவர்களோ தலைக்கோலிகள் எனும் ஆரணங்குகள் ஆவர்.

ஆடவல்லான் முன்பு ஆடிய அணங்குகள்

ஆடவல்லானே ஆரூர் அரசிகளின் நடனம் கண்டு களித்து உள்ளான். அத்தகைய பெரும் பேறு பெற்ற அந்நங்கையர்களின் வரலாற்றையும், அவர்களுக்கு சமுதாயம் கொடுத்த மதிப்பையும் வரலாற்று அடிப்படையில் அறிய வேண்டியது இன்றியமையாத ஒன்று. இதனை ஆடற்கலை வளரவேண்டும் என உயரிய நோக்கோடு ஆக்கம் பல அளித்த ''சிவபாத சேகரன்'' என தன்னை அழைத்துக்கொண்ட முதலாம் இராசராச சோழனின் காலத்திலிருந்து ஆராய்வோம். இப்பெருமன்னன் ''தென்திசை மேரு'' (தெட்சிணமேரு) என உலகமே போற்றும் தஞ்சைப் பெருங்கோயிலை எடுத்தான். அங்கு இயல், இசை, கூத்துபோன்ற எல்லாக் கலைகளுமே வளர ஆக்கம் அளித்தான். தான் அளித்த ஆக்கம் அத்தனையுமே கல்லிலும் எழுதினான். அப்பெருந்தகை அவ்வாறு எழுதிய ஓர்சீரிய பண்பினால் இன்று நாம் நமது திருவாரூர் ஆடல் அரசிகளுக்கு அவன் அளித்த ஆக்கமும் ஊக்கமும்என்னஎன்பதனைத் தெளிவாக அறிய முடிகிறது.

இப்பெருமகன் தனது சோழ மண்டலம் முழுவதும் உள்ள பல்வேறு ஊர்களில் உள்ள திருக்கோயில்களில் பணிபுரியும் ஆடல் மகளிரில் தலைசிறந்த நாட்டிய நங்கைகளை தேர்ந்தெடுத்து தஞ்சைப் பெருங்கோயிலில் எப்போதுமே நடனம் புரிய நியமித்தான். இவ்வாறு அவன் நியமித்த ஆடல் அரசிகளின் எண்ணிக்கை 400க்கும் மேலாகும். இப்பெண்ணரசிகள் மட்டுமின்றி நட்டுவஞ் செய்ய நட்டுவனார்கள், கானம் பாடுபவர்கள் (கானபாடி) வங்கியம் புரிபவர்சள், பாடவியம் புரிபவர்கள், உடுக்கை வாசிப் பவர்கள், வீணைவாசிப்பவர்கள், ஆரியம் பாடுபவர்கள், தமிழ் பாடுபவர்கள், கொட்டி மத்தளம் அடிப்பவர்கள், முத்திரைச் சங்கு ஊதுபவர்கள், பக்க வாத்தியக்காரர்கள், காந்தர்விகள், அனுக்கர்கள், (ஆடல் புரியும் ஆண்கள்) சகடை கொட்டிகள், அரங்கத்தில் பணிபுரியும் ஆண்கள் இவ்வாறு பலரை நியமித்த தோடன்றி இவர்களை மேற்பார்வையிடும் அதிகாரிகளும், நடனப் பெண்களுக்கும், காந்தர்விகளுக்கும் நாயகம் செய்ய (உதவி வேலைகள் செய்ய) பெண்களையும், இவர்களின் கணக்குகளை எல்லாம் கவனிக்க கர்ணத்தார்களையும் (Clerks) நியமித்தான்.

இசைவாணர்கள் இசை முழங்க, ஆரியமும் தமிழும் பாட, தாளங்கள் முழங்க, தஞ்சை ஈசன் முன்பு தினம்தினம் இந்த நானூறு ஆடலரசிகளும் ஆடல் புரிந்தனர். இக் கண்கொள்ளாக் காட்சியை ஒரு நிமிடம் நினைத்து பாருங்கள். எத்தனை அழகு இருந்திருக்கும்-எவ்வளவு கும்பீரம்-எத்தனைச் சிறப்பு

மாமன்னன் இவ்வாறு நியமித்த நானூறுக்கு மேற்பட்ட இவ்வாடல் மகளிருக்கு அளித்த வசதிகளைச் சற்று நோக்குவோம் இவர்களுக்கென திருக்கோயிலுக்கு அருகேயே இரண்டு நீண்ட தெருக்களை அமைத்தான். ஒவ்வொரு தெருவிலும் ஒவ்வொரு வரிசையிலும் நூறு வீடுகளுக்கு மேல் அமைத்தான். இவ்வாறு அமைக்கப்பட்ட நானூறு வீடுகளுக்கும் கதவு இலக்கங்களும் கொடுத்தான். இவ்வாறு அமைத்த அவ்விரு தெருக்களுக்கும் **தெற்குத் தளிச்சேரி** என்றும் **வடக்குத் தளிச்சேரி** என்றும் பெயரிட்டான்.

இந்த நானூறு மகளிரையும் இவ்வீடுகளில் குடியேற்றினான். குடியேற்றியது மட்டுமன்றி இன்ன இலக்கமுள்ள வீடு இன்ன ஊர், இந்த நங்கைக்கு என்றும் பிரித்தான். இவர்களுக்கு திருக் கோயிலில் பல சலுகைகள் அளித்ததோடு மட்டுமன்றி ஆண் டொன்றுக்கு நங்கை ஒருத்திக்கு நூறு கலம் நெல்லும், சம்பளமும் கொடுத்தான். அந்த நெல்லை அளக்கும் மரக்காலின் பெயரைக் குறிப்பிடும்போதுகூட இம்மன்னன் ''ஆடவல்லான்'' என்னும் மரக்காலால் அளந்ததாகவே குறிப்பிடுகிறான். மேலும் பணி உறுதி கொடுத்தமையை இவர்கள் வாழ்நாள் முழுவதும் அனுபவிக்கும் வண்ணம் கல்லில் எழுதியுள்ளான். இம்மகளிர் தாங்கள் இறக்கும் தருவாயிலோ, இயலாமல் போனாலோ அல்லது வெளிநாட்டுக்குச் செல்ல நினைத்தாலே, அவர்களோ, அவர்களது வர்க்கத்தாரை நியமித்துக்கொள்ளவும் உரிமை அளித்தான், அவ்வாறு நியமிக்கப்படுபவர் தகுதி இல்லாதவர் களாக இருந்துவிட்டால் அவர்களை நீக்கிவிட்டு புதிய ஒருவரை நியமிக்கவும் உரிமை அளித்தான். இதிலிருந்து இப்பெண்களுக்கு தகுதிகள் எவ்வளவு அவசியம் என்பது நோக்குதற்குரியதாகும். இவ்வாறு முதல் ராஜராஜன் தஞ்சையில் நடனக் கலைக்கு உலகிலேயே எவரும் செய்யமுடியாத அளவு செய்து அற்புத ஆடற் கலையை வளர்த்தான்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தஞ்சைப் பெருங்கோயிலில் ஒளிவிட்ட நடனக்கலையின் பெருமையையும், மாமன்னனின்

ஆக்கத்தையும் கண்டோம். இப்பெருமையின் சிறப்பில் நம் திருவாரூர் திருக்கோயிலின் பங்கு எவ்வளவு என்பது இன்னும் சிறப்புடைய ஒன்று. தஞ்சையில் இராஜராஜனால் அமைக்கப் பட்ட தெற்குத் தளிச்சேரியின் தென் சிறகில் (South wing) வசித்த வர்களின் பட்டியலை கல்வெட்டில் உள்ளபடியே காண்போம்...,

1. முப்பத்தி எட்டாம் வீடு திருவாரூர் பெரிய தளிச்சேரி நக்கன் சிருடையாளுக்கு பங்கு ஒன்றும்

2. முப்பத்தொன்பதாம் வீடு இவ்வூர் பிரமீச்வரத்து நக்கன் பரவைக்கு பங்கு ஒன்றும்

3. நாற்பதாம் வீடு இவ்வூர் பெரிய தளிச்சேரி நக்கன் மழலைச் சிலம்புக்கு பங்கு ஒன்றும்

4 நாற்பத்தியோராம் வீடு இவ்வூர் திருவரநெறி நக்கன் ஆராவமுதுக்கு பங்கு ஒன்றும்

5 நாற்பத்திரண்டாம் வீடு இவ்வூர் அருமொழி ஈச்வரத்து நக்கன் சிகண்டிக்கு பங்கு ஒன்றும்

6. நாற்பத்தி மூன்றாம் வீடு இவ்வூர் உலகீச்வரத்து நக்கன் பாரந்தெருமானுக்கு பங்கு ஒன்றும்.

7. நாற்பத்தி நான்காம் வீடு இவ்வூர் திருவரநெறி நக்கன் நாராயணிக்கு பங்கு ஒன்றும்

8. நாற்பத்தி ஐந்தாம் வீடு இவ்வூர் இத்தளி நக்கன் அரவத்துக்கு பங்கு ஒன்றும்

9. நாற்பத்தாறாம் வீடு திருவாரூர் பிரமீச்வரத்து நக்கன் சோதி விளக்குக்கு பங்கு ஒன்றும்

10. நாற்பத்தேழாம் வீடு இவ்வூர் உலகீச்வரத்து நக்கன் திகைச் சுடருக்கு பங்கு ஒன்றும்

11. நாற்பத்தெட்டாம் வீடு இவ்வூர் பிரமீச்வரத்து நக்கன் ஆலிக்கு பங்கு ஒன்றும்

தெற்கு தளிச் சேரி வட சிறகு

12. நான்காம்வீடு திருவாரூர் பெரிய தளிச்சேரி நக்கன் மாதேவிக்கு பங்கு ஒன்றும்

13. ஐந்தாம் வீடு இத்தளி நக்கன் திரு மூலட்டானத்துக்கு பங்கு ஒன்றும்

14. ஆறாம் வீடு இவ்வூர் பிரம்மீச்வரத்து நக்கன் ஆரூர்க்குப் பங்கு ஒன்றும்

15. ஏழாம் வீடு இவ்வூர் பெரிய தளிச்சேரி நக்கன் கண்டியூர்க்குப் பங்கு ஒன்றும்

16. எட்டாம் வீடு இவ்வூர் உலகீச்வரத்து நக்கன் ஆச்சத்துக்குப் பங்கு ஒன்றும்

17. ஒன்பதாம் வீடு இவ்வூர் திருவரநெறி நக்கன் அரவத்துக்குப் பங்கு ஒன்றும

18. பத்தாம் வீடு இவ்வூர் இத்தளி நக்கன் கரம்பியத்துக்கு பங்கு ஒன்றும்

19. பதினொன்றாம் வீடு இவ்வூர் பெரிய தளிச்சேரி நக்கன் கண்டியூர்க்குப் பங்கு ஒனறும்

20. பனிரெண்டாம் வீடு இத்தளி நக்கன் வீதி விடங்கிக்கு பங்கு ஒன்றும்.

21. ஐம்பத்தொன்பதாம்வீடு திருவாரூர் திருவரநெறி ஈச்வரத்து நக்கன் நம்புகரிக்கு பங்கு ஒன்றும்

22. அறுபதாம வீடு இவவூர் பெரிய தளிச்சேரி நக்கன் திருமூலட்டானத்துக்கு பங்கு ஒன்றும்.

23. அறுபத்தொன்றாம் வீடு இவ்வூர் பிரம்மீச்வரத்து நக்கன் சோம நாதிக்குப் பங்கு ஒனறும்.

24. அறுபத்திரண்டாம் வீடு இவ்வூர் பெரிய தளிச்சேரி நககன் இராமிக்கு பங்கு ஒன்றும்.

25. அறுபத்து மூன்றாம் வீடு இவ்வூர் பிரம்மீச்வரத்து நக்கன் எச்சு மண்டைக்குப் பங்கு ஒன்றும்.

26. அறுபத்துநான்காம் வீடு இவ்வூர் திருமண்டளி நக்கன் சுந்தர சோழிக்கு பங்கு ஒன்றும்.

27. அறுபத்தைந்தாம்வீடு இவ்வூர் உலகீச்வரத்து நக்கன் பந்தலுக்குப் பங்கு ஒன்றும்.

வடக்கில் தளிச்சேரி — தென்சிறகு

28. தலைவீடு திருவாரூர் பிரம்மீச்வரத்து நக்கன் மூவர் கண்க்குப் பங்கு ஒன்றும்.

29. ஏழாம் வீடு திருவாரூர் பெரிய தளிச்சேரி நக்கன் பந்தலுக்குப் பங்கு ஒன்றும்

30. எட்டாம் வீடு இவ்வூர் நக்கன் . . . . . பங்கு ஒன்றும்

31. பத்தாம் வீடு திருவாரூர் பெரிய தளிச்சேரி நக்கன் வரையாச் சிலைக்குப் பங்கு ஒன்றும்.

32. பதினாராம் வீடு திருவாரூர் அருமொழி ஈச்வரத்து நக்கன் மோடிக்குப் பங்கு ஒன்றும்.

33. பதினேழாம் வீடு இவ்வூர் நக்கன் கருவூாக்குப் பங்கு ஒன்றும்.

34. இருபத்தைந்தாம் வீடு திருவாரூர் திருவரநெறி ஈச்வரத்து நக்கன் சித்திரவல்லிக்குப் பங்கு ஒன்றும்.

35. இருபத்தெட்டாம் வீடு திருவாரூர் திருமண்டளி நக்கன் சீகண்டிக்குப் பங்கு ஒன்றும்.

36. இருபத்தொன்பதாம் வீடு இத்தளி நக்கன் குந்தவைக்குப் பங்கு ஒன்றும்.

37. முப்பத்தொன்றாம் வீடு திருவாரூர் பிரம்மீச்வரத்து நக்கன் பொன்னுக்குப் பங்கு ஒன்றும்.

38. முப்பத்துநான்காம் வீடு திருவாரூர் அருமொழி ஈச்வரத்து நக்கன் ஏக வீரிக்குப் பங்கு ஒன்றும்.

39. அறுபத்தொன்பதாம் வீடு திருவாரூர் பெரிய தளிச்சேரி நக்கன் சிகுருகூருக்கு பங்கு ஒன்றும்.

40. எழுபத்துமூன்றாம் வீடு திருவாரூர் பெரிய தளிச்சேரி நக்கன் பொன்னாலிக்குப் பங்கு ஒன்றும்.

41. எண்பத்து நான்காம் வீடு திருவாரூர் பெரிய தளிச்சேரி நக்கன் பொற்காளிக்குப் பங்கு ஒன்றும்.

42. எண்பத்தைந்தாம் வீடு இவ்வூர் உலகீச்வரத்து நக்கன்நிகை மாணிக்கத்துக்குப் பங்கு ஒன்றும்.

43. தொண்ணூறாம்வீடு திருவாரூர் திருமண்டளி நக்கன் நித்தங்கைக்குப் பங்கு ஒன்றும்.

வடக்கில் தளிச்சேரி வடசிறகு

44. ஏழாம்வீடு திருவாரூர் பெரிய தளிச்சேரி நக்கன் சிறிய அரவத்துக்குப் பங்கு ஒன்றும்.

45. பதினாறாம்வீடு திருவாரூர் அருமொழீச்வரத்து நக்சன் பூலோக மாணிக்கத்திற்குப் பங்கு ஒன்றும்.

46. பதினேழாம்வீடு இவ்வூர் பெரிய தளிச்சேரி நக்சன் தேவடிக்குப் பங்கு ஒன்றும்.

47. இருப்பத்தாறாம் வீடு திருவாரூர் பெரிய தளிச்சேரி நக்கன் காமுத்ரிக்கு பங்கு ஒன்றும்.

48. இருபத்தொன்பதாம் வீடு திருவாரூர் திருமண்டளீச்வரத்து நக்கன் கருவூர்க்குப் பங்கு ஒன்றும்.

49. அறுபத்தொன்றாம்வீடு திருவாரூர் உலகீச்வரத்து நக்கன் பட்டாலிக்குப் பங்கு ஒன்றும்.

50. அறுபத்தாறாம் வீடு திருவாரூர் பெரிய தளிச்சேரி நக்கன் வில்லவன் மாதேவிக்குப் பங்கு ஒன்றும்.

51. எழுபத்தெட்டாம் வீடு திருவாரூர்ப் பெரிய தளிச்சேரி நக்கன் வெம்பிக்குப் பங்கு ஒன்றும்.

என்று பட்டியலோடு கூறுகிறது. சோழ மண்டலம் முழுவதிலுமிருந்து தேர்ந்தெடுத்த 400க்கும் மேற்பட்ட ஆடல் அரசிகளில் 51 பேர் திருவாரூர் திருக்கோயிலில் இருந்து தேர்ந்து எடுக்கப்பட்டார்கள் என்றால்' ஆரூர் கோயில் ஆடல் வளர்த்த பாங்கை நன்குணர முடிகிறது.

தஞ்சைக் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படும் மழலைச் சிலம்பு ஆரா அமுது, நாராயணி, ஜோதி விளக்கு, வீதிவிடங்கி, பூலோக மாணிக்கம், அனவரத சுந்தரி, ராஜசூளாமணி, வில்லவன்மாதேவி

போன்ற இவ்வெழில் நாட்டிய தாரகைகள் எல்லாம் திருவாரூர் திருக்கோயில்களான பெரியதளி, (திருமூலட்டானம் எனும் பூங் கோயில்) அரநெறி, அருமொழி ஈச்வரம், உலகீச்வரம், பிரம்மீச் வரம், திருமண்டளி போன்ற திருக்கோயில்களில் தினம் தினம் நடம் புரிந்தவர்கள் என்பதையும் அறிகிறோம்.

பதியிலாளர், நக்கன், அனுக்கியர் என்றெல்லாம் அழைக்கப் பட்ட இந்நாட்டியநங்கையர்கள் சமுதாயத்திலும் சிறந்த அந்தஸ் துடன் வாழ்ந்தனர் என்பதை நமது திருவாரூர் கல்வெட்டுக் களாலேயே அறியலாம். இவர்களது ஆடல்கலை இறையுணர் வோடு இணைந்து இருந்தமையால் இவர்கள் யோக்கியராய் இருந்திருக்கின்றனர். அருகதையற்றவர்கள் இப்பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டனர் என்பதையும் தஞ்சைக் கல்வெட்டுக்களால் அறிந்தோம்.

மூன்றாம் இராஜேந்திர சோழனின் 20 ஆம் ஆட்சியாண்டில் (கி. பி. 1266ல்) திருவாரூரில் அழகப்பெருமாள், விசையபாலர் என்ற இருவர் திருக்கோயிலில் பணிபுரியும் தவசியர்களுக்காக நிலம் வாங்கி அளித்தனர். அவ்வாறு இவர்கள் நிலம்வாங்கியது திருக்கோயில் பதியிலாராகிய அழகிலும் அழகிய தேவத் தலைக் கோலி என்ற நாட்டிய நங்கையிடம் இருந்து விலைக்கு வாங்கிய தாக ஓர் சாசனம் (தி. க. எண் 43) கூறுகிறது இக்கல்வெட்டுச் சான்றால் இவர்கள் தங்களுக்கென நிலங்களை பராமரித்து வரும் அளவு செல்வச் செழிப்புடன் இருந்தனர் என்பதை அறிகிறோம். மேலும் இக்கல்வெட்டுச் சாசனங்கள் இந்நங்கையர்களைக் குறிப் பிடும் பாங்கு இவர்களுக்கு சமுதாயத்தில் உயரிய அந்தஸ்து இருந்ததென்பதைத் தெளிவாக உணர்த்துகின்றன திருவாரூர் கோயில்பதியிலாராக விளங்கிய திருவொற்றியூர் நக்கன்என்பவள் திருமறைக்காட்டு (வேதாரண்யம்) ஈசன் முன்பு ஓர் நுந்தா விளக்கை ஏற்றுவித்து, அதனைப் பராமரிப்பதற்காக தொண்ணூறு ஆடுகளையும் அளித்தாள் என்று திருமறைக்காட்டு சாசனம் மூலம் அறியும்போது இவர்களது தெய்வபக்தி மட்டு மின்றிஇவர்களது செல்வச் செழுமையையும் சமுதாயத்திலிருந்த உயர்ய நிலையும் தெளிவாகக் காணமுடிகிறது.

நாட்டிய இயலின் வகைபாடுகளையும், கூத்தி பிரானாகிய சிவபெருமான் ஆடும் தாண்டவங்களையும், அவற்றின் தத்துவங் களையும் முன்பு கண்டோம். பரதத்தைப் பொறுத்தவரை அங்க

நளினங்கள், கரங்களின் முத்திரை, முகத்தின் பாவம், கண்களின் எழில் இவை எல்லாமே பேச வேண்டும். ஆடவல்லானே ஆடிய திருக்கோயிலென அழைக்கப்படும் தில்லையம் பதியிலே கிழக்கு மற்றும் மேற்கு கோபுரங்களில் பரதத்தின் பல்வேறு காரணங்களை புடைப்புச் சிற்பமாகப் படைத்துள்ளனர். அதிலும் சிறப்பாக கீழைக்கோபுரத்திலே பரத சாஸ்திர விளக்கத்துடன் (வடமொழி கல்வெட்டெழுத்துக்களில்) கல்லில் பொளிந்து கவின்பெறத் துலங்கும் 93 கரணங்களைக்காணலாம். இதே போன்று தஞ்சைப் பெருவுடையார் கோயிலின் கருவறையின் மேல் நிலையில் ஆடுங் கூத்தனே இத்தகைய கரணங்களைப் புரியும் வண்ணம் காட்டப் பட்டுள்ளது.

தில்லையிலும், தஞ்சையிலும் இத்தகைய எழில் ஓவியங்களைப் படைத்த அதே மன்னர்களின் வழியில் தோன்றிய மூன்றாம் குலோத்துங்கன் தானும் இக்கலைக்கென திருவாரூரில் செய்த தொண்டு கலை உலகும், நாட்டிய உலகும் என்றென்றும் போற்றக் கூடிய ஒன்று. தஞ்சையிலும், தில்லையிலும் போற்றத்தக்க சிற்பங்களாயினும் இவை அனைத்தும் புடைப்புச் சிற்பங்களே. பரதத்தின் முழு எழிலையும் இப்புடைப்புச் சிற்பங்களில் காணல் சற்று கடினமே. இதனை முழுமையாக உணர்ந்தான் மூன்றாம் குலோத்துங்கன். தனது சேர, பாண்டிய நாட்டின் வெற்றியின் சின்னமாகப் படைத்திட்ட திருவாரூர் கீழை ராஜ கோபுரத்தின் எல்லாத்திக்குகளிலும் கபோதகத்தின் கீழே ஒவ்வொரு கால்களின் பலகைகளின் மேல் பரதக் கலையின் பல்வேறு கரணநிலைகளைக் காட்டும் எழிலுறு பாவையர்களின் முழுச் சிறபங்களை தனித் தனியே எல்லா அங்கங்களின் பாவங்களும் எழிலுடன் துலங்கும் வண்ணம் செய்து, பின்பே அவற்றில் இணைத்துள்ளான். இச் சிலைகளின் சிறப்பு அம்சம் சிற்பத்தில் சிறந்ததொரு நேர்த்தியும், பாவ முத்திரையும் சிறப்பாகப் படைக்கப்பட்டுள்ளமைதான், இதுமட்டுமன்றி வன்மீகாதிபதியின் சபா மண்டபம் ஒன்றையும் (நடன மன்றம்) எடுத்துள்ளான் எனச் சாசனங்களால் அறிகிறோம்.

இத்திருவாரூர் நடனப் பாவையர் சிற்பங்கள் சோழர் கால நடன சிற்பங்களின் கலைவளர்ச்சியின் மிக உயரிய இறுதிநிலை இதுவெனத் துணிந்து கூறலாம். இத்தகைய புகழ்பெற்ற கரணங் களாக பல சிற்ப பாவையர்களின் சிலைகள் இடம்பெற்றுள்ளன;

இச்சிற்பங்களின் அழகை நோக்கும் போது இதனைப் படைத்த இம்மன்னவன் தன் முன்னவனாகிய இராஜ இராஜன் காலத்தில், 51-ஆடல் மகளிர் திருவாரூர் கோயிலில் இருந்து சென்று தஞ்சைப் பெருங்கோயிலைச் சிறக்கச் செய்த செயலை நினைவு கூர்ந்தனன் போலும். அதனால்தான் அப்பாவையர்களை ஜீவனுள்ள கற்படிம மாக்கி என்றென்றும் இவர்கள் ஆரூர் கோயிலில் ஆடட்டும் எனச் செய்தானோ என்று எண்ணத் தோன்றுகிறது. எவ்வகையானோ இன்று பல படிமங்கள் கையிழந்தும் உறுப்புகள் இழந்தும் உள்ளன.

இத்திருக் கோயிலில் ஆடும் கூத்தபிரானான நடராசப் பெருமானின் செப்புத் திருமேனி அரநெறியாம் தனிக் கோயிலில் மட்டும்தான் உண்டு. பூங்கோயிலில் திரு மூலட்டானத்தில் ஆட வல்லான் திருமேனி கிடையாது. எனவே இங்கு அமர்ந்த கோலத்தில் உள்ள வீதிவிடங்கனே ஒவ்வோர் ஆண்டும் நடம் புரிகிறார். இதற்கு ''அஜபா'' நடனம் எனப் பெயர். இதனை ''அஜபா கல்பம்'' எனும் வடமொழி நூல் சிறப்புற விவரிக்கிறது. இந்நடனம் ஒவ்வொரு உயிரின் இயக்கமான மூச்சு உள்ளும் வெளியும் போய் வரும் உன்னத இயக்கத்தை உணர்த்தும் தாண்டவமாகும். இவ்வகை நடனமாக ''அஜபா நடன விழா'' ஒவ்வோர் ஆண்டும் பங்குனித் திங்களில் பெரு விழாவாக இன்றும் இத்திருக் கோயிலில் நடைபெற்று வருகிறது.

''அஜபா'' நடனம் பற்றிய முற்கால இலக்கியங்கள், அல்லது கல்வெட்டுச் சாசனங்களில் குறிப்பிடப்படாததால், சோழர்கள் காலத்தில், 13ஆம் நூற்றாண்டு இறுதி வரை இவ்வகை நடனம் இத்திருக் கோயிலில் நடைபெறவில்லை. எனக் கூறலாம். 14ம் நூற்றாண்டுக்குப் பின்பு தஞ்சை நாயக்கர்கள் காலத்தில் தான் வீதிவிடங்கன் வழிபாட்டில் சில மாறுதல்கள் ஏற்பட்டு உள்ளது. அது முதல் ''அஜபா'' நடன வழிபாடும் தொடர்ந் துள்ளது எனக் கூறலாம்.

சப்த விடங்கத் தலங்களில் ஒன்றான திருவாரூரில் அஜபா நடனம் பின்பற்றப் படுவதால் இத்தலத்து வழிபாட்டு முறையின் அடிப்படையில் அமைந்த மற்ற ஆறு விடங்க தலங்களிலும் ஆறு விதமான நடனங்கள் பின்பற்றப் படுகின்றன. திருநள்ளாற்றில் உள்ள நாக விடங்கர் ''உன்மத்த நடனம்'' ஆடுகிறார். இது பித்தன் ஆடுவது போன்ற ஆட்டமாகும். நாகை காரோணத்தில் உள்ள சுந்தர விடங்கர் ''பராவாரதரங்க நடனம்'' ஆடுகிறார்,

இது கடல் அலைகள் எழுவது போன்றே இருக்கும். திருக்காராயிலில் அமைந்த ஆதிவிடங்கர் ''குக்குட நடனம்'' ஆடுகிறார். இது கோழியைப் போல் ஆடும நடனமாகும். அடுத்து திருக்குவளையில் (திருக்கோளிலி) உள்ள அவனி விடங்கர் ''பிருங்க நடனம்'' ஆடுகிறார். இது வண்டு மலருக்குள் குடைந்து குடைந்து செல்லுதல் போல் இருக்கும். திருவாய்மூரில் உளள நீல விடங்கர் ''கமல நடனம்'' ஆடுகிறார். இது தாமரை மலர் அசைவதுபோல் இருக்கும். கடைசியாக திருமறைக் காட்டில் உள்ள புவனி விடங்கர் ''ஹம்ஸ பாத நடனம்'' ஆடுகிறார். இது அன்னப் பறவை அடிஎடுத்து வைத்தல் போல் இருக்கும். எனவே சப்த விடங்க தலங்கள் அனைத்துமே நடனத்தை அடிப்படையாகக் கொண்ட வழிபாட்டுத் திருக்கோயில்களாகும். இவற்றுள் திலகமென விளங்கும் ஆரூர் கோயிலின் ஆடல் தனிச்சிறப்பைக் கூறவும் வேண்டுமோ.

14-ஆம் நூற்றாண்டிற்குப் பின்பு கட்டப்பட்டதாகக் கருதப் படும் மேற்கு கோபுரத்திலும் பரதத்தின் பல முத்திரைகள் கல்லிலே வடிக்கப்பட்டுள்ளன. இவை சோழர் கால சிற்பங்களுடன் ஒப்பிடும் போது சற்றுக் கலை அம்சம் குறைவு பட இருப்பினும் பல்வேறு கரணங்களை சிறப்புறக் காட்டுகின்றன.

ஆரூர் ஓவியத்தில் அற்புத நாட்டியங்கள்

தேவாசிரிய மண்டபத்தில் காணப்படும் எழில் ஓவியங்கள் ஆரூரின் பெருமைக்கு மேலும் ஓர் அணிகலனாக அமைந்தவை யாகும். இவ்ஓவியம் தியாகராஜப்பெருமானின் புராணக்கதையை கூறும் வகையில் அமைந்திருந்தாலும், ஆடுந்தீக்கூத்தன் வளர்த்த அற்புத நடனத்தின் பல்வேறு அம்சங்களை கூறும் வகையில் அமைந்துள்ளன.

இவ்வோவியத் தொகுதியில் நடனக்கலைக்கு கொடுக்கப்பட்டு உள்ள முக்கியத்துவம் சிறப்பான ஒன்றாகும். மேலும் இது 18-ஆம் நூற்றாண்டில் தமிழகத்தின் நாட்டியக் கலையின் நிலையினை எடுத்துச் சொல்லும் வரலாற்றுச் சான்றாகவும் அமைந்துள்ளது. இதில் முதலாவதாக முசுகுந்தமன்னன் அயோத்தியில் தன் சபையில் அமர்ந்திருக்கும் காட்சியை அடுத்து அவன் காணும் நடனக்காட்சி வடிக்கப்பட்டுள்ளது. தாளமிடு பவர்கள் புடை சூழ எழில் நங்கை ஒருத்தி ஆடுங் காட்சி உயரிய ஒன்றாகும்.

இதே போன்று தேவலோகக் காட்சிகளாக உள்ள பல ஓவியத் தொகுதிகளில் தேவமங்கைகளான ஊர்வசி, திலோத்தமை, ரம்பை, மேனகை போன்றவர்கள் ஆடும் அரியகாட்சியும் உள்ளது, அவர்கள் ஆடும் காட்சியின் கீழே அவர்களது பெயர்களும் எழுதப் பட்டுள்ளன. அடுத்து திருவாரூர்த்திருக்கோயிலும், திருவீதியிலும் நடைபெறுவதாக உள்ள நடனக் காட்சிகள் பலவற்றுள் நாட்டிய அணங்குகள் ஆடும் நடனத்தின் பெயர், மற்றும் நட்டுவனார்களின் நட்டுவாங்கமும் முட்டுக்காரர்களின் தாளமும் குறிப்பிடப்பட்டு அன்று நடந்த அரிய நடனங்களை இன்று நாம் காணும் வகையில் வண்ண ஓவியங்களாக மிளிர்கின்றன,

மன்னரின் கைவண்ணத்தில் மலர்ந்திட்ட நாட்டியங்கள்

சோழ மன்னர்களைப் போலவே தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்கள் ஆடற்கலையை ஆரூரில் போற்றி வளர்த்தனர். இம்மன்னர்கள் வரிசையில் கி. பி. 1684-1710 வரை ஆட்சி புரிந்த சாஹஜி (சகசி) மன்னனின் பணி குறிப்பிடத் தக்க ஒன்றாகும். சிறந்தகல்வி மானாகவும இசை வல்லுநனாகவும் திகழ்ந்த இம்மன்னன் தன் குல தெய்வமாக போற்றியது ஆரூர் தியாகப் பெருமானையே, இம மன்னவன் தானே யாத்த நூல்கள் வரிசையில் குறிப்பிடத்தக்க நாட்டிய நாடக நூல்கள் ''பல்லக்கி சேவா ப்ரபந்தம்'' ''சங்கர காளீ நடன சம்வாதம்'' —என்பனவாகும்.

1. பல்லக்கி சேவா பிரபந்தம் (சங்கர பல்லக்கி சேவா பிரபந்தம்)

தெலுங்கு மொழியில் சகசி மன்னனால் எழுதப்பட்ட இந்நூல் இசையையும் ஆடலையும் மையமாகக்கொண்டு ஆரூர் தியாகப் பெருமானின் பெருமைகள் பல பேசிடும் நாட்டியநாடக நூலாகும்

பள்ளியறைக்கு தியாகப் பெருமான் வாராமையால் வருத்த முற்று நின்ற பார்வதிதேவியின் துன்பம் போக்க நினைத்த தோழியர் தியாகரிடம் தூது செல்கின்றனர். தோழியரின் வேண்டுகோளுக்கிணங்கிய தியாகப்பெருமான் அலங்கரிக்கப்பட்ட பல்லக்கில் அமர்ந்து, முன்னே செல்லும் தோழியர் இசையுடன் ஆடும் நாட்டியத்தை களித்துக்கொண்டே பள்ளியறை செல்வதை இந்நூல் விவரிக்கின்றது.

மிக அருமையான இந்த நாட்டிய இசை நாடகம் சகசி மன்னன் காலத்திலிருந்தே இத்திருக்கோயிலில் நாட்டிய தாரகையரால் நடிக்கப்பட்டு வந்திருக்கிறது. ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் தியாகப் பெருமான் பள்ளியறைக்கு பல்லக்கில் செல்லும்போது இந்த இசை நாட்டியம் அபிநயத்துடன் நடிக்கப் படும். பல்லக்கிற்கு முன்பாக பக்கத்திற்குப் பதினாறு பேராக ஆரணங்குகள் இருபுறமும் நின்று கொண்டு பதியங்களையும் தருக்களையும் பாடியும் ஆடியும் செல்வர். சிறந்த தெலுங்கு கேய நாட்டியமான இது தொடர்ந்து நடைபெற இம்மன்னனே 10 வேலி நிலத்தை ஆடல் மகளிர்க்கு மான்யமாக அளித்துப் போற்றினான் என்றால் இம்மன்னவனின் திறனும் ஆடற்கலையில் கொண்ட நாட்டமும் தெள்ளிதின் விளங்கும்.

2. சங்கர காளீ சம்வாதம் (தியாகராஜ விநோத சித்ர பிரபஞ்ச நாடகம்)

தஞ்சை மராட்டிய குலத்திலகம் சகசி மன்னனாலேயே எழுதப் பட்ட இந்த நூலும் நாட்டியத்தை மையமாகக்கொண்டு எழுதப் பட்டதாகும். வடமொழி, தெலுங்கு மராட்டிய மொழிகளில் அமைந்த இந்த சுவடி நூல் தெலுங்கு லிபியிலேயே எழுதப் பட்டுள்ளது. (இந்நூல் தஞ்சை சரஸ்வதி மகால் நூலகத்தில் ஏட்டுச் சுவடியாக உள்ளது. இந்நூல் ஸமஸ்க்குருத தமிழ் எழுத்துக்களின் புத்தகம் வெளிவர உள்ளது.

நாடகத்தின் தொடக்கமான முதலங்கமும், இறுதி அங்கமும் வடமொழியிலேயே உள்ளன. சகசிமன்னன் இயற்றிய பத சாகித் தியங்களைக்கொண்டு சங்கரனுக்கும் பார்வதிக்கும் நடனத்தில் போட்டியை ஏற்படுத்தி, அவர்களது போட்டியில் எந்த நாட்டியத்தை போட்டிக்காக எடுத்துக்கொள்வது என சிந்தித்து, கடைசியில் ராஜ்ஜிய நாட்டியமான சகசிமன்னன் நாட்டின் நாட்டியத்தையே தேர்ந்தெடுத்து ஆடி அதில் பார்வதி தோற்பதாகக் கதை அம்சம் காணப்படுகிறது.

தியாகப்பெருமானுக்காகவே இம்மன்னனால் அர்ப்பணிக்கப் பட்ட இந்தநூலின் வாயிலாக இம்மன்னவன் ஆடற்கலையில் செலுத்திய நாட்டமும், அதற்கு ஆரூர் திருக்கோயில் எத்தகைய நாட்டிய கேந்திரமாய் இருந்தது என்பதும் தெளிவாகிறது.

இதுகாறும் கண்ட ஆரூர் இறை தத்துவங்கள் ஆடல் நிகழ்ச்சிகள், மன்னர் பெருமக்கள் அளித்த ஆக்கம், அவற்றை பிரதிபலிக்கும் சிற்பங்கள், கல்வெட்டுகள், ஓவியங்கள், இலக்கியங்கள் இவை அனைத்தையும் தொகுத்து நோக்கும்போது அன்று முதல் இன்று வரை அரிய இக்கலை தொடர்ந்து சிறப்புடன் போற்றப்படும் ஓர் ஊர் திருவாரூர் என்றே கூறலாம். எப்போதுமே கீதவோசையும் நடன ஓசையும் நிறைந்த ஓர் அற்புதத் திருஊராக ஞானசம்பந்தர் திருவாரூரைக் கண்டதால்தான்

''கெண்டை கொண்டலர்ந்த கண்ணினார்கள்
கீதவோசைபோய்
அண்டரண்டம் ஊடலுக்கும் அந்தன் ஆரூரென்பதே :
நிரைத்த மாளிகைத் திருவின் நேரனார்கள் வெண்ணகை
அரத்த வாய் மடந்தைமார்கள் ஆரூர் என்பதே''

என்று போற்றிப் புகழ்ந்தார். ஆரூர் வளர்த்த இந்த ஆடற் கலையைப் போற்றிப் பணிவோமாக. இதுவே ஆரூரனாம் ஆடவல்லானுக்கு நாம் செய்யும் அஞ்சலியாகும்.



மனுநெறியும் மன்னவன் செங்கோலும்

மனுநெறியும் மன்னவன் செங்கோலும்

கேக்கிழார் காட்டும் மன்னவன் நீதி

தமிழகத்தின் பெருமைக்குக் குறிப்பாக சோழப் பெரு மன்னர்களின் சிறப்புக்கு திலகமாய்த் விளங்குவது மனுநெறிப்படி வாழ்ந்து காட்டிய சோழ மன்னன் ஒருவனது கதையே. இதனால் தான் தமிழ் இலக்கியங்கள் பலவும் இந் நிகழ்ச்சியைப் பெருமையோடு கூறிக்கொள்கின்றன.. உதாரணமாக ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான சிலம்பில் :

> ''வாயிற் கடை மணி நடுநா நடுங்க
> ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சு சுடத்தான்ன்த
> அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்
> பெரும்பெயர்ப் புகார் என் பதியே'' – என்ற

கண்ணகியின் கூற்றின்[1] வாயிலாக மனுவெனும் பெருவேந்தனின் கதையை சுருக்கமாக யாத்துள்ளார்.

இத்தனைப் பெருமை மிகு நிகழ்ச்சியினை செயங்கொண்டான் தம் கலிங்கத்துப் பரணியில்

> ''அவ்வருக்கன் மகன்ஆகி மனுமேதினி புரந்து
> அரியகாதலனை ஆவினது கன்று நிகரென்று
> எவ்வருக்கமும் வியப்ப முறைசெய்த....''

என்றும் கூறுகிறார். ''மையல் கூர் சிந்தனை யாவிற்கு முற்றத் திருத்தேரில் மைந்தனை யூர்ந்த மறவோனும்'' – என்று விக்கிரம சோழனுலாவும்; ''பார்மேல் மருளப் பசுவொன்றின் அம்பர் நோய் தீர உருளுந் திருத்தேர் உரவோன்'' – என்று குலோத்துங்கச்சோழ னுலாவும்; அறவாழி மைந்தன் மேல் ஊர்ந்தோன்''–என்று இராச சாச சோழனுலாவும்; ''வெய்யோனும் செம்மலைப் பண்டூர்ந்த தேரோனும்''–என்று சங்கர சோழனுலாவும்; மனுநெறியைப் பறை

சாற்றுகின்றன. அறவாழி மைந்தன்மேல் செலுத்திய இவ்வரிய நிகழ்ச்சி திருவாரூர் திருவீதியில் நடைபெற்று, ஆரூர் இறைவனாம் புற்றிடங்கொண்ட பெருமானாலேயே ஆட்கொள்ளப்பட்ட தென்றால் இத்திருக்கோயிலின் பெருமைக்கு இதனினும் சிறந்த சான்று வேண்டுமோ!

அரும் பெறற் புதல்வனை ஆழியில் மடித்து நீதி வழங்கிய மன்னவன் வரலாற்றைச் சிலம்பு மணிமேகலை, இலங்கையின் மகாவம்சம் முதலிய தொன்மை நூல்கள் கூறினாலும், பெரிய புராணம் எழுதிய சேக்கிழார் பெருமான் தமது திருத்தொண்டர் புராணத்தில் மிக அழகாகக் குறிப்பிடுகிறார். சமயக் குரவர்களின் வரலாறு கூறும் முன்பே, சேக்கிழார் தம் நூலில் முதலில் 'திருமலைச் சிறப்பாக' அகிலம் முழுதும் ஆட்டுவிக்கும் அம்மை யப்பர் அமர்ந்த கயிலை மலையின் சிறப்பைப் பாடுகிறார். அடுத்து திருநாட்டின் சிறப்பாக சோழ நாட்டின் வளமையைக் கண்முன் நிறுத்துகிறார். அதனை அடுத்து திருநகரச் சிறப்பாகக் கூறுவது ஆரூர் நகரின் சிறப்பேயாகும். புற்றிடங் கொண்ட ஈசனின் அருளால் நிகழ்ந்த இவ்வரிய நிகழ்ச்சியினை சேக்கிழாரின் கூற்றின் வாயிலாகவும், பின்பு ஈடில்லா சோழ மன்னன் ஒருவனது மனுச் சரித்திரக் கல்வெட்டுச் செய்தியாகவும் பிற்கால நூல்கள் சிலவற்றிலும் விரிவாகக் காண்போம்.

''அன்ன தொன்நகருக்கு அரசாயினான்
துன்னு வெங் கதிரோன் வழித்தோன்றினான்
மன்னுசீர் அநபாயன் வழிமுதன்
மின்னு மாமணிப் பூண் மனு வேந்தனே''[2]

—என மனுநீதிச் சோழனை அனபாயன் எனும் இரண்டாம் குலோத்துங்கனின் வழி முன்னவன் என்பதை முதலில் சுட்டிக் காண்பித்து அவனது கதையைத் தொடங்குகிறார். மண்ணில் வாழும் உயிர்களுக்கெல்லாம் காவலனாய் விளங்கிய இம்மன்னவன் மன்னுயிர்களை மகிழ்வித்ததோடல்லாமல் விண்ணவர்களையும் வேள்விகள் பல செய்து மகிழ்வித்தானாம். வெற்றி பொறுந்திய இவனது ஆணைச்சக்கரம் உலகத்தை சூழ்ந்துநிற்கவும், மனுநெறிப் படி வாழ்ந்தமையால் தன் பெயரினையும் மனுவெனவே கொண்ட தாகக் குறிப்பிடுகிறார். இவ்வாறு மனு நெறிப்படி வாழ்ந்த இம் மன்னவன் ஆரூர் புற்றிடங் கொண்ட பெருமானை இமைப் போதும் மறந்தானில்லை,

வண்மீக நாதனாம் இப்பெருமானுக்கு பூசனைக்குரிய நிவந் தங்கள் அனைத்தையும் சிவாகமங்களில் விதித்தவாறே ஆராய்ந்து நியமித்தானாம், இதனை அருட்புலவர்

''பொங்கு மாமணிப் புற்றிடங் கொண்டவர்
ஏங்கு மாகி இருந்தவர் பூசனைக்கு
ஆங்கண் வேண்டும் நிபந்தம் ஆராய்ந்துளான்
தூங்கு ஆகமஞ் சொன்ன முறைமையால்''[8]

—எனப் போற்றுகின்றார். இவ்வாறு புற்றிடங்கொண்ட பெரு மானைப் போற்றிய நல்தவத்தால் அவனது தேவியின் மணி வயிற்றில் இளஞ்சிங்கம் போன்ற, உலகமே போற்றும் மைந்தன் ஒருவன் பிறந்தானாம். தவ மேம்பாட்டால் பெற்ற இளங்குமரன் தினமும் முயற்சி செய்து சிவத்தை அடைவிக்கும் தெய்வீகக் கலை கள் பலவற்றையும் திருந்தக் கற்றதனோடு, குதிரை, யானை, தேர், படைக்கலம் முதலியவற்றின் தொழிற் கல்வியும் பயின்று, ''ஆன்மா முன்னர் செய்த பாவங்களின் பயனாக எடுக்கும் இப் பிறவியும் இவனிடத்து பாக்கியமே ஆயிற்று'' என்று சொல்லத் தக்க தன்மையிலே மிகுந்து விளங்கினான் இப்பெருமகன் எனப் போற்றுகின்றார்.

சிறப்பாக வளர்ந்த இளங்குமரன் ஓர் நாள் மற்ற தோழர்கள் சூழ தனது தேரில் ஏறி அரண்மனையில் இருந்து மணி மாட வீதியில் பவனி வந்தானாம், அப்போது ஒப்பற்ற பெருமையுடைய அறக்கடவுள் சிறிதும் கருணை இன்றி மன்னனது மாறுபடாத சிந்தையின் உண்மைத் தன்மையை சோதிப்பதற்கென்றே வந்தாற் போன்று, மணி மாட வீதியில் யாருமே காணாதபடி அழகிய இளம் பசுங்கன்றொன்று திருவீதியில் துள்ளப் புகுந்ததென்று நயத்தோடு விளக்குகிறார். இவ்வாறு துள்ளப் பாய்ந்த இளங் கன்று தேரினது பொற்சக்கரத்தின் ஊடே பாய அரசிளங் குமரனால் செலுத்தப்படும் வேகத்தில் தாளாது உயிர் நீத்தது. இதனைக் கண்ட தாய்ப்பசு வெம்பிற்று, அலறிச் சோர்ந்து நடு நடுங்கி வீழ்ந்தது, இது கண்ட மைந்தனும் அதிர்ச்சியால் நடுக்க முற்றுத் தேரினின்று கீழேவிழுந்தனன். தனது தந்தைக்கு ஏற்பட்ட பெரும் பழியைப் போக்க என்ன செய்வேன் என்று அலறினான் பின்பு இப்பழியைப் போக்கும் வகையில் வேதநூல்களும், அரு மறையவர்களும் கூறும் வண்ணம் ஒழுகி தன் தந்தை இதனை அறிவதற்கு முன்பு செய்வேன் என்றுகூறி வேதம் வல்ல மறையவர்

களைக் காணப் புகுந்தனன் என மைந்தனின் தன்மையை விளக்குகிறார்.

ஆனால் கன்றை இழந்த பசுவோ தன் துயரத்தை மேலும் தாங்க முடியாததாகி, முன்னே நெருப்பு வீசுதல் போலப் பெரு மூச்சு விட்டு விம்மிக்கொண்டு கண்ணீர் பெருக நடந்து சென்று உலகத் தில் நிலைபெற்ற ஏல்லா உயிர்களையும் காக்கின்ற செங்கோன் மை வல்ல முனு அரசனது அரண்மனை வாயிலில் கட்டியிருந்த அழகிய மணியை தன் கொம்பினால் அசைத்து அடித்தது.

இதனை **''மன்னுயிர்காக்கும் செங்கோன் மனுவின் பொற் கோயில் வாயில் பொன்னனி மணியைச் சென்று கோட்டினால் புடைத்ததன்றே''**[4] எனச்செஞ்சொல் பாமாலை தொடுக்கிறார். இவ்வாறு ஒலிக்கப்பட்ட மணிஓசை ஒலி நாதமாகிய மணியோசை யாக கேட்கவில்லை. பழியினது பறை முழக்கமாக—பாவத்தின் ஒலியாக—அரசிளங்குமரனின் உயிரைக் குடிக்க வரும் கூற்று வனுடைய எருமையின் கழுத்து மணியொலியாக—இதற்கு முன் இம்மன்னனின் வாயிலில் கேட்டிராத ஒலியாகக் கேட்டதாம்.

கொற்ற வாயிலில் தூங்கிய மணியின் ஓசையால் அதிர்ச்சியுற்ற மன்னன் தன் அரியணை விட்டு இறங்கி வாயிலுக்கு ஓடினான். காவலனது கூற்றால் பசு ஒன்று தனது கொம்பால் அடிப்பதாக அறிந்தான். விளக்கமறிய புடை சூழ்ந்த அமைச்சர்களை நோக்கவே, அமைச்சர்களுள் ஒருவன் நிகழ்ந்ததையும், பசுவின் துயரினையும் மன்னனுக்கு எடுத்துரைத்தான். விடம் தலைக் கேறிய ஒருவனது நிலையைப் போல் அளவிலாத துயர் அடைந்த மன்னவனைத் தேற்றத் துணிந்தஅமைச்சர்பெருமக்கள் ''மன்னவ மனம் தளர்ந்து துயரம் அடைவது இதற்குத்தீர்வாகாது,பசுவதை செய்தார்க்கு மறையவர்கள் விதித்த வழியே செய்து நின்மகனை ஆட்கொள்வதே அறநெறியாகும்''—எனக் கூறினார்கள் அமைச்சர்களின் கூற்றால் மன ஆறுதல் கொள்ளாத மனுவேந்தன் மறையவர்களின் வழியே சிறந்தது என்று கூறுகின்ற கூற்றுகன்றை இழந்த பசுவுக்கு மருந்தாகுமா? மேலும் நான் இவ்வாறு நடந்து கொண்டால் தருமதேவதை தான் சலிப்படையாதோ? மாநிலங் காவலன் எனும் மன்னன் தன்னாலும், தன் பரிசனங்களாலும் பகைவர்களாலும், கள்வராலும், ஏனைய உயிர்களாலும் வரும் ஐந்து வகையான பயங்களைத் தீர்த்து தருமத்தை பிறழாமல் காக்கின்றவன் அல்லவா?

''மாநிலங்காவலனாவான் மன்னுயிர் காக்கும் காலைத்
தான் அதனுக்கு இடையூறு தன்னாற் தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைதிறத்தால் கள்வரால் உயிர்த்தம்மால்
ஆனபயம் ஐந்தும் தீர்த்து அறங்காப்பான் அல்லனோ''[5]

என்மகன் செய்த பாதகத்திற்குத் தவம் மேற்கொள்ளல் மட்டும் பொருந்துவதாயின், யான் எப்படிக் கொலை குற்றம் புரிந்த அன்னியன் ஒருவனுக்கு தண்டனை கொடுக்க முடியும்' இவ்வாறு நான் செய்தால் மனுயாத்த தான்மை நெறி இந்த மனுசோழனால் அழிந்து விட்டது என்ற பெயரல்லவா ஏற்படும்''

''தொன்மனு நூல் தொடைமனுவால் துடைப்புண்டது..''[6]

என மொழிந்தான்.

இவ்வாறு அரசன் அமைச்சர்களை நோக்கி அவர்தம் கூற்றுக்களை இகழ்ந்து மறுத்துச் சொல்ல, அது கேட்டு எதிரே நின்ற மந்திரிகள், நாங்கள் சொல்லிய வழியில் நீதிநெறி இவ்வுலகியல் வழக்கில் இதுபோல் முன் நடந்திருக்கிறது ஆதலின் இதற்காக அரசகுமரனைக் கொல்வித்தல் மரபல்ல வேதத்தில் விதித்தபடி அறம் செய்வித்தல் (கழுவாய் வகுத்தல்) முற்காலம் தொட்டு வழங்கிவரும் நெறியல்லவா? என்று வணங்கிக் கூறினர். இதைச் செவிமடுத்த மனு மன்னனோ அளவிலா சினம் பூண்டு ''அமைச்சர்களே நீங்கள் தருமத்தை மனதில் கொள்ளாமல் மொழிகின்றீர்கள். எந்த உலகத்தில் எந்தப் பசு இத்தகைய துன்பத்தாலே கதறிவந்து அரசவாயிலின் தூங்கும் மணியை அடித்து வீழ்ந்து பதறிற்று? இதனை ஆய்ந்து சொல்லுங்கள். எனது மைந்தன் பிறவுயிரைக் கொன்றுவிட்டான். அவனைக் கொல்லுதலே முறையாகும். பசு அடைந்த அதே துயரை நான் என் மகவை இழந்து பெறல் வேண்டும். இதுவே நீதி'' என வுரைத்துத் தன் மைந்தனை அழைத்து வரசெய்து அமைச்சர்களுள் ஒருவனை நோக்கி ''இவனை அந்த வீதியில் தேர்க் காலின் கீழ் கிடத்தி தேரை செலுத்தி கொல்க''எனக்கட்டளையிட்டான்.

மந்திரியும் செய்யத் துணியாமல் வீதியிலேயே நின்று தன்னுயிர் நீத்தது கண்ட மன்னனவன் தானே தேரில் ஏறிச் சென்று தன் மகன் மீது அற வாழியை செலுத்தி முறை செய்தான். இவ்வாறு மனு தர்மம் தழைக்கச் செய்த மனு நீதியின் செயல் கண்டு,

''. . மண்ணவர் கண் மழை பொழிந்தார்
—வானவர் பூ மழை பொழிந்தார
அண்ணலவன் கண்ணெணைதிரே அணிவீதி—மழவிடை மேல்
விண்ணவர்கள் தொழ நின்றான் வீதிவிடங்கப்பெருமான்''[7]

பின்பு ''சடைமருங்கில் இளம பிறையும் தனிவிழிக்கும்
திருநுதலும்
இடை மருங்கில் உமையாளும் எம்மருங்கும் பூதகணம்
புடை நெருங்கும் பெருமையும் முன் கண்ட அரசன்
போற்றிசைப்ப
விடை மருவும் பெருமானும் விறல் வேந்தற்கருள்
கொடுத்தான்''[8]

உடன் இறந்த பசுவின் கன்றும் அரசனது உரிமைக்கன்றாகிய மகனும், உயிர் நீத்த மந்திரியும் அப்போது ஒருங்கே உயிர் பெற்று எழுந்தனர். மைந்தன் மன்னவனைத் தழுவினான். பசுங்கன்று தன் தாயிடத்துப் பால் பருகிற்று. இவ்வாறு

''பொன்றயங்கு மதிலாரூர்ப் பூங்கோயில் அமர்ந்த பிரான்
வென்றி மனுவேந் தனுக்கு வீதியிலே அருள்கொடுத்துச்
சென்றருளும் பெருங் கருணைத் திறங்கண்டு தன்னடியார்க்
கென்று மெளிவரும் பெருமை ஏழுலகும் எடுத்தேத்தும்''

எனக் கூறுகிறார்.

அறநெறியிலே அளவிலாத உயிர்களுக்கு அருள் செய்து யார்க்கும் முன்னவனாகிய வீதி விடங்கப் பெருமான் எழுந்தருளி வீற்றிருந்தருளும் பழமையாகிய திருவாரூர் நகரத்தைப் பற்றி எடுத்துச் சொல்லல் இயலாது. பெருமை மிகுந்த இந்த நகரின் அகமலர் போல் விளங்குவது பூங்கோயில் எனகூறி மனு நீதி சோழனது வரலாறும், வீதிவிடங்கப் பெருமானின் கருணையையும், பூங்கோயிலின் பெருமைகளையும் திருநகரச் சிறப்பாக பாடிப் பரவுகிறார் சேக்கிழார்ப் பெருந்தகை.

கல்வெட்டுகூறும் மனுநீதி சோழன் வரலாறு

இலக்கியங்களில் கூறப்படும் மனு வேந்தனின் வரலாறு பற்றி தமிழகத்திலேயே ஒரே ஒரு கல்வெட்டுத்தான்[10] விரிவாகப் பேசுகிறது. இவ்வரிய கல்வெட்டும் திருவாரூர் திருக்கோயிலின் இரண்டாம் பிரகாரத் தென்புறச் சுவரில் உள்ளது. இது சோழப்

பெருமன்னனான விக்கிரம சோழன் காலத்தில் வெட்டப்பட்டது வீதிவிடங்கப்பெருமானே பேசுவது போன்று எழுதப்பட்டுள்ளது. மேலும் பெரிய புராணத்தில சேகிழார் கூறாது விடுத்த பல புதிய தகவல்களும் இக்கல்வெட்டில் காணலாம்.

இக்கல்வெட்டு கி பி, 1123-ஆம்ஆண்டு மே திங்கள் முப்பத்தி ஒன்றாம் நாள் வெட்டப்பட்டதாகும். இதில் குறிப்பிடப்படும் மன்னன் சோழப் பேரரசன் விக்கிரம சோழன் ஆவான். சேக்கிழார் விக்கிரம சோழனின் மகனான இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில்தான் பெரிய புராணத்தை யாத்தார். எனவே சேக்கிழார் கூறும் மனுவின் வரலாற்றிற்கும் காலத்தால் முந்தியதே இக்கல்வெட்டாகும்.

சேக்கிழார் கூறாது விடுத்த செய்திகளாக மனுவின் புதல்வனுடைய பெயரும், இந்நிகழ்ச்சியால் உயிர் துறந்த அமைச்சனின் பெயரும், அவனது மைந்தன் பெயரும், இறுதியாக மனு தவம் மேற்கொண்டமையும், மனுவின் மந்திரியின் ஊரும், அவன் வம்சத்தில் தோன்றிய ஒருவனைப்பற்றிய தகவல்களும் உள்ளன.

இறைவனே கூறுமாறு அமைந்துள்ள இக்கல்வெட்டில் காணும் மனுவின் வரலாற்றுப் பகுதியை மட்டும் காண்போம்.

'' திருவாரூர் கூற்றத்து திருவாரூர் உடையார் வீதிவிடங்கர் சித்திரைத் திங்கள் திருநாளில் சதய . . . . . ஸ்ரீ . . திருக் காவணத்தில் சிம்மாசனத்து எழுந்தருளியிருந்து''

''நம் ஏவலால் பூலோக ராஜ்யம் செய்கிற சூரிய புத்திரன் மனு தன் புத்திரன் ஏறி வருகிற தேரில் பசுவின் கன்றாகப் பட்டு பரமாத்ப் பட அதின் மாதாவான சுரவி கண்டு துக்கித்து மனுவின் வாசலில் மணியை எறிய அது கேட்டு மனு தன் மந்திரி இங்கனாட்டு பாலையூருடையான் உபய குலாமலனை பார்த்து நீ சென்று இதனை அறிந்து . . . . . வாயிற் புறத்து ஒரு பசு மணி எறியா நின்றிது என்று சொல்ல அது கேட்டு மனு புறப்பட்டு பசுவையும் பட்டுக் கிடந்த . . . . . படி வினவி தன் புத்திரன் ஏறின தேரிலே பட்டமை அறிந்து அக்கன்றுக்கு நேராக தன் புத்திரன் ப்ரிய விருத்தனை தேரிலே ஊர்ந்து கொடுக்குவென்று உபய குலாமலனுக்கு சொல்ல அவன் சந்தாபத்தோடும் புறப்பட்டு தன் செவிகளை தரையிலே குடைந்து கோடுபட்டது கண்டு துவார

பாலகன் புகுந்து உபயகுலாமலன் தன் செவிகளை குடைந்து கொண்டு..... தும்பிதனாய் மனுதானே புறப்பட்டு தன் புத்திரனை தானே தேரிலே ஊர்ந்து கொடுக்க அப்போதே நாம் அவனை அனுகிரஹித்து கன்றுக்கும் மந்திரிக்கும் மனு புத்திரனுக்கும் ஜீவன் கொடுக்க அது கண்டு மனு சந்தோஷித்து கன்றினை எடுத்துக் கொண்டு பசுவுக்கு காட்டிக் குடு..... அபிஷேகம் பண்ணி இவனுக்கு உபயகுலாமலன் மகன் சூரியனை மந்திரியாக்கி இவனுக்கு தன்புத்திரன் மாளிகை....மங்கல.... ஊரும் கொடுத்து மனுவும உபயகுலாமலனும் தவசினை தலை நின்றமையில் பாலையூருடையான் உபயகுலாமலன் வம்சத் தானாகிய பாலையூருடையார் சந்திர சேகரன் ஆதி விடங்கனான குலோத்துங்க சோழ மகாபலி வாணாதிராயன் வம்சாதி ஆக வருகிற மாளிகை, மனை பழையபடி மாளிகையாக எடுத்து குடி வைப்பிப்பதாக''— என்றுள்ளது.

இதனால் விக்கிரம சோழன் காலத்தில் (சி. பி. 31. 5.1123) இவ்வரலாறு மிகவும் போற்றப்பட்ட ஒன்று என்பது தெளிவாகிறது. மற்ற எந்த ஒரு இலக்கியத்திலோ புராணத்திலோ குறிக்கப்படாத புதிய செய்திகளான மனுவின் புத்திரனின் பெயர் **ப்ரியவிருத்தன்** என்பதும், மனுவின் மந்திரியின் பெயர் இங்கணாட்டு பாலையூர் என்ற ஊரைச் சேர்ந்த **உபயகுலாமலன்** என்றும் அவனது மகன் **சூரியன்** என்றும் அவனே பின்பு மனுவினால் முடி சூட்டப்பட்ட ப்ரியவிருத்தனுக்கு மந்திரியாக இருந்தமையும் உபயகுலாமலனும் மனுவும் இறுதிக் காலத்தில் தவம் மேற் கொண்டார்கள் என்ற செய்திகளும் உள்ளன.

அடுத்து மனுவின் வம்சத்தில் தோன்றிய வழித் தோன்றலே விக்கிரம சோழன் காலத்தில் வாழ்ந்த இங்கணாட்டு பாலையூருடையான் சந்திரசேகரன் ஆதி விடங்கனான மகாபலி வாணாதிராயன் என்பதும் தெரிய வருகிறது. உபயகுலாமலன் வம்சத்தில் வந்த வாணாதிராயனுக்கு விக்கிரம சோழனால் மாளிகையும், மனையும் அளிக்கப்பட்டதை இக்கல்வெட்டு உணர்த்துகிறது. மன்னனது ஆணையான (King's order) இக்கல் வெட்டு வீதிவிடங்கப் பெருமானே பேசுவது போன்று வடிக்கப் பட்டுள்ளது. இத்திருக் கோயிலில் உள்ள வேறு இரண்டு கல் வெட்டுகளிலும் மேற்குறிப்பிட்டுள்ள வாணாதிராயன் பற்றிய குறிப்புகள் உள்ளன.

மனுவின் அமைச்சர்கள் மற்றும் சந்திரசேகரன் ஆதிவிடங்கன் இவர்களது ஊரான பாலையூர் என்பது தற்போது குடவாயிலுக்கும் திருவாரூருக்கும் இடையேயுள்ள பாலையூராகும். இவ்வூர் விக்கிரம சோழன் காலத்தில் இங்கணாட்டு (எண்கண் என தற்போது அழைக்கப்படுகிறது) பிரிவில் அடங்கியிருந்த ஒரு ஊராகும்.

இலங்கை வரலாறு கூறும் செய்தி

ஈழநாட்டின் வரலாற்றைக் கூறும் நூலான ''மகா வம்சம்'' பின்வரும் சுவை மிகுந்த செய்தியைக் கூறுகிறது.

''கி.மு. இரண்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் உயர்குடிப் பிறந்த சோணாட்டான் ஒருவன் ஈழத்திற்கு வந்தான். அப்போது இலங்கை அரசனாக இருந்தவன் அலேசன் என்பவன். வந்த சோணாட்டான் படையொடு வந்தான், ஆதலின் எளிதில் ஈழத்தரனை வென்று 45 ஆண்டுகள் ஈழநாட்டை ஆண்டான். அவன் பெயர் ''ஏழாரன்'' என்பது. அவ்வரசன் பகைவர்க்கும் நண்பர்க்கும் ஒரே நீதி வழங்கினான். தன் மகன் தேர் ஊர்ந்து சென்று அறியாது பசுவின் கன்றைக் கொன்றதற்காக, அத்தனி மகனைக் கிடத்தி, அவன் மீது தானே தேர் ஊர்ந்து கொன்ற உத்தமன். அப்பேரரசன் பௌத்த சமயத்தவன் அல்லன் ஆயினும் பௌத்த துறவிகளிடம் பேரன்பு கொண்டு வந்தான். அவனது அரசாட்சி குடிகட்கு உகந்ததாகவே இருந்தது. அவன் இலங்கையின் வடபகுதியையே ஆண்டான். பின்னர் இலங்கை அரசனான 'துத்தகாமணி' என்பவன் ஏழாரனைப்போரில் வென்று தமிழ் அரசைத் தொலைத்தான். ஏழாரனை துரத்திக் சென்று அநுராதபுரத்தில் எதிர்த்தான். அங்கு நடந்த போரில் ஏழாரன் இறந்தான், தமிழர் சமயக்கொள்கைகள் இலங்கையில் பரவாமல் இருக்கவும், பௌத்தம் காக்கவுமே துத்தகாமணி ஏழாரனை எதிர்த்து வெற்றி பெற்றான். இங்ஙனம் வேற்றிபெற்ற இலங்கை மன்னன் ஏழாரனுக்குரிய இறுதிக் கடன்களைச் செய்து முடித்தான் அவன் இறந்த இடத்தில் நினைவுக்குறி எழுப்பி, வழிபாடு நடைபெறச் செய்தான். பின்வந்த ஈழத்தரசரும் அந்த இடத்தை அடைந்த பொழுதெல்லாம் இசை ஒலியை நிறுத்தி அமைதியாக வழிபட்டுச்செல்லல் மரபாகும்''.

— Geiger's Mahavansa
Chap 21 — 25

குறவஞ்சி கூறும் அரிய செய்தி

ஆரூர் திருக்கோயிலில் மலர்ந்த பிரபந்தங்களின் வரிசையில் தியாகேசர் குறவஞ்சி எனும் நூல் மிகச்சிறப்புடைய ஒன்றாகும். கி. பி. 1684 முதல் 1714 வரை தஞ்சையை ஆண்ட சகசி மகாராஜாவின் (ஷாஹஜி) ஆட்சிக் காலத்தில் தியாகேசர் குறவஞ்சி எனும் இந்நூல் இயற்றப்பட்டது. இதன் ஆசிரியர் முத்துக் கவிராயர் என்பவராவார்.

இக் குறவஞ்சியில் தியாகராஜப் பெருமானின் பெருமைகள் எடுத்துச் சொல்லப்படுகின்றன. 20-ம் பாடலில் மனு நீதி சோழனின் வரலாறு விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அதில் புதிய செய்தியாக தியாகப்பெருமானே பசுவாகவும், காலனே (எமன்) கன்றாகவும் வந்து பின்பு அருள் பாலித்ததாகவும் கூறப்படுகிறது.

இதனை

மனுநெறி தழைக்க வையகம் புரக்கும்
தினகர குலத்தில் திகழ்மனு வேந்தன்
மெய்யன்புலகில் விளங்கிட வேண்டி
அய்யன் பசுவா யந்தகன் கன்றாய்
அடிமுடி நேடிய வம்பொன் வீதியில்
மணிமுடி மன்னர் வருநெருக் கததில்
அன்றர சிளங்கன் றரியதேர்க் காலிற்
கன்றரை படவே கபிலையுங் கதறிச்
செம்பியனரசு செலுத்திய மணியைக்
கொம்பினா லசைக்கக் கொற்றவ னடுங்கி
முன்னைநாள் விதியோ முறைமையோ விதுதான்
என்னகா ரணமென் றியம்பவே யமைச்சன்
ஆவின் மெய்த் துயர மரசனுக் குரைக்கப்
பாவியே னிந்தப் பழி கழுவுதற்கு
இளவரசனை யூர்ந் திடுவதே வழக்கென்
றளவிலார்க் குரைத்தவ னமைச்சனை யனுப்ப
மந்திரி யரசன் மதலை தன் முகத்தில்
எந்திட முரைப்போ மென்றவனுயிர் விடும்
சேதி கேட் டரசன் சிவாய நமவென்

நோதியஞ் செழுத்து முளந் தளர்ந் துருகித்
தொடர்ந்திளம் பசுவின் துயர்கா வென்சுதன்
படர்புக முமைச்சன் பழிக்கு நானென்
றுனணியே மகனை யூந்தபி னுகந்து
தன்னுயிர் மாய்க்குந தகைமைகண் டிரங்கி
பொன்னிலத் தமரர்கள் பூ மழை பொழிய
இந்நிலத் தவர்கள் இரு கணீர் சொரியச்
செந்திரு மாயன் திசை முகன் முனிவர்
இந்திரன் முதலோர் இருபுடை நெருங்கத்
தலமால் விடைமேல் தண்ணிலா வணிந்த
பவளவார் சடையா பகுதிமன் னவன்முன
ஆட்சியாய் தோன்றி அனைவருங் காண
காட்சியே கொடுக்குங் கமலைத் தியாகர்
ஆவினங் கன்று அமைச்சனு மறுவின்
கோ வினங் கன்றுங் கூடவே யெழுந்ததே
சுந்தரக் கன்றுஞ் சுரவிபா லினங்க
மைந்தனு மமைச்சனு மன்னனை வணங்க
மன்னனு மகிழ்ந்துடன் மழவிடைப் பாகர்
பொன்னடி பணியும் பொழுது ளீரங்கி
அரசனே யுன்றனன் புகண் டுகந்தோம்
வரைசேர் புவியில் மனு நெறி நடத்தி
உன் பெருங் கீர்த்தி யுலகினில நிறுத்திப்
பின்புபேரின்பம் பெறுவை நீ யெனனத்
திருவருள் புரிந்த தேவரகண்டா''

என குறத்தி ஒருத்தியின கூற்றின் வாயிலாக மனுநீதிக் சோழனின் வரலாறு கூறப்படுவது நோக்குதர்க்குரிய ஒன்றாகும்.

''மனு நீதிச் சோழ மகாராசா நாடகம்''

தஞ்சாவூர் மாவட்டம் வலங்கைமானுக்கு அருகமைந்த ஊரான ஆண்டாங்கோவில் எனற சிற்றூரில் (தேவாரத்தில் கடுவாய்க்கரைதென் புத்தூர் என குறிப்பிடப்பட்டு இருக்கும்) வசிக்கும் திரு. காத்தையா வாயாடியார் என்பவரின் மூதாதை யர்களால் பேணிக் காக்கப்பட்டஅரும் ஓலைச்சுவடிக் கட்டொன்று இன்றும் உள்ளது. அதில் ''மனுநீதி சோழ மகாராசா நாடகம்''

என்ற நல்ல தமிழ் இசை நாடகம் ஒன்று எழுதப்பட்டுள்ளது. ஆரூர் இறைவனாம் தியாகப் பெருமானைத் தலைவனாகக் கொண்ட இந்த இசை (கவிதை) நாடகம் தொன்று தொட்டு திரு. காத்தையா அவர்களின் மூதாதையர்களால் நடிக்கப்பட்ட தோடன்றி, இன்றும் இவ்வரிய இலக்கியமும், கூத்துத்தமிழும் அழியா வண்ணம் ஒவவோர் ஆண்டும் சித்திரைத் திங்கள் முழு நிலவின் மறுநாளில தொடங்கி ஐந்து தினங்கள் நாடகமாக நடிக்கப்பட்டுவருகிறது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். (இந்த நூல் பற்றி விரிவாக ''ஆரூர் தந்த அரும்பெரும் இலக்கியங்கள்'' என்ற தலைப்பின் கீழ காண்க) தமிழகத்திலேயே மனு நீதிச் சோழனின் வரலாறு கூத்துத்தமிழில் நடைபெறுவது இவ்வூரில் மட்டும் தான்.

இந்த இசைத் தமிழ் இலக்கியத்திலும் தியாகேசர் குறவஞ்சி கூறுவது போன்ற புதிய செய்திகளும் உள்ளன. தியாகப் பெருமானே பசுவாகவும், எமனே கன்றாகவும் வந்த கதையும், மனு நீதியின் மகன் ''வீதிவிடங்கன்'' என்ற பெயரினன் என்று கூறுகிறது.

வீதிவிடங்கன்(மன்னனின் மகன்) தேர் ஏறி வீதிவலம் வருவதை

மெச்சு மாமணித்தேரேரி வீதி விடங்கன் பவனி வரான்
உச்சித மணிகளாட உலாவிய முடிகள் மேலே
கொச்சு முத்து கோர்வையாட கொடிமதிபோல் விளங்க
மச்சு பச்சகல்கள் கம்பமாக பலவகை ரெத்தினமாக
உச்சி தாதி மதன் போல் உலாவியே கொடி யிலங்க
மெச்சு கச்சையணி மாதராடகண்டு சௌடாஷ்டகம் பாட
அச்சமிலா ஆரூர்நாடி அன்புடன் தியாகரேதேடி.

என்று மிக அழகாகக் குறிப்பிடுகிறது. அடுத்து

யமனே கண்ணுதாகி யீசனும் பசுவதாக
சோமனும் கண்ணசுரர் முனிறேறும் ஆகி
காமன்தன் பயின்றோன் கொம்பால் கமலனும் மறு கொம்பாகி
தாமரை உதித்த ஆரூர் தியாகேசர் - வருகின்றாரே - என

தியாகேசரின் வருகையை (பசுவாக) குறிப்பிடுகிறது.

கதை அமைப்பில் பல மாறுதல்கள் கால வளர்ச்சியினால் ஏற்பட்டாலும் ஆரூரில் நிகழ்ந்த இவ்வரிய நிகழ்ச்சியை - பாமர

மக்களின் மனம் கவரும் வகையில் கூத்துத் தமிழ் வடிவில் எழிலுறு இக்காவியம் வளர்த்து வந்திருக்கிறது. தமிழகம் முழுவதும் மறந்து விட்டால் கூட ஓர் சிற்றூர் இன்றும் மறவாமல் ஆண்டு தோறும் இக்காவியத்தை போற்றும் பாங்கு தமிழ் செய்த பெரும் பேறாகும்.

தேரூர்ந்த சோழ புராணம்

மனுநீதிச் சோழனின் கதையை எடுத்தியம்பும் இலக்கியங்கள் வரிசையில் தேரூர்ந்த சோழ புராணம் எனும் ஏட்டுச்சுவடி நூல் குறிப்பிடத்தக்க ஒன்று. தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூலகத்தில் உள்ள இந்நூல் இன்னும் அச்சாகவில்லை, 92 ஏடுகள் அடங்கிய இந்நூலில் ஏழு ஏடுகள் காணப்படவில்லை. சிறப்புகள் பலவும் பெற்றஇந்நூல் மனுவின் வரலாற்றுடன் பிற்ந்த சிலபிற்கால கதை களும் காணப்படுகிறது. எழுதிய ஆசிரியர் பெயர் அறிய இயல வில்லையாயினும் நூலின் நடைஅருணகிரியார்ின் முருக்வழிபாட்டு நெறியில் அமைந்தும், திருப்புகழ் போன்ற சந்த - இசையும் பெற்றுத் திகழ்வதாலும், சுவடி நூலின் எழுத்தமைதி போன்றவை களை கணிக்கும் போது கி.பி. 15-16 ஆம் நூற்றாண்டில் எழுதப் பட்டிருக்கலாம் என யூகிக்க முடிகிறது.

தேரூர்ந்த சோழ புராணம் எனும் இக்காவியம் சேக்கிழாரின் பெரிய புராணத்தை முதல் நூலாக கொண்டு இயற்றப்பட்டுள்ளது கதையமைப்பில் சில புராணக்கதைகள் கூறப்பட்டுள்ளது, மனுவின் புதல்வன் பெயர் வீதிவிடங்கன் என்பது போன்ற குறிப்புகள் காணப்பட்டாலும் சேக்கிழாரின் சொல்லாட்சியும், அவரது கருத்துக்களும் அப்படியே கையாளப் பட்டுள்ளன. சேக்கிழார் கூறும் ''மாநிலங் காவலனின்'' பண்பு நலங்கள் அப்படியே இந்நூலிலும் பேசப்படுகிறது,

தேரூர்ந்த சோழன் கதை

முற்றிலும் வசன நடையில் அமைந்த இந்நூல் 21 ஏடுகளைக் கொண்டு திகழ்கிறது. இந்நூலின் இறுதியில் காணப்படும் தெலுங்குக்குறிப்பு இந்நூல் ஓர் தளவாய் பதவி வகித்தவருக்கு சொந்தமானது என்றுள்ளது. இக்குறிப்புகளால் இந்நூல் தஞ்சை ஆண்ட நாயக்கர்கள் காலத்தில் தோன்றியிருக்கலாம் என கருதப்படுகிறது. தஞ்சை மராட்டிய மன்னர்களும் இந்நூலை போற்றிக் காத்துள்ளனர்.

தியாகேச குறவஞ்சி, தேரூர்ந்த சோழ புராணம் போன்ற நூல்கள் கூறும் மனுநீதிச் சோழனின் கதையை அப்படியே வசன நடையில் எழுதப்பட்டுள்ளது.

மனு வேந்தனின் நாட்டில் ''பூவே பறிபடும், புனலே சிறை படும், காவேயலைபடும், பரியே கட்டுண்ணும் கோழியே போர் செய்யும், கொடுவாளே வளைபடும், தென்ன மரமே குலைபடும் கரும்பே நறுக்குண்ணும், களையே பறிபடும், தேர்ச்சிலையே கோணல், மாதர் இடையே குறைவு, தனபாரத்திலே வட்டம், இதுவே ஒழிந்து வேறுகுறையில்லை–என்பதும், மனுவேந்தனுக்கு 64 வயதுக்கு மேல்தான் வீதிவிடங்கன் எனும் மகன் பிறந்த கதையும், பார்வதி, பரமசிவன் இவ்வேந்தனை சோதிக்க நினைத்த கதையும், அதனால் பரமேசுவரரே பசுவாகவும், இயமன் கன்றாகவும் வந்து சோதித்த சுவையான அம்சங்கள் கூறப்பட்டுள்ளன.

இதுமட்டுமின்றி கன்றை இழந்த பசுவின் துயர்அறிந்த மனு வேந்தன் தன் தேவியை அழைத்து ''நான் செய்த தோஷமென்ன? வேறு ராஜ்ஜியத்தை அநியாயம் பண்ணி அடந்தோற்றமாக இறை கொண்டேனோ? தேவதானம் மடப்பிரதானம், சிவநிந்தை குருநிந்தை செய்தேனோ? தண்ணீர்ப்பந்தல், நந்தவனம், திரு வாசல் கோயில் மதில்களைப் பிடுங்கி எல்லாம் மாறாட்டம் செய்தேனோ? ஜனங்களை தூர்பித்தேனோ? மகத்துகளை. தபோதனர்களை, மாதாபிதாவை, இடறு சொல்லப் பார்த்திருந் தேனோ? தீர்த்தவாசி மயேசுரரை நிந்தை செய்தேனோ? ஊமை குருடர், முடவர் ஏழை சனங்களை அடித்துப் பறித்தேனோ? வேத சாத்திரத்தை பழித்தேனோ? கறையில்லா கண்டத் தோரையும், கறை படும் களியாரையும் கலந்தேனோ? ஆசார ஈனம் பண்ணினேனோ?.....சந்தியான விரதங்களை தவிர்த் தேனோ? நம்பினபேரை கைவிட்டு அற்பரையாளாக்கினேனோ? வங்கிஷவான்களை நிந்தை செய்தேனோ? மண்ணோரஞ்சொல்வி உயர்ந்த குலத்தைத் தாழ்ச்சி செய்தேனோ? துணையாகக் கூடிப் போய் நடுவழியிலும், நட்டாற்றிலும் கைவிட்டேனோ? பாலகரை விருத்தரைக் கொல்வித்தேனோ? நடுங்க பணிகொண்டு கூலிக்கு நாளை வாவென்றேனோ? ஊர் முனிய வாழ்ந்தேனோ? விழுந்த பசுவையெடாமல் விலகிப் பார்ப்பேனோ? திருக்கோயில் மாதரைச் சேர்ந்தேனோ? வாழை மரங்களை வெட்டிக் கிணறு களை தூர்பித்தேனோ? கல்வெட்டுக்களை யழித்தேனோ? நட்ட

கல்லைப் பிடுங்கி எல்லை மாறாட்டஞ் செய்தேனோ? இந்த பசுவின் பழிக்கு எந்தளவிலே தீர்த்து அறுவிட்டுக் கொடுப்பேன்''—என்று புலம்பும் பாங்கு குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

பசுவின் துயர் துடைக்க மன்னவன் தன் மகன் மீது தேரை செலுத்தி முறை செய்தபின்பு, தன்னால் இறக்க நேரிட்ட மந்திரியின் பழிக்காக என்ன செய்வது என்று தன் தேவியை கேட்க உடன் தன் தேவியே உயிர் தியாகம் செய்ய முன் வருகிறாள். ஆனால் மனு வேந்தனோ அதற்கு ஒப்பாமல் தானே தன்னை மாய்த்துக் கொள்ள துணிந்து தன் உடைவாளால் தன்னை குத்திக் கொள்ள முயலும்போது மாய்ந்த மந்திரி, புதல்வன் மற்ற பூதங்கள் எல்லாம் எழுந்து; இடபாரூடராய் அர்த்தநாரி கோலத்தில் தியாகப் பெருமான் தோன்றி.

''ராசாவே நீரும், தேவியும், குமாரனும், மந்திரியும் ங்கலாயமே வாருங்களென்று இந்திர விமானத்திலே ஏற்றிக் கொண்டு பரமேசுவரனும், பார்வதியாரும் கைலாயமே எழுந்தருளினார்கள்'' —என்று குறிப்பிடுகிறது இந்நூல்.

பொருட்சுவையும் கருத்தாழமும் கொண்ட இந்நூல் மக்களின் பேச்சு வழக்கையும் எளிய சொற்களையும் கொண்டு திகழ்வதால் மனுவேந்தனின் காவியம் மக்களால் எந்த அளவு மதிக்கப்பட்டது என்பதை அறியமுடிகிறது.

கல்தேர் கூறும் காவியம்

ஆரூர் திருக்கோயிலின் மூன்றாம் பிரகாரத்தின் வடகிழக்கு மூலையில் அணி செய்வது தேவாசிரியம் எனும் திரு மண்டப மாகும். இதனை ஒட்டி கீழைத் திருச் சுவரில் வட கிழக்காக ஓர் கோபுரவாயில் உள்ளது. இந்த வாயிலையொட்டி வெளிப்புறம் திரு வீதியில் வரலாற்றுச் சிறப்பு மிக்க கல் தேர் உள்ளது. இது மனுவின் வரலாற்றைக் கூறும் சிற்பங்கள் அடங்கிய ஓர் கலைக் கூடமாகும். இங்கு ஓர் மண்டபம் தேரினைப் போன்று வடிக்கப் பட்டுள்ளது.

இம்மண்டபத்தை ஆறு தூண்கள் அணி செய்கின்றன. நான்கு தேராழிகளும் இரண்டு குதிரைகளும் பூட்டிய வண்ணம் இம் மண்டபத்தின் உபபீடம் அழகிய சிற்பங்களால் அழைக்கப்

பட்டிருந்தது. தற்போது குதிரைகள் சுதையாக உள்ளது மனுவின் மைந்தனான ப்ரியவிருத்தன் தரையில் கிடப்பதாக வடிக்கப் பட்டுள்ளது. மேற்கூறிய கல் தேருக்கு சற்று அருகில் ஓர் சிறிய மண்டபம் போன்ற பகுதி நான்கு தூண்களால் அமைக்கப் பட்டுள்ளது. அதில் ஓர் மணியும் கீழே துயருற்ற பசுவும் உயிர் நீத்த கன்றும் கவினுறு சிற்பமாக காட்சி நல்குகிறது. கன்றின் வயிற்றில் தேர் சக்கரம் ஏறிய சுவடு உள்ளது. இச்சிற்பங்கள் விக்கிரம சோழன் காலத்து சிற்பமாக இருக்கலாம் என யூகிக்க வழி உள்ளது, இச்சிற்பங்கள் மட்டுமன்றி கல்தேரின் மத்தியில் உள்ள மண்டபத்தின் உட்புறம் மூன்று துண்டு கற்கள், அழகுமிகு சிற்பங்களுடன் சுவற்றில் பதிக்கப்பட்டுள்ளது. இதன் மத்தியில் அழகிய பீடம் ஒன்றின்மேல் ஓய்யாரமாக சிவபெருமான் கால் மேல் காலை வைத்த வண்ணம் அமர்ந்துள்ளார். மேற் கரங்கள் இரண்டிலும் மானும் மழுவும் உள்ளன. மற்ற இரு கரங்களும் வரதமும், அருள்பாலிக்கும் உள்ளன. முத்திரையுடனும் முதுகின் பின்படுத்துள்ள நந்தியின் தலைமேல் வலது கரம் வைக்கப்பட்டுள்ளது. அருகமர்ந்த உமையவளின் வலது கரம் சிவபிரானின் தொடை மேல் வைக்கப்பட்டுள்ளது.

நடுவமர்ந்த அம்மையப்பருக்கு வலதுபுறம் ஓர் பசுவும் கன்றும் நிற்கின்றன. இடது புறம் மனு மன்னன் எதையோ சுட்டிக் காண்பிப்பதாகவும், அவனருகே அஞ்சலி ஹஸ்தர்களாய் மனுவின் புதல்வன் பிரியவிருத்தனும், அமைச்சன் உபயகுலாமலனும் உள்ளனர். கல்தேரின் தூண்களில் ஒன்றில் முடிந்த கொண்டையும் மீசையும் தாடியும் பெற்ற மன்னன் ஒருவனும் அருகே மற்றொரு வனும் வணங்கும் கோலத்தில் உள்ளனர். இவை முறையே விக்கிரம சோழனும் உபயகுலாமலன் வம்சத்தினனாகிய சந்திர சேகரன் ஆதி விங்கனான மாபலி வானாதிராயனாக இருக்கலாம் என சிற்ப அமைதியால் உணரலாம். எழில் மிகு இக்கல்தேரும், மற்றைய சிற்பங்களும் சோழர்கால கலை அமைப்பாக மிளிர்வதால் விக்கிரம சோழன் காலத்தில் வடிக்கப்பட்டவையாக இருக்கலாம் என உய்த்துணர முடிகிறது, கல்தேர் பல முறை திருப்பணிகளுக்கு இலக்காகி உள்ளது என்பதை கூட்டுமான மாறுபாடுகளால் நன்கறியலாம்.

மிகப்பிற்கால கோயிலான தேவகன்மீச்சரம் என்ற கோயிலின் கருவரையின் வெளிப்புறம் மிகச்சிறிய சிற்பமாக தேரும், அதன் மேல் பசு ஒன்றும், தேர்க்காலில் அரசகுமரனும் வடிக்கப் பட்டுள்ளது புதுமையாகும்.

மனுநெறி கண்ட வாசகம்

சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த இராமலிங்க அடிகளார் தமது திருஅருட்பாவில் ''மனுநெறி கண்ட வாசகம்'' - எனும் பகுதியில் மனு வேந்தனின் காவியத்தை மிகவிரிவாகக் கூறுகிறார். இதில் கால வளர்ச்சியில் வளர்ந்த பல புராணக்கதைகள் காணப் படுகின்றன. தேரூர்ந்த சோழ புராணம் மற்றும் தேரூர்ந்த சோழன் வசனம் போன்ற ஏட்டுச்சுவடியில் காணும் செய்தி களையும் வள்ளலார் அப்படியே குறிப்பிடுகிறார். மன்னவனுக்கு உரிய கடமைகளையும் நெறிகளையும் மிக அழகாகக்காட்டி உள்ளமை சுவையானதாகும்.

குறிப்புகள்

1. சிலப்பதிகாரம் XX 11 – 52 - 5
2. திருத்தொண்டர் புராணம் பாடல் எண் 98
   திருநகர இறப்பு — ,, 12
3. ,, பாடல் எண் 101
4. ,, ,, 112
5. ,, ,, 121
6. ,, ,, 122
7. ,, ,, 130
8. ,, ,, 131
9. ,, ,, 134
10. 163 of 1894 : S. I. I. vol V. No. 455.

திருக்கோயிலும் வரலாற்று மாமன்னர்களும்

திருக்கோயிலும் வரலாற்று மாமன்னர்களும்

தமிழகத்தின் தொன்மைத் திருக்கோயிலான திருவாரூர்த் திருக்கோயில் வரலாற்றில் அழியா இடம் பெற்ற ஒரு திருக் கோயிலாகும். சோழப் பெருமன்னர்கள் பாண்டியர்கள், விஜயநகர அரசர்கள், தஞ்சை நாயக்கர்கள் தஞ்சை மராட்டியர்கள் போன்ற பல தலைமுறைகளைச் சேர்ந்த மன்னர்களுக்கும் இத்திருக் கோயிலுக்கும் இருந்த நெருங்கிய உறவை எடுத்துச் சொல்லும் கல்வெட்டுகளும், செப்பேடுகளும் பல. எண்பதுக்கும் மேற்பட்ட அழியா சாசனங்கள், இம்மாமன்னர்கள், அவர்கள் காலத்திய மக்கள், அன்றைய சமுதாயம், இவர்கள் செய்த அறக்கொடைகள் போன்ற எண்ணிலடங்காத் தகவல்களை எடுத்தியம்பும் வரலாற்றுப் பெட்டகங்களாக உள்ளன. ஒவ்வொரு கல்வெட்டை யும், செப்பேட்டையும் தனித் தனியே ''கல்வெட்டுக்கள் என்ற பகுதியில் தந்துள்ளேன். இருப்பினும் அறத்தின்பால்நின்றொழுகிய மன்னர்களின் வரிசையும் அவர்கள் காலத்துப் பல்வேறுநிகழ்ச்சி களையும் இரண்டு தனித்தனிப் பகுதிகளாக இங்கே காண்போம்.

1. சோழப்பெருமன்னர்கள்

முதலாம் ஆதித்தன்

கி. பி. 871 முதல் 907 வரை தமிழகத்தில் செங்கோலோச்சி யவன் முதல் ஆதித்தன். முற்கால சோழர்களின் வரிசையில் இரண்டாவது இடம் பெறும் இம்மன்னன் தனிச்சிறப்பு பெற்ற கற்கோயில்களை (கற்றளி) உருவாக்கிப் பெருமை பெற்றவன் உலகப் புகழ்மிக்க கும்பகோணம் நாகேஸ்வரன் கோயிலும், திருச்சி மாவட்டம் சீனிவாச நல்லூர் குரங்க நாதர் கோயிலும் இவனது கலைப்படைப்புகளே. இவ்விரண்டு திருக்கோயில்களில் உள்ள புகழ்மிக்க எழிலுறு கோட்ட சிற்பங்களை ஒத்த கற் சிற்பங்களை அரநெறி என்னும் ஆரூர் திருக்கோயிலில் படைத்த பெருமையும் இவனையே சாரும். மேலும் பூங்கோயிலின் கருவறை யும் இவன் காலத்தியதாக இருக்கலாம் எனக் கருதச் சான்றுகள் உள்ளன.

ஆரூர்த் திருக்கோயிலைப் பொறுத்த வரை இம்மன்னனின் கல்வெட்டே அனைத்துக்கல்வெட்டுகளிலும் தொன்மைவாய்ந்தது அண்மையில் இந்நூலாசிரியரால் கண்டு பிடிக்கப்பட்டது இக் கல்வெட்டு. இது தற்போது கீழை இராச கோபுரத்திற்கு வெளியே அமைந்துள்ள விநாயகப் பெருமான் திருக்கோயிலின் கருவறை யின் உத்திரத்திலுள்ளது. இராசகேசரி என்ற விருதுடன் இக் கோயிலில் காணப்படும் இவனது இரண்டுகல்வெட்டுக்களில் மேற் கூறிய இக்கல்வெட்டு ஒன்றே இவன் காலத்தில் எழுதப்பட்ட மூலக்கல்வெட்டாகும். (original) பிறிதொன்று அரநெறியின் முகப்பில் கி. பி. 12 ஆம் நூற்றாண்டில் படியாக (Later copy) எழுதப்பட்டதாகும்.

விநாயகர் கோயிலில் காணப்படும் இடம் பெயர்ந்த அவனது மூலக் கல்வெட்டினால் அரநெறி என்னும் கோயில் இம்மன்னன் காலத்தில் கருவறை செங்கற் கோயிலாயும் (Brick Structures) மகா மண்டபம் மட்டும் கற் திருப்பணியாயும் (Granite Structure) இருந்திருக்க வேண்டும். (திருவையாறு ஐயாரப்பர் கோயில் ஆதித்தன் காலத்தில் இவ்வாறு இருந்திருக்கிறது.) ஆனால் கோட்டங்களில் மட்டும் இடம் பெற்றுள்ள கோட்ட தேவதை களும் மன்னர்களின் சிற்பங்களும் ஆதித்தன் காலத்தியதென்பதை படிம இயல் (Iconography) அடிப்படையில் உறுதியாகச் சொல்லலாம். இவன் காலத்தில் முக மண்டபத்தில் இருந்த இவனது கல்வெட்டு (original) பின்பு 12-ஆம் நூற்றாண்டில் திருப்பணியின் போது இடம் பெயர்ந்து கோயிலுக்கு வெளியே அகன்று விட்டது. எப்படியோ இவனது பிறிதொரு கல்வெட்டும இவனது மகனான பராந்தகனது இரண்டு- கல்வெட்டுகளும 12-ஆம் நூற்றாண்டு திருப்பணிக்குப் பிறகு படியாக மீண்டும் எழுதப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு மதுரை கொண்ட பரகேசரி என்றும் பராந்தகனின் முப்பத்திரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் குறிக்கப் பட்டுள்ள தனி நபர் ஒருவனது பெயர், அவன் தந்தை காலத்து (ராசகேசரி) கல்வெட்டிலும் குறிக்கப்பட்டுள்ள தால் இராசகேசரி எனும் பெயர் ஆதித்தனையே குறிக்கிறது எனக் கொள்ளலாம்.

வெளிப்புறம் உள்ள விநாயகர் கோயிலில் காணப்படும் கல் வெட்டில் முதலாதித்தனின் 13-ம் ஆட்சி ஆண்டு (கி. பி. 884) குறிக்கப்பட்டுள்ளது. இதில் தனி நபர் ஒருவன் ஆரூர் அரநெறி திருக்கோயிலில் விளக்கெரிக்க நூற்று ஒன்பது சாவா மூவாப்

பேராடுகள் அளித்ததை குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டில் திரு நீலகண்டம் என்ற முகத்தலளவைக் குவளை பயன்படுத்தப் பட்டமையும் குறிப்பிடப்படுகிறது. அரநெறியின் முகமண்டபத் தில் வாயிலை ஒட்டி காணப்படும் 12-ஆம் நூற்றாண்டுப் படியில் ஆதித்தனின் 20-ஆம் ஆட்சி ஆண்டு (கி.பி. 891) குறிக்கப்பட்டு உள்ளது. இதில் இரண்டு விளக்குகள் இருப்பதற்காக அளித்த நிலக்கொடை பற்றிக் குறிப்பிடுகிறது.

முதல் பராந்தகன் :

கி. பி. 907-953 வரை தமிழகத்தை ஆண்ட சோழப் பெரு மன்னன் முதல் பராந்தகன். இவனது காலத்திய கல்வெட்டுகள் இரண்டு இத்திருக்கோயிலில் காணப்படுகின்றன. இவைஇரண்டும் அரநெறி என்னும் திருக்கோயிலின் முகமண்டபத்தில் கி.பி. 12-ம் நூற்றாண்டுப் படிகளாக (ஆதித்தனின் கல்வெட்டு போன்றே) காணப்படுகிறது. மதுரை கொண்ட பரகேசரி என்ற இம் மன்னனின் விருதுடன் தொடங்கும் ஒரு கல்வெட்டில் இவனது முப்பத்திரண்டாம் ஆட்சி ஆண்டு 232-ஆம் நாள் (கி.பி. 939) குறிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ கோவில் தேவனார் என்பான் இத்திருக் கோயிலில் விளக்கெரிப்பதற்காக முதலீடு செய்த முப்பது கழஞ்சு பொன் பற்றிக்கூறுகிறது.திருநீலகண்டம் என்னும் முகத்தலளவை யும் குறிக்கப்பட்டுள்ளது. அடுத்த கல்வெட்டு இவனது ஆறாம் ஆட்சி ஆண்டான கி.பி. 913-இல் கட்டப்பட்டதாகும். இதில் திருமூலட்டான தொண்டன் என்பவன் அளித்த முப்பது கழஞ்சுப் பொன் (விளக்கெரிக்க முதலீடு செய்தது) பற்றி விளக்கப்பட்டு உள்ளது. இதில் குறிப்பிடப்படும் திருமூலட்டான தொண்டன் என்பான் இம்மன்னனின் தந்தையான ஆதித்தனின் கல் வெட்டிலும் குறிக்கப்பட்டுள்ளான்.

செம்பியன் மாதேவியரும் முதலாம் இராஜராஜனும்.

முற்கால சோழர்களான ஆதித்தன், பராந்தகன் இவர்கள் காலத்திய கல்வெட்டுகளுக்குப்பின்பு முதலாம் இராஜராஜனின் கல்வெட்டுகளே காணக்கிடைக்கின்றன இம்மன்னனதுகல்வெட்டு களில் முற்பட்டதாக இவனது இரண்டாம் ஆட்சி ஆண்டுக் கல் வெட்டே காணப்படுகிறது. இதில் கண்டராதித்தரின் மனைவியும் உத்தம சோழனின்தாயும், இராஜராஜனின் பெரிய பாட்டியான செம்பியன் மாதேவியார் அரநெறி இறைவனுக்காக அளித்த வெள்ளிப் பாத்திரங்கள் பற்றி விளக்குகிறது. இராஜராஜனின்

ஏழாம் ஆண்டு கல்வெட்டொன்றில் இத்தேவியார், தான் செய்தளித்த தன்ம விடங்க தேவர், உமாபட்டாரகியார் செப்புத் திருமேனிகளின் வழிபாட்டுக்காகவும் மற்றதிருப்பணிகளுக்காகவும் 234 காசுகளை அளித்த செய்தியும் மேலும் அரநெறியின் கருவறை இத்தேவியாலேயே கற்கோயிலாக எடுக்கப்பட்ட செய்தியும் உள்ளது. இவனது 23-ஆம் ஆண்டுக் கல்வெட்டொன்றில் வேலங்குடி கிராமத்தினர் இக்கோயில் விஷ்ணுவுக்கு அளித்த கொடைகள் பற்றி விவரிக்கின்றது. எனவே இம்மன்னன் காலத்தில் இன்றிங்கு காணப்படாத ஓர் விஷ்ணு திருமேனி பூஜை களுக்கு உரியதாக இருந்தமை நன்கு உய்த்துணர முடிகிறது. இராஜராஜனின் 2-ம் ஆண்டு கல்வெட்டு அரநெறியின் கருவறையின் தென்புறத்தில் காணப்படுவதால் — அரநெறி கற் கோயிலாக மாற்றப்பட்டது கி. பி. 987க்கு ஓரிரு ஆண்டுகள் முன்பாக இருக்கலாம் என நம்பப்படுகிறது. செம்பியன் மாதேவி யாரால் எடுக்கப்பட்ட கற்கோயில்களான திருவல்லம், கோனேரி ராஜபுரம், செம்பியன் மகாதேவி, ஆடுதுறை, திருநாகேஸ்வரம், திருமணஞ்சேரி, போன்ற வரிசையில் ஆரூர் அரநெறியும் இடம் பெறுகின்றது.

இம்மன்னனது தஞ்சைப் பெருவுடையார்கோயில் கல்வெட்டு களால், இவன் திருவாரூர் திருக்கோயில்களில் இருந்து தஞ்சைக்கு அழைத்துச் சென்ற ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆடலரசிகளின்பெயர் கள் காணப்படுவதிலிருந்து இத்திருக்கோயில் இவன் காலத்தில் ஆட்டல் கலையில் உயரிய இடத்தைப் பெற்றுத் திகழ்ந்தது என அறியமுடிகிறது.

முதலாம் இராஜேந்திரன்

மாமன்னன் இராஜராஜனுக்குப் பின்பு அவனது மகனான இராஜேந்திர சோழன் கி. பி. 1012 முதல் 1044 வரை ஆட்சி புரிந்தான். இப்பெருந்தகையின் நேரடியான கவனத்திற்கு ஆரூர்க் கோயில் இலக்கானது என்பதை அழியா வரலாற்றுச்சான்றுகளால் அறிய முடிகிறது. அம்மாமன்னனின் அமரகாதலின் அழியாச் சின்னங்கள் இன்றும் நிலைத்து நின்றுள்ளமை நாம் செய்த பாக்கியமே. கடாரம் முதல் கீழ்த்திசை நாடுகள் பல வென்ற இப்பெருமன்னனின் தேவியாம் அனுக்கியர் பரவை நங்கை இத்திருக்கோயிலில் தொண்டாற்றினாள். இவளது விருப்பத்தை நிறைவேற்ற மன்னன் பல தொண்டுகள் செய்துள்ளான்.

செங்கல்தளியாக இருந்த வீதிவிடங்கப் பெருமானின் கர்ப்பக்கிரகத்தையும் அர்த்த மண்டபத்தையும் கற்றளியாக மாற்றச் செய்தாள். இத்திருப்பணி 2 ஆண்டுகள் நடைபெற்றன. கி. பி. 1029 ஆவணியில் இருந்து மாசி மாதத்திற்குள் 161 நாட்களில் ஸ்ரீவிமானத்திறகும் கர்ப்ப அறையின் சுவர்களுக்கும் பொன் வேய்ந்தாள். 26643 கழஞ்சு நிறையுளள பொன் தகடுகள் விமானந்தையும் சுற்றுச் சுவர்களையும் அலங்கரித்தன.

''உடையார் வீதி விடங்கத் தேவர் குடத்திலும் வாய்மடை யிலும் நாலு நாசியிலும் உள் குடத்திலும் பொன் வேய்ந்தாள் எனக் கல்வெட்டு கூறும்.

கர்ப்ப அறையின் கதவுகளுக்கும் மண்டபத் தூண்களுக்கும் 42000 பலம் எடையுள்ள செமபினால தகடு சாத்தி அழகு படுத்தினாள், 15,579 பலம் எடையுள்ள பிரம்மாண்டமான 28 குத்து விளக்குகளையும் தானமாக அளித்தாள். ஆயிரக்கணக்கான கழஞ்சு எடையுள்ள பொன்னாபரணங்களையும், பாத்திரங் களையும் அளித்தாள். அணிகலன்களில் விலையுயர்ந்த கற்கள் பதிக்கப்பட்டன. 428 முத்துகள், 7 மாணிக்கக் கற்கள், 36 வைரக்கற்கள், எண்ணற்ற மரகதக் கற்கள் போன்றவற்றையும் மன்னனின் ஆணையால் இறைவனுக்குக் கிடைக்கச் செய்தாள். பாவை விளக்குகள் இரண்டு அளிக்கப்பட்டன. ஒன்றின் பெயர் பச்சைப் பாவை உமைநங்கை மற்றொன்றின் பெயர் பாவை சரியா மூலைநங்கை. அன்னதானத்திற்காகப் பல வேலி நிலங் களை இம்மன்னவன் அளித்தான். கி. பி. 1031-ஆம் ஆண்டு மன்னன் பரவையைத் தன் அருகில் வீற்றிருக்கச் செய்து தேரில் பவனிவந்தான். தேரில் பட்டத்து அரசியைத் தவிர வேறு எவருமே அமருதல் கூடாது என்ற மரபை நீக்கிப் பரவையைப் பெருமைப்படுத்தினான் இராசேந்திரன்.

அமர்காதலர் இருவரும் வீதி விடங்கனைத் தரிசித்தனர். எவ்விடத்தில் பர்வையுடன் நின்று இறைவனை தரிசித்தானோர் அவ்விடத்தில் குத்துவிளக்கு ஒன்றினையும் வைத்தான் இராசேந்திரன்.

''உடையார் ஸ்ரீராசேந்திர சோழ தேவரும் அணுக்கியர் பரவை நங்கையாரும் நிற்குமிடந்தெரிய குத்து விளக்கொன்றும் என்று கல்வெட்டு கூறுகிறது.

பிற்காலத்தில் திருவாரூர் ஆலயத்திற்குச் சோழ மன்னர்கள் பலரும் நிவந்தங்கள் அளித்துள்ளனர் அவர்களில் மிக அதிக மாக அளித்தவன் இரண்டாம் குலோத்துங்க சோழன் ஆவான், ஆனால் கல்வெட்டுக் கணக்குப்படி பார்த்தால் பரவை நங்கையின் நிவந்தங்கள் இரண்டாம் குலோத்துங்கனையும் மிஞ்சியுள்ளன.

இவ்வாறு வாழ்ந்த அமர காதலர்களுக்குப் பின்பு இராஜாதி ராஜன் இத்திருக் கோயில் படிமம் எடுத்து பூசைகளுக்கு நிவந்தமும் அளித்ததாகக் கல்வெட்டொன்று கூறுகிறது. இன்று இப்படிமங்கள் ஆனந்தேசம் என்னும் சுற்றுக் கோயிலொன்றின் கோஷ்ட்டத்தில் இடம் பெற்றுள்ளது.

இராஜேந்திரன் தமதும் மற்றும் தம் தந்தையின் பிறந்த நட்சத்திரங்களான ஆருத்திரா மற்றும் சதய நாட்களில் இறை வனுக்கு வாசனை திருமஞ்சன நன்னீராட்டு செய்வதற்கென்றே பல நிவந்தங்களை அளித்தானெனக் கல்வெட்டுகள் உரைக் கின்றன. இவன் காலத்தில் கோயிலில் ஸ்ரீ காரியம் அதிகாரியாகப் பணிபுரிந்தவன் சத்திரிய சிகாமணி வளநாட்டு இங்கனாட்டு தியங்குடியைச் சேர்ந்த தியங்குடியான் நம்பன் இராமனான சோழ வித்தியாதர மூவேந்த வேளான் என்று கல்வெட்டொன்று கூறுகிறது.

முதலாம் இராஜாதி ராஜன்

கி.பி. 1018-1054 வரை ஆட்சி புரிந்தவன் முதலாம் இராஜேந்திரன் மகனான முதலாம் இராஜாதி ராஜனாவான். இவனது இரண்டு கல்வெட்டுகள் தியாகராஜ சுவாமி கருவறையின் வடக்கு, மேற்கு மற்றும் தெற்குச் சுவர்களில் உள்ளன. பரவை நங்கையினால் எடுக்கப்பட்ட இத்திருக் கோயிலுக்கும், ''இராஜேந்திர சோழ தேவன்'' என்ற மண்டபத்திற்கும் சில நிலங்கள் இம்மன்னனால் அளிக்கப்பட்ட செய்தி காணப்படுகிறது மேலும் இவன் காலத்தில் எடுக்கப்பட்ட இராஜேந்திரன் மற்றும் பரவை நாச்சியார் படிமங்களுக்கு நிவந்தங்கள் வழங்கிய செய்தி காணப்படுகின்றன. பிறிதொரு கல்வெட்டு மூலம் இம்மன்னனின் ஆணையால் வீதிவிடங்கத் தேவனின் சபை இவனுடைய 31-ஆம் ஆட்சியாண்டில் அதிகாரி ஒருவனால் பொன்தகடு பாவப் பட்டமையை எடுத்துரைக்கிறது.

இரண்டாம் இராஜேந்திரன்

இரண்டாம் இராஜேந்திர சோழன் முதலாம் இராஜேந்திரனின் இரண்டாம் புதல்வனாவான். இவன் கி. பி. 1051-1063 வரை ஆட்சி புரிந்தவன். இவன் காலத்து கல்வெட்டுக்களாக இத்திருக் கோயிலில் மொத்தம் ஆறு உள்ளன. இதில் ஒரு கல்வெட்டு மட்டும் இம்மன்னனது ஆணையைக் கூறுகிறது. இதில் வெள்ளாள கூத்தன் எனும் செம்பியன் மூவேந்தவேளான் மன்னனுக்காக வன்மீக நாதரின் கருவறையையும், அர்த்த மண்டபத்தையும் பொற்தகடுகளால் போர்த்தியதாகக்கூறுகிறது. மற்ற நான்கு கல்வெட்டுகள் இம்மன்னனது 5-ஆம், 8-ஆம், 9.ஆம் ஆட்சியாண்டைச் சார்ந்தவை,

முதலாம் குலோத்துங்கன்

கி. பி. 1070 முதல் 1120 வரை ஆட்சி புரிந்து சுங்கம் தவிர்த்த சோழன் என விருது பூண்ட இம்மன்னர் காலத்துக் கல்வெட்டுக்கள், ஆறு உள்ளன. இதில் அவனது 23-ஆம் ஆண்டு கல்வெட்டே முதலிடம் பெறுகிறது. எந்த ஒரு கல் வெட்டும் மன்னனது ஆணையையோ அல்லது மன்னன் செய்த அறக்கொடைகளையோ குறிக்கும் வண்ணம் அமையவில்லை. பிரகாரச் சுவர்களில் காணப்படும் கல்வெட்டுக்களில் குலோத்துங் கனது கல்வெட்டுக்களே காலத்தால் முதலிடம் வகிக்கின்றன. எனவே இவன் காலத்தில் கோயில் திருப்பணி நடைபெற்று இருக்கலாம். தேவாசிரிய மண்டபம் பற்றிக்குறிப்பிடும் தொன்மை யான கல்வெட்டும் இவனுடையதுதான். 'உலகுய்ய கொண்ட காமக்கோட்டம்' என்ற அம்மன் கோயில் பற்றியும் இவனது கல்வெட்டே முதலில் குறிக்கிறது.

விக்கிரம சோழன்

கி. பி. 1118 முதல் 1136 வரை ஆட்சி புரிந்தவன் விக்கிரம சோழன். இவன் முதற் குலோத்துங்க சோழனுடைய மகன். இரண்டாம் பிரகாரத்தின் தென்புற மற்றும் வடபுறச் சுவர்களில் இவன் காலத்து கல்வெட்டுகள் எட்டு உளளன. அவற்றுள் ஐந்து இத்திருக் கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிவந்தங்களைப் பற்றியும் கோயில் திருக்குளம் பற்றியும் கூறுகின்றன. மற்ற மூன்று கல்

வெட்டுகளும் மனுநீதிச் சோழன் சரித்திரத்தைக் கூறும் வண்ணம் அமைந்தவை. தென பிரகாரத்தில் உள்ள ரௌத்திர துர்க்கை சந்நிதிக்கு நேர் எதிரே உள்ள கல்வெட்டில் ''மனுசரித்திரம்'' தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. மனுநீதியின் வரலாறு கூறும் ஒரே தமிழகத்துக் கல்வெட்டு இதுவாகும். இக்கல்வெட்டு கூறும் வரலாறு முன்னர் உரைக்கப்பட்டது. (பார்க்க: கல் வெட்டு கூறும் மனுநீதி சோழன் வரலாறு)

இரண்டாம் குலோத்துங்கன்

கி. பி. 1133-1150 வரை ஆட்சி செலுத்தியவன் இரண்டாம் குலோத்துங்கன். இவன் காலத்திய 3 தமிழ்க் கல்வெட்டுகளும் ஒரு வடமொழிக் கல்வெட்டும் உள்ளன. 7-ஆம் ஆட்சி யாண்டில் (கி. பி. 1140) வெட்டப்பட்ட கல்வெட்டொன்று மன்னனது ஆணையைச் சுட்டுகிறது. இம்மன்னன் சைவசமயக் குரவர்களுக்கு படிமம் எடுத்தது மட்டுமின்றி அவற்றின் பூசை களுக்காக அனபாய நல்லூர் என்ற கிராமத்தையும் அளித்தமையும் பூசை நிவேதனங்கள் என்ன என்ன என்ற பட்டியலும் காணப் படுகிறது. வடமொழி கல்வெட்டில் இவன் தில்லைக் கூத்த பிரான் திருவடித் தாமரையிலுள்ள அருளாகியத் தேனைப் பருகும் வண்டு போன்றவன் என்றும் கூறுகிறது.

இக்கல் வெட்டிலே,

> ''ஆளுடைய நம்பி மாதாக்கள் இசைஞானியார்
> ஜனனீ பவதோ ஞான ச்வாசார்ய குலேபவத்
> சைவே கௌத கோத்ரேஸ் யின் ஞான்யா
> ராவ்யா கமலாபுரி''

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. 'கமலாபுரி' என்னும் திருவாரூரில் சுந்தரருடைய தாய் பிறந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவரது 10 ஆம் ஆட்சியாண்டுக் (கி. பி. 1142) கல்வெட்டில் இராஜ ராஜ பிரம்ம மங்கலத்து சபையார் அளித்த கொடை பற்றியது. இக்கல்வெட்டில் உள்ள இரண்டாம் குலோத்துங்கனின் மெய் கீர்த்தியில்

> ''அருள் புரிசிமையப் பொற் கோட்டிமையப்
> பாலையும் சிவனும் போல்''

என்ற வரிகள் காணப்படுகிறது. இங்கு மன்னவன் தனது தேவி யுடன் அமர்ந்திருப்பதை சிவபிரானும் உமையும், கயிலயங்கிரியில் அமர்ந்திருப்பதற்கு இணையாக ஒப்பிடுகிறார்.

இவரது 12-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில், இறைவனின் திருமஞ்சனம், நந்தா விளக்கு, நந்தவனம், சோலைப்பராமரிப்பு இவைகளுக்காக தனி நபர் அளித்த கொடைகள் பற்றி குறிப் பிடுகின்றன. இதில் முதல் குலோத்துங்கனின் 16.ஆம் ஆண்டில் (கி.பி. 1086) நடைபெற்ற நில அளவை பற்றியும் குறிப்பிடப் பட்டுள்ளது. இவரது 15-ஆம் ஆண்டுக் (1147) கல்வெட்டில் மன்னனது மெய் கீர்த்தி மட்டும் காணப்படுகிறது. இதில்,

''இமயப் பொற்கோட்டுப்பாவையும் சிவனருள் பெற்று'' என்று கூறப்படுகிறது. இதில் முன்பு காணப்படும் ஆணவம் அகன்று சிவனருள் பெறும் நிலைகாணப் படுகிறது. வடமொழிக் கல்வெட்டில் மேலும் இறங்கி சிவபெருமானின் பாத கமலங் களை மொய்க்கும் வண்டாகத் தன்னைக் கூறிக் கொள்கிறான் இவை அனைத்தும் மன்னனின் சைவத்தில் ஈடுபட்ட மனநிலையை தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுவன.

'அனபாயன்' என்னும் சோழ மன்னன் மூன்றாம் குலோத்துங்கனே என சில வரலாற்று ஆசிரியர்கள் வாதிட்டு உள்ளனர். அவன் காலத்தில் தான் சேக்கிழார் வாழ்ந்து பெரிய புராணம் இயற்றினார் என்பது அவர்கள் கருத்து. ஆனால் பெரும்பான்மையான வரலாற்று ஆசிரியர்கள் இரண்டாம் குலோத்துங்கனே அனபாயன் எனக் கூறுகின்றனர். இதனை மேற்குறித்த திருவாரூர்க் கல்வெட்டுகளே தெளிவாக எடுத் துரைக்கின்றன. 'அனபாயன்' என்ற இரண்டாம் குலோத்துங் கனின் பெயராகவும் 'அனபாய நல்லூர் என்ற ஊர் இம்மன்ன னால் சைவசமயக் குரவர்களின் பூசைகளுக்காக நிவந்தமாக அளிக்கப்பட்டது என்பதை கல்வெட்டாகக் கூறும் போது அன பாயன் இரண்டாம் குலோத்துங்கனே என்றும், அவனே பெரிய புராணம் எழுதக் காரணமாய் இருந்தவன் என்பதையும், சைவத்தின்பால் அவன் பெற்ற படிப்படியான ஞான முதிர்ச்சியும் இக் கல்வெட்டுகளால் அறிய முடிகிறது.

இரண்டாம் இராஜராஜன்

குலோத்துங்கனின் மகனாகிய இரண்டாம் இராஜராஜன் கி.பி. 1146 - 63 வரை ஆட்சி புரிந்தவன். இவன் காலத்திய கல்வெட்டொன்றில் 'பூமருவிய பொழில் ஏழும்' எனத் தொடங்கும் மெய்கீர்த்தி பகுதி மட்டும் காணப்படுகிறது. இம் மன்னர் காலத்திய வேறு தகவல்கள் இதுவரை நமக்கு கிடைத்தில

இராண்டாம் இராஜாதிராஜன்

இவன் இரண்டாம் இராஜராஜனுக்குப் பின்பு கி. பி. 1163ல் அரியணை ஏறி கி. பி. 1178 வரை செங்கோலோச்சியவன். இவன் காலத்தியதாக ஆரூர் திருக்கோயிலில் நான்கு கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. இதில் மன்னனது ஆணையாக உள்ள கல்வெட்டொன்றில் இவனது பாட்டனான விக்கிரம சோழன் காலத்தில் கோயில் ஊழியர்களுக்கு அளிக்கப்பட்ட மனைகளை செட்டிகள் ஆக்கிரமித்து அனுபவித்து வந்ததை இவனது அமைச்சனான அம்மையப்பன் புல்லவராஜன் கண்டுபிடித்து மன்னனுக்கு எடுத்துக் கூறியவுடன், உடனடியாக செட்டிகளை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டு முன்போல் கோயில் ஊழியர்களுக்கு மனைகளை அளித்ததோடன்றி அவர்களுக்கு நட்ட ஈட்டுத் தொகையும் அளித்திட்ட செய்தி கூறப்படுகிறது.

மற்ற மூன்று கல்வெட்டுகளும் வேதவன முடையான் அம்மையப்பனான பல்லவராஜன் ஆரூர் மூலஸ்தானமுடைய இறைவனுக்கு அளித்த கொடைகள் பற்றியன. இப்பெருமகனும், பெருமாநம்பி பல்லவராயன் என்பானும் சோழ சாம்ராஜ்யத்தின் நிலையான அரசமைப்பிற்காக பெரிதும் பாடுபட்ட நன்றியுடைய அரசு உயர் அதிகாரிகளாக விளங்கியவர்களாவர். மூன்றாம் குலோத்துங்கன் காலத்திலும் இவன் உயிர் வாழ்ந்தனன் என்பதை ஆரூரின் பிறிதொரு கல்வெட்டு (மூன்றாம் குலோத்துங்கனின் எட்டாம் ஆண்டு கல்வெட்டு) விளக்குகிறது.

இராஜாதிராஜனுடைய கல்வெட்டுக்களில் ஒன்றில் காணப்படும் மெய்கீர்த்தி சுவையான அரசியல் செய்தி காணப்படுகிறது. இதில் மற்றெந்த சோழர்கள் அல்லது பாண்டிய மன்னர்களின் மெய்கீர்த்திகளில் காணப்படாத புதுமையான செய்தியாக இம் மன்னனின் தேவியான முக்கோக் கிழானடிகள் அரசு உரிமை பெற்று ஆட்சி புரிந்தமையை சிறப்பாக கூறுகிறது. இத்தேவி யாதவ குலத்துப் பெண்ணாவாள்.
இச் செய்தியை,

''அம்மருங்கும் தேவியர்கள் அணிமங்கலம் பெற்றருள வாளரசர் தலைகாக்க யாதவ குல மரபில் வந்த சோழ குல மணிவிளக்கு சோழகுலமாணிக்கம் மட நான்முதற் கணநான்கின் 7 வடிவு கொண்டு வளவதேசுரன் உடனாணையும் திருவாணையும்

உடன்செல்ல முடி கவித்தான் மண்ணரசர் வந்திறைஞ்ச மகுடம் புனை வளவனுடன் பெண்ணரசும் பெருந்தாயமும் பெற்றருளும் பெண் பெருமாள் உறையூரும் பேருறகையும் உதகையும் மதுரா புரியும் முறைமுறையே ஆண்டருளி முளரி நகர் துறந்த வண்ணம் பொன்னாசனம் சிங்கவலை போலரும் கற்பகப் பூஞ்சோலை முன் னேவல்நிந்தல் முறை முறையே பெருமுலைப் பெருமாள் அழக நுதற்கயல் நயனத்தம் பொற்குழைக் கொம்பென்ன உளமகிழ வந்தருளிய உலகுடைய முக் கோக்கிழானடியுடன் வாழி! வாழி!'' —எனக் கூறுகிறது. இக் கல்வெட்டின் மூலம் ஆரூர்த்திருக் கோயிலில் திருக் காமக் கோட்டத்து (அம்மன் கோயிலின்) இறைவியின் பெயர் பெரிய நாச்சியார் என்பதும், அதே கோயிலில் பரலோக மென்மொழி நாச்சியார் என்ற அம்மனும் வழிபாட்டுக்குரிய இறை உருவங்களாக இருந்தமையை அறிய முடிகிறது.

மூன்றாம் குலோத்துங்கன்

கி.பி. 1178 முதல் 1218 வரை சிறந்ததொரு ஆட்சி புரிந்தவன் மூன்றாம் குலோத்துங்கனாவான். சோழ மன்னர்கள் வரிசையில் இறுதியில் ஆண்ட மிகத் திறமைசாலிகளுள் இவனும் ஒருவன். இம்மன்னனது நான்கு கல்வெட்டுகளில் இரண்டு, மன்னனது ஆணையைக் குறிப்பிடுவதாகும். இவ்வாணையைத் தான் பிறப்பித்தது போன்று எழுதாமல் ஆரூர் இறைவனாகிய வீதிவிடங்கப் பெருமானே கூறுவது போன்று எழுதப்பட்டுள்ளது. இதில் குலோத்துங்கனை வீதிவிடங்கர் ''நம் தோழன்'' திரிபுவன வீரதேவன் என்று குறிப்பிடுகிறார்.''நம் தோழன்''எனஇறைவன் குறிப்பதாக குறிப்பிடப்படுவது சுந்தரரைத்தான், இங்கு குலோத்துங்கனையும் குறிப்பிடுவதாக உள்ளது சிறப்பு அம்ச மாகும். மேலும் ''திரிபுவன வீரதேவன்'' என இம்மன்னன் மதுரை நகரில் புனைந்து கொண்ட விருது இவனது தமிழக கல்வெட்டுகளில் காலத்தால் இக்கல்வெட்டில்தான் முதலாவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இவனது வெற்றி (வீராபிஷேகம், விஜயாபிஷேகம் செய்து கொண்டது) இக்கல்வெட்டின் காலமான கி.பி. 1201-க்கு முன்பே நிகழ்ந்திருத்தல் வேண்டும் என யூகிக்க முடிகிறது. அடுத்துள்ள மூன்று சாசனங்களில் ஒன்று வேதவனமுடையான் அம்மையப்பன் பல்லவராயன் அளித்த அறக்கொடையையும், மற்ற இரண்டு கல்வெட்டுகளில் ஒன்று இறைவர்க்கு திருவமுதுக்காக அளிக்கப்பட்ட நிவந்தம் பற்றி

குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டும் இறைவன் கூறுவது போன்றே அமைந்துள்ளது. நான்காவது கல்வெட்டு தனி நபர் அளித்த அறக்கொடையைப் பற்றியது.

திரிபுவனம் திருக்கோயிலில் உள்ள குலோத்துங்கனது வட மொழிக் கல்வெட்டுகளிலும், குடுமியான்மலை சேரனூர் போன்ற இடங்களில் உள்ள தமிழ்க் கல்வெட்டுகளிலும் மதுரையை வென்ற இம்மன்னரை மன்னன் மதுரையிலும், சேரநாட்டிலும் இருந்து கொண்டு வந்த திறைப் பொருட்களையும் வெற்றிப் பொருட் களையும் கொண்டு திருவாரூர் வன்மீக நாதர் கோயிலைப் பொன் மயமாக்கியதோடு புற்றிடங்கொண்ட பெருமானின் சபையையும் பெரிய கோபுரத்தையும் கட்டுவித்ததாகக் கூறுகிறது. (இதுபற்றி விரிவாக இராசகோபுரம் என்ற தலைப்பில் விளக்கப்பட்டுள்ளது) இம்மன்னன் எடுத்த கீழைக் கோபுரத்தில் இவனுருவச் சிலையை யும், இவனது ராஜகுருவான ஈசுவர சிவனாரின் திருஉருவத்தையும் இடம் பெறச்செய்துள்ளான்.

மூன்றாம் இராஜேந்திரன் :

சோழப் பெருமன்னர்கள் வரிசையில் இறுதி மன்னனாக விளங்கியவன் இப்பெருந்தகையாளனாவான். கி. பி. 1246-79 வரை ஆண்ட இம்மன்னரின் இரண்டு கல்வெட்டுக்கள் இத்திருக் கோயிலில் இடம் பெற்றுள்ளன. ஒரு கல்வெட்டில் இவனது 13-ஆம் 20-ஆம் 23-ஆம் ஆட்சி ஆண்டுகளின் நிகழ்ச்சிகள் விளக்கப்பட்டுள்ளன. அடுத்த கல்வெட்டிலும் இவனது 23-ஆம் ஆண்டு அளிக்கப்பட்ட நிலக் கொடை பற்றி விவரிக்கின்றது.

பாண்டிய மன்னர்கள்

கி. பி. 1269 இல் மூன்றாம் இராஜேந்திரனின் கல்வெட்டே சோழப்பெருமன்னர்களின் இறுதிக் கல்வெட்டாக அமைகிறது. கி.பி. 1279க்குப் பிறகு சோழராட்சி வீழ்ச்சியுற்றதும் பிற மன்னர்களின் கல்வெட்டுகள் இடம் பெற்றன. அவ்வகையில் பாண்டிய மன்னர்கள் இருவரின் கல்வெட்டுகள் நமக்கு கிடைக்கின்றன.

மாறவர்மன் குலசேகர பாண்டியன்

கி.பி. 1268-1312 வரைமதுரையை தலைநகராகக் கொண்டு பாண்டிய மண்டலத்தை ஆட்சி புரிந்தவன் மாறவர்மன் குலசேகர பாண்டியன். இவனது ஆட்சியின் போது சோழ நாடு பாண்டி

மண்டலத்தின் ஆதிக்கத்துக்குள் இருந்தமையால் அப்போது எழுதப்பட்ட கல்வெட்டு ஒன்றில் இப்பாண்டிய மன்னனின் 40-ம் ஆட்சி ஆண்டு காணப்படுகிறது. இக் கல்வெட்டு எழுதப்பட்ட காலம் கி. பி. 1308 ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் நாள் திங்கட் கிழமை என்பதனையும் இக்கல்வெட்டில் கொடுக்கப்பட்டுள்ள பஞ்சாங்கக் குறிப்பால் அறிய முடிகிறது. பாண்டிய குலபதி வளநாட்டு எயில் நாட்டு கழனி வாயில் (கழனி வாசல்) என்ற ஊரினனாகிய வேளான் கொங்கில்பிள்ளை என்பவன் திருவாரூர் உடையாருக்கு (இறைவனுக்கு) அளித்த நிலங்கள் பற்றிக் குறிப் பிடப்பட்டுள்ளது. இதில் மாறவர்மன் குலசேகரனின் 32 ஆம் ஆட்சிஆண்டில் அளித்தநிலங்கள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாறவர்மன் ஸ்ரீவல்லபன்

கி. பி. 1307-1342 வரை ஆட்சி புரிந்தவன் மாறவர்மன் ஸ்ரீவல்லபன். இவனது 35 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு தனி நபர் ஒருவர் செய்த அறக்கொடைபற்றிக் குறிப்பிடுகிறது. இதில் குறிக்கப்பட்டுள்ள பஞ்சாங்கக் குறிப்புக்கு சரியான ஆண்டு கி. பி. 1342 ஆகஸ்ட் திங்கள் 7 ஆம் நாளாகும். இதில் குலோத்துங்கசோழ வளநாட்டு பாலையூர் நாட்டு திருத் தொண்டீஸ்வரம் என்னும் ஊரினனாகிய இராசராசநாடாள்வான் என்பான் இத்திருக்கோயிலில் தினம் அத்யயனம் (வேத பாராயணம்) பண்ணுவதற்காக அளித்த நிலக்கொடை பற்றிக் குறிப்பிடுகிறது. இதில் கையொப்பமிட்ட தலைமை கணக்கு அதிகாரி ஒருவன் (மண்பாண்டம் தயாரிக்கும் இனத்தவர்) என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பாண்டிய மன்னனது கல்வெட்டால் சோழநாடு பாண்டிய நாட்டின் ஆளுகையில் இருந்த போதும் சோழ நாட்டின் பழைய பிரிவுகள் (குலோத்துங்க சோழ வளநாடு) மாற்றப்படாமல் இருந்தது, என்பதும் எல்லா இனமக்களும் உயர்பதவி வகிக்க முடிந்ததென்றும், வேத பாராயணத்தில் சாதாரண பிரஜைகள் கூடக் கவனம் செலுத்தியதும் குறிப்பிடத்தக்கவைகளாகும்.

விஜயநகர மன்னர்கள்

பாண்டியர்கள் காலத்திற்கு பின்பு சுமார் ஒரு நூற்றாண்டுக்குப் பின்னர் கி. பி. 1429 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 22-ம் நாள்

எழுதப்பட்ட வீரபூபதி உடையார் எனும் விஜயநகர மன்னரின் கல்வெட்டுத்தான் காணப்படுகிறது. இது அசலேசம் என்னும் திருக்கோயிலின் முகமண்டபத்தில் உள்ளது. இதில் வீரபூபதி உடையார் வணிகர்களுக்கு வழங்கிய அரசு கட்டளை ஒன்று உள்ளது.

கிழக்கு ராஜகோபுரத்தில் காணப்படும் மற்றொரு கல்வெட்டு விஜயநகர மன்னரான இராமராஜ தேவரின் உத்தரவு ஒன்றினை தஞ்சை நாயக்க மன்னரான சேவப்பநாயக்கனின் கட்டளையாக வெட்டப்பட்டுள்ளது. தஞ்சை நாயக்கர்களின் செப்பேட்டில் விஜயநகர மன்னர்களின் பட்டியல் காணப்படுகிறது.

இரண்டாம் பிரகார மேற்குகோபுரம் விஜயநகர மன்னனை இரண்டாம் தேவராயர் காலத்தில் (கி.பி. 1422-1446) தன்ன நாயகனை பணியாற்றிய தெட்சிணை சமுத்திராபதி லக்கன்ன தன்ன நாயக்கரின் பெயரில் நாகராசன் என்பானால் கி.பி. 1440ஆம் ஆண்டு எடுக்கப்பட்டது. இதை கோபுரத்தில் உள்ள தமிழ் மற்றும் கன்னடக்கல்வெட்டுகள் எடுத்தியம்புகின்றன.

தஞ்சை நாயக்கர்கள்

விஜயநகர அரசின் கீழ் சோழ நாட்டை ஆட்சிபுரிந்த தஞ்சை நாயக்கர்களின் சில கல்வெட்டுகளும். செப்பேடுகளும் இத்திருக் கோயிலில் காணப்படுகின்றன.

சேவப்ப நாயக்கன்

தஞ்சை நாயக்கர்களில் முதல் மன்னரான சேவப்பநாயக்கன் காலத்து கல்வெட்டு ஒன்று கிழக்கு ராசகோபுர வாயிலில் உள்ளது. இதில் இராமராசதேவரின் உத்தரவுப்படி சேவப்பநாயக்கன் முத்து பவளம் போன்றவை வாங்குவதற்கு வைத்த கட்டளை பற்றி குறிப்பிடுகிறது.

அச்சுதப்ப நாயக்கர் (கி.பி. 1572-1600)

சகம் 1482-ஆம் ஆண்டு (கி.பி. 564ல்) வெட்டப்பட்ட கல் வெட்டொன்றில் அச்சுதப்பநாயக்கரின் தந்தையான சேவப்ப நாயக்கரின் பேரால் அளிக்கப்பட்ட சர்வமானியம் பற்றி குறிப்பிடுகிறது,

இராகுநாத நாயக்கன் (கி.பி. 1600-1634)

இம்மன்னர் காலத்திய செப்பேடு ஒன்று இத்திருக்கோயிலில் உள்ளது. இது இம்மன்னனின் பெயரால் அளிக்கப்பட்ட நிலங்கள் பற்றி குறிப்பிடுகின்றது.

தஞ்சை மராட்டிய மன்னர்கள்

சகசி (சஹாஜி) மன்னன்

கி. பி. 1684-1714 வரை ஆட்சி புரிந்த இம்மன்னவன் இதயதெய்வமாகப் போற்றியது ஆரூர் தியாகப்பெருமானையே, சோழர்கள் காலத்தில் (முதலாம் இராஜேந்திரன் காலத்தில்) அனுக்கியர் பரவை நங்கை எந்த அளவு தியாகவிநோதனிடத்தில் பற்று வைத்திருந்தாளோ அதே அளவு மன்னர்கள் வரிசையில் தியாகப்பெருமானிடத்து மிக அதிக பற்று கொண்டவர் மன்னன் சகசியேயாகும்,

மிகச் சிறந்த கல்விமானாய்த் திகழ்ந்த இம்மன்னவன் தியாகப் பெருமானைப்பற்றி பலகீர்த்தனங்கள் இயற்றியுள்ளார், மேலும் சங்கரபல்லக்கி சேவபிரபந்தம், சங்கரகாளி நடன சம்வாதம், (தியாகராஜ விநோத சித்ர பிரபஞ்ச நாடகம்) தியாகேசபதமுலு, பஞ்சரத்தினம் போன்ற பல அரிய நூல்களையாத்து தியாகனுக்கே காணிக்கையாக்கியுள்ளார். இம்மன்னவனின் செப்பேடு ஒன்றில் ஆரூர் தியாகப்பெருமானை தானும் தனது சகோதரர்களான முதலாம் சரபோஜி, துளஜா இவர்களுடன் வணங்கும் கோலத்தில் ஓவியமாக தீட்டப்பட்டுள்ளது. இம்மன்னவன் ஆரூர் கோயிலுக்கு என செய்த தொண்டுகள் மிகப்பலவாகும்.

முதலாம் சரபோஜி மன்னர்

தஞ்சை நாயக்கர்களை அடுத்து தஞ்சையைஆண்ட மராட்டிய மன்னர்களுக்கும் இத்திருக்கோயிலுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்திருக்கிறது. சரபோஜி மன்னர், வன்மீக நாதரின் திருக்கோயில், மகாசிவலிங்கம், தியாகராஜ சுவாமி திருக்கோயில் இவைகளுக்கு அஷ்டபந்தனம் செய்து மகா கும்பாபிஷேகம் செய்வித்ததாக கி. பி. 1717 ஆண்டு ஏப்ரல் திங்களில் வெட்டப் பட்ட இத்திருக்கோயில் கல்வெட்டொன்றில் குறிப்பிடப்பட்டு

உள்ளது. மேலும் துவஜஸ்தம்பம் (வன்மீகநாதர்) இவன் காலத்தில் திருப்பணி செய்யப்பட்டதென்பதை அதன் பீடத்தில் உள்ள சரபோஜி மன்னரின் உருவச்சிலையால் அறிய முடிகிறது மேலும் சரபோஜி மன்னரின் எழில் கொஞ்சும் வண்ண ஓவியம் ஒன்று (இம்மன்னன் காலத்தியது) அனுக்கன் கோபுர வாயிலின் உட்புறம் வடதிசையில் உள்ளது. அம்மன்னனின் மற்றும் இவனது வம்சத்து மன்னர்களின் செப்பேடுகள் இத்திருக்கோயிலில் இன்றும் உள்ளன. இம்மன்னனே திருவாரூர் திருக்கோயில் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படும் மன்னர்கள் வரிசையில் இறுதி மன்னன் ஆவான்.

இராமநாதபுரம் சேதுபதிகள் மற்றும் தொண்டைமான் வம்சத்து குறிநில மன்னர்களுக்கும் ஆரூர் இறைவன்பால் மிகுந்த பற்று இருந்தது. இதனை சில செப்பேடுகள் தெளிவாக உரைக்கின்றன.

கல்வெட்டில் காணும்
சோழர் கால சமுதாய நிலை

கல்வெட்டில் காணும் சோழர் கால சமுதாய நிலை

திருக்கோயில் நிர்வாகம்

பல்வேறு கல்வெட்டுகளைத் தொகுத்து நோக்கும்போது ஆரூர் கோயிலின நிர்வாகத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்ற அதிகாரி ஸ்ரீ காரியம் என அழைக்கப்பட்டதாக அறிகிறோம். இவ்வாறு ஸ்ரீ காரியம் பதவி வகித்த ஒரிருவரின் பெயர்களை அறிய முடிகிறது. முதலாம் ராஜேந்திரன் காலத்தில் ஆரூர் அறநெறியாம் திருக்கோயிலுக்கு நிர்வாக அதிகாரியாக (ஸ்ரீ காரியம்) பணிபுரிந்தவன் ஷத்திரிய சிகாமணி வளநாட்டு இங்க நாட்டு தியங்குடி என்ற ஊரினனுகிய நம்பன் ராமனை சோழ வித்தியாதர மூவேந்த வேளான் என்பவனுவான். இதனைக் குறிப்பிடும்போது கல்வெட்டில்-''ஸ்ரீ காரியம் செய்கின்ற நம்பன் ராமனை மூவேந்த வேளான் நாயகத்து'' என்று குறிப்பிடுகிறது. முதலாம் ராஜராஜனின் கல்வெட்டொன்று ''ஸ்ரீ ஆரூர் ஸ்ரீகாரியம் ஆராய்கின்ற செம்பியன் அம்பர் நாட்டு கோனூர் மேநாயகத்து'' என்றும் குறிப்பிடுகிறது.

இக்கல்வெட்டுகளைக் கூர்ந்து நோக்கும் போது ''ஸ்ரீகாரியம் செய்கின்ற நாயகம்''என்ற ஒரு பதவியும், ''ஸ்ரீகாரியம் ஆராய்கின்ற மேநாயகம்'' என்ற ஒரு பதவியும்'' இருந்தமை தெளிவாக உணரப்படுகிறது நாயகம் பதவி வகித்தவன் எல்லாப் பொறுப்புகளையும் ஏற்று தலைமை நிர்வாக அதிகாரியாகப் பணி புரிந்தவன். அவ்வதிகாரிக்கு மேல் நிலையில் அவனது பொறுப்புகளை நிர்வகிக்கும் (கண்காணிக்கும்) உயர்மட்ட அதிகாரியே ''ஸ்ரீகாரியம்'' ஆராய்கின்ற மேநாயகம் ஆவான்'

கோயில் நிர்வாகத்தில் ''ஆராய்ச்சி'' என்ற ஒரு பதவியும் இருந்தமை பிறிதொரு கல்வெட்டால் அறிய முடிகிறது. இக்கல் வெட்டு ''ஆராய்ச்சியாக'' பணி புரிந்த மூனைவதி உடையான் என்பவனைப் பற்றி விரிவாகக் கூறுகிறது. ஆராய்ச்சிப் பொறுப்பு வகிக்கும் இவ்வதிகாரிகள் கோயில் கணக்குகளையும் சொத்துக்

களையும் ஆய்வு செய்து முறைகேடுகள் ஏற்படா வண்ணம் பாதுகாக்க வேண்டும்.

''கண்காணி'' என்ற ஒரு பதவியும் கோயில் நிர்வாகத்தில் இருந்துள்ளது. இவர்கள் திருக்கோயில் நிவந்தங்கள், அறக் கட்டளைகள் போன்றவற்றை செவ்வனே செயல்பட தினம் கண்காணிப்பதே (Supervisors) ஆகும். சிவாலயங்களில் பணி புரிந்த கண்காணிகளை மாகேஸ்வர கண்காணிகள் எனக் கல்வெட்டுகள் குறிக்கும் முதல் கணக்கு (Head Clerk), கரணத்தார் (Clerk) கீழ் கரணத்தார் (Junior Clerk) போன்ற அலுவலர்களும் நிர்வாக அலுவலகத்தில் பணி புரிந்தனர். மாறவர்மன் குலசேகர பாண்டியனின் ஆரூர் கல்வெட்டொன்று, ''திருவாரூர் உடையார் கோயில் கண்காணி செய்வார்க்கும் கோயில் முதல் கரணத் தார்க்கும்....'' என்றும், விக்கிரம சோழனின் கல்வெட்டு ஒன்று ''இக்கோயில் முதல் கணக்கு வேட்கோவன் திருவாரூர் உடையான் கூனிகணவதி எழுத்து'' என்றும் கூறுகின்றன.

இவைகளைத்தவிர கோயில் நிர்வாகத்தில் தேவ கண்மிகள் போன்ற அலுவலர்களும் பங்கேற்றனர். இதனை ''திருவாரூர் உடையார் ஸ்ரீ மூலஸ்தானமுடையார் கோயிலில் பதிபாத மூலப் பட்டுடைப்பஞ்சாட்சரிய தேவகன்மிக்கும், ஸ்ரீ மாகேஸ்வர கண்காணி செய்வார்க்கும், ஸ்ரீகாரியம் செய்வானுக்கும்'' என்று இரண்டாம் ராஜாதிராஜனின் கல்வெட்டொன்று கூறுகிறது. இத்தகைய அதிகாரிகள் அனைவரும் மற்ற ஆலய ஊழியர்களை தம்கீழ் கொண்டு மன்னர்களாலும் மக்களாலும் அளிக்கப்பட்ட அறக்கொடைகளை ஏற்றுக்கொண்டு கோயில் நிர்வாகத்தைச் சிறப்புறப் பேணிக்காத்தனர் என்பதனைத் தெளிவாக அறிகிறோம்.

ஆலய ஊழியர்களும் அவர்கள் பெற்ற சலுகைகளும்

திருக்கோயில் நிர்வாகத்தை ஸ்ரீகாரியம் ஆராய்கின்ற மேநாயகம், ஸ்ரீகாரியம் செய்கின்ற நாயகம், ஆராய்ச்சி, கண்காணி, கரணத்தார் போன்றவர்கள் கவனித்தாலும் மற்ற ஆலயப் பணிகளை எல்லாம் பலதரப்பட்ட ஊழியர்கள் கவனித்தனர். பிடாரர்கள் திருப்பதியம் விண்ணப்பிப்பார்கள் (தேவாரம் ஓதுவார்கள்) மாகேசுவரர்கள், பரிசாரகர்கள் (சமையல்காரர்கள்), மெய்காவலர்கள் (திருமெய்காப்பு), விளக்கேற்றுபவர்கள், பள்ளித்தாமம் ஆக்குபவர்கள் (மாலைகள்

தொடுப்பவர்கள், வாசனாதி திரவியம் சேர்ப்பவர்கள், விறகு கொடுப்பவர்கள், கோசாலை பராமரிப்பாளர்கள், திருமஞ்சன குடம் சுமப்பவர்கள், அமுதுபடிக்கான அரிசியை சுத்தம் செய்யும் பெண்கள், சங்கு ஊதுபவர்கள், மத்தளம் அடிப்பவாகள், உடுக்கை வாசிப்பவர்கள், வீணை வாசிப்பான், இறைவனின் திருமேனியை வீதியில் பவனி வரும் போது தூக்கிச் செல்பவர்கள், வேட்கோவர் கள் (மட்பாண்டம் செய்பவர்கள்) நாவிதர்கள், கம்மாளர்களான சிற்பிகள், ரதகாரர்கள், பொற்கொல்லர்கள், கொல்லர்கள் போன்ற பலதரப்பட்ட ஊழியர்கள் ஆரூர் திருக்கோயிலில் பணி புரிந்துள்ளனர்.

மேற்குறிப்பிட்ட ஊழியர்கள் பணி புரிவதற்காக அவர்களுக் கென நிலங்களும், வருவாய்களும், சலுகைகளும் அளிக்கப்பட்டன மேலும் திருக்கோயில் பண்டாரத்தில் சில அறக்கொடைகளுக்காக பொதுமக்களால் முதலீடு செய்யப்பட்ட நிதியில் இருந்து இவ் ஊழியர்கள் கடனாகப் பெற்றுக்கொண்டு - அத்தொகைக்கென ஆண்டு தோறும் வட்டியினை (பொலிசை) அளித்து வந்தனர். இதனால் அவ்வறச்செயல்கள் தடையின்றி நிகழ்ந்ததோடு மட்டு மின்றி ஆலய ஊழியர்களும் பயன் பெற்றனர்.

இரண்டாம் இராஜாதி ராஜன் காலத்தில் ஆரூர் ஆலய ஊழியர்களுக்கு பயன் அளிக்கும் வகையில் பிறப்பிக்கப்பட்ட ஓர் அரசு ஆணை (ஸ்ரீமுகம்-King's order) குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இம்மன்னவனின் தாத்தாவான விக்கிரம சோழன் காலத்தில் ஆரூர் கோயில் ஊழியர்களுக்காக அளிக்கப்பட்ட வீட்டு மனைகளை செட்டிகள், செக்கார் போன்றவர்கள் ஆக்கிரமித்துகொண்டு குடியிருப்பும்-கடைவீதியும் ஏற்படுத்திக்கொண்டு அனுபவித்தனர். இது 40 ஆண்டுகளுக்கு பின்பு மாமன்னனின் மதி அமைச்சனான அம்மையப்பனான பல்லவராஜரால் கண்டுபிடிக்கப்பட்டு, அந் நிலங்களை செட்டிகளிடமிருந்து கைப்பற்றி ஆலய ஊழியர்களுக்கு திரும்ப அளித்ததோடன்றி, அவர்கள் கடந்த 40 ஆண்டுகளாக அனுபவிக்காமல் விட்டதற்காக நஷ்ட ஈட்டுத்தொகையும் அளித்து ஆக்கம் அளித்த அரிய செய்தியை திருவாரூர் கல்வெட்டிலன்றி வேறெங்கும் காணமுடியாது.

சோழர்கள் காலத்தில் ஆரூர்

முதல் பராந்தகன் காலத்தில் திருவாரூர் கூற்றம் என்றே அழைக்கப்பட்டது. பின்பு இராஜ ராஜசோழனின் துவக்க

ஆண்டுகளில் காவிரித் தென்கரை திருவாரூர் கூற்றம இடம் பெற்றது. பின்பு அவனது இறுதியாண்டுகளில சத்திரியசிகாமணி வளநாட்டில் திருவாரூர் கூற்றம் திகழந்தது. இராஜராஜனின் பேரனான முதலாம் இராஜாதிராஜன் காலத்தில் அதிராஜேந்திர வளநாட்டில் திருவாரூர் கூற்றம் இருந்தது. பின்னர் முதலாம் குலோத்துங்கன் காலம் முதல் பாண்டியாகளை ஸால இறுதி வரை கேயமாணிக்க வளநாட்டுப் பிரிவில் இடம் பெற்றுத் திகழ்ந்தது.

சோழர்கள் காலத்தில் திருவாரூரில் இருந்த சில வீதிகளைப் பற்றி கல்வெட்டுக்கள் வாயிலாக அறிய முடிகிறது. ராஜாக்கள தம்பிரான் திருவீதி, சன்னதி திருவீதி, தெற்றெபுறத் திருவீதி, அவனி நாராயணப் பெருநதெரு, அகப்பிணவர் தெரு. செக்கர் ஏழுகை, இராசராசன் திருவீதி, ஆண்டார் திருவீதி, ராஜராஜ விளாகம் போன்றவை இருந்தமையைக் காணமுடிகிறது. ஒரு கல்வெட்டில் செல்வத் திருவாரூர் என்ற குறிப்பும் கிடைக்கிறது.

தற்போது கமலாலயம் என அழைக்கப்படும் திருக்குளம் கல்வொட்டொன்றில் தீர்த்த குளம் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. ஆரூர் தியாகப் பெருமான் திருக்கோயிலைத் தனிர மேலும் சில திருக்கோயில்கள் ஆரூர் நகரை அலங்கரிததன என்பதை கல்வெட்டுகள் செப்புகின்றன. இவ்வகையில் திருக்குளத்தின் மேல் கரையில் திக்கு நிறைந்த வினாயகர் கோயிலும் ராஜாக்கள் தம்பிரான் திருவீதியில் அழகிய திருச்சிற்றம்பலமுடையார், பொற்பதிக்கு நாயகீஸ்வரமுடையார், திருமாளிகை வினாயகப் பிள்ளையார், சுப்பிரமணியப் பிள்ளையார் என்ற திருக் கோயில்கள் இருந்தமையும், திருமண்டலி போன்ற கோயில் களும் திகழ்ந்தன என்பதும் உணரப்படுகிறது.

பெருந்திருக்கோயிலினுள் உள்ள பூங்கோயில் பெரியதளி என்றும், மற்றும் அருமொழிச்சரம், பிரம்மீச்வரம், உலகேச்வரம் என்ற திருக்கோயில்களும் இ ரு ந் த மை ய ந்நாளைக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இவை தற்போது ஆனந்தீஸ்வரம், ஆடகேஸ்வரம், சித்தீஸ்வரம் என்று அழைக்கப்படும் திருக் கோயில்களாக இருக்கலாம்.

ஊர்சபைகளும் சதுர் வேதிமங்கலங்களும்

சோழர்கள் காலத்தில் ஒவ்வோர் ஊரும் மக்களை அங்கத் தினர்களாகக்கொண்ட ஊர்சபை நிர்வாகத்தின் கீழ் செயல்

பட்டன. இதனை விரிவாக ஆரூர் கல்வெட்டுக்கள் வாயிலாகக் காணலாம். ஊர் சபைகள் பெருங்குறி மகாசபை சதுர்வேதி மங்கல மகாசபை, பிரமதேய மகாசபை என அழைக்கப்பட்டன. நான்கு வேதங்களையும் கற்ற மறையவர்களால் நிர்வகிகப்பட்ட ஊர்கள் சதுர்வேதி மங்கலம் (சதுர்-நான்கு, வேதி-வேதம் கற்றவர்கள் வசிக்குமி) என அழைகப்பட்டன அந்தணர்களுக்காக அளிக்கப்பட்ட ஊர்கள் பிரமதேயமாகும்.

ஆரூரைச்சூழ்ந்த சதுர்வேதிமங்கல ஊர்களான அடியப்பி சதுர்வேதிமங்கலம் (தற்போது அடியக்க மங்கலம் என அழைக்கப் படுகிறது), குடவாயிலான சோழகுல வல்லி சதுர்வேதி மங்கலம், ராஜேந்திர சோழ சருபபேதி மஙகலம் முதலியன இவை ஆரூர் கோயிலுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தன. புதுக்குடி, வாயிற்றூர் போன்ற பிரமதேய கிராமங்களும் விளங்கின. இத்தகைய ஊர்களின் ஊர்சபைகள் சிலமுக்கியமான முடிவுகளை ஆரூர்த்திருக்கோயிலில் உள்ள தேவாசிரியம், ராஜநாராயண மண்டபம் போன்ற மண்டபங்களில் கூடி முடிவு எடுத்ததைப் பல சாசனங்கள் செப்புகின்றன.

ஆரூர்கோயிலுக்கென பல ஊர்களில் நிலங்கள் இருந்தன. இவ்வாறு குறிப்பிடப்படும் ஊர்கள் பின் வருமாறு: வாயற்றூர், நந்திபுரமான கருணாகரநல்லூர், பனையூர் நாட்டு நடப்பூரான உத்தம சோழமங்கலம், தேவூர் நாட்டு பிரமதேயமான சிறு நல்லூர், புதுக்குடி, வீரராஜேந்திர தேவமங்கலம், பள்ளியுமா ராய மங்கலம், பெரும்போர், ராஜராஜபிரம்மமங்கலம், மும்முடி சோழ நல்லூர், பனங்குடி, பழனக்குடி, ராஜேந்திரசோழ சருப் பேதி மங்கலம், குடவாயிலான சோழகுலவல்லி சதுர்வேதிமங்கலம் புலிவலம், திருநல்லூர், சேந்தமங்கலம், இறையாங்குடி, அம்மை யப்ப நல்லூர், தீயங்குடி, இங்கண், சோழ கேரள நல்லூர், கள்சாத்தங்குடி, திருவம்பல நல்லூர், தென்கண்டம், வட கண்டம், ஸ்ரீ மாகேசுரநல்லூர் முதலியன.

நில அளவையும் பதிவேடுகளும்
(Land Survey & Registers)

மர்மன்னன் முதலாம் இராசராசன் காலத்தில் (கி.பி.1001ல்) சோழ மண்டலம முழுவதும் அளந்து எவ்வளவு நன்செய், புன்செய் காடுகள் உள்ளன என்பதை தெளிவுபடுத்தி அவற்றுள் விளை நிலங்களுக்கு மாத்திரம் வரி விதிக்குமாறு ஏற்பாடு செய்தான். இதை அவனது கல்வெட்டுக்களால் அறிகிறோம். நில அளவை

செய்த அதிகாரியின் பெயர் சேனாபதிகுரவன உலகளந்தா னாகிய இராசராச மாராயன் ஆவான்.

இது போன்றே முதலாம் குலோத்துங்கன் காலத்திலும் சோழ மண்டலம் முழுதும் அளக்கப்பட்டது. விளை நிலங்களின் பரப்பை அறிந்து நிலவரியை ஒழுங்கு படுத்தவே இவ்வாறு அளக்கப்பட்டது. இவ்வேலை கி.பி. 1086-ல் தொடங்கப்பெற்று இரண்டாண்டுகளில் முடிவெய்தியது. இவ்வேந்தனின் ஆணைப்படி இதனைச் செய்து முடித்தவர்கள் திருவேகம்பமுடையானான உலகளந்த சோழபல்லவரையனும் குளத்தூருடையான் உலகளந் தானான திருவரங்கதேவனும் ஆவான். இவ்வாறு இவர்கள் உலகளந்தமையைப்பற்றிக் கூறும் சீர்காழிக் கல்வெட்டொன்று ''நம் உடையார் சுங்கம் தவிர்த்தருளின சோழதேவர்க்கு 16 வது திருவுலகளந்த கணக்குப்படி நீக்கல் நீக்கி பனைநின்றகொல்லையும் உவரும் உப்பு மண்ணும் ஆய் அறுகெழுந்த படுதரையும் என்று அளந்த நிலத்து நெல் பயிறும், புன் பயிறும் செய்தும் மரநிலையும் ஆய் வருகிற நிலம் உள்பட''.. என மூன்றாம் குலோத்துங்கனின் 9-ஆம் ஆண்டு கல்வெட்டு கூறுகிறது.

இத்தகைய அரிய வரலாற்றுச் செய்தியினை பிறிதொரு சான்றாக நம் ஆரூர் கோயில கல்வெட்டில் காண்பது இக் கோயிலின் வரலாற்றுப் பெருமைக்கு மேலும் ஓர் அணியார மன்றோ! இக்கல்வெட்டில் **''சுங்கம் தவிர்த்தருளின சோழ தேவர்க்கு யாண்டு 16வது அளவில் நீக்கலுக் குடலாய் நீக்கின ஊருணி குளமாய்...''** என இரண்டாம் குலோத்துங்கனின் 12 ஆம் ஆண்டு (கி. பி. 1143-44) கல்வெட்டு கூறுகிறது. எனவே நில அளவை சோழர்கள் காலத்தில் எவ்வளவு மதிக்கப்பட்டது என்பதும், தம் முன்னவர்களால் (முதற்குலோத்துங்கனால்) செய்யப்பட்ட அளவைக் கணக்குகளை பின்பு வந்த மன்னர்களும் போற்றினர் என்பதை ஆரூர் கல்வெட்டால் தெளிவுபட அறிகிறோம்.

இவ்வாறு அளக்கப்பட்ட நிலங்கள் அரசுப் பதிவேடுகளில் (Ledger) பதிவு செய்யப்பட்டு போற்றப்பட்டமையும் ஆரூர் கல் வெட்டுக்கள் அழகுபடக் கூறுகின்றன. முதலாம் இராஜராஜனின் ஆரூர் கல்வெட்டொன்றில் **''நிலன் ஒன்றே ஒருமாவரையும் விரிவு மடக் கென்னாதே மிகுதிக்குறைமை உள்ளடங்க பொத்தகத்துள் உள்ளது எல்லாமும்...''** (பொத்தகம்–Ledger) எனவும்; இரண்டாம்

இராஜாதிராஜனின் கல்வெட்டொன்றில் இம்மன்னனது ஆணைப் படி விடப்பட்ட நிலங்கள் நில அளவைக் கணக்கிலும் பதிவு செய்யப்பட வேண்டும் என ஒரு கல்வெட்டு கூறுகிறது. இதனை ''கணக்கிலும் இட்டு...கல்வெட்டவும்...'' என்று கூறுகிறது.

இவ்வாறு நில அளவைப்பற்றியும், ஒவ்வொரு முறையும் நிலங்கள் விற்கப்படும்போது, அவை பற்றிய நான்கெல்லை முற்காலப் பதிவேடுகளில் உள்ள விபரங்கள், புதிய மாற்றம் போன்றவை உடனுக்குடன் பதிவு செய்யப்படுதல் போன்ற நடை முறை இருந்தது என்பதையும் அறிய முடிகிறது.

''இறையிலி'' நிலங்களாக அளிக்கப்படும்போது (அரசுக்கு வரியில்லாத நிலங்கள்) அவை பற்றியும் உடனுக்குடன் இறையிலி பொத்தகத்தில் (Ledger of Taxless lands) பதிவுசெய்யப்பட்டது என்பதையும் ஆரூர் கல்வெட்டுகள் தெளிவுபடுத்துகின்றன. 'புத்தகம்' என்ற சொல் கல்வெட்டுக்களில் ''பொத்தகம்'' எனக் குறிக்கப்பட்டுள்ளன. இதனை நிர்வகித்த அதிகாரியின் பெயர் 'வரிபொத்தகம்' என்றே அழைக்கப்படுகிறான்.

நிலவிற்பனை — சாசனங்கள் — அளவைகள்

திருக்கோயிலுக்கு அளிக்கப்படும் பெரும்பான்மையான அறக் கொடைகள் நிலமாகவே அளிக்கப்பட்டன. பொன் காசு போன்ற கருவூல முதலீடுகள் கூட நிலமாக மாற்றப்பட்டன. இவ்வாறு இறைவனுக்காக அளிக்கப்படும் நிலம் அனைத்தும் ஆதிசண்டேஸ் வரர் பெயருக்குத்தான் சாசனங்களாக பதிவு செய்யப்படும். நில தானம் அளிக்கும் போது அவை சண்டிகேஸ்வரர் பெயருக்கு சாசனமாக செப்புத்தகடுகளில் எழுதப்பட்டு பின்பு அச்செப்பேடு கள் ஆதிசண்டேஸ்வரதேவரின் திருவுருவச்சிலையின் பாதத்திலோ கைகளிலோ வைக்கப்பட்டு, கொடைநல்குபவரால் நீர்வார்த்து கொடுக்கப்படும். இதனைப் பல ஆரூர் கோயில் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

இவ்வாறு அளிக்கப்படும் சாசனங்களில் நிலங்களின் நான் கெல்லை விரிவாகக் கூறப்படும். உதாரணமாக ஆரூர் கல்வெட்டொன்றில் '' . .இராஜ விச்சாதிர வாய்க்காலுக்குத் தென்பக்கத்து ஆயப்பெயரை ஓடையென்று பேர் கூவப்பட்ட நிலத்துக்கு கீழ்ப்பாற் கெல்லை... பட்டன் நிலத்துக்கு மேற்கும்... பொன்னம்பி பட்டன் நிலத்துக்கு உள்ளிட்டார் நிலத்துக்கு வடக்கும்

பூஷண பட்டன் நிலத்துக்கு கிழக்கும்..... வாய்க்காலுக்கு தெற்கும் நடுவபட்ட நிலம்.....'' (555 of 1904) என குறிக்கப்பட்டுள்ளது.

நான்கெல்லை குறிப்பிடப்படுவதோடன்றி நீர்பாய்ச்சப்பட வேண்டும், அதற்கென அந்நிலவுரிமையாளர்க்குரிய உரிமைகள் பற்றி விவரிக்கின்றன. பாய்தல், வடிதல், நீர் எவ்விதம் எங்கிருந்து இறைத்தல் போன்ற விபரங்கள் கூட கல்வெட்டுக்களில் இடம் பெறுகின்றன. உதாரணமாக ''...இந்நிலத்துக்கு முன்பு நீர்பாவு மண்ணமேய் பாயவும் நீர் வாரு மிடத்திலே வாரவும் வடசேரி குளத்திலே இறைக்கப்பெருவதாகவும்...'' என்று எழுதப்பட்டுள்ளது.

கல்வெட்டுக்கள் எழுதப்பட்டு பின்பு அவை அரசு அலுவலர் களால் ஆவணங்களில் பதிவு செய்யப்பட்டதால் ''நிலவிலை யாவணம் செய்து கொடுத்தோம்'' என்ற சொற்றொடர் கல் வெட்டுக்களில் காணப்படுகிறது. இவ்வாறு ஆவணங்களில் பதிவு செய்யப்படும்போது அவ்வூரில் உள்ள அரசு அதிகாரியான ''மத்தியஸ்தன்'' போன்ற அதிகாரிகள் கையொப்பமிடுவர். கல்வெட்டு எழுதுபவன் பெயர், மற்ற சாட்சிகளின் பெயர்களும் கையொப்பங்களும் இடம் பெறும். இந்நிலம் பற்றி எந்த பொத்த கத்தில் இது இடம் பெற்றுள்ளது, இதற்கு முன்பு நில அளவை செய்த குறிப்புகள் முதலியன குறிப்பிடப்பட்டிருக்கும்.

ஒவ்வோர் ஊரிலும் அரசு அதிகாரிகளால் நிர்வகிக்கப்பட்ட பதிவு பொத்தகங்களில் அவ்வப்போது அந்நிலம் பற்றிய மாறுதல் கள் இடம்பெறும் என்பதை ஆரூர் கல்வெட்டுக்கள் கண்கூடாக காட்டுகின்றன மடப்புறம் என்பதும் அறநிலையங்கள் சம்பந்தமான நிலம் என்பது, அர்சனா போக இறையிலி என்பது இறைவனுடைய தினசரி பூசைகளுக்காக அளிக்கப்பட்டநிலம் என்றும், புதுக்குபுறம் என்பது திருப்பணிகளுக்காக விடப்பட்ட நிலம் என்பதும், திரு விளக்குபுறம் — திருவிளக்குகள் பராமரிப்புகளுக்காக விடப்பட்ட நிலம் என்பதும் சாசனங்களால் குறிபபிடப்படுகின்றன. சில நேரங்களில் ஏலங்களில் விற்பனை செய்யப்படுவதை குறிப் பிடுவதாக ''பெருவிலை''என்ற சொல்லாட்சி காணப்படுகிறது. வேதவனமுடையான் அம்மையப்பன் என்பானின் சாசனம் ஒன்றில் ''இராஜாதிராஜப் பெருவிலையில்'' ஏலம் விடுத்ததாக குறிப்பிடுகிறது. ஏலங்களின் போது மும்முறை கூறி இறுதி விலை கூறப்படுவதை கலவெட்டுகளிலும் மூன்றுமுறை எழுதப் பட்டுள்ள பாங்கை ஆரூர் கல்வெட்டுக்களில் காண இயலுகிறது.

சாசன வாசகங்களான— ''இதுவெய் பொருள் மாவறுதிப் பொருட் செலவோலை ஆவதாகவும் இது வல்லாது வேறுபொருள் மாவறுதிப் பொருட் செலவோலைக் காட்டக் கடவாரல்லாதா ராகவும்..,'' போன்ற வரிகள் காணப்படுகின்றன.

நிலஅளவைகள் குழி, மா, காணி, வேலி போன்ற சொற்களால் குறிப்பிடப்பட்டுள்ளது. ஓர் கல்வெட்டு 100 குழி ஒரு மா என்றும், 20 மா ஒரு வேலி என்றும் குறிப்பிடுகிறது. இவ்வளவை பெயர்களே எல்லா சோழ மன்னர்களின் கல்வெட்டுக்களிலும் காணப்படுகிறது

கருவூலம் (பண்டாரம்—Treasury)

கருவூலம் என்ற சொல் 'பண்டாரம்' என்ற பெயரில் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படுகிறது. ஆரூர் திருக்கோயிலில் ஓர் கருவூலம் செயல்பட்டதை பல்வேறு சோழமன்னர்களின் கலவெட்டுகள் எடுத்தியம்புகின்றன. இப்பண்டாரம் ''தேவர் பண்டாரம்'' ''தேவர் ஸ்ரீபண்டாரம்'''' ஆதிசண்டேஸ்வரதேவர் பண்டாரம்'' ''தியாக வினோதன் பண்டாரம்'' என்ற பெயர் களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பண்டாரங்களில் மன்னர்களாலோ மக்களாலோ, அறக் கொடைகளுக்காக பொன்னோ, காசுகளோ முதலீடு செய்வர் இவ்வாறு முதலீடு செய்யப்பட்ட பொருள்களை தனிநபர் எவரேனுமோ அல்லது ஊர்சபைகளோ, கடனுக்காகவோ, நில விற்பனைக்காகவோ பெற்றுக் கொள்வா. கடனாக பெற்றுக் கொண்டால் ஆண்டு தோறும் வட்டி (பொலிசை) யை திரும்பச் செலுத்தினர். அதிலிருந்து அந்த குறிப்பிட்ட அறக்கட்டளை நடைபெற்று வந்தது இவ்வாறு கருவூலங்கள் ஓர் வங்கியாகவே அன்றைய சமுதாய பொருளாதார மேம்பாட்டில் அங்கம் வகித்தது இறையுணர்வோடு எலலாம் நிகழ்ந்ததால் திருவாரூர் திருக்கோயில் கருவூலத்தின் உரிமை ஆதிசண்டேஸ்வரர் பெயருக்கே இருந்துவந்தது.

பல கல்வெட்டுக்கள் பண்டாரம் பற்றி பேசினாலும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் ஒன்றிரண்டு உண்டு. சோழப் பேரரசி செம்பியன மாதேவி பா 200 கழஞ்சு பொன்னை அற நெறி கோயிலின் திருப்பணிகளுக்காக பணடாரத்தில் முதலீடு செய்ததும், அதனை அடியப்பியசதுர்வேதி மங்கலத்து சபை யினர் வட்டியினை பேரில் கடனபெற்று சென்றதும குறிப்பிடத்தக்க

செய்தியாகும். இதே போன்று விக்கிரம சோழன் காலத்தில் ஜெயங்கொண்ட சோழமண்டலத்தைச் சேர்ந்த மணவில் என்ற ஊரினனாகிய மதுராந்தகன் பொன்னம்பலக் கூத்தன் என்பான் திருவாரூர் இறைவனுக்கு செங்கழுநீர்ப் பூக்கள் பயிரிட குளம் ஒன்றினுக்காக 100 காசுகளை ஸ்ரீதேவர் பண்டாரத்தில் முதலீடு செய்தான். இதனை திருநல்லூர் மகா சபையினர் பெற்றுக் கொண்டு குளம் ஒன்றினை கோயிலுக்காக விட்டுக் கொடுத்ததை குறிப்பிடுகிறது. வன்மீகநாதர் கோயில் கல்வெட்டொன்று ஸ்ரீகாரியம் பார்ப்பார் தம்கடமை தவறியதால்பொற்பண்டாரத்து இருப்பு குறைய, விழுப்பரையர், பிரம்மராயர் என்ற இருவரிடம் பொற்பண்டாரத்து உரிமை கொடுக்கப்பட்டதாக கூறுகிறது. இது போன்ற எண்ணிலா நிகழ்ச்சிகள் ஆரூர் ஸ்ரீ பண்டாரத்தில் நிகழ்ந்துள்ளன.

ஸ்ரீமுகங்கள்

ஸ்ரீமுகம் என்பது மன்னனது அரசாங்க உத்தரவு (ஆணை) ஆகும். இது மக்களுக்காக அறிவிக்கப்படும் ஓர் அறிவிப்பாகும். திருக்கோயில் நிர்வாகங்களில் நேரே தங்களின் கவனத்தை ஈடு படுத்திய மாமன்னர்கள் தங்களது அரசு ஆணையை ஸ்ரீமுகங் களாக அனுப்பினர். அவை திருக்கோயில் சுவர்களிலும் செப்பேடுகளிலும் தீட்டப்பட்டன. இவ்வாறு மன்னனது ஆணைகளாகப் பதிவு செய்யப்பட்ட ஸ்ரீமுகங்கள் பல ஆரூர் கோயிலில் உள்ளது.

இராஜேந்திரசோழன், இரண்டாம் இராஜராஜன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராஜாதிராஜன். மூன்றாம் குலோத்துங்கன், வீரபூபதி உடையார், அச்சுததேவ மகாராயர், செவ்வப்ப நாயக்கர், ரகுநாத நாயக்கர், முதலாம் சரபோஜி போன்ற மன்னர்களின் ஸ்ரீமுகங்கள் கல்வெட்டாகவோ செப்பேடுகளாகவோ உள்ளன.

சோழப் பெருமன்னர்களின் பெரும்பாலான அரசுஆணைகள் மன்னர்கள் கூறுவது போல் அமையாமல் வீதிவிடங்கப் பெருமானே கூறுவது போல் அமைந்துள்ளமை ஆரூர் திருக் கோயிலின் சிறப்பு அம்சங்களுள் ஒன்றாகும்.

எடுக்கப்பட்ட திருமேனிகளும் திருக்கோயில்களும்

முதல் ராஜராஜன் காலத்தில் செம்பியன் மாதேவியர் என்னும் சோழப் பேரரசியால் அரநெறியாம் திருக் கோயிலில் அமர சுந்தர

தேவர் உமா பட்டாரகியார் என்ற இரண்டு திருமேனிகளை எடுத்துள்ளார். இதே போன்று வேத வனமுடையான் அம்மை யப்பன் பல்லவரையன் காலத்தில் புதிதாக இத்திருக்கோயிலில் எடுக்கப்பட்ட பரலோக மென்மொழி நாச்சியார் படிமம் பற்றியும் அறிகிறோம். இரண்டாம் குலோத்துங்கனால் ஞானசம்பந்தர் அப்பர், சுந்தரமூர்த்தி மற்றும் பரவை நாச்சியார் போன்றவர் களின் திருமேனிகள் எடுக்கப்பட்டதும், கல்லில்குறிக்கப்பட்டுள்ளது முதலாம் ராஜாதிராஜனால் மாமன்னன் ராஜேந்திரன் மற்றும் பரவை நாச்சியார் இவர்கள் திருமேனிகள் எடுக்கப்பட்டதும், (இதுதற்போது ஆனந்தீஸ்வரம் திருக்கோயிலில் உள்ளது)மூன்றாம் குலோத்துங்கனால் தனது படிமம் ஈசான சிவனாரின் படிமமும் எண்ணற்ற இறை உருவங்களும், நாட்டியப் பாவைகள் பலவும் எடுக்கப்பட்டது, நாம் கல்லிலே காணும் உண்மை. பரவை நங்கையால் இரண்டு பாவை விளக்குகளும் (''பச்சைப் பாவை உமைநங்கை,'' ''பாவை சரியாமுலை நங்கை'') எடுக்கப் பட்டவையாகும்.

திருமேனிகள் மட்டுமின்றி திருக்கோயில்கள் பலவும் எடுக்கப் பட்டன. செம்பியன் மாதேவியாரால் அரநெறி கற்கோயிலாக எடுக்கப்பட்டது. பரவை நங்கையால் (முதல் ராஜேந்திரன் அன்பு நாயகி) வீதிவிடங்கனின் கருவறையும், ராஜேந்திர சோழன் மண்டபமும் எடுக்கப்பட்டது. மூன்றாம் குலோத்துங்கனால் கிழை ராஜகோபுரமும் சபையும் கட்டப்பட்டன. திருக்குளத்தின் மேல் கரையில் திக்குநிறைந்த விநாயகப் பிள்ளையார் கோயில் ராஜாக்கள் தம்பிரான் திருவீதியில் பொற்பதிக்கு நாயகீஸ்வர முடையார் கோயில், அழகிய திருச்சிற்றம்பல முடையார் கோயில் சுப்ரமண்யப் பிள்ளையார் கோயில், திருமாளிகைப் பிள்ளையார் கோயில், போன்ற கோயில்கள் மூன்றாம் ராஜேந்திரன் காலத்தில் எடுக்கப்பட்டவைகளாகும். நாகராசர் என்பவரால் இரண்டாம் பிரகார மேலைக் கோபுரமும் அச்சுதப்ப நாயக்கனால் வடக்கு கோபுரமும் கட்டப்பட்டவைகளாகும்.

பரவை நங்கையால் வீதிவிடங்கனின் கருவறையும், ராஜாதி ராஜனால் வீதிவிடங்கனின் முன்மண்டபமும், மூன்றாம் குலோத்துங்கனால் வன்மீகனாதரின் கோயிலும், தங்கத் தகடு

களால் போர்த்தப்பட்டது என்பது கல்வெட்டுகள் நமக்குக் கூறும் கவின்மிகு வரலாறாகும்.

திருமடங்கள்— சிவயோகிகள்— வேதபாராயணம்

ஆரூரில் பல மடங்கள் செயல்பட்டமையும், இவை திருக் கோயிலுடன் நெருங்கிய தொடர்புடன் திகழ்ந்ததையும் கல் வெட்டுக்கள் கூறுகின்றன முதலாம் குலோத்துங்கனுடைய 24-ஆம் ஆண்டு கல்வெட்டொன்றில் பழையாற்று கிழான் அருமொழி ராஜேந்திர சோழன் என்பான் சண்டீஸ்வரன் என்ற மடத்திற்காக ஆரூர் கோயில் பண்டாரத்தில் பொன் முதலீடு செய்ததை குறிக்கிறது. அடுத்து விக்கிரம சோழன் காலத்தில் தியாக வினோதன் சாலை மடம் என்ற மடமும், மூன்றாம் ராஜேந்திரன் காலத்தில் திருவிடை மருதூரைச் சேர்ந்த விசய பாலன் என்பவர் தோற்றுவித்த ஓர் மடம் பற்றியும் அறிய முடிகிறது.

மடங்கள் மட்டுமின்றி ஆரூர் திருக்கோயிலிலும் சிவயோகி களுக்கும் அபூர்விகளுக்கும் உணவும் உடையும் உறையுளும் வழங்கப்பட்டன. செம்பியன் மூவேந்த வேளான் என்பவன் தினம் பனிரெண்டு சிவயோகிகளுக்கு உணவளிக்க நிலக்கொடை அளித்தான். இவர்களுக்காக சமைக்கப்படும் அரிசியின் அளவு, தேவைப்படும் விறகு மற்ற சாமான்களின் அளவுகள் கூட கல்லிலே வெட்டப்பட்டுள்ளது. அமாவாசை தினங்களில் அந்தணர்களுக்கு திருக்கோயிலில் உணவும், உடையும் அளிக்கப்பட்டமையும் குறிக்கப்பட்டுள்ளது.

வேதபாராயணம் செய்யப்படுவதற்காக தனி நபர் ஒருவன் நிலக்கொடை அளித்ததை பாண்டிய மன்னன் ஒருவனுடைய கல் வெட்டு திறம்பட உரைக்கிறது. தினமும் எட்டு நபர்களால் சந்திப் பொழுதில் வேதபாராயணம் (அத்யயனம்) செய்யப்பட்ட தோடன்றி இவர்களுக்கு உணவு உடை மற்றெல்லா வசதிகளும் அளிக்கப்பட்டதைத் தெளிவாக அறிகிறோம்.

திருவிழாக்கள்

ஆரூர் கோயிலில் உள்ள கல்வெட்டுக்களை நோக்கும் போது இத்திருக்கோயிலில் ஐம்பத்தாறுக்கும் மேற்பட்ட திருவிழாக்கள் (திருநாள்) நடைபெற்றதாக அறியமுடிகிறது, அவற்றில்

முக்கியத்துவம் பெற்றதாக மார்கழி மாதத்து திருவாதிரை, பங்குனிஉத்தரம்,(தற்போது வசந்த உற்சவம் எனக்கொண்டாடப் படுகிறது) தைப்பூசம் போன்ற நாட்களில் மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டதாக அறிகிறோம். இந்நாட்களில் வீதி விடங்களின் திருமேனி வீதிகளில் பவனிவரும் என்பதும்தெரிகிறது. சில விழாக்களின்போது தேவாசிரிய மண்டபத்தில் எழுந்தருளுவர் என்பதும் முன்பே கண்டோம்.

இவை மட்டுமின்றி விஷ்வாயனம், ஆடிப்பூரம், ஆவணி அவிட்டம், சித்திரைமாத சித்திரை நாள் போன்ற நாட்களிலும் விழாக்கள் எடுத்துள்ளனர். செங்கழுநீர்மாலை சாத்தியருளும் திருநாள், பவித்திரம் சாத்தியருளும் திருநாளும் நடை பெற்றுள்ளது.

''திருப்பங்குனி உத்திரத் திருநாளைக்கு
திருக்கொடி ஏற்றுக்கு .... திருநாள் பத்தும்..''
''திருப்பங்குனி உத்திரத்திரு நாளைக்கு....
திருமுளை சார்த்த எழுந்தருளும் திருநாள்..''

என்ற கல்வெட்டு வரிகளால் பங்குனி உத்திர பெருவிழா ஆண்டு தோறும் பத்து தினங்கள் கொடியேற்று விழாவோடு தொடங்கி சிறப்பாக நடைபெற்றதை அறிய முடிகிறது, ஐப்பசி சதயமும், ஆடி ஆருத்ராவும் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்ட நாட்களாகும், இவை முறையே மாமன்னன் ராஜராஜன், ராஜேந்திரன் இவர்கள் பிறந்த நாட்களாகும்.

இத்தகைய விழாக்காலங்களில் மன்னர்களாலும், மக்களாலும் எண்ணற்ற அறக்கொடைகள் செய்யப்பட்டு, இக்கொடைகளுக்கான சாசனங்கள் இறைவன முன்பு நீர் வார்த்து அளிக்கப்பட்ட பல நிகழ்ச்சிகளையும் காண்கிறோம்.

திருக்கோயில் பூஜை நெறிகள்

இறைவனுக்காக செய்யப்பட்ட பூஜை நெறிகளை கல் வெட்டுகளில் காணும் போது மாமன்னர்களின் பண்புநலன் தெள்ளிதின் புலப்படும். தினசரி இறை வழிபாட்டின்போது படைக்கப்படும அமுது படிகளுக்காக வழங்கப்பட்ட நிலங்கள் ஏராளமானவையாகும். இவவாறு அமுதுகள் படைக்கப் படுவதற்காக வெள்ளிப் பாத்திரங்களும், பொற்கலங்களும் அளிக்கப்பட்டதாக கல்வெட்டுக்கள் செப்புகின்றன,

தினசரி நாட்களிலும், சிறப்பு பூஜைகளின் போதும் இறைவனுக்கு திருமஞ்சனம் (புனித நீராட்டு) செய்யப்பட்டது. இதற்கென அளித்த நிவந்தங்கள் பல. கடுவாய் எனும் புனித காவிரியின் கிளை நதியில் இருந்து தினமும் தலைச்சுமையாக குடங்களில் நீர் கொண்டுவரப்பட்டுத் திருமஞ்சனம் செய்யப் பட்டது. நீர் குடங்கள் சுமப்பவர்களுக்குக் கூட நிலங்கள் விடப் பட்டிருந்தமையும் அறிய முடிகிறது. திருமஞ்சன நீரில் உயரிய வாசனை திரவியங்கள் கலக்கப்பட்டமையும், அவை சேர்ப்பார்க்கு நிவந்தங்கள அளித்தமையும் இராஜேந்திர சோழனின் கல்வெட்டு அழகுபட எடுத்துரைக்கிறது.

நீர்கொண்டு வருவதற்கு வெள்ளிக்குடங்களும், இறைவனுக்கு வஸ்திரங்களும், மணிகள பதித்த பொன் ஆபரணங்களும், முத்துக்களும் பல்லோராலும் வழங்கப்பட்ட பல செய்திகள் காணக்கிடக்கின்றன. ஸ்ரீ மூலஸ்தானமுடையார்க்கு புதன் கிழமையும், சனிக்கிழமையும் எண்ணைக் காப்பிடுவதற்காகத் தனி நபர் ஒருவன் நிலம் அளித்துள்ளான். ''நடுவில் இராஜேந்திரன் சந்தி'' என்ற சந்தி நேர பூஜை சிறப்பாகப் போற்றப்பட்டு வந்துள்ளது.

இரண்டாம் குலோத்துங்கனின் சிறப்புமிகு கல்வெட்டொன்று பூஜை முறைகள் எப்படிச் செய்ய வேண்டும், என்னென்ன வகை யான அமுதுகள் படைக்கப்பட வேண்டும் என சிறப்பாக கூறுகிறது. இவ்வகையில் அமுதுகளாக, மிளகு அமுது, உப்பமுது ஆடைக்காய் அமுது, அவல் அமுது சர்க்கரை அமுது, அப்பமுது. தயிர் அமுது, மாங்காய் வற்றல், தேங்காய், சர்க்கரை, உப்பிஞ்சி போன்றவை அமுது படிகளாக படைக்கப்பட்டமையை குறிப்பிடுகிறது.

ஒவ்வொரு பூசைகளின் போதும் எத்தனை வாழைப்பழம் எவ்வளவு வெற்றிலை, பாக்குகள் போன்றவை படைக்கப்பட வேண்டும் என்ற பட்டியலும் இக்கல்வெட்டில் காணப்படுகிறது.

பூஜைகளுக்கு மலர்கள் அளிப்பதற்காகவும் எண்ணற்ற அறக் கொடைகள் நல்கியுள்ளனர். நந்தவனங்களுக்காகவும், அவை பராமரிப்பிற்காகவும் நிலங்களை அளித்தனர். மற்றெந்த திருக்கோயிலையும் விட ஆரூர் கோயிலுக்குரிய தனிச்சிறப்பு ''செங்கழுநீர் பூக்கள்'' தான். செங்கழுநீர் ஓடை என்ற 5 வேலி பரப்புள்ள ஓர் ஓடை இன்றும் ஆரூரில் உள்ளது. இதிலிருந்துதான் தினம் இறைவனுக்கு பூக்கள் கொண்டுவரப்படுகிறது. ''திருப்

பள்ளிதாமம் ஆக்குகைக்காக'' பலர் பொன்னும், காசும், நிலங்களும் அள்ளிக்கொடுத்தனர். பல ஊர்சபையினர் குளங்களை இறைவனுக்காக கொடுத்து அதில் செங்கழுநீர் பூக்கள் பயிரிடப் பட்டது. பல நந்தவனங்களின் பெயர்களும், குளங்களின் பெயர்களும் கல்வெட்டில் காணப்படுகிறது.

விழாக்களின்போது '' ஸ்ரீ பாதம் தாங்குவார்க்கும்'' (இறைவன் திருமேனியை பவனியாக எடுத்து வருபவர்களுக்கு) மடப்பள்ளியில் பணிபுரியும் ஊழியர்களுக்கும் என்னென்ன செய்ய வேண்டும் என்பதும் வகுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பூசை நெறி பாடுகள் அனைத்தும் மிகச் சிறப்பாகக் கண்ணெனப் போற்றப் பட்டது எனபதைத் தெளிவாக அறியலாம்.

திருவிளக்கு தர்மங்கள்

திருவிளக்குகளை இறைவன் முன்பு ஏற்றுவித்து போற்றுதல் நம் பண்டைய மரபின் சிறப்பு அம்சமாகும். இதற்காக மாமன்னர் களும், மக்களும் செய்த தொண்டுகள் ஒன்றல்ல இரண்டல்ல, ஆரூர் கோயிலில் நமிநந்தியடிகள் என்றும் நாயன்மாருள் ஒருவர் திருக்குளத்து நீரால் விளக்கெரித்ததாக பெரிய புராணம் பேசும். இதனை அப்பர் அடிகள்

''ஆரூர் நறுமலர் நாதன் அடித்தொண்டன் நம்பி நந்தி
நீரால் திருவிளக்கிட்டமை நீணாடறியுமன்றே''

— எனப் போற்றுகிறார்.

இத்தகைய பெருமை பெற்ற ஆரூர் திருக்கோயிலின் முதல் கல்வெட்டே (காலத்தால் முற்றியது) திருவிளக்கு தர்மம் பற்றியே பேசுகிறது. மன்னர்களும். மக்களும் இத்தகைய விளக்குகள் எரிப்பதற்காக திருவிளக்குகள் மட்டும் அளிக்கவில்லை. அவ் விளக்குகள் தினம் தினம் ஏற்றுவிக்கப்பட வேண்டும் என்பதற்காக ஆடுகளாகவோ, நிலமாகவோ அல்லது காசாகவோ நிவந்தங்கள் விட்டனர்

சாவா மூவாப்பேராடு

உதாரணமாக ஆதித்தன் காலத்திய இத்திருக்கோயில் கல் வெட்டொன்றில் தினம் ஆரூர் அரநெறியில் விளக்கெறிக்கப்பட வேண்டும் என்பதற்காக தனி நபர் ஒருவர் ''109 சாவா மூவாப்

பேராடுகள்'' அளித்ததாகவும். அவற்றின் பராமரிப்பை ஏற்றுக் கொண்டவன் ஒவவொரு நாளும் ''திருநீலகண்டம்'' என்ற குவளையால் நெய் அளகக வேண்டும் என்றும் குறிப்பிடுகிறது. இவ்வாறு திருக்கோயிலுக்காக அளிக்கப்பட்ட 109 ஆடுகளும், ஆயன் (இடையன்) ஒருவனிடம் விடப்படும். அவ்வாறு ஏற்றுக் கொண்டு சாசனம் செய்து கொடுத்த ஆயன் அம்மந்தையில் ஏதேனும் ஆடுகள் இறந்தாலோ அல்லது மூப்பு எய்திவிட்டாலோ அந்த எண்ணிக்கையை வேறு ஆடுகளால் நிரப்ப வேண்டும. அதே சமயத்தில் ஆடுகள் எண்ணிக்கையில் பெருகுவதால் ஏற்படும் வருமானமும், மந்தையால் கிடைக்கும வருமானம முழுவதையும் அவன் அடைய வேண்டும். இந்த மந்தையை என்று நோக்கினும் ஆடுகளின் எண்ணிககை 109க்குக் குறையக் கூடாது. இதனால் தான் சாவா மூவா (இறப்போ—முதிர்ச்சியோ இல்லாத) பேராடுகள் என அழைக்கப்பட்டது. இம்மந்தையினால் பல்வகைப் பயன் எய்தும் ஆயன், தினம விளக்கெரிக்க நெய் கொடுத்து வந்தான். இவ்வகை தர்மங்களில் ஆடுகள் நிரந்தர முதலீடாகவும்--அம் முதலீட்டிற்கான வட்டியாக தினம் விளக்குக்கு நெய்யும் கிடைத்தன.

இவ்வகையான திருவிளக்கு தர்மங்களினால் இறைவன் முன்பு ஒருவிளக்கு மட்டும் எரிக்கப்படவில்லை; அத்துடன் ஓரிரு குடும்பங்கள் நிரந்தர வருவாய் அடைந்தன; கால்நடைச் செல்வம் பல்கிப்பெருகியது. தர்மமும் தொடர்ந்து தடையின்றி நடந்தது.

கல்வெட்டுக்கள் சாவா மூவா பேராடுகள் மட்டுமின்றி ''சாவா மூவா பெரும் பசுக்களையும்'' குறிப்பிடுகின்றன. இவ்வாறு ஒரு விளக்கு எரிக்க இராஜராஜ சோழன் காலத்தில் 96 ஆடுகளாகவோ, 32 பசுக்களாகவோ, 16 எருமைகளாகவோ அளிக்கப்பட்டதையும் அறிய முடிகிறது. இதனால் சமுதாயத்தின் பொருளாதார மேம்பாட்டிற்கு இத்தகைய தர்மங்கள் எவ் வகையில் துணைபுரிந்தன என்பது நோக்குதற்குரிய ஒன்று.

காசுகள்-நிலங்கள்

ஆடுகளுக்காக பதிலாக பொற்காசுகளைப் பண்டார்த்தில் முதலீடு செய்தல், அல்லது நிலங்களை தானமாக அளித்தல் போன்றவைகளாலும் விளக்குகள் பராமரிக்கப்பட்டன இவ்வாறு அளிக்கப்படும் பொன்னை தனிநபர்கள் கடனாகப் பெற்றுக்

கடனாகப் பெற்றுக் கொண்டோ அல்லது நிலத்தை ஏற்றுக் கொண்டோ, அதற்கு வட்டியாக தினமும் விளகெரிக்க நெய் அளந்ததாக சில கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

இராஜேந்திரன் அளித்த விளக்குகள்

மாமன்னன் இராஜேந்திரன் தனது அன்புக் காதலியான பரவை நங்கையுடன் இத்திருக்கோயிலில் வீதிவிடங்கப் பெருமான் முன்பு வந்து வணங்கினானாம். அவ்வாறு அவர்கள் இருவரும் நின்று வணங்கிய இடத்தில் அந்த இன்பமான—தெய்வீகமான நிகழ்ச்சியை நினைவுறுத்தும் வண்ணம் அந்த இடத்தில் குத்து விளக்கொன்றை வைத்தானாம். இ த னை ஓர் கல்வெட்டு ''உடையார் ஸ்ரீஇராஜேந்திர சோழதேவரும், அணுக்கியர் பரவை நங்கையாரும் நிற்குமிடம் தெரியும் குத்துவிளக்கு ஒன்றும்..'' என்று கூறுகிறது. இது மட்டுமின்றி 15,579பலம் எடையுள்ள பிரம்மாண்டமான 28 குத்துவிளக்குகளையும், ''ட்சைப்பாவை உமை நங்கை'' ''பாவை சரியா முலை நங்கை'' என்ற பாவை விளக்குகள் இரண்டையும் அந்நங்கை நல்லாளின் விருப்பத்திற்காக தானம் அளித்த செய்திகள் வரலாற்றில் என்றுமே ம ற க் க முடியாத நிகழ்ச்சிகள் ஆகும்.

ஆசிரின் சிறப்பு அம்சங்கள்

ஆரூரின் சிறப்பு அம்சங்கள்

1. தீர்த்தக்குளம்--கமலாலயம்

ஆரூர்த்திருக்கோயிலின் மேற்கு வாயிலை ஒட்டி அமைந்துள்ள மிகப்பெரிய குளம் தற்போது ''கமலாலயம்'' என அழைக்கப் படுகிறது. தொன்மையான வரலாற்றுப் பெருமை பெற்ற இந்தக் குளத்திற்குச் சோழர்கள் காலத்தில் ''தீர்த்தக்குளம்'' என்ற பெயரே இருந்தது. கமலாலயம் என்ற பெயர் கல்வெட்டுக் களில் காணப்படவில்லை. சங்கு தீர்த்தம் என அழைக்கப்படும் திருக்கோயிலினுள் அமைந்துள்ள நிணறறுக்கல்வெட்டில் (பிற் காலத்திய வடமொழிக்கல்வெட்டு) ஆரூர்த் திருக்கோயிலையே கமலாலயம் எனக் குறிக்கின்றது.

இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் வாழ்ந்த சேக்கிழார் தம் பெரியபுராணத்தில் இத்திருக்குளத்தின் பெருமையைத் ''தண்டியடிகள் புராணத்தில்'' சிறப்பாகக் கூறுகிறார். சிறந்த தீர்த்த குளமாய் இருந்த இதனைச் சமணர்கள் தூர்த்து பாழிகள் கட்டி உறைந்ததாகவும், இதனால் வெகுண்டு எழுந்த தண்டி யடிகள் தாம் பிறவிக் குருடராய் இருந்த போதும் கரையில் கயிற்றைக்கட்டி அதனைப் பிடித்துக்கொண்டே சென்று குளததை தூரெடுத்துத் தூய்மைப் படுத்தினார் என்றும், இதனல் விரிசடைக் கடவுளும் மகிழ்ந்து தண்டியடிகளுக்கு அருள் பாலித்ததாகவும் கூறுகிறார். இதனை

''செங்கண் விடையார் திருக்கோயிற்
குடபால தீர்த்தக் குளத்தின் பாங்
கெங்கும் அமணற பாழிகளா
யிடத்தாற் குறைபா டெய்துதலால்
அங்கந் நிலைமை தனைத்தண்டி
யடிகள் அறிந்தே யாதரவால்
இங்கு நானிக் குளம்பெருகக்
கல்ல வேண்டு மென்றெழுந்தார்''

—ன்னக் கூறுகிறது பெரிய புராணம். தண்டியடிகள் ஆரூர்க் குளத்தினைத் திருத்தும் அழகிய சிற்பக்காட்சி ஒன்று, இரண்டாம் இராஜராஜனால் கட்டப்பட்ட தாராசுரம் திருக்கோயிலில் இடம் பெற்றுள்ளது.

சேக்கிழாரின் கூற்றால் அவர் காலத்துக்குப் பல நூற்றாண்டு களுக்கு முன்பு வாழ்ந்த தண்டியடிகளின் காலத்திற்கு முன்பே ஆரூர்த்திருக்குளம் சிறப்புடன் இருந்திருக்கிறது என்பதை உணர லாம். மேலும் இக்குளத்தை ''சமலாலய மகாத்மியம்'' எனும் வடமொழி நூலொன்று ஐம்பது தண்டம் நீளமும், அகலமும் உள்ள திருக்குளமெனக் கூறுகிறது. எனவே இது சதுரமாய் இருந்திருத்தல் வேண்டும்.

சுந்தரமூர்த்தி நாயனாருடன் தோழமை பூண்டு திருவாரூரில் சிலகாலம் வாழ்ந்த சேரமான்பெருமாள் தம் திருவாரூர் மும் மணிக்கோவையில் திண்ணிய கரைகளுடன் திகழ்ந்த இந்தத் தீர்த்தக்குளம் பற்றிக் குறிப்பிடுகிறார். மூன்றாம் குலோத்துங் கனுடைய ஆரூர்க்கல்வெட்டொன்றில் இந்தத் தீர்த்தக்குளம் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு - ''பூங்குடையான் வீர விச்சாத்திரப் பல்லவரையர் தீர்த்தக் குளத்துக்கு மேல் கரையில் எழுந்தருளுவிச்ச திக்குநிறைந்த வினாயகப் பிள்ளையார்க்கு . .'' எனக் குறிப்பிடுவதால் சோழர்கள் காலத்தில் இத்திருக்குளம் ''தீர்த்தகுளம்'' என்றே அழைக்கப்பட்டது என்பதும் இதன் மேல் கரையில் வினாயகப் பெருமான் திருக்கோயில் இருந்தமையும் அறிய முடிகிறது.

திருக்குளத்தின் நடுவே நாகநாதசுவாமி கோயிலென்ற பிற் கூல்த்தி திருக்கோயில் ஒன்றுள்ளது. இது பிற்கால மன்னன் ஒருவனால கட்டப்பட்டதென்பதை இத்திருக்கோயிலில் உள்ள கல்வெட்டொன்றால் அறியலாம். இதில் உள்ள ஓர் சிற்பத்தில் முசுகுந்தன் எனும் குரங்கு முகம படைத்த மன்னன் ஒருவன் சிவலிங்கத்திற்கு திருமஞ்சனம் செய்வதும் அருகே இரண்டு முனி புங்கவர்கள் அமர்ந்து ஆசி நல்குவதும் வடிக்கப்பட்டுள்ளது.

எனவே கமலாலயம் எனும் இச்சிறப்பு மிகுந்த திருக்குளம் தொன்மைக் காலம் முதல் புராண, மற்றும் வரலாற்று நிகழ்ச்சிகள் பலவற்றுடன் நெருங்கிய தொடர்புடைய ஒன்றாகும். இத்திருக் குளத்தில் புனித கட்டங்களாக 64 கட்டங்கள் உள்ளன. இதில் பங்குனி உத்திரத்தில் தீர்த்தவிழா நடைபெறும். மற்றும் விஷு, மார்கழித் திருவாதிரை, அருதோதயம், மகோதயம் முதலான புண்ணிய காலங்களிலும் தீர்த்த விழா நடைபெறும்.

2. மாமன்னர்களின் படிமங்களும் ஓவியங்களும்

மன்னர்கள், சைவ சமயக்குரவர்கள் போன்ற பலரின் திருவுருவச் சிலைகளையும், செப்புத் திருமேனிகளையும், ஓவியங்களையும் பெற்றமையாலும் ஆரூர்த் திருக்கோயில் சிறப்பிடம் வகிக்கிறது, இவ்வகையில் நாம் காணும் படிமங்களை இங்கு காண்போம்,

முதலாம் இராஜேந்திரனும் பரவைநங்கையும்

இராஜேந்திரசோழனுக்கு நக்கன்பரவைநங்கை என்ற அன்புக்காதலி ஒருத்தி திருவாரூர்த் திருக்கோயிலில் வாழ்ந்தாள், இவள்மேல் இம்மன்னர் பெருமான் கொண்ட பெருமதிப்பின் காரணமாக அவள் வேண்டிக் கொண்டபடியே வீதிவிடங்கப் பெருமானின் கோயிலைக் கற்கோயிலாகக் கட்டியதுமின்றிப் பொன்னும் வேய்ந்தான். பட்டத்தரசி போன்று தேரில் அமரச் செய்து திருவீதியில் பவனி வந்தான். இந்நங்கை நல்லாள் தன்னை வீதிவிடங்கப் பெருமானுக்கே அர்ப்பணித்துக் கொண்டாள். இதனால் இம்மாமன்னனின் மகனான இராஜாதிராஜனின் பெரு மதிப்புக்குரிய தெய்வமாகவும் ஆனாள். இராஜாதிராஜன் ஆரூர்க் கல்வெட்டொன்றில் தனது தந்தையான இராஜேந்திரன் மற்றும் பரவைநங்கையாரின்படிமங்களின் பூஜைகளுக்காகத் தான்அளித்த நிவந்தம் பற்றிக் குறிப்பிடுகிறான், இதேபோன்று இத்தேவியின் பெயரில் தென்னார்க்காடு மாவட்டம் பனையவரம் (பரவைபுரம்) எனும் ஊரும், அவள் பெயரில் பரவை ஈஸ்வரம் என்ற கோயிலும் எடுக்கப்பட்டன. பரவைபுரத்துப்பரவை ஈஸ்வரமுடைய மகாதேவர் கோயிலிலும், ஆரூரில் உள்ளது போன்றே இராஜேந்திரன், பரவைநங்கை இவர்களின் படிமங்கள் எடுக்கப் பட்டு, நிவந்தங்களும் அளிக்கப்பட்டதாகக் கல்வெட்டுக்கள் பேசுகின்றன.

கோயிலெடுக்கும் அளவு உயரிய இடத்தைப் பிடித்த இந்த தேவியையும், மாமன்னன் இராஜேந்திரனையும் இன்றும் நாம் ஆரூர்க்கோயிலில் காணலாம். இக்கோயிலில் மன்னன் கோட்டத் தெய்வமாக வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது இரண்டாம் பிரகாரத்தின் வடமேற்கு மூலையில் ஆனந்தீஸ்வரம் என்ற கோயிலொன்று உண்டு. அதில் தென்புற பிறை மாடத்தில் (கோஷ்டத்தில்) இருபுறமும் நான்கு சனகாதி முனிவர்கள்

வீற்றிருக்க நடுவே மாமன்னன் இராஜேந்திரனும், நங்கை பரவை நாச்சியாரும் கூப்பிய கையினராய் எழுந்தருளிக்கப்பட்டுள்ளனர். தென்புற கோஷ்டத்திற்கே உரிய் ஆலமர்ச்செல்வர் வீற்றிருக்க வேண்டிய இடத்தில் (சனகாதி முனிவர்கள் இருக்க) பிற்காலத்தில் இப்படியும் எப்படியோ இடம் பெற்று விட்டது.

மிக அழகான சோழர்காலப்படிமங்களான இவை இராஜாதி ராஜனின் கல்வெட்டில் குறிப்பிடப்படும் படிமங்களே என உறுதியாக நம்பலாம்.

மனுநீதிச்சோழன்

அறவாழியை மைந்தன் மேல் செலுத்தி அறத்தை நிலை நிறுத்திய மாமன்னன் மனுநீதிச் சோழனாவான். இவனது தலை நகர் திருவாரூரே ஆகும். இவ்வறச்செம்மலின் வரலாறு கல் வெட்டாக (பெரிய புராணத்தில் மனுவின் வரலாறு கூறப்படு வதற்கு முன்பாக) ஆரூர்க்கோயிலில் வெட்டப்பட்டுள்ளது. இதனை வெட்டுவித்தோன் விக்கிரம சோழனாவான். தன்குல முன்னவனைப் போற்றிய இம்மனனவன் இவ்வரலாறு கூறும் அரிய சிற்பங்களையும் ஆரூர்க்கோயிலில் படைத்தான். மைந்தன் மேல் தேராழி ஏறிய நிலையில் இஃது ஓர் மண்டபமாக வடிக்கப் பட்டுள்ளது.

இத்தேர் மண்டபத்தின் உட்பகுதியில் கூரையையொட்டிய உத்திரப்பகுதியில் அழகியதோர் சிற்ப தொகுதி உள்ளது. நடுவே சிவபெருமானும் உமையும் அமர்ந்திருக்க, ஓர் புறம் பசுவும், கன்றும் நிற்கிறது. எதிர்ப்புறம் மனுவேந்தனும், அவனது அமைச்சனான உபயகுலாமலன், மகன் பிரியவிருத்தன் இவர்க ளது படிமங்கள் உள்ளன. இந்த சிற்பங்கள் அடங்கிய உத்திரத்தைத் தாங்கும் தூண் ஒன்றில் அஞ்சலி ஹஸ்தத் தில் ஓர் மன்னவனும், அவனருகில் ஒருவனும் நிற்கின்றனர். இப்படிமங்களை மனு சரித்திர கல்வெட்டுச் செய்திகள் அடிப்படை யில் நோக்கும் போது இவை முறையே விக்கிரம சோழன, அவன் காலத்தில் வாழ்ந்த, மனுவின் அமைச்சனான உபயகுலாமலனின் வழித்தோன்றலான இங்கனாட்டு பாலையூரினனான சந்திர சேகரன் ஆதிவிடங்கனான குலோத்துங்கச் சோழ மாபலி வாணாதிராயன் என யூகிக்கலாம்.

குலோத்துங்கனும் ஞானகுருவும்:

கிழக்கு இராச கோபுரம் மாமன்னன் மூன்றும் குலோத்துங் கனால் கட்டப்பட்டதென்பதை கல்வெட்டுச் சான்றுகளோடு கண்டோம். இத்திருக் கோபுரத்தில் உள்ள இரண்டு கோஷ்டங் களில் முறையே குலோத்துங்கன், அவனது ஞான குருவான ஈஸ்வர சிவனார் இவர்களின் படிமங்கள் உள்ளன.

செவ்வப்ப நாயக்கன் :

தஞ்சையை ஆண்ட இப்பெருமகன் ஆரூர் திருக்கோயிலுக்குச் செய்த தொண்டுகள் கல்வெட்டுக்களால் அறியப்படுகிறது. இப் பெருமகன் வடக்கு இராஜ கோபுரத்தைக் கட்டியவனுவான். இத் திருக்கோபுரத்தில் இவனுடைய படிமமும், கமலை ஞானப் பிரகாசர் எனும் அடியவர் ஒருவருடைய படிமமும் இடம் பெற்றுள்ளன.

முதலாம் சரபோஜி

தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னனை முதலாம் சரபோஜியின் காலத்தில் ஆரூர் திருக்கோயிலில் பல திருப்பணிகள் செய்யப்பட்டன. துவஜஸ்தம்பம் முன்மண்டபத்தூண்கள் இவற்றில் இப்பெருமகனின் உருவச்சிலைகளும், அனுக்கன் கோபுர வாயிலில் அழகிய ஓவியமும் உள்ளன.

சிவனடியார்கள் : .....

சைவசமயக் குரவர்கள், அறுபத்துமூவர், சேரமான் பெருமாள், சுந்தரர், பரவைநங்கை போன்ற அடியவர்களின் திருவுருவங்களும், செப்புத் திருமேனிகளும் உள்ளன.

ஓவியங்களில்.....

தேவாசிரிய மண்டபத்து ஓவியங்களில் இறையுருவங்கள், முசுகுந்த மன்னன் போன்ற திருவுருவங்களுடன் ராயசாமந்த னார், ஓவியம் வரைந்த ''சித்திரவேலை ரிஙகாதனம்'' — மற்ற ஆரூர் பிரமுகர்கள் போன்றவர்களின் திருவுருவங்களும் மிளிர் கின்றன.

3. நடுகல் வழிபாடு

வீர மரணமெய்தியவர்களுக்கு ''நடுகல் வழிபாடு நடத்துவது தமிழர்களின் தொன்மையான மரபுகளுள் ஒன்று. இதனைச் சங்க இலக்கியங்கள் பலவும் செப்பிடும். சேரமான் பெருமாள் நாயனாரால் எழுதப்பட்டு சைவத்திருமுறைகளுள் பதினோராந் திருமுறையாக போற்றப்படும் ' திருவாரூர் மும்மணிக் கோவை'' நடுகல் வழிபாடுபற்றி சிறப்பாகக் கூறுகிறது.

''புட்டோர் பெயரும் ஆற்றலும் எழுதி
நட்ட கல்லும் முதூர் நத்தமும்
பரல் முரம் பதநம் அல்லது படுமழை
வரன் முறை அறியா வல்வெழிற் கானத்து''

என நடுகல் வழிபாட்டின் மரபைத் தெளிவுபடுத்துகிறது.

4. ஆரூர் ஆவணத்துறை

தம்பிரான் தோழருக்கு தோழரான சேரமான் பெருமாள் தம் அழகுத் தமிழ் காவியத்தில் ஆரூர் ஆவணத்துறையைக் காட்டுகிறார். அகத்துறை பேசிடும் அவரது பாடலில், பொதுமகள் ஒருத்தியின் பண்பு நலன் பேசப்படுகிறது. யார் எதிர் நின்றாலும் அவரைத் தம்வயப்படுத்தும் தன்மையால் சிறந்து விளங்கிஞள் அவ் வழகுப் பதுமை. இது சேரமன்னர்க்கு ஆரூர் ஆவணத் துறையில் (கடை வீதியில்) விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள கண்ணாடி போன்று தோன்றியது. யார் எதிர் நின்றாலும் அவர் நிழலைக் கொள்ளும் கண்ணாடியாகவே அப்பொதுமகள் தோன்றினாள். இதனை

''அமரரும் அரியா ஆதி முர்த்தி
குமரன் தாதை குளிர்சடை இறைவன்
அறை கழல் எந்தை ஆரூர் அவணத்
துறையில் தூக்கும் எழில்மென் காட்சிக்
கண்ணடி அனைய நீர்மைப்
பண்ணுடைச் சொல்லியர் தம்பாலோனே''.

— என்ற செந்தமிழ் பாவால் விளக்குகின்றார்.

5. தம்பிரான் தோழரின் தாய் அவதரித்த தலம்

சைவசமய குரவருள் ஒருவரான சுந்தரருக்கு ஆரூரன் என்ற பெயரும் உண்டு ஆரூர் இறைவனைத் தோழமை பூண்டது. பரவை நங்கையை மணந்தது போனறவற்றால் மட்டும் ஆரூருடன் நெருங்கிய தொடர்பு உள்ளவர் அன்று, இவரது தாயாரான இசை ஞானியார் ஆரூரில் பிறந்தவர் என்பதை இலக்கியங்கள் பேசும், இலக்கியங்கள் மட்டுமின்றி ஆரூர் திருக்கோயில் கல்வெட்டொன்று

> '' ஆளுடைய நம்பி மாதாக்கள் இசைஞானியார்
> ஜனனீ பவதோ ஞான சிவாசார்ய குலே
> அபவத்சைவே கௌதம கோத்ரேஸ் மின்
> ஞான்யா ரவ்யா கமலாபுரீ ''

ஆளுடைய நம்பியான சுந்தரருடைய தாயான இசை ஞாநியார் கௌதம கோத்ரத்தைச் சேர்ந்த ஞான சிவாச்சாரி யாருக்கு மகளாக கமலாபுரி எனும் திருவாரூரில் பிறந்தார் இதை இரண்டாம் குலோத்துங்கனின் வடமொழிக் கல்வெட்டால் அறியலாம்,

6. சங்கீத மும்மூர்த்திகள் உதித்த தலம்

சென்ற சில நூற்றாண்டுகளுக்குள் வாழ்ந்து கர்நாடக இசையை முறையாக வகுத்தவர்கள் சங்கீத மும்மூர்த்திகளான தியாகய்யர், சியாமா சாஸ்திரிகள், முத்துசாமி தீட்சிதர் ஆகியோர். இம் மூன்று மணிகளுமே இப் பூவுலகில் அவதரித்த புனித மண் திருவாரூராகும். பலவகைப் பெருமைகளைப் பெற்ற ஆரூர் கர்நாடக இசையின் ஆதார நாதங்களையே உலகுக்கு அளித்த பெருமையுடையதாகும். முத்துசுவாமி தீட்சிதர் அவர்கள் ஆரூரின் அருந்தவச் செல்வியாம் கமலாம்பாள் மீது பல கீர்த்தனங்கள் பாடியுள்ளார். இப்பெருமகனார் பாடிய நவகிரகக் கீர்த்தனையே, அவரிடம் பயின்ற முட்டுக்காரர்களால் (பஞ்ச முக வாத்தியம் வாசிப்பவர்களால்) தாளமாக்கப்பட்டு இன்றும், வாசிக்கப்படுகிறது.

7. தஞ்சை கெசட்டியர் கூறுவது

ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில் பதிப்பிக்கப்பட்ட தஞ்சை கெசட்டியர் ஆரூரைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடு

கிறது; ''தஞ்சை ஜில்லாவிலேயே தஞ்சை, திருவாரூர் கோயில் களே அழகானவை. திருவாரூர் தேரைப் போல மாதிரி ஒன்று செய்து சென்னைக் கண்காட்சிச் சாலையில் வைக்கப் பெற்றுள் ளது. இது திராவிடச் சிற்பத்திற்கே ஒரு தனி மதிப்பளிப்பது என்று என்ஸைக்ளோபீடியா பிரிட்டானிகா கூறுகிறது. இங்குப் பன்னீர் தொழிலும், நெல்லரைக்கும் தொழிலும் மிகுதியாக நடைபெறுகின்றன. இங்கு டிஸ்டிரிக்ட் முன்ஸீப் கோர்ட்டும் போலீஸ் ஸ்டேஷனும் உள்ளன. இது மேஜர் யூனியனாக நாகப் பட்டினம் தாலுகா போர்டு நிர்வாகத்திலடங்கியிருக்கிறது. 1898ம் ஆண்டில் திருவாரூர் முனிஸிபாலிடியாகச் சீர்திருத்தம் செய்யப் பெற்றது. திருவாரூர்க்கும் அம்பலுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. அது சோமாயாஜீ மாறநாயனார் உண்டு பண்ணியது. அப்போதிருந்த ஜனத்தொகை (1906ல்) 15,463. கோயிலுக்குள்ள நிலமாக 6000 ஏக்கரும், வருமானம் 7000ரூபாயு மாக இருந்தது. வேளாக்குறிச்சி ஆதீனத்தாருடைய நிர்வாகமும் இருந்தது — கிழக்கு மேற்குக் கோபுரங்கள் முறையே 118 அடி 101 அடி உயரமுள்ளவை. தேவாசிரிய மண்டபம் மிகப் பழமை யானது. அதிக வேலைப் பாடில்லாததே அதற்கு ஆதாரம். கமலாலயம் தென்கரையிலுள்ள அரண்மனை Traveller's பங்களா வாக இருக்கிறது. மிக அழகான காற்று வசதியான குளிர்ந்த இடம்'' — என்று கூறுகிறது.

8. மூவர் முதலிகளுக்கு முக்கியத்துவம்

சைவசமயக் குரவர்களாக நால்வர் குறிப்பிடப் படினும் சம்பந்தர், வாகீசர், சுந்தரர் இவர்களுக்கே இவ்வரிசைப் படியே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வந்துள்ளது. திருமுறைகள் வைப்பில் கூட இதே வரிசைதான் பின்பற்றப்பட்டுள்ளது. மூவர் முதலிகளின் முக்கியத்துவத்தை ஆரூர் கல்வெட்டொன்று சிறப்புற கூறுகிறது. அனபாயன் எனும் இரண்டாம் குலோத்துங்கனின் கல்வெட்டொன்றின் தமிழ்ப்பகுதியில் மூவர் முதலிகளுக்கு படிமம் எடுத்து பூஜைகளுக்கு நிலம் அளித்ததைக்குறிப்பிடுகிறான். இதே கல்வெட்டின் பின பகுதியான வடமொழிப்பகுதியில் ''ஸ்ரீமத் பிரஹ்ம புரீச, வாகதிபதி, ஸ்வஸ்வாமி மித்ர'' (பிரம்ம புரியோன் சம்பந்தர்; வாகதிபதி-வாகீசர், ஸ்வஸ்வாமி மித்ர - தம்பிரான் தோழர்) என மூவர் முதலிகளை மட்டும் குறிப்பிடுகிறது. சோழர்கள் காலத்தில் மட்டுமின்றி பின்பு தஞ்சை மராட்டியர்கள் காலத்திலும் இந்நெறியே பின்பற்றப்பட்டு வந்துள்ளது. இவர்கள்

காலத்து ஓவியங்களான தேவாசிரிய மண்டபத்து ஓவியங்களில் ஆரூரில் நடந்த விழாக்கள் ஓவியமாகத் தீட்டப்பட்டு தமிழில் விளக்கங்களும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வகையில் ஆரூரின திருவீதியில் மாணிக்க வாசகர், சம்பந்த மூர்த்தி' சுந்தரர், அப்பர், நந்திகேசுவரர், சண்டிகேசுவரர் செப்புத்திருமேனிகள் பவனி வருகின்றன. ஒவ்வொரு திருமேனியின் கீழும் பெயர்கள் எழுதப் பட்டுள்ளது. நாயன்கு சைவசமயக்குரவர்களின் திருமேனி பவனி வரும் விழாவாக இருந்த போதும் ''முதலிய மூவர் திருவிழா'' என்றே எழுதப்பட்டுள்ளது.

மூவர் முதலிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டமையை ஆரூர் கல்வெட்டுக்கள், ஓவியங்களால் மட்டுமின்றி திருச்சி மாவட்டத்தில் உள்ள திருஈங்கோய்மலையில் உள்ள மூன்றாம் குலோத்துங்கனின் தமிழ் கல்வெட்டாலும், இராஜராஜப்பெருந் தகையின் கல்வெட்டுக்களாலும் உணர முடிகிறது.

9. தேவாரம் பாடும் முறை

எல்லா தமிழ்நாட்டுத் தேவாரத்தலங்களிலும் ஓதுவார்கள் தேவாரப் பாடல்கள் பாடும் போது, பதிகம் முடிந்த பின் ''திருச்சிற்றம்பலம்'' என்றே கூறி முடிப்பர். ஆனால் ஆரூரில் தேவாரப் பாடல்கள் பாடும்போது இவ்வாறு கூறப்படாதது சிறப்பு அம்சமாகும், ஏனெனில் தில்லைக்கும் மூத்தபதி திருவாரூர் பதி என்பதால் இங்கு தில்லையை சிறப்பித்துக் கூறப்படுவது இல்லை.

தேவாரப் பாடல்களைக் கல்வெட்டுக்கள் திருப்பதியம் என்றும், இதனைப் பாடுபவர்களை திருப்பதியம் விண்ணப்பிப்பார் என்றும் கூறுகின்றன. இக்கோயிலில் உள்ள தஞ்சை மராட்டியர் ஓவியங்களில் ஓதுவார்கள் எனக்குறிப்பிடப்பட்டு ஓவியத்திலும் இவர்களை இடம் பெறச் செய்துள்ளனர்.

மிகப் பழமையான தமிழ் அச்சு நூல் ஒன்றில் இத்தலத்தின் தேவாரப் பாடல்கள் செப்பேட்டில் எழுதப்பெற்றிருந்தாகக் குறிப்புகள் உள்ளன. இதுகாறும் அத்தகைய செப்பேடுகள் கிடைக்கப்பெறவில்லை.

10. திருவாரூர்ப் பதினென்வகைப் பண்கள்

மூவர் யாத்த ஆரூர்த் தேவாரங்கள் இங்கு பதினெண்வகைப் பண்களில் பாடப் பெறுகின்றது

அவை முறையே;

சம்பந்தர் —குறிஞ்சி, வியாழக்குறிஞ்சி, காந்தாரம், நட்ட பாடை, கௌசிகம்,

அப்பர் —காந்தாரம், சீகாமரம், (குறிஞ்சி) நேரிசை, விருத்தம், குறுந்தொகை, தாண்டகம்,

சுந்தரர் —தக்கேசி, புறநீர்மை, செந்துருத்தி கொல்லிக் கௌவாணம், பழம் பஞ்சுரம், இந்தளம், கொல்லி, (காந்தாரம்) என்பனவாம்.

11. ஆரூரில் சரபமூர்த்தி

தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை எனச் செருக்குற்ற இரணியனை அழிக்க முற்பட்ட திருமால் பிரகலாதனின் அழைப்பை ஏற்றுத் தூணிலிருந்து சிங்கவடிவில் வெளிப்போந்து இரணியனைத் தூக்கித் தன்மடியில் இறுத்தித் தன்இருகரங்களால் வயிற்றைக் கிழித்து அழித்தார். இவ்வாறு மாலவன் சிங்கமாய் நரசிங்கன் வடிவெடுத்த காலை அவனது சினத்தீயும், உதிர வெறியும் அடங்காமல் போகவே, பயந்த தேவர்கள் கயிலை நாதனிடம் சென்று நரசிங்கத்தின் உக்கிரத்தை தணிக்க வேண்டினர். தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்க உடன் சிவபெருமான் பறவையும், விலங்கும் இணைந்த புதியதொரு வடிவாம் ''சரபம்'' எனும் உருவெடுத்து விண்ணிலிருந்து வெளிப்பட்டார்.உதிரவெறியால் நின்ற நரசிங்கனை நோக்கி இவ் விந்தை விலங்கு பாய்ந்து வந்தது. கூரிய நகங்களால் நரசிங்கனின் வயிற்றைப்பிடித்துத் தூக்கிப் பறந்து சென்றது. விண்ணோக்கிச் சென்ற சரபம் நரசிம்ம உருவை அழித்து மறைந்தது, விண்ணவர்கள் பூமாரி பொழிந்தனர்

இவ்வாறு வேதநாயகன் எடுத்த சரப வடிவம் சிம்ம முகமும், சிம்ம உடலும் பெற்று, இரண்டு சிறகுகளும், எட்டுக் கால்களும், எட்டுக்கரங்களும் பெற்றுத் திகழ்ந்தன. சிவனார்க்குரிய மான்,

மழு போன்றவையும் கரங்கள் ஏந்தி நின்றன. கயிலைநாதன் எடுத்த இவ்வடிவை ''சரபமூர்த்தி தியானம்'' என்ற சுலோகம் திறம்படக் குறிக்கின்றது.

சிவனாரின் இத்தகையதொரு அரிய மூர்த்தத்தை இன்று நாம் சோழ நாட்டில் மூன்று திருக்கோயில்களில் காணமுடிகிறது. எழிலுரு கற்சிற்பங்களாகக் காணப்படும் இம்மூர்த்தங்கள் தனித்த கோயில் எடுக்கப்பட்டு (பரிவாராலயம்) வழிபாட்டில் உள்ளன. இரண்டாம் இராஜராஜசோழன் எடுத்த தாராசுரம் திருக்கோயில், விக்கிரம சோழன் எடுத்த துக்காச்சித் திருக் கோயில், மூன்றாங் குலோத்துங்கன் எடுத்த திருபுவனம் ஆகிய கோயில்களில் இம் மூர்த்தங்கள் இன்றும் சிறப்பாகத் திகழ்கின் றன. திருபுவனத்தில் செப்புத் திருமேனியும் உண்டு.

சோழர்களுடன் மணவினைத் தொடர்பால் இணைந்த கீழைச் சாளுக்கிய நாட்டிலிருந்து இவ் வழிபாட்டு நெறி தமிழகம் வந்தது. மேலைச் சாளுக்கிய மன்னன் ஜெயசிம்மனை வென்ற இராஜேந்திர சோழன் தன்னை ''ஜெயசிம்ம குலகால சரபன்'' என்றுக் கூறிக் கொள்கிறான். எனவே சரப வழிபாடு பிற்காலச் சோழர்கள் காலத்தில் சிறந்து திகழ்ந்தது என்பதை அவர்களது கல் வெட்டுக்கள், திருக்கோயில்கள் வாயிலாக அறிய முடிகிறது.

இச் ''சரப மூர்த்தி'' வழிபாடு ஆரூரிலும் சிறந்து திகழ்ந்தது என்பதற்கு சில சிற்ப ஓவியக் கூறுகள் சான்றுகளாக உள்ளன. சிறப்புகள் பல பெற்ற மேலைக் கோபுரத்தின தென் பகுதியில் இரண்டாம் அடுக்கில் சரபமூர்த்தியின் சுண்ணச் சிற்பம் சிறப்பி டம் பெற்றுள்ளது. சிம்ம உடலும், பறவையின் சிறகுகளும், மானும் மழுவும் ஏந்தி அருள்புரியும் இவ்வடிவம் சினம் அறித்து ஆட்கொள்ளும் அற்புதத் திருவடிவேயாகும்.

அரநெறியாம் அசலேசத்தின் முன் மண்டபம் மராட்டியர்கள் கால ஓவியப்படைப்புகளைப் பெற்ற கலைக் கூடமாகும். ''சிவன் ஓதுவாரின்'' ஓவியப்படைப்புக்கள் கூட பல உள்ளன. இங்கு வடபுறச் சுவரில் ''சரப மூர்த்தியின்'' ஓவியம் வண்ணப் பொலிவோடு திகழ்கிறது. நான் முகனும் மாலவனும் வணங்கி நிற்க சிம்ம முகம், எட்டுக் கால்கள், நான்கு கரங்களுடன் மான், மழு ஏந்தி சிம்ம முகத்துடன் சரபதேவரின் அருட் கோலத்தைக் காண முடிகிறது.

12. காமிகாகமம் போற்றும் நயினார்கள்

தமிழகத்து சிவாலயங்களில் பூஜை செய்யும் அந்தணர்கள் சிவாச்சாரியார், குருக்கள் என்றே அழைக்கப் பெறுகின்றனர். ஆனால் திருவாரூரில் தியாகப் பெருமானுக்கு பூஜைகள் செய்யும் உரிமை பெற்ற அந்தணர்களுக்குரிய சிறப்புப் பெயர் நயினார் என்பதாகும். இவர்கள் துர்வாச மகரிஷி மரபில் தோன்றிய வர்கள். இவர்கள காசிப கோத்திரத்தைச் சார்ந்தவர்கள்

திருமூலட்டானத்து இறைவர், தியாகப் பெருமானின் திருமேனி போன்ற முக்கிய திருமேனிகளின் பூஜைகளை மட்டுமே இவர்கள் மேற்கொள்கின்றனர். காமிக ஆகமம் வழுவா பூஜைகளைப் புரிவதே இவர்களது சிறப்புப் பணியாகும். தியாகராஜர் இங்கு இராஜ கோலத்தில் வீற்றிருப்பதால் அவருக்கு பூஜை செய்யும் நயினார்கள் யோக வேஷ்டியை மார்பில் போர்த்திய வண்ணமே பூஜை புரிகின்றனர். இது தமிழகத்தில் ஆரூரில் மட்டுமே என்பது குறிப்பிடத் தக்க சிறப்பு அம்சமாகும். இவர்கள் மேற்கொள்ளும் தியாகப் பெருமானின் பூஜைகளுக்கு உதவி செய்பவர்கள் பிரம ராயர் என்ற பிரிதொரு பிரிவைச் சார்ந்த அந்தணர்கள் ஆவர்.

நயினார்கள் யோக வேஷ்டி தரித்து பூஜைசெய்யும் முறை பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து வரும் ஓர் மரபு என்பதை ஆரூர் செப்பேட்டு ஓவியம் ஒன்று சிறப்பாகக் காட்டுகின்றது. இச் செப்பேடு தற்போது சென்னை அருங்காட்சியகத்திலுள்ளது. கி. பி. 1750ல் வடிக்கப் பெற்ற இச் செப்பேடு இராமநாதபுரம் சேதுபதி இரகுநாத சேதுபதி முத்து வடுகனாத பெரிய உடைய தேவர் காலத்தியது. இதில் திருவாரூர் தியாகப் பெருமான் பொற்சிங்காதனத்தில் வீற்றிருக்க நயினார் ஒருவர் யோகவேஷ்டி தரித்துக் கையில் அடுக்கு தீபமும், மணியும் ஏந்தி தீபாராதனை செய்கிறார். அருகே பிரமராயர் ஒருவர் ஜலகெண்டி ஏந்தி ஆராதனைக்கு உதவுகிறார்.

துர்வாச மகரிஷி பெயரில் ஆரூர் திருக்கோயிலுடன் தொடர்புடைய மடமொன்று இன்றும் உள்ளது. இது பற்றிய ஓவியங்களும் குறிப்புகளும் தேவாசிரிய மண்டபத்து விதானத்து ஓவியங்களில் உள்ளன. இவ்வோவியங்களிலும் சிவாச்சாரியர் களான நயினார்கள் மற்றும் பிரமராயர்களின் உருவங்கள் காணப்பெறுகின்றன.

13. பிரமராயர்கள்

பிரமராயர்களும் ஆரூர் திருக்கோயிலில் பணிபுரியும் சிவாச் சாரியார்களேயாவர். இவர்களுக்கு நயினார்களைப் போன்று தியாகராஜர் மற்றும் மூலட்டானர் கோயில பூஜை உரிமை இல்லையாயினும் இவர்கள் மேற்கூறிய கோயில்களில் பூஜை களின் போது நயினார்களுடன் இணைந்து செயல்படுவர். சுற்றுக் கோயில்கள் மற்றும் பரிவாராலயங்களின் பூஜை உரிமை இவர் களுக்கு உண்டு.

பிரமராயர் என்ற பட்டம் சோழர்கள் காலத்திலிருந்தே கல்வெட்டுக்களிலும் செப்பேடுகளிலும் காணப்பெறுகின்றது. அன்பில் அனிருத்ர பிரமராயர், கிருஷ்ணன் இராமனான மும் முடிச் சோழ பிரம்மராயர் (இராஜராஜ சோழனின் தளபதி) போன்ற பலர் சோழர்கள் காலத்தில் பணிபுரிந்துள்ளனர்.

ஆரூர் திருக்கோயிலில் பணிபுரியும் பிரமராயர்களுக்கு ஒரு சிறப்பு உண்டு. கி.பி. 1631ல் திருவாரூர் திருக்கோயிலில் வெட்டுவிக்கப் பெற்ற கல்வெட்டொன்றில் திருக்கோயிலில் ஸ்ரீகாரியம் பார்ப்பார் சிலர் தம் கடமையிலிருந்து தவறியதால் பொற்பண்டாரத்து இருப்புக் குறைய பிரமராயர், விழுப்பு அரையர் (விழுப்பாடராயர்) என்பார் இருவரிடம் பொற் பண்டாரத்து உரிமை வழங்கப்பெற்றதாகக குறிக்கப் பெற்றுள் ளது. இந்நூற்றாண்டின் தொடக்க காலம் வரை மேற்படி உரிமை இவ்விரு பிரிவினரிடமே இருந்தது என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

14. விழுப்பு அரையர் விழுப்பிரமர்-விழுப்பாடராயர்

''விழுப்பரையர்'' — என்ற பட்டம் சூடிக்கொள்ளும் ஒரு இனத்தவருக்கும் திருவாரூர் திருக்கோயிலுக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. சோழப் பெருமன்னர்களால் மிகவும் மதித்துப் போற்றப் பெற்ற இம்மரபினரின் தொண்டு ஆரூர் திருக் கோயிலுக்குப் பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து கிடைத்துள் ளது. இன்றும் தியாகப் பெருமானுக்கு அவர்களது பணி தொடர் கிறது என்பது ஆரூரின் தனிச் சிறப்பு மட்டுமின்றி, மரபு வழுவா நமது கலாசாரத்தின் பெருமையும் ஆகும். ஆரூர் திருக்கோயிலில்

இம்மரபினரின் பணி பற்றியும், அவர் தம் வரலாற்றுப் பாரம் பரியம் பற்றியும் ஆராய்வது இன்றியமையாத ஒன்று.

விழுப்பரையர், விழுப்பாடராயர், விழுப்பிரமர் விழிப் பெருமர் என்றெல்லாம் கால வளர்சசியில் பல பெயர்களால் அழைக்கப்படும் இம் மரபினர் தியாகப் பெருமானுக்கு உடன் காவல் பணியும், ''புள்ளதண்டு'' பணியும் மேற்கொண்டவர்கள. தற்போது வீதி விடங்களாம் தியாகப் பெருமான் விழாவுக்கு எழுந்தருளும் போது (சிறப்பாக அஜபாநடனம்) அவனது ஆசனத்தைத் தாங்கும் வாரைகளுடன், (நீண்டமரத் தண்டுகள்) புள்ளதண்டு என்ற சிறிய வாரைகளை இணைக்கும் ''புள்ளதண்டு இரகசியம்'' என்ற பணியை மட்டுமே தொடர்ந்து தங்கள் குடும்பப் பணியாகச் செய்து வருகின்றனர். புள்ளதண்டு என்பது பற்றி ''மணித்தண்டு'' என்ற பிரிதொரு தலைப்பில் விரிவாகக் கூறப் பெற்றுள்ளது.

கி.பி. 1631 ஆம் ஆண்டு வெட்டுவிக்கப் பெற்ற ஆரூர் கல்வெட்டொன்று (தி க. எண்- 73) இம்மரபினர் பற்றிக் குறிப் பிடுகிறது. தஞ்சை அரசை இரகுநாத நாயக்கரும், விஜயராகவ நாயக்கரும் ஆட்சிபுரிந்த காலமது. அவ்வமயம் ஆரூர் திருக் கோயிலில் ஸ்ரீகாரியம் பார்ப்பார் சிலர் தம் கடமையிலிருந்து தவறியதால் பொற்பண்டாரத்து இருப்பு குறைய பிரமராயர், விழுப்பரையர் என்பார் இருவரிடம் பொற்பண்டாரத்து உரிமையை வழங்கியதாகக் குறிக்கிறது இக் கல்வெட்டு.

அன்றிலிருந்து தொடர்ந்து பொற்பண்டாரத்து பாதுகாப்பும் தியாகப்பெருமானின் திருமேனி பாதுகாப்பும் விழுப்பரையர்க்கும் பிரமராயர்களுக்கும் 19ஆம் நூற்றாண்டு இறுதி வரை இருந்திருக் கிறது. சோழப்பெருமன்னன் முதலாம் இராஜேந்திர சோழன் காலத்தில் மேலைச் சாளுக்கிய மன்னன் ஜெயசிங்கன் என்பவனை வெற்றி கொண்ட தனது படைத்தலைவன் அரையன் இராசராசன் என்பவனுக்கு ''ஜெயசிங்க குலகாலன்'' என்ற விருது அளித்து கௌரவித்தான். பின்னர் இப்பெயரில் ''ஜெயசிங்க குல கால வளநாடு'' என்று ஒரு வளநாட்டிற்கும், ''ஜெயசிங்க குல கால புரம்'' என்று ஒரு ஊருக்கும் பெயரிட்டான். ''ஜெயசிங்க குல காலபுரம்'' என்று சோழர்கள் காலத்தில் போற்றப்பட்ட ஊர் காலப் போக்கில் மருவி சிங்ககுலகாலபுரமாகி பின்பு சேங்காலிபுரம் என்ற பெயராகித் திகழ்கிறது. இவ்வூர் திருவாரூரிலிருந்து மேற்கால 10கல் தொலைவில் உள்ளது.



ஓவியன் சிங்காதனம்



தேவாசிரிய மண்டபத்து ஓவியம்

ஜெயசிங்க குல காலபுரத்தில் (சேங்காலிபுரத்தில்) இராஜேந்திர சோழீச்சரம் என்ற கற்றளியும் பூம்பொழிலீச்சரம் என்ற பிரிதோர் கற்றளியும் சோழர்கள் காலக் கலையழகுடன் மிளிர்கின்றன. பூம்பொழிலீச்சரத்தில் உள்ள ஒருவர் உருவசிலைக்கு மேலாக உள்ள கல்வெட்டில், அவர் கங்கை கொண்ட சோழபுரத்தைச் சேர்ந்த தில்லை வனமுடையான் அரையன் என்றும் அவரே அக்கற்றளியை எடுப்பித்தவர் என்ற குறிப்பும் உள்ளன. அடுத்து கங்கை கொண்ட சோழன் முதலாம் இராஜேந்திரனின் மகனான வீரராஜேந்திர சோழன் காலத்தில் அவனது முக்கிய அதிகாரிஞுள் ஒருவனாகத் திகழ்ந்தவன் ''ஜெயசிங்ககுலகால விழுப்பரையன்'' என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன (Ins 136 of 1912) எனவே சோழர்கள் காலத்தில், அதிலும் சிறப்பாக மாமன்னன் இராஜேந்திரன் மற்றும்அவனது புதல்வர்கள் காலத்தில் அரையன் விழுப்பரையன் என்ற பெயர்களில் சிறப்புப்பட்டம் சூடிய உயர் அலுவலர்கள் இருந்தனர் என்பதும், அவர்களுக்கும் ஆரூருக்கு அண்மையிலுள்ள ஜெயசிங்க குலகாலபுரமாம் சேங்காலிபுரத் திற்கும் ஏதோ ஒருவகைத் தொடர்பு இருந்திருக்கிறது என்பதும் தெளிவாகிறது.

ஆரூர் வரலாற்றைப் புரட்டும் போது மாமன்னன் முதலாம் இராஜேந்திரன் மற்றும் அவனுடைய மகன்களான முதலாம் இராஜாதிராஜன், இரண்டாம் இராஜேந்திரன், வீரராஜேந்திரன் ஆகியவர்கள் காலத்தில் வீதிவிடங்கர் திருக்கோயில் (தியாகராஜர் திருக்கோயில்) பெற்ற பல சிறப்புகளைக் கண்டோம். இதே காலத்தில் இரண்டாம் வீரராஜேந்திர சோழனின் உயர்நிலை அதிகாரிகளுள் ஒருவனாகத் திகழ்ந்த சயசிங்ககுலகால விழுப் பரையன் திருவெற்றியூர்க் கோயிலில் வீரராஜேந்திரன் பிறந்த ஆயில்ய நாளில் விழா நடைபெறுமாறு ஏற்பாடுகள் செய்த செய்தியையும் அறிய முடிகிறது.

சயசிங்ககுலகால விழுப்பரையனுக்குப் பின்பு இரண்டாம் இராசாதிராசன் மற்றும் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் சோழ அமைச்சர்கள் குழாத்தின் தலைவராகத் திகழ்ந்த இராஜ ராஜ விழுப்பறையரன் வேதவனமுடையான் அம்மையப்பன் என்ற பெருந்தகை தமிழக வரலாற்றில் சிறப்பிடம் வகிக்கிறார். இவர் தொண்டை மண்டலத்தில் பழையனூர் நாட்டு பழையனூர் எனும் ஊரில் பிறந்தவர். இதனை ஆரூர் கல்வெட்டுக்கள் பல இடங்களில் குறிப்பிடுகின்றன. பழையனூரில் பிறந்தவர்களுக்கு

தனிச்சிறப்பொன்று உண்டு. தங்களிடம் அடைக்கலம் அடைந்த ஒருவனது உயிர், தங்கள் வாக்கு பொய்த்ததால் மாண்டது என்ற காரணத்திற்காக 80 வேளாளர்களைக் கொண்ட பழையனூரினர் வீட்டிற்கு ஒரு ஆளாக திருக்கோயில் முன்பு வளர்க்கப்பட்ட தீயில் இறங்கி சத்தியம் காத்த புனிதர்கள் இருந்த பதி பழையனூர் பதி.

இத்தகையதொரு புகழ் மிகுந்த பதியில் பிறந்த இராஜ ராஜ விழுப்பரையர் (வேதவனமுடையான் அம்மையப்பர்) சோழ சாம்ராஜ்யத்திற்கு ஆறறிய பணிகள் மிகப்பல. பாண்டி நாட்டை வென்றவர். சிங்கள வேந்தனாகிய பராக்கிரமபாகுவின் எண்ணம் நிறைவேறாதவாறு ஸ்ரீவல்லபனுக்கு துணைப் படை அளித்து, அவ்வேந்தனைப் போரில வெல்லும்படி செய்தவர். இதனால் சிங்களவர் படையெழுச்சியிலிருந்து சோழநாட்டைக் காப்பாற்றினார். இப்பெருந்தகையாளர் திருவாரூர் திருக் கோயிலுக்கும், திருவாலங்காட்டுத் திருக்கோயிலுக்கும் செய்த பணிகளைக் கல்வெட்டுகள், பட்டியல்களோடு விளக்குகின்றன.

திருவாரூர் இறைவனுக்கு அமுது படைப்பதற்காக இவர் அளித்த நிலக்கொடை பற்றி கல்வெட்டு எண் 48-ம், இதே திருக்கோயிலில் விளக்கெரிப்பதற்காக அளித்த நுந்தா விளக்குக் கொடை பற்றிய குறிப்புகளை கல்வெட்டு எண் 49-ம், நிலக் கொடை அளித்தமை பற்றி கலவெட்டு எண் 50-ம், ஆரூர் திருக்கோயில் ஊழியர்களுக்கு அளிக்கப்பட்ட குடியிருப்பு மனை களைப் பிறர் கவர்ந்த போது, இம் முறைகேட்டை அறிந்த இவர் மன்னன் இராஜாதிராஜனின் கவனத்திற்குக் கொண்டு வந்து தக்க நடவடிக்கை மேற்கொண்ட செய்தியைக் கல்வெட்டு எண் 51-ம், ஆரூர் அம்மன் கோயிலுக்கு அளித்த நிலக்கொடை பற்றி கல் வெட்டு எண் 53-ம், திறம்படப் பேசுகின்றன.

இவ்வாறு சோழப் பெருமன்னர்கள் காலத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து வரலாறு படைத்த விழுப்பரையர்கள், சோழர்கள் காலத்திற்குப் பின்பு ஆரூர் கோயிலின் பொற்பண்டாரத்துப் பாதுகாவலர்களாகத் திகழ்ந்ததை முன்பே கண்டோம். இத் தகையதொரு சிறந்த பாரம்பரியமுள்ள இம்மரபினர் தற்போது பிள்ளைத்தண்டு (புள்ளதண்டு) இடும பணியினால் மட்டுமே ஆரூர் கோயிலுடன் தொடர்பு உடையவர்களாக உள்ளனர். இன்று இப்பணியினை தியாகனின் திருத் தொண்டாக ஏற்றுச் செய்து வருபவர் திரு தெட்சிணாமூர்த்தி என்ற பெரியவராவார்.

காலமாறுபாடுகளிலும் நமது கலாசாரம் அழியாமல் பேணிக் காக்கும் இப்பெரியவர் பணி (ஓய்வு பெற்ற ஆசிரியர்) பாராட்டுக் குரியதாகும்.

15. பாரசைவர்

பரசிவர், பாரசைவர் என்ற பெயாகளில் அழைக்கப்பெற்ற ஒருமரபினரே ஆரூர் திருக்கோயிலில் பஞ்சமுக வாத்தியமும், சுத்தமத்தளமும் இயக்குபவர்கள். இவர்கள் பன்னெடுங்காலமாக இப் பணியைத் தொடர்ந்து மேற்கொள்கின்றனர் சோழர் காலக் கல்வெட்டுக்களில் இவர்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின் றன. திருக்கடையூர் கல்வெட்டொன்றில், பாரசைவன் ஒரு வனுக்கு ''நட்டுவநிலை விருத்தி'' (திருக்கோயிலில் நாட்டிய ஆசாரியனுக்கு அளிக்கப்படும் நிலக்கொடை) அளிக்கப் பெற்ற செய்தி காணப் பெறுகின்றது.

சிறந்த இசைக் கலைஞர்களாய், நாட்டிய ஆச்சாரியர்களாய்த் திகழ்ந்த ஆரூர் பாரசைவர்களுக்கு முட்டுக்காரர் என்றும் பெயருண்டு, ''நட்டுவா முட்டுக்காரர்'' என்ற குறிப்புகள் ஆரூர் ஓவியத்தில் காணப்பெறுகின்றன.

இவர்களுக்கு சிவ தீட்சை உண்டு. தேவிகோயில் பூசாரி களாகவும் உள்ளனர். யாமள தந்திரத்தைப் போற்றுபவர்கள். ''பாரசைவோ உற்பத்தி: பஞ்சமுக வாத்திய லட்சணம்ச[1]'' என்ற வடமொழிச் சுவடி நூலில் இவர்களை நந்தியின் வழியில் வந்தவர்கள் என்றும், யாமளம் போற்றும் சாக்த மரபினர் என்றும் கூறுகிறது. தற்போது ஆரூர் கோயிலில் பணிபுரியும் பாரசைவர் திரு. சங்கரமூர்த்தி முட்டுக்காரர் என்பவராவர். இவர் ஆரூரின் எல்லை தெய்வமான பிடாரி தேவியின் கோயிலின் பூஜை உரிமையை தலைமுறை தலைமுறையாகப் பெற்றவரும் ஆவார். இவர் ஆரூர் கோயிலின் பஞ்சமுக வாத்தியம், சுத்த மத்தளம் போன்ற கருவிகளை இயக்கும் முட்டுக்காரர் ஆவார். சந்திரசேகரர் திருவிழாவின் போது பூத நிருத்தத்திற்கு சுத்த மத்தளம் இயக்குபவரும் இவரே.

தஞ்சையை ஆண்ட மராட்டிய அரசர்கள் காலத்தில் பாரசை வர்களின் சுத்தமத்தள உரிமையைக் கோயிலில் இருந்த அமீனாக்கள் மாற்றி பிறிதொரு இனத்தவரிடம் அதனை

அளிக்கவே, பாரசைவர்கள் மன்னனிடம் முறையிட்டு, விசாரணை நடந்த பின்பு, மன்னனது ஆணையால் மீண்டும் அவ்வுரிமை இவர்களுக்கே வழங்கப்பெற்றது. இது பற்றிய சுவையான மோடி ஆவணம் ஒன்று தஞ்சை சரஸ்வதி மகாலில் உள்ளது.

16. யானை ஏறுவார்

ஆரூர் திருக்கோயிலுடன் தொடர்புடைய மரபினர்களில் யானை ஏறுவோரும் குறிப்பிடத்தக்கவர்களாவர். சமுதாயம் பிற்பட்ட வகுப்பினராக நினைத்த ஒரு இனத்தவரை ஆரூர் திருக்கோயில் பூஜை நெறிகள் அவர்களுக்கு உயரிய முதல் நிலை அளித்துப் போற்றி வருகிறது என்பது குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சமாகும். செய்யும் தொழிலால் யாரும் பிற்பட்டவர்கள் அல்லர் என்பதையும், பிறப்பால் இறைவன் முன்பு அனைவரும் ஒருவரே என்ற உயர்ந்த தத்துவத்தை விளக்கும் நெறியை ஆரூர் தியாகப் பெருமான் இன்றும் உலகுக்கு உணர்த்தி வருகிறார். இது செயல் முறையிலும் நிகழ்கிறது.

சோழப் பெருமன்னர்கள் காலத்தில் இறைவன் திருமேனி விழாக்காலங்களில் வீதி வலம் வரும் முன்னர் திருப்பறையறிவித்தல் என்பது முக்கிய நிகழ்ச்சியாகும். இதுபற்றி தஞ்சை பெருங்கோயில் கல்வெட்டுக்கள் சிறப்பாகப் பேசுகின்றன. இதனைச் செய்த ஊழியர்களை பிற்கால இருண்ட சமுதாயம் தாழ்நிலைப் படுத்தியது. சமுதாய ஏற்றத்தாழ்வுகளால் புறையோடிய சமுதாயத்தை நெறிப்படுத்த திருக்கோயில்களும், அறிஞர்களும் பலமுறை முயன்றுள்ளனர். இதற்கு 12ஆம் நூற்றாண்டு திருவாரூர் கல்வெட்டு ஒன்றே சான்றாக உள்ளது. (தி.க. எண்-47) கி.பி. 12ம நூற்றாண்டில் சமுதாயத்தில் பல கலப்பினங்கள் (அனுலோமா, பிரதிலோமா) தோனறியபோது, பல அறிஞர்கள் ஆரூர் திருக்கோயிலில் கூடி ஸ்மிருதிகள், உப நிஷத்துக்கள் போன்றவற்றை ஆராய்ந்து அவற்றின் அடிப்படையில் கலப்பின மக்களுக்கு உயரிய அங்கீகாரம் அளித்ததோடு, திருக்கோயில்களில பணிபுரிய அவர்களுக்கு உரிமையும் அளித்து சமுதாயம் அவர்களை ஒதுக்காமல், போற்றிட வழி வகைகளைச் செய்தமையைக் காண்கிறோம். இதேபோன்று அன்று திருப்பறை சேவை செய்தவர்களின் நிலையும் பின்னாளில் தாழ்ந்தது. இதனையுணர்ந்த ஆரூர் கோயிலிலிருந்த அறிஞர்கள் முசுகுந்த புராணத்தோடு தொடர்புடைய ஒரு புதிய நெறியை புராணத்

தோடு வகுத்தனர். அதுவே ''யானை ஏறும் பெரும்பறையர்'' மரபாகும்.

தியாகப்பெருமானின் திருமேனி இந்திரனால் பூஜிக்கப் பெற்றதாகவும், முசுகுந்தனின் வேண்டுகோளுக்காக இந்திரன் அவனிடம் அளிக்கவே பின்னர் ஆரூரில் ''தியாகராஜனாக'' முசுகுந்தன் தாபித்ததாகக் குறிப்பிடுகிறது. இவ்வாறு இந்திரன் முன்பு பூஜித்த ''தியாகர்'' திருவாரூர் சென்ற பின்பு மானசீக மாக ஆரூரனை வழிபட்டு வந்த வானவர் தலைவன், நாளடைவில் தியாகரையே மறந்தானாம். தியாகரை மறந்தவனுக்குப் பின்னர் இன்னல்கள் பல விளைந்தன. இறுதியாக சாபவிமோசனம் பெற பூலோகத்தில் மனிதனாகப் பிறந்தானாம். அவன் அவ் வாறு பிறந்த குலமோ திருப்பறை கொட்டும் மரபினர் இன மாகும். இவ்வாறு பூவுலகில் பிறந்த இந்திரன் தன் சாப விமோசனம் பெற தியாகரை தரிசிக்க விரும்பினான். ஆனால் புறையோடிய சமுதாயமோ இவன் இழிகுலத்தவன், இறைவனை நேரே காணக் கூடாது என்று தடுத்தது. எப்படியும் ஆரூரனைக் கண்ணால் தரிசிக்க விரும்பிய இந்திரன் இறுதியாகக் கண்ணாடி ஒன்றின் மூலமாக தியாகரின் திருமேனியின் பிரதிபலிப்பைக் கண்டு வணங்கினான். உடன் அவனது சாபம் நீங்கப்பெற்று மீண்டும் அமரர்கள் தலைவனாயினான். முப்பத்து முக்கோடி தேவர்களுடன் தானும் வெள்ளை யானை மீது அமர்ந்து, திருவாரூர் வீதிகளில் தியாகப்பெருமானின் திருமேனியை எழுந் தருளச் செய்து பவனி வந்தானாம். இவ்வாறு மனிதனாகப் பிறந்து ஆரூரனுக்கு விழா எடுப்பதற்காக ஐராவதத்தில் பவனி வந்த இந்திரனின் நினைவாகப் போற்றப் பெறுவதே ''யானை ஏறும்'' — நிகழ்ச்சியாகும்.

தாழ்ந்த குலம் எனச் சமுதாயம் ஒதுக்கிய இனத்தவரை ஆரூர் திருக்கோயில் ''இந்திர குலம்'' என அழைத்து பெருமை படுத்தி யது. இது மட்டுமின்றி அம்மரபினரை இந்திரனாகவே கருதி இன்றும் போற்றுகிறது. ஆம் ஆரூர் திருக்கோயிலின் பெரிய திருவிழாவின் போது இந்த யானை ஏறும் மரபினரை திருக் கோயிலுள் அழைத்துச் சென்று இப் புராண நிகழ்ச்சியின் அடிப் படையில் தியாகர் திருமேனியைக் கண்ணாடியில் தரிசிக்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. பின்னர் வீதி விடங்க மூர்த்தி வீதி வலம் புறப்படும் போது சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட யானை யின் மீது இம்மரபின் காணியாளர் ஒருவருக்குத் திருக்கோயிலின்

உயரிய மரியாதையான பரிவட்டம் கட்டி, ருத்திராக்க மாலைகள் அணிவித்து, வெண்கொற்றக் குடையின் கீழ் அமரச் செய்து, அந்த யானை முன்னே செல்ல தகைமைசால் பெரியவர்கள், செல்வந்தர்கள், உயர்குடி பிறப்பாளர்கள் போன்ற மற்ற அனை வரும் யானையோடு பின்னே செல்ல, ஆரூர் அமர்ந்த அம்மான் அழகு வீதிகளில் பவனி வரும் காட்சி இன்றும் தொடர்ந்து நடை பெற்று வரும் அரிய காட்சியாகும், மேலும் யானை ஏறும் மரபினருக்குத் திருக்கல்யாண வைபோகம் ஆரூரன் பணியாகவே திருக்கோயிலால் ஆண்டு தோறும் நிகழ்த்தப் பெறுகின்றது,

17. மணித் தண்டு

மணித் தண்டு தாங்குதல், புள்ளத்தண்டு தாங்குதல் என்பது தியாகப்பெருமான் அசைந்தாட இடம்பெறுந் தண்டாகும். இதனை விழுப்பெருமர் என்ற வரலாற்று மரபினரே செய்கின் றனர். அவர்கள் மணித்தண்டு இடும் பணியை ரகசியமாக மேற் கொள்கின்றனர் என்பதால் புள்ளதண்டு ரகசியம் என்றே பெயர். தியாகர் அமர்ந்துள்ள ஆசனத்தை முதலில் இரண்டு பெரிய தண்டுகளால் (வாரைகள்) இணைப்பர். அப்படித் தூக்கி ஆடுவ தென்றால் கடினமானதாகும். தூக்குபவர்களின் தோள்களை இறுக்கும். எனவே ஆடற்கலை பற்றித் துல்லியமாக அறிந்த கலைஞர்கள் வாழ்ந்த ஆரூர் திருக்கோயில் வல்லுநர்கள் இதற் கென தனி அமைப்பை உருவாக்கினர். இதுவே மணித்தண்டா கும். புள்ளத்தண்டு எனஅழைக்கப்படும் இரண்டு சிறியதண்டுகளை பெரிய தண்டுகளின் (வாரைகளின்) முன்னும் பின்னும் ஒரு வகையான பிரத்தியேக கயிறுபோன்ற இணைப்பால் பிணைப்பர். இந்த இணைப்பைச் செய்வது விழுப்பிரமர்களால் இரகசியமாக மேற்கொள்ளப்படுகிறது. அவ்வினைப்பிற்கு மேலாகப் பட்டுத் துணி சுற்றப்பட்டிருக்கும். இவ்வாறு விழாக் காலங்களில் புள்ள தண்டு இடும்போது சில சிறப்பு பூஜைகள் நிகழ்த்தப் பெறுகின் றது.

புள்ளத்தண்டு இணைத்த பிறகு பெரிய தண்டுகளைப் பெய ரளவில் தாங்கிக் கொண்டு முழுச்சுமையையும் மணித்தண்டின் மூலமே சுமப்பர். இவவாறு மணித்தண்டை தூக்கும் போது இறைவன் திருமேனி அமர்ந்துள்ள படிச்சட்டம் மிக அழகாக மேலும் கீழும் அசைந்தாடும். அஜபா நடனத்தின்போது அற்புத இசையொலிக்கு ஏற்ப மணித்தண்டை சுமப்பவர்கள் அசைந்தாடி

தூக்கும் போது இறைவன் திருமேனி மீக ஒய்யாரமாக அசைந்தாடுவதைக் காணக் கண்கோடி வேண்டும்.

18. இண்டைமாலை

தமிழகத் திருக்கோயில்களில் வேறு எங்கும் காணமுடியாத ''இண்டைமாலை'' சிறப்பு ஆரூருக்கு மட்டுமே உரியது. தெளிந்த சான்றுகளோடு நோக்கும் போது இன்றைக்கு 1400 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ஆரூர் எம்மான் இண்டை மாலை சூடுபவன் என்று அறிகிறோம். கி. பி. 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பர் அடிகள் தம் தேவாரத்தில் (திருக்குறுந்தொகை 5-ம் திருமுறை)

''உண்டு நஞ்சு கண்டத்துள் அடக்கியங்கு
இண்டை செஞ்சடை வைத்த இயல்பினான்
கொண்ட கோவண ஆடையன் கூரெரி
அண்ட வாணர் அடையும் ஆரூரே''

—என்று போற்றுகிறார்கள்.

ஆரூரில் அப்பர் பெருமான் கண்ட இண்டை மாலை என்பது ஒரு சாண் நீளத்தில், மல்லிகை, ஜவுந்தி போன்ற சுகந்த மலர்களால் மட்டுமே கட்டப்படும் ஒருஜோடி மாலையாகும். இதனை மாலை நேரத்து பூஜையான சாயரட்சையில் மட்டுமே அணிவிக்கின்றனர். இதனை தொடுப்பவர்கள் ஒரு குறிப்பிட்ட மரபினரே. செவ்வந்தித்தோடு, நீலோத்பலமலர், இண்டை மாலை இவை ஆரூர் தியாகருக்கே உரியவை. ஆரூர் செப்பேட்டு ஓவியங்களிலும், விதானத்து வண்ண ஓவியங்களிலும் தியாகப் பெருமானோடு இண்டை மாலையும் காட்டப்பட்டுள்ளது.

19. திருப்பணி சாத்துதலும் நிறைபணித் திருநாளும்

எல்லா திருக்கோயில்களிலும் இறைவனுக்கு மலர் மாலைகளையும், மலர்ச்சரங்களையும் சூட்டுதலே வழக்கம். ஆனால் ஆரூர் தியாகருக்குரிய தனிச்சிறப்பு' 'திருப்பணி'' சாத்துதலாகும். இங்கு மல்லிகை, முல்லை, சவந்தி, பவளமல்லி போன்ற சுகந்த மலர்களை மாலையாகவோ, சரமாகவோ தொடுக்காமல், தியாகப் பெருமான் மீது மலர்களைத் தூவித்தூவி அலங்கரிக்கும் முறையே பணி சாத்துதலாகும. இண்டை மாலை, செவ்வந்தித்தோடு, செங்கழுநீர் பூக்களோடு, சுகந்த மலர்களால் திருப்பணி சாத்திய பின்பு ஆரூரனைக் காணக் கண் கோடி வேண்டும்.

பணி சாத்துதலுக்கு என்றே ஒரு தனி விழா கூட நடைபெறுகின்றது. இதனை ''நிறைபணி உற்சவம்'' என்றழைப்பர். ஒவ்வோர் ஆண்டும் புரட்டாசித்திங்கள் பூரட்டாதி நாளன்று செங்கழுநீர் ஓடையிலிருந்து செங்கழுநீர்ப்பூக்கள் கொய்யப்பெற்று அவற்றை பல்லக்கில் வைத்து ஆரூரின் திருவீதிகளில் பவனிவரச் செய்வர். பின்னர் அவற்றை தியாகப் பெருமான் திருமுன்னர் கொண்டு சென்று பூஜைகள் நிகழ்த்தி பணி சார்த்தப்பெறும். அவ்வமயம் இத்திருக்கோயிலின் மரபுவழி மாலை தொடுப்பவரான ''திருமாலைக்கட்டி'' என்ற ஊழியர்க்குக் கோயில் மரியாதையான பரிவட்டம் கட்டிக் கௌரவிக்கப்படுவார். இது வே நிறைபணி உற்சவமாகும்.

20. பூதநிருத்தம்

சந்திர சேகரர் திருவிழாவின் போது இறைவன் திருமேனி திருக்கோயிலினுள் பவனி வரும் போது ஒவ்வொரு திசையிலும் அத்திசைக்குரிய கடவுளின் திக்மந்திரம் பிரயோகம் செய்யப் பெறும். இவ்வாறு அட்ட திக்குகளின் நாயகர்களுக்கு சிறப்புகள் நடக்கும் போது இறுதியாக ஈசான திசைக்கு இறைவன் திருமேனி எழுந்தருளப்பெறும் போது ஆரூர் கோவிலின் முட்டுக்காரர் சுத்த மத்தளத்தை தலையில் கட்டியுள்ள பரிவட்டத்தின் மேல் வைத்துக்கொண்டு இரண்டு கைகளையும் உயர்த்திய வண்ணமே மத்தளத்தை இசைப்பார். இவ்வாறு இசைக்கப்பெறும் சுத்த மத்தளத்தின் தாளங்களும், இயக்கப்பெறும் முறைகளும், குறிப்பிட்ட ஒருவகை முறைப்படியே நிகழும். இதற்கு பூத நிருத்தம் எனப்பெயர்.

இவ்வாறு சந்திரசேகரர் திருவிழாவின்போது ஈசானதிக்கில் சுத்தமத்தளம் இசைக்கும் போது பூத கணங்களெல்லாம் கூடி சந்திரசேகரர் முன்பு நிருத்தம் (ஆடல்) புரிவதாகவும், அதற் கெனவே முட்டுக்காரர் தலைக்கு மேலாக மத்தளம் இசைப்ப தாகவும் ஒரு நம்பிக்கை பூத நிருத்தம் இன்றும் தொடர்ந்து நடைபெறும் விழா நிகழ்ச்சியாகும்.

17, 18ஆம் நூற்றாண்டுகளில் விழாக்களின்போது பூத நிருத்தம் நிகழ்ந்தது என்பதனை தேவாசிரிய மண்டபத்து ஓவியங்கள் நமக்குக் காட்டுகின்றன. சந்திரசேகரர் திருவிழா ஓவியக்காட்சியில் பூத நிருத்தம் காட்டப்பெற்றுள்ளது. இக் காட்சிக்குக் கீழாக ''பூதனிருதம்'' என எழுதப்பெற்றுள்ளது.

21. கட்டியங் கூறல்

மன்னர்களின் வருகையை உணர்த்துவதே கட்டியங்கூறு தலாகும். பின்னாளில் அரசவையைக்காட்டும் நாடகங்களிலும் கட்டியங்கூறல் இடம் பெற்றிருக்கும். இவ்வாறு கட்டியங்கூறும் முறை ஆரூர் திருக்கோயிலுக்குரிய சிறப்பு அம்சமாகும். இங்கு தியாகராசன் இராஜ கோலத்திலியே கொலு வீற்றிருப்பவர். இவர் சிம்மாசனத்தில் அமர்ந்த காலும், மற்றும் விழாக்களின் போது பவனி வரும்போது தியாகராஜரின் வருகையை உணர்த்தும் கட்டி யங் கூறும் முறை பலநூற்றாண்டுகளாக ஆரூரில் போற்றப் பெறும் நெறிகளில் ஒன்று.

22. திரைக்குப்பின் சுத்தமத்தளம்

தியாகப்பெருமான் திருவிழாவில் பதினெட்டு வகையான வாத்தியகோஷம் முழங்கும். இவர்க்குரிய சிறப்பு இசைக்கருவிகள் பஞ்சமுக வாத்தியம், சுத்தமத்தளம், பாரி நாதஸ்வரம் சங்கம் கொடு கொட்டி ஆகியவையாகும். குறிப்பிட்ட சில விழாக்களின் போது சுத்தமத்தளம் வாசிக்கும் கலைஞர்க்கு பட்டுப்பரிவட்டம் சூட்டி மரியாதைகள் செய்யப்படும், பின்னர் அவர் சுவாமிக்கு (தியாகராஜர்க்கு) பின்புறமாக நின்று கொண்டிருக்க திரை இடப்படும். உடன் சுத்தமத்தள வாத்தியம் முழங்கும். லயவடி வான இந்த பூஜை ஆரூர் இறைவர்க்கு மகிழ்ச்சியூட்டும் நிகழ்ச்சியாகும்.

23. திருமந்திரம்

சைவத்திற்கு பெருமை தருவது திருநீறு ஆகும். ''முக்தி தருவது நீறு'' என ஞானசம்பந்தரே போற்றும் பெருமையுடைய தாகும். சுடலையில் இறைவன் (ருத்திரன்) பூசிக்கொள்ளும் பொடி, பலாசமரத்தின் சாம்பல், பசுஞ்சாணத்தின் சாம்பல் முதலியவைகளே உயர்ந்த திருநீராக ஆகமங்கள் உரைக்கின்றன. இவ்வாறு சைவம் போற்றும் பெருமையுடைய திருநீற்றை ஆரூர் திருக்கோயிலில் ''திருமந்திரம்'' என்றே அழைக்கின்றனர். இதுவே இத்திருக்கோயில் மரபுமாகும்.

24. வாதாபி விநாயகர்

முதலாம் நரசிம்ம பல்லவனின் தளபதியான மேலைச்சாளுக் கியர்களின் தலைநகரம் வாதாபியை (BADAMI) வென்று அங் கிருந்து கணபதியார் திருமேனி ஒன்றினை கொணர்ந்ததாக கூறுவர். இதற்கு நிச்சயமான வரலாற்றுச் சான்றுகள் இல்லை யாயினும், கர்ண பரம்பரையாகக் கூறப்படும் நிகழ்ச்சியாகும். ஆனால் தாம்வென்ற நாடுகளிலிருந்து இறையுருவங்களை வெற்றிச் செல்வமாக கொணர்தல் தமிழகத்தில் தொடர்ந்து நிகழ்ந்திருக்கிறது. முதலாம் இராஜேந்திர சோழன் கங்கை நாடுகளை (பாலர்கள் ஆண்ட வங்கதேசம்) வென்ற போது ஒரு கணபதியார் சிற்பத்தினை அங்கிருந்து கொணர்ந்து கும்ப கோணம் நாகேஸ்வரன் திருக்கோயிலில் பிரதிட்டை செய்துள் ளான். இது இன்றும் ''கங்கை கொண்ட கணபதி'' என்றே அழைக்கப்பெறுகின்றது. இதேபோல் இராஜாதிராஜன் கல்யாணபுரத்திலிருந்து துவாரபாலகர் சிலை ஒன்றினைத் தமிழகம் கொணர்ந்து அதன் பீடத்தில், கொணர்ந்த வீர வரலாறும் கல்வெட்டாகப் பொறித்துள்ளான். இதனைப் போன்று சாளுக்கியர்களின் கௌரபீடம், சக்ரராகி, நுளம்பர் களின் மகிஷாசுரமர்த்தனி, சூரியன், கங்கர்களின் துர்கை போன்ற எண்ணற்ற திருமேனிகள் தமிழகம் வந்துள்ளன. இதேபோன்று வாதாபி கணபதியும் தமிழகம் வந்ததில் வியப் பில்லை.

இவ்வாறு சிறுத்தொண்டரால் கொணரப்பட்ட கணபதி, அவரது சொந்த ஊரான திருச்செங்காட்டங்குடியில் பிரதிட்டை செய்ததாகக் கூறி அத்திருக் கோயிலில் ''வாதாபி விநாயகர்'' என்ற திருமேனி பூஜிக்கப் பெறுகின்றது. சிற்ப இயல் அடிப் படையில் நோக்கும் போது அது மேலைச் சாளுக்கியர்களின் வாதாபி நகர கலைப் பாணி அல்ல. மாறாக நமது சோழ நாட்டுத் திருமேனியாகத் தான் (சோழர்கள் காலப் பாணி) உள்ளது. ஆனால் திருவாரூரில் உள்ள 'வாதாபி விநாயகர்'' என்னும் சிற்பம் தமிழகத்து சிற்ப அமைதியிலிருந்து மாறுபட்டும், தொன்மையானதாகவும் சாளுக்கிய நாட்டு சிற்ப எழிலுடனும் உள்ளது சிந்திக்க தக்கதாகும். முத்துசுவாமி தீட்சிதர் யாத்த ''வாதாபி கணபதிம் பஜேஹம்'' என்ற பாடல் இவர் திருமுன்பு இயற்றப்பட்டது என்ற பெருமையும் ஆரூரில் உள்ள இக் கணபதியாருக்கு உண்டு.

ஆரூர் திருக்கோயில் திருமூலட்டானத்தில் உள்ள கணபதியார் செப்புத்திருமேனியும் சிறப்புக்குரியதாகும், இவரை ''ஐங்கலக் காசு வினாயகர்'' என்று அழைக்கின்றனர்.

25. உச்சிஷ்ட கணபதி

அறுவகை சமயத்தில் ஒன்றான ''சாக்தம்'' என்ற நெறியில் போற்றப்பெறும் கணபதியார் திருமேனியை ''உச்சிஷ்டகணபதி'' என அழைப்பர். சோழர்கள் காலத்துப் படைப்பான உச்சிஷ்ட கணபதியார் திருமேனி ஒன்று கமலாம்பாள் திருக்கோயிலின் முன் மண்டபத்தில் கிழக்கு நோக்கி உள்ளது. எழிலுரு இச்சிற்பத்தில் கணபதியார் தமது தொடைமேல் தேவியை அமர்த்திய வண்ணம் அருள் பாலிக்கிறார், சிற்ப அமைப்பு முழுவதும் சரித்திரத்திற்குரிய நெறிமுறைப்படி அமைக்கப்பெற்றதாகும்.

''பிரகாராம்தரம் / நாரீ யோநிர சாஸ்வாத லோலுபம் காம மோஹிதம் /.'' என்று தியானசுலோகம் விவரிக்கின்றது. பெண்ணின் யோனியில் துதிக்கையை வைத்தவராக, காமமோகிதராக; நீலவர்ணம் உடையவராகத் திகழ்பவரே கணபதி என்றும் விளக்குகின்றது. இதனை ஒத்த கற்சிலைகள் கும்பகோணம் நாகேஸ்வரன்கோயில், தாராசுரம் திருக்கோயில் போன்ற இடங்களில் மட்டுமே உண்டு.

26. மூலாதார கணபதி

திருவாரூரைத் தவிர வேறு எங்கும் காண இயலாத கணபதியாரின் ஒருவகையான திருவடிவே மூலாதார கணபதி வடிவாகும். இத்திருமேனி பூங்கோயில் அமைந்துள்ள முதற்திருச்சுற்றில் இடம் பெற்றுள்ளது; சுருண்டு படுத்த நிலையில் ஐந்தலை அரவு கிடக்க அதன் சுருள் உடலின் மத்தியில் விரிந்த தாமரை மலரும், அதன் மேல் நர்த்தன கணபதியாக பாசாங்குசமும், மோதகமும், தந்தமும் ஏந்திய கணபதியார் காட்சி நல்க பூதமாரண்டு தாளமும் மத்தளமும் இசைக்கின்றன.

அரிய இத்திருமேனி யோக சாத்திர அடிப்படையில் படைக்கப் பெற்றதாகும். ஆரூர் திருத்தலத்திற்கும் யோக நெறிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இத்திருக்கோயிலில்தாள் அன்னை பராசக்தி கமலாம்பாளாக யோக நிலையில் உள்ளான். இந்த யோக நெறியின் ஒரு அம்சமான உச்சிஷ்ட கணபதியாரும் இதே

திருக்கோயிலில் இடம் பெற்றுள்ளார். யோக நெறியில் ஆறா தாரங்கள் குறிப்பிடப் பெற்றுள்ளன. அவை மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், விசுத்தி, அநாகதம், ஆஞ்ஞை என்பனவாகும். அவற்றுள் மூலாதாரம் என்பது மனித உடலின் தண்டுவடம் முடியும் இடத்தில் முக்கோண வடிவில் உள்ளது. அதில் நான்கு இதழ்களோடு கூடிய தாமரை வடிவுள்ளது. அதன் நடுவில் அதிதெய்வமாக-குண்டலி சக்தியை நடத்துபவராக இருப்பவர் கணேசர். ஆதலால் இவருக்கு மூலாதாரகணபதி என்ற பெயர் உள்ளது என்பர் ஆன்றோர். மூலாதாரத்தில் உறங்கும் குண்டலி சக்தியை எழுப்பி அதன் முழுநிலையை உணரும் யோகி களால் தான் பரமானந்த நிலையை உணர முடியும். பரமா னந்தத்தின் உருவகமே ஆடவல்லான். இங்கு குண்டலியின் அதி தெய்வமான கணபதியே ஆடிக்காண்பித்து மூலாதாரத்தின் (குண்டலியின்) பெருமையை உலகுக்கு உணர்த்துகிறார். குண்ட லியின் வெளிப்பாடு என்ன என்பதை உணர்த்தும் மூர்த்தமே இவ்வற்புத கணபதியார் திருமேனி.

27. வல்லபை விநாயகர்

இத்திருக்கோயில் மண்டபங்களில் ஒன்றான தட்டஞ் சுற்றி மண்டபத்தில் வல்லபை விநாயகர் கோயில் கொண்டுள்ளார். பத்துக்கரங்களுடனும், மடியில் தேவியை அணைத்த வண்ணமும் காட்சி நல்குகிறார். பத்துக்கரங்களில் முறையே சக்கரம், திரிசூலம் கத்தி, அங்குசம், அமுதகலசம் ஆகியவற்றை வலது கரங்களும், தாமரை, பாசம், சாமரம், மழு, போன்றவற்றை இடதுகரங்களும் தாங்கியுள்ளன. சக்தியுடன் கூடிய இவ்விநாயகப்பெருமானின் அருட் கோலமும் காண வேண்டிய ஒன்று.

28. மாற்றுரைத்த விநாயகர்

தீர்த்த குளத்தின் வடகிழக்கு மூலையில் இவ்விநாயகர்கோயில் கொண்டுள்ளார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் விருத்தாசலத்தில் மணிமுத்தாற்றில் இட்ட பொன்னைக் கமலாலயத்திலே தேடி எடுத்து தாம் வைத்திருந்த மச்சப் பொன்னைக் (அடையாளப் பொன்) கொண்டு விநாயகப் பெருமான் உதவியால் உரைத்து ஒப்பு நோக்கினர் என்ற கதையின் அடிப்படையில் போற்றப் பெறுவதே இத்திருக்கோயிலாகும். கணபதியார் திருமேனி

அமைப்பில் சிற்ப அடிப்படையில மாறுபட்ட அமைப்புகள் ஏதும் இல்லை.

29. கலிவிடம்பனம்

''கலிவிடம்பனம்'' என்ற வடமொழிச் சுவடி நூலொன்று ''கமலாலய மகாத்மியம்'' என்ற பெயரில், தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூலகத்தில் B. 5039, D 4239 என்ற எண்களுடன் உள்ளது. இது கி. பி. 18ஆம் நூற்றாண்டில் தஞ்சையை ஆட்சி புரிந்த சஹஜிமகாராஜாவுக்கு எழுதப்பெறற சீட்டுக்கவியாக அமைந்த நூல். இதில் திருவாரூர்த் திருக்கோயிலில் மன்னரது யானைகளும், குதிரைகளும் பராமரிக்கப்பட்டதாகவும், அதனை மேற்பார்வை செய்யும் அதிகாரி பல ஊழல்கள் செய்ததாகவும், இதனால் யானைகளும் குதிரைகளும் பாதிக்கப்படுமம செய்தியினை மிக அழகாக, நயமாக திருவாரூரின் பெருமைகள் ஒன்று, இரண்டு என்று வரிசையாகச் சொல்லி மன்னனின் கவனத்திற்குக் கவிதை வாயிலாகக் கொணர்ந்த அரியநூல் இது. இதனை எழுதியது யானைகளைப் பராமரிக்கும பணியைச் செய்த ஒரு ஊழியன் என்பதும் சிறப்பு அம்சமாகும். இந்நூல் இதுவரை அச்சிடப் பெறவில்லை.

பேசும் பொற் சித்திரங்கள்

பேசிடும் பொற் சித்திரங்கள்

இந்திய நாட்டின் கலை, பண்பாடு, இவற்றிற்கு பெருமை சேர்க்கும் பல்வேறு கூறுகளில் ஓவியக்கலையின் சிறப்பு தனி இடம் பெற்றுத் திகழ்கின்றது. இத்தகைய கவின் கலைகள் பல வளர தொடர்ந்து ஆக்கம் அளித்தது திருக்கோயில்களே. தமிழகத்து திருக்கோயில்கள ஓவியக் கல்லூரிகளாகவே திகழ்ந்திருக்கின்றன. இதற்கு 1500 ஆண்டுகால தெளிந்த வரலாற்றுப் பெருமையும் உண்டு. மாற்றார்களையும் தன்வயப்படுத்திய அற்புத ஆற்றல் தமிழகத்து ஓவியனின் தூரிகைக்கு இருந்தது.

ஆம்..! இன்றைக்கு ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியைக் காண்போமே,..!. காஞ்சியை ஆண்ட மாமல்லனின் தானைத்தலைவன் பரஞ்சோதி (சிறுத்தொண்டர்) சாளுக்கிய நாட்டின் மீது படையெடுத்தான் அவர்களது தலைநகர் வாதாபி வீழ்ந்தது. எழில் மிகுந்த நகரை தமிழகத்துப் படைகள் தூள் தூளாக தகர்த்தன. கவின்மிகு சிற்பங்களையும், மற்ற கலைப் பொருள்களையும் கொள்ளை கொண்டனர். இதுமேலைச் சாளுக்கியர்களுக்கு பேரிழுக்காக, ஆறாத இரணமாகத் திகழ்ந்தது

இத்தனைக்கும் பழிதீர்க்க எண்ணினான். அக்குலத்துதிர்த்த இளைஞன் மூன்றாம் விக்கிரமாதித்தன். காஞ்சி மீது படை-எடுக்க தானே புறப்பட்டான். தன் படைத்தலைவர்களை அழைத்து வெஞ்சினத்தோடு சபதமெடுத்தான். தன் வாதாபிக்கு நேர்ந்த அதே நிலையைத் காஞ்சிக்கு ஏற்படுத்த வேண்டும் என்றும் நினைத்தான். காஞ்சி நகரத்தில் கண்ணில் படுவது அனைத்தையும் அழிப்பது தான் அவர்களுக்கு அவன் இட்ட கட்டளை.

துடிப்போடு வந்த இளைஞன் படை முன்னர் காஞ்சி நகரின் கோவில் வீழ்ந்தது. படைத்தலைவர்களைப் புறத்தே நிறுத்தி விக்கிரமாதித்தன் தானே முதலில் உள்ளே நுழைந்தான். அவன் கண்ணில் முதலில் பட்டது பல்லவன் இராஜசிம்மனால் கட்டப் பட்ட கயிலாய நாதர் கோயில். அக்கோயில் கட்டப்பட்டு

முப்பது ஆண்டுகளே இருக்கும். எழிலார்ந்த சிற்பங்களின் மேல் ஒப்பரிய வண்ணங்கள் . ! இந்திர லோகத்தின் வண்ணமிகு ஜாலங்கள் !.

காஞ்சியை நிர்மூலமாக்க வேண்டும் என்று வந்த மன்னன், காஞ்சியின் கலையில் தன்னை மறந்தான். இவ்வளவு ஒப்பரும் சிற்பங்களும் ஓவியங்களும் நிறைந்த காஞ்சியையா அழிப்பது? விக்கிரமாதித்தன் பெரும் போர்த் தலைவனே ஆயினும் கலை உள்ளம் மிகுந்தவன் காஞ்சியின் ஒவ்வொரு அங்கத்தையும் தூள் தூளாக்கத் துடித்துக் கொண்டு புறத்தே நின்ற தன் படைத் தலைவர்களுக்கு ஓர் ஆணை பிறப்பித்தான். ''காஞ்சியின் எந்த ஒரு பொருளுக்கும் கேடு விளைவிக்காதீர்கள்'' என்பதே அவ்வாணை. கயிலாய நாதர் கோயிலுக்குச் சென்று எண்ணிலா கொடைகள் அளித்ததோடு இச் செய்திகளை அங்குக் கல்லிலும் பொறித்தான். அவன் மனைவியின் விருப்பத்திற்கேற்ப காஞ்சி நகர் சிற்பிகளையும், ஓவியர்களையும் தன்நாட்டிற்கு அழைத்துச் சென்றுபட்டக்கல்எனும் ஊரில் ''லோகமாதேவீச்சுரம்'' எனும் கோயிலையும் எழுப்பினான். இதுவே தமிழகத்து சிற்பக்கலைக்கு ஓவியக் கலைக்குக் கிடைத்த பெருமதிப்பாகும்.

இத்தகைய பாரம்பரியம் மிக்க ஓவியக்கலையின் கேந்திரங் களாக மனமலை, சித்தன்னவாசல், தஞ்சாவூர், திருவரங்கம், திருவாரூர், மதுரை, திருப்புடை மருதூர், கோனேரிராஜபுரம், பட்டீச்சரம் போன்ற பலத் திருக்கோயில்களும், இராமநாதபுரம் அரண்மனை போன்ற இடங்களும் தமிழகத்து ஓவியக்கலையின் சிறப்புக் கலைக் கூடங்களாகத் திகழ்கின்றன. இவ்வரிசையில் ஆரூர் திருக்கோயிலின் ஓவியச் சிறப்புகளை இனிக்காண்போம்.

ஓவியன் சிங்காதனம்

தமிழகத்து திருக்கோயில்களில் பல ஓவியக் கூடங்கள் இருப்பினும். அதனை உருவாக்கிய ஓவியர்களைப் பற்றி நாம் அறிய முடியவில்லை. சில இடங்களில் ஓவியர்களின் பெயர்கள் மட்டும் காணப் பெறுகின்றன. ஆனால் ஆரூரில் ஒரு அற்புத ஓவியக் கூடத்தைப் படைத்த ஒரு தமிழ் ஓவியனை இங்கு நான் உங்களுக்கு அறிமுகம் செய்வதோடு, அப்பெருமகனைக் கண்ணால் காண்பதற்கே உங்களை அழைத்துச் செல்கிறேன்! வாருங்கள்.

17 ஆம் நூற்றாண்டில் தஞ்சையை சகசியும் பின்னர் முதல் சரபோஜியும் ஆட்சி புரிந்த போது, திருவாரூரில் அம்மன்னர்களின்

பிரதிநிதியாய் சாமந்தனார் ஒருவர் பணிபுரிந்தார். அவரது பிரதானியாய் பணிபுரிந்த செம்மலே சிங்காதனம் என்பான் இப்பெருமகன் ராயசாமந்தனாரின் பிரதானியாய் அரசு அலுவல் பார்த்ததோடு தலைசிறந்த தமிழகத்து ஓவியனாயும் திகழ்ந்து ஒரு அற்புத ஓவியக் கூடத்தை தனது தூரிகைகளால் உருவாக்கி நமக்கு தந்துள்ளான். இத்தகைய சிறப்புகள் பெற்ற சிங்காதனம் புராண நூல்களிலும், நமதுபண்பாட்டுக் கூறுகளிலும் சிறந்த புலமை உடையவன் என்பதை ஆரூர்ஓவியங்கள் மெய்ப்பிக் கின்றன. 17 ஆம் நூற்றாண்டில் ஆரூர் திருக்கோயில் எப்படி இருந்தது? வீதிகளில் விழாக்கள் எப்படி நிகழ்ந்தன? ஆரூர் மக்களின் கலாச்சாரம் அவர்கள் வளர்த்த இயல் இசை கூத்துக்கள் யாவை? இத்தனையும் நமக்கு கண்முன்னே காட்ட அந்த நூற்றாண்டுக்கே நம்மை அழைத்துச்செல்வது தான் ஓவியன் சிங்காதனத்தின் தனித் தன்மையாகும்.

தலையில் முண்டாசு, முகத்தில் தாடி மீசை திகழ இடுப்பில் வெண்துகில் (வேட்டி) உ...லெங்கும் திருநீறு, பணிவான கோலம் இதுவே சிங்காதனத்தின் தோற்றம். சிங்காதனத்தின் தூரிகை களால் வளம் பெற்று ஜீவனுடன் திகழும் ஆரூரின் அற்புதக் கூடம் ''தேவாசிரியன் திருமண்டபம்'' செல்வோம் வாருங்கள். உள்ளே நுழைந்ததும் மண்டபத்து உட்கூரையான விதானத்தைப் பாருங்கள். சிங்காதனம் படைத்த சொர்கபுரியைக் காணுங்கள். பல காட்சிகளின் கீழ் ''இந்த சித்திரம் எழுதுகிற சிங்காதனம் நித்தம் சதா சேவை'' என்றும் ''ராயசாமந்தனார் வாசல் பிரதானி சித்திரவேலை சிங்காதனம்'' போன்ற வரிகள் காணப் படினும், குறிப்பாக பலர் இடம் பெறும் ஓவியங்களில் சிங்காதனம் தனது உருவத்தைக் காட்டத்தான் அணிந்துள்ள உடையிலோ அல்லது வேட்டியின் மேலோ சிறிய எழுத்துக்களில் 'சிங்காதனம்' என்ற குறிப்பும் எழுதியுள்ளமையால் அவ்வோவியனை நாம் பலர் நடுவுள் எளிதில் காண முடிகிறது. சிங்காதனம் நமக்குத் தந்துள்ள ஓவியக் காவியத்தில் ஐந்து காட்சிகளில் (காட்சி எண்கள் 24, 25, 32, 34, 37) தமது ஓவியத்தையும், அதன் விளக்கத்தையும் தந்துச் சென்றுள்ளான் அக்கலைஞனின் ஓவியத்தில் நாயக்கர்கள் கால ஓவியப் பாணியும், முகலாயர்களின் ஓவிய மணமும், தமிழகத்து ஓவியத்தோடுப் பின்னிப் பிணைந்து மிளிர்கின்றது. தியாகராஜ சுவாமியின் புராணம், ஆரூரின் விழாக்கள், வாணவேடிக்கைகள், அணிகலன்கள், ஆடைகள் இசைக் கருவிகள், இசைக் கலைஞர்கள், ஆடற்கலையின் அழகு

முத்திரைகள் இன்ன பிற செய்திகள் யாவும் சிங்காதனத்தின் வண்ணக் குழைவால் நாம் காணமுடிகிறது. ஒவ்வொரு ஓவியக் காட்சியும் பேசுகின்றன. ஆம்...! இது முற்றிலும் உண்மை. பேசிடும் அப்பொற்சித்திரங்களோடு நாமும பேசிடுவோம் தொடர்ந்து வாருங்கள்.

தேவாசிரிய மண்டபத்தின் தென்புற வாயிலை ஒட்டிய இரண்டாவது (அங்கணத்தில்) பிரிவில் துவங்குகிறது முதல் காட்சி.

அழகிய சிம்மாசனத்தில் குரங்கு முகம் உள்ள அரசன் ஒருவன் அமர்ந்திருக்கிறான். இவனது பெயர் முசுகுந்த சக்கரவர்த்தி என்பதை கீழே உள்ள விளக்கத்தால் அறியலாம். இம் மன்னவனின் பின்பு ஒன்பது வீரர்கள் கையில் வாளேந்தி அமர்ந்திருக்கிறார்கள். இவ்வாறு கொலு வீற்றிருக்கும் மன்னவன் முன்பு கட்டியங்காரன் ஒருவன் வந்து நிற்கிறான். அழகிய இக் காட்சிக்கு கீழே பின்வருமாறு தமிழில் (200 ஆண்டுகளுக்கு முந்திய எழுத்துக்களில்) எழுதப்பட்டுள்ளது.

" கோசலையினோடு அயோத்தியாபுரி பட்டினத்திலே முசுகுந்த சக்ரவர்த்தி நவ வீரான் ஒன்பது பேரும் சுப்பிரமணிய சுவாமி அனுக்ரகத்தினாலே முசுகுந்த சக்ரவர்த்திக்கு தம்பிமார்களாய் இருக்க இப்படி வெகுகாலம் பரிபாலனம் பண்ணிக்கொண்டு கொலுவாயிருக்கையிலே தேவேந்திரன் வாலாசுரனை சங்காரம் பண்ணறதற்காக முசுகுந்தனை அழைத்து வாருங்கள் என்று சொன்ன பிரகாரம் கட்டியங்காரன் வந்து முசுகுந்த சக்கரவர்த்தியை அழைக்குறது இவ்விடம். "

கொலுவீற்றிருக்கும் முசுகுந்த சக்கரவர்த்தியின் முன்னே நாடகசாலைக் காட்சி உள்ளது, ஒருமரம் போன்ற காட்சிக்கு முன்னே ஆரணங்கு ஒருத்தி ஆடுகிறாள். நட்டுவாங்காரன் கையில் தாளத்துடன் குனிந்து நட்டுவம் சொல்லுகிறார். மிருதங்கம் அடிப்பவர் தனது தாளக்கருவியை மாட்டிக்கொண்டு தாள் மிடுகிறார். பின்னால் பாடும், தாளமிடும் ஆண்களும் பெண்களும் நிற்கின்றனர். முசுகுநதன் காணும் இந்நாட்டிய காட்சியின் கீழே " முசுகுந்த சக்கரவர்த்தியினுடைய நட்டுவாமுட்டுக்கார நாடகசாலை " என எழுதப்பட்டுள்ளது.

நாட்டிய காட்சியினை அடுத்து அலங்கரிக்கப்பட்ட தேர் ஒன்று உள்ளது. அதில் முசுகுந்த சக்ரவர்த்தியும், நவ வீரர்கள்

ஒன்பது பேரும் அமர்ந்துள்ளனர். இது தேவேந்திரனின் வேண்டுகோளை கட்டியங்காரன் மூலம் அறிந்து தேவலோகம் புறப்படும் காட்சியாகும்.

குதிரைகள் பூட்டப்பட்டுள்ள முசுகுந்தனின் தேருக்கு முன்பாக யானைப்படை அணிவகுத்து நிற்கிறது. யானைகள் போர்க்களத்திற்குத் தயாராக அலங்கரிக்கப்பட்டுள்ளது. போர் வீரர்கள் வாளும் கேடயமும் ஏந்தி யானை மீது அமர்ந்துள்ளனர். வீரர்களின் முகங்கள் பெரும் போரை சந்திக்கச் செல்லும் பெருமித உணர்வோடு காணப்படுகிறது.

யானைப் படைக்கு முன்பு குதிரைப்படை வரிசையாக அணிவகுத்து நிற்கிறது. குதிரைகளின் மீது அமர்ந்துள்ள வீரர்கள் போரினை சந்திக்க தயாராய் உள்ளனர். குதிரைப் படைக்கு முன்பு வரிசை வரிசையாக காலாட் படை வீரர்கள் நிற்கின்றனர். ஒரு வரிசையினர் வாளும் கேடயமும் ஏந்தி நிற்கின்றனர். அடுத்த வரிசையினர் துப்பாக்கிகள் ஏந்தி உள்ளனர் மேலும் ஒரு வரிசையினர் நீண்ட ஈட்டிகள் தாங்கி உள்ளனர்.

இவ்வாறு தேர், யானை, குதிரை, காலாட்படையினர் நிற்கும் இவ்வரிய காட்சியின் கீழே...

''ரத கெச துரக பதாதியுடனே முசுகுந்த சக்ரவர்த்தி தேவேந்திரனுக்காக வாலா அசுரனை சங்காரம் பண்ணுவதற்காக போகிறது. இதற்கு கீழ் தேவந்திரனும் முசுகுந்தனும் சந்திப்பது'' என்று எழுதப்பட்டுள்ளது. போர்படைகளின் உடை அலங்காரம் மற்ற கருவிகள் அனைத்தும் மராட்டியர் கால போர்ப்படையின் அத்தனை அம்சங்களையும் அப்படியே பிரதி பலிக்கின்றன.

தென்புறம் இரண்டாம் அங்கணத்தில் துவங்கிய இக்காட்சி தொடர்ந்து தென்புறம் முதல் அங்கணத்தில் தொடர்கிறது.

குதிரை பூட்டிய தேரில் தேவேந்திரன் அமர்ந்துள்ளான் நான்கு கரங்களுடன் உள்ள தேவேந்திரனின் கையில் வச்சிரப்படை உள்ளது. இவனது தேருக்கு முன்பு தேவர்படை அணிவகுத்து படைக்கலங்களுடன் நிற்கும் காட்சி உள்ளது. இப்பகுதிக்கு கீழே எழுதப்பட்டுள்ள காட்சி விளக்கங்களில் எழுத்துக்கள் மறைந்துள்ளதால் படிக்க முடிய வில்லை.

தேவேந்திரனும், தேவர்களும் அணி வகுத்துநிற்க அதற்கு முன்பு எதிர்த்திசையில் அசுரர் படை ஆயுதங்களுடன் அணி வகுத்து நிற்கிறது. இக்காட்சியின் கீழ்:

'' வாலா சுரம் திரிளித்தம் ஆரம்பிக்கிறது இவ்விடம் '' என்று எழுதப்பட்டுள்ளது.

அசுரர் படைக்கு பின்னால் வாலாசுரன் குதிரைகள் பூட்டிய தேரில் அமர்ந்திருக்கிறான். கீழே வாலாசுரன் அமர்ந்துள்ள காட்சியின் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து இதே காட்சியின் பிரிதொரு செயல் நிலை விளக்கப்பட்டுள்ளது. தேரில் உள்ள வாலாசுரன் தேவேந்திரனை வில்லால் தாக்குவதும், அவனது அரக்கர் படையினர் தேவர்களை பாய்ந்து தாக்கும் காட்சியும் உள்ளன.

தென்புற வாயிலை ஒட்டிய இரண்டு நடைகளில் கிழக்கு மேற்காக தொடரும் இக்காட்சி தொகுப்பு பின்பு இம் மண்டபத்தின் கீழ்திசையில் இரண்டாம் நடையில் தென்புறம் துவங்கி வடக்காகச் செல்கிறது;

இதன் தென்புறம் தேவேந்திரன் தேரிலும், முசுகுந்தன் வெள்ளை யானையின் மீதும் நின்றுகொண்டு எதிர்புறம் தேரில் இருந்துகொண்டு இவர்களைத் தாக்கும் வாலா அசுரனை வில்லால் தாக்குகின்றனர். வாலா அசுரனும் வில்லால் தாக்குகிறான். தேவேந்திரனிடம் இருந்து புறப்படும் அம்புகளில் '' செயம் '' என்றும் வாலா அசுரன் விடும் அம்புகளில் '' அவசெயம் '' என்றும் எழுதப்பட்டுள்ளது.

தேவேந்திரன் முசுகுந்தன் ஒருபுறமும், வாலாசுரன் எதிரே தாக்க இவர்களுக்கிடையே உள்ள நீண்ட இடைவெளியில் தேவர் படைகளுக்கும் அசுரர் படைகளுக்குமிடையே மிக உக்கிரமான போர் நடைபெறுகிறது. முசுகுந்தனின் வீரர்களும் போர்க்களத்தின் இடையே தாக்கும் காட்சி பயங்கரமானது. இற்று விழும் தலைகளும், கால்களும், ஏராளம். எங்கும் குருதி மயம், தேவேந்திரனின் தேரில் வஜ்ஜிரக்கொடி பறக்கிறது. வாழை மரங்கள் கட்டப்பட்டுள்ளது. முசுகுந்தன் அம்பாரியில் அமராமல் யானையின் முதுகின்மேல் ஒரு காலை முன்பக்கமாக மடித்தும், மறு காலை பின்பக்கமாக நீட்டியும் உட்கார்ந்தவண்ணம் வில் எய்யும் காட்சி குறிப்பிடத்தக்கது.

முதல் காட்சியில் யானை மீது இருந்த முசுகுந்தன் கீழே இறங்கி ஒரு கையில் குத்துவாளும் மறுகையில் நீண்ட வாளும் கொண்டு வாலாசுரனை தாக்குகிறான் இதற்கு கீழே தேவேந்திரன் ஒரு கையால் வில்லை தரையில் ஊன்றியும், மறுகையில் உள்ள வஜ்ஜிராயுதத்தை தலைக்கு மேல் உயர்த்தியும் நின்று கொண்டு மற்ற இரு கரங்களில் குத்துவாளும், வஜ்ஜிரமும் கொண்டு வாலாசுரனின் உடலில் குத்துதலும், தாக்குண்ட வாலாசுரன் இறந்து வீழ்தலும் காட்டப்பட்டுள்ளது, காட்சி விளக்கமாக வாலாசுரன் சம்ஹாரம் விளக்கப்பட்டுள்ளது.

வாலாசுரனை சம்ஹாரம் செய்த தேவேந்திரனும், முசுகுந்தனும் எதிர் எதிரே நிற்கின்றனர்.இருவரும் வில்லைத் தரையில் ஊன்றியும், மறுகையில் வாள் ஏந்தியும் உள்ளனர். இந்திரனின் மற்ற இரு கரங்களில் வஜ்ஜிராயுதம் உள்ளது, பெரு வெற்றி யடைந்த இருவர் தலைக்கு மேலே மேக மண்டலம் போன்று வரையப்பட்டுள்ளது. அதிலிருந்து கொண்டு மகிழ்ச்சிப் பெருக்கால் தேவர்கள் மலர்களைத் தூவும் அரிய காட்சி காணப்படுகிறது

தேவேந்திரன் தேரில் அமர்ந்து கொண்டு புறப்படுதல். தேரில் உள்ள திண்டில் சாய்ந்து கொண்டு வெற்றிக்களிப்பினால் செல்லும் காட்சியாகும்.

தேவேந்திரன் தேருக்கு முன்பு வெள்ளை யானையின் மீது உள்ள அழகிய அம்பாரியில் முசுகுந்தன் அமர்ந்துள்ளான். அவனுக்கு இருபுறமும் இருவர் நின்றுகொண்டு முறையே சாமரமும், விசிறியும் வீசுகின்றனர். யானையும் தேவலோகம் நோக்கி செல்கிறது.

முசுகுந்தன் யானைக்கு முன்பு ஒன்பது வீரர்களும் (வீராள்) ஒன்பது வண்ண வண்ண குதிரைகளின் மீது ஏறிக்கொண்டு செல்கின்றனர். குதிரைகள் முன் கால்களை தூக்கி பாய்ந்து கொண்டு செல்கிறது, குதிரை வீரர்களின் உடல் ஆடையிலோ, அல்லது குதிரையின் மீதோ மேற் குறித்த வீரர்களின் பெயர்கள் எழுதப் பட்டுள்ளது. முதலாவதாக பச்சை வண்ணக் குதிரையின் மீதேறி சாம்பல் வண்ணத்தில் வீரபாகு தேவர் காணப்படுகிறார். இவரை அடுத்து மஞ்சள் குதிரையில் வீரமகேந்திரனும், சிவப்பு குதிரையில் வீரகேசரியும், கருப்பு குதிரையில் வீரமகேசனும், சிவப்பு குதிரை யில் வீரபுரந்திரனும், மஞ்சள் குதிரையில் வீரராட்சதனும் சாம்பல்

வண்ணக் குதிரையில் வீரமார்த்தாண்டனும், மற்ற இரு குதிரைகளில் இருவீரர்களும் (பெயர்கள் அழிந்துள்ளது) புறப்பட்டுச் செல்கின்றனர்.


முசுகுந்தன், தேவேந்திரன், நவவீரர்கள் தேவலோகத்தை அடைந்து அங்கே நிற்கிறார்கள். ஒரு பெண் தீபத்தட்டைக் கொடுக்க, தேவலோகப் பெண்ணான அரம்பை அத்தட்டை ஏந்தி வெற்றி பெற்ற இவர்கள் முன்பு ஆரத்தி எடுக்கிறாள். அரம்பையின் கீழே ''அரம்பை'' என்று எழுதப்பட்டுள்ளது.

ஆரத்தி எடுக்கும் இவர்களுக்கேமேலே எட்டு பெண்கள் பல கணி வழியாக பூ மழை பொழிகின்றனர், இப்பலகணிகளுக்கு அருகே ''தேவஸ்திரிகள் முசுகுந்தனை கண்டு வெகு சந்தோஷத்தை அடைந்து தோத்திரம் புண்ணி புஷ்பம் வருஷிக்கிறது இவ்விடம்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை அடுத்துள்ள காட்சி இரண்டு பகுதிகளாக மேலும் கீழும் பிரிக்கப்பட்டுள்ளது. மேலே-முசுகுந்தனும் மற்ற ஒன்பது வீரர்களும் ஒருபுறம் அமர்ந்திருக்க எதிர்புறம் தேவேந்திரனும், மற்றத்தேவன் ஒருவனும் அமர்ந்துள்ளனர். தேவேந்திரன் முசுகுந்தனுக்கு மாலை ஒன்றை அணிவிக்கின்றான். இக்காட்சியின் அருகில் ''தேவேந்திரன் முசுகுந்தனுக்கு பரிசாக மாலை கொடுக்கும் இவ்விடம் அரமனை உப்பரிகை'' என்று எழுதப்பட்டுள்ளது.

இக்காட்சியின் கீழே வெள்ளைப் புடவையும் முக்காடும் இட்ட பெண் நிற்க. தேவேந்திரன் அப்பெண்ணின் கால்களில் வீழ்ந்து வணங்குகிறான். முசுகுந்தன் கைகூப்பி வணங்கி நிற்கிறான். பெண்ணின் அருகே ''அதீதியம்மன்'' என்று குறிக்கப்பட்டுள்ளது.

அடுத்து மேல் பகுதியில் ஒரு காட்சியும், கீழே இரண்டு காட்சிகளும் உள்ளன. மேல் பகுதியில் தேவசிங்காதனத்தில் தியாகராஜர் திருவுருவம் இருக்க, தேவேந்திரன் அமர்ந்து பூஜை செய்கிறான் அருகே முசுகுந்தன் நின்று கொண்டு தியாகராசரை வணங்கும் காட்சி உள்ளது. இதனருகில் ''தேவேந்திரன் முசுகுந்தனுக்கு அனேகம் உபசாரத்துடனே வேத பானமு பண்ணுவியித்து முன் வார கலியுடனே'' என்று விளக்கப்பட்டுள்ளது. கீழே முதல் பகுதியில் முசுகுந்தன் திணடில் தலைவைத்து தூங்குகிறான், அவனது கனவு கருப்பு வண்ண பின்னணியில் தியாகராசர் தோன்றி முசுகுந்தனுக்கு செய்திகள் கூறும் காட்சி உள்ளது.



இதனை அடுத்து தேவேந்திரன் அமர்ந்து கைதூக்கி அனுக்கிரகிக்க முசுகுந்தன் பணிவாக எதிரே நிற்கிறான்.

முசுகுந்தன் அமர்ந்திருக்க எதிரே திண்டில் சாய்ந்த வண்ணம் தேவேந்திரனும் தேவர்களும் அமர்ந்துள்ளனர். இக்காட்சிக்கு கீழாக திருபாற்கடல் உள்ளது, அதில் ஐந்தலை அரவின் மேல் மகாவிஷ்ணு, திருமகளுடன் அமர்ந்துள்ளார். பாற்கடலில் மீன்கள் நீந்துகின்றன, திருமாலின் முன்பு முசுகுந்தன் கைகூப்பி வணங்கி நிற்கிறான். வெண்மை வண்ணத்தில் உள்ள திருபாற் கடலில் **''திருபால்கடல்''** என எழுதப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் ஆறு காட்சிகள் இடம் பெற்றுள்ளன. முதலாவதாக தியாகராசர் திருமேனி இரத்தின சிம்மாசனத்தில் வைக்கப்பட்டுள்ளது. இதில் தியாகராசர் உடல் முழுவதும் மாலை, ஆபரணங்களால் மறைக்கப்பட்டுள்ளது. அருகில் உள்ள அம்மனின் உடல் தனியாக தெரியும் வண்ணம் உள்ளது. இக் காட்சியின் அருகில் '' குருபாதமே துணை. தியாகராசரே துணை சகல சௌபாக்கியமும் நித்தம் சதா சேவை '' என்றெல்லாம் எழுதப்பட்டுள்ளது. இதற்கு கீழாக தேவேந்திரன் நான்கு கரங்களுடன் நிற்கிறான். அவனுக்கு எதிரில் விஸ்வகர்மா கையில் கோலும், ஜல கெண்டியும் பிடித்துக்கொண்டு நிற்கிறார். இவர்களுக்கு கீழே முறையே **'' தேவேந்திரன் '' '' விசுவகர்மா ''** என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை அடுத்து விஸ்வகர்மா கையில் கோலும் ஜலகண்டியும், கொண்டு நிற்கிறார். அவரது தலைக்கு மேலே தியாகராசசுவாமி சிலை உள்ளது. அதனருகில் மேலும் நான்கு சிலைகள் இதைப் போன்றே உள்ளது. இவ்வாறு உள்ள சிலைகளை இந்திரனிடம் விசுவகர்மா கொடுக்கிறார். இதனருகில் '' விசுவகர்மா தியாகராசரைப்போல ஆறுவிடங்க மூர்த்தியை அடிச்சு தேவேந்திரன் கையில் கொடுக்கிறது இவ்விடம் '' என்று விளக்கம் கொடுக்கப் பட்டுள்ளது.

விசுவகர்மா அடித்து கொடுத்த விடங்க மூர்த்தியை தேவேந்திரன் எடுத்து முசுகுந்தனிடம் நீட்ட, முசுகுந்தன் ஒரு கரத்தால் விடங்க மூர்த்தியை தாங்கிக் கொண்டு, உண்மையான விடங்க மூர்த்தி இதுவல்ல என மறுகரத்தால் மறுத்து கூறும் காட்சி எழிலோவியமாக மின்னுகிறது.

இக்காட்சிக்கு நேர் மேலே முசுகுந்தனின் இரண்டு நிலைகள் ஒரே படத்தில் காட்டப்பட்டுள்ளது. தேவேந்திரன் தியாகராச மூர்த்தியை எடுத்து வழங்க முசுகுந்தன் அவனது காலில் வீழ்ந்து வணங்குகிறான், பின்பு எழுந்து தேவேந்திரன் அளிக்கும் மூர்த்தியை தன் இரு கரங்களையும் நீட்டி வாங்குகிறான். இங்கு கீழ் வீழ்ந்து வணங்குதல், எழுந்து வாங்குதல் இவை இரண்டும் ஒரே காட்சியிலேயே இரண்டு உருவங்களாக இடம் பெற்றுள்ளது. இக்காட்சியின் கிழ் ''விசுவகர்மாதியடித்து கொடுத்த மூர்த்தியை ஆறு மூர்த்தியும் அல்ல என்று சொன்னபடியினாலே தேவேந்திரன் தியாகராசரை தானே எழுந்தருளப்பண்ணி கொடுக்கும்போது தியாகராசரை முசுகுந்தன் முன்பு சொன்னபடி அடையாளமு கண்டு அனேகஞ்சந்தோஷத்தையடைந்து நமசுகரித்துத் தியாகராசரை முசுகுந்தன் வாங்குறது யிவடம்—தியாகராசரே துணை--எனறு காட்சி விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து முசுகுந்தன் விசுவகர்மாவை அழைத்து பூலோகத்திற்கு சென்று எங்கு தியாகராசரை வைக்கலாம் என்று பார்த்து வரும்படி கூறும் காட்சி எழில் ஓவியமாகத் திகழ்கிறது.

முசுகுந்தனின் விருப்பப்படியே விசுவகர்மா கையில் கோலும் ஜலகெண்டியும் ஏந்தி பூலோகத்திற்கு செல்லும் காட்சி உள்ளது. இவை அனைத்தின் விளக்கங்களும் கீழே எழுதப்பட்டுள்ளது.

பூலோகத்திற்கு புறப்பட்ட விசுவகர்மா திருவாரூர் கோயிலின் நடுவில் துலாக் கோலுடன் அமர்ந்துள்ள காட்சியே இதுவாகும். இவ் ஓவியம் மிகச் சிறப்புடைய ஒன்றாகும். ஆரூர் கோயிலின் வரைபடம் முழுவதுமாக உள்ளது. எல்லா கோபுரங்களும் திரு மதில்களும், பிரகாரங்களும் உள்ளன. நடுப்பகுதியில் வன்மீகரின் கோயில் சிவலிங்கத்துடன் உள்ளது. இதை ஒட்டிய கோயில் ஒன்று உள்ளே தெய்வம் ஏதும் இல்லாமல் உள்ளது. (இதுவே தியாகராசர் கோயிலாகும்) பிரகாரத்தில் உள்ள எல்லா கோயில்கள், மண்டபங்கள், கிணறுகள் எல்லாம் வரையப்பட்டுள்ளது. கோயில்களில் முறையே''அசலேசம்''''அனந்தீசம்''''ஆடகேசம்'' ''கமலாலயம்மன்''''சித்தீசுரம்''என்றெல்லாம்எழுதப்பட்டுள்ளது வன்மீகநாதரின் அருகில் அமர்ந்த நிலையில்உள்ள அம்மன் சிலையும்,கமலாம்பாள் திருக்கோயிலினுள் கால்மேல் கால்வைத்த வண்ணம் தவம் கொண்டுள்ள அம்மனின் உருவமும் வரையப் பட்டுள்ளது. இவை தற்போது புற்றிடங்கொண்டார் சன்னதியில்

உள்ள ''சோமகுலாம்பிகை (பிரியாவிடை அம்மை)'' செப்புத் திருமேனி போன்றும் கமலாம்பாள் திருக்கோயிலின் மூல அம்மன் போன்றும் அப்படியே ஓவியத்தில் காணப்படுகிறது.

ஆரூர் திருக்கோயிலின் நடுவமர்ந்துள்ள விசுவகர்மாவின் கையில் துலாக்கோல் (தராசு) ஒன்று உள்ளது. அதன் ஒரு தட்டு கீழும், மறுதட்டு மேலும் உள்ளது. எடை மிகுதியால் கீழே இறங்கியுள்ள தட்டில் ''திருவாரூர்'' என்றும் மறு தட்டில் ''பூமண்டலம்'' என்றும் விசுவகர்மாவின் கீழ் ''விசுவகர்மா'' என்றும் எழுதப்பட்டுள்ளது.

தேவலோகத்தில் உள்ள தியாகராசரை பூலோகத்தில் தாபிக்க திருவாரூரே சிறந்த இடமென விசுவகர்மா எடை போட்டு தேர்ந் தெடுப்பதே இக்காட்சியாகும்.

திருவாரூர் திருக்கோயில்தான் சிறந்த இடம் எனக்கண்டு கொண்ட விசுவகர்மா திரும்ப தேவலோகம் செல்லுகிறார். கையில் கோலும், ஜலகொண்டியும் உள்ளது. கீழே காட்சி விளக்கமும் உள்ளது.

தேவலோகத்தில் காத்து நிற்கும் முசுகுந்தனிடம் சென்று திருவாரூர்தான் தியாகராசரை வைக்க சிறந்த இடம் என விசுவ கர்மா கூறும் காட்சி எழிலோவியமாக பரிமளிக்கிறது.

மிகப் பெரிய தேரின் நடுவில் உள்ள உயர்ந்த மேடையில் தியாகராசரை வைத்து மற்ற ஆறு விடங்கர்களையும் தேரில் அலங்கரித்து, நான்கு குதிரைகளைப் பூட்டி பூலோகத்துக்குப் புறப்படுகிறது. மூன்று தேவர்கள் விண்ணிலிருந்து பூமாரி பொழிகின்றனர். இரண்டு தேவர்கள் சாமரம் வீசுகின்றனர்.

பூலோகம் செல்லும் தேரின் முன்பு வட்டம் வட்டமாக மலைகள் காண்பிக்கப்பட்டுள்ளது. மலைகளுக்கு பின்பு ஓர் கோயி லில் சிவலிங்கம் உளளது. மலைகளின் மேல் ''நல்லூர் ஆண்டார்'' ''சவுநாகபறுவதம்'' என்றும், தேவநாகரியிலும் (வடமொழி) எழுதப்பட்டுள்ளது. காட்சி விளக்கம் தெளிவில்லையாயினும், தமிழில் எழுதப்பட்டுள்ளதற்கு நடுவே தேவநாகரி லிபியிலும் எழுதப்பட்டுள்ளது.

முசுகுந்தனும், மன்னன் ஒருவனும் தியாகராச மூர்த்தியை கைகளில் தாங்கி நிற்க, மற்ற ஒன்பது வீரர்களும் ஆறு விடங்கர்

களே தாங்களும் பல தேசத்து ராசாக்கள் எல்லாம் வணங்கி நிறக வண்ண வண்ண குடைகள், சாமரங்கள், தோரணங்கள் பிடிக்கப் பட, கொம்பு, மத்தளம், முழங்க மிகுந்த ஆரவாரத்தோடு தியாக ராசரை எடுத்து வலம் வரும் காட்சி அற்புதமாக படைக்கப்பட்டு உள்ளது. இதன் கீழ் ''தியாகராச சுவாமியார் தேவலோகத்தை விட்டு பூலோகத்துக்கு முசுகுந்தனிடமாய் நல்லூரிலே வந்த பின்பு தியாகராச சுவாமியானார்த்தத்தை விட்டு சகல தாவாதிகளும் அன்பத்தாறு தேசத்து ராசாக்களும் அனேகம் உபசாரம் பண்ணத் தக்கதாக முசுகுந்தனும் நவவீராளும் எழுந்தருள பண்ணிக்கொண்டு அனேக உபசாரத்துடனே திருவாரூர் பிரதச்சனமாக வந்து இவ் விடம் திருவாரூர் பட்டணம். இதற்கு வடக்கு ஆலயம்: குருபாதமே துணை. இந்த சித்திரம் எழுதுகிற சிங்காதனம் னித்த சதா சேர்வை''என்று எழுதப்பட்டுள்ளது.

பூலோகம் வந்த தியாகராச சுவாமியின் முதல் காட்சியான இவ் ஓவியத்தில் அடுத்த ஓவியம் இன்னது என்று (ஆலையம்)குறிப் பிடப்பட்டுள்ளதோடன்றி, ஓவியம் வரைந்த ''சிங்காதனம்'' என்பவனின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவன் தினம் இறைவனை வணங்குவதாக (னித்தசதா சேர்வை) குறிப்பிட்டுக் கொள்கிறான்.

திருவாரூர் ஆலயத்தின் வரைபடம் உள்ளது. முன்பு கண்டது போன்றே கோயில் அமைப்பு காணப்பட்டாலும் தியாகராசர் கோயிலில் தியாகராசர் திருமேனி இடம் பெற்றுள்ளது. வன்மீக நாதருடைய திருக்கோயிலில் சிவலிங்கமும், சோமகுலாம்பிகையின் திருவுருவமும் உளளது, தியாகராசர் கோயில் வாசலின் முன்பு முசுகுந்தனும், மன்னன் ஒருவனும நின்று கைகூப்பி வணங்கு கின்றனர். மற்ற ஆறு விடங்கர்களும் இத்திருக்கோயிலிலேயே வைக்கப்பட்டுள்ளது. வானத்திலிருந்து தேவர்கள் பூமாரி பொழி கின்றனர். கீழே மன்னர்கள் பலர் வணங்குகின்றனர். திருவாரூரின் மற்ற திருக்கோயில்களும், ஈசான திசைநோக்கியுள்ள கமலாம்பாள் சன்னதியும் காட்டப்பட்டுள்ளது. இக்காட்சிக்குக் கீழே செட்டி யார் ஒருவரும் அவரது மனைவியும் வணங்குகின்றனர். அவர்களுக்கு அருகில் ''கெங்கையமா சன்முகசெட்டியார் சதா சேர்வை'' என்று எழுதப்பட்டுள்ளது.

கோயிலின் வடபுறம் வானத்திலிருந்து நான்முகன், திருமால், பதஞ்சலிமுனிவர், வியாக்கிரபாதர், மற்றும் முனிவர்கள் சிலர்

திருவாரூர் கோயிலில் வீற்றிருக்கும் தியாகராசரை வணங்கி நிற்கின்றனர். இவர்களுக்கு கீழே வரிசையாக சிலஅடியவர்கள் வணங்கி நிற்கின்றனர். ஒவ்வொரு நபர்களுக்கும் கீழ் அவரவர்கள் பெயர்கள் எழுதப்பட்டுள்ளது. இவ்வாறு

''அகோர தபிரான் நித்த சதா சேவை''
''சமயல்வ வைத்தியநாதர் நிதத சதா சேவை''
''அருனாசலம பிள்ளை நிதத சதா சேவை''
''சித்திர வேலை சிங்காதனம் நித்த சதா சேவை''

என்றெல்லாம் எழுதப்பட்டுள்ளது.

இவ்வோவிய காட்சியில் குறிப்பிடத்தக்க அம்சமாக தியாகராச சுவாமி திருவாரூர் கோயிலினுள் எழுந்தருளுவதும்; இம்மண்டபத்தில் இப்புராண ஓவியத்தை வரைநத ஓவியரான ''சித்திரவேலை சிங்காதனத்தின்'' உருவப்படமும் உள்ளது. இதற்கு முன்பு உள்ள காட்சி ஒன்றில் சிங்காதனத்தின் பெயர் எழுதப்பட்டிருந்தாலும் அவனது உருவம் ஓவியமாக முதன் முதலில் இடம் பெற்றுள்ளது இப்பகுதியில்தான்.

இக்காட்சி திருவிழா துவக்கம் ஆவதை குறிப்பிடும் வண்ணம் அமைந்துள்ளது. தியாகராச சுவாமியை பல்லக்கில் வைத்து தூக்கி வருகிறார்கள். தேவர்கள் பூமாரி பொழிகின்றனர் சூரியன் பிறைச்சந்திரன் போன்றவை வானத்தில் உள்ளன. கோயிலின முன்பு கொடிக்கம்பம் ஒன்று உள்ளது. அதில் ''கொடிக்கம்பம்'' என்று எழுதப்பட்டுள்ளது. குருக்கள் (சிவாச்சாரியார்) ஒருவர் ரிஷபக் கொடி ஒன்றை ஏற்றுகிறார். இதனை அடுத்துள்ள ஓவியம் ஒன்று ''துவஜா ரோகணம்'' என்று குறிப்பிடுகிறது. முசுகுந்தனும், மற்ற மன்னர்களும் கூப்பிய கரங்களுடன் பவனி வரும் தியாகராச சுவாமிக்கு முன்பு வருகின்றனர். பண்டாரம் ஒருவருடைய தலையில் பரிவட்டம் கட்டப்படுகிறது. அருகே ''தம்பிரான் பரிவட்டம் கட்டிக் கொள்கிறது'' என்று எழுதப்பட்டுள்ளது. கொடிக்கம்பத்தின் அருகில ஒருவன் தலையில் நிவேதனம் உள்ள தட்டை சுமந்து வருகிறான். தாரை, கொம்பு, மததளம் போன்றவை முழங்கப்படுகிறது. வான மண்டலத்திலிருந்து தேவர்கள் தியாகராசரை வணங்கி நிற்கின்றனர். கோவில் முழுவதும் விழாக் கோலமாக உள்ளது.

சண்டிகேசுவரர் கோயில் ஒன்றுள்ளது. அதில் ''சண்டிகேசுவரர் சன்னதி'' என்று எழுதப்பட்டுள்ளது. சண்டிகேசுவரர் சிலை

ஒன்று அலங்கரிக்கப்பட்டு பவனியாக சுமந்து வருகின்றனர். முசுகுந்தன் கைகட்டிக்கொண்டு நிற்கிறான் அருகே பண்டாரம், மன்னர்கள் மற்ற மக்கள் அனைவரும் வணங்கி நிற்கின்றனர். அழகிய குடைகளும் தோரணங்களும், தீவட்டிகளும் பிடிக்கப்பட்டு ஊர்வலம் புறப்படுகிறது.

ஐயனார் கோயில் ஒன்று உள்ளது. அதில் ஐயனார் பூரணி, புஷ்கலை என்ற இரு தேவியர்களுடன் அமர்ந்துள்ளார். அதன் அருகே காளிதேவியின் கோயில் ஒன்றுள்ளது. அதில் தேவி எட்டு கரங்களுடன், தரையில் அரக்கன் ஒருவனை மிதித்து சூலத்தால் குத்தும் கோலத்தில் அமர்ந்துள்ளாள். கையில் மணி, கேடயம். திரிசூலம், உடுக்கு, குத்துவாள். நாகம் போன்றவை உள்ளது. கோயிலின் முன்பு பலிபீடமும் கொடிக்கம்பமும் உள்ளது. இக் காட்சியின் கீழே முசுகுந்தனும் மற்ற அடியவர்களும் நிற்கும் கோலம் உள்ளது.

இவை திருவிழாக்கள் நடக்கும்போது எல்லை தெய்வங்களான அய்யன், பிடாரி போன்றவைகளுக்கு பூஜை செய்யப்படுவதை குறிப்பிடும் வண்ணம், விழா தொடங்கும் காட்சியினூடே படைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

சுப்பிரமணிய சுவாமியின் சிலை வள்ளி தெய்வானையுடன் படிசட்டத்தில் அல்ங்கரிக்கப்பட்டு வீதிவலம் வருவதற்கு எடுத்து வரப்படுகிறது அருகே விளையகர் உருவச்சிலையும் எடுத்து வருகிறார்கள். வண்ண வண்ணக்குடைகள், தீவட்டிகள், போன்றவை அடியவர்களால் சுமந்து வரப்படுகிறது. இக் காட்சியின் கீழ் "தியாகராச சுவாமியார் திருவிழாவுக்காக விக்குனேஸ்வரர் சுப்பிரமணிய சுவாமியும், சண்டேசுவரரும் வீதிபிர தட்சனம் வருகிறது இவ் வடம். துசாரோகண முதல் ஏழுநாள் பிள்ளையார் திருவிழா—தியாகராசரே துணை என்று எழுதப் பட்டுள்ளது.

இவ்வாறு இறை உருவங்கள் பவனியாக எடுத்து வரும்போது வீதியில் பெண் ஒருத்தி நாட்டியம் ஆடுகிறாள். முதியவர் ஒருவர் தாளமிடுகிறார். தவில், நாதஸ்வரம் போன்றவை இசைக்கப் படுகிறது எக்காளம் ஊதப்படுகிறது. பறை (தப்பு) அடிக்கப்படு கிறது. இவ்விசை நாட்டியக்காட்சிகளுக்கு முன்பாக ஒருவன் தரையில் வாணம் ஒன்றை கொளுத்துகிறான். அதில் இருந்து வண்ண வண்ணமாக தீப்பொறிகள் கிளம்பி பீச்சிட்டு கொட்டு கிறது. அடுத்து ஒருவன் நீள குச்சிகளில் உள்ள வாணத்தை கொளுத்துகிறான். அவை பீறிட்டு வானத்தில் சென்று வெடிக்

கின்றன. ஒருவன் நீண்ட கம்பை பிடித்துள்ளான். அதன் உச்சியில் சக்கரவாணம் ஒன்று அழகிய தீப்பொறிகளுடன் சுழல்கிறது. இவ்வாறு வண்ண வண்ண வாணங்களும் வெடிகளும் விண்ணதிர முழங்குவதுடன் எங்கும் ஒளிமயமாக உள்ளது.

நடுவே அலங்கரிக்கப்பட்ட படி சட்டத்தில் பைரவருடைய சிலை உள்ளது. இதனை அடியவர்கள் சுமந்து வருகின்றனர் அவருக்கு வலது புறம் சுப்பிரமணிய சுவாமி தேவிகளுடனும், வினாயகப் பெருமானும் படிசட்டங்களில் அலங்கரிக்கப்பட்டு எடுத்து வருகின்றனர். இடது புறம் முறையே மாணிக்கவாசகர், சம்பந்த மூர்த்தி, சுந்தரர், அப்பர், நந்திகேஸ்வரர் (அதிகார நந்தி) சண்டேஸ்வரர் இவர்களுடையசிலைகளும் படிசட்டங்களில்சுமந்து வரப்படுகிறது. இச்சிலைகளுக்கு கீழே மாணிக்கவாசகர், சம்பந்த மூர்த்தி, சுந்தரர், அப்பர், நந்திகேசுவரர், சண்டிகேசுவரர் என்று தனித்தனியே எழுதப்பட்டுள்ளது. பலவகையான குடைகள், தீவட்டிகள், மற்ற விழாவுக்கான சின்னங்களெல்லாம் சுமந்து வரப்படுகின்றன.

விழாக்கோலமாக உள்ள இக்காட்சியின் கீழே ''பைரவர் திருவிழா'' என்றும் ''முதலிய மூவர் திருவிழா'' என்றும் எழுதப் பட்டுள்ளது. முதலிய மூவர் என இங்கு குறிப்பிடுவது சைவ சமயத்தின் மூவர் முதலிகள் எனக்குறிப்பிடப்படும் தேவார ஆசிரியர்களான அப்பர், சுந்தரர், ஞானசம்பந்தர் இவர்களை குறிப்பதாகும்.

இக்காட்சியினை அடுத்து மேற்கு பகுதியில் உள்ள அரங்கத்தில் வடதிசையிலிருந்து இப்புராணக் காட்சி தொடர்கிறது.

நடுவே சப்பரம் போன்று அலங்கரிக்கப்பட்ட பல்லக்கில் ரிஷபவாகனரும் அம்மனும் உள்ளனர். வலதுபுறம் தேவியருடன் முருகன், வினாயகப்பெருமான் இவர்கள் அலங்கரிக்கப்பட்டு எடுத்து வரப்படுகின்றனர். இடதுபுறம் முறையே மணிவாசகர், அதிகார நந்தி, சம்பந்தர், சுந்தரர், அப்பர், சண்டிகேசுவரர் திரு வுருவங்களும் சுமந்து வரப்படுகிறது. வழக்கமான விழாவுக்கான எல்லா அம்சங்களும் உள்ளன. இக்காட்சியின் கீழே''தேவேந்திரன் முதலாகிய முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும், நாற்பத்தொன்னா யிரம் ரிஷிகளுக்கும், முதலிய மூவருக்கும், முசுகுந்தன் முதலாகிய அன்பத்தாறு தேசத்து ராஜாக்களுக்கும்.....பரிகலத்துக்கும் இன் நிலத்தில் சனங்களுக்கும் காட்சி கொடுத்தது இவ்விடம்—காட்சி கொடுத்தவர் திருவிழா'' என்று எழுதப்பட்டுள்ளது.

சந்திரசேகரரும் அம்மனும் அலங்கரிக்கப்பட்ட பல்லக்கில் வைத்து தூக்கி வருகின்றனர். இடதுபுறம் சண்டிகேசுவரரும் பவனிவருகிறார். ரிஷபக்கொடி, பலவகையான குடைகள், தீவட்டிகள் முதலியன தூக்கி வருகின்றனர். குருக்கள் ஒருவர் ஒரு கையால் மணி அடித்துக்கொண்டு தீபாராதனை காண்பிக்கிறார். ஆசனம் ஒன்றில் திரிசூலம் போன்ற ஒன்று வைக்கப்பட்டுள்ளது. அதற்கு கீழ் ''அஸ்திரதேவர்'' என்று எழுதப்பட்டுள்ளது மிக நீண்டுள்ள இக்காட்சியின் ஓர்புறம் ''சந்திரசேகர சுவாமியார்க்கு அனேகம் சாத்துடனே முசுகுந்தன் திருவிழா நடக்கிறது. இவ்வடம் இதற்கு தெற்கு வசந்தன். சித்திரவேலை சிங்காதனம் நித்தம் சதா சேவை'' என்றும், அடுத்து ''தியாகராசரே துணை துஜாரோகணம் முதல் நாள் பூட்டாதி நட்சத்திரத்திலே சந்திரசேகரர் பட்டம் கட்டிக் கொண்டு வீதி பிரதட்சனம் பன்னி வருகிறது இவ்விடம்-இதற்கு தெற்கு வசந்தன்'' என்றும் எழுதப்பட்டுள்ளது.

அஸ்திரதேவருக்கு முன்பு ஒரு பெண் கையை நீட்டிக்கொண்டு நடனம் ஆடுகிறாள் ஆடும் இப் பெண்ணிற்கு கீழே ''கயிகாட்டு முறைகாரி'' என்று எழுதப்பட்டுள்ளது. இதனை அடுத்து தலையில் திண்டு போன்ற ஒன்றை ஒருவர் சமந்து வர அருகே ஒருவர் துண்டு போன்ற துணியை பிடித்து வருகிறார் இதற்கு கீழே ''பூதனிருதும்'' என்று எழுதப்பட்டுள்ளது. இதற்கு முன்பாக வினாயகரையும், முருகப்பெருமானையும் சுமந்து வருகின்றனர். விதம்விதமான வாணவேடிக்கைகள் நடைபெறுகின்றது. இரண்டு பெண்கள் நாட்டியமாடுகின்றனர்.

இந்நாட்டிய நங்கைகளுக்கு கீழே ''நடை நாடகசாலை நடனம் பன்னுகிறது இவ்விடம். இதற்கு தெற்கு வசந்தன்'' என்று விளக்கம் எழுதப்பட்டுளளது. இவர்களுக்கு முன் நட்டுவக்காரன் ஒருவன் கையில் தாளத்துடன் நட்டுவாங்கம் சொல்கிறான். அவனுக்கு பின்பு மூட்டுக்காரன் தாளமிடுகிறான். இவர்களுக்கு பின்னால் புல்லாங்குழல், மகுடி இவைகள் இசைக்கப்படுகிறது. இக்காட்சிக்கு கீழ் ',நட்டுவாமுட்டுக்காரர்'' என்று எழுதப்பட்டுள்ளது.

வீதியில் நடைபெறும் இத்தனை காட்சிகளுக்கும் முன்பாக யானை ஒன்று அலங்கரிக்சப்படடு முன் செல்லுகிறது யானைமேல் அழகிய அம்பாரி ஒன்றுள்ளது. ஒருவன் அங்குசத்தால் யானையை ஓட்ட மற்றொருவன் ரிஷபக்கொடி ஒன்றை யானை மீதிருந்த வண்ணமே பிடித்துள்ளான். யானையின் துதிக்கையில் சாமரம்

ஒன்றுள்ளது. யானையின் அருகில் கொம்பு, தாரை, எக்காளம் பறை முதலியவை இசைக்கப்படுகிறது. அருகிலேயே நாதசுரமும், தவிலும் வாசிக்கப்படுகின்றன. இவ்வெழிலுறு காட்சியின் கீழே ''மேளவாத்தியக்காரர்', என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சந்திரசேகரர் அம்மன் முதலிய திருமேனிகளை பல்லக்கில் வைத்து தூக்கி வருகிறார்கள். எதிரே ஒரு மண்டபம் உள்ளது. இதில் இரு சிவாச்சாரியார்கள் நின்று கொண்டு வீதியில் வரும் சுவாமிக்கு அடுக்கு தீபம் காட்டுகின்றனர். அவருக்கு எதிரே உள்ள மேடையில் இரண்டு விளக்குகளும், பூசை சாமான்களும் உள்ளன. இதற்கு கீழே ''மானேந்தியா பிள்ளை அவர்கள் மண்டபத்துக்கு சந்திரசேகர சுவாமியார் எழுந்தருளி திருக்கண்சாத்து கண்டருளுகிறது இவ்விடம்–இதற்கு தெற்கு சாமந்தனார் முகப்புதியாகராசரேதுணை, தேவி சகாயம்'' என்று காட்சி விளக்கம் தரப்பட்டுள்ளது.

சந்திரசேகரர், அம்மன் திருமேனிகளை வீதிவலமாக அலங்காரமாக எடுத்துவருகின்றனர். எதிரே ஓர் மண்டபம் உள்ளது. மண்டபக் கூரை முக்கோண வடிவில் உள்ளது, இம்மண்டபத்திலிருந்து இருவர் தீபாராதனை காட்டுகின்றனர். மண்டபத்திற்கு கீழ்வீதியில் மூவர் நின்று வணங்குகின்றனர். ஒருவர் நீளமஸ்லின் அங்கியும், தலையில் அழகிய தலைப்பாகையும் அணிந்துள்ளார். இவருக்கு பின் தாடியுடன் ஒருவரும், கையில் குத்துவாள் ஒன்றினை ஏந்திய ஒருவரும், உள்ளனர். இவர்களது பெயர்களாக முறையே 1. ராயசாமந்தனர் 2. ராயசாமந்தனர் வாசல்ப் பிரதானி சித்திரவேலை சிங்காதனம் 3. சே பெருமாள்னா... கண் என்று குறிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் காணப்படும் ராயசாமந்தனார் என்பவர் திருவாரூர் பகுதியின் குறுநில மன்னராகவோ அல்லது அரசுப் பிரதிநிதியாகவோ பதவி வகித்திருக்க வேண்டும். அடுத்து இவ் வெழில் ஓவியங்களை எல்லாம் தீட்டிய சிங்காதனத்தின் ஓவியம் மிகத்தெளிவாகவும் புதுமை மணம் குன்றாமலும் உள்ளது.

சந்திரசேகரர் அம்மன் திருமேனிகளை பவனியாக எடுத்து வருகின்றனர். எதிரே ஓர் கோயில் முகமண்டபத்துடன் உள்ளது அதனுள் சுந்தரமூர்த்தி பரவைநாச்சியார் உருவங்கள் உள்ளன, முகமண்டபத்தில் இரு சிவாச்சாரியார்கள் நின்றுகொண்டு இருக்கின்றனர்.

சந்திரசேகர சுவாமியை ஊர்வலமாக எடுத்து வருகின்றனர். பெரிய மடம் ஒன்றுள்ளது. அதனுள் நடுவே துர்வாச முனிவர் மற்றும் ஏழுமுனிவர்களுடைய உருவங்களும் உள்ளன. அம்மண்டபத்தில் முகப்பில் சிவாச்சாரியார்கள் இருவர் தீபாராதனை காட்டுகின்றனர். இம்மண்டபத்துக்கு வெளியே மூவர் நின்று கொண்டு இருக்கின்றனர். இவர்கள் பெயர்களாக முறையே 1 துர்வாச மகாரிஷியான பெரிய மடத்துப் பண்டாரம், 2 பெரிய மடந்தியாகராசய்ன் 3 கணக்கு பெருமாநயினாப் பிள்ளை அவர்கள் என்று எழுதப்பட்டுள்ளது. மடத்துக்குப் பின்புறம் நான்கு தென்னை மரங்களும், அவற்றில் குரங்குகள், ஓனாய், அணில், கிளி போன்றவை காணப்படுகின்றது.

கோயில் ஒன்று காட்டப்பட்டு கதவு பூட்டப்பட்டுள்ளது. இதில் ''கோயில் கர்பகிரகம்'' ''கதவு'' என்றெல்லாம் எழுதப்பட்டு உள்ளது. ''சாமந்தனார் கதவு திறக்கிறது இவ்விடம்'' என்ற விளக்கக் குறிப்பும் கதவின் கீழ் உள்ளது. கதவின் ஓர்புறம் நீள மஸ்லின் அங்கி அணிந்த ஒருவர் மார்பில் உடைவாளை அணைத்துக் கொண்டு இரண்டு கைகளையும் கூப்பிக் கொண்டு நிற்கிறார். இவருக்கு பின்னே கைகூப்பிய ஒருவர் நிற்கிறார். இவர்கள் இருவருக்கும் கீழே ''சாமந்தனார்'' ''சிங்காதம்'' என்ற பெயர்கள் எழுதப்பட்டுள்ளது. கதவின் எதிர்திசையில் ஒருவன் கதவின் தாழ்களை திறக்கிறான். அவனது ஆடையில் ''வானவன்'' என்று எழுதப்பட்டுள்ளது. கதவை திறக்கும் இவனுக்குப் பின்னே இருவர் ருத்திராட்சமாலை அணிந்து பாடிக்கொண்டு இருக்கின்றனர். இவர்களுக்கு கீழே ''ஓதுவார்'' என்று எழுதப்பட்டு உள்ளது.

தியாகராச சுவாமியை அழகிய பல்லக்கில் வைத்து தூக்கிவர அருகே இரண்டு அம்மன், சண்டிகேசுவரர் போன்ற திருமேனிகளையும் சுமந்து வருகின்றனர். எதிரே வளைவு பல்லக்கு ஒன்றில் ரிஷபவாகனர் திருமேனியும் எடுத்து வருகின்றனர் வானத்தில் இருந்து தேவர்கள் எல்லாம் பூமாரி பொழிகின்றனர். கின்னரர்கள், தும்புரு போன்றவர்கள் யாழ் வாசிக்கின்றனர் தேவர்களில் ''அக்கினி'', ''யமன்'', ''ராசாணியன்'' போன்றவர்களுடைய பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளது. கீழே அடியவர்களின் கூட்டம் மகிழ்ச்சி ஆரவாரத்தால் நெருங்கி காணப்படுகிறது. அடியவர்களின் இடையே ''சிங்காதனம்'', ''சேப்பெருமாள்'', ''பெத்தபசிவன்'' ''உதயமூர்த்தி குருக்கள்'' போன்றவர்களின்

பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளது. ஊர்வலத்திற்கு முன்பு பல வகையான வாணவேடிக்கைகள் நடைபெறுகின்றது. ஓர் மரம் போன்ற வாணம் எரிந்து வண்ண வண்ண சுடர்முத்துக்கள் உதிர்கின்றன. நீளக்கோல் ஒன்றில் சக்கர வாணம் சுழல்கிறது. வானில் வண்ண வாணங்கள் செல்கின்றன. தரையில் ஓர் வட்டத்தில் சக்கரவாணம் சுழல்கிறது அதன் நடுவில் ''னில சக்கர வானம்'' என்று எழுதப்பட்டுள்ளது. தியாகராசர் பவனிவரும் இவ்வெழில் காட்சியை வானத்தில் உள்ள தேவமகளிரும், கீழே பூலோக மகளிரும் கைகூப்பிய வண்ணம் கண்டு களிக்கின்றனர்.

மண்டபம் ஒன்றில் தியாகராசசுவாமி இரத்தின சிங்காதனத்தில் அமர்ந்துள்ளார். அருகே இரண்டு அம்மன்கள் தனியாக உள்ளன. சிவாச்சாரியார் இருவர் தீபம் காட்டுகின்றனர். திருவிளக்குகள் எரிகின்றன. முசுகுந்தனும், மன்னன் ஒருவனும் வணங்குகின்றனர். தீபங்கள் எரிகின்றன. மலர் மாலைகள் அணி செய்கின்றன. மண்டபத்திற்கு மேலே கொடிகளும், குடைகளும் உள்ளன. இம்மண்டபம் தேவாசிரியமண்டபம் போன்றே உள்ளது. இக்காட்சியில் தியாகராசசுவாமி, அம்மன் திருமேனிகள் முழுவதும் அலங்கரிக்கப்பட்டு முகங்கள் மட்டுமே வெளித்தெரிகின்றது. இதே காட்சியின் மறுபகுதி வண்ணங்கள் பூர்த்தியடையாமல், கோடுகள் மட்டும்தான் காணப்படுகிறது.

இந்த ஓவியத்துடன் தொடர் ஓவியக்காட்சி பூர்த்தியடையாமல் உள்ளது. இதுவரை கண்ட இரண்டு ஓவியத் தொடர்களுக்கு முன்பாக கீழ்த்திசையில் ஓர் அரங்கம் முழுவதும் வண்ண ஓவியங்கள் உள்ளது. இப்பகுதியில் சிலகாட்சிகள் தெளிவாகக் காணப்படாவிட்டாலும், இப்புராண காவியத்தின் கிளைக் கதை ஒன்று (முன்கதை) முழுவதுமாக தீட்டப்பெற்றுள்ளது. வடபுறம் இருந்து துவங்கி தென்திசையில் இறுதி எய்துகிறது முசுகுந்தனின் புராணம்.

மகாவிஷ்ணு அடர்ந்தவனம் ஒன்றில் தியானத்தில் அமர்ந்திருக்கிறார். அருகே இலக்குமி தேவியும் இருக்கிறாள். இக்காட்சியின் கீழே ''விஷ்ணு தேவதாரு வனத்திலே புத்திரன் வேண்டி சிவத்தியானமாக இருக்குறது இவ்விடம்'' என எழுதப்பட்டுள்ளது.

விஷ்ணு அமர்ந்திருக்க திருமகள் நின்று வணங்க, மரிலவன் அமர்ந்த நிலையிலேயே சிவலிங்க பூஜை செய்யும் வண்ணம் உள்ளது. கீழே ''மகாவிஷ்ணு தேவதாருவனத்திலே மகாலிங்க அர்சனை பன்னுகுறது இவ்விடம்'' எனக் குறிக்கப்பட்டுள்ளது.

விஷ்ணு அமர்ந்திருக்க, இலக்குமி நின்று வணங்க, இவர்களுக்கு பின்புறம் யாக குண்டத்திலிருந்து வேள்வித்தீயின் சுவாலை தெரிகிறது.

43வது காட்சியிலிருந்து 48 வரை உள்ள 6ஓவியப்பகுதிகளும் முற்றிலுமாக சிதைந்துள்ளமையால் காட்சிபற்றியோ—அல்லது எழுதப்பட்டுள்ள விளக்கங்களோ காணமுடியவில்லை. இருப்பினும் வடமொழி இலக்கியங்களில் காணப்படும் இப்புராணப் பகுதியில் மாலவனின் வேள்வியால் சிவபெருமான் மகிழ்ந்து 'காமன்' திருமாலுக்கு மகனாய்ப் பிறப்பதும். சக்தியை அவமதித்ததால் தேவியின் சாபத்தை திருமால் அடைந்து பின்பு சாப விமோசனமாய், கடுந்தவத்திற்குப் பின்பு சோமாஸ்கந்த திருமேனியை சிவபெருமானிடம் இருந்து பெறுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

வெண்மை வண்ணத்தில் திருபாற்கடல் காட்டப்பட்டுள்ளது. கடலின் மத்தியில் திருமால் ஐநதலை அரவுப்படுக்கையில் பள்ளி கொண்ட வண்ணம் தன் மார்பில் தியாகராச சுவாமியை (சோமாஸ்கந்தமூர்த்தியை) அணைத்த வண்ணம் பூஜிக்கும் காட்சி உள்ளது. பாற்கடலில் நண்டு மீன்கள் எல்லாம் நீந்தும் வண்ணம் மிக இயற்கையாக படைக்கப்பட்டுள்ளது.

தேவேநதிரன் தனது அரியணையில் கொலு வீற்றிருக்கிறான். அவனுக்கு பின்னல் சாமரம் வீசப்படுகிறது. சபையின் முன்பு நட்டுவக்காரன் நட்டுவாங்கம் சொல்ல ஒரு ஆரணங்கு ஆடுகிறாள்.

அடுத்து தேவேந்திரன் யானை மீது அமர்ந்திருக்கிறான். பின்னே கொற்றக் குடையும், சாமரமும் பிடித்து நிற்கின்றனர். யானைக்கு முன்பு தேவர்கள் அணிவகுத்து நிற்கின்றனர்.

ஓர் தேரில் தேவேந்திரன் அமர்ந்து எதிர் இருக்கும் வாரக்கலி அசுரனை அம்பால் தாக்குகிறான். நேர் எதிரே வாரக்கலி அசுரன் தேரில் அமர்ந்து அவனும் தேவேந்திரனை வில்லால் தாக்குகிறான். இடையே தேவர் படையும் அசுரர் படையும் கடுமையாக மோதிக் கொள்கின்றன. இக்கவினுறு காட்சிக்கு கீழே ''தேவேந்திரனும் வாரக்கலியும் இவர்கள் இரண்டு பேரும் யுத்தம் பண்ணுவது இவ்விடம். யுத்தகளம்'' என்று காட்சி விளக்கமும் எழுதப்பட்டு உள்ளது.

அசுரன் (வாரகலி) துரத்த தேவேந்திரன் பயந்து ஓடுகிறான். வாரக்கலி கதை ஒன்றினைச் சுமந்துள்ளான்.

திருமால் திருபாற்கடலில் அரவணைப் பள்ளிகொண்டுள்ளார். அவரது மார்பில் தியாகராசப் பெருமானின் திருமேனி உள்ளது. பின்புறம் இலக்குமி அமர்ந்துள்ளாள். தேவேந்திரன் இரு கரங்களையும் உயர்த்தி திருமாலிடம் அடைக்கலம் புகும் காட்சி மிக அழகாக உள்ளது. இதனை அடுத்து ஓவியத் தொடரின் குறுக்காக '' வடக்குப்பத்தி திருபாற்கடல் – விதற்கு தெற்கு பத்தி சிதம்பரம் ''என்று எழுதப்பட்டுள்ளது.

சிதம்பரத்தில் பொற்சபையில் முயலகனை மிதித்த வண்ணம் நடராஜப்பெருமான் தாண்டவம் புரிகிறார். அருகே சிவகாமி நின்று அருள் புரிகிறாள். வியாக்கிரபாதரும், பதஞ்சலியும் வணங்கி நிற்கின்றனர். அருகே கோவிந்தராஜப்பெருமாள் தன் தேவியுடன் சயனத்தில் இருக்கிறார். தேவேந்திரன் மகுடம் தரிக்காமல் குடுமியுடன், கையில் அக்கமாலை ஏந்தி அமர்ந்த நிலையில் தபசு இருக்கிறான். இவனருகில் '' தேவேந்திரன் '' என்று எழுதப்பட்டுள்ளது. இதற்கு கீழ் ''விஷ்ணு சொன்ன பிரகாரம் தேவேந்திரன் திருப்பால்கடல் வி.....சிதம்பரத்திலே வந்து சபாபதி தரிசனம் பண்ணி விஷ்ணுவை...பன்னுகுறது இவ்விடம்'' ''தெற்கு ராட்சத சங்காரம்''என்று உள்ளது.

திருமால் கருட வாகனத்திலேறி பறந்து வருகிறார்.இதனைக் கண்ட தேவர்கள் கைகூப்பித் தொழுது நிற்கின்றனர். இதனை அடுத்து திருமால் குதிரைகள் பூட்டிய தேரில் நின்று எதிரே தேரில் இருக்கும் வாரகலி அசுரனை வில்லால் தாக்குகிறான். இருவர் தேர்களுக்கும் இடையில் தேவர் படையும் அசுரர் படையும் கடுமையாக மோதிக்கொள்கின்றன. இக்காட்சிக்கு கீழ் ''மகா விஷ்ணுவும், வாரகலி அசுரன் இவர்கள் இரண்டு பேரும் யுத்தம் பண்ணுகுறது இவ்விடம்'' என்று எழுதப்பட்டுள்ளது. கோரமான இப்போர்க்காட்சியின் ஓர் பகுதியில் திருமாலின் அம்புகள் சரமாரி யாக அசுரனின் தேரை தாக்குகின்றன. மாலவனின் அம்புகளின் நுனி பிறை போன்றுள்ளது. இது தாக்கும்போது தேரின் ஒவ்வொரு பகுதியும் தேரினின்று கழன்று வீழ்கின்றது. தேர் முழுவதும் துண்டு துண்டாக விழ்ந்த பின்பு, குதிரையும் அம்பால் தாக்கப்பட்டு தரையில் இறந்து விழும் காட்சி மிக தத்ரூபமாக

உள்ளது. இதற்கு கிழ் ''வாரகலியுட தேர் சாமியுட பானத்தினாலே தெறிச்சு கிடக்கிறது இவ்விடம்'' என்று எழுதப்பட்டுள்ளது.

கருட பகவானின் தோளின் மீது அமர்ந்துள்ள திருமால் தனது சக்கராயுதத்தை ஏவுகிறார். சக்கராயுதம் வாரகலி அசுரனுடைய கை, கால், தலை இவைகளை துண்டு துண்டாக வீழ்த்துகிறது. சக்கராயுதத்தின் தாக்குதல் பல நிலைகளில் காட்டப்பட்டுள்ளது. இக்காட்சியின் கிழ ''வாரகலி அசுரன் பட்டுகிடங்கிறது'' என்று எழுதப்பட்டுள்ளது.

இவ்வாறு சக்ராயுதத்தின் கோரயுத்தம் நடக்கும் போது தேவர்கள் பயந்து கருடனின் பின்புறம் நிற்கின்றனர். இக்காட்சியின் கிழ் ''வாரகலி அசுரன்கதை எடுத்து யுத்தத்திற் வந்தவுடனே தேவர்கள் பயந்து சாமி பின்னே நிற்குறது இவ்விடம்'' என்று குறிபபிடப்பட்டுள்ளது.

கருடன் மேல் திருமால் அமர்ந்திருக்க வானத்திலிருந்து அன்னவாஹனும், இறச்கைகளும் கொண்ட தேவ உருவங்கள் பூமாரி பொழிய, மாலவனுக்கு முன்பு தேவலோகத்து ரம்பை நாட்டிய மாட நட்டுவனார் நட்டுவமும, முட்டுக்காரன் தாளமிடவும் அமைந்த ஆனந்தக் காட்சி திட்டப்பெற்றுள்ளது.

சிதம்பரத்திலே நடராசரும், சிவகாமி அம்மையும் அருள் பாலிக்க இந்திரன் மகுடம் இல்லாமல் குடுமியுடன் தரையில் அமர்ந்த நிலையில் கையில் அக்கமாலை (ருத்திராட்சமாலை) கொண்டு பூஜிக்கும் காட்சி உள்ளது.

நின்ற கோலத்தில் உள்ள திருமாலை இந்திரன் காலில் விழுந்து வணங்குகின்றான். கருடன் அருகில் நிற்கிறான். இக்காட்சியின் கிழ் ''விஷ்ணு சிதம்பரத்துக்கு தேவேத்திரனே கொண்டு வந்து சாஷ்டாங்கமாய் இருக்கிறது இவ்விடம்'' என்றுள்ளது. இதனை அடுதது திருமாலை கருடன சுமந்துவர அவர் பின்பு தேவேந்திரன் செல்ல இவர்கள் திருபாற்கடல் நோக்கி செல்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

வெண்மையான பின்னணி உள்ள இவ்வோவியத்தில் திருபாற் கடல் காட்டப்பட்டுள்ளது. கடல் முழுவதும் மீன்கள் நீந்துகின்றன. நடுவில் ஐந்தலை அரவின் மேல் விஷ்ணு அமர்ந்துள்ளார். அவர் பின்பு கருடன் கைகூப்பிய நிலையில் நிற்கிறான் இந்திரன்

விஷ்ணுவின் கால்களில் வீழ்ந்து, வணங்கி எழுந்து பின்பு திருமாலிடம் இருந்து தியாகராசசுவாமியைப் பெற்று அதனை மார்பில் அணைத்த வண்ணம் செல்கிறான். (தேவேந்திரனின் இரு நிலைகள் காட்டப்பட்டுள்ளது) இதற்கு கீழ் ''இந்த மூர்த்தியை வைத்து பூசை பண்ணினால் சத்ருசெயம் பண்ணலாம் என்று தேவேந்திரன் சந்தோசத்தை அடைந்து நடக்குறது இவ்விடம்' என்று எழுதப் பட்டுள்ளது.

திருமாலிடம் இருந்து தேவேந்திரன் சோமாஸ்கந்தமூர்த்தியை பெற்றுக் கொள்கிறுன். பின்பு குதிரை பூட்டிய தேர் ஒன்றில் தியாகராச சுவாமியை வைத்து தனது மனைவியுடன் வணங்கிக் கொண்டு வருகிறுன். தேரின் மேல் திரிசூலக் கொடி பறக்கிறது. தேருக்கு முன்பு வாளேந்திய தேவர்கள் அணிவகுத்து நிற்கின்றனர். நட்டுவனார் நட்டுவம் சொல்ல, நான்கு ஆடல் அரசிகள் ஆடுகின்றனர். அவர்களுக்கு கீழே ''மேனகை'' ''திலோத்தமை'' ''ஊர்வசி'' ''அரம்பை'' என்று எழுதப் பட்டுள்ளது, நட்டுவனார்க்கு பின்புறம் ''புல்லாங்குழல்காரன்'' எனப் பெயர் குறிக்கப்பட்டுள்ள ஒருவன் குழலிசைக்கிறுன். முட்டுக் காரர்கள் பலவகை கருவிகளில் தாளமிடுகின்றனர். இவர்களுக்கு முன்னால் கொடி, மயிர்பீலி, இவைகளை எடுத்துச் செல்கின்றனர். கொம்பு, தாரை, எக்காளம், நாதசுரம், தவில். குடமுழா (பஞ்சமுகவாத்தியம்)போன்றவை இசைக்கப்படுகிறது. (குடமுழா எனப்படும் பஞ்சமுகவாத்தியம் ஆரூர் திருக்கோயிலின் சிறப்புத் தாளக் கருவியாகும்)

தியாகராசசுவாமியை இரத்தின சிம்மாசனத்தில் வைத்து தேவேந்திரன் பூசை செய்கிறான். எதிரே ஓர் ஆணும் பெண்ணும் நின்று வணங்குகின்றனர். மரங்கள் அருகில் உள்ளன. அதில் ஓர் மரத்தில் ''மந்தாரை'' என்று எழுதப்பட்டுள்ளது. இக்காட்சியின் கீழ் ''மகாவிஷ்னு பூசை பன்னின சோமாஸ்கந்தமூர்த்தியை தேவேந்திரன் வாங்கிக் கொண்டு தம்முடைய தேவலோகத்திற்கு வந்து தேவ சிங்காதனத்திலே வைத்து பூசைபண்ணுகிறது இவ்விடம்'' என்று எழுதப்பட்டுள்ளது. இக்காட்சியுடன் தேவாசிரிய மண்டபத்து கூரையில் வரையப்பட்டுள்ள முசுகுந்தன் புராணம் நிறைவடைகிறது.

மனு புராண ஓவியம்

மனுநீதிச் சோழனின் வரலாற்றோடு இணைந்த பிற்கால புராணக் கதைகள் பலவும் வண்ண ஓவியமாக தேவாசிரிய


மண்டபத்து வட புறச் சுவரில் தீட்டப்பட்டுள்ளது. இக் காட்சித் தொகுதியும் மேலே குறிப்பிட்டுள்ள ''முசுகுந்த புராண'' ஓவியக் காட்சி படைக்கப்பட்டபோதே தோற்றுவிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதை தெளிவாக உணரலாம். ஆனால் இக்காட்சித் தொகுதி சுவரில் உள்ளதாலும் இயற்கையின் சிற்றங்களுக்கு உட்பட்டதாலும் மிகவும் தெளிவில்லாமல் உள்ளது. மிக மங்கிய நிலையில் ஓவியங்கள் சிதைந்து விட்டன.

அரநெறி ஓவியங்கள்

தேவாசிரிய மண்டபத்தில் ஓவியன் சிங்காதனத்தையும், அவனது படைப்புக்களையும் கண்டு மகிழ்ந்தீர்கள். அடுத்து இதே திருக்கோயிலிலுள்ள பிரிதோர் ஓவியக்கூடத்தில் ஓவியன் சுவம் (சிவம்) ஓதுவாரையும் அவரது படைப்புக்களையும் காண்போம். ஆரூர் திருக்கோயிலின் வரலாற்றுப் பெருமைகளுக்குக் காரணமாய் திகழ்வதுள் அரநெறியாம் அசலேசம் எனும் திருக்கோயில் மிக முக்கிய இடம் பெறுகிறது என்பதை முன்னரே கண்டோம். இத் திருக்கோயிலின் முகமண்டபத்து விதானம், சுவர்கள் மற்றும் நடராஜர் சபை அமைந்துள்ள உள்மண்டபத்து (அர்த்தமண்டபம்) விதானம், தென்புறவாசல் விதானம் ஆகியவற்றில் எழில்மிகு வண்ண ஓவியங்கள் இடம் பெற்றுள்ளன.

அரநெறியாம் திருக்கோயிலினுள் இடம் பெற்றுத் திகழும் ஓவியத்தொகுதிகளை மூன்று நிலைகளாகப் பிரிக்கலாம். துவக்க கால தஞ்சை மராத்தியபாணி ஓவியங்கள், 19–ஆம் நூற்றாண்டு ஆரம்ப கால ஓவியங்கள், சற்று பிற்கால ஓவியங்கள் என்பவையே இவை. இவற்றுள் முதல் பகுதி ஓவியங்கள் முன் மண்டபத்து சுவர்களில் உள்ளன. இவற்றுள் சில தெளிவாகவும், சில பொலி விழந்தும் உள்ளன.

மண்டபத்துள் நுழைந்ததும் வடமேற்கிலிருந்து தொடர்கிறது இவ்வோவியத்தொகுதி. முதலாவதாக கணபதியார் அமர்ந்திருக்க அவர் முன்பு நீண்ட வளைந்த குல்லாய்கள் அணிந்த கோமாளிகள் இருவர் நிற்கின்றனர். அடுத்த காட்சியில் விநாயகர் அமர்ந்திருக்க எதிரே நிற்கும் திருமாலுக்குச் சக்கரம் அளிக்கும் காட்சி தீட்டப் பெற்றுள்ளது. இதனைத் தொடர்ந்துள்ள ஓவியத்தில் பிளந்த லிங்கத்தின் மத்தியிலிருந்து வெளிவரும் சிவபெருமான் திருமாலுக்கு சக்கரம் அளிக்கும் காட்சி உள்ளது.



ஓவியத்தில் பத்திரக்காளும், பிள்ளையாரும்



ஓவியத்தில் சரபோஜி மன்னர்

இதனை அடுத்து வடபுறச்சுவரின் முதல் ஓவியமாகத்திகழ்வது சரப மூர்த்தியின் வண்ணக்காட்சியாகும், நான்முகனும், திருமாலும்,வணங்கி நிற்க கிம்ம உடலும்,சிறகுகளும்,எட்டுக்கரங் களும் பெற்றுத் திகழும் சரப மூர்த்தியின் வடிவும், அவருக்கு மேலாக வானத்திலிருந்து பெண்ணொருத்தி மலர்தூவும்காட்சியும் அற்புதமான ஒன்று. இக்காட்சி சற்று மங்கிய நிலையில் உள்ளது.

இதே வடபுறச்சுவரில் அடுத்து தொடர்வது கண்ணப்பரின் கதையாகும். கண்ணிலிருந்து குருதி வழியும் சிவலிங்கத்தை தன் கால்களால் உதைத்த வண்ணம் தன் கண்களைப் பிடுங்கும் கண்ணப்பரின் நிலையும், அருகே சிவாச்சாரியார் ஒருவர் உருவமும் சிதைவுகளுக்கு இடையேயும் செப்பமிகுந்த காட்சியாய் திகழ்கிறது இதனைத் தொடர்ந்து சிவபெருமான் அழகியதொரு மண்டபத் தின் மத்தியில் சுகாசனத்தில் அமர்ந்திருக்க அதனை அடுத்து ஒரு மரமும், அருகே மற்றொரு மண்டபத்தின் மத்தியில் தேவியும் அமர்ந்துள்ள காட்சி உள்ளது.

இக்காட்சியினைத் தொடர்ந்து கனக சிம்மாசனத்தின் மத்தியில் தியாகராஜர் காட்சி நல்க ஒருபுறம் விஷ்ணு அமர்ந்த நிலையிலும் மறுபுறம் இந்திரனும் வணங்கி நிற்கின்றனர், அடுத்த காட்சியாக திருவாசியின் மத்தியில் நடராஜப்பெருமான் ஆடவல்லானாக காட்சி அளிக்க அருகே பதஞ்சலியும், வியாக்கிரபாதரும் வணங்கி நிற்கும் அற்புதக் கோலம் இடம் பெற்றுள்ளது. அதனை அடுத்து உள்ள ஓவியப்பகுதி முற்றிலுமாக சிதைந்து விட்டது. வடபுறச் சுவரின் கிழக்கு மூலையில் முருகப்பெருமான் மயில் வாகனத்துடன் வள்ளி தேவசேனா உடனிருக்க காட்சி நல்குகிறார். அர்த்த மண்டப வாயிலின் தோரணமாக கஜலெட்சுமியும், சாமரம் ஏந்தும் பெண்களும், விளக்கேந்தும் பெண்களும், சிம்மங்களும், அன்னங்களும், அலங்கரிக்கின்றன. இவ்வோவியப் பகுதியின் ஓவியத்தன்மை இதுவரை நாம் கண்ட ஓவிய நயத்திலிருந்து சற்று மாறுபட்டு இம்மண்டபத்தின் விதானத்து ஓவியங்களை ஒத்துள்ளது.

தென்புறம் பிட்சாடனர் ஓவியம் ஒன்றும். அஷ்டலெட்சுமிகள் ஓவியமும் உள்ளது. இதில் இரண்டாவது ஓவியம் முற்றுப்பெறா நிலையில் உள்ளது. இவ்விரண்டு ஓவியங்களும் விதானத்து ஓவியங்களை ஒத்தே உள்ளன.

கீழ்ப்புறச்சுவரில் இலக்குமி, சரஸ்வதி இருவரும் நிற்க இடையே மகிடனுடன் போர் புரியும் மகிஷாசுரமர்த்தினியின் எழிலோவியம் இடம் பெற்றுள்ளது. தேவி எட்டுக்கரங்களுடன் வாளேந்திப் போர் செய்கிறாள். இதனைத் தொடர்ந்து தென்புறச் சுவரில் மார்க்கண்டேயன் சிவலிங்கத்தைத் தழுவி நிற்க, இயமன் எருமை மீதமர்ந்து பாசக்கயிறை வீச, கதை ஏந்திய யமகிங்கரர் இருவர் பின் தொடரும் காட்சியும், அதே ஓவியத்தின் இரண்டாம் நிலையாக பிளவுபட்ட லிங்கத்திலிருந்து சிவபெருமான் வெளிப்போந்து இயமனை சம்ஹாரம் செய்தலும், இயமன் கீழே வீழ்ந்துகிடத்தலும் விண்ணவர் பூமாரி பொழிதலும் மிகச் சிறப்பாக இடம் பெற்று உள்ளன. ஒரே காட்சியில் இரண்டுவித நிலைகளைக் காட்டும் (முழுக்கதையை சித்தரிக்கும்) ஓவியச்சிறப்பு 17 மற்றும் 18–ஆம் நூற்றாண்டு ஓவியங்களில் சிறப்பிடம் பெறுகின்றது.

சுவரோவியங்களை சுவைத்த வண்ணம் முன் மண்டபத்து விதானத்தை நோக்குங்கள். எங்கு நோக்கிலும் வண்ணக்கலவைகள் இவைதான் ஆரூர் திருக்கோயிலில் ஓதுவாராக (தேவாரம் பாடுபவர்) பணிபுரிந்த சிவம் என்பவரின் திருக்கரங்கள் புரிந்த ஜாலங்கள். இம்மண்டபத்து தென் கிழக்கு மூலையில் ஓவியங்களுக்கிடையே சில தமிழ் எழுத்துக்கள் எழுதப்பெற்றுள்ளன. கூர்ந்து கவனித்தால் ''சித்திரம் எழுதியது சுவம் ஓதுவார் சதா சேவை'' என்ற வரிகள் புலப்படும். ஆகா! எவ்வளவு அற்புதமான சக்கரங்கள், தாமரை வடிவங்கள், அன்னை பராசக்தி உரைந்திடும் ஸ்ரீ சக்கரம் போன்ற அற்புதப் படைப்புக்கள் தேவாரம் பாடும் ஓதுவார் ஒருவரால் படைக்கப்பெற்ற பாங்கை நோக்கும் போது நமது தமிழகத்தின் நுண்கலைகள் போற்றப்பட்ட பாங்கை உணர முடிகிறது. சுவம் ஓதுவாரின் படைப்புகளுள் மிகச்சிறந்த படைப்பாக மிளிர்வது இம்மண்டபத்தின் மையப்பகுதியில் உள்ள ஒரு சதுரத்தில் அடங்கியுள்ள ஆயிரத்தெட்டு சிவலிங்க ஓவியமாகும். இச்சதுரப் பகுதியை இரண்டு நீண்ட தாமரை மாலைத்தொகுப்பு நான்கு மூலைப்பகுதிகளையும், மையப்பகுதியையும் இணைக்கின்றது. மீதம் உள்ள பகுதி 1008 சதுரங்களாக வகுக்கப்பெற்று அதனுள் ஒவ்வொரு சிவலிங்கங்கள் காட்டப்பெற்றுள்ளது. இவ்வோவியனின் கற்பனையும், கணித ஆற்றலும் போற்றுதற்குரியனவையாகும்.

இனி இத்திருக்கோயிலின் முக மண்டபம் கடந்து உள் மண்டபம் செல்வோம். விதானம் முழுவதும் வண்ணக்கலவைகள்

இடை இடையே சில திரந்த எழுத்துக்கள், ஒவ்வொரு ஓவியப் பகுதியும் ஹோமகுண்டங்கள் வடிவங்கள், இடம்பெற வேண்டிய இடங்கள், ஹோம கலசங்களும், பொருள்களும் இடம்பெற வேண்டிய இடங்கள், ஆயிரத்தெட்டு சங்காபிஷேகம் செய்வதற் குரிய ஹோம குண்டங்கள், சங்குகள் வைக்க வேண்டிய விதி முறைகள் அத்தனையும் ஓவியமாக மிளிர்கிறது. தலையை உயர்த்திப் பார்த்தால் ஒரு யாகசாலையில் இருப்பது போன்ற தோற்றம், அது கடந்து அத்துடன் இணைந்துள்ள தென்புற வாயில் மண்டபப் பகுதியிலும் இத்தொடர் ஓவியங்கள் இடம் பெற்றுள்ளன. ஹோமத்திற்கு உபயோகிக்கும் ஸ்ருவம், சிருக் போன்றவற்றின் வடிவமைப்பு போன்றவையும் வண்ண ஓவியமாக மிளிர்கிறது. இதே தொடரில் சில பசுக்களும், புலிகளும் இணைந்து நிற்கும் காட்சி இடம் பெற்றுள்ளது. இது சோழர்கால கல் வெட்டுப் பாடல்களில் குறிக்கப்பெறும் பசுவும் புலியும் இணைந்து நிற்கும் சோழநாட்டைத்தான் நினைவுறுத்துகின்றது. இதனை வரைந்த ஓவியரின் பெயர் அறிய முடியவில்லையாயினும் இது யாக முறைகளையும், ஹோம குண்டங்கள் அமைப்பு முறையும் அறிந்த வல்லுநர்களின் படைப்பு என்பதில் ஐயமில்லை.

தட்டாஞ்சுற்றி மண்டபத்து ஓவியங்கள்

அரநெறியாம் திருக்கோயிலுக்கும் அனுக்கன் திருக்கோபுரம் மற்றும் ராஜநாராயணன் திருமண்டபத்திற்கும் அருகமைந்த மண்டபமே தட்டாஞ்சுற்றி மண்டபமாகும். இதன் விதானமும் அற்புத ஓவியங்களைப் பெற்று சிறப்பிடம் வகிக்கின்றது. இங்கு காணப்படும் ஓவியங்கள் அனைத்தும் சுவம் ஒதுவாரின் ஓவியங்களை ஒத்தே உள்ளன. பெரிய பெரிய வட்ட வடிவ அலங்காரங்களும், தாமரை இதழ் ஓவியங்களும் உள்ளன. இவற்றின் இடையே மிகப் பெரிய சதுரத்துள் பல்வேறு வகையான யந்திரங்கள், மந்திர பீஜங்கள், சட்டைநாதர் மற்றும் பைரவர் வடிவங்களும், அவர்களுக்குரிய யந்திரங்களும் இடம் பெற்று உள்ளன. மந்திர சாஸ்திர அடிப்படையில் இடம் பெற்றுள்ள இவ்வோவியம் மிகச் சிறந்த ஒரு படைப்பாகும்.

நீலோத்பலாம்பாள் முன் மண்டபம், சபாபதி மண்டபம் மற்றும் தியாகர் திருக்கோயிலின் தென்புற மண்டபம் போன்றவை இந்நூற்றாண்டு ஓவியர்களின் படைப்புகளாஎ சிறப்பிடம் வகிக்கின்றது.

செப்பேட்டு ஓவியங்கள்

இத் திருக்கோயில் பாதுகாப்பில் உள்ள சில செப்பேடுகளிலும், மற்றும் இத் திருக்கோயிலுக்கென வழங்கப்பட்டு தற்போது வெளியிடங்களில் உள்ள செப்பேடுகளிலும் சில அரிய ஓவியக் காட்சிகள் காணப்படுகின்றன. இத்தகைய ஓவியச் செப்பேடுகள் வரிசையில் தஞ்சை மராட்டிய மன்னரான சாஹஜி (சகசி) யின் காலத்துச் செப்பேடு ஒன்று சென்னை அருங்காட்சியகத்தில் உள்ளது. இது ஆரூர் திருக்கோயிலுக்கென வழங்கப்பட்டதாகும். இதில் தியாகப்பெருமானின் திருமேனி (சோமாஸ்கந்தராக) இரத்தின சிம்மாசனத்தில் வடிக்கப்பட்டு அருகே வினாயகர், முருகன், பதஞ்சலி, வியாக்ரபாதர் திருவுருவங்களும் உள்ளன. இத்திருவுருவங்களுக்கு கீழே மன்னன் சகஜி, அவனது சகோதரர்களான சரபோஜி, துளஜாஜி போன்றவர்களும், அருணசலப் பண்டாரம் என்பவரின் உருவமும் பொரிக்கப்பட்டு உள்ளது.

இதேபோன்று இராமநாதபுரம் சேதுபதி மன்னர்கள் அளித்த செப்பேடுகளிலும், மற்ற சில செப்பேடுகளிலும் தியாகப் பெருமானின திருவுருவம் தீட்டப்பட்டே சாசனம் வடிக்கப் பட்டுள்ளது. ஆரூர் திருக்கோயிலில் உள்ள செப்பேடுகளில், ஒன்றில் தில்லை திருக்கோயிலின் காட்சி வடிக்கப்பட்டுள்ளது. இதில் நடராஜப் பெருமான் சிவகாமியம்மை, தில்லை கோவிந்தராஜப் பெருமான் மற்றும் முதலாம் சரபோஜி மன்னர் இவர்களின் திருவுருவங்களும் தீட்டப்பட்டுள்ளது. இதனை வடித்த சிற்ப ஆசாரி திருவாரூர் செல்லப்பெருமாள் ஆசாரி என்பது குறிப்பிடத் தக்க ஒன்று. இவை பற்றிய செய்திகள் ''செப்பேடுகள்'' என்ற தலைப்பின் கீழ் விரிவாகக் காணலாம்.

ஆரூர் ஓவியர்கள்

இதுவரை நாம் கண்ட இராயசாமந்தனார் வாசல் பிரதானி சித்தர வேலை சிங்காதனம், ஒதுவார்சிவம், சிற்ப ஆசாரிதிருவாரூர் செல்லபெருமாள் என்ற மிகச் சிறந்த ஆரூர் ஓவியர்கள் வரிசையில் திருவாரூர் வண்ணக்காரன் நடேசன் என்பவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும். இருபதாம் நூற்றாண்டின் தொடக்ககாலத்திலும் வாழ்ந்தவர்இவர் படைத்த ஓவியப்படைப்புகள் திருநல்லம் எனும் கோனேரிராஜபுரத்தில்

இன்றும் எழில் குன்றாமல் திகழ்கிறது. இவரது படைப்புக்கள் ஆரூர் திருக்கோயிலிலும், திருச்சிராப்பள்ளி தாயுமானவர் திருக்கோயிலிலும் இடம் பெற்றிருந்தன. ஆனால் பிற்காலத்தில் இவரது ஓவியப் படைப்புக்களின்மேல் சுண்ணாம்பு பூசி வேறு ஓவியங்களை தீட்டிவிட்டனர். இது கலை உலகின் பேரிழப்பு, வண்ணக்கூரன் ஆரூர் நடேசனின் கலைப் படைப்புகளை நாம் திருவாரூர் கோயிலில் இழந்துவிட்டோம். ஓதுவாராக, பிரதானி யாக, சிற்ப ஆசாரியாக மற்றும் வேதம், மந்திரம், யந்த்ரம் போன்ற சாஸ்திரங்களில் வல்லுநராகத் திகழ்ந்தவர்களெல்லாம் தலைசிறந்த ஓவியர்களாகத் திகழ்ந்து அரிய கலைப்படைப்புகளை நம்மிடம் விட்டுச் சென்றுள்ளனர். இனியாவது இவற்றை நாம் காப்பாற்ற முயலவேண்டும். புதுமை செய்வதாகச் சொல்லி கலைச் செல்வங்களை இழக்க வேண்டாம். தெய்வத்திற்காக அவர்கள் சமர்பித்த அரியஇக்கலையை அழியாமல் போற்றுதலே ஆரூரனுக்கு நாம் செய்யும் உண்மைத் தொண்டாகும்.

ஆரூர் தந்த இசைக்கருவிகள்

ஆரூர் தந்த இசைக் கருவிகள்

ஆடல், பாடல் இவையெல்லாம் எப்போதுமே ஒலிக்கும் ஆரூரில் இசையெனும் பேராறு எப்போதுமே வற்றவில்லை. பழமையின் தொடர்புகள் தான் பிற்காலத்தில் கர்நாடக இசையின் மும்மூர்த்திகளையேஆரூரில் தோற்றுவித்தது.இசையால் அழியாப் புகழ் எய்திய ஆரூரில் சில சிறப்பு இசைக்கருவிகள் இன்றும்உள்ளன. அவைபற்றி விரிவாகக் காண்போம்.

பாரி நாயனம்

சிறப்புமிகு இந்த நாதசுரக்கருவி ஆரூர் திருக்கோயில் அன்றி வேறெங்கும் கிடையாது. இந்த நாதஸ்வரத்தின் சீவுவாளி (ஊதும் பகுதி) மூன்றங்குலத்திற்கு மேலானதாக இருக்கும். இதில் ஆரூர் இறைவன் பவனி வரும் போது இன்ன இன்ன வீதிகளில் குறிப்பிட்டராகங்கள் தான் வாசிக்கலாம் எனக் கடுமையான கட்டுப்பாடு உண்டு. இவ்வரிய இசைக்கருவியால் தேவாரப் பண்களும், தீஷிதர் கிருதிகளும் வாசிக்கப்பெறுகின்றது. இன்றும் அழியாமல் இவ்விசைக் கருவி வீதிவிடங்கப்பெருமானின் பூசனை வேளைகளில் இசைக்கப்படுகிறது.

நாதசுரம் எனும் நீண்ட இசைக்கருவியிலிருந்து பாரிநாயனம் சற்று வேறுபட்டது. இதனுடைய ஒலி அமைப்பும் நாதசுர ஒலி யிலிருந்து சற்று மாற்றம் பெற்றிருக்கும். நாதசுரம் பற்றி ஆராய்ந்த வல்லுநர்கள்,சோழர்கள் கால சிற்பங்களில் இன்றைய நாதசுர வடிவம் (நீண்ட குழல்) காணப்பெறாததால், இக்குழல் வாத்தியம் 200 - 300 ஆண்டுகளுக்குள்தான் தோன்றியிருக்க வேண்டும் எனக் கருதுகின்றனர். மேலும் நூறு ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற சதிர் கச்சேரிகளிலும் (நாட்டியங்களுக்கு), திருக்கூத்துகளிலும் குறுகிய குழல் வாத்தியம் ஒன்றினை பயன் படுத்தினர். அதனை''முகவீணை'' என்று குறிப்பிடுவர்.சோழர் கால சிற்பங்களில் காட்டப்பெறும் குறுங்குழல் முகவீணையாக இருக்கலாம் எனக்கருதுகின்றனர்.ஆனால் நமது ஆரூரில்காணப் பெறும் பாரி நாயனம் முகவீணையை விடப் பெரிதாகவும்நாத சுரத்தைவிட சிறியதாகவும் திகழும் தன்மையாலும், ஏறத்தாழ

சிற்பங்களில் காட்டப்பெறும் அளவுத்தன்மை இக்கருவிக்கே ஏற்புடையதாக அமைவதாலும், உயிரிய இசைநயம் வாய்க்கப்பெற்றுத் திகழ்வதாலும், சோழர் காலத்து சிறப்பு இசைக்கருவிகள் திருவாரூரில் அப்படியே போற்றப்பெறுவதாலும், (உ-ம் குடமுழா எனும் பஞ்சமுக வாத்தியம்) நாதசுரத்திற்கு முன்பு பண்டு தொட்டு குழலிசைக்கு ஏற்புடைய இசைக்கருவியாய் தமிழன் போற்றியது ''பாரி நாயனம்'' என்ற இவ்விசைக்கருவியே என்பதில் ஐயமில்லை இன்று இவ்விசை மரபை மறக்காமல் போற்றி வருபவர் ஆரூர் செல்வகணபதி என்பவரே. பண்டு தொட்டு ஆரூரின் பெருமைக்கு மேலும் பெருமை சேர்க்கும் இம்மரபினரின் பணி என்றென்றும் தொடர்ந்து தமிழகத்தின் பெருமை சிறக்க வாழ்த்துவோம்.

குடமுழா (பஞ்சமுக வாத்தியம்)

''தாட உடுக்கையன் தாமரைப்பூஞ் சேவடியன்
கோடலா வேடத்தன் கொண்டதோர் வினையினான்
ஆடரவக் கிண் கிணிக்கா லன்னனோர் சேடனை
ஆடேந்திக் கூத்தனை நான்கண்டது ஆரூரே''

— என அப்பர் அடிகள், காலில் கிண் கிணி சதங்கைகள் ஒலிக்க ஆரூர் இறைவன் ஆடியதைக் கண்டதாகக் குறிப்பிடுகிறார்.

அந்த ஆடுந்தீக் கூத்தனின் ஆடலுக்கு ஏற்ப ஒலிக்கப்படும் தாளங்களையும் பிறிதொரு தேவாரப்பாடலில் விவரிக்கிறார்.

''விட்டிசைப் பன கொக்கரை கொடு
கொட்டி தத்தளகம்
கொட்டி பாடுமித் துந்துபி யொடு
குடமுழா நீர் மகிழ்வீர்''

— என்று தாளம் கேட்டதினால் ஏற்பட்ட கூலலகையை விவரிக்கின்றார். மேலும்,

''கூடுமே குட முழவம் வீணை தாளங்
குறுநடை சிறுபூதம் முழக்க மாக்கூத்தாடுமே''

எனவும் கூறுகின்றார்.

குடமுழவத்தின் இசையில் தாளத்தில் உவந்து ஆடும் ஆரூர் கூத்தனின் முன்பு இன்றும் குடமுழவம் இசைக்கப்படுகிறது.

இதனை பஞ்ச முகவாத்தியம் எனக் கூறுவர். அடியில் பெரிய பானை போன்றும், அதற்கு மேல்புறம் ஐந்து வாய்களும் உள்ள வண்ணம் இக் கருவி அமைந்திருக்கும். இத்தகைய சிறப்புகள் பெற்ற குடமுழா எனும் பஞ்சமுக வாத்தியம்' இன்று திருவாரூர் மற்றும் திருத்துறைப்பூண்டி திருக்கோயில்களில் மட்டுமே உள்ளது. இவ்விரு திருக்கோயில் குடமுழவங்களை இயக்குபவர் திருவாரூர் திருக்கோயில் முட்டுக்காரர் திரு. சங்கரமூர்த்தி என்பவரே. உலகளவில் இன்று இக்கருவியை இயக்கும் ஒரே கலைஞர் இவரே. திருவாரூர் திருக்கோயிலோடு ஒன்றி பல நூற்றாண்டுகளாகத் திகழும் இப்பஞ்சமுக வாத்தியத்தின் வரலாற்றுப் பெருமைகள் பலவாகும். இது ஒரே வாயுடன் திகழ்ந்த தோற்கருவியின் வளர்ச்சியின் உச்சகட்ட படைப்பாகும். இது தமிழகத்தில் அதிலும் சிறப்பாக சோழநாடு கண்ட,சிறப்பு இசைக் கருவியாகும். இதன் வளர்ச்சி நிலைகளையும் தனிச் சிறப்புகளையும், இந்நூலாசிரியர் மேற்கண்ட குடமுழவு பற்றிய ஆன் நூலின் சுருக்கத்தை இனிக் காண்போம்.

இலக்கியங்களில் குடமுழவம்

சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மதுரைக் காஞ்சி, மலைபடுகடாம், அகநானூறு, ஐங்குறுநூறு, கலித் தொகை, குறுந்தொகை, பதிற்றுப்பத்து போன்ற சங்க இலக்கியங்களிலும், சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை, தேவாரப் பதிகங்கள், சூளாமணி, சீவகசிந்தாமணி, ஆழ்வாரின் பாசுரங்கள், கல்லாடம், திருப்புகழ் போன்ற இலக்கியங்களிலும் குடமுழா பற்றிய பல குறிப்புகள் காணப் பெறுகின்றன.

சிற்பங்களில்...

சங்க் இலக்கியங்களும், பிற்கால இலக்கியங்களும் குடமுழ்வம் பற்றிப் பேசும் போதெல்லாம் அதனை வலிமையுடை வீரர்களின் தோளுக்கும், பலாப்பழத்திற்கும்,பனைமரத்தின் அடிப்பகுதிக்கும் ஒப்பிட்டே பேசுகின்றன. மிகத் தொன்மைக் காலத்திலிருந்தே தமிழகம் போற்றி மதித்த ''குடமுழா'' எனும் இத்தோற் கருவியை இந்திய நாட்டின் பல்வேறு கலாச்சார மக்களும் போற்றினர் என்பதை அவர்தம் இலக்கியங்கள் வாயிலாகவும், சிற்பங்கள் வாயிலாகவும் அறியமுடிகிறது. வங்க நாட்டுப் பாலர்களது சிற்பங்களிலும், கங்கர்களின் சிற்பங்களிலும்,

காகதீயர்கள், மேலைச்சாளுக்கியர்கள், மற்றும் கீழைச் சாளுக் கியர்களின் சிற்பங்களிலும், ஆடவல்லானின் திருநடனத்திற்கு பூதமொன்று குடமுழவம் இசைக்கும் காட்சியைக் காணமுடிகிறது இதே போன்று தமிழகத்தில் கி. பி. 10 ஆம் நூற்றாண்டு வரை படைக்கப்பட்ட பல்லவர்கள், பாண்டியர்கள், சோழர்களின் சிற்பங்களிலும் ஓவியங்களிலும் குடமுழவம் இசைக்கப்படும் காட்சி வடிக்கப்பட்டுள்ளதை இன்றும் காணலாம். இவை அனைத்திலுமே குள்ள பூதமோ நந்திதேசனோ அல்லதுவானனோ ஆடவல்லானின் திருநடனத்திற்குக் குடமுழா இசைப்பதைக் காணலாம்.

இவ்வகையான சிற்பப் படைப்புகளில் நாம் காணும் குடமுழவங்களின் வடிவங்களெல்லாம் சிற்பியின் கற்பனைப் படைப்புக்களாக நாம் கொள்ள முடியாது. அந்நாளில் அவர்தம் ஊரில் கண்கூடாக அச்சிற்பிகள் கண்ட குடமுழவங்களின் வடிவமே அவர்தம் சிற்பங்களின் வெளிப்பாடாகும். இக்கருத்து இன்று அவ்வப்பகுதிகளில் வழக்கில்உள்ள தோற்கருவிகளின் வடிவமைப்பு சிற்பங்களில் காணும் வடிவோடு ஒத்திருப்பதால் மெய்ப்பிக்கப் பெறுகிறது.

இந்திய நாட்டின் சிற்பங்களையும் ஓவியங்களையும் வரலாற்றுக்கால அடிப்படையில் தொகுத்து நோக்கும்போது குடமுழா ஒரே வாயுடைய பானையாகவே காணப்பெறுகின்றது. இப்பானையின் வடிவம் பலாப்பழம், பனைமரத்து அடிப்பகுதி, நீள் கழுத்துள்ள ஜாடி, பருத்த மத்தளம் போன்ற வடிவுகளில் காணப்பெறுகின்றது. இவ்வாறு ஒரே வாயுடைய குடமுழவம் கஞ்சம் எனும் உலோகத்தால் செய்யப்பெற்று மான் தோலால் வாய் கட்டப்பட்டுத் திகழ்ந்ததாக இலக்கியக் குறிப்புகள் செப்புகின்றன.

மேலைச்சாளுக்கிய நாட்டு சிற்பங்களை கூர்ந்து நோக்கும்போது ஆடவல்லானின் ஆடலுக்குக குடமுழா இசைக்கும் பூதங்கள் இரண்டு அலலது மூன்று தனித்தனிக் குடமுழவங்களைக் கயிற்றால் இணைத்து, மூன்று முகங்களிலும் தாளம் இசைக்கும் வளர்ச்சி நிலையைக்காண இயலுகிறது. இது 12ஆம் நூற்றாண்டு காலச் சிற்பப் படைப்புகள் வரை உள்ளன. ஆனால் அதற்குப் பின்பு இம்முழவங்களின் வடிவமைப்பிலோ, பல முழவங்களை இணைப் பதிலோ எந்த ஒரு மாறுதலும் காணமுடியவில்லை.

தமிழகத்தை பொறுத்தவரை சங்க இலக்கியங்கள் செப்பிடும் குடமுழவத்தின் உருவ அமைப்பைபல்லவர்கள் மற்றும் பாண்டியர் களது குகைச் சிற்பங்களில் முதன் முதலாகக் காண்கிறோம். நடராச வடிவத்தின் கற்சிற்ப வடிவில் காலத்தால் முந்தியது என டாக்டர் சிவராமமூர்த்தி அவர்கள் கருதும் சீயமங்கலம் குடைவரைத் தூண் சிற்பத்தில் ஆடவல்லானின் அருகே பூத மொன்று குடமுழவம் இசைக்கும் காட்சி இடம் பெற்றுள்ளது. மகேந்திர பல்லவன் (கி பி. 7-ஆம் நூற்றாண்டு) காலத்தில் தமிழகத்தில் இசைக்கலைஞர்கள் இசைத்த குடமுழாவின் வடிவத் திற்கு இது சிறந்த எடுத்துக்காட்டு.

இதே போன்று குன்றக்குடிக் குடைவரைக்கோயிலில் பாண்டிய மன்னர்களால் தோற்றுவிக்கப்பட்ட ஆடவல்லான் சிற்பத்தொகுதி யிலும் குடமுழவத்தின் வடிவம் சிறப்பாகக் காட்டப்பெற்றுள்ளது மாலை மயங்கும் வேளையில் உமையவள் மகிழக் கயிலயம் பதியோன் ஆடியதாக பேசப்படும் சந்தியா நிறுத்தம் என்ற ஆடல் நிலையின் அற்புதக் கோலநிலை ஒன்று திருப்பரங்குன்றத்துக் குகையில் புடைப்புச் சிற்பமாக வடிக்கப்பெற்றுள்ளது. இதில் நந்தியம் பெருமான் இரண்டு குடமுழவங்களை இணையாகக் கொண்டு இசைப்பதைக்காணலாம். இவ்வாறு ஒன்றில் தொடங்கி இரண்டு, மூன்று,நான்கு குடமுழவங்களைச் சேர்த்து வைத்துத் தாளம் எழுப்பும் முறையைப் பின்னாளில் போற்றியுள்ளனர் என்பதற்குப் பல சிற்பங்கள் எடுத்துக்காட்டாய்த் திகழ்கின்றன. மதுராந்தக உத்தம சோழன் காலத்திய திருக்கற்றளியான கருந் தட்டாங்குடி திருக்கோயிலில் இடம்பெற்றுள்ள ஆடவல்லான் கற் சிலையில், நந்தி மத்தளம் இசைக்க வாணன் நான்கு தனித்தனிக் குடமுழாக்களை ஒரு கயிற்றால் பிணைத்துத் தன் இடுக்கிய கால் களுக்கிடையே வைத்து இசைக்கும் அரிய சிற்பமொன்று இடம் பெற்றுள்ளது.

குடமுழவம் வளர்ச்சி நிலைகள்


ஒரே வாயுடைய குடமுழவத்தை இசைப்பதைவிட இரண்டு, மூன்று, நான்கு குடமுழவங்களை இணைத்துப் பல வாய்களில் உள்ள தோலைத் தட்டி.த் தாளம் எழுப்பும் மாறுபட்ட தாள வளர்ச்சி நிலையினைக் கண்டனர். இது இந்திய நாட்டைப் பொறுத்தவரை எல்லாக் கலாச்சார மக்களும் அடைந்த ஒரு இசை வளர்ச்சி நிலையாகும். இதன் காலம் கி. பி. 10 - ஆம்

நூற்றாண்டு ஆகும். இதன்பிறகு தமிழகத்து இசை வாணர்களைத் தவிர பிறபகுதிக் கலைஞர்கள் குடமுழா பற்றிய மாறுதல் களிலோ அல்லது வளர்ச்சியிலோ ஈடுபட்டதாகச் சான்றுகள் கிடைக்கவில்லை.

குடமுழவத்தின் அமைப்பில், அது வழங்கும் லயத்தில் மேலும் மேலும் புதுமைகள் செய்யத் துடித்தான் தமிழன். நான்கு தனித் தனி முழவங்களைக் கயிற்றால் இணைப்பதைவிட இரண்டு குடங் களில் நான்கு வாய்களைப் படைத்து அதில் தோல்களை இணைத்து இசைக்க முயன்றான். நடுவே தான் அமர்ந்து தன் எதிரில் உள்ள இரண்டு குடமுழாக்களில் உள்ள 4 வாய்களையும் இருகரங்களால் தட்டித் தாளம் எழுப்பினான். இத்தாளத்திற்கு ஏற்ப ஆடல் மகளிர் 108 கரணங்களையும் ஆடினர். இத்தனை யும் தில்லைத் திருக்கோயில் மேலைத்திருக்கோபுர வாயிலில் கல் வெட்டு விளக்கத்தோடு சிற்பக் காளஞ்சியமாக நாம் காணலாம்.

இதனைச் சாதித்த தமிழனின் இசைஅறிவு மேலும் சிந்தித்தது, குடமுழாவின் அமைப்பில், ஆடற்கலைக்கேற்பச் சிறந்ததொரு வளர்ச்சி நிலையைக் காணமுற்பட்டான். அதன் வெற்றியே ஐம் முகமுழவம், பஞ்சமுக வாத்தியம் எனும் தமிழனின் தனிச்சிறப்பு டைய தோற்கருவியாகும். நிறுத்தமாடவும், பாடல் பாடவும், ஐந்து அல்லது ஏழு அடிப்படைத் தாளங்களை முன்னாளில் வகுத் தனர். இது நூற்றெட்டுத் தாளங்களை உருவாக்கிற்று. ஐந்து அல்லது ஏழு அடிப்படைத் தாளங்களைத் தனித் தனியே எழுப்ப ஐந்து வாய்களுடைய ஒரே குடமுழவத்தை உருவாக் கினான். இரண்டு இரண்டு வாய்களை உடைய இரண்டு குடங்களின் உருவத்தையும் இணைத்து ஒரே பானையில் ஐந்து முகங்களைத் தோற்றுவித்தான் இதுவே. பஞ்சமுக வாத்தியம் எனும் குடமுழவமாகும்.

கி. பி 11ஆம் நூற்றாண்டில் சோழப் பெருமன்னர்களின் ஆட்சி சீரும் சிறப்புடன் திகழ்ந்த காலை சோழமண்ணில் இவ்வாத்தியம் உதித்தது. அனறு தோன்றிய பஞ்சமுக வாத்தி யங்கள் பல அழிந்தபோதும் இரண்டு மட்டும் அன்று தொடங்கி இன்றளவும் திருவாரூர் மற்றும் திருத்துறைப்பூண்டி திருக்கோயில் களில் தொடர்ந்து இசைக்கப்பெறுகின்றது. திருத்துறைப்பூண்டி அருமருந்தீசர் திருக்கோயிலில் உள்ள $3\frac{1}{2}$ அடி உயரமும் 90 கிலோ எடையும உள்ள பஞ்சமகா. தாதுக்களால்(பஞ்சலோகம்)



பஞ்ச தேகமூர்த்தி - தஞ்சை
சிவபெருமான் ஐந்து உடலுடன் நிற்கும் கோலம்





ஆருர்
திருத்துறைப்பூண்டி

பஞ்சமுக வாத்தியம்

உருவாக்கப்பட்ட பஞ்சமுகவாத்தியம் உள்ளது. இதன்மேல் கி. பி. 11ஆம் நூற்றாண்டுஎழுத்துப் பொறிப்புக்களாக ''இக் குடமுழா சமர்ப்பித்திட்டார் சீகாருடையார் மல்லாண்டாரான சோழ தோனார்''என்றும்அதன் எடையும் குறிக்கப் பெற்றுள்ளது

முழவுக்குரிய முதல்வன்

ஆகம மற்றும் சிற்ப நூல்கள் அனைத்தும் முழுமுதற் கடவுளான சிவபெருமானின் முகத்திலிருந்துதான் ஒலி பிறந்த தாகக் குறிக்கின்றன. இதன் அடிப்படையிலேயே சிற்பங்களும், இசை, மற்றும் தாள நூல்களும் வகுக்கப்பெற்றன. இந்திய மண்ணின் புகழ்மிக்க எலிபெண்டா குகையில் காணப்படும் புடைப்புச் சிற்பத்தை இதுகாறும் திரிமூர்த்தி (பிரமன், திருமால், சிவன்) என்றே கலைவல்லோர் குறிப்பிட்டு வந்தனர். இந்திய சிற்பஇயல் மற்றும் ஆகமத்துறைகளில் வல்லுநரான டாக்டர் ஸ்டெல்லாகாம்ரிஷ் எனும் அம்மையார் திரிமூர்த்தி என்பதை மறுத்து மகாசதாசிவன் என்பதை உறுதி செய்துள்ளார்கள்.

இதேபோன்று தமிழகத்திலும் மகாசதாசிவ உருவ வழிபாடு பண்டுதொட்டு சிறந்து இருந்தது. நாவுக்கரசரால் சமணம் விடுத்து சைவம் தழுவிய மகேந்திரபல்லவன் கி. பி. 7ஆம் நூற்றாண்டில் திருவதிகையில் குணபரவீச்சரம் எடுத்தான். இத்திருவதிகையில் பல்லவ மன்னனின் படைப்பாக சிறந்த பஞ்சமுக லிங்கம் உள்ளது. இதனை சதுர்முகலிங்கம் என்றும் அழைப்பர். மகாசதாசிவனின் திருமுகங்களான தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் என்பலவை லிங்க உருவில் முகங்களாக வடிக்கப்பட்டு, ஈசான முகம் வடிவின்றி லிங்கத்தின் உச்சிப் பகுதியாக காட்டப்பெற்றுள்ளது.

7-ஆம் நூற்றாண்டில் சதுர்முக லிங்கத்தை வடித்த தமிழக சிற்பிகள் 8-9 ஆம் நூற்றாண்டுகளில் சிவபெருமானை அமர்ந்த கோலத்தில் நான்கு திருமுகங்களோடு (ஈசான முகத்தை கற்பனையோடு) வாகீசசிவனாகப் படைத்தனர். இவ்வாகீச சிவனார் வழிபாடு தஞ்சைப் பகுதியில் மட்டுமே மிக்கோங்கி திகழ்ந்திருந்துள்ளது. கரந்தை, சுண்டியூர், செந்தலை போன்ற பகுதிகளில் இதுவரை ஐந்து திருவுருவங்கள் கிடைத்துள்ளன. இச் சிற்பங்களை இதுவரை பிரமன் என்றே கருதி வந்தனர்,அண்மையில்

டாக்டர் நாகசாமி அவர்கள் தமது ஆய்வுக்கட்டுரையில் வாகீசசிவனார் உருவம் இதுதான் என்பதை மெய்ப்பித்துள்ளார்.

ஈசான முகமின்றி நான்கு முகங்களுடன் வடிக்கப்பெற்ற மகாசதாசிவ உருவம் மாமன்னன் இராஜராஜன் காலத்தில் மேலும் வளர்ச்சி பெற்று ஐந்து முகங்களும் பத்து திருக்கரங் களுடனும் வடிக்கப்பெற்றது. தஞ்சை இராஜராஜேச்சரத்து திருக்கோபுரத்தில் இத்தகைய மகாசதா சிவனுடைய உருவங்கள் பல இடம்பெற்றுள்ளன.

தமிழகம் கண்ட மகுடாகமம் சிவலிங்க உருவை ''நவதத்துவம்'' என்ற ஒன்பது அடிப்படையில் போற்றியது. இதில் பரமானந்த நிலையை உணர்த்தும் ஆடவல்லான் திருவுருவுக்கு முதற்படியாக வாமபாகத்தில் மகா சக்தியுடன் இணைந்த மகாசதாசிவனையே போற்றுகிறது.

மகாசதாசிவ வழிபாட்டில் மிகுந்த நாட்டம் கொண்ட மாமன்னன் இராஜராஜன் உலகமே கண்டிராத புதுமை வடிவொன்றை செப்புத் திருமேனியாக வடித்தான். இதனை பஞ்சதேகமூர்த்தி என்று கல்லில் பொறித்ததோடு, அவ்வுருவம் ஒவ்வொன்றும் நான்கு திருக்கரங்களும், ஒரு முகமும் உடைய நான்கு தனி உருவங்கள் இணைந்து அதன் மத்தியில் பத்து திருக் கரங்களுடன் உடைய ஐந்தாவது திருமேனி இணைந்து காணப் படும் பஞ்சதேகமூர்த்தியின் உருவம் பற்றியும் சிறப்பாகக் குறிப் பிட்டுள்ளான்.

இவ்வாறு ஐந்து திருமுகங்கள் கொண்ட மகாசதாசிவத்தின் அம்சமாகவே பஞ்சமுக வாத்தியம் எனும் ஐமுக முழவம் தோன்றியது. அண்மையில் திருவாரூரிலிருந்து கிடைத்த ஏட்டுச் சுவடி ஒன்றில் குறிக்கப்பெற்றுள்ள கிரந்த சுலோகமொன்று பாண்ட வாத்யம் எனும் பஞ்சமுக வாத்யம் ஸ்ரீசதாசிவனுடைய ஐந்து முகத்திலிருந்து வந்தது என்றும், சிவனாரின் முகங்களான சத்யோஜாதத்திலிருந்து ''நாகபந்தமும்'' வாம தேவத்திலிருந்து ''ஸ்வஸ்திகமும்'' அகோரத்திலிருந்து ''அலக்நமும்'' தத்புருஷத்தி லிருந்து ''சுத்தமும்'', ஈசானத்திலிருந்து ''ஸமஸ்கலியும்'' தோன்றியதாகவும், இதனை ஐந்து விதமாகவும் ஏழு,விதமாகவும் வாசிக்க வேண்டும் என்றும் கூறுகிறது. சுவடிகளின் குறிப்புகள்

மட்டுமின்றி, இன்றளவும் நடைமுறையில் இக்குடமுழவத்தின் முகங்களும் சதாசிவனுடைய முகங்களின் பெயர்களே குறிக்கப் பெறுகின்றது.

இலக்கியங்கள் காட்டும் ஐமுக முழவம்

தமிழகம் தந்த இலக்கிய முத்துக்களில் முதன்முறையாக ஐமுக முழவம் பற்றி கல்லாடனார் இயற்றிய கல்லாடமே பேசுகிறது. இந்நூலில்

> ''தடா வுடலும்பர்த் தலைபெறு முழவம்
> நான்முகம் தட்டி நடுமுகம் உரப்ப
> ....நாடிரு முனிவர்க்கு ஆடிய
> பெருமான்''

என்றும்,

> ''முகனைந்து முனைந்த முழவந்துவைக்க''

என்றும், ஐமுகமுழவமாகிய பஞ்சமுக வாத்தியம் பற்றி தெளிந்து சான்று பேசப்பெறுகின்றது.

கல்லாடத்தின் காலம் பற்றி ஆராய்ந்த அறிஞர் மு. அருணாசலம் அவர்கள் கல்லாடனாரின் காலம் கி.பி. 11 ஆம் நூற்றாண்டு என்பதை வலியுறுத்தியுள்ளார்கள். மேலும் கல்லாடத்தில் பரங்குன்றம் பற்றி 25க்கும் அதிகமான இடங்களில் பேசப்படுகிறது. கல்லாடர் காட்டும் குன்றத்தின் அமைப்பு முருகன் பற்றிய குறிப்புகளை ஆராய்ந்த திரு செ. போசு அவர்கள் ''திருப்பரங்குன்றம்'' எனும் நூலில் கல்லாடரின் காலத்தை கி. பி. 9 ஆம் நூற்றாண்டுக்கும் கி. பி. 13 ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டவராக குறிப்பிட்டுள்ளார். எனவே பஞ்சமுக வாத்தியமான ஐமுக முழவம் பற்றிப் பேசும் முதல் தமிழ் இலக்கியத்தின் காலம் கி.பி. 11 ஆம் நூற்றாண்டு என்பது நோக்குதற்குரிய ஒன்று

கல்லாடனார்க்குப் பிறகு பஞ்சமுக வாத்தியத்தைப் பற்றி அருணகிரிநாதர் பேசுகிறார். இவர் ''குடபஞ்சமுகி'' என்று இவ்வாத்தியத்தைக் குறிப்பிடுவதோடு, தாம் யாத்த சந்தப் பாடல்கள் அனைத்திலும் தாளச் சொற்கட்டுகளுக்கு சிறப்பிடம் அளித்துள்ளார்.

சிற்பங்கள்-செப்புத்திருமேனிகள் மற்றும் ஓவியங்களில் பஞ்சமுக வாத்தியம்

தமிழகத்தில் கி.பி 10 ஆம் நூற்றாண்டு வரை படைக்கப்பட்டனந்த ஒரு சிற்பத்திலோ, செப்புத் திருமேனியிலோ, அல்லது ஓவியங்களிலோ பஞ்சமுக வாத்தியம் இடம் பெறவில்லை. கி.பி. 11 ஆம் நூற்றாண்டில் தொடங்கி 19 ஆம் நூற்றாண்டு வரை படைக்கப்பெற்ற சிற்பங்கள், செப்புத்திருமேனிகள், மற்றும் ஓவியங்களில் பஞ்சமுக வாத்தியம் இடம்பெற்றுள்ளது.

தில்லை நிருத்த சபையில் உள்ள சிற்பத் தொகுதியில் வாணன் பஞ்சமுக வாத்தியத்தையும் அதனுடன் இரண்டு தனிக்குடமுழவங்களையும் கொண்டு ஏழு முகங்களில் தாளம் இசைப்பதாகக் காட்டப்பெற்றுள்ளது. இது விக்கிரம சோழன்-காலத்திய படைப்பாகும். இதனை ஒத்த ஓவியம் ஒன்று (17-18 ஆம் நூற்றாண்டு ஓவியம்) அதே தில்லை திருக்கோயில் சிவகாமி அம்மை மண்டபத்து விதானத்தில் இடம் பெற்றுள்ளது. இங்கு ஏழு முகங்களுடன் குடமுழவங்கள் இசைப்பது நோக்குதற்குரியது.

தென் திருவாலங்காடு, திருபுள்ளிருக்குவேளூர் (வைத்தீஸ்வரன் கோயில்) தரங்கம்பாடி, செந்தலை, திருப்புன்கூர் போன்ற பல இடங்களில் உள்ள கி.பி. 11-12 ஆம் நூற்றாண்டு ஆடவல்லான் செப்புத் திருமேனிகளின் பீடத்தில் நந்திதேவன் குடமுழவம் இசைக்கும் காட்சி இடம்பெற்றுள்ளது. சில பிற்கால செப்புத் திருமேனிகளிலும் பஞ்சமுக வாத்தியம் காட்டப்பெற்றுள்ளது.

திருவலஞ்சுழி திருக்கோயில் விதானத்து ஓவியம் தஞ்சை நாயக்கர்கள் காலப்படைப்பாகும். இதில் நந்தி குடமுழவம் இசைக்கும் ஓவியம் உள்ளது. இதே போன்று திருவாரூர் திருக்கோயிலில் தேவாசிரியமண்டபத்து ஓவியத் தொகுதியில் முட்டுக்காரன் ஒருவன் பஞ்சமுக வாத்தியம் இசைக்கும் காட்சி இடம் பெற்றுள்ளது. இது தஞ்சை மராத்திய மன்னன் சகஜி காலத்து ஓவியமாகும்.

சகஜி மன்னனின் தம்பியும், சங்கீதசாராம்ருதம் எனும் நூலின் ஆசிரியருமான துக்கோஜி என்னும் துளஜா மன்னன் காலத்தில் இசைக்கலைஞர்கள் ஒன்றுபட்டு குடந்தை திருக்கோயிலுக்கு அளித்த அறக்கொடை பற்றிக் குறிப்பிடும் செப்பேடு ஒன்று குடந்தை நாகேஸ்வரன் கோயிலில் உள்ளது. இதில் 40க்கும்

மேற்பட்ட இசைக் கருவிகளின் உருவங்கள் படைப்புச் சிற்பமாக வார்க்கப்பட்டுள்ளது, இதில் பஞ்சமுக வாத்தியமும் உள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

ஐமுக முழவங்களில் எத்தனை வடிவமைப்புகள் இருந்தன என்பதற்கு இச்சிற்பங்களும் ஓவியங்களும் சான்றாக நிற்கின்றன மேலும் இவை திருத்துறைப்பூண்டி, திருவாரூர் குடமுழவங்களை ஒத்தும் காணப்படுவது நோக்குதர்க்குரியது. எனவே இலக்கியங்கள் அடிப்படையில் நோக்கினாலும், சிற்பங்கள் ஓவியங்கள் அடிப்படையில் நோக்கினாலும் கி. பி. 11 ஆம் நூற்றாண்டிலிருந்து தான் பஞ்சமுக வாத்தியமாக குடமுழவத்தின் வளர்ச்சியைக் காண்கிறோம். திருத்துறைப்பூண்டி குடமுழவத்தில் காணப்படும் சோழர் கால எழுத்துப் பொறிப்பும் 11 ஆம் நூற்றாண்டு எழுத்தமைதி ஏன்பதும் இக்கருத்தை மேலும் வலுவூட்டுகிறது.

பெருங்கற் சின்னங்களில் பஞ்சமுக வாத்தியமா?

கர்நாடக மாநிலத்தில் தடக்கணஹள்ளி என்னும் பகுதியில் நிகழ்ந்த அகழ்வாய்வில் சுமார் 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஈமப் புதைக்குழிகளில் சில அரும்பொருள்கள் கிடைத்தன. அவற்றுள் ஐந்து வாயுடன் கூடிய மண் பானைகளும் கிடைத்து உள்ளன. இவ்வகைப் பானைகள் தமிழகத்து பஞ்சமுக வாத்தியத்தை ஒத்தே காணப்படுகின்றன.

இப்பானைகள் குடமுழவமா?சிவனைக் குறிப்பிடும் சின்னமா? அல்லது வேறு ஏதேனும் ஒரு வகையான ஈமச் சடங்குகளுக்குரிய கலனா என்பது இறுகாறும் அறிஞர்களால் முடிவு செய்யப்படவில்லை. இது பற்றிய ஆய்வில் முனைந்துள்ளோம். ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ள ஈமச் சின்னங்களில் மட்டும் இப்பானைகள் காணப்படுவது மேலும் சிந்திக்க வைக்கின்றது.

நந்திதேவனும் — வாணனும்

பஞ்சமுக வாத்தியம் எனும் குடமுழவம் சதாசிவனின் அம்சமெனக் கருதப்பட்டபோதும் இதனை இசைக்கும் இசைவாணன் நந்தியென்றும், வாணன் என்றும் இலக்கியங்களும் புராணங்களும் பேசுகின்றன.

''குடமுழா நந்தீசனை வாச கனாகொண்டு
—தேவாரம்
''வாணன் தோளாயிரத்தொடும் குடமுழவு இனிக்க''
—கல்லாடம்.

இவ்வாறு பல இலக்கியக் குறிப்புகளாலும், புராணச் செய்திகளாலும் சிவகணங்களின் தலைவனான நந்தியும், திரிபுரதகனத்திற்குப் பின்பு செருக்கழிந்த வாணனும் ஆடவல்லானின் ஆடலுக்காக குடமுழவம் இசைக்கும் தகுதியைப் பெற்றதாக அறிய இயலுகிறது. இக்கருத்துக்களால் குடமுழவ ஒலி ஆடலுக்குரிய ஒலி என்பது தெளிவாகின்றது.

பாரசைவர்கள்

சோழர்கள் காலத்தில் அதிலும் சிறப்பாக தக்கையாகப்பரணி மலர்ந்த காலத்தில் பரசவர் எனும் சாக்தர்களின் செல்வாக்கு ஓங்கியது. தேவி கோயிலை பூசை செய்யும் தகுதி பெற்ற இவர்கள் ''யாமள தந்திர நெறியைப் போற்றியவர்கள். சோழர் காலத்து கல்வெட்டுக்கள் பல பரசவர் பற்றி குறிப்பிடுகின்றன. திருமணஞ்சேரிக் கல்வெட்டொன்று ''ஸ்வஸ்திஸ்ரீ திருமணஞ் சேரியில் நின்றாடியருளுகின்ற பரமஸ்வாமிக்கு குடமுழா வாசிக்கின்ற நந்தீசன்'' என்று கூறி குடமுழாக் கலைஞன் ஒருவனைச் சுட்டுகின்றது. ''பாரசைவ உத்பத்தி: பஞ்சமுக வாத்ய லட்சணம் ச:'' எனும் சிரந்த சுவடி நூல் இருபத்தொன்பது சுலோகங்களைக் கொண்டது. இதில் பாரசைவம் சிவபெருமானின் நிருத்தத்திற் காகவும், திருக்கோயில்களில் ஆடல்மகளிர் ஆடும் ஆடலுக்காகவும் தோற்றுவிக்கப்பட்டதாகக் குறிப்பிடுகிறது. ''சுத்த வாத்யம் சுதாலம் ச பாரசைவ விதிர்பவேத் ந்ருத்த காலே வாத்ய கோஷ: ந்ருத்தாந்தே கலநர்த்தனம்''.

இக்கருவியின் இசைவாணன் நந்தி என்றும், அவருக்காகவே பாரசைவம் ஏற்படுத்தப்பட்டது என்றும் விவரிக்கின்றது. பாரசைவனின் தோற்றம், உடை, திருமணம், சாந்திகர்மாக்கள், ஆசார்யன் போன்ற விபரங்களும், இக்கருவியைக் கையாளும் முறைகளும், நிருத்த முறைகளும் கூறப்பெற்றுள்ளன.

பரசவர் அல்லது பாரசைவர் என்ற முட்டுக்காரர்களே இக் கருவியை இசைக்கும் தகுதியுடையவர்கள் என்பதும், அவர்கள் சிவதீட்சை பெறறவர்களாய் இருத்தல் வேண்டும் என்பதும் முக்கிய விதிகளாய் இருந்தன.



சங்கரமூர்த்தி முட்டுக்காரர் குடமுழா இசைக்கும் காட்சி



ஆருர் ஒவியத்தில் பஞ்சமுக வாத்தியம்

வழக்கு :

கி. பி. 1830-ல் திருவாரூர் திருக்கோயிலில் பஞ்சமுக வாத்தியம், சுத்தமத்தளம் ஆகிய கருவிகளை இசைத்த பாரசைவர்களான முட்டுக்காரர்களின் உரிமைகளை மேளக்காரர் களுக்கு அமீனாக்கள் மாற்றியதால், மராத்திய மன்னனிடம் முறை செய்து உரிமையை மீண்டும் பெற்ற முட்டுக்காரர்கள் பற்றிய அரிய ஆவணம் ஒன்று சரஸ்வதிமகால் மோடி ஆவணப் பிரிவில் உள்ளது.

அறிவியல் ஆய்வில் குடமுழவம் ;

சங்க காலம் தொட்டு இன்றுவரை குடமுழவங்களுக்கு உலோகத்தாலான பாணையும், மான் தோல்களுமே பயன்படுத்தப் பெற்றுள்ளது. தோற் கருவிகளுக்குப் பொதுவாக மர உடலும், ஆடு மற்றும் உடும்புத் தோல்களுமே பயன்படுத்தப் பெறுகிறது. ஆடு, உடும்பு மற்றும் மான் தோல்களை (இசைக் கருவிகளுக்காக பதப்படுத்தப்பெற்றவைகளை) மின்னணு நுண்ணோக்கி (Electron Microscope) கொண்டு, உயிர்வேதியலாய்வுகள் (Bio Chemical Analysis) போன்றவற்றின் அடிப்படையில் ஆராயும்போது, இத் தோல்களின் புரதநார்களின் (Collagen) தன்மை பற்றி அறிய இயலுகிறது.

மற்ற தோல்களைவிட மான் தோலை நோக்கும் போது மேற்பகுதியில் மெந்தோலும் (Epidermis) நடுவில் வலைப்பின்னலும் (Meshes) அடியில் இணைத் தொலைக் கோடுகளும் (Paralel Orientation) உள்ளன. தோலை ஒலிக்கச் செய்யும்போது ஏற்படும் உந்துவிசை அடிப்பகுதியில் இருக்கும் நார்களில் பரவி அது இழு விசை நரம்புகளாகச் செயலாற்றுகின்றது இதிலிருந்து எழும் அதிர்வு ஒரே அளவுடைய ஒத்திசைவு (Resonance) ஏற்பட்டு ஒலியின் தன்மை அதிகரித்து மிக்கொலிக்கின்றது. இது ஏறத் தாழ வீணை அல்லது யாழின் நரம்புகளை மீட்டுவதற்குஒப்பாகும் இவ்வாறு மான் தோலை அடிப்பதால் எழும் ஒலி அலைகள் பஞ்ச உலோகத்தால் ஆன பாணையில் எதிரொலித்து தூய நாதம் வெளிப்படுகிறது. ஆடு மற்றும் உடும்புத் தோல்களைவிட தோல் அடுக்குகளில் சற்று மாறுபட்ட மான் தோலின் ஒலி மென்மைத் தன்மைஉள்ளதாக உள்ளது. ஐந்து முகங்களிலிருந்து இவ்வாறு எழும் ஒலி அலைகள் பெரும் உலோகப் பாணையில் அதிர்ந்து வெளிப்படும்போது மிகச்சிறந்த நாதவெள்ளம் ஏற்படுத்துகின்றது

ஆரூர் போற்றும் மரபு

திருவாரூரைத் தலைமையகமாகக் கொண்டு திருநாகை, திருக் கோளிலி, திருக்காராயில், திருமறைக்காடு, திருநள்ளார், திருவாய்மூர் என்ற ஏழுதலங்கள் உள்ளன. இங்கு சோமாஸ்கந்த மூர்த்தியே ஆடலுக்குரிய கடவுள். ஒவ்வொரு தலத்திலும் முறையே அஜபா, தரங்க, உன்மத்த, குக்குட, ஹம்சபாத, கமல, பிருங்க என்ற ஏழு வகைத் தாண்டவங்களைப் போற்றியுள்ளனர். இவற்றில் பெரும்பான்மையான தாண்டவங்கள் மரபழிந்து விட்டன. குடமுழவம், சுத்தமத்தளம் இசைக்க இறைவன் திருமேனியைத் தோளில் சுமந்த வண்ணம் ஆடுவதே இங்கு போற்றிய நெறி.

இன்று திருவாரூர், மற்றும் திருத்துறைப்பூண்டி திருக் கோயில்களில் பூஜைகளுக்கும், தாண்டவங்களுக்கும், விழாக் களுக்கும் பஞ்சமுக வாத்தியம் இசைக்கப்பெறுகின்றது. இதனை இசைக்கத் தெரிந்த ஒரே கலைஞர் திருவாரூர் திரு சங்கரமூர்த்தி மூட்டுக்காரர் என்பவரே. இவர் பாரசைவர். சுமார் ஆயிரம் ஆண்டுகளாய்த் தொடர்ந்து வரும் பஞ்சமுக வாத்திய மரபை இன்றுவரை போற்றி வருகிறார்.

அண்மையில் எமக்குக் கிடைத்த அரிய சுவடிநூலொன்றில் பஞ்சமுக வாத்தியத்தின் ஐந்து முகங்களிலிருந்து பிறக்கும் 35 தாளங்களின் பெயர்களும், அத்தாளங்களுக்குரிய சொற்கட்டுகளும் குறிக்கப்பெற்றுள்ளன. தமிழ்–கிரந்தம் கலந்த எழுத்துக்களால் எழுதப்பெற்றுள்ள அச் சொற்கட்டுகளைப் பின் வரும் அட்ட வணையில் காண்க.

1. முகம் :– சத்யோஜாதம் இதில் பிறந்தது — நாகபந்தம்.

	தாளங்கள்		சொற்கட்டுகள்
1.	நாகபந்தணம்	—	ட நகி நரி நர நகி
2.	பவணம்	—	ந ந கிட கிட கிட தரி
3.	ஏகம்	—	கிட கிட த தெர்
4.	ஏகசர்ம்	—	கிடத்தா கிடத்தர்
5.	த்விசரம்	—	நத்த நத்த
6.	சஞ்சார்ம்	—	நகி ரதகிட கிர்த கிட
7.	விஷேபம்	—	தோங் கி தோங் கி

2. முகம் :— வாமதேவம் இதில்பிறந்தது ஸ்வஸ்திகம்.

தாளங்கள்		சொற்கட்டுகள்
1. ஸ்வஸ்திகம்	—	ந த கி டி டி கி
2. சலகோஹலம்	—	தோ ப தோ
3. புல்ல விஷேபம்	—	தோங் கிண தோங் கிண
4. சஞ்சார விலகி	—	தோங் கிண தத் தா
5. குண்டலி விஷேபம்	—	தோம் தோம் கோம் கோம்
7. பூர்வம்	—	கிடி ஜேம் கிடி ஜேம்
7. கண்டநாகபந்தம்	—	குகதோம் தோம் கிணகே

3. முகம்:- அகோரம் இதில் பிறந்தது அலக்னம்

தாளங்கள்		சொற்கட்டுகள்
1. அலக்னம்	—	தத கிட கிடி கிதா
2. உத்சாரம்	—	தத ரிகி
3. விச்ராமம்	—	தகி திகி
4. விஷமகவி	—	நகு நகு டிகு நகு
5. ஸ்புரணகம்	—	நர கிதகு ரிகி
6. சரிஸ்புரி	—	தரி கிடி
7. ஸ்புரிதம்	—	நரி கிடி நரி கிடி

4. முகம்:- தத்புருஷம் இதில் பிறந்தது சுத்தம்

தாளங்கள்		சொற்கட்டுகள்
1. சுத்தம்	—	நரி கித தரி கிட
2. ஸ்வரஸ்புரணம்	—	தரி கிட தத்தா
3. உத்துளி	—	நந கிந கக கக
4. அஞ்ஜலி பலிதம்	—	தகே நகே தநகி
6. அர்த்தகடம்	—	தொம் கிநகி தோம் கிநகி
6. தகராக்யம்	—	தத்தா தா
7. மாணிக்கவல்லி	—	தி தீ

5. முகம் :- ஈசானம் இதில் பிறந்தது சமஸ்கலிதம்.

தாளங்கள்		சொற்கட்டுகள்
1. சமஸ்கலிதம்	—	ந ஜெம் ந ஜெம்
2. விகடம்	—	ரிகி த கித தத
3. சத்ருசம்	—	கிண கிண கி

4. கலி	—	ரிரி கிட கி
5. அடகலி (அஞ்ஜகலி)	—	ரிகி நகி திகி நகி
6. அனுத்புல்லம்	—	தரகிட துகடி தரகிட
7. குத்தம்	—	தோ ந கடி தோ ந கடி

இன்று குடமுழவம் இசைக்கப்படும் முறை

தற்போது சோம வார நாட்களில் மட்டும் இக்கருவி இசைக்கப் படுகிறது. விழாக்களின் போதும் ஏல்லா பூஜைகளுக்கும் இசைக்கப் படுகிறது. குடமுழவத்தின் சிறப்பு அம்சம் தியாகப்பெருமானின் முன்பு மட்டும் முழங்குதல் ஆகும். மாலை பூஜையான ''சாய ரட்சை''யின் போது பூஜை துவக்கத்தில் ''தொம்'' ''தாம்'' ''தொம்'' ''தாம்'' என்ற தாள இசையான ''சதசுரஜதி'' தாளத்துடன் இசைக்கப்படுகிறது. அடுத்து ஐந்து அடுக்கு தீபா ராதனை மும்முறை தியாகப்பெருமான் முன்பு காட்டப்படும் போது மூன்று வித தாளச் சொற்களுடன் இசைக்கப்படுகிறது.

'சோடச உபசாரம்' எனும் பூஜை முறை துவங்கும் போது சதாசிவ மூர்த்தியின் அம்சங்களான ஐந்து தீபதட்டுக்கள் இறைவன் முன்பு வைக்கப்படும். இவை முறையே ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் என்பனவாம், தேவ மந்திரங்கள் ஒலிக்க ஒவ்வொரு தீபத்தட்டும் இறைவன் முன்பு காட்டப்படும் போது ஒவ்வொருவிதமான தாளச்சொற்களைக் குடமுழவம் பேசும்படி இசைக்கின்றனர். பின்பு விபூதி சாத்தும் போதும் சோடச உபசாரங்களான கண்ணாடி, கொடை, சாமரம் திருவாலவட்டம் போன்ற நான்கின் போது மட்டும் தனித் தனியான தாளபேதங்களுடன் முழங்கப்படுகிறது.

சதாசிவமூர்த்தியின் அம்சங்களான ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோ ஜாதம் இவைகளைக் குறிப்பிடும் வண்ணம் பஞ்சமுக வாத்தியத்தின் ஐந்து முகங்களும் இப்பெயர் களால் குறிப்பிடப்படுகிறது. வீதிவிடங்கப்பெருமான் அஜபா நடனம் ஆடச்செல்லும்போது ஒருவித தாளத்துடனும், அஜபா நடனம் ஆடும்போது அந்த ஆடலுக்கேற்ற தாளமும் இக்குடமுழ வத்தில் இசைக்கப்படுகிறது. மேலும் சிவபெருமானின் தாண்ட வங்களான ''ஆனந்த தாண்டவம்'' ''ஊர்த்துவத்தாண்டவம்'' ''ருத்திர தாண்டவம்'' ''அஜபா தாண்டவம்'' இவைகளும் குடமுழவமான இப்பஞ்சமுக வாத்தியத்தில் இசைக்கப்படுவது

குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சங்களாகும். பல்வேறு சிறப்புகளால் பெருமை பெரும் ஆரூர் திருக்கோயிலுக்கு இக்குடமுழவமும் ஓர் அணிகலனாகும்.

சுத்தமத்தளம்

இது ஏனைய மத்தளங்களைக்காட்டிலும் மிக நீண்டதாக— பருத்ததாக இருக்கும். திருவந்திக்காப்பு, மற்ற திபாராதனை காலங்களிலும் குடமுழவம் இசைக்கப்படாத நேரங்களிலும் இசைக்கப்படுகிறது. இதனையும் பார சைவர்களே போற்றி வருகின்றனர். இக்கருவியில் இசைக்கப்பெறும் பூத நிருத்தம் பற்றி முன்பே கண்டோம். சுத்தமத்தளமும் தியாகப்பெருமானின் சிறப்புகளுள் ஒன்று.

கொடுகொட்டி

''கொடு கொட்டி'' என்ற இந்த தாளக்கருவியும் ஆடுந்தீக் கூத்தனாகிய அம்பலவாணனுக்குப் பிடித்தமான ஒன்று என்பதை அப்பர் வாக்கால் அறிந்தோம். இது தற்போதுஆரூர் பெருமானான தியாகேசன் தேரில் பவனி வரும்போது இசைக்கப்படுகிறது. இதனை இசைப்பவர்கள் பார சைவர்கள் அல்ல. பூஜைக் காலங்களில் இக்கருவியை உபயோகிப்பது மிகவும் அருகிவிட்டது.

மேற்கூறிய சிறப்புக்கருவிகள் மட்டுமின்றி மற்றெல்லாவிதமான இசைக்கருவிகளும் விழாக்களின் போது இசைக்கப்படுகிறது. தேவாசிரிய மண்டபத்து ஓவியங்களில் ஆரூரில் இசைக்கப்பட்ட பல்வேறுவிதமான இசைக்கருவிகளை எழிலோவியமாகக் காண முடிகிறது. ''மேள வாத்தியக்காரர்'' என்பன போன்ற இசைக் கலைஞர்களின் தொழிற் பெயர்களும் ஓவியத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. இத்தலத்திற்கு பதினெண் வகையான இசைக் கருவிகள்இருந்ததாகக் கூறப்படுகிறது. மொத்தத்தில் இசையிலும் ஆரூர் ஓர் தெவிட்டாத இன்பம் தரும் ஊர் என்பது உண்மை.

ஆரூர் தந்த அரும் பெரும் இலக்கியங்கள்

ஆரூர் தந்த அரும் பெரும் இலக்கியங்கள்

மனுநெறி செழித்த ஆரூரில் சைவம் கமழ்ந்தது, சிற்பங்கள் பேசின. பரதம் வளர்ந்தது எழிற் கலைகள் அத்தனையும் ஏற்றம் பெற்றன. இத்தனையும் வளர்ந்த இடத்தில் இலக்கியங்கள் உதிக்காமலா இருந்திருக்கும்! சைவநெறியின் காப்பியமான பெரிய புராணம் தோன்றக் கருவாய் அமைந்தது ஆரூர் திருக்கோயிலே. அதனால்தான் சேக்கிழார் பெருமான் ஆரூர் நகரின் சிறப்பை எடுத்துரைத்தார். இங்கு மலர்ந்த எழிற் காப்பியங்கள் ஒன்றல்ல இரண்டல்ல. வடமொழியும், தமிழ் மொழியும் இணைந்து அளித்த இணையிலா காபபியங்கள்தான் எத்தனை எத்தனை! இவைகளில் காணும் இலக்கிய ஆழம்தான் அளவிட முடியுமோ? கி பி. 7 - ஆம் நூற்றாண்டில் தொடங்கி 19-ஆம் நூற்றாண்டு இறுதியாக இங்கு மலர்ந்த இலக்கிய மலர்தனை வரிசையாகத் தொடுத்து அழகு காண்போம்.

தேவார இலக்கியங்கள்

ஞானசம்பந்தர் தேவாரம்

கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சம்பந்தர் ஆரூர் திருக்கோயிலில் ஐந்து பதிகங்கள் பாடியுள்ளார். இப்பதிகங்கள் சைவத் திருமுறைகளான தேவார நூல்களில் தொகுக்கப்பெற்றுள்ளது. இத்தேவாரப்பதிகங்கள் மாமன்னன் இராசராசன் காலத்தில்தான் முதன் முதலாகத் தொகுக்கப்பட்டதோடனறி, அப்பாடல்களை தினமும் இறைவன் திருக்கோயிலில் ''திருபதியம் விண்ணப்பிப் பார்'' என்பவர்களால் முறையாக பாடப்பட்டு வந்தது. இம் முறை அன்று தொடங்கி இன்றளவும் ''ஓதுவார்''களால் இறை முன்பு பாடப்படுகிறது.

சம்பந்தரின் ஐந்து பதிகங்களில் முதலாவது திருவிருக்குக் குறளாகும். இது இரண்டு இரண்டு அடிகளைப்பெற்ற பத்துப் பாடல்களாகும் பதினோராவது பாடலாகப் பாடிய சமயக்குரவர் பற்றிக் கூறப்பட்டிருக்கும். (இப்பாடல் எண்ணிக்கையில் சேராது)

இத்திருவிருக்குக்குறளில் ஆரூரரை விளித்து அவர்பாதங்களில் மலர்களைத்தூவிப் போற்றுவதாக அமைந்துள்ளது. இப்பதிகத் திற்கு இசைக்கப்பெற்ற பண் குறிஞ்சிப் பண்ணாகும்,

இரண்டாம் பதிகம் வியாழக் குறிஞ்சிப் பண்ணுடன் போற்றப் படுகிறது. இதில் சிவபெருமான் புரிந்த திரச்செயல்களான மூப்புரம் எரித்தது, சுடலையில் ஆடியது, பிரமன் தலை கொய்தது போன்றவற்றைக்கூறி ஆரூர் இறைவனின் அருளாசி பெற வகைப் படுத்தும் பாடல்களாம். இப்பதிகத்தில்

''அல்லியங் கோனத் தன்னை யாகத் தமர்த்தருளி யாரூர்ப்
புல்லிய புண்ணியனைத் தொழுவாரும் புண்ணியரே''

எனவும் போற்றுகிறார். ஞானசம்பந்தரின காலத்திற்குப் பல நூற்றாண்டுகள் பின்பு தோற்துவிக்கப்பட்ட காமகோட்டத்து நாச்சியாரின் திருநாமமாக ''அல்லியங்கோதை'' என்று அழைக்கப் படுவது குறிப்பிடத்தக்கதாகும்,

மூன்றாம் பதிகம் காந்தாரப் பண்ணிலும், நான்காம் பதிகம் திருவிராகம்-நாட்டராகப் பண்ணிலும் ஐந்தாம் பதிகம் கௌசிகம் பண்ணிலும் பாடப்படுகிறது. இவை அனைத்தும் ஆரூரானின் செயல்களையும், அவனது அருட் திறத்தையும் அழகுபட விவரிக்கின்றன. மூன்றாம் பதிகத்தில் யாக்கை பெறும் சிற்றின்பத்தை பாம்பின் வாயில் பிடிபட்ட தேரை அந்தத் தேரை வாயில் பிடிபட்ட வண்டு, அந்த வண்டு மணமுள்ள பூவின் தேனை சுவைப்பது போன்றது எனக் கூறும் உயரிய நிலையைக் காண முடிகிறது.

2. நாவுக்கரசர் தேவாரம் :—

சம்பந்தர் காலத்தில் வாழ்ந்தவரும், முதுமையிலும் செம்மையான சைவத் தொண்டாற்றிய அப்பர் அடிகளார் தம் இறுதிக் காலத்தில் ஆரூர் இறையின் மேல் அளவிலா அன்பு பூண்டு ஒழுகினார். இப்பெருந்தகையாளரின் இலக்கியம் நமக்கு கிடைத்ததால் கி. பி. 7ஆம் நூற்றாண்டில் ஆரூர் திருக்கோயிலின் வரலாற்றையும், இன்ன பிற செய்திகள் பலவற்றையும் தெள்ளத் தெளிவாக அறிய முடிகிறது. 26 பதிகங்களைத் திருவாரூர் திருக் கோயில்களான பூங்கோயில், அறநெறி இவைகளில் யாத்து தமிழ் இலக்கியத்தை செம்மைப்படுத்தினார் இச் சைவசமயக் குரவர்.

அப்பர் பெருமானின் முதல் பதிகம் காந்தாரப் பண்ணில் அமைந்துள்ளது. இப்பதிகத்தில் உள்ள பத்துப் பாடல்களுமே

ஆரூரமர்ந்த அம்மான் தத்துவாதீதன், உலகமே வடிவானவன், ஆயிரம் ஞாயிறுபோன்றவன், அவனணி பாப்பு, ஆடை தோல் எனவும், பேசற்கரிய பிறவியல்புகளும் உடையவன் எனவும் தெரிவிக்கின்றன. இரண்டாம் பதிகமும் காந்தாரப் பண்ணில் அமைந்தது. இதில் தான் உண்மை நெறியான சைவத்தை உணராமல் நெடுநாள் வீணே போயிற்றே என வருந்தி, ஆரூரரின் அருட்திறத்தின் சிறப்பைப் பல பழமொழிகளின் துணையோடு எடுத்தியம்புகிறார். இவ்வகையில்;

''கனியிருக்க காய் கவர்ந்த கள்வனேனே''
''முயல்விட்டு காக்கைபின் போனவாறே''
''அறநிருக்க மறம் விலை கொண்டவாறே''
''பணிநீராற் பாவைசெயப் பாலித்தேனே''
''என்னாகத் திருந்தாதே யேதன் போர்க்ஆதனாக
அகப்பட்டேனே''
''இருட்டறையின் மலடுகறந்து ஏய்தவாறே''
''விளக்கு இருக்க மின்மினித்தீ காய்ந்தவாறே''
''பாழுரில் பயிக்கம்புக்கு ஏய்ந்தவாறே''
''தவமிருக்க அவம்செய்து தருக்கினேனே''
''கரும்பு இருக்க இரும்புகடித்து ஏய்ந்தவாறே''

என்ற பழமொழிகளைக் கூறி ஆரூர் இறையின் பெருமைகளை எல்லாம் போற்றிப் பரவுகிறார்.

மற்ற திருப்பதிகங்கள் வாயிலாக ஆரூரில் கோயில் கொண்டு உள்ள இறைவனை ''ஆரூரனார்'' என்றும் ''திருமூலட்டானர்'' என்றும் விளித்து அப்பெருமானது பல்வேறு நிலைகளை விளக்குகிறார்.

''ஆலத்தின் கீழானை நான்கண்ட தாரூரே''
என ஆலமர்ச் செல்வரையும்,

''வம்புநற் கொன்றையினானும் வாட்டம்தெய்த அம்பரவீருரி
யானும் ஆரூர் அமர்ந்தவ்மானே''
என கஜ சம்ஹார மூர்த்தியையும்,

''குழற்கங்கை யானையுள் வைத்துக் கோலச்சடை கரத்தானும்''
என கங்காதர மூர்த்தியையும்

''பக் மே பாரிடங்கள் சூழப்படுதலையில்
புக்கவூர்ப் பிச்சை யேற்றுண்டு பொலிவுடைத்தாய்க்

கொக்கிறகின் தூவல் கொடியெடுத்த கோவணத்தோடு
அக்கணிந்த வம்மானை நான் கண்ட தாரூரே''
என பிக்ஷாடனை மூர்த்தியையும்,

''நாடினார் கமலம் மலரயனோடு இரணியன் அகங்கீண்டவன்
நாடிக் காண மாட்டாத் தழலாய நம்பனை''
என விங்கோத்பவ மூர்த்தியையும்,

''தடக்கை நாலைந்துங் கொண்டு தடவரை தன்னைப் பற்றி
எடுத்தவன் பேர்க்கவோடி இரித்தன பூதமெல்லாம்
முடித்தலை பத்துந்தோளும் முறிதர விறையே யூன்றி
அடர்த்தருள் செய்ததென்ன ஆரூர் மூலட்டனீரே''

என இராவண அனுக்கிரகமூர்த்தியையும் கூறி; விரிசடைப் பெருமானின் பல்வேறு கோலங்களைக் காட்டுகிறார். மீண்டும் மீண்டும் திரிபுரம் எரித்த இப்பெருமானின் கோலங்களை கூறினாலும் ஒவ்வொரு பாவிலும் புதுப்புது கருத்துக்கள் இலக்கிய நயம், இவைகளைக் காணமுடிகிறது.

புராணக் கதைகள், திருவிழாக்கள், இறைவனின் பல்வேறு திருநாமங்கள், இவைகளைத் தெள்ளத்தெளிய வரைந்துள்ளார்' அறநெறியப்பனின் ஆட்படுத்தும் நெறியைக் கண்ட அப்பர் நீரால் விளக்கெரித்த நமிநந்தி அடிகளின் பண்பை விளக்குகின்றார்.

''ஆரூர் நறுமலர் நாதனடித் தொண்ட னம்பிநந்தி
நீரால் திருவிளக் கிட்டமை நீனா டறியுமன்றே''

ஆரூர் நகரில் நிகழ்ந்த மார்கழி ஆதிரைத் திருநாளையும், பங்குனி உத்திரப் பெருவிழாவையும் கண்டு களித்த இப்பெரு மகனார் அவ்விழாக்களின் சிறப்பை சீரிய முறையில் காட்டுகிறார் அப்போது திருவீதியில் பவனி வந்த வீதி விடங்கப் பெருமானின் அழகைக் கண்டு

''பவனி வீதி விடங்களைக் கண்டிவள்
தவனியாயின் வாறென்றன் தையலே''
என மன முருகிப் பாடுகிறார்.

ஆரூர் நகரில் அவர் கண்ட பல வகையான அடியவர்களை முறையே

''.....உருத்திரப் பல் கணத்தார்
விரிசடை விரதிகள், அந்தணர் சைவர் பாசுபதர் கபாலிகள்

தெருவினில் பொழியும் தீருவாரூர் அம்மானே''
என நம் கண்முன் நிறுத்துகிறார்.

ஆடரவக் கிண்கிணிக்காலன்னானோர் சேடனான திருவாரூர் மூலட்டானனை, ஆரூர் அப்பனை, பூங்கோயில் உறைந்தவனை, புற்றிடங் கொண்ட ஈசனை, பவனி வந்த வீதி விடங்கனை, அரநெறியின் அப்பனை—''ஆதி''யானவன் எனக் குறிப்பிடுவதோடன்றி தில்லைக்கும் மூத்தபதி திருவாரூர் பதி எனக்கூறி தமிழகத்திலேயே மிகத் தொன்மையான திருக்கோயில் ஆரூர் தான் என மிகத் தெளிவாக, முழுமையான ஒரு பதிகத்தின் வாயிலாக மெய்ப்பித்துள்ளார்,

சுந்தரர் தேவாரம்

மூவர் முதலிகள் வரிசையில் இறுதியாக இடம் பெறுபவர், ஆரூரன், தம்பிரான் தோழன் என அழைக்கப்படும் சுந்தரமூர்த்தி நாயனார் ஆவர். இத்தவச் செம்மல் ஆரூர் திருக்கோயில் இறைவனைப் பற்றி 8 பதிகங்கள் பாடியுள்ளார். இவற்றில் திருத் தொண்டத்தொகை என்னும் பதிகமே பெரிய புராணம் எழுதுவதற்கு கருவாய் அமைந்த சிறப்புடைய ஒன்று. தம்பிரான் தோழரான் ஆரூர் இறைவனே தூது சென்று பரவை நாச்சியாரை சுந்தரர்க்குத் திருமணம் செய்து வைத்தல், திருவெண்ணை நல்லூரில் கிழ வேதியராய்ச் சென்று தடுத்து ஆட்கொண்டு அருள் பாலித்தது போன்ற பல அருட்செயல்களை சேக்கிழார் தமது பெரிய புராணத்தில் கூறுகிறார்.

சம்பந்தர் இறைவனை மிக உயரிய சோதி நிலையில் வைத்துப் பேசுகிறார். அப்பரோ அவனது திருவிளையாடல்களைக் காட்டி நம்முன் இறைவனை நிறுத்துகிறார். ஆனால் சுந்தரரோ இறைவனைத் தோழமைநிலைக்குக் கொண்டுவந்து காட்டுகிறார். இதனை ஆரூர் பதிகத்தில்

''.....என்னுடைய
தோழனுமாய் யான் செய்யும் துரிசுகளுக் குடனாகி

எனக் கூறுகிறார்.

யாக்கை நிலையாமையை எடுத்துரைத்து சிவ இன்பமே பேரின்பம் எனப் பகருகிறார். தன்னை ஒரு தலைவியாகவும் சிவனடியார்களைத்தோழியர்களாகவும் கற்பனைசெய்துகொண்டு

ஆரூரான் எனும் அருந்தவத்தலைவனை அடைய தூது அனுப்பு வதாகவே ஒரு பதிகம் யாத்துள்ளார், கிளிகளையும், பூவை களையும் தூதுவிடும் நயம் தமிழ் இலக்கிய சிறப்பின் குறிப்பிடத் தக்க ஒன்றாகும்.

மதனனை எரித்தது, முப்புரம் எரிசெய்தது, மதயானையை உரித்தது, நஞ்சுண்டது போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளை,

''..... அடல் மதனன் பொடியாகச்
செவ்வணமான் திருநயனம் வழி செய்த சிவமூர்த்தி''
''வன்னாகம் நான் வரைவில் அங்கிகணை அரிபகழி
தன்னாகமுற வாங்கிப் புரமெரித்த தன்மையனை''
''பேருரும் மதகரியின் உரியானைப் பெரியவர் தம்
சீருருந் திருவாரூர்ச் சிவனடியே''
''.....ஒலிகடல் நஞ்ச முதுண்ட
ரசன் இருப்பதும் ஆரூர்''

என நயம்பட உரைக்கின்றார்.

சுந்தரர் பாடிய எட்டுப் பதிகங்களில் மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்று '' திருத்தொண்டத் தொகையாகும் '' '' தில் லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன் '' எனத் துவங்கும் இப் பதிகத்தின் ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் '' ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே '' என்றே காணப்படும். நாயன்மார்களது பெயர்களும், வரலாறும் கூறித் தன்னை அவர்களது அடியார் களாகக் கூறும் பெரும் பண்பு நலனைக் காணலாம். சைவத்தின் மறுமலர்ச்சிக்கே காரணமான இவ்வரிய பதிகம் திருவாரூரில் மலர்ந்தது என்பது ஆரூரின் தனிச் சிறப்புக்கு காரணமாகும்.

மாணிக்கவாசகரின் திருவாசகம்

மணிவாசகப் பெருமான் தனித்தனிப் பதிகங்களாகப் பாடா விட்டாலும், திருவாசகத்தில் பல்வேறு இடங்களில் திருவாரூர் இறைவனின் புகழை மிகத் தெளிவாகக் கூறுகின்றார். இவரது பாடல் ஒன்றில் பிரமன் சிவபெருமானை ஆரூரன் என்று அழைப்ப தாக புகழ்கின்றார். இதனை

ஏரார் இளங்கிளியே எங்கள் பெருந்துரைக் கோன்
சீரார் திருநாமம் தேர்ந்துரையாய் — ஆரூரன்
செம்பெருமான் வெண்மலரான் பாற்கடலான் செப்புவபோல்
எம் பெருமான் தேவர் பிரான் என்று

திருவாசகத்தின் திருத்தசாங்கம் பாடலொன்று கூறுகின்றது. இப்பெருமகனாரின் பாடல்கள் அனைத்தும் தெவிட்டாத இன்பச் சுவை பயப்பனவாகும்.

சேரமான்பெருமாள் நாயனாரின் திருவாரூர் மும்மணிக்கோவை

''கார் கொண்ட கொடைக் கழஞ்சிற்றறிவார்க்கும் அடியேன்'' என நம்பியாரூரராற் (சுந்தரரால்) போற்றப் பெற்ற சேரமான் பெருமாள் நாயனார் சுந்தரரின சமகாலத்தில் வாழ்ந்தவராவார். தொண்டை நாட்டில் இராசசிம்ம பல்லவனும், பாண்டி நாட்டில் கோச்கடையன் ரணதீரனும் அரசு வீற்றிருந்த காலமாகிய கி. பி. 670 - 710ல் மலைநாட்டையாளும் வேந்தர் பெருமானாய் விளங்கியவர் இவர் என்பது அறியப்படுகிறது. சுந்தரரருடன் இணைந்து சிவத்தொண்டு புரிந்து, அவருடனேயே திருக்கயிலை சார்ந்தவர் சேரமான் பெருமாள் என்பதை ''சேரமான் பெருமாள் நாயனார் புராணம்'' வெள்ளானைச்சருக்கம் என்ற இருபகுதிகள் வாயிலாக சேக்கிழார் விரித்துரைக்கிறார்.

மும்மணிக் கோவை என்பது ஆசிரியம், வெண்பா, கட்டளைக் கலித்துறை என்ற மூவகைச் செய்யுட்களால் அந்தாதித்தொடை யமைய இயற்றப்பட்ட செந்தமிழ்ப்-பிரபந்தமாகும். தமிழ் நூல் களுள் மும்மணிக் கோவை ஒன்றே இப்பிரபந்தத்திற்குரிய மூல இலக்கியமாகத் திகழ்வது சேரமான் பெருமாள் இயற்றிய திருவாரூர் மும்மணிக்கோவை ஒன்றே ஆகும். மும்மணிக்கோவை என்ற செந்தமிழ் பனுவலை முதன் முதலில் யாத்தவர் சேரமான் பெருமாளேயாவார். இப் பிரபந்த நூல் சைவத்திருமுறைகளுள் பதினொராந்திருமுறையாகத் தொகுக்கப்பட்டு போற்றப்படுகிறது

திருவாரூர் மும்மணிக் கோவையிலுள்ள செய்யுட்கள் முப்பதும் அன்பின் திணையாகிய அகத்திணையைப் பொருளாகக் கொண்டு பாடப் பெற்றவையாகும். திருவாரூரில் கோயில் கொண்டருளிய சிவபெருமானை பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு உலக நூற் பொருளாகிய அகத்திணை யொழுகலாற்றைப் புலப்படுத்துவது இந்நூலாகும். உமையொருபாகத்திறைவனாகிய சிவபெருமான் வானின்றிழிந்த கங்கைப் பெருவெள்ளத்தின் வேகத்தைத் தடுத்து தன் செஞ்சடையின் கண் அடக்கி அருளியதும், தேயும் திங்களை அணிந்து உய்வித்ததும் அனைவரும் அஞ்சிய நஞ்சினையுண்டு

மிடற்றில் அடக்கி விண்ணோரை வாழ்வித்ததும், மேரு மலையை வில்லாக வளைத்ததும், திரிபுரத்தை எரித்ததும், தக்களது வேள்வியைச் சிதைத்ததும், கூற்றுவனது ஆற்றலை அழித்ததும், மன்மதனை எரித்ததும், யானையை உரித்துப் போர்த்ததும், அர்ச்சுனர்க்கு அருள்செய்ததும், ஆகிய செய்திகளும், அடியார்களுக்குப் பலவாறாக அருள் பாலிக்கும் திறனும் இப்பிரபந்தத்துள் ஆங்காங்கே குறிக்கப்பட்டுள்ளன.

திருவாரூர் எல்லையில் தெய்வங்களுக்கு உணவு படைத்ததற்குரிய பலிபீடக்கல் அமைந்தமையும், தேவர்கள் சிவபெருமானை வழிபடுதற் பொருட்டு இவ்வுலகத்திற்கு வருதலும், பகைவரோடு கடுஞ்சமர் புரிந்து இறந்து பட்ட வீரர்களுக்கு நடுகல் வழிபாடு நடந்தமையையும், திருவாரூர்க் கடைவீதியில் கண்ணாடியிற் பதுமையின் நிழல் படியப் பாவைக் கூத்து நிகழும் செய்தியும், ஆரூரில் திண்ணிதின் அமைந்த கரைகளை உடைய பெருங்குளம் இருந்தமையும் அவ்வூரில் பெருவிழாவின் ஆரவாரமும் இம்மும் மணிக் கோவையில் குறிக்கப் பட்டுள்ளன.

சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணம் (பெரிய புராணம்)

மாமன்னன் இரண்டாம் குலோத்துங்கனின் விருப்பப்படி கி. பி. 1140-ஆம் ஆண்டு சித்திரைத்திங்களில், தில்லைப்பதியிலே சேக்கிழார் பெருமான் அரங்கேற்றினார். சுந்தரர் பாடிய திருத்தொண்டத்தொகையும், நம்பியாண்டார் நம்பி இயற்றிய திருத்தொண்டர் திருவந்தாதியும், முதல் நூலாகவும், வழிநூலாகவும் கொண்டு இயற்றினார். பெருமைமிகு இந்நூலின் முதல் பகுதியில் திருமலைச்சிறப்பாக கயிலாயத்தின் சிறப்பும், திருநாட்டின் சிறப்பாகச் சோழநாட்டின் சிறப்பும், திருநகரச் சிறப்பாக திருவாரூர் நகரத்தின் சிறப்பும் கூறப்பட்டுள்ளது.

பெறர்க்கரிய இந்நூலில் சுந்தரரது வரலாறு, ஏயர்கோன் கலிக்காம நாயனாரின் சரிதம், விரன் மீண்டாரின் காதை, செருத்துணை நாயனார், கழற்சிங்கர், தண்டியடிகள், நமிநந்தி அடிகள் திருவாரூர் பிறந்தார்கள், சோமாசிமாற நாயனார் போன்றவர் புராணக்கதைகளும், இவை அனைத்துடன் ஆரூர் கொண்டு தொடர்பும் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது.

"திருமாகாள (அம்பல் திருமாளம்) புராணம்" மற்றும் "திருக்கடையூர் புராணம்" போன்ற பிற்காலப் புராண நூல்களும் பெரிய புராணத்தைத் தழுவிய திருவாரூர் தொடர்புடைய சில கதைகளை கூறுகின்றன.

திருவிசைப்பா

பூந்துருத்தி நம்பி காட நம்பி என்பவர் இயற்றிய திருவிசைப்பா சைவத்திருமுறைகளுள் ஒன்பதாந்திருமுறையில் வைத்துப் போற்றப்படுகிறது. நம்பி காட நம்பி எனும் பெருமகனார் திருவையாற்றுக்கு அண்மையில் உள்ள திருப்பூந்துருத்தியிற் பிறந்தவராவார். காடன் எனும் இயற்பெயரை உடையவர் இவர் பாடிய ''திருவாரூர் திருவிசைப் பாவில்'' இரண்டு திருப் பாடல்களே காணப்படுகின்றன. திருவாரூரில் ஆதியாய் விளங்கும் வீதிவிடங்கப்பெருமான் பவனி போந்து நடங்குலாவிய சிறப்பினை இப்பாடல்கள் விரித்து உரைக்கின்றன.

திருப்பல்லாண்டு

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டுக்கு முன்பு வாழ்ந்தவர் எனக் கருதப்படும் சேந்தனார் பாடிய திருப்பல்லாண்டு சைவத் திரு முறைகளின் வரிசையில் ஒன்பதாம் திருமுறையில் வைத்துப் போற்றப்படுகிறது. நாவுக்கரசரின் திருப்பல்லாண்டு, பெரியாழ் வாரின் திருப்பல்லாண்டு போன்றவைகளின் வரிசையில் வைத்துப் போற்றப்படும் இலக்கிய நயம் மிகுந்த பாடல்களைக் கொண்டது சேந்தனாரின் திருப்பல்லாண்டுமாகும்.

''குழலொலி யாழொலி கூத்தொலி யேத்தொலி
யெங்கும் குழாம் பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று விம்மி
மிகு திருவாரூரின்
மழவிடை யார்க்கு வழிவழி யாளாய்
மணஞ் செய் குடிப் பிறந்த
பழவடி யா ரொடுங் கூடியெம் மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே''

—என்பன போன்ற சிறந்த இலக்கிய ஆழம் கொண்டவை சேந்தனாரின் திருப்பல்லாண்டாகும்.

கமலாலய புராணம் (கமலாலயச் சிறப்பு)

கமலாலய மாஹாத்மியம் எனும் வடமொழி நூலைச் சிதம்பரம் மறைஞான சமபந்தர் என்பவர் தமிழிற் செய்யுள் நடையில் எழுதினார். இதன் திருவிருத்தத் தொகை 1065 ஆகும் இந்நூலை அவர் யாத்த காலம் கலியப்தம் 4647 என்றும், சாலி

வாகனம் 1469--கி.பி. 1547 ஆம் ஆண்டு என்பதை பாயிரசருக் கத்திலுள்ள செய்யுளால் அறியலாம். கமலாலயம் எனும் ஆரூர் திருக்கோயிலின் புகழை எடுத்தியம்புகிறது இவ்வரிய நூல்.

திருவாரூர் புராணம்

நாகரகண்டமென அழைக்கப்பட்ட வடமொழிப் புராணநூல் அளகை சம்பந்த முனிவரென்னும் வணிகர் ஒருவரால் திருவாரூர் புராணம் எனத் தமிழில் எழுதப்பட்டதாகும். இந்நூல் 2915 பாடல்களைக் கொண்டதாகும்.இந்நூலை அரங்கேற்றிய காலம் சாலிவாகன சகாப்தம் 1514 (கி. பி. 1592) பங்குனித் திங்கள் என்பதை அந்நூலின் பாயிரத்திலுள்ள 35ம் செய்யுளால் அறியலாம். 101 சருக்கங்களும், நாட்டுச் சிறப்பு, நகரச்சிறப்பு, பாயிரம் இவைகளைக் கொண்டு பல்வேறு புராண நிகழ்ச்சிகளை கூறுகிறது இந்நூல்.தேவாசிரியம் எனும் சிறப்பு மண்டபத்திலேயே இந்நூலும் அரங்கேறிய பெருமையை செய்யுள் ஒன்று விரித்துரைக் கிறது.

திருவாரூர் நான்மணிமாலை

கி. பி. 17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் ஆரூர் இறைவனின் புகழைப் பாடிய நூலே திருவாரூர் நான்மணிமாலையாகும். இந்நூல் அந்தாதித் தொடையால் வெண்பா, கலித்துறை, விருத்தம், ஆசிரியப்பா எனும் நால் வகைப் பாக்களால் ஆக்கப்பட்ட ஒன்றாகும்.

சிவபெருமானின் சடைமுடி தினைப்புனமாகவும், கிழக் கொல்லன் தொழில் நிலையமாகவும் உருவகப்படுத்தும் சிறப்பு இந்நூலுக்குண்டு. வேதத்திற்கு மறை என்று கூறுவதும், இறைவன் எச்சமயத்தார்க்கும் பொதுவானவன் என்று கூறும் பாங்கும், பல்வேறு நகையுணர்வூட்டும் பாடல்களும் கற்போரை இன்பத்தில் ஆழ்த்தும் சிறப்பும் இந்நூலுக்குரிய சிறப்பு அம்சங் களாகும்.

தியாகேசர் குறவஞ்சி

தமிழில் தோன்றிய பிரபந்தங்களில் இதுவும் ஒன்று. இது நாடகத்தமிழைச் சார்ந்தது. குறத்தி தோன்றுதலும் அவள் குறி சொல்லுதலுமே நூலின் பெரும் பகுதியாகும். திருவாரூர்

திருக்கோயில் இறைவனான தியாகராசரை பாட்டுடைத் தலைவனாகக்கொண்டது, காப்பும் மங்களமும் கூறப்பட்ட பின்பு ராச மோகினி என்ற தலைவி வருகிறாள். அவள் விரகத்தால் வருந்தி சந்திரனை நிந்தித்தலும், பின்பு பாட்டுடைத் தலைவனை விளித்தலும் அமைந்துள்ளது.

குறத்தியின் வரவைத் தெரிவிக்கும் அகவலில் திருவாரூரின் பலவகைச் சிறப்புகளும் மனுநீதிச் சோழனுடைய வரலாறும் விரிவாக அமைந்துள்ளன தியாகப் பெருமானின் தன்மைகள் பராசக்தி இத்தலத்தில் யோகத்தில் அமர்ந்திருத்தல் – மனுநீதி வரலாற்றில் புதிய செய்திகள் (தியாகரே பசுவாகவும், யமன் கன்றாகவும் வந்த செய்தி) ஆரூரின் விழாக்கள் போன்ற பல்வேறு சிறப்புச் செய்திகளும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

கி பி. 1684 முதல் 1714 வரை தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னனான சகசி மகராஜா காலத்தில் மலர்ந்ததே இந்நூல் என்பதை 3, 15, 25, 31, ஆம் பாடல்களின் வாயிலாக தெளிவாக அறியலாம். இந்நூலை யாத்த புலவர் பெயர் அறிய முடியவில்லை. இசை நாடகத்தின் உயரிய நூல் ஒன்று ஆரூரில் மலர்ந்துள்ளது என்பதை இந்நூலின் தன்மையால் அறிய முடிகிறது.

தியாகராச லீலை

''தியாகராஜலீலை''என வடமொழியில் இருந்த நூலின் ஒரு பகுதியை திருவாடுதுறை ஆதீன வித்துவானான மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் தமிழில் யாத்தார். வடமொழி மூல நூல் தியாகராஜ மூர்த்தியின் முன்னூற்றறுபது லீலைகளை யுணர்த்துவது. ஆனால் தமிழில் எழுதப்பட்ட தியாகராசலீலையில் முதல் பதின்மூன்று லீலைகளும் 14-ஆம் லீலையின் முதற்பாகமும் தான் உள்ளது. இந்நூல் கி. பி 1845–ஆம் ஆண்டு விசுவாவசு வருடம் எழுதப்பட்டது. கடவுள வாழ்த்து, திருநாட்டுப்படலம் போன்றவை விரிவாக அமைந்துள்ளது.

திருவாரூர் உலா

அந்தகக்கவி வீரராகவ முதலியார் என்பவரால் இயற்றப்பட்ட இவ்வுலா இலக்கிய நூல் நயம்பல மிகுந்த படைப்பாகும். தியாகப்பெருமானின் பல்வேறு பெருமைகளை எடுத்துரைக்கும்

சீரிய நூலுமாகும் ''கருணைகரத்தொண்டைமான்'' என்ற பெயரும திருவாரூர் இறைவனுக்குரிய நாமங்களுள் ஒன்றாகத் குறிப்பிடுகிறது இந்நூல்,

திருவாரூர் மருந்து வெண்பாமாலை

வித்துவான் தியாகராஜ செட்டியார் அவர்களால் தமக்கு இருந்த கண்ணோயை நீக்கும் பொருட்டு இயற்றப்பெற்றது இந்நூல். இப்பிரபந்தத்தில் தல வரலாறுகளும், பெரிய புராணத் திற்குறிப்பிடப்படும் நாயன்மார்களின் அருஞ்செயல்களும், திரு விளையாடற் புராணக் கதைகளும் காணப்படுகிறது. இதனை கி. பி. 1888–ம் ஆண்டு உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் பதிப் பித்துள்ளார்கள்,

தியாகேசர் தாலாட்டு

இந்நூலின் ஆசிரியர் இன்னாரென்று அறிய முடியவில்லை. அருமையான இந்நூல் பிக்ஷாண்டார் கோயில், ராவ்பகதூர் G. இராஜகோபாலபிள்ளை என்பவரின் பேரார்வத்தால் பதிக்கப் பட்ட ஒன்றாகும்

திருவாரூர்க் கோவை

தியாகராஜப் பெருமானைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு உண்ணாமுலை எல்லப்ப நாயினாரென்னும் புலவரால் கி. பி. பதினாறாம் நூற்றாண்டு இறுதியில் எழுதப்பட்டதாகும். இந்நூல காப்பு அவையடக்கம் என்பவற்றோடு 517 செய்யுட்களை உடையது தியாகப்பெருமானின் சிறப்பையும், திருவாரூர் தலத்தின் பெருமையையும் பலப்படபாராட்டுவது இந்நூலாகும்.

தேரூர்ந்த சோழ புராணம்

தஞ்சாவூர சரஸ்வதி மகால் நூலகத்தில் உள்ள சுவடி நூல் களுள் இதுவும் ஒன்று. கி. பி. 15 - 16 ஆம் நூற்றாண்டுகளில் எழுதப்பட்டுளள இந்நூல் சேக்கிழாரின் பெரிய புராணத்தில் காணப்படும் செய்திகளையே விரிவாக, சில பிற்கால புராணக் கதைகளுடன் இணைத்துக் கூறுகிறது முழுவதும் செய்யுள் நடை யிலேயே அமையாமல் செயயுள், விளக்கம் வசனம் இவைகளுடன் வடமொழி இலக்கியங்களை ஒத்து காணப்படும் அரிய தமிழ்

நூலாகும். சேக்கிழாரின் சொல்லாட்சி பல இடங்களில் அப்படியே கையாளப்பட்டுள்ளது சிறப்பு அம்சமாகும்,

''நன்று நீர் சொன்னபடி நடுவும் பாராராய் யிருந்தீர்! ஈட்டிற்படுந்தீய் பட்டெறிய வெளியிலே நீரை விடுவார்களோ! ஈட்டும் பயிர் தீர்ந்துலர்ந்துவிட யில்லா பாழுக்கிறைப்பார்களோ? போதப் பசி கொண்டு சிலர் வருந்த புளித்தேப்பவர்க்கு சோறிடு வார்களோ? காதற்குலமகள்தான் வருந்த கள்ள மாதரைக் கருது வார்களோ? வென்றி மறையவர் சொற் கேட்டு வேண்டுந்தானங் கள் மிகவீய்ந்தால் தன்றை இழந்து வருந்தும் கற்றாய்க்கு மருந்தாமோ? கொன்ற பழிதான் கோடாதவரை கோவின் முறை மையால் கொல்லுகின்றான்! இன்றே மகன் கொன்ற பசுப் பழிக்கு இசைந்த தானங்கள் செய்திடவோ? மொழிந்தபடி நன்று மந்திரி கள் முதற்கோணல் முத்துங்கோணாதோ? இழந்து விடுவேன் மைந்தனை.இதுவே நீதியென மொழிந்தான்'' என்ற மனு நீதிச் சோழனின் கூற்றுக்கள் போன்றவை சுவையானவையாகும்.

தேரூர்ந்த சோழன் கதை

தஞ்சை சரஸ்வதி மகால் நூலகத்தில் சுவடி எண் 215 ஆக உள்ள இந்த ஏட்டுச்சுவடி நூல் இன்னும் பதிப்பிக்கப்படவில்லை. மனுநீதிச் சோழனின் கதையை எளிய வசன நடையில் கூறுகிறது இந்நூல். பொருட்சுவை மிகுந்த இந்த நூலின் இறுதியில் காணப் படும் தெலுங்கு மொழிக்குறிப்பால் இது தளவாய் ஒருவருக்கு சொந்தமான சுவடி நூல் என்பதை அறியமுடிகிறது. ஒரு மன்னன் எத்தகைய நெறியுடையவனாக இருத்தல் வேண்டும் என்பதை மனுச்சோழனின் கூற்றின் வாயிலாக இந்நூல் குறிப்பிடும் கடமை கள் நோக்குதற்குரிய ஒன்றாகும். இந்நூல் பற்றிச் சற்று விரிவாக ''மனுநெறியும் மன்னவன் செங்கோலும்''என்ற பகுதியில் காண்க.

மனுநெறி கண்ட வாசகம்

இராமலிங்கரின் திரு அருட்பாவில் உள்ள ''மனு நெறி கண்ட வாசகம்'' ஆரூர் இறையருளால் மனு வேந்தனின் காவியம் எவ்வாறு சிறப்பெய்தியது என்பதை விரித்துரைக்கின்றது. இதில் பல பிற்காலக் காவியங்கள் சிறப்பாகப் பேசப்படுகின்றது.

தியாகராசர் பள்ளு

16ஆம் நூற்றாண்டில் கமலை ஞானப் பிரகாசர் என்பவரால் இயற்றப்பட்ட ''பள்ளு''த் தமிழ் இலக்கியமாகும்.

திருவாரூர்ப் பன்மணி மாலை

இலக்கண விளக்கம் இயற்றிய திருவாரூர் வைத்தியநாத தேசிகர் என்பவரால் இயற்றப்பட்ட அருமையான தமிழ் நூலாகும்.

திருவாரூர் ஒருதுறைக் கோவை

வெறிவிலக்கென்னும் துறையில் அமைந்த நானூறு செய்யுட் களையுடையது; கிழ்வேளூர்க் குருசாமி தேசிகர் என்பவரால் இயற்றப்பட்ட நூலாகும்.

கமலாம்பிகை பிள்ளைத்தமிழ்

திருவாரூர் மாலை

கமலாம்பிகை மாலை

தியாகராசர் கழிநெடில்

தியாகராசர் வசந்தக்கலிப்பா

போன்ற நூல்கள் பிற்காலத் தமிழ் நூல்களின் ஆசிரியர்களின் பெயர் அறிய முடியவில்லை. இவை பிற்காலத் தமிழ் இலக்கி யத்தின் சீரிய படைப்புக்களாகும்.

அஜபா நடேசர் பதிகம்

திருவாரூர்பாதி திருவொற்றியூர்பாதி

போன்ற நூல்கள் தருமை ஆதீன வெளியீடுகளாகும்.

திருவாரூர் இரட்டை மணி மாலை

திருவாரூர் விநாயகர் இரட்டை மணி மாலை

என்ற இருநூல்களும் திருவாரூர் சதாசிவ தேசிகரால் பாடப்பட்ட நூல்களாகும்.

திருவாரூர் பதம் எனும் பக்தி நூல் பாபவிநாச முதலியார் என்பவரால் பாடப்பட்ட ஒன்றாகும்.

கந்தபுராணம்–கந்தவிரதப்படலம் 120ஆம் பாடலும், குமராபுரிப்படலத்துப் பாடல் ஒன்றும் திருவாரூரின் பெருமைகளைப் பேசுகின்றன.

சித்தீச்சரம் தக்ஷிணாமூர்த்தி பதிகம்

சித்தீச்சரம் தக்ஷிணாமூர்த்தி மாலை என்ற இரண்டு நூல்களின் ஆசிரியர் யார் என்று அறிய முடியவில்லை.

சுவடியில் உள்ள பாடல்

தஞ்சாவூர் சரஸ்வதி மகால் கையெழுத்துப் பிரதிகளுள் ஒன்றில் காணப்படும் பாடல் ஒன்று.

''ஆரூரன் சன்னதிபோல் ஆரூரலயம் போல்
ஆரூரன் பாதத் தழகுபோல் — ஆரூர்
மருவெடுத்த கஞ்ச மலர் வாவி போல் — நெஞ்சே!
ஒருவிடத்துண்டோ வுரை''

என்று கூறுகிறது.

தமிழ் நாவலர் சரிதையும், பெருந்தொகை கூறும் சுவையான கதையும்

ஆரூர் கோயில் சிவாச்சாரியர்களில் ஒருவரான நாகராசநம்பி என்பவர் அறுபத்து மூவர் விக்கிரகங்களுள் ஒன்றை அபகரித்து விற்று விட்டார். இச்செய்தியை தலத்தார்கள் அரசராகிய கிருஷ்ண தேவராயரிடம் அறிவிக்க எண்ணியும், நாகராச நம்பிக்கு பயந்து சிலநாள் வாளா இருந்தனர். விக்கிரகம் கன்னான் உலைக் களத்தை அடைந்துவிட்டது. இதனை அறிந்த புலவர் ஒருவர் இனியும் சும்மா இருத்தல் கூடாதென்று தன வீட்டிலிருந்த பஞ்சவர்ணக்கிளி ஒன்றுக்குப் பின் வரும் பாட்டை பழகி வைத்து இருந்தார். அந்த கிளியைக் கோயிலுக்குக்கொண்டு வந்து கட்டி விட்டார். மாத வழிபாட்டுக்கும் கண்காணிப்புமாக வந்த அரசர் கிளி அழகில் ஈடுபட்டுக் கூட்டினருகே சென்றார். கிளி

''முன்னால் அறுபத்து மூவர் இருந்தாரவரில்
இன்னாள் இரண்டு பேரேகினார் — கன்னான்
நருக்குகின்றான் விற்றுவிட்ட நாகராச நம்பி
இருக்கின்றான் கிருட்டின ராயா''

என்ற பாட்டை கூறிற்று. அரசர் செய்தியறிந்து விசாரித்து விக்கிரகத்தை திரும்பப்பெற்றார்;– என்று இந்நூல்கள் கூறுகின்றன.

தத்துவபிரகாசரின் பாடலும் கதையும்

ஓர் காலத்து ஆரூர் கோயிலில் பூசை முட்டுப்பாடுற, திருவீழி மிழலைக் குருக்களிற் சிலரைக்கொண்டு வந்து கிருஷ்ண தேவராயர் பூசை செய்வித்தார். அவர்களும் சிலநாட்களில் பூசையை செய்யாது விட்டனர். ஆனால் உற்சவத்தை மட்டும் விமரிசை யாகச் செய்தனர்.கொடியிறக்க வேண்டிய நாளில் தத்துவ பிரகாச ரென்பார்,

மருவு புகழ் க்ருஷ்ண மகாராசராணை
அரிய வடமலையா ராணை — திருவாரூர்ப்
பாகர் கொடியறுப்பார் பாதத் திருவாணை
தியாகக் கொடி யிறக் காதே''

..என்ற வெண்பாவைக் கூறினார். அதனால் கொடி இறங்க வில்லை. அரசர் அவரை வினாவினார். அதற்கு அவர்:

'' ஊழித் துலுக்கல்ல வொட்டியான் றானுமல்ல
வீழித் துலுக்குவந்து மேலிட்டே — ஆழி
சிறந்ததே ராருர்த் தியாகருடைப் பூசை
இறந்ததே கிருட்டிண ராயா''

என்ற பாட்டைச் சொன்னார். அரசர் கோபித்து உடனே பட்டரை மாற்றிவிட்டார். அதைக்கண்ட தத்துவப்பிரகாசர் பட்டரைப் பார்த்து,

'' உண்ட வயிற்றி லுமிக் காந்த லிட்டதே
தொண்டரே வீழித் துலுக்கரே — பண்டெலாம்
அப்பம் அவல்என் அதிரசமும் தோசைகளும்
கப்பவதே போச்சே கவிழ்ந்து''

... என்ற பாடலைக் கூறிப் புத்தி புகட்டினார் என்று கூறுகிறது.

''மனுநீதி சோழ மகாராசா நாடகம்''

தமிழிசை நாட்டிய நாடகம்

இதுவரை வரலாற்றுலகு அறிந்திராத ஆரூர் திருக்கோயிலி னால் மலர்ந்த ஓர் அரிய இசை நாடக நூல் ஒன்றினை இங்கு அறிமுகப்படுத்துவதில் பெருமை கொள்கிறோம். சுமார் 200 ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்நூல் இன்று சுவடி வடிவிலே கிடைத் துள்ளது. இது இன்றளவும் இசை நாடகமாக நடிக்கப்பட்டும் வருகிறது:

இவ்வரிய சுவடியை தஞ்சாவூர் மாவட்டம் ஆண்டாங்கோவில் (வலங்கைமான் அருகில்) எனும் சிற்றூரில் உள்ள திரு. உ. காத்தையா வாயாடியார் என்பவர் பாதுகாத்து வருவதோடு– இந்த அரிய இசைத்தமிழ் இலக்கியத்தைக் கூத்துத் தமிழில் நாடக மாக நடித்தும் வருகின்றனர். இது தமிழகத்திலேயே இவ்வூரிலன்றி வேறெங்கும் காணமுடியாத ஒனறாகும். மெலட்டூர் பாகவத மேளா போன்றே இதுவும் தமிழில் பரம்பரையாக ஆண்டாங் கோயிலுக்கென்றே போற்றப்பட்டு வருகிறது. ஒவ்வோர் ஆண்டும் சித்திரைத்திங்கள் முழு நிலவின் மறுநாள் தொடங்கி 5, 7 அல்லது 9 நாட்கள் நாடகமாக நடிக்கப்படுகிறது. நாடகம் முடிநதவுடன் பங்கேற்ற அனைவரும் ஆரூர் பெருமானை வணங்கித்திரும்புதல் மரபாகக் கொண்டுள்ளனர்.

தற்போது கிடைத்துள்ள ஓலைக்சுவடி சுமார் 125 ஆண்டு களுக்கு முன்பு பழைய சுவடியை புதுப்பித்து எழுதியுள்ளனர். தற்போது சுவடியையும்–இந்தநாடகத்தை மரபு தவறாமல் காத்து வரும் திரு. காத்தையா வாயாடியாரின் தாத்தாவின் தந்தையான திரு. பாட்டு வாயாடியார் என்பவர் காலத்தில் தான் இச்சுவடி புதுப்பித்து எழுதப்பட்டுள்ளமையை சுவடிக்குறிப்பால் அறியலாம் இதனை சுவடி - '' எங்கள் குருவாகிய முத்துசுவாமி வாத்தியா ரிடத்தில் வாசித்த ஜீழன் வீரு முனைதரையரிடத்தில் நாடகம் கற்பித்துக்கொண்ட மேலவிடயலில் இருக்கும் முத்துசுவாமி வாயாடியார் குமாரன் பாட்டு வாயாடியார் 1. சாமிநாதபத்தர் மகன் லெக்ஷ்மண பத்தர் 2. இவர்களால் நந்தன வருஷம் மாசி மீ 15ந் தேதி இந்த சோழராசா நாடகம் யேற்றப்பட்டு சிவடி எழுதியது முற்றும்.....என்று குறிப்பிடுகிறது.

மேலும் இந்நூலில் காணப்படும் ஆகூர்வதும் பையணி ஆரூர் திருவடியை அனுதினமும் அன்பாய் போற்றி திக்கு புகழ் சோழேந்திரன் தேரூர்ந்த வாசகத்தை செந்தமிழால் கூற மிக்க புகழ் கவிக் கடலோன் அவருமே யீன்றெடுத்த பேதை நாமன் யிக்கதையை மிக்கவெங்கும் ஆகையினால் நாடகமாயியம் பிநோமே '' என்பதால் நூல்பாடியவரையும் அறிய முடிகிறது.

அழகு தமிழால் பல பாடல்கள் இயற்றப்பட்டுள்ளதோடு, சிறந்த வசனங்களும் இடையிடையே காணப்படுகிறது. கர்நாடக இசையை முழுமையாக முறைப்படி பயன்படுத்தி பாடல்களின் சந்தங்களுக்கேற்ப ராகங்களும் முறைப்படுத்தப்பட்டு காணப்படு கிறது. இதில் காணப்படும் அபூர்வராகங்களும், பாடல்களின்

சந்த அமைப்பு, சொல்லாட்சி, போன்றவை வியக்கத்தக்க அளவு உள்ளன.

இந்நாடக காதையிலும் தியாகப் பெருமானின் பல்வேறு தனிச் சிறப்புகள் மட்டுமின்றி, அப்பெருமானே பசுவாகவும், யமன் கன்றாகவும் வந்தமை குறிக்கப்பட்டுள்ளது மனு நீதியின் மைந்தனின் பெயராக வீதி விடங்கன் என குறிக்கப்பட்டுள்ளது. முசுகுந்தனின் புகழ் பேசப்படுகிறது. குறத்தி ஒருத்தியின் குறி சொல்லும் பாடலோடு நாடகம் முற்றுப் பெறுகிறது.

''பெருந்தொகை'' எனும் நூலில் காணப்படும் பாடல்கள்

திருவாரூர் உலா பற்றிய பாடல்கள்

1. தெள்ளு தமிழாரூர்த் தியாகேசர் மெய்யன்பு
கொள்ளுங் கமலையுலாக் கூறினனால் — உள்ளக்
குவி வீர ராகவன் சொற்கூடிற் புலவீர்
கவி வீர ராகவன் சொற்கண்டு.

2. புவியோர் பெறுந்திரு வாரூ ருலாவைப் புலவர்க்கெலாம்
செவியே சுவை பெறு மாறுசெய்தான் சிவஞானவனு
பவியே யெனுநங் கவிவீர ராகவன் பாடியநற்
கவியே கவியவனல்லாத பேர்கவி சுற்கவியே

3. ஓட்டக் கூத்தன் கவியு மோங்கிய கம்பன் கவியும்
பட்டப் பகல்விளக்காய் பட்டவே — யட்டதிக்கும்
வீசுங் கவிவீர ராகவனாம் வேளாளன்
பேசுங் கவி கேட்டபின்.

திருவாரூர் சிறப்புகள்

4. சங்குதிர்த்த தந்திருச் சாளரவாயில் வீர
சிங்காதனத் திருவந்திக்காப்புப் — பங்குனிமர
தத்திருநா டூர்த்தந் திருவினா தன்கோயில்
உத்திர பாதத் திருவாரூர்.

சத்த விடங்க தலங்கள்

5. சீரார் திருவாரூர் தென்னாகை நள்ளாறு
சுர்ராார் மறைக்காடு காறாயல் —பேரான
ஓத்ததிரு வாய்மூர் உவந்ததிருக் கோளிலி
சத்த விடங்கத் தலம்.

வீரணுக்க விஜயம்

கி.பி. 12ஆம் நூற்றாண்டு கல்வெட்டு ஒன்றில் (A.R. No. 548 of 1904) தேவாசிரிய மண்டபத்தில் வீரணுக்க விஜயம் என்ற கூத்து பாடப்பட்டதாக அறிய முடிகிறது. இந்நூல் தற்போது கிடைக்கவில்லையாயினும் ஆரூர் திருக்கோயிலில் உதித்த இலக்கிய முத்துக்களில் இதுவும் ஒன்றாகும்.

திருப்புகழில் திருவாரூர்

அருணகிரியார் சோழநாட்டுத் திருத்தலங்களைத் தரிசித்து தலந்தோரும் திருப்புகழாம் பாமாலை சூடிவந்த காலை, திருவாரூர்ப்பதி வந்து தங்கினார். அப்போது ஆரூரின் புற நகரான விசயபுரத்து இறைவனைப் பாடிப் பின்பு ஆரூர் திருக் கோயிலில் அமர்ந்துள்ள முருகப் பெருமான் மீது ஏழு பாடல் களைப் புனைந்தார். இத் திருப்புகழோடு மனுநீதியின் கதையை யும் உரைத்தார். ஆரூரில் இருந்த பெரிய மடத்து இறைவனையும், சோமநாதன் மடத்து இறைவனையும் இரண்டு தனிப்பாடல்களில் போற்றினார். இவ்வாறு அருணகிரியாரின் திருப்புகழாம் திருப் பாடல்களாலும் ஆரூரின் இலக்கிய வளம் மேலும் மெருகேறியது.

தனிப்பாடல்கள்

மஹா மகோபாத்யாய உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் திருவாரூர் தலம் பற்றிய சில தனிப்பாடல்களைத் தொகுத்து உள்ளார். இவற்றை திருவாரூர்க்கோவை எனும் நூலின் இறுதிப் பகுதியில் வெளியிட்டுள்ளார். அப்பாடல்களாவன;

1. ஆனா ரிலையே யயனுந் திருமாலும்
கானா ரடிமுடிமுன் காண்பதற்கு—மேனாள்
இரவுதிரு வாரூரி லெந்தைபிரான் சென்ற
பரவைதிரு வாயிற் படி.

2. திருந்தா டாவணியுந் தென்கமலை யீசர்
இருந்தாடா தென்செய் திடுவார்—பொருந்த
ஒருகாலே யல்லவே யொண்டொடிக் காவன்
றிருகாலுஞ் சந்துபோ னால்.

3. ஒருமாடு மில்லாமன் மைத்துனான ருலகமெலாம்
உழுதே யுண்டார்,
நரைமாடோ வொன்றிருக்க வுழுதுண்ண மாட்டாமல்
நஞ்சை யுண்டீர்
இருநாழி நெல்லிருக்க விரண்டுபிள்ளை தாமிருக்க
இரந்தே யுண்டீர்
திருநாளு மாயிற்றே செங்கழலைப் பதிவாழும்
தியாக னாரே.

4. நல்லாளை யிடமருவுந் தியாகையா வுமதிடத்தில்
ஞாயங் காணோம்
கல்லாலே யெறிந்தோற்குஞ் செருப்படியா லுதைத்
தோற்கும் கடிந்து போரில்
வில்லாலே யடித்தோற்குங் கொடுத்தீரே யல்லாமல்
விழிநீர் சோர
எல்லாமுன் செயலென்றே யிருப்போருக் கியாதொன்றும்
ஈகி லீரே.

5. விற்கம்பத் தடியதனா லடியுண்டான் விண்ணவரை
வேலை கொள்ளும்
நற்கம்பத் தடியானுந் தூக்கவசை யானாரூர்
நாதன் கோயிற்
பொற்கம்பத் தடியினின்று வன்மீகத் தானையுன்னிப்
போற்றி னோர்க்குச்
சொற்கம்பத் தடியப்பான் மோட்சம்பத் தடியாகத்
தோற்றுந் தானே.

6. ஐயநீபு ரங்கள் வென்ற தொக்கு மிக்க காலனார்
அழிய வென்ற தொக்கு மற்ற னைத்து மொக்கு மாயினும்
வெய்ய காம தகன ரென்னும் விருது சின்ன வோசையால்
வெட்கி னேனு மக்கு மிந்த விருது சொல்ல வேற்குமோ
எய்ய வாசு கங்கள் பட்டு வெருவி யோடி யரணிலா
ஏழை வீடு புக்கொ ளித்து மின்னு மாரன் வருவனச்
செய்ய மேனி பாதி யும்வெ ளிப்ப டாத கமலைவாழ்
தியாக ராய ரேசி றந்த தென்றல் வாச வழகரே.

7. வீர வெண்ட யப்ர தாபர் த்யாக ராசர் கமலைசூழ்
வீதி கண்டு பவனி கண்டு விந்தை கண்டு பந்தியாய்த்
தூர நின்ற பூவை காள டுத்து நின்ற கிள்ளைகாள்
துன்ப மேய லாது பாவி சுகம றிந்த தில்லையால்

மார னம்பு பட்ட காய மாறு தில்லை யிரவெலாம்
மங்கை மார்தொடுத்த சண்டை மாறு தில்லையென்செய்வேன்
ஆரி ருந்து முதவி யில்லை யென்ற னாசை யொழியுமோ
அதுவு மில்லை விதியை நொந்து மாவ தில்லைகாணுமே

8. வீடங்காட்டிக் கண்டத்திற் மேலுரி காட்டித்தம்
மெய்யினேப்புற்
றிடங்காட்டி வாலை யொருபுறங் காட்டிவண் டேறுமலர்த்
தடங்காட் டியபொழி லாரூர்த் தியாகர் தமது பொற்றுட்
படங்காட்டி யாடிநின் முருல கேழும் பணியென்னவே.

9. ஏழைக் கிரங்கிடும் வன்மீக நாத ரெழில்வரையில்
யாழை வருத்து மொழிமட வாய்நல் லனமிருக்க
வாழை வருக்கைக் கனியிரு பாற்குடம் வைத்திருந்தும்
கூழை யெனக்களித் தீர்மறு மாற்றங் கொடுத்திடுமே.

10. நச்சணி கண்டத்த ராரூர்த் தியாகர் நளினவெற்பிற்
கச்சணி யுந்தன மாதே யிதுவென்ன காரணமோ
அச்சுத ஞமத் திரண்டா மெழுத்தி னரையெழுத்தில்
வச்சிர பாணி முனையாள் பகைவந்து வாய்த்ததுவே.

வடமொழி நூல்கள்

பல அரிய தமிழ் இலக்கியங்களைத் தவிர 28க்கும் மேற்பட்ட வடமொழி நூல்களும் இத்திருக் கோயிலாம் பொய்கையில் மலர்ந்துள்ளன. அவற்றில் குறிப்பிடத்தக்கவை பின்வரும் வடமொழி இலக்கியங்களாகும்.

1. அஜபா ரகசியம்
2. ஆடகேஸ்வர மாஹாத்மியம்
3. கமலாலய மாஹாத்மியம்
4. நாகர கண்டம்
5. தியாகராஜ லீலை
6. சமத்கார புர மாஹாத்மியம்
7. தேவ யாக புர மாஹாத்மியம்
8. தியாகராஜ மாஹாத்மியம்

9. தேவாச் ரய மாஹாத்மியம்
10. முசுகுந்த புர மாஹாத்மியம்
11. ராமகயா மாஹாத்மியம்
12. ஸ்ரீபுர மாஹாத்மியம்
13. ஸ்கந்த புர மாஹாத்மியம்
14. சேத்திரவர மாஹாத்மியம்
15. முத்துசாமி தீட்சதர் கீர்த்தனம்
16. தியாகராஜாஷ்டகம்
(தேவேந்திரா மற்றும் திரயம்பக பட்டர்)
17. கமலாலயஸ்துதி
18. தியாகராஜ நவரத்ன மாலிகா
19. கமலாலய மாகாத்மியம் (கவி விடம்பனம்)
20. கமலாலய மாகாத்மியம் (பத்ம புராணம்)
21. கமலாலய ஸ்துதி
22. கமலாம்பா பிரார்த்தனம் (சங்கரசாஸ்திரி)
23. கமலா பிரபத்தி பஞ்சாசத் (மகாலிங்கசாஸ்திரி)
24. கமலா பத்யஷ்டகம்
25. தியாகராஜ நாமாவளி
26. தியாகராஜ முசுகுந்த சஹஸ்ர நாமாவளி
27. தியாகராஜஸ்தவ
28. தியாகேச ஸ்துதி.

தெலுங்கு இலக்கியங்கள்

சங்கர பல்லக்கி சேவ பிரபந்தம்

கி. பி. 1684 — 1710 வரை தஞ்சையை ஆட்சி புரிந்த மராட்டிய மன்னன் சகசியால் (சாஹஜி) எழுதப்பட்ட தெலுங்கு நாட்டிய நாடகமாகும். ''அச்சதெலுகு'' எனச்சொல்லப்படும் தூய தெலுங்கு மொழியில் எழுதப்பட்ட இந்நூல் மிக அரிய ஓர் நூலாகும். (சரஸ்வதி மகால் சுவடி எண் — 620 — 24)

"பல்லக்கிலேவ பிரபந்தம்பு திவஸ — வல்லபான்
வாயுடேக வஸுதீச தர்ம
பத்னி தீபாம்ப கர்ப்பஸ்னிக்த போடி
—ரத்னம்பு ஸ்ரீ ஸாஹராஜேந்த்ரு
டினரிஞ்செ கவியெல்ல னுல்லஸில்
—லங்க தனருத னாசந்த்ர தரார்க்க முகனு!

என்ற பாடல் குறிப்பால் மன்னனே எழுதியது என்பது தெரிய வருகிறது.

ஆரூர் தியாகப்பெருமான் தனது பள்ளியறைக்கு அலங்கரிக்கப் பட்ட பல்லக்கில் செல்லும் அரிய காட்சியையே இக்காவியம் எடுத்தியம்புகிறது.

சுங்கரகாளீ நடன சம்வாதம் அல்லது தியாகராஜ விநோத சித்ர ப்ரபஞ்ச நாடகம்

தஞ்சை சரஸ்வதி மகால் நூலகத்தில் உள்ள தெலுங்கு சுவடி களின் வரிசையில் (MS. No - 571, 572) உள்ள இந்த நூலும் சகசி மன்னனாலேயே எழுதப்பட்டதாகும். ஆரூர் தியாகப் பெருமானிடத்து இம்மன்னன் கொண்ட ஆழ்ந்த பக்தியின் முத்திரையே இந்த அரிய நூலாகும்.

இந்த நாடகத்தில் வடமொழி, தெலுங்கு, மராட்டி முதலிய மொழிகளில் அமைந்த பாடல்கள் தெலுங்கு லிபியில் எழுதப் பட்டுள்ளது. நாடகத்தின் தொடக்கமான முதலங்கமும் இறுதி அங்கமும் வடமொழியில் உள்ளன. சிருங்காரம், வைராக்கியம், நீதி, பாவம் போன்றவை பத சாஹித்தியங்களால் அமைந்துள் ளன. குறிப்பாக கமலாம்பாளின் அங்க அவயவங்களை, இரத் தினத்தோடும், புஷ்பங்களுடனும், நவக்ரகங்களுடனும் உவமான உவமேயங்களுடன் ஒப்பிட்டு பதசாகித்தியங்கள் காணப்படு கின்றன. சில ஜாவளிகளும் உள்ளன. ஒரே பதசாகித்தியத்தில் இரண்டு மொழிகளும், மூன்றுமொழிகளும் கூட உள்ளன. ஏக அட்சர பல்லவி, த்வக்ஷரபல்லவி, திரியட்சரபல்லவி, சதுராஷ்டிர பல்லலி, பஞ்சாக்ஷர பல்லவி போன்றவைகளும் உள்ளன. ஜக்னி, சலாம், தரு போன்ற கௌதூக சாஹித்தியங்களும் காணப்படு கின்றன.

கதை நாரதரின் கலகத்தில் ஆரம்பித்து சிவசக்தி நடனத்தில் போட்டி ஏற்பட்டு, இருவரும் பலவித நாட்டியங்களுள் சிறந்த தான ராஜ்ய நாட்டியமான சகசி மன்னனின் நாட்டு நாட்டியத் தையே போட்டிக்காகத் தேர்ந்தெடுத்து, ஆடி, இறுதியில் பார்வதி தோற்பதாக முடிகிறது.

தியாகேச பதமுலு

தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூலகத்தில் உள்ள தெலுங்கு சுவடி நூல்கள் வரிசையில் உள்ள இந்த நூலும் (சுவடி எண் B. 11187;11630) மராட்டிய மன்னர் சகசியால் (சாஹஜி) எழுதப்பட்டதாகும். ஆரூர் தியாகப் பெருமானின் புகழை பல்வாறாகப் புகழும் கீர்த்தனங்களின் தொகுப்பே இந்நூல். கர்நாடக இசையின் சிறந்த முத்துக்களாக இக் கீர்த்தனங்கள் திகழ்கின்றன.

பஞ்சரத்ன பிரபந்தம்

தஞ்சை சரஸ்வதி மகால் நூலகத்தில் உள்ள இந்த நூலும் (தெலுங்கு) சகசி (சாஹசி) மன்னனால் எழுதப்பட்டு தியாகப் பெருமானுக்காகவே அர்ப்பணிக்கப்பட்ட ஒன்று. ஐந்து வித நாட்டியச் சிறப்பு இந்நூலில் கூறப்பட்டுள்ளது.

மராத்திய மொழிகள்

''தியாகராஜ தியான'' தஞ்சை சரஸ்வதி மகால் நூலகத்தில் மராத்தி மொழி சுவடிகள் வரிசையில் MS No. 562 ஆக உள்ள இந்த நூலில் திருஆரூர் தியாகப் பெருமானின் தியானங்கள் பற்றி விவரிக்கின்றது.

தியாகேஸ்வர ஆகமோத்த தியான

இதுவும் தஞ்சை நூலகத்தில் மராத்தி மொழி வரிசையில் MS. No. 564 ஆக உள்ளது. ஆரூர் தியாகப் பெருமானின் புகழைப் பாடுகின்றது.

தியாகேச மாகாத்மிய

தஞ்சை சரஸ்வதி மகால் நூலகத்தில் உள்ள இந்த சுவடி நூல் (MS. 563) 18 ஆம் நூற்றாண்டில் வசித்த ஸ்ரீ ராம பண்டிதர் என்பவரால் எழுதப்பட்டதாகும். இந்நூல் அச்சாகிவிட்டது.

இதில் திருமால், மகன் வேண்டித்தவம் இருந்த வரலாறும், உமையவள் சீற்றத்தால் மாலவன் சோமாஸ்கந்தரை வழிபடுதல்—முசுகுந்தன் எனும் மன்னனின் வரலாறு—தேவாசுர போர் இந்திரனுக்கு முசுகுந்தனின் உதவி; இந்திர லோகத்திலிருந்து முசுகுந்தனால் தியாகராஜர் எடுத்து வரப்படுதல், திருவாரூரில் தாபித்தல் போன்ற புராணக் கதைகள் விரிவாக காணப்படுகிறது.

தியாகராஜ விலாச

மராட்டி மொழி தெலுங்கு லிபியாக உள்ள இந்த சுவடி நூலும் தஞ்சை சுவடி நூலகத்தில் உள்ளது. இதில் சுந்தரர் பரவை நாச்சியாரின் காதல்—இறைவன் பரவையாரிடம் தூது செல்லுதல்—இதனால் ஏற்பட்ட பிரிவால் கமலாம்பாள் விரகம் கொள்ள அதனால் ஊடல் கொள்ள, இவர்களது ஊடலை சுந்தரர் தீர்த்து வைத்தலும் கூறப்பட்டுள்ளது.

கமலாலய மகாத்மிய

ஸ்ரீ இராமபண்டிதர் என்பவரால் எழுதப்பட்ட இந்த சுவடி நூலும் தஞ்சை சுவடி நூலகத்தில் (தேவராஜிராவ் கலெக்ஷன் S. No·3) உள்ளது. ஆரூர் திருக்கோயிலின் புகழைப் பாடும் இந்நூல் சிறந்ததொரு மராத்தி நூலாகும்.

இது காறும் கண்ட நூல்களின் வரிசையைத் தொகுத்து நோக்கும் போது பல மொழிகளிலும் இவ்வளவு நூல்கள் ஆரூர் திருக்கோயிலில் மலர்ந்துள்ள அளவு வேறு எந்த திருக்கோயிலிலும் இருக்க முடியாது எனக் கூறலாம். மொத்தத்தில் இத்திருக்கோயிலை ஓர் இலக்கியப் பொய்கை என்று கூறுவது பொருத்தமான ஒன்றாகும்.

செப்புத்திருமேனிகள்

செப்புத்திருமேனிகள்

கற்சிற்பங்கள், வண்ண ஓவியங்கள் போன்ற பல்வேறு அம்சங்களால் புகழ் பெற்ற ஆரூர் திருக்கோயில் அற்புத செப்புத் திருமேனிகளைப் பெற்றுள்ளதாலும் சிறப்பிடம் வகிக்கின்றது. இங்கு சோழர்காலம் தொடங்கி பல்வேறு மன்னர்கள் கால செப்புத் திருமேனிகள் நூற்றுக்கும் மேல் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்க திருமேனிகளைப் பற்றி விரிவாகக் காண்போம்.

தியாகராஜ மூர்த்தி (வீதி விடங்கர்)

பல்வகை சிறப்புகள் பெற்ற இத்திருமேனி சோமாஸ் கந்தர் திருமேனியாகும். கயிலயம் பெருமான் சுகாசனத்தில் வீற்றிருக்க அருகே உமையவளும் ஓய்யாரத்துடன் அமர்ந்திருக்கக் குழந்தை முருகன் நிற்கும் கோலத்துடன் உள்ள இத்திருமேனி தற்போது வழிபாட்டு நெறியில் முற்றிலும் அலங்காரங்களால் மூடப்பட்டு முகம் மட்டும் தெரியும் வகையில் பேணிக் காக்கப்படுகிறது. இத்திருமேனி பல்லவர்கால செப்புத் திருமேனியென சிலர் கருதுகின்றனர். படிம இயல் ஆய்வின் அடிப்படையில் முற்கால சோழர்களின் படைப்பாகவும் கொள்ள சான்றுகள் பல உள்ளன. உடற்பகுதிகள் பார்க்கமுடியா வண்ணம் உள்ளதால் அறுதியிட்டுச் சொல்ல இயலவில்லை.

ஆதிசண்டிகேஸ்வரர்

எழிலார்ந்த இத்திருமேனி கி. பி. 9ஆம் நூற்றாண்டு பண்டைப்பாகும். சோழர்களின் உயரிய கைவண்ணத்தில் உதித்த இத்திருமேனி பல்வகை வரலாற்றுச் சிறப்புகள் பெற்ற ஒன்று. பல கல்வெட்டுக்களில் இத் திருமேனி பற்றிய குறிப்புகள் காணப் படுகின்றது. நின்ற கோலத்தில் கூப்பிய கரங்களுடன் திகழ்கிறார் சிருசேயஞ்ஞலூர் பிள்ளையார். இம்மூர்த்தி வீதியில் பவனி வரும் அற்புத காட்சியொன்று மராத்தியர் கால வண்ண ஓவியத்தில் காட்டப்பட்டுள்ளது.

நீலோத்பலாம்பாள் அல்லியங் கோதை

தேவியின் இத்திருமேனியும் கி. பி. 9ஆம் நூற்றாண்டு சோழர்காலப் படைப்பாகும். இத் திருமேனியின் அமைப்பை ஒத்த செப்புத் திருமேனிகள் வேறு எங்கும் கிடையாது. நின்ற கோலத்தில் இரண்டு கரங்கள் மட்டும் பெற்றுத் திகழும் இத் தேவியின் வலது கரம் தன்னருகில் நின்று கொண்டு இருக்கும் தோழியின் தோளில் அமர்ந்துள்ள முருகனின் சிரத்தைத் தீண்டும் வண்ணம் உள்ளது. இதனையொத்த பல்லவர் கால சிற்பமொன்று காஞ்சிபுரம் திரிபுராந்தகேஸ்வரர் திருக்கோயில் அர்த்த மண்டபத்து ஊர்த்துவதாண்டவமூர்த்தியின் சிற்பத்தையடுத்து உள்ளது.

சந்திரசேகர மூர்த்தி

இத் திருக்கோயிலிலுள்ள இரண்டு சந்திர சேகர மூர்த்திகளின் செப்புத் திருமேனிகளும் கி.பி. 9ஆம் நூற்றாண்டு சோழர்காலப் படைப்புகளேயாகும். நின்ற கோலத்தில் மான் மழு ஏந்தி அருள் பாலிக்கும் இம் மூர்த்திகளின் சிறப்புகளும் சாதாரண ஒன்றல்ல.

அம்மன் திருமேனிகள்


நின்ற கோலத்திலுள்ள சிவகாமியம்மை, மற்றும் உள்ள அம்மன் திருமேனிகளில் பல சோழர்கள் காலப்படைப்பாகும். இத் திருமேனிகளில் சிலவற்றைப் பற்றிய குறிப்புகள் ஆரூர் கல் வெட்டுக்களில் காணப்படுகின்றது.

நால்வர் திருமேனிகள்


அப்பர், சுந்தரர், ஞானசம்பந்தர் இவர்களுடைய திரு மேனிகள் பிற்கால சோழர் காலப்படைப்புகளாயினும மணிவாச கரின் திருமேனி மட்டும் சற்று காலத்தால் முந்தியதாகும்.

அறுபத்து மூவர் திருமேனிகள்

சிவ சமயம் மலரச் செய்த 63 நாயன்மார்களின் செப்புத் திருமேனிகளும் பெயர் பொறிக்கப்பட்டு காணப்படுகிறது. இவைகள் அனைத்தும் கி.பி. 15ஆம் நூற்றாண்டுக்கு பிற்பட்ட படைப்புகளேயாகும்.



ஐங்கலகாசு விநாயகர்



ஆதிசண்டேசுவரர்

பிட்சாடனர்

நின்ற கோலத்தில் பிச்சையேந்தும் இப்பெருமானின் செப்புத் திருமேனி காலத்தால் பிற்பட்டதாயினும் சிறப்பான ஒன்று. மிகப் பெரிய அளவிலுள்ள இப்பெருமான் இடக்கரத்தில் கபால மேந்தி வலக்கரத்தால் புல் அளக்கும் கோலத்தில் காணப்படு கிறார். வலது மேற்கரம் டமருகம் ஏந்தியும், இடது மேற்கரம் வளைந்து இருக்க ஒய்யாரமாக காட்சி நல்குகிறார்.

மயில் மீதமர்ந்த முருகப்பெருமான்

மயில் மீதமர்ந்த பாலசுப்ரமணியனாம் இப்பெருமான் முன் கரங்கள் இரண்டும் அபயமும் வரதமுங்காட்ட பின் கைகள் இரண்டில் சக்தியும் வஜ்ஜிரமும் தாங்க கம்பீரத்துடன் காட்சி யளிக்கிறார். இச் செப்புத் திருமேனி 14-15 நூற்றாண்டுப் படைப்பாகும்.

வள்ளி தேவசேனா சகிதர்

நின்ற கோலத்துடன் உள்ள இம்முருகப்பெருமான் திருமேனி யுடன் வள்ளி, தேவசேனா இருவரது திருமேனிகளும் உள்ளன. இது பிற்காலச் சோழர்களின் ஓர் அற்புதப் படைப்பாகும்.

கணபதியார் திருமேனி

நின்ற கோலத்தில் பாசாங்குசம் ஏந்தி நின்ற கோலத்தில் காட்சியளிக்கும் வினாயகப் பெருமானின் இத்திருமேனியும் பிற் காலச் சோழர்களின் அற்புதப் படைப்பாகும்.

சாஸ்தா

ஓர்காலை தொங்கவிட்டு மருகாலை யோகபட்டத்திலிருத்தி, வல்து கர்ம் சாட்டை ஏந்தி, இடது கரம் மடிந்த முழங்கால் மேல் வைத்த வண்ணம் புன் முருவலுடன் காட்சி நல்கும் இந்த ஐயனார் திருமேனி 15-16 ஆம் நூற்றாண்டு அற்புதப் படைப் பாகும்.

ஐங்கலக்காசு வினாயகர்

தியாகர் கோயிலை ஒட்டியுள்ள மண்டபத்தில் இடம் பெற்றுள்ள ஐங்கலக் காசுவினாயகர் செப்புத் திருமேனி மிக எழில் வாய்ந்த திருமேனியாகும். அமர்ந்த கோலத்து இப்பிள்ளை யார் சோழர்கால கலைத் திறனின் அற்புதப் படைப்பாகும்.

சோமகுல நாயகி

வன்மீக நாதர் திருக்கோயிலினுள் இடம் பெற்றுள்ள இந்த அம்மன் திருமேனி ஒய்யாரமாக ஒரு காலை நீட்டியும் மறுகாலை மடித்தும் அமர்ந்த நிலையில் உள்ள அற்புதத் திருவடிவாகும். சோழர்கால வார்ப்புக் கலையின் உயரிய நிலையை உணர்த்தும் படைப்பாகும்.

துவார பாலகர்கள்

தியாகப் பெருமான் திருமண்டபத்தின் வாயிற் காவலர்களாக உள்ள துவார பாலகர்கள் இருவருடைய செப்புத் திருமேனிகள் மிகச் சிறந்த வேலைப்பாடமைந்தவை.

பாவை விளக்குகள்

கமலாம்பாள் திருக்கோயிலில் இடம்பெற்றுள்ள இரண்டு பாவை விளக்குகள் பித்தளை வார்ப்பின் எழிற் பிம்பங்கள். சுமார் $4\frac{1}{2}$ அடி உயரமுடைய இப்பாவைகளின் அழகினை நாளெல்லாம் கண்டு மகிழலாம்.

ஆடவல்லான்

அரநெறியாம் திருக்கோயிலின் சபை மண்டபத்தில் இடம் பெற்றுள்ள இத்திருமேனி அருமையான சோழர்காலப் படைப் பாகும். திருவாசியின் மத்தியில் அனலும் உடுக்கும் ஏந்திய ஆடும் இக்கோலம் பதினோராம் நூற்றாண்டுப் படைப்பின் சிறப்பு முத்திரையாகும்.

சுகாசன மூர்த்தியும் தேவியும்

அசலேசம் எனும் அரநெறியில் மான் மழு ஏந்திய சிவபிரான் சுகாசனராக ஒருகாலைத் தொங்கும் நிலையிலும் மறுகாலை மடித்த நிலையிலும் கொண்டு அருகமர்ந்த தேவியுடன் காட்சி நல்குகிறார். இது கல்வெட்டுக்களில் குறிப்பிடப் பெறும் செப்புத் திருமேனியாக இருக்கலாம்.

இவ்வாறு நூற்றுக்கும் மேற்பட்ட திருமேனிகளை ஆரூர் திருக் கோயில் பெற்றிருப்பதோடு, இவ்வட்டாரத்துத் திருக் கோயில்களின் திருமேனிகள் பலவற்றையும் தனது காப்பிலேயே கொண்டுள்ளது. செப்புத் திருமேனிகள் பாதுகாப்புப்பெட்டக வசதி பெற்றுள்ள ஆரூர் திருக்கோயிலில் இவ்வட்டார்த்துத் திருமேனிகள் எல்லாம் பாதுகாக்கப் பெறுகின்றது.



துவார பாலகர்



சோமகுலாம்பாள்

செப்பேடுகள்

செப்பேடுகள்

தொன்றுதொட்டு நம் மன்னவர்களும் மக்களும் சாசனங்களை ஓலையில் எழுதியதோடல்லாமல் திருக்கோயில்களில் கல்வெட்டுக்களாகவும், செப்பேட்டுச் சாசனங்களாகவும் எழுதி அழியாவண்ணம் பேணிக் காத்தனர். இதனால் தான் சாசனங்கள் எழுதும் போது ''கல்லிலும் செம்பிலும் வெட்டக்கடவ'' என குறிப்பிட்டனர். இன்று நாம் கல்வெட்டுச் சாசனங்களை படிக்கும் போது மேற்கூறிய இச்சொற்றொடரைக் காணலாம். இதே போன்று 'தாமரசாசனம் பண்ணிக் கொடுத்த படி'' என்றெல்லாம் குறிப்பிட்டனர். செம்பில் எழுதுதல் தாமரசாசனம் செய்தல் என்பதெல்லாம் அழகிய செப்புத் தகடுகளில் எழுதப்பட்டு; தகடுகள் அதிகமாக இருந்தால் அவை ஓர் வளையத்தில் கோர்க்கப்பட்டு மன்னனது இலச்சினையும் பொறிக்கப்பட்டு காணப்படும். பல்லவ சோழர்கால செப்பேடுகள் எல்லாம் இவ் வகையில் தான் காணப்படுகின்றன. பிற்காலத்திய செப்பேடுகள் பெரும்பாலும் பல தகடுகள் உள்ள தொகுதியாக இல்லாமல் பெரிய தகடுகளாக ஒன்று அல்லது இரண்டு மட்டுமே காணப்படுகிறது.

இவ்வாறு எழுதப்பட்ட செப்பேட்டுச் சாசனங்கள் பெரும்பாலும் இறைவனது ஸ்ரீ பாதம் (திருவடிகள்) அல்லது ஸ்ரீ ஹஸ்தம் (திருக்கரங்கள்) இவைகளில் வைக்கப்பட்டு தானமளிப்பவர்களால் நீர் வார்த்துக் கொடுக்கப்படும். இதுதான் பண்டைய மரபு. மேலும் சாசனங்கள் பெரும்பாலும் இறைவனுக்காக செய்யப்பட்ட தானமாக இருந்தாலும் அவை சண்டிகேசுவரர் பெயருக்கே எழுதப்படுதலும் அன்றைய சாசனநெறியாக அமைந்திருக்கிறது.

செப்பேடுகளில் சாசனங்கள் மட்டுமின்றி திருக்கோயில் இறைவனின் திருவுருவம், மன்னனது இலச்சினை, மன்னன் வணங்கும் காட்சி அல்லது தானம் நல்கும் காட்சி இவைகளும் அழகாக வரையப்பட்டும் காணப்படுகிறது. உதாரணமாக தஞ்சை நாயக்க மன்னனான விஜயஇரகுநாதன் திருவாரூருக்கு அருகில் உள்ள

திருக்கண்ணமங்கை திருக்கோயிலில் கி. பி. 1608–ஆம் ஆண்டு இராமநவமியன்று 60 வேலி நிலம் தானம் அளித்தான். இந்த சாசனம் செப்பேட்டில் எழுதப்பட்டது. அதில் விஜயஇரகுநாதன் திருக்கண்ணமங்கை இறைவனை வணங்குவது, கோயில் பட்டர் பூரண கும்ப மரியாதையுடன் அவனை வரவேற்கும் காட்சி வரையப்பட்டுள்ளது. இதனால் அன்று நிகழ்ந்த ஓர் நிகழ்ச்சியை கண்கூடாகக் காணமுடிகிறது. ஓவியர்களின் திறமையும் அறியப் படுகிறது. சில செப்பேடுகளில் ஓவியர்களின் பெயர்களும் குறிப் பிடப்பட்டுள்ளமையைக் காணலாம்.

இவ்வாறு அன்றைய மன்னர்களால் அளிக்கப்பட்டுள்ள பல செப்பேடுகள் நமக்கு கிடைத்துள்ளன. இன்று நம் திருவாரூர் திருக்கோயில் பாதுகாப்பில் 10 செப்பேடுகள் உள்ளன. இதில் மூன்று மட்டுமே ஆரூர் திருக்கோயிலுக்கென அளிக்கப்பட்டதாகும் திருவாரூர் பற்றிக் குறிப்பிடும் மூன்று செப்பேடுகளில் ஒன்று தஞ்சை மராட்டிய மன்னன் விஜயஇரகுநாத நாயக்தனால் அளிக்கப்பட்டதாகும்.

சென்னை – அரசு அருங்காட்சியகத்தில் உள்ள செப்பேடுகள் ஆரூர் இறைவனுக்கென அளிக்கப்பட்டவையாகும். இவற்றில் சில செப்பேடுகளில் அரிய ஓவியங்களும் காணப்படுகின்றன. வரலாற்று ஆய்வுக்கு தேவையான பல அரிய தகவல்களும் அறிய முடிகிறது. இச்செப்பேட்டு சாசனங்களின் முழுவிபரமும் (TEXT) இந்நூலின் மூலமாக முதன் முதலில் வெளியிடுவதில் பெருமை அடைகிறோம். இதுவரை ஆரூர் கோயில் பற்றிய செப்பேடுகள் கிடைத்த போதும் இவற்றில் பழமையான (சோழர்கால) செப் பேடுகள் ஒன்றும் இடம்பெறவில்லை. இருப்பினும் விஜயநகர நாயக்க, மராட்டிய, சேதுபதி முதலிய மன்னர்களின் செப்பேடுகள் உள்ளன. ஓவியங்களைப்பெற்ற பல செப்பேடுகளை திருவாரூர் திருக்கோயில் கொண்டு திகழ்கிறது என்பதாலும் இத்தலத்திற்குத் தனிச்சிறப்பு உண்டு.

திருவாரூர் செப்பேட்டு எண்-1

(A. R. No. – 20 of 1945–46) இச்செப்பேடு 43 செ. மீ. நீளமும் 23 செ. மீ. அகலமும் உள்ள தகட்டில் இரண்டு பக்கங் களும் எழுதப்பட்டுள்ளது. இது தற்போது சென்னை அருங் காட்சியகத்தின் பாதுகாப்பில் உள்ளது.

சிறப்பு அம்சம்

அழகிய ஓவியத்தினை பெற்ற சிறப்புச் செப்பேடாகும். இதில் மேலே திரிசூலப்பீடமும் அதன் இருபுறங்களும் சந்திரன் சூரியன் வரையப்பட்டுள்ளது, இவைகளுக்குக் கீழே அழகிய இரத்தின சிம்மாசனத்தில் மான் மழு ஏந்திய சிவபெருமான் அமர்ந்திருக்க அருகே உமையவள் ஓய்யாரமாக வீற்றிருக்கிறாள். இவர்கள் இடையே குழந்தை முருகன் நிற்கின்றான். தியாகராஜ மூர்த்தியாக (சோமாஸ்கந்தராக) இத்திருவுருவம் காட்டப்பட்டுள்ளது. ஓர் புறம் விஜயகப் பெருமானும் வியாக்கிரபாதரும் மறுபுறம் முருகனும் பதஞ்சலியும் உள்ளனர். இப்பகுதிக்குக் கீழே ஸ்ரீ சகஜி மகாராஜா இறைவனை வணங்கிக்கொண்டு நிற்கிறார். அவருக்குப் பின்பு அவரது சகோதரர்களான முதலாம் சரபோஜியும் துளஜாஜியும் உள்ளனர். மன்னன் முன்பு அருணாசலப்பண்டாரமும் உழவாரம் ஏந்திய அடியவர் ஒருவரும் ஆரூர் பெருமானை தொழுது நிற்கின்றனர். மிக அழகாக வரையப்பட்ட செப்பேட்டு ஓவியமாகும். ஓவியத்தினைத் தொடர்ந்து இரண்டு பக்கங்களிலும் சாசனம் எழுதப்பெற்றுள்ளது.

மன்னன் :- தஞ்சை மராட்டிய மன்னனாகிய சகஜி மகாராஜா

காலம் :- சாலிவாகனசகாப்தம் 1616
ஆங்கில ஆண்டு கி.பி. 1694.

மொழி :- தமிழும் கிரந்தமும் கலந்து எழுதப்பட்டுள்ளது.

செய்தி :- இந்த தர்ம சாசனம் மராட்டிய மன்னன் சகஜி மகாராஜாவால் 1694ஆம் ஆண்டு அருணாசலப் பண்டாரம் என்பவரின் மேற்பார்வையில் ஓர் தர்மக் கட்டளையாக, ஆரூர் தியாகராஜசுவாமி, வன்மீகேசுவரசுவாமி, கமலாலயம்மன், அல்லியங் கோதையம்மன் இவர்கள் சன்னதியில் திருப்பணிகளுக்கும், அபிஷேக நிவேதனங்களுக்கும் அதிதிகளாக வரும் பிராமணர்கள், பரதேசிகள் இவர்களுக்கு அன்னமளிக்கவும் இம்மன்னனின் ஆளுகைக்கு உட்பட்ட பல்வேறு சீமைகளில் உள்ள நாட்டு மக்கள் உடன்பட்டு எழுதிக் கொடுத்ததாகும். இச் சாசனம் திருவாரூர் இறைவனான தியாகப்பெருமான் தேவாசிரிய மண்டபத்தில் எழுந்தருளியிருந்த போது சகஜி மகாராஜாவால் அளிக்கப்பட்டதால் இறைவனின் திருவுருவமும் மன்னன், அருணாசலப் பண்டாரம் இவர்களுடைய திருவுருவங்களும் வரையப்பட்டு காணப்படுகிறது.

சில நூற்றாண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த ஓர் அரிய காட்சியை இச் செப்பேட்டில் காணும் பேறுகிடைக்கிறது. இச் செப்பேட்டின் காலத்தில் சோமாஸ்கந்தர் திருமேனியான தியாகராஜர் திரு மேனி மூடி (அலங்காரங்களால்; வழிபடவில்லை என்பதும் தெரிய வருகிறது.

சாசனம் (TEXT)

(செப்பேட்டின் முதல் பக்கம்)

ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1616 இதன் மேல்செல்லா நின்ற பவநாம ஸம்வஸ்தரத்தில் கும்பமாசத்தில் பானுவாஸரமும் பரபட்ச துதியையும் உத்திரட்டாதி நட்சத்திரமும் சரப நாம யோகமும் கஜவா கரணமும் பெற்ற சுபதினத்தில் வாராணசி மகாபிரஞ்ஞா பாவா மத்ய முதிரிதம் சிதம்பர ஹிரண்மத்யாமாதாரம் கமலாலயம் என்று ஸுதஸம்ஹிதையில் ஜீவன் முக்தி சேத்திரமாக சொல்லி இருக்கிர கமலாலய க்ஷேத்திரத்தில் ராஜேஸ்வரஸன்னிதியில் ராஜ் ஸ்ரீஸஹஜி மஹாராஜா ஸாயபு அவர்கள் தம்மமாக திருவாரூர் அன்னதானக் கட்டளைக்கு அருணாசல பண்டாரமுகாந்தரமாக தம்மம் நடப்பிக்கச சொல்லிக் கட்டளையிட்டது ராஜஸ்ரீமகாராஜா சாயபு அவர்கள் ராஜாங்கதில் சொந்த அபிஹாவத்தில் மகாராஜநங்களும் பண்டாரவாடையில் சொந்தகுடியான பேர்ஸகலஜநங்களும் சம்மதித்து திருவாரூர் தேவாகியமண்டபத்திலே அந்தஸ்தில சதரா ஸ்தாஞசத்சுர் முன்பாக ராஜஸ்ரீ மகாராஜா சாயபு அவர்கள் உபயமாக நடபபிக்க வேணுமென் கிரதாக சகல ஜநங்களும் சம்மதித்து தம்மசாசநப்பட்டயம் பண்ணிக் குடுத்த படி இத் தைஞள் திருவாரூலெ தியாகராஜ ஸ்வாமி வன்மீகேஸ்வரஸ்வாமி கமலாலயம்மன் அல்லியங் கோதையம்மன் இவர்கள் சநெதியிலெ திநப்பணிகளும் அபிஷேகம் நிவேதனங்களும் அதிதியாளாக வந்த பிராமணள் பரதெசிகள் வந்த பெருகளுக்கு எல்லாம் அன்னமும் கொடுத்து நடப்பிக்கவெணும் என்கிர தாக மகாராஜா சாயபு அவர்கள் தம்மத்தினலெ சகல ஜநங்களும் கூ

-டி கட்டளை யிட்டது இந்த ராஜங்கதில் நஞ்சை புஞ்சை கண்டு முதல் னூத்திக் கலத்துக்கு எங்கள் குடிவாரதிலை குறுணித்தானியம் பிரகாரத்துக்குக் கட்டளை யிட்டபடி யினலை இந்தப்படிக்கு அசந்திராற்க்க ஸ்தாயியாக புத்ர பௌத்ர பரம்பரையும் இந்தபிர -காரத்துக்கு ராஜ ஸ்ரீ மகா ராஜாசாயபு அவர்களுக்கு தம்மம் அடையும்படிக்கு நாங்கள் குடுத்து வரக்கட வொமாகவும் இ ந்த தம் மத்தை யாதா மொருத்தர் வாக்கு சகாயம் அர்த்த சகாயம் சரீர சகாயம் பண்ணி பரிபாலநம் பண்ணிக் கொண்டு வருகிறுர்களொ அவர்கள் தியாகராஜ ஸ்வாமிக்கு சு -தரமூர்த்தி பணிவிடை செய்து பெத்த பெறு பெரக்கடவார்கவும் திருவாரூர்ச் சீமை ஊரவர் - னுகபட்டணம் ச்சீமை ஊரவர்- மன்னூர்கொவிலச் சீமை ஊரவர் - கச்சினம் சீமை ஊரவர் - காடாரம்பம் சீமை ஊரவர் - பாவவிஞ்ச சீமை ஊரவர் - திருக்கிடை ஊர்ச்சீமை ஊரவர் - சீகாழிச் சீமைஊரவர்- பந்தண னல்லூர்ச் சீமைஊரவர் - மகா சேனங்கள் - பெட் -டைச் சீமை ஊரவர் தற்ம்மமாசனம் அசெழமகா- சேனங்கள்மெ ப்படி ஊரவர் - திருப்பணைந்தாள்ச் சீமை ஊரவர் குறணட்டுச் சீமை ஊரவர் - னுச்சியார் கொவில்ச் சீமைஊரவர் - மிலட்டூர்ப்ப -த்து அசெழமகா சேனங்கள்-வெப்பத்தூர் பத்துஅசெழமகாசென ங்கள் - கொமல்ப்பத்து அசெழமகா சேனங்கள் - தாடளங்கெ விஸ்ச்சீமை ஊரவர் - அசெழமகா சேனங்கள் - புல்லூர்ப் பத் து அசெழ மகாசெனங்கள் - வடுவூர் அசெழ மகாசெனங்கள்- தெர்குசீமை அசெழமகாசெனங்கள்-பட்ட-மங்கலப்பத்துஅசெழம காசெனங்கள் - வலங்கமான் பத்து அசெழமகாசெனங்கள் - பெ ருமாளகரபபத்து அசெழமகா சேனங்கள்-அதம்பார்பத்து அசெழ மகாசெனங்கள் - மன்னூர் கொவிலப்பத்து அசெழ மகாசெனங்க ள்- சந்தலகை சீமை ஊரவர் - காரைகால்ச் சீமை ஊரவர் - திரு வெண்காடுச் சீமை ஊரவர் - சொழபுரம்ச் சீமை ஊர வர் - சாலிய மங்கலம்ச்சீமை ஊரவர் - வல்லம்ச்சீ மை ஊரவர் - தி ..கெ...இனும் ஊரவர்.

இந்த சர்சன்த்தால் மர்ாட்டிய மன்னன் சகசி (ஷாஜி) மகா ராஜா காலத்தில் திருவாரூர் திருக்கோயில் பூஜை மற்ற அம்சங் களில் திருவாரூர், நாகப்பட்டினம், மன்னார்குடி, கச்சினம் காடாரம்பம், பாபனாசம், திருக்கடையூர், சீர்காழி பந்த நல்லூர், பேட்டை, திருப்பனந்தாள், நாச்சியார் கோவில், மெலட்டூர், வேப்பத்தூர், கோமல், புல்லூர், தாடளங்கோவில்,

வடுவூர், தெற்குசீமை பட்டமங்கலம், வலங்கைமான், பெருமாள கரம் அதம்பார், செந்தலை, காரைக்கால், திருவெண்காடு, சோழபுரம், சாலியமங்கலம் வல்லம் போன்ற பல்வேறு சீமை களின் மக்கள் பங்கு கொண்டார்கள் என்பது தெளிவாக புலப் படுகிறது.

''ஆன்மா முக்தியடையும் சேத்திரம் கமலாலயம்'' (திருவாரூர்) என்று சூதசம்கிதை என்ற வடமொழி வேதநூலில் குறிப்பிட்டிருக்கும் பகுதி இச்சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது சிறப்பு அம்சமாகும்.

திருவாரூர் செப்பேட்டு எண்–2
(A.RE No 30 of 1945 / 46)


இச்செப்பேடு 27 செ.மீ. நீளமும் 17 செ.மீ. அகலமும் உள்ள தகட்டில் இரண்டு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. இது தற்போது சென்னை அருங்காட்சியகத்தின் பாதுகாப்பில் உள்ளது.

சிறப்பு அம்சம்


திருவாரூர் ஓவியச் செப்பேடுகளில் இதுவும் ஒன்று. தலைப்பில் திரிசூல பீடமும், ஓர் புறம் சூரியன், வினாயகப் பெருமான், வியாக்கிரபாதர் (புலிக்கால் முனி) சண்டீசரும் எதிர்புறம் சந்திரன். முருகக்கடவுள் பதஞ்சலி, சுந்தரமூர்த்தி முதலியோரும் துதித்து நிற்க நடுவே அழகிய இரத்தின சிம்மாசனத்தில் தியாகப் பெருமான் உமையன்னையுடன் அமர்ந்திருக்கிறார். பெருமானின் திருமேனி அலங்கரிக்கப்பட்டு முற்றிலுமாக மூடிய நிலையில் காணப்படுகிறது. பெருமானின் முன்னர் சிவாச்சாரியார் ஒருவர் யோகவேஷ்டி தரித்து கையில் அடுக்கு தீபமும் மணியும் ஏந்தி தீபாராதனை செய்கிறார். அவருக்கு பின்புறம் மற்றொரு சிவாச் சாரியார் கையில் ஜலகெண்டி ஏந்தி ஆராதனைக்கு உதவுகிறார். செப்பேட்டின் ஓர்பக்கம் முழுவதுமே அழகிய ஓவியம்தான் வரையப் பட்டுள்ளது. இதற்கு கீழ் தெலுங்கு எழுத்துக்களில்

''ஆறுமுக சகாயம்''

என்று எழுதப்பட்டு காணப்படுகிறது.



சேதுபதி செப்பேடு



செப்பேட்டு ஓவியத்தில் சஹஜி மன்னரும்.
அருணாசலப் பண்டாரமும்

மன்னன் :- இரகுநாத சேதுபதி முத்து வடுகனாதப் பெரிய உடையர் தேவர்

காலம் :- சாலிவாகன சகாப்தம் 1672
ஆங்கில ஆண்டு கி.பி. 1750
தமிழ் பிரமாதூத வருடம் சித்திரை 1ஆம் நாள்.

மொழி :- தமிழ் (கிரந்தம் கலந்து)

செய்தி :- கி.பி. 1750ல் இராமநாதபுரத்தை ஆண்ட சேதுபதி மன்னரான இரகுநாதசேதுபதி அவர்களின் காலத்தில் விசய இரகுநாத சின்னப்பெரிய உடைய தேவரின் மகனான முத்து வடுகனாதப் பெரிய உடைய தேவர் என்பவர் திருவாரூர் தியாக ராஜ சுவாமியாருக்காக, அன்னதான கட்டளைக்குக் கர்த்தரான அருணாசலத்தம்பிரான் என்பவர் பாரிசமாக பாண்டி நாட்டில் தேர்போக்கி நாட்டில் நாதவயல், பாணவயல் என்ற இரண்டு கிராமங்களை சர்வமானியமாக எல்லா உரிமைகளுடன் அளித் தமையை விளக்குகிறது.

சாசனம் TEXT

உஸ்ரீ..... ஸ்ரீமன்மகா மண்டலெ சுரன் அ .....
தளவிபாடன் பாசைக்குத்தப்புவார் கண்டன் கண்டனெடு கொண் ....
டநாடு கொடாதான் பாண்டி மண்ட தாபனாசாரியன் சொள . .
லய பிறதிபாணாசாரியன் தொண்டமண்டல சண்டப்பிசண்டன் . .
மூ கொங்குயாட பாணமுதண்டு தெசமடை கொண்ட ருளியராசா . .
ணராச பரசெரன்ராச சமர்தாண்டன் ராசகுல திலகன் தாலிக்கு வேலி தளசிங்இஞ்
சிங்கம் ஆத்தா பாச்சி கடலில் பாச்சி மதிரைவெள் கண்டர் செம்தலை, ளெகும்
ரு தாளிணன் வடகரைப்புலி செது காவலன் தனுக்கொடி காவலன் செது
மூலர் துரந்தரன் ராமசாமி காரி யர் துரந்தரன் தொண்டி துறை காவலன்
செம்பி வழ நடன தெவை நகராதிபன் இராய கெம் பரப யாசி அசுபதி
கெச பதி நரபதி ரெகுனாத செதுபதி பிறி தராச்சியம் பரிபாலனம் பண்

ணி யருளநின்ற கலியுக சகாத்தம் உ 4851 சாலி வாகன
சகாத்தம்
1672 இதன்மேல் செல்லா நின்ற பிற இ மா துதலு சித்திரை மா
12 சுக்கிரவாரம் சதுத தெசி லிண்டி ரொகணி சௌபாக்கிய
மலி திரையும்
கூடின சுபதினத்தில் பாண்டி தெசத்தில் பொதியமாமலையான்
வையகை ஆத்துடை
யான் பாண்டி வளநாட்டி திருக் காணப்பெர்க்குத்தத்துப்புன் ப
ாலை நாட்டில் குளநதை நகரரதி பதி முல்லை யந்தரான பஞ்சநெதி
புரவியானமும் மதயானை அன்னகொடி கெருட கொடி
அனும கொடி
சிங்கக் கொடி புலிகொடி விருதுடையான் மும் முரசு வதி ரு ப
மூன்றிலான திக்கெங்கும் ஆணை செலுத்திய சிங்கம் இம்மனுட்டு
ப்புலி தாலிக் குவேலி தள சிங்கம் இளசிங்கம் இரவிகுல
செகரன் பஞ்ச காலப் பயங்கரன் அரசுநிலை யிட்ட விசையரெ
குனத சிந்னப்பெரிய உடையர் தெவர்வர்கள் புத்திரன் அரசு
நிலையிட்டமுத்து வடுகனதப் பெரிய உடையர் தெவர்வர்கள்
சொளதெசத்தில் செல்வ திருவாரூரி தியாகராஜ சாமியாருக்கு அ
ன்னதானக் கட்டளைக்கு சுற்த்தரான அருளைசல தம்பிரான்
அவர்கள்
பாரிசமாக நம்மூட அறக்கட்டளைக்குடுத்த கிருமம் பாண்டி
தெசத்தி
ல் தெர்பொகினுட்டில் ஞதவயல் பாணவயல் ரெண்டும்
பாணவல் திருபணங்குடி கம்மாக்கு மெர்க்கு தப்பன எந்தலுக்கு
கிழக்கு தா
ணிக்கம்மாக்கு வடக்கு கடபங்குளதெக்கு ஏந்தலுக்கு ஞதன்
வயலுக்கு | சுச்சியடி ஊறணிக்கு தெக்குக்கு தன்பிஞ்சைசக்குவ
டக்கு புங்காணி காட்டுக்கு மெர்க்கு புதுப்பட்டி தாண்டவண்செ
ட்டி கொல்லை கிளக்கு இசைந்த பெரு நான்கெல்லைகக்குள்ளிட்ட
நஞ்
சை புஞ்சை மாவடை மரவடை திட்டு திடல் புத்து புனலவுறு சா
ளி ஆவரை கொளுஞ்சி அட்டபோக சுவாமிலங்களும் சறு
வ மானிய தான பூவவம்மாக கொடுத்தபடிஞலை தியாக
ராசசாமிக்குக்
அபிசெக நெயவெதனம் அபிவிருத்தியாக நடப்பிச்சு வருவார்ச்
இந்த தர்ம சாதன கிருமரெண்டுக்கும் யாதமொரு வன் பரிபா
லனம் பண்ணினெவகள் காசிலும் ராமிசுரத்திலும் அனெக பிரம
ம் பிறம் பிறதிட்டை கொடி கன்னிகாதானம் கொடிகொ தானம்

பண்ணின பலன் அடைவார்கள் இந்தத் தம்மத்துக்கு யா
மொருவன்
அகிதம் பண்ணினவன் காசியிலும் மராமிசுரத்திலும் புண்ணியபல
ங்களிலும் அனேகம் கொகததி ஹரி அத்தி பிரம அத்தி பஞ்சமகா
பாதக
ம் பண்ணின தோஷத்திலப் பொகக்கடவார்களும் இந்த படிக்கு
இந்த தர்ம காளனப்பட்டபடியும் எழுதினென் ராய சம் சங்கர நா
ராயணன் எழுத்து உ.

திருவாரூர் செப்பேட்டு எண் — 3
(A. R. E - NO - 26 of 1945/46)

இச்செப்பேட்டின் இரண்டுபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. இது தற்போது சென்னை அருங்காட்சியகத்தின் பாதுகாப்பில் உள்ளது.

மன்னன் : இராமநாதபுரம் சேதுபதி மன்னரான ஸ்ரீ முத்து விசைய ரகுநாதச் சேதுபதி காத்த தேவர்.

காலம் : சாலிவாகன சகாப்தம் 1645
ஆங்கில ஆண்டு 1723.

மொழி : தமிழும் கிரந்தமும் கலந்து எழுதப்பட்டுள்ளது.

செய்தி

இச்செப்பேட்டு சாசனம் இராமநாதபுரம் சேதுபதி மன்னரான ஸ்ரீமுத்து விசையரகுநாதசேதுபதி காத்ததேவர் அவர்களால் கி.பி.1723 ஆம் ஆண்டு, தமிழ் குரோதி ஆண்டு சித்திரை முழு நிலவு நாளன்று திருவாரூர் தியாகராஜ சுவாமியாருக்கு ஆதிசேதுவில் இருந்து கொண்டு கொடுத்த தர்மத்தை விவரிக்கின்றது. இதன்படி திருவாரூர் சீமையில் நம்பிப்பாடி மாகாணத்தில் அன்னவாசல் என்ற கிராமம் எல்லா உரிமைகளோடும் தியாகராச சுவாமிக்கு அளிக்கப்பட்டதைக் கூறுகின்றது.

சாசனம் (TEXT)

ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1645க்கு மெற்சென்ல நின்ற குரொதி நாம சம்வஸ்தரத்து உத்தராயனத்து வசந்த ருதுவில் சுக்கில பட்சத்து சுபயோக சுப

கரணமும் பெற்ற சித்திரா பவுர்ணமை புண்யகாலத்து தெ
னுவத நராதிபன் ஸைது பரலாடசர் துரந்தரன் சிவபூசா
துரந்தரன் ராமனுத சுவாமி காரியா துரந்தரன் ஸ்வஸ்தி ஸ்ரீ மகா
மண்ட லெசுரன் அரிராயர தளவாபாடன பாஷெக்கு தப்பு
வாரயிர் கண்டன் புவனெகவீரன் வாக்கு சுகன் வாபெரி
பாமலை இளஞ்சிங்காதனஞ் சிங்கம் பகைமன்னர் சிங்கம் தா
ஸிக்குவேலி ஆற்றில்பாச்சி கடலில் பாச்சி மதப் புலி அடைகுல
நு குரந்த என காவிக் கொண்ட பெற்றியிரு துடையான் வெதியர்
கர
வலுவ ராசரவன் ராமன் க்ஷமினீ கந்த பென் கலை தெரியும் வரை
பன்னன் செம்பிவள நாடன் வயகை வள நாடன், ஸைத்ரபதி
வங்கி சாதிபதியாம் ஸங்கரன்துணை சவூர் கூ
ற்றத்து காதூரன் குலொத்துங்க சொழ நல்லூர் கின்பாலயி
ரையாத கண்டனிலிருக்கு ஸ்ரீ ஹிரனி கர்பயாஜிரகுரு
நச் செதுபதி புத்திரன் ஸ்ரீ முத்து விசைய ரகுநாதச் செதுபதி
காத்த
திவர்வர்கள் திருவாரூர்தியாகராச சுவாமியாருக்குமகாதாந தன்ம
சாசன பட்டையம் எழுதிக்கொடுத்தபடி இவருக்கு தானம் பண்ணி
க்கொடுத்த கிரமமாவது சொழ மண்டலத்தில் திருவாரூர்ச் சீமை
யில் நம்பிப்பாடி மாகாணத்தில் பாண்டயாய் ஆற்றில் பாச்சல்வ
டசனூர் அன்னவாசலுக்கு எல்கையாவது தின் பால் எல்கைகு
அன்ன
குடிக்கு மெற்கு தென்பால் எல்கை பாண்ட வாய்க்கு வடக்குமெல்
பால் எல்கை கலியாணி மாதெவிக்கு கிழக்கு வட பால் எல்கை
ஷகல்யாண மாதெவி எல்லைக்கு தற்கு இன்னான் 4 கெல்
கைக்குள்பட்ட அன்னவாசலை சித்திரா பவுர்ணமை புண்ணியா
காலத்தில் ஆதிசெதுவில் சுவாமி தியாகராச சுவாமியாருக்கு
ராஜி ஸ்ரீ மகாராசா அவர்கள் கொடுத்த அன்னவாசலை

(இரண்டாம் பக்கம்)

ஸ்ரீ தியாகராஜர்கே தாராபூர்வமாக ஸ்ரீ ஹிரண்ய கர்ப்யாஜி
சேதுபதியவர்கள் தாநம் பண்ணிக் கொடுத்த
படியினாலே இந்த கிரமத்துக்கு உண்டாகியநஞ்
சை புன்சை செலதரு பாஷாண அகஹிண்ய காமம
யனிலைஸர்வ மென்று சொல்லப்பட்ட அஷபோக
சுவாமியதங்களும் தெயவதாயம் மானியம உம்ப
ள னிங்கலாக சகல சமுதாய பிராப் பித்தியும் சுக்கு
றவாரம் கட்டளையாகப் பண்ணினபடி யினாலே புத்தி
ர பவுத்திரபார்வனர்க்கும் சந்திநாதித்தி யனர்க்கும் ஆ

சந்திராறகவனூர்கு தன்ம பரிபாலனமாக அனுபவித்து
க் கொள்ளக் கடவார்வும் இந்த தன்மத்தை யாதாமொருவ
ர் பரிபாலனம் பண்ணினே பேர்கள் கெங்கை கரையிலும்
ஆதி செதுவிலும் ஆயிரங் கோ தானம் பூதானபண்ணி
ன பலன் பெறுவார்கள் இந்த தன் மத்துக்கு யாதாமொரு
ருதர் அதிதம் பண்ணின பெர்கள் கெங்கை கரையிலும்
ஆதி செதுவிலும் காராம் புசுவை கொன்ன தொஷத்தில்
பொகக் கடவார் கவும் உ.

திருவாரூர்ச்செப்பேட்டு எண் - 4

இச்செப்பேட்டின் இரண்டு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. இது தற்போது சென்னை அருங்காட்சியகத்தின் பாதுகாப்பில் உள்ளது.

சிறப்பு அம்சம் : திருவாரூர் ஓவியச்செப்பேடுகளில் இதுவும் ஒன்று. எழில்மிகு இச்செப்பேட்டில் முதல் பக்கத்தின் பெரும் பகுதியில் ஓவியம் இடம் பெற்றுள்ளது. இதில் இரத்தின சிம்மாசனத்தில் தியாகராஜர் வீற்றிருக்க வலப்புறம் சந்திரன், முருகன், வியாக்கிர பாதரும், இடதுபுறம் சூரியன், வினாயகர், பதஞ்சலியும் காட்சி நல்குகின்றனர். தியாகப்பெருமான் உடல் அலங்காரங்களால் மறைக்கப்பெற்றுள்ளது.

மன்னன் :- அறந்தாங்கி பகுதியை ஆண்ட குறுநில மன்னன் முத்து வணங்காமுடித்தொண்டமான்.

காலம் :- சாலிவாகன சகாப்தம் 1662 ஆங்கில ஆண்டு கி. பி. 1740.

மொழி :- தமிழும் கிரந்தமும் கலந்து எழுதப்பட்டுள்ளது.

செய்தி :- சுந்தரபாண்டிவள நாட்டு இளங்கோ நாட்டு அறந் தாங்கி பகுதியை ஆண்ட சிதம்பர வணங்காமுடி தொண்டை மானார் மகனை முத்து வணங்காமுடித் தொண்டைமானார்; திருவாரூர் தியாகராஜ சுவாமியின் பூஜை நிவேதனங்களுக்காக சுவப்பகட்டனே பரதேசியான முத்திரை மாசிலாமணித்தம்பிரான் மேற்பார்வையில் ஆலத்தூர் மாகாணத்தில் உள்ள நாட்டாணி கிராமத்தை சர்வமானியமாக அளித்ததை விவரிக்கின்றது.

சாசனம் (TEXT)

(முதல் பக்கம்)

ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1662 இதன்மே
ல்ச்செல்லா நின்ற ரவுத்திரி நாம சம்வத்சரம் புரட்ட
ாசி மீ 18 உ பூறுவபட்சமும் சுக்கிரவாரமுஞ் சத்தமியும்
ரோகிணி நட்செத்திரமுஞ் சுபயோக சுபகரணமும் பெற்றபு
ண்ணிய தினத்தில் ஸ்வஸ்தி ஸ்ரீமன்மகா மண்டலெ சுரன் அ
ரிய் ராயிர் தளவிபாடன் பாஷைக்குத்தப்பு வாரயிர் க
ண்டன் மூவார்கண்டன் கண்டனெடு கொண்டு கொண்டனெ
டு கொடாதான் பூறுவதெட்சிண பச்சிம உத்திர திக்கு வினை
சயஞ்செய்து எம்மண்ட முந்திரை கொண்டருளியராச
ாதிராசன் துலுக்கர் தளவிபாடன் துலுக்கர் மொகந்
திவிழ்த்தான் ஒட்டியர் தளவிபாடன் ஒட்டியர் மொக
ந்தவிழ்த்தான் பாண்டிமண்டலத் தரயனுசாரியன் சொழம
ண்டலப் பிறுதிஷாசாரியன் தொண்டை மண்டல துரந்தராதி
பன் தீரதிப் பிரதரன் வீரப் பிரதாபன் புவனெகவீரன் சிவ
பூசாதுரத்தரன் சிவகாரியதுரந்தரன் வடவெளாஸ்ரீன்
சுந்தரபாண்டிய வளநாட்டு இளங்கொளட்டு அறந்தாங்கி
யரசு அச்சமரியாதான் ஆட்டுக்காளை வழங்குமதுலன்
சொள் பாட செந்தமிழ் புனைந்த புங்கவன் தருதுமார்
சாகர் கமல சந்திரன் கொற்றக் குடையும் தவண்டயு
ள்ள குண சீலன் தன்னெயடைந் • தாரைத் தானைக்கார்

(இரண்டாம் பக்கம்)

ஆவுடையாரே துணை

கும் அபிராமன் நடைகார பெர்தெ குடைகார்திரன் ஏ
ழு ஞழிகையில் இழந் தரைகொண்ட பெருமாள் பூத்தும
ாத்தியும் பொந்தாலும் பொ கெனென்று வென்ற புரந்த
ரன் தலைமலை கண்டான் பிணமலை கண்டான் முகிலி
ன கிழததிரியுமிள வன்னிய சாகண்ட ன் திரு மிழலைத்தி
ருநாடன் மாலையாதிபதி மயிலையாதிபதி அவ் வெத்திவி கெ
காண்டவன் செமனெ வென்றவன் பட்டனுக்கு முதுகுசா
யாத்தானம் மரபு கார் காவலன் அடிவெவு கா ரன் கா ர
சி புராதிசுரன் ஆளுடைய தம்பிரானுர் ஸ்ரீ பாத பத்தின
ஸ்ரீ : கூ சிதம்பரனுத வணங்காமுடித் தொண் டமானுர் பு
த்திரன் முத்து வணங்காமுடித் தொண்டமா னுவர்கள் தர்மம்

திருவா ரூர் ஸ்ரீ தியாகராச சுவாமியார் அபிழெகம் நெய்
வெதனத்துக்கு சவப கட்டளை பரதெசி முத்திரை மாசிலா
மணித் தம் பிரானவர்கள் பாரிசமாக ஆலத்தூர் மாகாண
தில் நாட்டாணி கிருமம் சவ்வ மானிய மாய் இரை
வரி ஊழிய முள்பட சகலமும் மண்ணும் விண் ணுமுள்ள
ாக குடி சிலா சாதனம் தர்ம பிரசாதனம் பண்ணிக் குடுத்தி
தாம் யிந்தபடி கிரயம் ஆண்டு அனு பவித்துக் கொண்டு தர்ம
ம் பரி பாலனம் பண்ணிக் கொண்டு வரவும் நம்மைச்சா
ர்ந்த மனுழா மக்க ளெலதூழிந்த தற்மசாதனப் பட்டயப்ப
டிக்கு வருசில்லரையளும் வாரம் வழுவாரபூ வ் வம் நடந்த
படி உத்தரொத்தர்மமாக தர்மத்தை பரிபாலம் பண்ணிக்கெ
ாண்டு வரக் கடவார்கவும் இந்தபடிக்கு சவ்வ கட்டளைதர்
மத்துக்கு தாம்பிரசாதனம் பண்ணிக் கொடுத்தொ மிந்
த தர்மதை பரிபாலனம் பண்ணினவர்கள் — கெங்கைக்
கரையிலும் மாதி செதுவிலும் கொடி பிலம் — பிரதிட்டை
யும் கொடி சிவலிங்க பிரதிட்டையும் பண்ணின — தர்மத்
தை யடை வார்கவு மிந்த தர்மத்துக்கு யாதா — மொருவர்
விகாதம் பண்ணினவர்கள் கெங்கை கரையிலு
மாதி செதுவிலும் மாதா பிதாவை வதை பண்ணி ன தி
ராழத்திலும் கொடி கொவதை பண்ணின தொழத்தி
லும் பொவார்கள் இந்த தர்மசாதன கொ மாக்கந்த
ஆசாரி கையி எழுத்து உ விட்ட வாசவ் பிள்ளையா
ர் துணை தியாகராசர் துணை கமலாலை அம்
ன் துணை ல

திருவாரூர் செப்பேட்டு எண்-5

(A.R.E. No. 33 of 1945/46)

இச்செப்பேட்டின் ஓர்புறம் மட்டுமே எழுதப்பட்டுள்ளது. இது தற்போது சென்னை அருங்காட்சியகத்தின் பாதுகாப்பில் உள்ளது.

காலம்:- சாலிவாகனசகாப்தம் 1743 ஆங்கில ஆண்டு கி. பி. 1821 தமிழ் வருடம் தை மாதம் 24-ந் தேதி

செய்தி:- திருவாரூர் தேர் ஒடும் தெற்கு வீதியில் இருக்கும் செல்ல மூக்தா பிள்ளை என்பவருக்கு முருகப்ப தேவர், நாராயணதேவர், சுப்ப தேவர், வைரப்ப தேவர் என்ற நால்வரும் எழுதிக் கொடுத்த

ஒப்பந்த சாசனமாகும். இதன்படி திருவீதியில் உள்ள தர்ம மடத்தில் திருவிழா காலங்களில் தண்ணீர் இறைக்கவும், தியாக ராஜ சுவாமியின் சன்னதியில் நெய் விளக்கு ஏற்றுவதற்காகவும் செய்து கொண்ட தர்ம சாசனம் பற்றி விவரிக்கின்றது.

சாசனம் (TEXT)

ஒ சிவமயம்

கனக வசந்தருளி இருக்கும் தியாகரூச
சுவாமியார் யெழுந்தருளிய திருவாரூர்
கலியுகாதி சாலியவாகன சகார்தம் கூளாசயிகூ
வுல லி ா வுல தை மீ உசு ஒ யில் திருவாரூர் தேர்
ஓடும் தெற்கு வீதியில் இருக்கும் செல்ல
முத்தா புள்ளேகி யெழுதி குடுத்த செப்பு
பட்டையம் யென்ன வென்ருல் திருவீதியிலே
தர்ம மடம் கிழக்கு மேற்கில் அடி எஉதெக்
கு வடக்கில் அடி 100 அதினு . . . . டந்தது
முருகப்ப தேவரும் நாருயண தேவரும் இந்த
தர்மம் பரிபாலணம் செய்ய யெழுதி குடுத்த
தொ . . . . கொவி சுப்பதேவர் அந்த
னப்பேட்டை வயிரப்ப தேவர் இந்த நாலு பே
ருல் அந்த மடத்தில் இருந்து வேலே பார்க்கும் ப
ன் டரதுக்கு திருவிழா காலத்தில் தன்னீர் யெறச்
சு வென் குபை கிருதர்க்கு ச ய ரு ப இந்த பநம்
நாட் டான்மை காரரிடத்தில் வாங்கி விட்டு இ
ரு பனம் வசூல் பண்ணி குடுக்க வேண்டயது
சன்னதியில் நெய் விளக்கு இறு குரதற்கு
ரு 1 . . இதே பிரகாரம் காசு . . காவேரி
யும் உள்ள பூமியும் உள்ள வரைக்கும் இந்
தர்ம நாங்கள் நடப்பிக்குறேம்

முருகப்ப தேவர் நாருயனதேவர்
சுப்ப தேவர் வைரப்ப தேவர்.

திருவாரூர் செப்பேட்டு எண்-6

இச்செப்பேடு ஆரூர் திருக்கோயிலின் பாதுகாப்பில் உள்ளது. இதன் இரண்டு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது.

மன்னன்:- வெங்கிடபதி ராசா தஞ்சை நாயக்க மன்னன் இரகுநாத நாயக்கன் இவர்கள் தர்மகட்டளை

காலம்:- சாலிவாகன சகாப்தம் 1565 ஆங்கில ஆண்டு கி.பி. 1643 தமிழ் ஆனந்த வருடம் ஆனி மாதம் 7ந் தேதி.

செய்தி :- விஜயநகர மன்னரான வெங்கடபதி ராசா அவர்கள் திருவாரூர் கோவிலுக்கு சுக்கிரவாரக் கட்டளையாக அளித்த நிலம். தஞ்சை நாயக்க மன்னரான இரகுநாத நாயக்கர் கட்டளையாக அளித்த நிலம் இவை பற்றி விவரிக்கின்றது. இச் சாசனம் எழுதப் பெற்றகாலத்தில் தஞ்சையை ஆட்சி புரிந்த மன்னன் அச்சுத விஜயராகவ நாயக்கன்ஆவான் இவன் இரகுநாத நாயக்கனின் புதல்வன்.

சாசனம்(TEXT)

(முதல் பக்கம்)

ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிவாகன சகா
ப்தம் 1565 இதன் மேல் செல்
லா நின்ற ஆனந்த வரு ஆனி மீ எ
யும் சுக்கிற வாரமும் பூறுவபட்
ச சப்தமியும் அஸ்த நட்சத்
திரமும் கூடின புண்ணிய தினத்
திலே ஸ்ரீமத் வெங்கிடபதி ராசா
அவர்கள் திருவாரூர்க் கோவிலாரு
க்கு நம்முடைய சுக்கிற வாரக்கட்டளை
க்கு நில தர்ம பிறசாதன பட்டையம்
குடுத்த படி ஞம் ஸ்ரீமத் ராசா
தி ராச ராச பரமேஸ்வர ராச மா
த் தாண்டன் ரெகுனாதனையக்கா
ய்யன் அவர்கள் கிட்டனைக்கு
மனை உ தார் குடுத்து வாங்கின
பிடாகை சாத்தம் குடி நிலம் கட்டு
மனை திருவிருப்பு புஞ்சை நிலம்
கர நஞ்சை நிலம் கழுவன் கட்டனை
இலை செங் கலி மேடு வங் கல்
லடி முக் கால் நிலம் கர தென் கரை
முக்கால் நிலம் கர யேரி தாங்கல்
சுண்டி க்குள முள்பட்ட

(இரண்டாம் பக்கம்)

நிலம் ச குழி சஞ்ஞ நிலம் ஈ தெக்கு
வாய்க்கால் வெட்டுக்கு நிலம் தொ
பாக நிரு நில ச தொட்டி நிலம்
உ ஆக நில ஐ சரு யும் தெத்தம்
பண்ணி குடுத்த படி யிஞலே
நிதி நி கேஷப ஜல பாஷான
வ்ருக்ஷ ஸாகாலே சித்த சாத்ய
என்கிற அட்டபோக தெச்சுவாமி
யங் களும் ஆசந்திரார்க்க ஸ்தா பியாக
அனுப விச்துக் கொள்ள கட வோர்கவும்
இந்த சாதனம் எழிதின நன்மைக்கு
அசஞ்சாடுவார் எழுத்து
ஆர்சுடையான் அஞ்சியுண்டான்

வெங்கடப்ப இராஜு
சுபமஸ்த்து.

திருவாரூர் செப்பேட்டு எண்: 7

இச்செப்பேடு திருவாரூர் திருக்கோயில் பாதுகாப்பில் உள்ளது இதன் இரண்டு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது.

காலம்: சாலிவாகன சகாப்தம் 1655.
சமமான ஆங்கில ஆண்டு கி. பி. 1733.

செய்தி: அச்சுத தேவமகாராயர், ஸ்ரீரங்கராயர் போன்ற விஜயநகர மன்னர்களின் வரிசை கூறி சாலிவாகன சகாப்தம் 1655 பிரமாதீச வருடம் ஆனி மாதம் மூன்றாந் தேதி மகாராசர் (கிருஷ்ண மகாராயர்) சாயிபு அவர்கள் தர்மமாக பாம்பவள நாட்டிலிருக்கும் இந்திரகுலாதிபன் சபாயிலி செய ரெகுனாத மெயக்கன் கோபலர் என்பான் திருவாரூர் தியாகராச சுவாமிக்கு, அபிஷேகக் கட்டளை அகோரசிவ பண்டாரம் அவர்கள் பாரிசமாக நிலங்கள் அளிக்கப்பட்டதை விவரிக்கின்றது.

இச்செப்பேட்டின் சிறப்பு அம்சமாக முதல் பக்கத்தில் சாசனம் தொடங்குவதற்கு மேலே திருவாரூர் தியாகராஜ சுவாமியின் திருவுருவம் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது. இச்செப்பேட்டை தீட்டியது திருவாரூர் சோமாக்கந்த ஆசாரி என்பான்.

சாசனம் (TEXT)

முதல் பக்கம்

ஸ்ரீமன்மகா மண்டலேசுரன் பாஷைக்கு தப்புவராத கண்ட
ன் மூவராய கண்டனை கண்டனூடு கொண்டு கொண்டனூடு குடா
தான் பூறுவ தேஷிண பச்சி மொத்தர கத்தரசமு த்திராதிபன்
எம் மண்டலங் கொண்டு இழமுத்துரை கொண்ட ராசாதி
ராசன் ராச பரமேசுரன் ராசமார்த்தாண்டன் ராச கெம்பீ
ரன் ராச மணவாளன் நினமுக சுத்தர வீரன் எட்டியர்
மோகந்தவுழ்த்தான் கட்டாரி சாளுவன் கண்டயப் பிரதாபன்
துட்ட நிக்கிர கன் சிஷ்ட்ட பரிபாலன் தேவ தேவேந்திரன்
அச்சுத தேவ மகாராயர் ஆனைக் கொளீளையர் சீரங்கரா
யர் கிஷ்ண மகாராயர் பிரிதிவி ராச்சிய பரிபாலனம் பண்
ணி அருளா நின்ற சாலிவாகன சகாத்தம் 1655
க்கு மேல் செல்லா நின்ற பிரமாதீச ஞ ஆனி மீ 3 ||ரா||
மகாராசா சாயிபு அவர்கள் தர்மமாக பாம்பவள நாட்டிலிரு
க்கும் இந்திர குலாதிபன் சபாயிலி செய ரெகுனாத மேயக்கன்
கோபாலர் திருவாரூர் தியாகராச சுவாமியாருக்கு
அபிஷேக கட்டளை அகோர சிவ பண்டாறம் அவர்கள் பாரிசமாக
தினையா குடிக்கு மேற்கு மாம்பழத்தி வயலுக்கு வடக்கு
வேட்டனூருக்கு கிழக்கு நீர் விள்ளத்துக்கு தெற்கு கடத்தனூர்
தானபூவ தர்ம பரசாதனம் பண்ணி குடுத்த படியினால்
அந்த கிருமத்துப் பலன் சுவாமிக்கு அபிஷேக நையிவேதியம்
திருமாலை திருவிளக்கு அன்னதானம் திருப்பணி

(செப்பேட்டின் இரண்டாம் பக்கம்)

யின்ட முதலான தர்மம் நடந்துவரப் பண்ணி வருகுறது
இந்த தர்மம் சந்திராதித்த வரைக்கு நடந்து வரகரத்தாக
பண்ணின தருமம் இந்த தர்மத்தை யாதொரு சதாடா
வனம் பண்ணின பேர்கள் கச்சியிலே கோடி சிவலிங்க
பிரதிஷ்டை பண்ணின பலத்தை அடையக் கடவார்கவும்
இந்த தர்மத்துக்கு அகிதம் பண்ணின பேர்கள் கெங்கை
கரையிலே காராம் பசுவை வதை செய்த தோழத்தை
அடைந்து வங்கிழ(ஷ)மும் நிச்சுபோகக் கடவார்கவும்
இந்தப் படிக்கி சாட்சி ஆகாசவாணி பூமிதேவி ஆர்பலிங்கம்
இந்த படிக்கு சபாயி விசையரெகுனாத மெயக்கன்
கோபாயன் திருவாரூரிலிருக்கும் சிற்பன் சோமாக்குந்த
ஆசாரி லிகிதம்

திருவாரூர் செப்பேட்டு எண்—8

இச்செப்பேடு திருவாரூர் திருக்கோயில் பாதுகாப்பில்உள்ளது

காலம்:- சாலிவாகன சகாப்தம் 1655
சமமான ஆங்கில ஆண்டு கி.பி. 1733

செய்தி:- திருவாரூர் செப்பேட்டு எண்:7ல் கூறியுள்ளது போன்றே வெங்கிடபதி ராயர், சாளுவ திருமலை ராயர், அச்சுத தேவ மகாராயர் ஸ்ரீராமராயர் என்ற மன்னர்கள் வரிசை கூறப்பட்டு ஸ்ரீகிருண்ண (கிருட்ண தேவ) தேவ மகாராயர் ஆட்சி புரியும் ஆண்டான சாலிவானசகாப்த்தம் 1655 (கி.பி. 1733)-ல் பிரமாதீச வருடம் ஆடி மாதம் பதினைந்தாம் தேதி சுக்கிரவார நாளில் ராஜஸ்ரீ மகாராயர் சாயபு அவர்கள் (கிருஷ்ணதேவ மகாராயர்) தர்மமாக பரமபத வளநாட்டிலிருந்து இந்திர குலாதிபன் விசைய ரெகுனாத மேயக்கன் கோபாலன் என்பான் திருவாரூர் பெரிய கோயில் தியாகராச சுவாமிக்கு தெற்கு சீமையில் -தினையாகுடி மாகாணத்தில் சிலகுறிப்பிட்டுள்ள - நாங் கெல்லைக்குட்பட்ட நிலங்களை சர்வமானியமாக சாசனம் செய்து கொடுத்ததை விவரிக்கின்றது.

சாசன துவக்கத்தில் லிங்க உருவமும், சாசன முடிவில் வேல், வினாயகர், அமர்ந்த நிலையில் தேவி, ரிஷபம், நின்ற கோலத்தில் வேலேந்திய முருகன் முதலான திருவுருவங்கள் காணப்படுகின்றன

சாசனம் (TEXT)

(முதல் பக்கம்)

ஸ்வஸ்திஸ்ரீமன் மகா மண்டலே
சுரன் அரியராய தளவிபாடன் ப
ாழைக்குத் தப்புவராய கண்
டன் முவராய கண்டன் கண்டனா
டு கொண்டு கொண்டலுடு கொ
டாதான் பூறுவ தெ கூணை பச்சிம உதர சத்த
சமுத்திராதிபதி ஸ்ரீவீரப்பிறதாப மேதினி மி
சூரகண்டன் கட்டாரிச் சாளுவ பூமன்
துலுக்கர் தளவிபாடன் துலுக்கா மோக
-ந் தவிழ்தான் ஒட்டிய தளவிபாடன் ஒட்டி
-யர் மோகந்தவிழ்த்தான் கூளதது வந்தவ
-ன் பேரில் க்கலங்கு மாராய கண்டன் இவை

த்து வந்தவர்க்கு இல்லே யென்னுத கண்டன்
சிவபாத பூசாகர் நவகொடிஞருயன் மை
த்துராய கேசரி அதிகராய குல காலன் வேத
துராய மனத்த சேனி வெத்தி பின் வீரநீரன்ரா
ச ராய வயப் பரி மாந் குலவிசை யாசபு
வனி தளத்த விறல் வேந்தன் தேசார்ய
நிமி சூரியன் வேத வாய்மை தப்பாத மு
தராயர் எதிரில்லாத நாளவம் போக்கா
மென்னுத லோக தேவேந்திரன் வீரப்பி
றதாபமுள்ள ஆணை கொந்தி வெங்கிடபதிரா
யர் சாளுவ திருமலே ராயர் அச்சுததேவ
மகாராயர் பிறிதிவி ராச்சிய பரிபால
னம் பண்ணி அருளாநின்ற சாலிவாக-ந சகா
ப்தம் கூகூராடுடு (1655) க்கு மேல்ச் செல்லா நின்றபி
றமாதீச ஹே ஆடி மீ டுரு (15) உ சுக்கிறவாரனுள்
பரமனுப வள நாட்டினிருக்கும் இந்திராகுலா
திபன் விசைய ரெகுனுத மெய்க்கன்

(இரண்டாம் பக்கம்)

கோபாலன் திருவாரூர் பெரியகோவில்த்தி
யாகராச சுவாமிக்கு தெக்குச் சீமையில்
அஞ்சிரெண்டுப் பத்தில் தெனேயாகுடி மா
காணத்தில் வெட்டனூருக்குக் கிழக்கு தினே
யா குடிக்கு மேற்கு மாம் பழத்தி வயலுக்கு வ
டக்கு நீர் விளங்குளத்துக்கு தெக்கு இந்த நாங்
கெல்லேக்குட்பட்டது நஞ்சை விரையடி நூ
த்துப் பதிங்கலம் புஞ்சை வினேவு நிலமார்
பத்து சறுவமானியமாக பெட்டி சொன்னு
தாயம் உள்பட தான பூறுவமாதத் தாம்ப
ர சாதனம் பண்ணி கூத்தனூர் அபிஷேக
கட்டனே அகோரசிவ பண்டாரம் அவர்க
ள் பாரிசமாக னன் குடுத்த படியினுலே சா
மிக்கு அபிஷேகம் நெய்வேதனம் திருமாலே
திருவிளக்கு நந்தவனம் திருப்பணி விடை
முதலாகிய தருமமெல்லாம் சந்திராதி
த்த வரைக்கும் நடத்திக் கொண்டு வருகிற

து இந்த தருமத்தை பரிபாலநம் பண்ணி
ன பேர்கள் காசியிலே கோடி சிவலிங்கப்
பிறதிஷ்டை பண்ணின பலத்தை அடை
வக் கடை வாராகவும் இந்த தருமத்துக்கு அகி
தம் பண்ணின பேர்கள் கெங்கைக் க
ரையிலே காராம் பசுவை வதை பண்
னின தோழத்திலே போவார்கள் இதர்
க்குச் சாட்சி ஆகாசவாணி பூமதேவி அறிய
உ விசைய ரெகுநாத மெய்கன் கோபான்

தியாகராஜரே துணை உ

இந்த லிகிதம் செம்புலிங்க தம்பிராயர்

திருவாரூர் செப்பேட்டு எண் — 9

(A. R. E - NO - 17 of 1946/47)

திருவாரூர் திருக்கோயில் பாதுகாப்பில் உள்ள இந்த செப்பேடு தில்லை திருக்கோயில் பற்றியே குறிப்பிடுகிறது.

மன்னன்: தஞ்சை மராட்டிய மன்னன் சரபோஜி மகாராஜா

காலம் : சக ஆண்டு 1641

கி. பி. 1719 ஆகஸ்ட் 26 ஆம் நாள்

மொழி : தமிழ்

செய்தி : இச்செப்பேட்டில் குறிக்கப்பட்டிருக்கும் பஞ்சாங்க குறிப்பு - சக ஆண்டு 1641 தமிழ் விகாரி வருடம், ஆவணி மாதம் 25 ஆம் நாள் புதன்கிழமை, சப்தமி திதி, ரோகிணி நட்சத்திர மாகும்.

தஞ்சை மராட்டிய மன்னனை முதலாம் சரபோஜி மன்னரின் ஆட்சிக் காலத்தில் ராயஸ்ரீ முத்துசெல்லப்ப முதலியார் என்பவர் சிதம்பரேஸ்வர சுவாமிக்கு (தில்லை நடராஜப் பெருமானுக்கும்), கோவிந்தராஜப் பெருமாளுக்கும் அபிஷேக நைவேத்தியத்திற்கு சரவனைத் தம்பிரான் என்பவர் மேற்பார்வையில் ஆண்டொன்றுக்கு 12 பொன்னும் நாளொன்றுக்கு ஒரு குறுணி அரிசியும் தர்மமாக அளிக்கப்பட்டதை விவரிக்கின்றது.

சிறப்பு அம்சம்

ஓவியங்கள் வரையப்பட்டுள்ள செப்பேடுகளில் இது குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். இச்செப்பேட்டின் முதல் பக்கத்தில் இரண்டு தொகுதிகளாக ஓவியம் உள்ளது. மேல் பகுதியின் நடுவே பொன்னம்பலத்திலே நடமாடும் நடராசப் பெருமானும். சிவகாமி அம்மையும் இருக்க வலது புறம் வினாயகப் பெருமானும், இடதுபுறம் நிற்கும் முருகப் பெருமானின் திருமேனியும் காட்டப்பட்டுள்ளது. நடராசப் பெருமானின் அருகே புலிக்கால் முனியான வியாக்ரபாதரும், பாம்புடல் முனியான பதஞ்சலியும் மற்றுமோர் அடியாகும் வணங்கி நிற்கின்றனர்.

இத்தொகுதிக்கு கீழே உள்ள பகுதியின் வலதுபுறம் உள்ள பொற்கோயிலிலே பாம்பனையின் மேல் பள்ளி கொண்டுள்ள தில்லை கோவிந்தராஜப் பெருமாளும் அவருக்கு பின் இரண்டு தேவியர்களும் அமர்ந்துள்ள கோலம் காட்டப்பட்டுள்ளது. நடுவே துவஜ ஸ்தம்பம், நந்திபீடம், பலிபீடம் இவைகள் உள்ளன, இவற்றின் அருகே தஞ்சை மராட்டிய மன்னனான முதலாம் சரபோஜி மன்னர் உடைவாளை மார்பில் அணைத்த வண்ணம் இறைவனை வணங்கி நிற்கவும், அருகே இரண்டு பிரதானிகளும் அவ்வண்ணமே வணங்கும் கோலத்தைக் காணலாம்.

செப்பேட்டு ஓவியத்தில் உள்ள சரபோஜி மன்னரின் உருவம் மற்ற இடங்களில் உள்ள வண்ண ஓவியங்களும் முழுதும் ஒத்தே உள்ளது குறிப்பிடத்தக்க ஒன்று.

எழில்மிகு இச்செப்பேட்டை வடித்த சிற்ப ஆசாரி திருவாரூர் செல்லப் பெருமாள் ஆசாரி என்பதும் நோக்குதற்குரிய ஒன்று.

சாசனம் (TEXT)

(முதல் பக்கம்)

ஸ்வஸ்தி ஸ்ரீமன் மகர் மண்டலேஸ்வரன் அரிராய
விபான் பாஷைக்கு தப்புவராயிர் கண்டன் கண்டர்
கண்டன கண்ட விநோதன் கண்ட நாடு கொண்டு
கொண்ட நாடு கொடாதான் எம் மண்டலங்கொண்டு
ஈழம் திரை கொண்ட ராசாதிராசன் ராசபரமேஸ்வரன்

ராச மார்த் தாண்டன் ராசகெம்பீரன் இளவிர் மன
வாளன் வலுவரசர் குலகாரன் ஒட்டியர் தள விபாடன்
துலுக்கர் மோகந் தவிழ்த்தான் பூருவ தெட்சின
பச்சிம உத்திர சத்த சமுத்திராதிபதி அச்சுததெவ
மகாராயர் பிரபுடதேவ மகாராயர் சீரங்க தெவ
மகாராயர் கூ ஷணதெவ மகாராயர் சத்துருபதி
ராசஸ்ரீ சகசி மகராசன் எகொசி மகராசன்
சசசி மகராசன் சரபொசி மகராசன்
பிருதிவி ராச்சியம் பண்ணியருளா நின்ற
சாவிவாகண சகாப்தம் 1641 இதன் மெல்
செல்லா நின்ற விகாரி வரு ஆவனி மீ
25உ புதன் வாரமும் சத்தமியும்
ரோகிணி நட்சத்திரமும் வச்சிரநாம யோகமும்
பேவ கரணமும் கூடின சுபதினத்தில்
சிதம்பரம் அகோர பண்டாரம் அவர்கள் பாரிச
மாக நடக்கிற அரிச்சியப்ப முதலியார் அவர்கள்
கட்டளை நடத்தும் சரவணைத் தம்பிரான் அவர்கள்
முகாந்திரமாக சுவாமியார் சிதம்ப ரெசுர
சுவாமியர்க்கும் திஸ்லை கொவிந்தராய
சுவாமியார்க்கும் அபிஷேகம் நைவேத்தியத்
துக்கு ராயஸ்ரீ யேகொசி மகாராசா சாயபு
அவர்கள் கையில் அனுமக் கொடி வங்கார
நிசான் வங்காரச் சுறுட்டி கனக தண்டிகை
வெள்ளி முன்னணைசு பின்னணைசு கொம்புக்கு
முன்னே சிங்கமுகம் உபைய சாமரம் சங்கீத மெளம் இப்படி
விருது வெகுமானம் பெத்கார்ய மன்னியவர்

(இரண்டாம் பக்கம்)

முளவாரி யன்னமிட்டும் நிலிபழி க முவியும்
சுவிமுதுகிரசு சொறு அளித்தும் அரவின்
மணிவாங்கி இரவலாக களித்தும் ஆடைகி
றிச் சில நதிகாட்டியும் பாடிய பாணன்
படுமண படுமணஞ் சுமந்தும் மேதினி வாழ
மேழிக் கொடி எடுத்தும் இப்படி கீர்த்தி கொண்ட
தொண்ட மண்டலத்தில் சேறைக் கிழார் கெரித்
திரத்து நியமன காரகிபன் சுய சூர்திரபார்க்
கிறமான ராயஸ்ரீ முதலியார் முத்துசெல்லப்ப
முதலியார் அவர்கள் தன்மமாக அனெகம்

சவுரிய விரியப் பிறதங்க சிவகாரிய தூர
நாதரான தாண்டவமூர்த்தி செருவைக்காரர்
வல்லத்துத் தொட்டமும் ஆயத்தில் ஒரு
ஆளத் திருவையும் தாரர் தெத்தமாக தன்ம
சாதனம் பண்ணிக் கொடுத்தபடி யிலை
இந்த தொட்டத்துப் பலபாகம் சிதம்பரெசர
சுவாமியார்க்கும் வருஷவர்த்தனை பன்னி
ரெண்டு பொன்னும் தில்லை கொவிந்தராய
சுவாமியார்க்கு தினம் குறுணி அரிசி
வீதம் நிவேனத்துக்கு கட்டளை யிட்டபடியி
லேயும் இந்த தன்மத்தை புத்திர பவுத்திர
பாரம் பரையுமாக பரிபாலணம் பண்ணி வரக்
கடவார்கவும் இந்த தன்மத்துக்கு வாக்குச்
சகாயம் பண்ணின பெர்கள் இன்மையிலே
ஆயிசாலெ மார்கண்டனைப் பொலவும்
ஆயிசிரியத்திலெ குபெரனைப் பொலவும்
பொகத்திலெ தெவெந்திரனைப் பொலவும்
மறுமையிலெ பதஞ்சலி வியாக்கிர பாதர் பெற்ற
பெறு பெறக் கடவார்களாகவும் கெங்கை
கறையிலெ அசுவமெத யாகம் பண்ணின
பலத்தையும் அடையக் கடவார்கவும்
இந்த தன்மத்துக்கு விகாதம் பண்ணின
பெர்கள் கெங்கை கரையிலெ காராம் பசு
வைக் கொண்ண தொஷத்திலெ பொகக்
கடவார்கவும்

உ திருவாரூர் சிப்பாசாரி
செல்லப் பெருமாள் ஆசாரி கையிளழுத்து உ

தாண்டவன் தொட்டம் சபாபதி கட்டளை நடாத்தும் சரவனை தம்பிரானவர்கள் கையில் தெத்தம் பண்ணிக் கொடுத்தபடி.

திருவாரூர் செப்பேட்டு எண்—10

(A.R.E. No 15 of 1946 / 47)

திருவாரூர் திருக்கோயில் பாதுகாப்பில் உள்ள இந்த செப்பேடு தில்லை திருக்கோயில் பற்றியே குறிப்பிடுகிறது.

மன்னன்: குறிப்பிடவில்லை

காலம் : கலியாண்டு 4804
தமிழ் சுபானு—ஆடி 9 ஆம் நாள்.

மொழி : தமிழ்—கிரந்தம்

செய்தி : நஞ்சுண்ண சுவாமியின் அடிமை எனத் தன்னைக் கூறிக்கொள்ளும் வெள்ளாஞ் செட்டியார் காளி செட்டியார் சின்னிசெட்டியார் என்பவரால் கொடுக்கப்பட்டஇந்த செப்பேட்டு பட்டயம், தில்லைத் திருக்கோயிலில் சில விளக்குகள் எரிப்பதற்கும், சபாபதிக்கு உச்சி கால நைவேத்தியத்திற்கு அரிசிக்காகவும், தில்லை சபையில்உள்ள தில்லைமுவாயிரவர்க்கு உணவளிக்கவும் ஏற்படுத்தப் பட்ட கட்டளையை விவரிக்கின்றது.

சிறப்பு அம்சம்

இச்செப்பேட்டின் இறுதியில் திரிசூலம் ஒன்றும், ரிஷபம் ஒன்றும் ஓவியமாக வடிக்கப்பட்டுள்ளது.

முதல் பக்கம்

ஸ்வத்திஸ்ரீ சுலியப்த ஸகாப்தம் 4804 வரு
சு பானு வரு ஆடி மீ 6உ சிதம்பரம் அகோரபன்
டாரம் கட்டளை சரவணத் தம்பிரான் னவர்
கள் செதம்பரத்திலிருக்கும் அறைக் கட்ட
ளை நடத்தும் பாலைக் காட்டில் செந்த வெள்ள
ாதியில் லிருக்கும் நஞ்சுண ஸ்வாமி அடுமை வெ
வள்ளாஞ் செட்டியார் காளிசெட்டியார் சின்னி
செட்டி குடுத்த செப்பெட்டு பட்டையம் குடுத்த உ
பயம் அம்பல பண்டாரத்துக்கு திருவிளக்கு இருப்
பு விளக்கு 40க்கு யிதி பாத்து வருகிற விளக்
கு 5க்கு முதலாகக் குடுத்த கீழ் வேளூர் யிருச்
சுழிச்சக்கரம் (ளஉ) 12 பு (பணம்) 5க்கு மாதம் வட்டி 100
க்குபு (பணம்) $1\frac{1}{2}$ வீதமாக வட்டி மாதம் பு (பணம்) $1\frac{7}{8}$ நாளி
ளாக விளக்கு 5க்கு ஞள் 1க்கு 4 (பணம்) $1\frac{1}{6}$ என்னை படி
$\frac{1}{8}$ மாதம் 1க்கு நாள் 30க்கு எண்ணை படி $3\frac{3}{4}$ பு (பணம்) $1\frac{7}{8}$
விளக்கு பார்க்க உ சபாதிக்கு உச்சிக்கால
ப் பூசைக்கு (ளஉ) 15 4 (பணம்) ஒன்றுக்கு மாதம் 1க்கு
100 4 (பணம்) $1\frac{1}{2}$ 4 (பணம்) வித
மாக மாதம் 1க்கு வட்டி $2\frac{1}{4}$ அரிசிபடி $22\frac{1}{2}$ இ
ுனம் ஞள் ஒன்றுக்கு அரிசி படி $\frac{1}{4}$ மாதம் 1க்குஞள் 30க்கு

இரண்டாம் பத்தகம்

அரிசிபடி 22½க்கு தினம் ஞள் 1க்கு கில
வு சபையில் லுள்ள தில்லை மூவாயிரவர்
ருக்கு ஞள் 1க்கு சாதம் 1 மாதம் 1க்கு ஞள்
30க்கு சாதம் 35க்கு மாறைக் கட்டாய் வாங்
கிக்குள்ளவும் ஆக வகை 25 (ளஉ) 27 பு (பணம்) 6க்கு
100க்கு பு (பணம்) 1¼ வீதம் ஸீ (மாதம்) 1க்கு வட்டி பு (பணம்)
¾ வீ

தம் விட்டு நடத்தி வரவும் தர்ம தன்னம
த்தை அனுபோகித்துக் கொன்று சொ
கத்திலே யிருக்கவும் சின்னி செட்டியார்
சிதம்பர புண்டாரத்துக்கு பட்டயம் கு
டுத்தது பிடி பீடிகை பார்த்து சந்திராதித்தர்
உள்ள வரைக்கும் தன்னமதத்தை நடத்தி
வரவும் தர்மதன்மைத்தை அனுபோகித்துக்
கொன்று சுகமே யிருக்கவும் பட்டையத்துக்கு
சா கூஷி நஞ்சுன்ற றஸ்வர ஸ்வாமி உ

(நந்தியும் திரிசூலமும் உள்ள செப்பேட்டு வரி ஓவியம் உள்ளது)

திருவாரூர்ச் செப்பேட்டு எண்-II

A.R.E. No, 19A of 1946-47

திருவாரூர் திருக்கோயில் பாதுகாப்பில் உள்ள இந்த செப்பேட்டு தொகுதி தில்லைத் திருக்கோயில் பற்றியே குறிப்பிடுகிறது.

மன்னன்: விஜய நகர அரசர் வெங்கடபதி மகாராஜா.

காலம் : சக ஆண்டு 1547 கி. பி. 1625
தமிழ் குரோதனு—சித்திரைத் திங்கள்

செப்பேடு : இச்சாசனம் இரண்டு தகடுகளில் நான்கு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது.

மொழி : தமிழ்

செய்தி : பெரும்பெற்ற புலியூர் (சிதம்பரம்) சிதம்பரேசுர அம்மை சிவகாம சுந்தரிக்கு 56 தேசத்து வணிகர் குழுவினர் அளித்த அறக்கட்டளை பற்றி குறிப்பிடுகிறது இச்செப்பேடு, வெண்ணெயூர் நாடு, இராஜாதிராஜ வளநாடு, செல்வயப்ப முதலியார் புத்திரன் அரிச்சியப்ப முதலியார் போன்ற பெயர்களும், அழுது

செய்யத் தேவையான பெருங்காயம், கருப்புப்புளி போன்றவை களின் பட்டியலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருவாரூர் செப்பேட்டு எண்- 12
(A. R. E. No. 20 of 1946-47)

திருவாரூர் திருக்கோயில் பாதுகாப்பில் உள்ள இந்த செப்பேடு தில்லை திருக்கோயில் பற்றியே குறிப்பிடுகிறது.

மன்னன்: மராட்டிய மன்னன் சாம்போஜி.

காலம் : சக ஆண்டு 1611
தமிழ் விபாணு–புஷ்ய மாதம்
பூர்ணிமா கி. பி. 1688

மொழி : தமிழ்–கிரந்தம்.

செய்தி : இச்செப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ள பஞ்சாங்கக் குறிப்பு சகம் 1611, விபானு வருஷம் புஷ்ய மாதம் (தை மாதம்) பூர்ணிமா, பூசம் வியாழக்கிழமையாகும். இதற்குச் சரியான ஆங்கில ஆண்டு கி. பி. 1688 டிசம்பர் திங்கள் 20ந் தேதியாகும்.

சித்தம்பல தவமுனி என்பவர் சிதம்பரம் திருக்கோயிலே திருப் பணி செய்து, கனகசபைக்கு கும்பாபிஷேகமும், கோபால தாதாஜி என்ற அரசு அதிகாரியின் மேற்பார்வையில் செய்தார் என்று குறிப்பிடுகிறது. மேலும் திருப்பணி சர்வதாரி வருடம் தனுஸ் மாதம் துவங்கியதாகவும், கூறுகிறது.

செப்பேடு

முதல் பக்கம்

ஸ்ரீமத் சருவதாரி ஆண்டு மார்கழி மாதம் தன் இடத்தை (சிதம்பரத்தை) விட்டு வெளியே சென்றவருக்குச் சாம்போசி என்னும் அரசனுடைய ஆணையால் கோபால தாதாசி என்பவ ரால் இரத்தாட்சி ஆண்டு நடப்புக் கார்த்திகையில் நற்பேற்றின் காரணமாக நற்பலன்களை அடையும் பொருட்டுப் புதுப்பிக்கப் பட்டு ஆடவல்லான் மீண்டும் தன் அம்பலத்தை அலங்கரித்தார்.

இரண்டாம் பக்கம்

பூமிக்குச் சூரியனைப் போன்று ஒளி வழங்கக் கூடியவரும், திங்களைப் போன்று குளிர்ந்த ஒளியைக் கொடுப்பவரும். எல்லா

மக்களும் வணங்குதற்கு உரியவராக இருக்கக் கூடியவருமாகிய நடராசப்பெருமானுக்கு, நிலவுலகில் உள்ள அரசர்களுக்குத் திலகம்போல் உள்ளவரும், பண்டிதர்களுக்குத் தலைவன்போல் கருணை உள்ளவரும் மிகுந்த பெரும்புகழை உடையவரும் ஆகிய ஸ்ரீமத் தாதாசி அவர்கள் திருப்பணி செய்தார். சிவனுடைய தாமரை மலர் போன்ற திருவடிகளை நோக்கி அடியார்கள் வருகிறார்கள்.

விபவ ஆண்டு தை மாதம் 27 ஆம் நாள் வியாழக்கிழமை பவுர்ணமியன்று யோகியினுடைய மனத்தை மகிழச்செய்யும் மூற்றிலும் பொன்னால் ஆன தனதசனையின் இறைவனுக்குக் குட முழுக்கு நடத்தப்பெற்றது.

தமிழ்ப் பாடல்

வினையில்வந்த செம்பொன்அம் பலத்தான் அந்த
வெள்ளியம் பலத்திலே விரும்பிச் சென்ற
நடையில்வந்த வருடமோ சர்வ தாரி
நாயபமார் கழியிருபத் தைந்து நாளாம்
தடையில்வந்த வருடங்கார்த் திகையீ ரேழு
கதிர்வாரம் திரும்பவந்து கலந்த நாளாம்
இடையில்வந்த வருடமெண்ணிப் பார்க்கில் முப்பத்
தேழுபத்து மாதநாள் இருப தாமே!

திருவாரூர் செப்பேட்டு எண்-13
(A.R.E. No. 21 of 1946/47)

திருவாரூர்த் திருக்கோயில் பாதுகாப்பில் உள்ள செப்பேடு தில்லைத் திருக்கோயில் பற்றியே குறிப்பிடுகிறது.

மன்னன் : சாம்போசி

காலம் : 1686

மொழி : வடமொழியும் தமிழும்

அளவு : 19.5 செ. மீ × 17.5 செ. மீ.

அமைப்பும் செய்தியும் : மேல் பகுதி அரைவட்ட வடிவமும் கீழ்ப்பகுதி சதுர அமைபபும் கொண்டது இச்செப்பேடு. முதல்

பக்கத்தில் 13 வரிகளும் இரண்டாம் பக்கத்தில் 14 வரிகளும் வடமொழி கிரந்த எழுத்தில் எழுதப்பெற்று இரண்டாம் பக்கத்தின் இறுதியில் அழகிய ஆசிரிய விருத்தமாகிய தமிழ்ப் பாடலைக் கொண்டுள்ளது. மேலே கைப்பிடிப் பகுதியின்றிச் சிறு சூலம் மட்டும் பொறிக்கப்பட்டுள்ளது.

24-12-1648இல் சிதம்பரத்தைவிட்டு வெளியேறிய நடராசர் 40 திங்கள் குடுமியாமலையில் இருந்தார் என்றும், பின் ஏனைய காலம் மதுரையில் இருந்தார் என்றும் இரண்டாம் பக்க இறுதியில் பொறிக்கப்பட்ட தமிழ்ப் பாடல் மூலமாகத் தெரிகிறது.

சாம்போசி மன்னர் 1684-இல் தில்லைத் திருப்பணியைத் தொடங்கினார் என்ற செய்தி முதல்பக்க வடமொழிப் பகுதியால் பெறப்படுகிறது.

நடராசப் பெருமான் 'ஊருடைய முதலியார்' என்று இச் செப்பேட்டில் குறிக்கப் பெறுகின்றார். தில்லைக்கு மீண்டும் நடராசர் வந்ததால் 'பாருயிரெலாம் உய்யும்; செம்பொன் மாமழை பெய்யும்; தில்லைமாநகர் வாழும்' என்று குறிக்கப் பெறுகிறது. பொன்னம்பலம் 'சிற்சபை' என அழைக்கப்படுகிறது.

சாசனம்(TEXT)

(முதல் பக்கம்)

தக்ஞஸ்துத்ய ஸ்சகாப்தே ரலி மஹிமகரே யாதி ரக்தாக்ஷிவர்ஷே!
பக்ஷே க்ருஷ்ணே தசம்யாம் ப்ருகுஸததிவஸே ஹஸ்த தாரேந
ஹிமத்யே!!
கும்பே லக்னே ஸமஸ்த க்ரஹஸுர ஸமுதா யாநு கூல்யேந யுக்தே
சம்போஜி க்ஷ்மாப்ருதாத்யாகில நருபதி ஸதா ஸர்வ ஸம்பத்ஸம்
ருத்யை.!!.

(இரண்டாம் பக்கம்)

ஸ்ரீமத் ஸம்வத்ஸரே தநுர்மாஸே ப
ஞ்ச விம்சத் பாஸ்கர வாஸரே கநக
ஸபா ஸ்தா நாந்நிர்கதோ மதுரா புர்யாம் ஸ
பாபதிநா ரக்தாக்ஷி ஸம்வத்ஸரே வ்ருச்சிகமாஸேத்வா
விம்சத்திநே பஹுபி ஸ்தாம்ர பட்டிகாபிநேவ க
நககும்பைச் வாலங் க்ருதாயாம் ஸபாயாலங்க்ருத

கும்பாபிஷேகாயாம் அக்ஷய வருஷே க்ருத்திகாமா
ஸே சதுர்தஸ மரவிதிநே ஸபாஸ்தா னம் ப்ரவிஸ்ய நு
டந மகரோதி விம்சத்திநாதிக ஸமாஸாதிக ஸ
ப்ததத்ரிம்ஸத் வர்ஷாணி கதாநிமத்யே : உ ஸ்ரீ
ஸதா பூ சுரேந்த்ரா விதித ஸஹகலா தீக்ஷதா பூமி பாலா : |
சைவக்ரோ யோகிவர்யா த்யபிஸகலஜநாச் சம்பு பாதாப்ஜபக்தா:
ஸ்ரீமத் யாஞ்சித் ஸபாயாம் விஹித பஹு மகை: ஸத்ரி ஸாஹஸ்ர
[முகை :
வைஸ்ஸாம்ப ஸமபூஜ்யமான ஸகல ஸுர நதஞ்சித்-ஸபேரம
பஜத்வம : ||
அப்தே ஸ்ரீமத் ஸர்வதாரிணி தநுர் மாஸிஸ்தலாந் நீர்கதோ
ய: சாம்போஜி மஹீப சுமதிக்ஞ ஷாகோபால தாதாஜிநா |
ஸ்ரீத கார்த்திகேச சுக்ருதிநா க்ஞாப்தேந சித்தம்பலா
திவ்யே நாபி நபீ க்ருதாந் நிஜஸபா ந்ருத்தேந. . பூஷயேத் ||

சாசனம் (TEXT)

முதல் பக்கம் (வடமொழியின் தமிழாக்கம்)

இரத்தாட்சி வருடம் சகாப்தம் [1606] கோபால பிருத்விசுர பதியினுடைய வேண்டுகோளுக் கிணங்க சாம்போசி புதுப்பித்தலை பேற்கொண்டார். பொன் வேய்ந்தார். செப்பேடு அளித்தார். சிற்சபை மந்திர தந்திரங்களினால் பலன்களைக் கொடுக்கக் கூடியதாக அமையட்டும்.

இரண்டாம் பக்கம் (வடமொழியின் தமிழாக்கம்)

உலகில் உள்ள அடியார்கள் அனைவரும் மலைகளுடன் கூடிய சிவனை, மலைகளின் மேல் எல்லையில்லாத அன்பு கொண்ட சிவனை, மந்திரங்களினாலும், தயிர் நெய் பால் முதலிய ஐவகை அமிர்தத்தினாலும் சந்தனம் போன்ற பலவிதமான அபிடேகத் திருமஞ்சன நீரால் மேலான அந்தணர்களால் அபிடேகம் செய்யப் படுபவரும், பலி நைவேத்யம் தூய நீர் ஆகியவைகளால் அபிடேகம் செய்யப்படுபவருமான சபேசனை வணங்குகிறேன்.

முகரப்படாத அருச்சனை மாலை போல் விளங்குகின்ற பல குணநலன்களை யுடைய நல்லறிவு பெற்ற யோகீஸ்வரனால் செப்பேடு செய்யப் பெற்றது. சிற்சபையில் இறைவனுக்காகப் பொன்வேயப்பட்டு அது பலருடைய உதவியால் ஒளிவீசித் திகழ் கிறது.

தமிழ்ப் பாடல்

மருவியச காத்தமா யிரமும்ஐ நூற்றெழுப
துக்குமேற் சறுவதாரி
வருஷமார் கழிமாதம் ஆதித்த வாரமதில்
மன்னும்அம் பலவனாரை
அருமையொடு குடுமிமா மலையினாற் பதுமாதம்
அப்புற மதுரைதனிலே
அடைவுடன் எழுந்தருளி ஆகமுப் பதிமின்
னெட்டான அகூயவருஷமும்
பரவுகாற் திகைமாத தேதிபதி னாலுடன்
பருதிநாள் வளர்பக்கமும்
பகருத்தி ரட்டாதி திசமிகும் பத்தினிற்ப
பாருயிரெ லாமுய்யவே
திருமருவு செம்பொன்மா மழைகளது பொழியவந்
தில்லைமா னகர்வாழவுந்
தேவர்கள் துதிக்கவு மூருடைய முதலியார்
சிற்சபையுள் மேவினாரே!

திருவாரூர்ச்செப்பேட்டு எண் - 14
(A. R. E. 1946-47 A. No. 22)

திருவாரூர் திருக்கோயில் பாதுகாப்பில் உள்ள இந்த செப்பேடு தில்லை திருக்கோயில் பற்றியே குறிப்பிடுகிறது:

மன்னன்	:	சாம்போசி
காலம்	:	1684
மொழி	:	வடமொழியும் தமிழும்
அளவு	:	20 செ. மீ. × 18 செ. மீ,

அமைப்பும் செய்தியும்: முன் செப்பேட்டைப் போன்ற அமைப்பினையே கொண்டது. இரண்டாம் பக்கம் 10 வரிகளில் அழகிய ஆசிரிய விருத்தப்பா ஒன்று தமிழில் பொறிக்கப் பெற்றுள்ளது.

தில்லை நடராசப் பெருமானின் சிறப்பினைக் கூறி, மராட்டிய மன்னனின் குலகுருவான முத்தையா தீட்சிதர் என்பவரால்

சிதம்பரம் கோயில் குடமுழுக்குச் செய்யப் பெற்ற செய்தி கூறப் படுகின்றது. கேரள நாட்டைச் சேர்ந்த சிற்பி இச்செப்பேட்டை அளித்ததாகக் கூறப்படுகிறது. வடமொழிப் பகுதியில் பொன் னம்பலத்தின் பெருமையும், நடராசப் பெருமானின் பெருமையும் பலபடப் புகழ்ந்து பாராட்டப்படுகின்றன.

தமிழ்ப் பாடலில் சாலிவாகன சகம் 1606 ஆம் ஆண்டு இரத் தாட்சி வருடம் கார்த்திகை 22 ஆம் நாள் வெள்ளிக்கிழமை தசமி அத்த நட்சத்திரம் கும்பலக்கினம் பெற்ற நன்னாளில் திருச்சிற்றம் பலத் தவமுனிவர் சிதம்பரம் குடமுழுக்குச் செய்தார் என்ற செய்தி குறிக்கப்பட்டுள்ளது. அதற்குரிய கி. பி. ஆண்டு 1684 நவம்பர் 21 ஆம் தேதியாகும்.

சாசனம் (TEXT)

முதல் பக்கம் (வடமொழியின் தமிழாக்கம்)

பிரமன், இந்திரன், உபேந்திரன் முதலிய முக்கியமான தேவர் களாலும் மற்றுமுள்ள முனிவர் கூட்டங்களாலும் வணங்கப்படு பவரும், சக்தி சாகசங்களை உடையவரும், புகலிடமான திருவடி களை உடையவரும், அடியார்களைக் காப்பதாகிய விரதத்தை உடையவரும் ஆகிய தாண்டவப் பெருமானாகிய சம்பு வணங்கப் படுகிறார்.

புலவர்களுடைய கூட்டத்திற்குப் பெருந்தலைவரும், திலகம் போன்று இருப்பவரும், எல்வாக் கலைகளையும் அறிந்தவரும், சமநோக்கு உடையவருமாகிய முத்தையா தீட்சிதரால் கும்பாபி டேகம் செய்யப்பட்டது.

இரண்டாம் பக்கம் (வடமொழியின் தமிழாக்கம்)

குலகுரு தச சாகாரி கும்பாபிடேகம்.

ஸ்ரீ சிவகாம சுந்தரியின் திருக்கடைக்கண் பார்வை வீச்சினில் உண்டான அருளால் எல்லா உலகங்களிலும் உள்ள ஜகண்டம், பிரமாண்டம், பாண்டோதரம், நெருப்பு, மலை முதலானவை களை அடக்கி ஆள்பவரும், தாமரை மலர் இதழ் போன்ற கண் களை உடையவரும், தாண்டவம் என்ற நடனத்தில் முன்னணியில் இருப்பவரும், சுழல்கின்ற ஞாயிற்றைப்போன்று ஒளி விடுகின்ற

வரும், இதயத் தாமரையில் இருப்பவரும், ஆசிரியருடைய கடைக் கண் பார்வையில் இருக்கின்றவரும், அன்பைப் பொழிபவரும் கருணை வேண்டுபவர்களுக்கு அடைக்கலம் அளிப்பவரும், கேரள தேசத்தின் மலைகளுக்கருகில் உள்ளவரும், மரத்தின் நிழலில் இருப்பவரும், மக்களின் அரசரும், ஆள்பவரும், அருந்தும் நீருக்கு அருகில் உள்ளவரும், அம்பலத்திற்கு இலக்கணமாக விளங்குபவரு மான சிவனுக்குக் கேரள தேசத்தைத் சேர்ந்த சிற்பி கொடுத்த செப்பேடு.

பற்பல விதமான மனதை ஈர்க்கக்கூடிய பொற்குடங்களினால் அலங்கரிக்கப்பட்ட பொற்சபை நாகலோகத்தைப்போல் இருக் கின்றது. ஆனந்த நடனமாடிக் கொண்டிருக்கின்றதும், மேன் மேலும் அலைகளைப் போன்ற சிறந்த அந்தணர்கள் நிறைந்த இடமானதும், சிவகங்கையினால் சிறந்த அட்டபந்தனம் முதலிய வைகள் செய்யப்பட்டதும், யோகங்களினாலும் அடைய முடியாத துமான பொன்னம்பலத்தை ஒரே சிந்தனையுடன் சரண் அடைகின்றேன்.

பொன்னம்பல நாதனின் பயன்தரக்கூடிய திருநாமத்தின் அழகாகிய அருளாலேயே எல்லாவிதமான குணங்களையும், புண்ணியங்களையும் பெற்று அவன் தாமரைத் திருவடிகளை அடியார்கள் அடைகிறார்கள்,

தமிழ்ப் பாடல்

இயல்வாம சகாத்தமா யிரம்மோட ஆநூத்தாறின்
இனியரத் தாட்சிவருட
மிலகுகாற் திகைமாத மிருபத்து ரண்டாந்
தேதிசுக் கிரவாரமும்
செயமான திசமியும் அத்தநட் சேத்திரமும்
திகழ்கும்ப லெக்கனமுமே
திருந்துபவ கரணமும் ஆயிஷ்மான யோகமும்
தினமும்வந் தேசிறப்ப
உயர்ஆக மப்படியின் ஆனந்த நடராசர்
ஒளிர்பெற நிருத்தமிடவே
ஓங்குசிற் சபைஅதனைச் செம்பினால் மேய்ந்திடு
உண்மையை யுரைக்கவெளிதோ

வயலாரும் வாவிசூழ் புலிசையழ கியதிருச்
சிற்றம் பலத்தவமுனி
வையகம் துதிசெயக் கும்பாஅபி ஷேகமும்
மகிழுற முடித்தநாளே!

திருவாரூர் செப்பேட்டு எண்—15
(A. R. E. 1946-47 A. No. 23)

திருவாரூர் திருக்கோயில் பாதுகாப்பில் உள்ள இந்த செப்பேடு தில்லைத் திருக்கோயில் பற்றியே குறிப்பிடுகிறது.

மன்னன் : சாம்போஜி
காலம் : 14 - 11 - 1686
மொழி : வடமொழி
அளவு : 19.5 செ. மீ. × 17 செ. மீ.

அமைப்பும் செய்தியும் : மேல் பகுதி அரைவட்ட வடிவிலும் கீழ்ப்பகுதி சதுர வடிவிலும் உடைய இச்செப்பேடு முழுவதும் வட மொழியில் எழுதப்பெற்றதாகும். முதல் பக்கம் 11 வரிகளும் இரண்டாம் பக்கம் 22 வரிகளும் உடையது இச்செப்பேடு. முதல் பக்கம் மேல் பகுதியில் சூலம் பொறிக்கப்பட்டுக் கைப்பிடியின்றிக் கோர்த்து வைக்க வாய்ப்பாக இருக்கும் பொருட்டு சிறு துளை யுடன் கூடியுள்ளது.

24-12-1648ஆம் ஆண்டு தில்லையிலிருந்து நடராசர் வெளி யேறிய செய்தி இச்செப்பேட்டிலும் கூறப்படுகிறது. பின்னர் 21-11-1684 அன்று சிதம்பரம் நடராசர் கோயில் குடமுழுக்குச் செய்யப்பெற்ற நிகழ்ச்சியொன்று முன் செப்பேட்டைப் போலவே இதிலும் கூறப்பெறுகிறது. 1686இல் மீண்டும் ஒரு குடமுழுக்கு விழா நடைபெற்றுள்ளது. 1684, 1686 ஆகிய இரண்டு ஆண்டு களிலும் நடைபெற்ற குடமுழுக்கு விழாவைப்பற்றிய செய்தி இச்செப்பேடு மூலம் அறியப்படுகிறது.

இச்செய்தி விமானக் கலசத்திலும் பொறிக்கப் பெற்றதாகக் கூறப்படுவது அரிய செய்தியாகும்.

சாசனம் (TEXT)

முதல் பக்கம் (வடமொழியின் தமிழாக்கம்)

அவர்தம் பெருமை போற்றி! இரத்தாட்சி வருடம் தேய்பிறை தசமி வெள்ளிக்கிழமை அத்த நட்சத்திரம் கும்பலக்கினத்தில்

எல்லாக் கோள்களும் கூடிய நன்னாளில் சாம்போசி என்கின்ற அரசரால் இன்று எல்லோருடைய நன்மைக்காகவும் நற்பேறு களுக்காகவும் கும்பாபிடேகம் செய்யப்பெற்றது.

இரண்டாம் பக்கம் (வடமொழியின் தமிழாக்கம்)

நடப்பு [சருவதாரி] ஆண்டில் மார்கழி மாதம் 25ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை பொன்னம்பலத்தைவிட்டு மதுரையம்பதியில் எழுந்தருளியிருந்த சிவனுடைய ஆணையை நிறைவேற்றுபவரான சிற்றம்பல முனிவரால் இரத்தாட்சி வருடம் கார்த்திகை மாதம் 22 ஆம் தேதி இச்செப்பேடு விமானக் கலசத்தில் அலங்கரிக்கப் பட்டது.

பொன்னம்பலத்தில் கும்பாபிடேகம் முதலியவை அட்சய வருடம் கார்த்திகை மாதம் 14 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நடராசர் சிற்சபையுள் புகுந்து நடனம் ஆடுகின்றார். சுமார் 37 வருடம் 10 மாதம் 20 நாட்கள் சபா நாயகர் சபையை விட்டு வெளியேறியிருந்தார்.

குல தீட்சிதர்கள், பேரரசர்கள், சிற்றரசர்கள் சிவஞானிகள் சிறந்த யோகிகள் சகலமக்கள் ஆகியோர் அவனுடைய பாதத் தாமரைகளில் ஈடுபாடு கொண்ட பக்தர்கள் சிவனை வழிபடுகின்ற ஆயிரக்கணக்கான உலகத்துக்கும் உடையவனான சிற்சபேசனை வழிபடுகின்றவர்களுக்காக சருவதாரி வருடம் மார்கழி மாதம் சபையிலிருந்து வெளியேறிய நடராசருக்கு சாம்போசி மகாராசா வின் சம்மதத்தினால் கோபால தாதாசியின் ஆணையின்படி இரத்தாட்சி வருடம் கார்த்திகை மாதம் [வெள்ளிக்கிழமை] பொன்னம்பலம் புதுப்பிக்கப்பட்டு அங்கே மெய்யாகவே நடராசப் பெருமான் அலங்கரித்தார்.

திருவாரூர் செப்பேடு எண் - 16

இச்செப்பேடு திருவாரூர் தியாகராஜ சுவாமி திருக்கோயில் கிழக்கு சன்னதியில் திகழும் திருநீலகண்டேஸ்வரர் திருக்கோயி லுக்கு உரியதாகும். இச்செப்பேடு இத்திருக்கோயிலைப் பேணும் குலால பெருமக்களின் பாதுகாப்பிலுள்ளது. இதன் நகலை அண் மையில் நிகழ்ந்த திருப்பணியின் போது கல்வெட்டாக பொறித் துள்ளனர்.

இதில் திருநீலகண்டேஸ்வரர் திருக்கோயில் பற்றியசெய்திகள் இருப்பினும், தியாகராஜ சுவாமியார் திருவிழா பற்றியும் மற்ற அறக்கட்டளைகள் பற்றியும் குறிப்பிடப்பெற்றுள்ளது.

செபபேட்டின் காலம் :

கல்வெட்டில் நகலாக காணப்படும் வரிகளில் சாலிவாகன சகாப்தம் 1602, குபோதனனாம சம்வத்சரம் (?) வியவருடம், பங்குனி 22, பூறுவபட்சம் தசமி, பூச நட்சத்திரம், சோமவாரம் குறிக்கப்பெற்றுள்ளது. ஆனால் சகம் 1602க்குச் சரியான ஆங்கில ஆண்டு கி.பி. 1680ல் குரோதன ஆண்டோ அல்லது விய ஆண்டோ அல்ல. மேலும் 17 ஆம் நூற்றாண்டில் விய ஆண்டு கி. பி. 1647லும் குரோதன ஆண்டு கி. பி. 1626, 1686 ஆகிய ஆண்டுகளில் மட்டுமே வருகிறது. இதில் குறிப்பிடப்பெறும் பஞ் சாங்க குறிப்புகளை கால கணக்கீட்டு (Epimeris) ஆய்வு செய்யும் போது விய மற்றும் குரோதன ஆண்டுகளில் காண இயலவில்லை. இச்செப்பேட்டை படி எடுத்து கல்வெட்டில் பிரதி செய்யும் போது தவறு நிகழ்ந்திருக்கவேண்டும். இச்செப்பேட்டினை (ORIGINAL) நேரில் படித்தால் மட்டுமே காலக் கணக்கீட்டை செய்ய இயலும்.

செப்பேட்டில் காணும் செய்திகள்:

விஜயநகர மன்னர்களின் வம்சாவளி கூறப்பெற்றுள்ளது. ஆனால் சோழமண்டலத்து அரசர் பெயர் குறிக்கப்பெறவில்லை. ஆரூர் பிறக்க முக்தித்தலம் என்ற பெருமை, தீர்த்தத்தின் பெருமை, தியாகராச சுவாமியாரின் பெருமை. ஆகியவை கூறி காசியம்பலம் எனும் பெருமை படைத்த முதல் ஊர்என்றும் குறிப்பிடுகிறது. பின்னர் அப்பரின் தேவார வரிகள் (திருவாரூர் தேவாரம்) குறிக்கப் பெற்று; பதஞ்சலி, வியாக்கிரபாதர், இரணியவர்மன் திருநீல கண்டர் ஆகிய நால்வருக்கும் பங்குனி உத்திரநாளில் ஆரூர் இறை வன் வலக்கால் தரிசனம் கொடுத்த செய்தியும்; விளமல், மேல் மங்கலம். தண்டலை, திருநீலகண்டேசம் ஆகிய இடங்களின் பெருமையும் கூறப்பெற்றுள்ளது.

அடுத்து திருநீலகண்டர் திருக்கோயிலுக்குரிய கட்டளைகள் பற்றியும், தியாகராஜ சுவாமி திருக்கோயில் தேர்திருவிழாவிற்கும் மற்ற அறச் செயல்களுக்குமாக சேர, சோழ, பாண்டிய மண்டலத்

திலுள்ள குலாலப் பெருமக்களின் கடமைகள் பற்றியும் ''கங்கை யாடி'' வேலாயுதத் தம்பிரான் கையில் இத்தர்மக் கட்டளையை மேற்கொள்ள அளித்த இச்செப்பேடு பற்றியும் விவரிக்கின்றது.

இத்தாமிர சாசனத்தில் குறிப்பிடப்படும் சிறப்பு அம்சங்களாக புராண வரலாறு, தலப்பெருமை, அப்பரின் தேவாரம், சேர, சோழ, பாண்டி மண்டலத்து குலாலப் பெருமக்களின் இணைந்த அறக்கட்டளை கங்கை சென்று நீராடி வந்தவாகளுக்கு ''கங்கை யாடி'' என்ற சிறப்புப்பெயர் இருந்தமை ஆகிய காணப்படுகின்றது.

திருவாரூர் திருநீலகண்டேஸ்வரர் திருக்கோயிலில் உள்ள செப்பேட்டின் நகல் கல்வெட்டு

பிறமபுத்திர பதஞ் (ஆம்புஜோ) செய்வ அட்ட (ஆம்புஜ) புத்திர தாந்(த)கா தாந்த(க) புத்திர சடாதாரி சத்புத்திர குலா லகா திருநீலகண்டர் திருநீலகண்டருக்குப் பாரி குசாக்கினி அம்மன் ஸ்ரீமது சொற்றறி மன்னரான மண்டலேசுரன் அரிய ராய தளவி பாடணன் பாழைக்குத் தப்பில்லாத கண்டன் கண்டனுடு கொண்டு கொண்டனுடு கொடாதான் பூறுவ தெஷ்ஷண பச்சிம உத்தர சத்த சமுத்திராதிபதி யெம்மண்டலங் கொண்டு கீழம் திரை கொண்டான் ராசாதி ராசன் ராச பரமேசுவரன் ராச கெம் பீரன் ராச மார்த்தாண்டன் ராச தேசீயபுசன் ராச குலதீபன் துலுக்கர் தளவிபாடன் துலுக்கர் மொகமத விழங்காத்தன் ஒட்டிய தளவிபாடன் ஒட்டியர் மொகமத தவிழ்த்தான் கெசவேட்டை கண்டருளியராயராய மகாராயர், அச்சுததேவ மகாராயர் வெங்கிடாபதிதேவ மகாராயர் மல்லிகார்ச்சுனதேவ மகாராயர், ஆனை கொந்திராயர், புஷ்பதேவ மகாராயர் பிறதிவி ராச்சியம் பண்ணி அருளால் நின்ற சாலிய வாகன சகாத்தம் 1602 இதன் மேல் சொல்லா நின்ற குபோதனனாம சம்வச்சரம் விய-ஞ்ரு பங்குனி-மீ 22உ பூறுவபட்சத்துத் தெசமியும் பூச நட்சத்திரமும் சோமவாரமும் சுபயோகமும் பெத்தனாள் திருவாரூர் பிறக்க முத்தியான தல விசேஷமும் தேவேந்திரனுக்கு பிறுமகஷ்த்தி நீக்கின முப்பத்து முக்கோடி தீர்த்த விசேழ்ஷமும் தேவலோகத் திலே மகாவிஷ்ணுவினாலேயும் தேவேந்திரனாலேயும் பூசை பண்ணப்பட்ட தியாகராஜ சுவாமியார் மூர்த்தி விசேழமும் ஆரூர் காசியம்பலமென்று முதலாரு மாய விசேழமும் மாடமொடு மாளி கைகள் மல்குதில்லை மணி மன்றுளம் பலத்தே மன்னிக்கூற்றை

ஆடுவான் புகுவதற்கு முன்னோ பின்னோ அணியாரூர் கோவிலாள் கொண்டனாளே யென்கிற கோவில் விசேழமும் ஆனந்த நிற்த்த சபா நடேச சுவாமியாரை நோக்கிப் பதஞ்சலி மாமுனி வியாக்கிற மாமுனி யிரனிய வர்மராசன் திருநீலகண்டர் நாலுபேரும் சிதம் பரத்திலே தவசிருந்த காலத்தில் நடேச சுவாமி இடதுபாத தெரிசனங் கொடுத்து வலக்கால் தெரிசனத்துக்குத் திருவாரூர் பங்குனி உத்திரத்திலே வருகிறபோது திருவாரூர் மணலாலொரு லிங்கமென்று பதஞ்சலி மாமுனி விளமவிலேயும் வியாக்கிர மாமுனி மேலமங்கலத்திலேயும் யிரனிய வர்மராசன் தண்டலையிலேயும் திருநீலகண்டருக்குத் தம்(மி)டசன்னதியில் தெஷ்ஷண பாரிசத்தில் மூன்று காலமும் தெரினங்கொடுத்து பூசையும் பண்ணிக்கொண் டிருக்கச் சொன்னபடியினாலும் திருநீலகண்டர் பூசை பண்ணப் பட்ட மகாலிங்கத்துக்கு கோவில் கோபுரம் பீரகாரம் திருமதிள் திருநந்தவனமுமெடுத்து ஒருபடி தேவார முண்டாக்கிப் பூசை அபிஷேக நெயிவேற்றியத்துக்கெல்லாம் திருநீலகண்டர் கோவில் பத்தென்று கிடாரங்கண்டானிலே அயிவேல் நிலமும் கொண்டு சேர்ந்து வருஷ வற்தினை திருகைக்கு இரண்டு பணமும் கலியாண த்துக்கு மாப்பிள்ளை வீட்டுக்கொரு பணமும் பெண்வீட்டுக்கொரு பணமும் கட்டளையிட்டு நடந்து வந்தது. காலதேச விபரீதத் தினாலும் தியாகராச சுவாமியார் கிடாட்சத்தினாலே(யும்) பூசை நெய்வேத்தியம் நடக்கத்தக்கதாக கெங்காஷ்தான மாடிவந்த வேலாயுதத் தம்பிரானுக்கு சுவாமி சொற்பனஞ் சாதித்து அவர் கோவிலும் நந்தவனமும் பார்த்துக்கொண்டிருக்கிற பக்குவத்திலே அணிமுடி நெடியதெரு வீதியில் திருத்தேரில் திருவிழாச் செய்தருளு கிற தியாகராச சாமியார் திருவிழாவிற்குச் சோழமண்டலம் பாண்டிய மண்டலம் சேரன்மண்டலம் இதிலேயுள்ள திருநீலகண்டர் கிளைவற்கமாகிய குலால மாமுனிவரான வீமனைப் பணிகொண் டோன் கெளிறுபரியாக்கினோன் சாலியவாகனராசர் விக்கிர மாதித்த ராசாவை செயம் பண்ணினோன் குமணனென்கிற ராசாவை உடல் வேறதாக வளை(னை)த்தோன் கரிகாலச் சோழனை வளத்த பேர்கள் இது முதலான பெருமையெல்லாம் படைத்து திருநீறு மஞ்செழுத்தும் பொருளாய்க் கொண்டருளிய திருநீலகண்டர் கிளைவற்கமாகிய பேர் தேவாசிரிய ராகிய மண்ட பத்திலே கூடியிருந்து நாலு ஜாதியாருக்கும் யிந்தஷ்தலத்திலே மட தர்மமும் அன்னதானமும் நடக்க நம்முட தர்மமாயிருக்கயிலே விழுந்துபோகலாமோ என்று நாலுபேருங்கூடி முன்பின் நம்முட சாதி வற்தினை திருகைக்கு இரண்டு பணமும் கலியாணத்துக்கு

மாப்பிள்ளை வீட்டுக் கொருடணமும் பெண்வீட்டுக்கொரு பணமும் குடுத்து தர்மத்தைப் பரிபாலனம் பண்ணவேணுமென்று சகலரும் சம்மதித்தபடிக்கு கெங்கையாடி வேலாயுதத் தம்பிரானை அழைத்து அவர் கையிலே இந்த தர்மசாதனப் பட்டையத்தை தல தானம் பரிகல பரிசின்னம் சகலமானபேரும் கூடி சாதனப் பட்டையங் குடுத்தபடி யிந்த வற்தனை வாங்கி சுவாமிகளுக்கு அபிஷேகம் நெய்வேத்தியம் திருவிழாவுக்குப் பரிவட்டம் திருக்கண் சாத்து நந்தவனம் திருப்பணி முதலான தர்மமெல்லாம் நம்முட சாதியார் பேர் விளங்க திருவி(வு)ளத்துக் கொப்பாய் நடப்பித்து வாருமென்று கட்டளையிட்ட படியினாலே அவரே அனுபவித்துக் கொண்டிருக்கத் கடவே(ா)னாகவும். நம்முடைய சாதியார் யெங்கேயிருந்தாலும் அபிமானித்துக் கொண்டு தர்மசாதனப் பட்டையங்கேட்டு வருஷ வற்தனையும் கலியாண வற்தனையும் கொடுத்து படி அரிசியும் பாக்கு வெத்திலையும் கொடுத்து கொடாத பேர்களுக்கு உபசாரங்களும் சொல்லி வாங்கிக்கொடுத்த பேர்கள் திருநீலகண்டர் பேறு பெத்தப் பேறு பெறுக்கடவே(ா)னாகவும். யிந்த தர்மத்துக்கு யாதாமொரு வனாகிலும் விக்கினம் பண்ணினவன் கெங்கைகக்கரையிலே காராம் பசுவைக் கொண்ணண்(ன்)ற தோஷத்திலே போகக் கடவே(ா)னாகவும்.

கல்வெட்டுக்கள்

கல்வெட்டுக்கள்

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் செங்கோ லோச்சிய முதல் ஆதித்த சோழன் காலம் துவங்கி பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த தஞ்சை மராத்திய மன்னர் சரபோஜியின் காலம் வரை திருவாரூர்த் திருக்கோயிலில் வெட்டுவிக்கப்பெற்ற கல்வெட்டுக் களின் எண்ணிக்கை எண்பத்து ஒன்று ஆகும். இவை தவிர சிதைந்தனவும், ஒருவரி கல்லெழுத்துக்களுமாக பத்துப் பொறிப்பு களுக்குமேல் உள்ளன.

நூற்றுக்கு மேற்பட்ட இக்கல்வெட்டு சாசனங்களில் மத்திய தொல்லியல் துறையினர் நாற்பத்திஆறு கல்வெட்டுகளை மட்டுமே முழு சாசனத்துடன் பதிப்பித்துள்ளனர் மேலும் பதினேழு கல்வெட்டுக்களின் சாரமாக ஓரிரு வரிக் குறிப்புகள் மட்டுமே ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ளனர். முழு சாசனங்கள் (46) தென்னிந்திய கல்வெட்டுக்கள் தொகுதி எண் 4, 5, 7, 13 மற்றும் 17 ஆகியவற்றுள் வெளிவந்துள்ளது. பதினேழு கல்வெட்டுக்களின் குறிப்புகள் 1918 மற்றும் 19ஆம் ஆண்டு கல்வெட்டு ஆண்டறிக்கை களில் (ANUAL REPORT OF EIPIGRAPHY) ஆங்கில மொழியில் வெளிவந்துள்ளது.

நூற்றுக்கும் மேற்பட்ட ஆரூர் கல்வெட்டுக்களில் மேற்குறித்த 63 கல்வெட்டுக்களின் செய்திகள் மட்டுமே வெளியுலகிற்கு அறிமுக மாகியது. மற்ற கல்வெட்டுக்கள் இது வரை படி எடுக்கப் பெறா மலும், படிக்கப் பெறாமலும் இருந்தன. மத்திய தொல்லியல் துறையினர் பதிப்பித்த நாற்பத்தி ஆறு கல்வெட்டுக்களில் கிரந்த எழுத்துக்களில் உள்ள வரிகள் கிரந்தத்திலும், எண்களும் குறியீடு களும் அப்படியே வெளியிட்டனர். இது பாமரர் படிக்க இயலாத ஒன்று. நமது கலாசாரப் பெருமையினையும், வரலாற்றுப் பெருமை யினையும் சுமந்து நிற்கும் ஆரூர் கல்வெட்டுக்கள் அனைத்தையும் முழுமையாக தமிழகத்து மக்கள் அனைவரும் படிக்கும் வகையில் படிஎடுத்து வெளியிட்டதோடு கிரந்த பகுதிகளை தமிழில் எழுதி அவற்றின் மொழியாக்கமும் தந்துள்ளோம். கல்வெட்டு ஆர்வலருக்கும், ஆய்வாளர்களுக்கும் பயன்படும் வண்ணம்

ஒவ்வொரு கல்வெட்டின் இருப்பிடமும் திருக்கோயிலின் வரை படத்தில் இலக்கங்கள் இட்டு வெளியிட்டுள்ளோம்.

தமிழகத்தைப் பொறுத்தவரை ஒரு திருக்கோயில் பற்றி அனைத்து செய்திகளையும் முழுமையாகத்தரும் முதல் நூலாக இந் நூல் அமைவதில் பெருமகிழ்வு அடைகிறோம். கல்வெட்டுக்களைப் பொறுத்தவரை அனைத்தும் தந்து ஆய்வுரைகள், தொகுப்புச் செய்திகள் மொழியாக்கம் ஆகியவையும் தந்துள்ளோம். எனவே இப்பகுதி ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆண்டுகளின் வரலாற்றை (ஆரூர் திருக்கோயிலின்) காட்டும் அழியா பெட்டகம் என்பதில் ஐயமில்லை.

திருவாரூர் கல்வெட்டு எண் — 1

காணப்படும் இடம் :- கிழக்கு இராசகோபுரத்தின் வாயிலை ஒட்டி (வெளிப்புறம்) வலதுபுறம் விளையகர் திருக்கோயிலொன்று, இராசகோபுர அதிஷ்டானத்துடன் இணைத்து கட்டப்பட்டுள்ளது. இக்கோயிலின் கருவறையின் உட்புறம் வடதிசையில் உத்திரமாக கோபுரத்துடன் இணைக்கப்பட்டுள்ள கற் பலகையில் உள்ளது இக் கல்வெட்டு.

மன்னன் :- முதலாம் ஆதித்த சோழன்

கல்வெட்டின் காலம்:- கி.பி. 884 (பதிமூன்றும் ஆட்சியாண்டு)

சிறப்புச் செய்தி :- இக்கல்வெட்டு முதன் முதலாக இந் நூலாசிரியரால் 1979 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது. இக் கல்வெட்டே இதுவரை திருவாரூர் திருக்கோயிலில் பதிவு செய்யப் பட்ட அனைத்து கல்வெட்டுக்களிலும் தொன்மையான ஒன்றாகும். இக்கல்வெட்டுள்ள கற்பலகை முன்பு அரநெறி எனும் திருக்கோயி லில் இடம் பெற்று இருந்து பிற்காலத்திருப்பணிகளால் இடம் பெயர்ந்து கோயிலுக்கு வெளியே இடம் பெற்றுள்ளது. இக்கல் வெட்டிலில் அரநெறியில் காணப்படும் கற்சிலைகளும், முகமண்டப மும் ஆதித்தன்காலத்து கற்திருப்பணிகளே என்பது உறுதியாகிறது அரநெறியில் பிரிதொரு கல்வெட்டு ஆதித்தனைக் குறிப்பிட்டாலும் அது கி. பி. 12 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட பழைய கல்வெட் டின் படியே ஆகும். இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் ராஜகேசரி வர்மன் முதல் ஆதித்தனே என்பதை எழுத்தமைதி (Paleography)

மற்றும் பராந்தகன், ஆதித்தன் இவர்களது பிற கல்வெட்டுச் செய்திகளால் உறுதியாகிறது.

தொன்மையான இக்கல்வெட்டு உள்ள கற்பலகை முழுமையாக இருப்பினும் கல்வெட்டுச் செய்திகளின் ஒருபகுதி சுவற்றினுள் புதைந்துள்ளது.

கல்வெட்டு (TEXT)

1. ஸ்வஸ்திஸ்ரீ கோவி ராச கேசரி வன்ம ற்கு
யாண்டு பதின் மூன்ருவது திருவாரூர்
திருவரநெறி பிடாரர்.....

2. புத்திரன் நாரண குட்டி நொத்தா விளக்கு
ஒன்றுக்கு குடுத்த ஆடு நூற்றொன்பது
சாவாமூவா பேராடு.....

3. ஊரியனே திரு நீல கண்டத்தால் சன்திராதி
ச்சர் உள்ளளவும் அட்டுவோ மாறேம்.....,
.....

இக்கல்வெட்டுச் செய்தி:- முதல் ஆதித்த சோழனின் பதிமூன்றும் ஆட்சியாண்டான கி. பி. 884 ல் திருவாரூர் திருவரநெறியின் இறைவனான திருவரநெறி பிடாரர்க்கு நாரண குட்டி என்பவன் ஒரு நுந்தாவிளக்கு ஒன்றிஞை அளித்து, அதன் பராமரிப்புக்காக 109 சாவா மூவா பேராடுகளையும் அளித்துள்ளான். இதனை ஏற்றுக் கொண்ட ஆயன் ஒருவன் தினம் திருநீலகண்டம்எனும் குவளையால் நெய் அளப்பதாக ஒப்புக்கொண்ட சாசனமே இக்கல்வெட்டாகும்.

திருவாரூர் கல்வெட்டு எண்-2

காணப்படும் இடம் :- கிழக்கு ராசகோபுர வாயிலின் வலது புறம் நிலைப்படியை ஒட்டி தரைமட்டத்தில் உள்ளது. கல்வெட்டின் ஒரு பகுதி பூமியினுள் புதைந்துள்ளது.

மன்னன் :- விஜயநகர சக்ரவர்த்தியான இராமராசர் காலத்தில் தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னன் சேவப்பநாயக்கன் (கி. பி. 1542–1565)

கல்வெட்டின் காலம் :- கி. பி. 1561 ஆம் ஆண்டு

கல்வெட்டுச் செய்தி :- இக்கல்வெட்டு நாயக்க மன்னனுல சேவப்பநாயக்கனின் கட்டளையைக் கூறுகிறது. முத்து பவளம் போன்றவை விற்பதற்காக அளிக்கப்பட்ட மானியம் பற்றி குறிப்பிடுகிறது. சில இடங்கள் சிதைந்துள்ளன.

இக்கல்வெட்டு இதற்கு முன்பு பதிவு செய்யப்படாத ஒன்றாகும்.

கல்வெட்டு (TEXT)

1. துன்மதி வருஷம் பங்னி மாத.....உ
2. இராம இராசர் அய்யன் உத்தரப்பூ.....சவப்ப
3. நாயக்கர் கட்டளை இட்டபடி அன.....ந்து
4. பூர்வ தெசத்தில் பல ரகு முத்துப் பவழம்
5. வளையில் வளையில் மணி விற்குறத்துக்கு சந்தி
6. ராதித்த வரையுஞ் சவ்வ மானிய.....
யம்
7. அனுப்பவு மக்காசு வாங்கா.....லி...
8. க்கு இயாதா மொருவர் அக.....
9. கெங்கைக் கரையிலே காராம் பசுவை கொன்
10. பாவத்திலெ பொகத் கடவராகவும் உ

திருவாரூர் கல்வெட்டு எண்-3

காணப்படும் இடம் : தேவாசிரிய மண்டபத்தின் முன்பு தரையில் நடப்பட்டுள்ள தூண்கள் பலவற்றில் எழுதப்பட்டுள்ளது இத்தூண்கள் உள்ள பகுதி ஆயிரங்கால் மண்டபம் என அழைக்கப் படுகிறது.

மன்னன் :- கல்வெட்டுக்களில் மன்னன் பெயர் குறிப்பிடப்பட வில்லை.

காலம் :- எழுத்தமைதி கி. பி. 13 ஆம் நூற்றாண்டு சோழர் கால தமிழ் எழுத்துக்களாக உள்ளது.

செய்தி :- இத்தூண்கள் உள்ள பகுதிக்கு "தக்காற்குத் தக்கான்" என்ற பெயர் அழைக்கப்பட்டதாக அறிய முடிகிறது.

தக்கார்க்குத்தக்கான்—தகுதி உடையவர்களுக்கு அருள் பாலிப்பவன் என இறைவனின் தன்மையை விளக்குவதாக அமைந்துள்ளது

கல்வெட்டு (TEXT)

1. தக்கார்க்கு
2. த்தக்கான்

திருவாரூர் கல்வெட்டு எண்-4

காணப்படும் இடம் :- தேவாசிரிய மண்டபத்தை ஒட்டிய மேல்திசையில் சதுரவடிவ கிணறு ஒன்று தென்புற வாயில், மற்றும் படிகளுடன் அமைந்துள்ளது. வாயிலை ஒட்டிய இடது புறம் கல்வெட்டொன்று பதிக்கப்பட்டுள்ள கற்பலகையில் இக்கல்வெட்டு வடமோழியில் எழுதப்பட்டுள்ளது,

நீரத்தத்தில் உள்ளதை அப்படியே தமிழில் தருகிறோம்:-

கல்வெட்டு (TEXT)

1. ஸ்வஸ்திஸ்ரீ சங்க தீர்த்தி
2. மித்தி கியாதம் கமலாலய
3. மத்யகம் । வன்மீக சம்பவஸ்யா
4. கிரே சர்வரோக சயாப
5. -கம் । சர்வ வியாதி ஹரஜ்ஜை
6. -வ சீரகுண்டமிதம் சுபம் । ஹீ
7. நாம் கோ வியாதி தாங்கோ வாயோ
8. தரஸ் நாநம் கரிஷியதி । சையித்ரசு
9. -த்தே நிரா ஹாரகா சித்ர சம்ஸ்தே
10. நிசாகரே । சம்பூர்ணு அங்க
11. தேஜஸ்தீ பவிஷ்யதி நிஸம்ஷயகா.

கல்வெட்டின் தமிழாக்கம் :-

கமலாலயத்தின் மத்திய பகுதியில் சங்கு தீர்த்தம் என இது அழைக்கப்படுகிறது. வன்மீகர் சர்வ ரோகங்களையும் போக்கக் கூடியவர். சர்வ வியாதிகளையும் போக்கக் கூடிய பால் குண்டம்

இது. சுபம்.அங்க குறைவுற்ற வியாதி உள்ளவர்கள். பங்குனி அமாவாசைக்கு அடுத்த நாள் முதல் சித்திரை அமாவாசை வரை ஆகாரம் இல்லாமல் நடுநிசியில் இதில் ஸ்நானம் செய்யவும். இழந்த அங்கங்கள் பூரண உறுப்புகளுடன் உடல் ஒளி பெற்று திகழும். சந்தேகப் படவேண்டாம்,

திருவாரூர் கல்வெட்டு எண்-5

காணப்படும் இடம்:- இரண்டாம் பிரகாரத்தின் கீழ் திசையில் அமைந்துள்ள ஆரியன்கோபுரத்தை ஒட்டி, உட்புறம் மதிவில் இடதுபுறம் உள்ளது.

மன்னன் :- முதலாம் குலோத்துங்கன்.

செய்தி :- புகழ் மாது விளங்க ஜயமாது விரும்ப எனத் தொடங்கும் முதல் குலோத்துங்கனின் மெய்கீர்த்தியுடன் துவங்கும் இக்கல்வெட்டு அருகில் பிற்காலத்தில் கட்டப்பட்டுள்ள செங்கல் கட்டுமானத்துள் புதைந்துள்ளது. இக்தல்வெட்டு இதுவரை படி எடுக்கப்படவில்லை,

திருவாரூர் கல்வெட்டு எண்-6

இடம் :- இரண்டாம் பிரகாரம்-தெற்கு பிரகாரம் தென்புற சுவரின் கிழக்குப் பகுதியில் மண்டபத்தினுள் உள்ளது.

மன்னன் :- விக்கிரமசோழன்

காலம் :- நான்காம் ஆட்சியாண்டு—கி. பி. 1122.

செய்தி :- விக்கிரம சோழனின் 4 ஆம் ஆட்சியாண்டில் ''இஷப நாயற்று பூர்வபட்சத்து தரதியையும் புதன்கிழமையும் பெற்ற திருவாதிரை நாள்'' குறிக்கப்பட்டுள்ளது. காலக் கணக் கீட்டின் படி சரியாக கி. பி. 1122 ஆம் ஆண்டு மே மாதம் 10ஆம் தேதி என்பதை அறிய முடிகிறது.

குலோத்துங்க சோழவள நாட்டு, வேளாநாட்டு பிரமதேய கிராமமான திருநல்லூர் ஊர்சபையினர் திருவாரூர் திருக்கோயி வில் உள்ள ராஜ நாராயணன் திருமண்டபத்தில் கூடி தாங்கள்

இக்கோயிலுக்காக விற்ற திருக்குளம் ஒன்று பற்றிய விலைப் பத்திரமே இக்கல்வெட்டு சாசனமாகும். ஜெயங்கொண்ட சோழ மண்டலத்தைச் சேர்ந்த அரும்பாக்கிழான் மதுராந்தகன் பொன்னம்பலக் கூத்தன் என்பவன் திருவாரூர் இறைவனுக்கு தினம் செங்கழுநீர் மாலை அணிவிப்பதற்காக அறக்கட்டளை ஒன்று ஏற்படுத்தி அதற்கென இத்திருகோயில் பண்டாரத்தில் 100 காசு களை முதலீடு செய்தான். இதனை பெற்றுக் கொண்டு திருநல்லூர் ஊர் சபையினர் அவர்கள் ஊரில் உள்ள நெடுங்குளமென்னும் குளத்தை அளித்தனர்.

இக்கல்வெட்டால் ராஜராஜன் மாடை என்ற காசு அப்போது புழக்கத்தில் இருந்தது என்பதும் 100 காசுகள் முப்பத்திரு கழஞ்சரை செம்பொன்னுக்கு சமம் என்பதும், திருநல்லூரில் உலோகமாதேவி விண்ணகரம், ஸ்ரீகைலாசமுடையார், பிடாரியார் திருக்கோயில்கள் இருந்தன என்பதும் தெரிய வருகிறது.

கல்வெட்டு (TEXT)

1. பூமாது புணரப் புவிமாது வளர நாமாது .....
தன்னிரு பதமலர் மன்னவர் சூட மன்னிய உரிமையால்
மணிமுடி சூடி செங்கோல் சென்று திசைதோறும் வளர்ப்ப
வெங்கலிநீங்க மெய்யறத் தழைப்ப கலிங்கமினிய கட

2. ல் மலை நடாத்தி வலங் கொ ளாழி வ.....டை
.....ளங்.....வும் ஒருகுடை நிழற்கீழ் செம்
-பொன் வீர சிம்காசனத்து வீற்றிருந்தருளிய
கோப் பர கேசரி பன்மரான திரிபுவன சக்ரவர்த்திகள்
விக்கிரம சோழ தேவற்கு யா

3. ண்டு நாலாவது யிஷ்ப நாயற்று பூர்வபட்
-சத்து தரதியையும் புதன் கிழமையும் பெற்ற திரு
வாதிரை நாள் குலோத்துங்க சோழவள நாட்டு வேளா
நாட்டு பிரமதேயம் திருநல்லூர் பெருங்குறி மகா
சபையோம் கேய மாணி

4. க்க வளநாட்டு திருவாரூர் கூற்றத்து.....உடையார்
ஸ்ரீ மூலஸ்தான முடையார் கோயிலில் ராஜநாரயண
-ன் திரு மண்டபத்து நாங்கள் கூட்டம் குறைவறக்
கூடி இருந்து இக் கோயில் ஆதிசண்டேஸ்வர
தேவற்கு விற்றுக் குடுத்த குளத்துக்கு கி-

5. பாருள் மாவறுதி ஐயங் கொண்ட சோழ
மண்டலத்து மணவில் கோட்டத்து அரும் பாக்கிழான்
மதுராந்தகன் பொன்னம்பலக் கூத்தனை பொற்
கோயில் தொண்டை மானூர் இத் தேவற்கு செங்கழு
நீர் திருப்பள்ளித் தாமம் சாத்தி அருளுகை-

6. க்கு குளங் கொள்ள இத்தேவர் ஸ்ரீ பண்டாரத்து
ஒடுக்கின காசு 100 இக் காசு நூறுக்கும் ராஜராஜன்
மாடை யோடொக்கும் செம்பொன் முப்பத்திரு கழஞ்
சரைக்கும் நாங்கள் விற்றுக் குடுத்த குளமாவது
எங்களூரில் நெடுங்குளமென்று பேர் கூவப்பட்ட
குளம் விற்று பொருள் மாவறு

7. தி செய்து குடுப்பதற்கு கீழ் பாற்கெல்லை ஊரில்
நின்றும் வடக்கி நோக்கி போந்த பெருவழிக்கும்
விளாகத்தில் நாற்றங் கால்களுக்
கும் வீற்றிருந்தருளிய உலோகமாதேவி விண்
-ண கராழ்வார் திருநந்தவனத்து மேற்கு
தென் பாற்கெல்லை இத்தேவர் திரு நந்

8. தவனத்துக்கும் ஸ்ரீ கையி
லாச முடையார் திரு நந்தவனத்துக்கும் பிடாரி
-யார் ஸ்ரீகோயிலுக்கும் திரு முற்றத்துக்கும்
பாண்டி நாட்டு சேரி சோப்பட்டங்கள் இன்
-னுள் வரை அனுபவித்து வருகிற நிலத்துக்கு
வடக்கும் மேல் பாற்கெல்லை இராஜேந்திர
சோ

9. ழன் வாய்க் காலுக்கு கிழக்கும் வடபாற் கெல்லை
இவ் வாய்க் காலுக்கும் பெரும் பெச்சார் உதைய
-ன் நாராயணன் கண்ணபிரான் பட்டனும்
ஆத்திரையன் நாராயணன் பள்ளிகொண்டான்
பட்டனும், ஸ்ரீ கிருஷ்ணன் சிராம பட்டனும்
பரந்தாமன் சங்கர நாராயணன் சீதர் பட்டனும்

ஆ

10. த்திரையன் பெரும் புறக் கடல் ஸ்ரீ திவாகர
பட்டனும் பூசாளி ஸ்ரீ கிருஷ்ண பட்டனும்
.....கௌதமன் ஆதித்தன் பலநாஞ்

பட்டனும் உள்ளிட்டார் நிலத்துக்கு தெற்கும்
ஆக இவ்விசைந்த பெரு நான்கெல்லையுள்
நடுவு பட்ட நிலம் இரண்டே முக்காலே
சிளும் இன்னிலம்

11. இரண்டே முக்காலே சிளுமும் விற்றுக்குடுத்
-து கொண்ட அன்றுடு நற்பொன் முப்பத்திரு
கழஞ்சரையினுல் காசு 100 இக்காசு நூறும்
ஆவணக் களியே கைச் செல்ல அறக் கொண்டு
பொருள்மாவறுதி செய்து குடுத்தோம் இவ்
-வாதி சண்டேஸ்வர தேவற்கு இத் திருநல்லூர் பெ-

12. ருங் குறி மகா சபையோம் இவர்கள் பணியால்
இப்பொருள் மாவறுதி எழுதினேன் இத் திருநல்லூர்
கரணத்தான் நல் மாரக் கமங்கல முடையான் மதி
-சூதன் தில்லை வன முடையா னெழுத்து. இப்படிக்கு
இவை பாரத்துவாஜி கூத்தாடி செந்த பிராந்
பட்டனெழுத்து இது பாரத்துவாஜி ஸ்ரீ கிருஷ்ணன்
சீரா

13 .....யிஜைக்கு யாதமைக்.....பணி
யால் மாரக் க மங்கல முடையாநெழுத்து இப்படி
-க்கு பாரதுவாஜி கண்ணந் அழகிய மணவாளந்
எழுந்து (இப்படிக்கு).....யாந்
ஸயிஜைகு யாதமைக்கு கண்ணந் அழகிய மண்
வாளந் எழுத்து இது கவிணியந் ஸ்ரீ கரஷ்ண

திருவரிஞர் கல்வெட்டு எண்-7

இடம் :- இரண்டாம் பிரகாரம்-தெற்கு பிரகாரம்-தென்புற சுவரின் கீழ் பகுதியில் உள்ளது.

மன்னன் :- விக்கிரம சோழன்

காலம் :- மூன்றும் ஆட்சியாண்டு—கி. பி. 1120-21

செய்தி :-இம்மன்னனது 3 ஆம் ஆட்சியாண்டில் பிரம்மதேய ஸ்ரீராமமான வாயற்நூர் ஊர் சபையினர் 26½ காசுகளை பெற்றுக்

கொண்டு இத்திருக் கோயிலுக்காக விற்ற நில சாசனமே இக்கல் வெட்டாகும். இந்த 26½ காசும் திருவாரூரில் இருந்த ''தியாகவல்லி வேளைக்காரர்'' என்னும் படையைச் சேர்ந்த (Regiment) குலோத்துங்க சோழ அமந்தியராயன் என்பவன் சில அறக்கட்டளை களுக்காக ஆதிசண்டேஸ்வரர் பெயரில் முதலீடு செய்து வைத்த 73 காசுகளில் இருந்து பெற்றுக்கொண்டதாகும்.

இந்த சாசனத்தில் தியாக வினோதன் சாலை–மடம் போன்றவை குறிக்கப்பட்டுள்ளது. மேலும் சாசன வாசகமான—

''ஒரு காலாவதும், இரு காலாவது முக்காலாவது விலைக்கற விற்றுப் பொருளற கொண்டு சந்திராதித்தவற் ஸாஸ்வதிகமாக இறையிலி செய்து கொடுத்தோம்'' என்ற சொற்றொடர்களால் மும்முறை (ஏலம் வலியுறுத்துவது போன்று) கூறி உறுதிப்படுத்தும் முறையையும் இக்கல்வெட்டில் காணலாம்,

கல்வெட்டு (TEXT)

1. ஸ் வஸ் தி ஸ்ரீ பூமாலை மிடைந்து பொன்மாலை
நிகழ்தரப் பாமாலை மலிந்த பருமணித்திரள் புயத்
திரு நில மடந்தையொடு ஜெய
மகளி ருப்பக் கனவரை மார்வன் தனதெனப் பெற்றுத்
திருமகளொரு தனியிருப்பக் கலைமகள் சொற்றிரம் புணர்ந்த
கற்பினளாகி விருப்போடு நாவகத் திருப்ப அகிலபுவ
னமுங் கவிப்பதோர் புதுமதிபோல் வெண்குடை மிசை
நிற்பக் கருங்கலி யொளித்து வன் பிலத்திடைக் கிடப்பக்
குளத்திடைத் தெலுங்க வீமன் விலங்கல் மிசை யேறவும்
கலிங்க பூமியைக் கனலெரி பருகவும் ஐய்ம் படை
பருவத்து வெம்படை தாங்கி வெங்கை மண்டலந்
தாங்கி இருந்தசைப்படுத்தருளித் தென்திசைத் தருமமும்
தவமும் தானமும் தழைப்ப வேத மு.....தலைத்தலை
....

2. வாணை பார்த்திவர் சூட நிறை மணி மகுட முறைமையிற்
சூடி மன்னுயிர்கெல்லாம் மின்னுயிர் தாய்போல் தண்
ணளி பரப்பித் தனித்தனி பரந்து மண் முழுதளித்து
மனு நெதி வளர்த்துத் தன் கோயில் கொற்றவாசற்
புறத்து மணி நாவொடுங்க முரசுகள் முழங்கு
விசையமும் புகழும் மேன் மேலோங்கச்

செழியர் வெஞ்சுரம் புக சேரலர் கடல் புக
அழிதரு சிங்களர் அஞ்சி தின்சலமர கிங்கர்
திரையிடக் கன்னடர் வென்றிடக் கொங்கர்
ஒதுங்க கொங்கணர் சாய மற்றைத் திசை
மன்னரு தென்தமக் கரணைனத் திருமலர்
சேவடி உரிமையிற் இறைஞ்சி தொல்லை ஏழுலகும்
தொழுதெழத் தோன்றிய முல்லை வாண கை
முக் கோக் கிழானடி உமையோடு சங்கரன்
இமையச் சிலைச். ....ப் பொருந்தியுடனிருப்ப
ஆ.....வ மகிழ.....க.....ப் பாகிய (தெரிவ).....லத

3. மடப்படி புனித குணவனிதை திரிபுவன முழுதுடை
யாளிவன் திருவுள்ளத்தருள் முழுதுடை யாளென்ன
விருப்பச் செம்பொன் வீர ஸிம்ஹாசனத்து முக்கோக்
கிழானடிக ளோடும் வீற்றிருந் தருளிய கோவி
ராஜகேசரி பன்மரான சக்கரவர்த்திகள் ஸ்ரீவிக்கிரம
சோழ தேவர்க்கு யாண்டு 3 வது கேய மாணிக்க
வளநாட்டுத் திருவாரூர் கூற்றத்து பிரம தேயம்
வாயற்றார் சபைக்கு சமைந்த பாரத்துவாசி
திருவரங்கன் பற்பநாப பட்டனும்
பாரத்துவாசி சண்டேசுவரன் ஸ்ரீகிஷ்ண பட்டனும்
பாரத்துவாசி அழகிய மணவாளன் சண்டேசுவரனும்
பாரத்துவாசி பெரும் புறக்கடல் தேற்பாகனும் பாரத்
-துவாசி பெரும் புறக் கடல் சீராம தேவனும் பாரத்
—துவாசி தண்டேசுவரன் பெரும் புறக் கடல்.....
ரிமா... டக.....ம் உள்ளிட்ட ஸபை யோம்
நிலவிலை.....(ள காட).....சத.....மூட்ட
.....

4. வில் ஆதிதண்டேசுவராதேவர் பக்கல் இத்திரு
—வாரூர் தியாக வல்லி வேளாகாறரில் அராவணை
—பன்தக் கூத்தனை குலோத்துங்கசோழ அமத்திய
ராயன் அமாவசி புடகைக்கு ஒடுக்கி வைத்து
காசி 73 க்கு ஊசிகைக்கு உடலில்லாமையில்
.....ங்கள் கொள்கைக்கு நாங்கள் பொன்
கொண்டு பொலியூட்டாக இறையிலி செய்து குடுத்த
பரிசாவது நாங்கள் அமா வசிப்புறமாக உண் கைக்கு
இவ்வுள்ளூர் பிராமணர் பத்து கலமும்

அபூர்விகள் வத்த பிராமணர்
பத்து கலமும் ஆகக் கலம் இருபதும் உண்ணைக்கு
உள்ளூர் இறையிலி நிலமும் பிரமாணஞ் செய்து
குடுத்த பரிசாவது இவ்வூர்ப் பொன் கொண்டு
பொலியூட்டாக இறையிலட்டுகிற தியாக விநோதன்
சாலை மடத்துக்கு கீழ்பாற்கெல்லை தெருவுக்கு மேற்கு
தென் பாற் கெல்லை தெருவுக்கு வடக்கும் மேல்
-பாற் கெல்லை பெருந் திருக்கோயில் மாதேவர் நிலத்து
-க்கு கிழக்கும் வடபாற்கெல்லை கோயி. . . .
தெற்கும் ஆக இவ்விசைதெ பெரு நான் கெல்லையுள்
நடுவுபட்ட குழி 40 இக்குழி. . . . ற். . . ஞ. . . .
. . . . நிலவா. . . . . .

5. . . . . பக்கல் நிலம் ஞலுமா இன்நிலஞலுமாவுக்கு
கீழ் பாற் கெல்லை பாரத்துவாசி பெரும் புறக் கடல் சீராம
-தேவன் நிலத்துக்கு மேற்கும் தென்பாற்கெல்லை பாரத்து
-வாசி நாட்டார் வாய்க்காலுக்கு வடக்கும் மேல்
-பாற் கெல்லை பாரத்துவாசி அழுத. . . . டசுவர
நிலத்துக்குக் கிழக்கும் வட பாற்கெல்லை பெருவழி
தெற்கும் ஆக இன் நான் கெல்லையுள் நடுவுபட்ட
குழி 100ஞல் நிலஞ் 3மாவு இத்தியாகவிநோ
-தன் சாலைக்கு இருபத்து மா ( ) ம் இந்த
ஆதி தண்டேசுவர தேவற்கு விற்று இறையிலி
செய்து குடுத்த நிலத்து நாங்கள் கொள்வதான
எம்மிலிசைந்த விலைபொருள் அன்ஞடு நற்காசு
மாத்தால் காசு. . . . ாகவு காசு ஆறரை
-யும் சாலை குழி நாற்பதுக்கு காசு இரண்டும்
ஆக காசு 26½ இக்காசு இருபத்தாறரை
ஆவணக் களியே காட்டேடற்றிக் கைச் சிலை அறச்
கொண்டு இன் நிலஞலுமாவும் இச் சாலைக் குழி
நாற்பதும் விற்றுக்குடுத்து இறையிலி செய்து குடுத்
-தோ
இவ்வர்த்தி சண்டேசுவர் தேவர் தேவர்க்கு இச்சுட்டி
-ப்பட்ட மகா சபையோம்... இ.....

6. இரு பத்தாறரையு மேய் விலை யாவதாகவும் இது
வேய் விலை.....ண்ண வதாகவும் இதுவேய்
பொருள் மாவறுதிப் பொருட் செலவோலை காட்டக்

கடவரல்லா தாராகவும் இன் நிலத்துக்கு மூன்றடி
-யும் கொற்ற வாய லாட க் கடவதாகவும் வாரம்
இன் நிலக்கால்.....வெட்டி வெதினே ஏற் சோற்
-க் கூற்றரிசி, வேலிக் காசு துலைத்த திரு வாச
-லிப் போந்த குடிமை யெல்லாம் நாங்களே
செ.....வோ மாகவும் இந்நிலத் ...க் கல்லிலுஞ்
செம்பிலும் வெட்டிக் கொள்ளப் பெறுவாராகவுங்
உள்ளூர் பெருந் திருக்கோயிலில் மா தேவர் கோயிலில்
இறையிலியா சுச் செய்தபடி ஊத் தாய மும் இறுக்கக்
கடவாளாகவும் இச்சாலே மனே குழி நாற்பதுக்கும்
இந்நில மூன்று மாவிலுல் குழி நானூற்றுக்கும் இவ
-னுக்கும் இவன் வர்ச் கத்தாற்கும் குடி நீக்காத
தேவதானமாய் நின்று சந்திராதித்தவற்.....
மாக.....வருசன் தோறும் ஊட்டக்
கடவ.....இக் காசு இருபத் தாறறையு

7, -ம் கொண்டு இன் நிலனுலுமாவும் இக் குழி
நாற்பதும் விலைக் கறவிற்று விற்றுப் பொருளறக்
கொண்டு சந்திராதித்தவற் ஸாஸ்வதி க
-மாக இறையிலி செய்து குடுத் தோம் ஆதி
-சண்டேசுவர தேவற்கு பாரத்துவாசி திருவர
.....பெரும் புறக் கடல் தேர்பாகனும்
வா.....அடையும்.....பாரன் தெ....
ராயு.....கருள்.....கரம் பசண..ந..க..
க.....

—இக்கல்வெட்டு முற்றுப் பெறுமல் காணப்படுகிறது.

(பி. கு,)—சோழ மன்னர்கள் மாறிமாறி புனைந்து கொண்ட இராஜகேசரி, பரகேசரி என்ற வழக்கத்தின்படி விக்கிரம சோழன் பரகேசரி என்ற பட்டம் புனைந்தவன். இக்கல்வெட்டில் தவறுக இராஜகேசரி என்று பட்டம் காணப்படுகிறது.

திருவாரூர் கல்வெட்டு எண்-8

இடம் :- இரண்டாம் பிரகாரம்—தெற்கு பிரகாரம் தென்புறச் சுவரின் கீழ் பகுதியில் உள்ளது.

மன்னன் :- முதலாம் குலோத்துங்கன்

காலம் :- ஆட்சியாண்டு 49. (கி. பி. 1118–19)

செய்தி :- இக்கல்வெட்டு முற்றுப் பெறாத ஒன்று. திருவாரூர் கோயில் இறைவனை வீதிவிடங்க தேவர் தேவாசிரிய மண்டபத்தில் எழுந்தருளி, புக்கத்துரை வல்லவத் தலைக்கோலி என்ற ஆடலரசியின் நடனத்தைக் கண்டு ரசிக்கின்றபோது, திருக் கோயிலில் பணிபுரிந்த கொல்லனை தொண்டைமான் பெருங் கொல்லனுக்கு அளித்த ஏதோ ஒரு கொடை பற்றி குறிப்பிடுகிறது. கல்வெட்டு சிதைந்தமையால் செய்தி அறிய இயலவில்லை.

இத் திருக்கோயிலில் காணப்படும் கல்வெட்டுக்களில் சில குறிப்பிடதக்கவையாகும். இவை திருவாரூர் திருக்கோயில் இறைவனை வீதிவிடங்கனே வாய்மொழியாக கூறுவதுபோல் அமைந்திருக்கும். இக்கல்வெட்டும் இறைவன் கூறுவதுபோன்று அமைந்த ஒன்றாகும். மேலும் விழாக்காலங்களில் வீதிவிடங்கனின் செப்புத் திருமேனி தேவாசிரிய மண்டபத்தில் எழுந்தருளுவிக்கப் படும் என்பதும், அப்போது, அங்கு இறைவன் முன்பு தலைசிறந்த நாட்டிய மகளிர் நடம் புரிவர் என்பதும், தெளிவாக விளங்குகிறது. 'தலைக்கோலி' என்ற விருது பரத கலையை முற்றும் கற்று தலை சிறந்த முறையில் ஆடவல்லவர்களுக்கே அளிக்கப்பட்ட ஒன்றாகும். இக்கல்வெட்டு முதற் குலோத்துங்கன் காலத்தியதாதலால் அவனது அமைச்சனும் தானைத்தளபதியுமான கருணாகரத் தொண்டைமான் (கலிங்கத்துப்பரணியின் நாயகன்) பெயரால் தொண்டைமான் என்ற விருது திருவாரூர் கோயில் கொல்லனுக்கு (நங்கொல்லன்) அரசனால் அளிக்கப்பட்டிருக்கலாம் என உய்த் துணர முடிகிறது.

கல்வெட்டு (TEXT)

1. ஸ்வஸ்திஸ்ரீ புகழ் மர்து விளங்க ஜய மாது
விரும்ப நிலமகள் நிலவ மலர் மகள் புணர
உரிமையிற் சிறந்த மணிமுடி சூடி மீனவர் நிலைகெட
விஜ்லலர் குலதர எனை மன்னவர் திரிதலுற்றழி
-தரத் திக்கனைத்துந் தன் சக்க

2. ர் நடாத்தி வீரசிம்காசனத்து உலகுடையா
-ளொடும் வீற்றிருந்தருளிய கோவி ராஜ கேசரி
பன் மரான திருபுவன சக்ரவர்த்திகள் ஸ்ரீகுலோத்
துங்க சோழ தேவர்க்கு யாண்டு 49 வது

கேய மாணிக்க வளநாட்டு திருவாரூர்க்
கூற்றத்

3. -துத் திருவாரூருடையார் வீதி விடங்க தேவர்
தேவாசிரியனில் எழுந்தருளி யிருந்து புக்கத்
துறை வல்லவத் தலைக் கோலியை ஆட்டங்
-கண்டருளா நிற்க நங் கொல்லரில்
தொண்டைமான் பெருங் கொல்லன் . . . .
. . . . பேரிட்டு

(முற்றுப்பெறாமல் சிதைந்துள்ளது)

திருவாரூர் கல்வெட்டு எண்-9

இடம் :- இரண்டாம் பிரகாரம்-தெற்கு பிரகாரம்-தென்புற சுவரின் மத்திய பகுதியில் உள்ளது.

மன்னன் :- விக்கிரம சோழன்

காலம் :- மூன்றும் ஆட்சியாண்டு—கி. பி. 1120—21

செய்தி :- இம்மன்னனின் 3 ஆம் ஆட்சியாண்டில் புலிவலம் பெருங்குறி மகாசபையினர் இராஜேந்திர சோழ அத்தியில் கூடி திருவாரூர் இறைவனை மூலஸ்தான மூடையாருக்கு கடுவாய் (தற்போதைய பெயர்—குடமுருட்டியாறு) என்னும் ராஜ நாராயண பேராற்றின் வடகரையில் உள்ள கற்பூரக் குடுக்கை என்னும் இறையிலி நிலத்தை(வரியில்லா நிலம்)அளித்த சாசனமே இக்கல்வெட்டாகும்.

கல்வெட்டு (TEXT)

1. ஸ்வஸ்திஸ்ரீ பூமாலை மிடைந்து பொன்மாலை திகழ் தரப்
பாமாலை மிடைத்த பருமணித்
திரள் புயத் திருமடந்தை யோடு ஜயம களிருப்ப
கனவரை மார்வன்தனனெப் பெறறு திருமகளொடு
-தனியிருப்ப கலை மகள் சொற்றிறம் புணர்ந்த
கற்பினமுளி விருப்போடு நாவகத்திருப்ப திசை
தோறும்திகிரி யோடு செங்கோல் நடப்ப அகில

புவன மும் கவிப் பதோர் புதுமதி போல வெண்குடை
மேல் மிசை நிற்ப்ப கருங்கழி ஒளித்து வ

2. ன் பிலத் திடைக் கிடப்ப தெலுங்கல் ஸீமன் வீலங்க
ரிசை யேற கலிங்க மண்டலங் கனலெரி பரப்பி
வேங்கை மண்டலங் டந்து தாங்கலர் கலிங்க
மேழும் கனலெரி பரப்பி ஐம்படை பருவத்து வெம்
-பனை தாங்கி வடதிசை அடிப் படுத்தருளி தென்திசைத்
தருமமும் தலமும் தானமும் தழைப்ப வேதமும்
மெய்ம்மையும் ஆதியுகம்போல் தலிசதலி சிறப்ப
-வ தெருளி விலற் கரும் புலியானை பார்திவர்
சூட மன்னிய உரிமையி

3. ல் மணி முடி சூடி மன்னுயிர் கெல்லா நின்னுயிர்
போல தன்னொளி தன் கோயில் கொற்றவாசல்
முணி நா லிவாடுங்க முரைசுகள் முழங்க விசையமும்
புகழும் மேல் மேலோங்கி செழியர் லிவஞ்சுரம்
புக சேரலர் கடல் புக அழிதரு சிங்கணர்
அஞ்சி நெஞ்சல அமர கங்கர் திரையிட லிடர்
லிவன்னிட கொங்கர் ஒதுங்க கொங் கணர்
சாய மற்றும் எத்திசைப் பட்ட மன்னரும்
தா தமச் சுரனென செம் பொற் சேவடி மீமிசை
யிறைஞ்

4. சி தொல்லி எழும் தொழுதெழ தென்றி முல்லி
வாணகை முக்கோக் கிழானடி உமை யோடு
சங்கரன் இமையத் திருந்தனப் பொறுந்தி
உடனிருப்ப அவளுடன் கங்கை வீற்றிருந்த
மங்கையர் திலதம் தியாகப் பதாகைப் புரிகுழல்
மடப்பிடி புனித குணவனிதை திரிபு வனமுடை
யாள் அவன் திருவளக்கது அருளு முழு
துடையாளென முக்கோக் கிழானடிகளோடும்
செம் பொன் வீர சிங்காசனத்து வீற்றிருந்தரு

5. -னி கோப் பரகேசரி பன்மரான திரு புவன
சக்கரவர்த்திகள் ஸ்ரீ விக்கிரம சோழ தேவற்கு
யாண்டு 3 ஆவது அருமொழி தேவ வள
-நாட்டுப் புலியூர் நாட்டு பிரம தேயம்
புலி வலத்து பெருங்குறி மகா சபையோம்
இராஜேந்திர சோழ அத்தியிலே கூட்டங்

குறை வறக் கூடி யிருந்து பணிப் பணியால்
பணிக்க திருவாரூர் உடையார் ஸ்ரீ மூலஸ்தான
முடையார்க்கு ஆதி சண்டேஸ்வர தேவர்க்கு
இறையிலி

6. செய்து குடுத்த நிலமாவது எங்களூர் கடுவாயான
ராஜ நாராயணப் பேராற்று வடகரை துண்டுப்
பட்ட கற் பூரக் குடுக்கை என்று பேர்
கூவப்பட்ட நிலத்துக்கு கீழ்பாற் கெல்லை
இத் தேவ தானம் கருணாகர நல்லூர் எல்லைக்கு
மேற்கும் தென் பாற்கெல்லை கடுவாயான ராஜ
நாராயணப் பேராற்று நீ ரோடு காலுக்கு
வடக்கும் மேல் பார் கெ . . . .
(கல்வெட்டு முற்றுப் பெறவில்லை)

திருவாரூர் கல்வெட்டு எண்.10

இடம் :- இரண்டாம் பிரகாரம் – இதற்கு பிரகாரம் – தென் புறச் சுவரின் மத்தியில் உள்ளது.

மன்னன் :- விக்கிரமசோழன் (கி.பி. 1118 – 1135)

காலம் :- ஆண்டு குறிப்பிடப்படவில்லை

செய்தி :- பூமாலை மிடைந்து என்ற மெய்கீர்த்தியின் ஒரு பகுதி மட்டுமே உள்ளது. பிற செய்திகள் இல்லை.

கல்வெட்டு (TEXT)

1. பூமாலை மிடைந்து பொன்மாலை திகழ்தரப் பாமாலை மலிந்த
பருமணித்திரள் புயத் திரு நிலம –

2. டந்தையொடு ஜயமகளிருப்பக் கணவரை மார்வன்
தனதெனப் பெற்றுத் திருமகளொடு தனியி

3. யிருப்பக் கலைமகள் சொற்றிரம் புணர்ந்த சுற்பினளாகி
விருப்பொடு நாவகத்திருப்ப

4. தொறு திகிரியொடு செங்கோல் நடப்ப அகிலபுவன முங்
தவிப்பதொர் புதும

5. வெண்குடை மாமிசை நிற்பக் கருங்கலி
யொளித்து வண்பிலத்திடைக் கிடப்ப குளத்திடை

6. த் தெலுங்க வீமன் விலங்கல்மிசை யெறவுங்
கலிங்க பூமியைக் கனலெரி பருகவும் ஐம்படைப்

7. பருவத்து வெம்படை தாங்கி வெங்கை மண்டலத்
தாங்கினிதிருந்து வடதிசை அடிப்படுத்தரு . ,

(முற்றுப் பெறுமல் உள்ளது)

திருவாரூர் கல்வெட்டு எண்-11

இடம் :- இரண்டாம் பிரகாரம் தெற்கு பிரகாரம் - தென் புறச் சுவரில் உள்ளது,

மன்னன் :- விக்கிரம சோழன்

காலம் :- நான்காம் ஆட்சியாண்டு கி.பி. 1121 – 22

செய்தி :- இச் சாசனமும் முதற் கல்வெட்டுடன் தொடர் புடைய ஒன்று. இதுவும் கி.பி. 1122ம் ஆண்டு மேமாதம் 10ம் தேதியன்று எழுதப்பட்டதாகும். ஜெயங் கொண்ட சோழ மண்டலத்து மணவில் கோட்டத்து மணவில் என்னும் ஊரினரு கிய அரும் பாக்கிழான் மதுராந்தகன் பொன்னம்பலக் கூத்த னான பொய் கோயில் தொண்டைமான் என்பவர் திருவாரூர் இறைவனுக்கு செங்கழுநீர் பூக்கள் பயிரிட குளம் ஒன்றினுக் காக 100 காசுகளை பண்டாரத்தில் முதலீடு செய்தார். இதனை பண்டாரத்தில் இருந்து திருநல்லூர் மகாசபையினர் பெற்றுக் கொண்டு குளம் ஒன்று அளித்தனர். இவ்வாறு அவர்கள் இத் திருக் கோயிலில் உள்ள ராஜநாராயணன் திருமண்டபத்தில் கூடி இந்த விற்பனை சாசனத்தை எழுதினர்.

கல்வெட்டு (TEXT)

1. ஸ்வஸ்திஸ்ரீ பூமாலை மிடைந்து பொற்மாலை திகழ்தரப்
பாமாலை மலின்த பருமணித்திரள் புயத் திரு நில
மடந்தையொடு ஜய மகளிருப்ப கநவரைமார்வன்
-தன தெனப்பெற்று திருமகளொரு தநியிருப்ப கலை

மகள் சொற்றிரம் புணர்ந்த கற்பினளாகி விருப்போடு
நாவகத்திருப்பத் திசைதொறும் திகரியொ

2. டு செங்கொல் நடப்ப அகில புவனமும் கவிப்பதோர்
புதுமதிபோல வெண்குடை மீமிசை நிற்ப கருங்கலி
ஒளித்து வண்பிலத் திடைக் கிடப்பக் குளத்திடைத்
தெலிங்க வீமன் விலங்கல் மிசையெறவும் கலிங்க பூமி
-யைக் கனலெரி பருகவும் ஐம்படை பருவத்து வெம்படை
தாங்கியும் வேங்கை மண்டலந் தாங்கி இனிதிருந்து
வட திசை

3. ச அடிப்படுத்தருளி தென்றிசைத் தருமமும் தழைப்ப
ஆதியுகம் போல் தலைத்தலை சிறப்ப வந்தருளி விலற்
-கரும் பொற் புலியானை பார்திவர் சூட நிறைமணி
மகுடம் முறைமையிற் சூடி தன் கோயில் வாசற் புறத்து
மணிநா வொடுங்க விசையமும் புகழும் மேன்
மேலோங்க செழியர் வெஞ்சுரம் புக, சேரலர்
கடல் புக அழிதரு சிங்

4. -களர் அஞ்சி நெஞ்சலமர கங்கர் திறையிட
கன்னடர் வென்னிட கொங்கர் ஒதுங்க கொங்
-கணர் சாய மற்றதிசை மன்னரும் தத்தமக் கர
-ணென திருமலர் செவடி உரிமையிலிறஞ்ச
தொல்லை எழுலகும் தொழுதெழத் தோன்றி முல்லை
வாணகை முக் கோகிழானடி உரிமையோடு
சங்கரன் இமையத்திருந்தனப் பொருந்தி உடனிருப்
-ப ஆ

5. ங்கவன் மகழும் கங்கையொப்பாகி தேவியர்
திலதம் தியாக பதாகை புரிகுழல் மடப்பிடி
புனித குணவனிதை திரிபுவன முடையாள்
அவன் திருவிளந்தருள் .... துடையாளென
உடனிருப்ப செம் பொன் வீரசிம் காசனத்து
முக் கோ கிழானடிகளோடும் வீற்றிருந் தருளிய
கோப்பரகேசரி பன்மரான திருபுவன சக்ரவர்த்
-திகள் ஸ்ரீ விக்கிரம சோழ தேவர்க்கு
யாண்டு.

6. நாலாவது இஷப நாயற்று பூர்வ பட்சத்து
திருதியையும் புதன்கிழமையும் பெற்ற திருவா
ஈதிரை நாள் குலோத்துங்க சோழ வளநாட்டு
வேளா நாட்டு பிரம தேயம் திருநல்லூர் பெருங்குறி
முகா சபையோம் கேய மாணிக்க வளநாட்டு
ஈத்திருவாரூர் கூற்றத்து திருவாரூர் ஸ்ரீமூலஸ்
தான முடையார் கோயில் ராஜநாரயணன்
திருமண்டப

7. ஈத்து நாங்கள் கூட்டம் குறைவற கூடியிருந்து
இக்கோயில் ஆதிசண்டேஸ்வரத்தேவர்க்கு நில
விலையாவணம் சயங்கொண்ட சோழ மண்டலத்து
மணவில் கோட்டத்து மணவில் அரும் பாக்
கிழான் மதுராந்தகன் பொன் னம்பலக் கூத்தனை
பொய் கோயில் தொண்டை மானூர் இத் தேவர்க்கு
செங்கழுநீர் திருப் பள்ளித் தாமம் சாத்தி அருளு
கைக்கு,

8. இத் தேவர்க்கு குளம் கொள்கைக்கு
இத் தேவர் ஸ்ரீ பண்டாரத்து ஒடுக்கின காசு
நூறு. இக் காசு நூறினுல் ராஜ ராஜன் மாடை
யோடு ஒக்கும் அன்றாடு செம் பொன் முப்பத்திரு
ஈகழஞ்சரைக்கும் ஞங்கள் விற்று குடுத்த குளமாவது
எங்களூரில் நெடுங் குளம் என்று பேர் கூவப்பட்ட
குளம் விற்றுக் குடுப்பதற்கு கீழ்பார்க் கெல்லை
ஊரில நின்றும் வடக்கு நோக்கிப்
ஈபோன பெருவழிக்கும் விளாகத்தில்

9. நாற்றங் கால்களுக்கும் ஸ்ரீ வைகுந்தத்து வீற்றிரு
ஈந் தருளிய உலோக மா தேவி விண்ண கராழ்வார்
திரு நந்தவனத்துக்கு மேற்கும் தென் பாற் கெல்லை
இத் தேவர் திருநந்தவனத் திற்கும்
ஸ்ரீ கை . . . . முடைய . . . . தேவர்
திருநந்தவனத்துக்கும் பகரியார் நிலத்துக்கும்
திரு முற்றத்துக்கும், பிடாரியர் ஸ்ரீ கோயில் திருமுற்றத்
திற்கும் பாண்டி நாட்டு சேரி கொப் பட்டங்களில்
இந் நாள் வரை

10. யில் இவர்கள் அனுப விக்கிற நிலத்துக்கு வடக்கும்
மேல் பாற்கெல்லை ராஜேந்திர சோழ ஈ வாய்க் காலுக்கு

கிழக்கும் வட பாற்கெல்லை ராஜேந்திர சோழன்
வாய்க் காலுக்கும், உதையன் நா , , , ,ணன்
பிரா , , , .ணும் ஆத்திரை யன்
நா,.....ணன் பள்ளி கொண்டானும்
,,,,,,யன் ஸ்ரீ மந்தை சிராம பட்டனும் மாத்தூர்
ாபன் சங்கர நாராயணன் சீராம பட்டனும்
ஆத்திரையன் பெரும்பு றக்கடல் திவாகரப்
பட்டனும்

11. பாராசிரியன் கண்ணன் அழகிய மண
வாள பட்டனும் கோதமன் ஆதித்தன்
பவனன் பட்டனும் உள்ளிட்டார் நிலங்களில்
கோழக் குத்திக்கு தெற்கும் ஆக இவ்விசைந்த
பெரு நான்கெல்லையுள் நடுவுபட்ட நிலம் இர
ண்டே முக்காலே சின்னமும் மிகுதிக் குறைவு
உள்ளடங்க விற்றுக் குடுத்தது கொண்ட அன்றாடு
செம்பொன் முப்பத்திரு கழஞ் சரையிஞல்
அன்றாடு நற்காசு நூறு. இக்காசு நூறும் ஆவணக்
ாளியே காட்டேற்றி கைச் செல

12. வறக் கொண்டு விற்று விலையாவணஞ் செய்து கொடுத்
தோம் இவ்வாதி சண்டேஸவர தேவர்க்கு இப்
பெருங்குறி மகாசபையோம் இப்பரிசு நாங்கள்
விற்றுக் கொடுத்த குளத்துக்கு வெட்டி முட்டை
-யாள், வேலிக் காசு எச்சோற்றுக் கூற்றரிசி
திருவாசல் போந்த குடிமை எப்பேர்பட்டதும்
செய்யக் கடவரல்லாதாராகவும்
இக்குளத்தை சூழ்ந்த நாலு கரையிலும்
தெங்கு உட்பட்ட விருச்சங்கள் வைச்சு அனுப
விக்கப் பெ-

13. று வாராகவும் இக்குளத்தில் இடா இறைக்க
கடவோமல்லா தோமாகவும், குளத்தில் நின்று
பாயும் நிரு வாரிக் கொள்ளப் பெருவோமாகவும்
இக்குளத்துக்கு பண்டாடு பழநடை பாயவும்
வாரவும் பெறுவிதாகவும் இப்பரிசு இசைந்து
இக்காசு நூறுங கொண்டு இக்குளம் விற்றுக்
கொடுத்தோம். ஆதி சண்டேஸ்வரத் தேவர்க்கு
இப் பெருங்குறி மகா சபையோம் இப்பிரமாணப்
படியே கல்லிலுஞ் செம்பிலும்

14. விவட்டிக் கொள்ளப் பெறுவிதாக
சம்மதித்து விற்றுக் கொடுத்தோம். ஆதி சண்டே
ஸ்வர தேவர்க்கு திருநல்லூர் பெருங்குறி
முகா சபையோம் || இவர்கள் பணியால்
இப் பிரமாணம் எழுதினேன் இத்திரு நல்லூர்
மத்தியஸ்தன் மாரமங் கல முடையான் மதி
சூதன் தில்லை வன முடையா னெழுத்து ||
இப்படிக் கிவை பாரதுவாஜி கூத்தாடி சேந்த
பிரான் பட்டன் எழுத்து || இது ஸ்ரீ க்ரு

15. ஷ்ண சீராம பட்டன் சயிஜைகு யானமைக்கு
இவ்வூர் கரணத்தான் மாரக்க மங்கல முடையான்
எழுத்து இப்படிக்கு வங்கிப் புறத்து பூசாளி
திருவேங்கட பட்டன் எழுத்து இப்படிக்கு பாரது
-வாஜி அழகிய மணவாள பட்ட நெழுத்து
இப்படிக்கு மாநத்தத் சங்கர நாராயணன்
சூரிய பட்ட னெழுத்து இப்படிக்கு சுவிசிகன்
சீராமன் சயிஜைகு யாதமைக்கு மாரக்க
மங்.....

திருவாரூர் கல்வெட்டு எண்-12

இடம் :- அசலேசம் - முகமண்டப மேற்கு வாயிலின் வலது புறம் உள்ளது.

மன்னன் :- பராந்தகன் I

காலம் :- ஆட்சியாண்டு 32 (கி.பி. 939)

செய்தி :- இக்கல்வெட்டு பராந்தக சோழனது முப்பத்தி ரெண்டாம் ஆட்சியாண்டு 232வது நாளில் வரையப்பட்ட சாசன மெனினும், இன்று நாம் காண்பது கி.பி. 939ல் கல்லில் எழுதப் பட்டதல்ல. முன்பு எழுதப்பட்டிருந்த கல்வெட்டு பின்பு திருப் பணிகளால் அகற்றப்பட்டதால் - திருப்பணி முடிந்த பின்பு அக் கல்வெட்டின் நகல் மீண்டும் கல்லில் பொரிக்கப்பட்டுள்ளது. தற்போது காணும் கல்வெட்டின் எழுத்தமைதி கி. பி. 12ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியாக உள்ளது.

இதில் இம் மன்னனது காலத்தில் திருவாரூர் கூற்றத்து பிரம்ம தேயமான பந்தணைநல்லூர் சபையினர், ஆரூர் திரு அரநெறி மகா தேவபட்டாரகற்கு ஸ்ரீ கோயில் தேவனார் என்பவர் ஒரு நுந்தா விளக்கெரிப்பதற்காக அளிக்கப்பட்ட முப்பது கழஞ்சு பொன்னை கடனாக பெற்றுக் கொண்டு; அதன் வட்டிக்காக தினந் தோறும் திரு நீல கண்டம் என்னும் அளவைக் குவளையால் உழக்கு எண்ணையை கோயிலுக்கே சென்று சந்திரன் சூரியன் உள்ளவரை கொடுப்போம் என்று உறுதி அளித்து சாசனம் செய்த செய்தி காணப்படுகிறது.

மன்னனது பெயர் குறிப்பிடும்போது ''மதுரை கொண்ட கோப்பர கேசரி'' என காணப்படுவதால் முதலாம் பராந்தகன் என உறுதிப்படுத்த இயலுகிறது.

கல்வெட்டு (TEXT)

1. ஸ்வஸ்தி ஸ்ரீ || மதுரை கொண்ட கோ
2. ப் பரகேசரி பன்மற்கு யாண்டு ஈ(ஐ)உ (32) ஆவது
3. நாள் உ ஈ(ஐ)உ (232) ஞல் ஸ்ரீ ஆரூர்த் திரு அறநெறி
4. மகாதேவ பட்டாரற்கு இ ஸ்ரீ கோயில் தேவனூர்
5. . . க்கனு .....கு திரு நொந்தாவி
6. ளக்கு ஒன்றினுக்குக் குடுத்த பொன் முப்பதின் கழ
7. ஞ்சுங் கொண்டு இதன் பளிசையாலி ஸ்ரீ தே
8. காயிலுக் கேய் கொண்டு சென்று திரு நீலகண்
9. டத்தால் நிசதி உழக்கெண்ணை இரவும்
10. பகலும் திரு நுந்தாவிளக் கெரிய சந்திரா
11. தித்தவல் அட்டுவோமானேம் திருவாரூர் சூ
12. ற்றத்து பிரமதேயம் பந்தணை நல்லூர் ச
13. பை யோம் இது பன் மாகேஸ்வர ரட்சை.

திருவாரூர் கல்வெட்டு எண்-13

இடம் :- அசலேசம்—முகமண்டப மேற்கு வர்யிலின் வலது புறம் உள்ளது.

மன்னன் :- முதல் ஆதித்தன்

காலம் :- 20 ஆம் ஆட்சியாண்டு கி. பி, 891.
தற்போதுஉள்ள கல்வெட்டு பழைய கல்வெட்டின்
12 ஆம் நூற்றாண்டுப் படியாகும்.

செய்தி:- இக்கல்வெட்டு திருவாரூர் மக்கள் திருக்கோயிலுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் குறித்து விளக்குகின்றது. குருகாலன் திருமூலட்டானத் தொண்டர் என்பார் திருவாரூர் திரு அர நெறி யாம் திருக்கோயிலில் இரு நுந்தா விளக்கு எரிப்பதற்காக மென் மங்கலம் எனும் ஊரில் அளித்த மூன்று வேலி நிலத்தை திருவாரூர் ஊரவர் ஏற்றுக் கொண்டு, நாளொன்றுக்கு ஒரு உரி எண்ணை அளிப்பதாகவும், இதன் அளவு திருநீலகண்டம் எனும் முகத்தளவு என்றும், இத்தர்மம் சந்திரன் சூரியன் உள்ள வரை தொடரும் என்றும் செய்து கொண்ட ஒப்பந்தமாகும்,

கல்வெட்டு (TEXT)

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கோ ராஜகெ ஸரி வன்மர்க்கு
யாண்டு இருபதாவது நா
2. ள் (உளஎ) னல் முனைப்பாடி உடையான்
ஆராய்ச்சியில் திருவாரூர்த் திருஅ
3. ற நெறி உடையார்க்குத் திரு நொந்தா விளக்கு
இரண்டினுக்கு
4. க் குருகாலன் திரு முலட்டானத் தொண்டர்
குடுத்த மென் மங்கல
5. த்து நிலம் மூவெலியும் கொண்டு நிசதி உரி
எண்ணை ஸ்ரீகோயிலுக்
கெ
6. கொடு சென்று திரு நீலகண்டத்தால் சந்திர ரத்தவல்
அட்டுவொமா
7. னெம் இவ்வூர் ஊரவரொம் இது பன்மாகேஸ்வரர
8. ஸகை,

திருவாரூர் கல்வெட்டு எண்-14

இடம் :- அசலேசம்—முகமண்டப மேற்கு வாயிலின் இடதுபுறம் உள்ளது.

மன்னன் :- பரகேசரிவர்மனை பராந்தகன் I
(இக்கல்வெட்டு இராஜேந்திரனுடையது அல்லது விக்கிரம சோழனுடையது என்ற சிலரது கருத்தும் உண்டு.

காலம் :- ஆட்சியாண்டு ஆறுவது (கி. பி. 913)
நாள் நூற்றுப் பத்து.

செய்தி :- இக்கல்வெட்டுச் சாசனப்படி கி.பி. 913 ஆம் ஆண்டாயினும் இது கல்லில் பொரிக்கப்பட்டுள்ளது கி.பி. 12ஆம் நூற்றுண்டிலேயே ஆகும். இது மூல (Original) கல்வெட்டல்ல பிற்காலத்தில் எழுதப்பட்ட படியே (True Copy) யாகும். இது இராஜேந்திரன் அல்லது விக்கிரம சோழனுடைய கல்வெட்டாக இருக்கலாம் என சில வரலாற்று ஆசிரியர்கள் கருதினாலும்—இதில் குறிப்பிடப்படும் திரு மூலட்டானன தொண்டன் என்பவன் அளித்த அறக் கொடைகள் பற்றி இக்கல்வெட்டின் அருகிலேயே உள்ள முதல் ஆதித்த சோழனுடைய கல்வெட்டில் காணப்படுவதால் இதனை பராந்தகனுடைய கல்வெட்டாக கொள்வதே பொருந்தும்.

இச்சாசனப்படி திருவாரூர் நகரத்தார் (நகரத்தார் என்ற தனி வகுப்பினர்) தேவன் அறுபத்து நால்வன் என்பவன் அளித்த பொன்னை பெற்றுக் கொண்டனர். வேளான் காமன் என்பவன் மேற்பார்வையில் திருவரநெறி மகாதேவ பட்டாரகர்க்கு காலாவன் பொருந்தம் பொந்தைத் திருமூலட்டானத் தொண்டனுக்காக தேவன் அறுபத்து நால்வன் என்பவனால் முப்பது கழஞ்சு பொன் கொடுக்கப்பட்டது. இப் பொன்னை கடனைப் பெற்ற நகரத்தார் இதன் வட்டியாக ஒவ்வொரு நாளும் திரு நீலகண்டம் என்னும் குவளையால் உழக்கெண்ணையை சந்திரன் சூரியன் உள்ளவரையும் நுந்தாவிளக்கெரிக்க கொடுப்போம் என உறுதி அளித்த சாசனமே இக்கல்வெட்டு.

கல்வெட்டு (TEXT)

1. ஸ்வஸ் தி ஸ்ரீ கோப்பர
2. கேசரி பன் மர்க்கு யா
3. ண்டு ஆருவது நாள் ாகம (110)
4. வெளான் காமன் ெ . . மலைய
5. கத்துத் திரு வரநெறி மகா
6. தேவ பட்டாரகர்க்குக் கா
7. லாவன் பொருந்தம் பொந்தை
8. த்திரு மூலட்டானத் தொண்
9. டர் நொந்தா விளக்கு ஒன்று
10. க்குக் குடுத்த பொன்முப்பதின் க
11. ழஞ்சு இப் பொன் கொண்டு இதன்
12. பலிசையால் நாள்வாய் உழக்கெ
13. ண்ணை ஸ்ரீகோ யிலுக் கேய் கொ
14. ண்டு சென்று திரு நீலகண்டத்தால்
15. சந்திரா தித்தவல் அட்டுவோ மாே
16. ளும் தேவன் அறுபத்து நால்வ
17. ன் தந்த பொன்னலைத் திருவாரூர்
18. நகரத்தோம் இது பன் மா கேஸ்வர
19. ரட்சை.

திருவாரூர் கல்வெட்டு எண்-15

இடம் :- அசலேசம் - முகமண்டபத்தின் வடபுறச் சுவர்.

மன்னன்:- வீரபூபதி உடையார்

நூல்லம் :- கி.பி. 1429 பிப்ரவரி 22ஆம் தேதி

செய்தி :- விஜய நக்ர மன்னரான் வீர பூபதி உடையார் கால்த்திய இக் கல்வெட்டில் சோழ மண்டலத்தில் உள்ள வாணிகர்கள் சமபந்தமான அரசு ஆணை பற்றி குறிப்பிடுகிறது. கீலக வருடம் மாசிமாதம் 28ந் தேதி கல்வெட்டில் குறிப்பிடப் பட்டுள்ளது. இதற்கு சமமான ஆங்கில ஆண்டு கி.பி. 1429 பிப்ரவரி 22ஆம் நாளாகும்.

கல்வெட்டு (TEXT)

1. ஸ்வஸ்தி ஸ்ரீ மத் மகாமண்டலீசுவரன் ஸ்ரீ வீர
பூபதி உடையார் பரத்விராஜ்யம் பண்ணி அருளா
நின்ற கீலக வ

2. ருஷம் மாசி மீ உ(அ) (28) தி உடையார்
அருளிச் செய்த படி ..... கல்வெ .....
சோழ மண்டலத்தில் வாணிகர் ..... ம்

3. இட்டு இறுக்கக் கடவதாக ..... க்கரை
படிகசத்தா ..... அல்ல .....ல்லரசர்
மனைக்கு கிழக்கு

4. .....கொயிலுக்கும் திருவீதிக்கும் வடக்கு
திருமணிமுத்தாற்றுக்கு தெற்கு வாணியர்
கடையும்.....

5. .....க் கடவார் ஆகவும் இப்படிக்கு .....
...வாணிகர் நீங்கலாக
(இக் கல்வெட்டு மிகவும் சிதிலமடைந்துள்ளது)

திருவாரூர் கல்வெட்டு எண்-16

கல்வெட்டு காணப்படும் இடம் :- அசலேசம்– கருவரையின் வடபுற அதிட்டானம்.

மன்னன் :- முதலாம் இராஜேந்திரன்

கல்வெட்டு குறிப்பிடும் ஆண்டு:- 8ஆம் ஆண்டு (கி.பி. 1020)

காணப்படும் செய்தி :- முதலாம் இராஜேந்திர சோழனின் எட்டாம் ஆட்சியாண்டில் (கி.பி. 1020) கோவில் அதிகாரிகளால், அரநெறியில் உள்ள தன்ம விடங்கதேவர் என்ற இறைவனின் உச்சி கால பூசைகளுக்காக அளிக்கப்பட்ட அறக் கொடையை ஏற்றுக் கொண்டது பற்றி கூறுகிறது. இதில் சூடித்திரிய சிகாமணி வள நாட்டு இங்களூட்டு தியங்குடியைச் சேர்ந்த தியங்குடியான் நம்பன் இராமனை சோழ வித்தியாதர மூவேநதவேளான் என்னும் ஸ்ரீ காரியம் (கோயில் நிர்வாக அதிகாரி) அதிகாரியின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. இக் கல்வெட்டு முற்றுப் பெறாமல் நிறைந்துள்ளது.

கல்வெட்டு (TEXT)

1. ஸ்வஸ்தி ஸ்ரீ திருமன்னி வளர இருநில மடந்தையும்
போர்செயப் பாவையும் சீர்தனிச் செல்வியும் தன்
பெருந்தேவியராகி இன்புற நெடிது இயல் ஊழியுள்
இடை துறைநாடும் தொடர்வன வேலி படர்வன வாசி
யும், சுள்ளி சூழ்மதில் கொள்ளிப் பாக்கையும்
நண்ணற்கு அருமுரன் மண்ணைக் கடக்கமும்;
பொரு கடல் ஈழத்து அரசர்தம் முடியும், ஆங்கு
அவர் தேவியர் ஓங்கு எழில் முடியும் இந்திரன்
ஆரமும், தென் திரை ஈழமண்டலம் முழுவதும்;
எறிபடை சேரளன் முறைமையின் சூடும் குலதன
மாகிய பலர் புகழ் முடியும், செங்கதிர் மாலையும்
சங்கு அதிர் வேலைத் தொல் பெருங்காவல் பல்
பழந் தீவும் செருவி.. ...

2. ஞ் சாந்திமத் தீவு அரண் கருதி இருத்திய செம்
—பொன் திருத்தகு முடியும்:
மாப்பெரு தண்டால் கொண்ட (கோப்
-பரகேசரி) பன்மரான ஸ்ரீ ராஜேந்திர சோழ
தேவர்க்கு யாண்டு (அ) ஆவது கூத்திரிய
சிகாமணி வளநாட்டு திருவாரூர் கூற்றத்து
திருவாரூர் திருவரநெறிப் பதி பாத மூலப் பட்டுடை
தேவ கன்மிக ளொம்
உடை யார் க்கு ஸ்ரீகாரியஞ் செய் கின்ற
கூத்திரிய சிகாமணி வளநாட்டு இங்களூட்டு
தியங்குடி தியங்குடையான் நம்பன் இராமனை
சோழ வித்தியாதர மூவேந்த வேளான் நாயகத்து
திரு வரநெறி தன்ம விடங்க தேவர்க்கு வேண்டும்
நிவந்தத்துக்கு இக்கோயில் தேவதானம் இந்
நாட்டு திருவாரூர் கூற்றத்து மேன் மங்கலத்து
இனிப்ப... .....

திருவாரூர் கல்வெட்டு எண்-16A

கல்வெட்டு காணப்படும் இடம் :-

அசலேசம்—கருவறையின் வடபுற அதிட்டானம்

மன்னன் :- பெயர் சிதைந்துள்ளது.

ஆண்டு :- எழுத்து சிதைந்துள்ளது.

செய்தி :- முதலாம் இராஜேந்திரனின் கல்வெட்டிற்கு கீழ் 3 வரிகளாக மிகவும் சிதைந்து காணப்படுகிறது. இதில் மன்னனின் மெய்கீர்த்தி பகுதி காணப்படுகிறது.

கல்வெட்டு (TEXT)

1. .....முனைவையிற்றுரத்தியும் பல திரு
பொ..... கருள் சி.. .....வர மாளிகை
.....ப்ப.....ட செக்கம ..ாவ சில்லர் து
..... .பல பழ

2. வர் பல்லவர் கௌசலர் வங்கணர் கொங்கணர்
சிந்துரர் ஐயணர் சிங்கணர் பங்க.....ஆந்திர
முதலியர் அரசிடு திரைகளும். .....

3. றவனியில் கூறு கொள் பொருள்களும் உகந்துளள்
.....ங் முகந்துகொள்.....ந்த...விஸ்வலோக
-த்து விளங்.....

திருவாரூர் கல்வெட்டு எண்-17

இடம்:- அசலேசம் கருவரையின் வடபுற அதிட்டானம்

மன்னன்:- முதலாம் இராஜராஜன்

ஆண்டு:- இருப்பத்திமூன்று (கி. பி. 1007–08)

செய்தி:- திருவாரூர் கூற்றத்ஸதச் சேர்ந்த பிரமதேயமான் தேவலங்குடி என்னும் ஊரில் இருந்த பெருங்குறி சபையினர் (ஊர்ச்சபையினர்) திருவாரூரில் மன்றகத்து நின்ற கோலத்தில் இருந்த விஷ்ணு தேவருக்காக சில நிலங்களை வரிவிலக்கு பெற்று கொண்டு, 40 காசுகளுக்காக விட்டுக் கொடுத்த செய்தி காணப் படுகிறது. இந்த 40 காசுகளில் இராஜராஜனின் 16 ஆம் ஆண்டில் பெற்றுக்கொண்ட 7 காசுகளும் அடங்கும்.

இக்கல்வெட்டினுல் இராஜராஜன் காலத்தில் நிலங்களின் அளவுகளும் மற்றய விபரங்களும் நிலஅளவை ''பொத்தகம்''

என்னும் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு இருக்கும் என்ற செய்தியும், (1) இறை [அரசுக்கு செலுத்த வேண்டிய வரி] (2) எச்சோறு [இரவு நேரங்களில் கிராம தொழிலாளிக்கு இடும் சோறு] (3) வெட்டி [வாய்க்கால் வெட்டு போன்றவைகளை கவனிப்பவனுக்கு அளிக்கும் கூலி] (4) வெள்ளான் குடிமை [நிலங்களை பராமரிப்பவர்களுக்கு அளிக்கும் கூலி] (5)பொலியூட்டு கடமை [இறைவனுக்காக ஒரு குறிப்பிட்ட தொகையை பண்டாரத்தில் முதலீடு செய்து அதிலிருந்து கிடைக்கும் வட்டி] போன்றவை பற்றி அறிய முடிகிறது.

திருவாரூர் திருக்கோயிலினுள் நின்ற கோலத்தில் அருள்பாலிக்கும் திருபாலின் திருமேனி மாமன்னன் இராஜராஜன் காலத்தில் வழிபாட்டில் இருந்திருக்கிறது என நம்புவதற்கு இக் கல்வெட்டு சான்றாக உள்ளது.

கல்வெட்டு (TEXT)

1. ஸ்வஸ்தி ஸ்ரீ திருமகள் போலப் பெரு நிலச் செல்வி
-யும் தனக் கே உரிமை பூண்டமை மனக்கொள,
காந்தளூர் சாலை கலம் அறுத் தருளி வேங்கி
நாடுங் கங்க பாடி யும் நுளம்ப பாடியும்
தடிகை பாடியும் குடமலை நாடும் கொல்லமும்
கலிங்கமும் எண்திசை புகழ்தர ஈழ மண்டலமும்
இரட்ட பாடி ஏழரை இல.....

2. ண்டும் தொழுதகை விளங்கும் யாண்டே செழியரைத்
தேசுகொள் ஸ்ரீ கோராஜ ராஜ கேசரி பன்மரான
ஸ்ரீ ராஜராஜ தேவர்க்கு யாண்டு உஉக (23)
ஆவது சூழ்திரிய சிகாமணி வளநாட்டு திருவாரூர்
கூற்றத்து பிரமதேயம் லேலங்குடிப் பெருங்குறி
சபையோம் இன்னாட்டு இக்கூற்றத்து திருவாரூர்
மன்றகத்து நின்றருளின விஷ்ணு வி.....

3. நிலத்தில் இத்தேவருடைய நில்ன் ஒன்றே
ஒரு மாவரை இந்நிலன் ஒன்றே ஒரு மாவரைக்கும்
எல்லை கீழ் பார்க் கெல்லை திரு நாராயண வாய்க்
கால்லுக்கு மேற்கும் தென் பாற் கெல்லை உட்சிறு வர்ய்க்
காலுக்கு வடக்கும் மேற் பாற்கெல்லை உறுப் புட்டூர்
விஷ்ணு அமரவிந்தன் மகன் உழுதய கரம
விந்தன் நிலத்துக்கு கிழக்கு.....

4. உள்ளும் நடுவு பட்ட நிலன் ஒன்றே ஒரு மாவரையும்
விரிவு மடக் கென்னுதே மிகுதிக் குறைமை உள்ளடங்க
பொத்தகத்துக்குள் உள்ளது எல்லாமும் ஆனதும்
இத்தேவரிதே இவ்வூர் பத்துக் கண்டத்து
இவருடைய நாற்றுக் கால் காணி அரைக் காணிக்கும்
எல்லை கீழ் பாற்கெல்லை உறுப்புட்டூர் செட்ட குன்.....
.....

5. ப்பட நீ அமரவித்தன் நிலத்துக்கு வடக்கும் மேல்
பாற் கெல்லை உட்சிறு வாய்க்காலுக்கு கிழக்கும்
வடபாற் கெல்லை மு.....றைப் போன நம்பி
கர்மவித்தன் மனைக்கும் புழுச்சாலூர் நக்க
சாமன் மனைக்கு தெற்கும் ஆக இவ்விசைந்த
பெரு நாள்கெல்லை உள்ளும் நடுவுபட்ட நிலன்
காணி அரைக்கா.....

6. க் குழி வந்தலாறும் ஆக இவ்வெல்லை களுக்கு
நடுவுபட்ட நிலமும் இன் நாற்றுக் காலும்
பொத்தகத்துக் குழிவ தெவாறு உள்ள நிலத்தால்
வந்த இறை இவ்வூரு மகப் படுத்தி வந்த இறையும்
எச்சோறும், வெட்டியும் வெள்ளான் குடிமையும்
ஸ்ரீ யாரூர் தேவர்க்கு கடவ பொலியூட்டுக்
கடமையும் உட்பட மற்றும் ஊரிடு வரிப்பாடு
ஆக.....

7. காத்துக் குடுக்க கடவோமாக இத் தேவர்க்கே
யாண்டு ய்சு (16) ஆவது இம் மன்றகத்து
நின்றருளின தேவரிடைக் கொண்ட காசு ஏ (7)
இவ் இவர் இருபத்து மூன்றுவது இத் தேவர்
ஆபரணங்களும் அபிஷேகமும் பொடு ..
.....ழித்து இத்தேவர் கன்மிகள் தர சபை
-யோம் கொண்ட காசு முப்பத்திரண்டும்
ஆகக் காசு சஅ (40).....

திருவாரூர் கல்வெட்டு எண்-18

இடம் :- அசலேசம்-கருவரையின் வடபுற அதிட்டானம்

மன்னன் :- கல்வெட்டின் துவக்கம் சிதைந்தமையால் அறிய இயலவில்லை.

காலம் :- எழுத்தமைதியால் [Paleography] 11--12 ஆம் நூற்றுண்டென கருதப்படுகிறது.

செய்தி :- வாயற்றூர் என்னும் ஊரைச் சார்ந்த சபையினர் 60 காசுகளை பெற்றுக் கொண்டு குழியும் திடலுமாய் கிடந்த நிலத்தை நன்செய்யாக திருத்தி அதன் நெல் வருவாயிலிருந்து இத் திருக்கோயில் இறைவனுக்கு மலர் மாலைகள் ஏற்பாடு செய்ய அளித்தமை பற்றி இச்சாசனம் கூறுகிறது. இச்சாசனத்தில் கையப்பமிட்டவர்களின் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு (TEXT)

1. க்கு வாயற்றூர் சபையோம் இன்னில மும்
மு.....ளற்ற .....ம் கு.....திடலும் இக்குழி
யுமாய் கிடந்தமையில் திருத்தி.....

2. கப் படுத்து இதனுல் வந்த நெல் கைக் கொண்டு இத்
தேவருக்கு வேண்டும நாலுதிருப் பள்ளி தாமத்து க்குட்
பட வேண்டும்.....தி.....

3. தொறுந் செய்யக் கடவார் களாவும் இக்காசு அறுபதுங்
கொண்டு இன்னிலம்.....ரையே மாகாணியும்
விற்றுக் கொடுத்தோம் உடையார் தி.....

4. டையார்க்கு வாயற்றூர் சபையோம் இது சபை
பணிக்க எழுதினேன் திருவாரூர் மத்யித்தன்
திருவாரூர் கிழான் பரவை வீதி விடங் கனேன்....

5. இப்படி அறிவேன் கௌசிகந் சிராமன் தண்டியேன்
இப்படி அறி வெ.....

6. ஆதரயன் கூத்தன் லக னேன் இப்படி
அறிவேன் வை காச... ன் பாரத்வாஜி
முப்பதிருவன் பூவணத் தடி க ளென் இப்படி
அறி வெ . ..

7. ....இவூர் திருக்கன....நக்கன்
அருமொழி யென் இப்படி அறி வேன்....குக்
.....த...நு..ரிய.....தன்மசிவனேன்..,
....இது....

திருவாரூர் கல்வெட்டு எண்-19

இடம் :- அசலேசம் கருவறையின் வடபுறச் சுவர்,

மன்னன் :- முதல் இராஜராஜன்

காலம் :- ஆட்சியாண்டு இரண்டு கி. பி. 986-87

செய்தி :- முதலாம் இராஜராஜனின் இரண்டாம் ஆட்சியாண்டின் 30 ஆம் நாள் உடைய பிராட்டியார் செம்பியன் மாதேவியார் தமதுபுதல்வர் உத்தமசோழதேவரின் நலன்களுக்காக திருவாரூர் திருவரநெறி இறைவனுக்கு அழுதுசெய்வதற்கு நிலமும் வெள்ளிப் பாத்திரங்களும் அளித்தமையை விவரிக்கின்றது.

கல்வெட்டு (TEXT)

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கொராஜ கெசரி பன்மற்கு யாண்டு
2-ஆவதுள் நூ (30) சொழமயிலட்டியார்
மெனுயக செய ஸ்ரீ உத்தம சொழ

2. தேவர்க்காக உடைய பிராட்டியார் ஸ்ரீ செம்பியன் மஹா
தேவியார் திருவர நெறி ஆழ்வார்க்கு அழுது
செய்ய திருமெய்க்காப்பாந

3. நிலன் மாதெவன் கண்காணியொடுங் குடுத்துவரக்
காட்டின வெள்ளியின் மட்டத் தளிகை
க அல

4. கு நிலை 500 ம் வெள்ளியின் கலசப்பாஅன க
அலகு நிலை 300 ம் இது பன்மாஹேஸ்
—வர ரகூ ||

திருவாரூர் கல்வெட்டு எண். 20

இடம் :- அசலேசம்—கருவரையின் தென்புற அதிட்டானம்

மன்னன் :- முதலாம் இராஜராஜன்

காலம் :- 7 ஆம் ஆட்சியாண்டு கி. பி. 992

செய்தி:- கோ ராஜராஜ கேசரி பன்மரான முதலாம் இராஜ ராஜ சோழனின் 7ஆம் ஆட்சியாண்டு 303வது நாளில் திருவாரூர் கூற்றத்து பிரமதேயமான அடியப்பியச் சதுர்வேதி மங்கலத்து ஊர் சபையினர் ஏற்றுக்கொண்ட ஓர் ஒப்பந்த சாசனமே இக்கல்வெட்டு. ஸ்ரீகாரியம் ஆராய்கின்ற அதிகாரி (திருக்கோயில் நிர்வாகங்களை மேற்பார்வையிடும் உயர்மட்ட அதிகாரி) யான செம்பியன் அம்பர் நாட்டு கோனார் என்பவரின் மேற்பார்வையில் அரநெறி என்ற திருக்கோயில் இருந்தது. அரநெறி ஆழ்வார் கோயில் என்ற இத்திருக்கோயில் உடைய பிராட்டியார் செம்பியன் மாதேவியார் (கண்டாராதித்த சோழரின் மனைவியார்) என்னும் சோழப் பேரரசியால் கருங்கற் கோயிலாக திருப்பணி செய்யப்பட்டது. இக்கோயிலில் அமரசுந்தரதேவர், உமாபட்டாரகியார் திருமேனிகளும் இத்தேவியாராலேயே எடுக்கப்பட்டது. மேலும் செம்பியன் மாதேவியாரே திருவமுதுக்கும், விளக்கெரிக்க எண்ணெக்கும், திருக்கோயில், சுற்று மாளிகைகள், திருப்பள்ளி கட்டில் மண்டபம் இவைகளின் திருப்பணிக்களுக்காக முதலீடுசெய்த காக இருநூற்று முப்பத்தி நான்காகும். இக் காசுகளை வட்டிக்கு கொடுக்கவும் (பலிசைக் கிட்டுக் கொள்கவென்று) அத்தேவியாரே அனுமதித்துள்ளார்கள்.

இதன்படி இந்த இருநூற்று முப்பத்திநாலு காசுக்கு சமமான 200 கழஞ்சு பொன்னை திருக்கோயில் பண்டாரத்திலிருந்து கடனாக அடியப்பிச் சதுர்வேதி மங்கலத்து ஊர் சபையினர் பெற்றுக் கொண்டனர்.

இவ்வாறு இவ்வூர் சபையினர் பெற்றுக் கொண்ட 200கழஞ்சு பொன்னில் 30 கழஞ்சு பொன்னுக்குரிய வட்டியாக தினந்தோறும் திருநீலகண்டம் என்ற குவளையினால் உழக்கெண்ணை விளக்கெரிப்பதற்காக கோயிலுக்கே சென்று கொடுப்போம் என்றும், ஒப்பந்த சாசனத்தில் குறிப்பிட்டுள்ளனர். மீதம் உள்ள 170 கழஞ்சுக்கு அளிக்கப்பட்ட வட்டி ஒப்பந்தும் என்ன என்பதை கல்வெட்டு சிதைந்து விட்டதால் அறிய இயலவில்லை.

கல்வெட்டு (TEXT)

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கோ இராஜ ராஜ கேசரி பன்மர்க்
-கு யாண்டு எ வது நாள்
கூஉகூ (303) ஞள் சோழநாட்டு காலிரி
தென் கரைய் திருவாரூர் கூற்றத்து பிரமதேயப்

அடியப்பியச் சதுர்வேதி மங்கலத்து சபையோம்
ஸ்ரீயூரூர் ஸ்ரீகார்யுமாராய் நின்ற தெம்பி

2. யனம்பர் நாட்டுக் கோனூர் மெலையகத்து
திருவரநெறி ஆள்வார் கோயில் திருக்கற்றளி
எழுந்தெருளுவிச்ச உடைய பிராட்டியார்
ஸ்ரீசெம்பியன் மகாதேவியார் இக்கோயிலில்
தான் எழுந்தருளுவிச்ச அமரசுந்தர தேவர்க்கு
ம் உமா பட்டாரகியார்

3. க்கும் திருவமுதுக்கும் திருவிளக்கெண்ணெக்
கும் திருக்கற்றளிக்கும், சுற்று மாளிகைக்கும்
திருப் பள்ளிக் கட்டில் மண்டபத்துக்கும்
புதுக்கு புறமாகவும் பலிசைக் கிட்டுக்
கொள்கவென்று அருளிச் செய்துவரக் கட்டின
காசு 234 இக்காசு
இருநூற்று முப்பு

4. த்து நாலுக்கும் காசு க (1) னுக்கு பொன்
முக்காலே இரண்டு மஞ்சாடியு முக்காணியாசு
இவ்வூர் ஊர் கல்லால் மாறி முதலாக எடுத்து
பண்டாரத்து இருதெ பொன் 200 இப்
பொன் இருநூற்று கழஞ்சும் யாங்கள் கொண்டு
கடவோம் கொண்ட

5. பரிசாவது இப்பொன் இருநூற்று கழஞ்சிலும்
மூப்பதின் கழஞ்சு பொலியிலுல் நிசதம்
உழக்கெண்ணெ திரு நீலகண்டத்தால்
கோயிலுக்கு கோடு சென்று அட்டக்கட
வோமாகவும் நின்ற பொன் நூற்று எழுபதின்
கழஞ்சாலும் ஆண்டு வரை .....

(கல்வெட்டின் பிற்பகுதி முற்றுப் பெருமல் சிதைந்துள்ளது)

திருவாரூர் கல்வெட்டு எண். 21

இடம் ;- இரண்டாம் பிரகாரம் — தெற்கு பிரகாரம் வட புறசுவரின் கீழ் கோடியில் உள்ளது.

மன்னன் :- முதலாம் குலோத்துங்கன்

செய்தி :- ''புகழ் மாது விளங்க'' என்ற மெய் கீர்த்தி யுடன் தொடங்கும் இக் கல்வெட்டில் அரநெறி உடையார்க்கு விளக்கெரிப்பதற்காக தேவர் பண்டாரத்தில் முதலீடு செய்த காசு (ஒடுக்கின காசு) பற்றி குறிப்பிடுகிறது. இக் கல்வெட்டு இது வரை படி எடுக்கப் படவில்லை.

திருவாரூர் கல்வெட்டு எண்-22

இடம் :- இரண்டாம் பிரகாரம் – தெற்கு பிரகாரம் வட புறசுவரின் கிழக்குப் பகுதி.

மன்னன் :- முதலாம் குலோத்துங்கன்

செய்தி :- ''புகழ் மாது விளங்க'' என்ற மெய்கீர்த்தியுடன் துவங்கும் இக் கல்வெட்டு ஆரூர் கோயிலுக்கு அளிக்கப்பட்ட நில சாசனம் பற்றி விவரிக்கின்றது

திருவாரூர் கல்வெட்டு எண்-23

இடம் :- இரண்டாம் பிரகாரம் – தெற்கு பிரகாரம் வட புற சுவரில் உள்ளது.

செய்தி :- ஸ்வஸ்தி ..... மிடைந்த எனத் தொடங்கும் மெய்கீர்த்தியோடு இரண்டு வரிகள் மட்டுமே காணப்படுகிறது. மற்ற கல்வெட்டு பகுதி முழுவதும் சிதைந்துள்ளது.

திருவாரூர் கல்வெட்டு எண்-24

இடம் :- இரண்டாம் பிரகாரம் – தெற்கு பிரகாரம் வட புறசுவரில் தி.க. எண் 26க்கு கீழ் உள்ளது. இதுவரை படி எடுக் கப்படவில்லை.

திருவாரூர் கல்வெட்டு எண்-25

இடம் :- இரண்டாம் பிரகாரம் - தெற்கு பிரகாரம் வட புற சுவரில் தி.க. எண் 26 கீழ் உள்ளது. இக் கல்வெட்டு இதுவரை படி எடுக்கப் படவில்லை,

திருவாரூர் கல்வெட்டு எண்-26

இடம் :- இரண்டாம் பிரகாரம்–தெற்கு பிரகாரம் வடபுற சுவரில் உள்ளது.

மன்னன் :- முதலாம் குலோத்துங்கன்

காலம் :- 34 ஆம் ஆட்சியாண்டு—கி. பி. 1103-04

செய்தி :- முதலாம் குலோத்துங்கனின் 34ஆம் ஆட்சியாண்டு இந்த சாசனத்தில் ''புகழ்மாது விளங்க'' என்ற மெய்கீர்த்தி காணப்படுகிறது. இதில் கேய மாணிக்க வளநாட்டுத் திருவாரூர் கூற்றத்து திருவாரூர் உலகீஸ்வரமுடையார் திருக்கோயிலுக்கு தேவதானமாக அளிக்கப்பட்ட நிலங்கள் பற்றி கூறுகிறது. இக்கல் வெட்டு சிதைந்தமையால் முழு விபரம் அறிய இயலவில்லை.

கல்வெட்டு (TEXT)

1. ஸ்வஸ்திஸ்ரீ புகழ்மாது விளங்க ஜயமாது விரும்ப நிலமகள் வளர
மலர் மகள் புணர உரிமையிற் சிறந்த மணிமுடி சூடினவர் நிலைகெட
வில்லவர் குலதர எனை மன்னவர் இழியலுற்றாழிதரத்
திக்கனைத்தும்
தன் சக்கரஞ் நடாத்தி வீரசிங்காசனத்து புவன
முழுதுடையாளோடும்
விற்றிருந்தருளிய கோரா.....நச.....சோழ
தேவர்க்கு யாண்டு 34 வது

2. கேய மாணிக்க வளநாட்டுத் திருவாரூர் கூற்றத்துத் திருவாரூர்
உலகீஸ்வரமுடையார் தேவதானம் இன்னுட்டு பழனக்குடி
நிலம் 3மா கீழ்முக்கால் காணி அரைக்காணி முந்திரி இது
சுப்பிரமங்கல முடையான்
மாதவனிரவியான மாஞலைய மூவேந்தவேளான் கொலொத்
துங்க சோழ வளநாட்டு.....ஸ்ரீராஜேந்திர சோழ சருப்
பேதி மங்கலத்துக் குரவசரி சீராமபட்டரும் உள்ளனவளந்து
சிரங்கட...

3. .....நிலம் 2 வேலி ம் ஆக நிலம்.....

திருவாரூர் கல்வெட்டு எண்: 27

இடம்:- இரண்டாம் பிரகாரம்-தெற்கு பிரகாரம் வடபுற சுவர்.

மன்னன் :- விக்கிரமசோழன்

காலம் :- 5 ஆம் ஆட்சியாண்டு (கி.பி. 1123)

செய்தி :- இக் கல்வெட்டே புகழ் பெற்ற **மனுநீதி சோழனின் வரலாறு கூறும் ஒரே அரிய கல்வெட்டு.** பெரிய புராணத்தில் கூறப் படும் மனுநீதி சோழனின் கதைக்கு முன்பே எழுதப்பட்ட சரித்திர மூங்கூட. இதில் பெரிய புராணத்தில் கூறப்படாத தகவல்களான மனுவின் அமைச்சனின் பெயர், அவனது ஊர் பின்பு விக்கிரம சோழன் காலத்தில் அவ்வமைச்சனின் வழியில் தோன்றியவன் பெயர், மனுவின் புதல்வனின் பெயர், அமைச்சனின் புதல்வனின் பெயர் போன்றவை குறிக்கப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டில் விக்கிரம சோழன் மனுவின் அமைச்சனான உபய குலாமலனின் வழித்தோன்றலான சந்திரசேகரன் ஆதி விடங்களான குலோத்துங்க சோழ மகா பலி வாணதி ராயன் என்பவனுக்கு அளித்த சலுகைகள் பற்றி விவரிக்கின்றது.

கல்வெட்டு (TEXT)

1. ஸ்வஸ்தி ஸ்ரீ பூமாலை மிடைந்து பொன்மாலை திகழ
பாமாலை மலிந்த பருமணி திரள் புயத்து இருநில
மடந்தையொடு ஜெயமகள் இருப்ப கணவரைப்
பெற்று திருமகள் ஒருதணி யிருப்ப கலைமகள்
சொற்றிறம் புணர்ந்த கற்பினளாகி விருப்பொடு
நாவகத்து இருப்ப திசைதோறும் திகிரியோடு
செங்கோல் நடப்ப அகில புவனமும் கவிப்பதோர்
புதுமதி போல் வெண்குடை மீமிசை நிற்ப கருங்
கலி யொழித்து வன்பிலத்திடை கிடப்ப குளத்திடை
தெலுங்க வீமன் விலங்கல் மிசை ஏறவும் கலிங்க
பூமியை கணையெறி பருகவும் ஐம்படை பருவத்து
வெம்படை தாங்கி வேங்கை மண்டலம் தாங்கு
இனிது இருந்து வடதிசை அடிப்படுத்தருள தென்திசை
தருமமும், தவமும், தானமும் தழைப்ப வேதமும்
மெய்ம்மையும் ஆதி யுகம் போல தஉ—

2. த்தலை சிறப்ப வந்தருளி வெலர்க்கரும்
பொற்புலி யாணை பார்த்திபர் சூட நிறைமணி
மகுடம் முறைமயிர் சூடி மன்னுயிர் கொல்லா
இன்னுயிர் தாய் போல் தண்ணளி .....
பரந்து மண் முழுதும் கலிப்ப மனுநெறி வளர்த்து
தன் கோயில் கொற்ற வாயிற் புறத்து மணி நா
ஒடுங்க முரைசு கண்முழங்க விசயமும் புகழும்
மேல் மேல் ஓங்க செழியர் வெஞ்சுரம் புக
சேரலர் கடல்புக அழிதரு சிங்கணர் அஞ்சி
நெஞ்சல் அமர கங்கர் திரையிட கன்னடர்
விண்ணிட கொங்கர் ஓதுங்க கொங்கணர் சாய
மற்றத்திசை மன்னரும் தத்தமக்கு அரணென
திருமலர் சேவடி ஒருமயிர் சூடி தொல்லை ஏழுல
கும் தொழுதெழத் தோன்றி முல்லை வாணகை
முக்கோக் கிழானடி உமையோடு சங்கரன் இமயச்
சி மயத் திருந்ததென பொருந்தி உடனிருப்ப
ஆங்கவன் மகிழு.....கை ஒப்பாகி தெரிவையர்

3. திலதன் நியாகப் பதாகை புரிகுழல் மடப்பிடி புனித
குணவனிதை திரி புவன முடையாள் இவன் திருவுளத்
தருள் முழுதுடையாளென உடனிருப்ப செம்பொன்
வீர சிம்மாச னத்து முக்கோக் கிழானடிகளோடும்
வீற்றிருந்த ருளிய கோப்பரகேசரி வன்மரான
திரிபுவன சக்ரவர்த்திகள் ஸ்ரீ விக்ரம சோழ தேவர்க்கு
யாண்டு அஞ்சாவது மிதுனை ஞாயிற்று பூர்வ பட்சத்து
சப்தமியும் ஞாயிற்றுக் கிழமையும் அத்தமமான
நாள் முன்னூற்று நாற்பதிஞல் சேயமாணிக்க வள
நாட்டு திருவாரூர் கூற்றத்து திருவாரூருடையார்
வீதி விடங்கர் சித்திரைத் திங்கள் திருநாவில்
சதய .....
ஸ் தேவர் ஸ்ரீ ... திருக் காவணத்தில் சிம்மர்சனத்து
எழுந்தருளியிருந்து பதியிலாளர் தியாக விநோதத்
(தலைக் கோலியை ஆட்ட) ங்கண்டருளா நிற்ப ஸ்ரீகாரியம்
சுப்பிர

4. மங்கலமுடையான் மார்த்வன் ரவியாளை மாஞல்ய
மூவேந்த வேளார் விண்ணப்பத்திஞல் பதிபாத
மூலப் பட்டுடை பஞ்சாட்சரிய தேவ கன்மிகளுக்குப்

கோயிலங் ...யார்க்கும் திருவாய் மொழிந்தருளினபடி
நம் ஏலலால் பூலோக ராஜ்யம் செகிற
சூரிய புத்திரன் மனு தன் புத்திரன் ஏறிவருகிற தேரில்
பசுவின் கன்று அகப்பட்டு பிரமாதப்பட அதின்
மாதாவான சுரபி கண்டு துக்கித்து மனுவின் வாசலில்
மணியை எறிய அது கேட்டு மனு தன் மந்திரி
இங்க நாட்டுப் பாலியூருடையான் உபயகுலாமலனைப்
பார்த்து நீ சென்று இதனை அறிந்து .....
வாயிற் புறத்து ஒரு பசு மணியெறியா நின்றது
என்று சொல்ல அதுகேட்டு மனுபுறப்பட்டு பசு
வையும் பட்டுக் கிடந்த .....
படி வினவி தன் புத்திரன் ஏறின தேரி—

5. லே பட்டமை அறிந்து அக் கன்றுக்கு நேராக
தன் புத்திரன் பிரிய விருத்தனை தேரிலே ஊர்ந்து
கொடுக்க வென்று உபய குலாமலனுக்குச் சொல்ல
அவன் சதோபத் தோடும் புறப்பட்டு தன் செவி
கனை தரையிலே குடைத்து கோடுபட்டது
கண்டு துவாரபாலகன் புகுந்தது உபயகுலாமலன்
தன் செவிகனை குடைந்து கொண்டு ....
தும்மிதனைப் மனுதானே புறப்பட்டு தன் புத்திரனை
தானே தேரிலே ஊர்ந்து கொடுக்க அப்போதே
நாம் அவனை அனுக்கிரகித்து கன்றுக்கும்
மந்திரிக்கும் மனு புத்திரனுக்கும் ஜீவன் கொடுக்க
அதுகண்டு மன சந்தோஷித்து கன்றினை எடுத்துக்
கொண்டு பசுவுக்கு காட்டிக் குடு .....
ர பிஷேகம் பண்ணி இவனுக்கு உபயகுலா
மலன் மகன் சூரியனை மந்திரியாக்கி இவனுக்கு
தன் புத்திரன் மாளிகை .... மங்கல ....
மூரும் கொடுத்து மனுவும் உ —

6. பயகுலாமலனும் தவசினை தலை நின்றமையில் பாலியூருடை
யான் உபய குலாமலன் வம்சத்தானுகிய பாலியூருடை
யார் சந்திர சேகரன் ஆதி விடங்கனை குலோத்
துங்க சோழ மகாபலி வான (திராயர்) வம்சாதி
ஆக ஒருகிற மாளிகை மனை பழையபடி மாளிகையாக
எடுத்து குடி வைப்பிப்பதாக நாம் சொல்ல .....
.... இதிலே நித்தமும் நம் அடியார்க்கு

சோறு இடப் பெற வேணுமென்று இவன் நமக்கு
சொன்னமையில் காட்டிப் பெறுவதாகவும் இம்மாளி
—கை வம்சாதி ஆகஸ்வமாய் வரு .....
மாளிகையிலே எழுத்து வெட்டுபித்து கொடுக்க
வென்று இப்படிக்கு வெட்டிக் கொடுக்க வென்றும்
திருவாய் மொழிந்தருள திரும ... தியாக விநோத
பிரம்ம மகாராஜன் எழுத்தினுல் புகுந்த திருமுக
.....

7. பாலியூருடையான் சந்திர சேகரன் ஆதி விடங்கனை
குலோத்து
ங்க சோழ மகாபலி வாணுதி ராஜனுக்கும் மனுவுக்கு
மந்திரியானவன் தன் வம்சத்தில் பாலியூருடைய
உபயகுலாமலன் மனுவின் பக்கல் பெற்றுடைய மாளிகை
மனைதளக்கும் ... நாம் காணியாகத் தந்தோம்
இம் மாளிகை பழ ... ப ..... மனை நிலத்துக்கு
கீழ்ப்பார்க்கெல்லை தூது ..... முடுக்குக்குமேற்
கும் தென் பார்க்கெல்லை .....வடக்கும்
மேல்பார்க் கெல்லை அருமொழீஸ்வரமுடையார்
தளிச் சேரி பால் நத்தத்துக்கு கிழக்கும் வடபார்
க்கெல்லை பாலியூருடையான் மாளிகைத் தெரு —

8. வுக்கு தெற்கும் இவ்விசைந்த பெருநான்கெல்லை
நடுவுபட்ட மாளிகை பனை குழி நூற்றிருபதும்
பாலியூருடையான் சந்திரசேகரன் ஆதி விடங்கனை
குலோத்துங்க சோழ மகாபலி வாணராஜனுக்கு
வம்சாதியாக ஸ வமானப்படி ஸ்ரீ மாகேஸ்வரருக்கும்
பதிபாத மூல்ப்பட்டுடை பஞ்சாட்சரிய தேவர்கன்
மிகளுக்கும் ..... ர்க்கும் உடையார் வீதி
விடங்க தேவர் திருவாய் மொழி .....
தச்சரில் ... ந்தமுடைய தச்சன் கோபூம்பன்
அ... பொக் கோயில் ஆசாரியன் கல்வெட்டியது •
இது பன்மாகேஸ்வர.....

திருவாரூர் கல்வெட்டு எண்-28

இடம் :- இரண்டாம் பிரகாரம் — தெற்கு பிரகாரம் வட
புற சுவரில் உள்ளது. (மனு கல்வெட்டின் கீழ் உள்ளது)

மன்னன் :- விக்கிரம சோழன்

காலம் :- ஐந்தாம் ஆட்சியாண்டு கி.பி 1122—1123

செய்தி :- குலோத்துங்க சோழ வளநாட்டு வேளாநாட்டு இலங்குடி மகாசபையினர் திருவாரூர் மூலஸ்தான முடையார் கோயில் ஆதி சண்டேஸ்வரர் பெயரில் அளித்த நிலசாசனமே இக்கல்வெட்டாகும். இதில் குலோத்துங்க சோழ மகாபலிவாணதி ராயனுக்கு அளிக்கப்பட்ட (மன்னனால்) நிலம் இவர்கள் விற்றுக் கொடுத்தது என குறிக்கப்பட்டுள்ளது, இம் மாபலி வானாதிராயன் மனுவின் அமைச்சனை உபயகுலாமலன் வழித் தோன்றல் என்பதும், இவன் இங்கனாட்டு பாலையூரினன் என்பதும் மற்ற கல்வெட்டுக்களால் அறியப்படுகிறது.

கல்வெட்டு (TEXT)

1. .....வ கரவத்திகள் ஸ்ரீ (விக்ரம சோழ
தேவற்கு)யாண்டு அஞ்சாவது மிதுன நாயற்று பூரு
வ பட்சத்து பஞ்சமியும் மகமும் பெற்ற
வியாழக் கிழமை நாள் குலோ.....
வளநாட்டு

2. வேளா நாட்டு பிரம தேயம் இலங்குடி
மகாசபையோம் நிலவிலே ஆவணம் கேய மாணிக்க
வளநாட்டு திருவாரூர் கூற்றத்து திருவாரூர்
உடையார் ஸ்ரீமூலஸ்தான முடையார் கோயில்
ஆதி சண்டேஸ்வர தேவர் கண்மிகளுக்கு
நாங்கள் விலை இறையிலி பரமானத்துக்கு
கல் வெட்டிக் குடுத்த பரிசாவது அருமொழி
தேவ வள நாட்டு.....
சந்திரசேகரன் ஆதி விடங்கனுன குலோத்துங்க
சோழ மகாபலி வாணுதிராயன்.....
உடையார் வீதிவிடங்கதேவர் ..... பெற்று
உடையராய் இவர்க்கும் இவர் வம்சத்
தார்க்கும் ஸலமாய் இருந்த மாளிகை
மனைநில.....செய்விக்க கடவராக
மடப்புறமாக நாங்கள் விற்றுக் குடுத்த நிலமாவது
இலங்குடி பிரமதேயத்து ஸ்ரீதேவி வதிக்குங்

கிழக்கு திருவாரூர் வாய்க் காலுக்கு.....
ங் கண்ணுற்று

3. நாலாஞ் சதுரத்து கிழக்கடைய குழி இரண்
டாயிரமும் இங்கே முன்னுங்கண்ணுற்று
நாலாஞ் சதுரத்து கிழக்கடைய குழி இரண்டாயி
-ரமும் இஞ்சே முதற கண்ணற்று நாலா ம்சதுரத்
து . . . . வாய்க் காலுக்கு தென் கரைப்பட்ட
குழி நாநூற்று இருபத்தஞ்சும் ஆக குழி
நாலாயிரத்து நாலூற்று இருபத்து அஞ்சுங்
. . . . .நூறுகுழி கொண்டது ஒரு மாவாக
வந்த நிலம் இரண்டே ... காணியும் ...
ன்னுக்கு விற்றுக் குடுத்துகை ...லப் பொருள்
ராஜராஜ மாடையோடு ஒக்கும் பொன் வேலி
ஒன்றுக்கு ... நாற்கழஞ்சு ... எண்
கழஞ்சே முக்காலே இரண்டு மஞ்சாடியிலை
காசு 26½ இக்காசு இருபத்து ஆறரையே
ஒருமாவும் இந்நிலம் இரண்டே நா...லு...
. .ரி எச் சோறு கூ

4. ற்றரிசி வாசலில் போந்த குடிமை எப்பேர்ப்பட்ட
-துவும் நாங்களேய் இறுக்க கடவோமாக
இறையிலி செய்கைக்கு வேலி ஒன்றுக்கு பொன்
ராஜராஜன் மாடையோடு ஒக்கும் பொன்
பதிந் அறுகழஞ்சாக இந்நிலம் இரண்டே நாலு
மாக் காணியாலும் வந்த பொன் மூப்பத்
தைங் கழஞ்சே எட்டு மஞ்சாடியிநால்
காசு நூறறுறே நாலு மாவும் ஆக
குடிஞைக்கல் நிறை பெ...ந்
நாற்ப. .செ காலிநால் காசு
123 . . பத்து மூந்றும் கொண்டோம்
கொண்ட பரிசாவது இம் மஹா பலிவான
-திராஜர் . . கொள்கைக்கும்
கொண்ட நிலம் இறையிலி செய்கைக்கும்
ஆதி சண்டேஸ்வர தேவ ஸ்ரீ பண்டாரத்
-தில் இவர் ஒடுக்கி வைத்த பொன்
நில . . கொண்ட பொ

5. ந்நில் நாங்கள் இந்நிலம் விற்றுக் குடுத்து
கொண்ட பொன் எண் கழஞ்சே முக்காலே
இரண்டு மஞ்சாடியும் இறையிலி செய்கைக்கு
கொண்ட பொன் முப்பத்தைஞ் கழஞ்சே
எட்டு மஞ்சாடியும் ஆக பொன் நாற்பத்து
நால்கழஞ்சே காலிநால் காசு நூற்று
முப்பத்து முன்றும். .ஆ .....க்
கொண்டு விலைக்குறவிற்று பொருளறக்
கொண்டு விலை.....ந்தோம் இச் சண்
டேஸ்வர ....ளுக்கு இலங்குடி மகாசபை
-யோம் மகா சபையோரில் பிறந்தூர்
தாமோதர மத்தியஸ்தன் தெங்கூர்குடை
யான் அரங்கன் புற்றிடங்.....
முத்து இப்படிக்கு

6. கிராஞ்சி ஸ்ரீ உ மாதவப்பட்டனேன் இவை
என் எழுத்து இது பிறந்தூர்
தாமோதரப்பட்ட
ன் சபைக்கு யாநமைக்கு தெங்கூர்
உடையான் ஆநாங் குடையான் இவை
என் எழுத்து இப்படி அறிவேன் இவ்வூர்
சிவபிராமணன் கௌதமன் குணவன்
மங்கலி ஈஸ்வர முடையானேன் இவை
.....

7. யாநமைக்கு கரணத்தான் ஆநாங்குடை
யான் எழுத்து |—ன—இது
ராஜேந்திர சோழனேன் இன்னம்பர்
நாட்டு வேளான் சபைக்கு யானமைக்கு
கரணத்தான் ஆநாங்குடையான் இவை
என் எழுத்து ||உ

திருவாரூர் கல்வெட்டு எண். 29

இடம் :- இரண்டாம் பிரகாரம் – தெற்கு பிரகாரம் வடபுற சுவரில் உள்ளது (மனுகல்வெட்டின் கீழ் உள்ளது)

மன்னன் :- விக்கிரமசோழன்

காலம் :- 6 ஆம் ஆட்சியாண்டு – கி. பி. 1123-1124

செய்தி :- பொன்மலைச்சேரி உடையான் வேளான் சூரியன் எனும் விருதராஜ பங்கர அழுந்தூர் வேளான் என்பவன் 4 காசுகள் விலையாக பெற்றுக் கொண்டு ஸ்ரீ மூலஸ்தான முடையார்க்கு நந்தவனத்திற்காக வரி இல்லாத நிலமாக விற்ற செய்தியை இச் சாசனம் கூறுகிறது. விலையாக பெற்ற இந்த 4 காசுகளும் (இங்களுட்டு) பாலையூர் உடையான் சந்திர சேகரன் ஆதி விடங்கன் என்னும் மகாபலி வாணாதிராயன் இத் திருக் கோயிலுக்கு நந்தவன பராமரிப்பிற்காக பண்டாரத்தில் முதலீடு செய்த காசில் இருந்து பெற்றுக் கொண்டதாக குறிப்பிடப் பட்டுள்ளது. மேலும் இந்த நான்கு காசுகளில் நிலத்தின் விலையாக ஒரு காசும் இறையிலியாக (வரிஇல்லாத நிலம்) அளித்தமைக்காக 3 காசுகளும் விலைபெற்றதாகவும் குறிப்பிடப் பட்டுள்ளது.

இக்கல்வெட்டில் முன்பு நந்தவனத்திற்காக அறக்கொடை அளித்தவன் எனக் குறிப்பிடப்படும் பாலையூர் உடையான் சந்திரசேகரன் ஆதிவிடங்கனான மகாபலி வாணாதிராயன் என்பவன் மனுநீதிசோழன் வரலாற்றோடு தொடர்புடையவன் என்பதும் விக்கிரம சோழனால் நன்கொடைகளும் சலுகைகள் பலவும் பெற்றவன் என்பதை மனு சரித்திரங் கூறும் இத் திருக்கோயில் கல்வெட்டொன்று (திருவாரூர் கல்வெட்டு எண்-27) திறம்பட உரைக்கிறது. இவன் இங்கனாட்டு பாலையூர் (குடவாயில் அருகில் உள்ள பாலையூர்)என்ற ஊரைச் சார்ந்தவன் வண்டாழஞ் சேரி உடையான் வெண்காடு தோளரி.....ராஜர் மனுமந்திரி இவன் என்பது இக் கல்வெட்டால் உணரப்படுகிறது. வண்டாழஞ்சேரி என்ற ஊர் தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் திருவாரூர் பெருவழியில் உள்ளது. தற்போது வண்டுவாஞ்சேரி என அழைக்கப்படுகிறது. இவ்வூர் முதற்குலோத்துங்கன் மற்றும் விக்கிரம சோழன் இவர்கள் காலத்தில் வாழ்ந்த தாணைத் தளபதியும்''கலிங்கத்துப் பரணியின்'' நாயகனுமான கருணாகரத் தொண்டைமானின் தலை நகராகும். (வண்டை வளம்பதி). இவ்வூரினனான வெண்காடு தோளரி.....ராஜர் என்பவனின் மனுமந்திரி எனக்குறிப்பிடும் கல்வெட்டு சொற்றொடரால் இவன் கருணாகரத் தொண்டைமானுக்கு பின்பு ஒரு குறுநில மன்னனாக வாழ்ந்திருக்கலாம் என யூகிக்க முடிகிறது. இவனது மந்திரியாகவே பாலையூர் உடையான் இருந்திருத்தல் கூடும்.

கல்வெட்டு (TEXT)

1. ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரி பன்மரான திருபுவன் சக்கர
வர்த்திகள் ஸ்ரீவிக்கிரமசோழ தேவர்க்கு யாண்டு
ஆறுவது ஆவணி மாசத்து பூர்வ பட்சத்து ஆயிலெ
யத்து நாள் கேய மாணிக்க வளநாட்டுத்
திருவாரூர் கூற்றத்து தேவதானம் . . .க்குடி
காணிஉடைய பொன் மலைச்சேரி உடையான் வேளான்
சூரியனுன விருதராய பயங்கர அழுந்தூர் செ.....
வற்கு நான்விற்றுக்கு டுத்து இறையிலி செய்து
குடுத்த பரிசாவது என் காணியான மும்மடி சோழ
நல்லூர் யாண்டு 5வது பாசனம் சாவியாய்
இறை தட்டினமையில் கல்வெட்டி இறுக்க
வேண்டினமையில்
இவர் ஆதிசண்டேஸ்வரத் தேவர் பண்டாரத்து புது.....

2. வண்டாழஞ்சேரி உடையான் வெண்காடு தோளரி
—.....ராஜர் மனுமந்திர.....
பாலையூருடையான் சந்திரசேகரன் ஆதிவிடங்கனுன
மகாபலி வாணராயர் தமக்கு தன்மம் மாக
நிலங்கொண்டு ஸ்ரீ மூலஸ்தான முடையார்க்குத்
திருநந்தவனம் செய்ய நிலமாக்கக் கைக் ....
.....க்கி வைத்த காசு கொண்டு நான்விற்றுக்
கொடுத்த நிலமாவது மே.....குடுத்து இறையிலி
செய்து குடுத்த நிலத்துக்கு கீழ்பாற்கெல்லை விற்கின்ற
நிலத்துக்கு மேற்கும் தென்பாற்கெல்லை பட்டணப்
பெருவழிக்கும் மேல்பார்கெல்லை பனங்குடி
அய்யன்.....த்துக்குக் கிழக்கும்
வடபாற்கெலலை இத்தேவர் திரு நந்தவனம்
சண்டேஸ்வரன் திரு நந்தவனத்துக்கு தெற்கும்

3. இவ்விசைந்த பெருநான்கெல்லையுள் நடுவுபட்ட
புன்செய்குழி 100 இக்குழி நூறும் விற்றுக் குடுத்து
கொள்வதான அன்றூடு நல்காசு 1 இக்காசு ஒன்றும்
இந்நிலத்துக்கு இறையிழிச்சக்கொண்ட அன்றூடு
நல்காசு 4 இக் காசு நாலு . றக்காட்டி
கைச் செலவறக் கொண்டு விலைக்கறவிற்று பொருளுக்
... சண்டேஸ்வர தேவர்க்கும்

பொன் மலைச்சேரி உடையான் வேளான் சூரியனை
விருதராஜ பயங்கர அழுந்தூர் வேளானேன் இந்
நிலத்துக்கு இதுவே விலையாவதாதவும் இதுவே பொருள்
மாவறுதிப் பொருள் சிலவோஹ

4. காட்டக் கடவரல்லாதாராகவும் இக்குழி நூற்றுக்கும்
வதே பெருவரி சிலவரி புன்செய்க் கடமையெல்லாம்
இதேமும்முடி சோழ நல்லூரிலே ஈஞ்சு எறட்டுக்கொண்டு
நானே இறுக்க இத்தேவர்க்கு இக்குழி நூறும் திருநந்
தவனமாக இறையிலியே அனுபவிக்கக் கடவராகவும்
..குடுத்தேன் இவ்வாதி சண்டேஸ்வர
தேவர்க்கு இவ்வழுந்தூர் வேளானேன் ...
லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்ளப் பெறுவாராக
சம்மதித்து இக் காசு நாலும் கைக்கொண்டு இக்
குழிநூறும் விற்று இறையிலி செய்து குடுத்தேன்
இவ்வாதி சண்டேஸ்வர தேவர்க்கு இவ்விருதராய
பயங்கர அழுந்தூர் வேளானேன் இவர்கள்
சொல்ல இப் பிரமாணம் எழுதினேன் ஆனே சாத்
தாங்குடி மத்தியஸ்தன் ஆலவேலி உடை

5. யான் வேளான் சிங்கபிரானேன் இவை என் எழுத்து
இப்படி இசைஞ்சு இக்காசு நாலுங் கொண்டு இக்குழி
நூறும் விற்று இறையிலி செய்து கொடுத்தேன் வேளான்
சூரியனை விருதராய பயங்கர அழுந்தூர் வேளானேன்.
இவை என் எழுத்து இப்படிக்குப் பொன்மலைச்சேரி
உடையான் சூரியன் காடுயிலா .. னெழுத்து
இப்படிக்கு இவை சூரியன் திருவரங்கமுடையான்
எழுத்து இப்படி .. கருக்கங்குடையான்
யா பஞ்சநெதி திருச்சிற்றம்பல முடையான்
எழுத்து. இது அம்பலத்தாடி புற்றிடங்கொண்டான்
சம்னையாதனமைக்கு இவை ஆலை வேலியுடை
யானெழுத்து இப்படி அறிவேன் மாராயன் .. ாறு
டையாநார விசாலையப் பல்லவரயனெழுத்து
இப்படி அறிவேன் காராம்பிச்செட்டு இளையகேசுவ

6. பட்டனெழுத்து இப்படி அறிவேன் காரம்பி செட்டுக்
கேசுவ பட்டனெழுத்து இப்படி அறிவேன் விளமரான

ஜயதரச் சருப்பதி மங்கலத்து ஸ்ரீவைகாநசன்
தித்திர முனித் கோத்ரத்து கணபுரங் கேசுவ
பட்டனேன் எழுத்து இப்படி அறிவேன் சூரலூர்
கிழவன் ராஜேந்திர சோழன் திருச்சிற்றம்பல முடை
யானேன் எழுத்து இப்படி அறிவேன் அக்க
மங்கலமான திருச்சிற்றம்பலபுரத்து வியா

(கல்வெட்டு இத்துடன் முடிவடையாமல் சிதைந்துள்ளது)

திருவாரூர் கல்வெட்டு எண். 30

இடம்:- இரண்டாம் பிரகாரம் (மேற்குப் பிரகாரம்) கீழ் புற சுவரின் தென்மேற்கு மூலையில் உள்ளது.

மன்னன்:- இரண்டாம் குலோத்துங்கன்

காலம்:- 18ஆம் ஆட்சியாண்டான கி பி. 1143-44

செய்தி:- ஆண்டபிள்ளை ஆண்டார் என்பவர் சில ஊர்களில் நிலங்கள் வாங்கி அவற்றை திருவாரூர் மூலஸ்தான முடைய இறைவர்க்காக வரியில்லாத நிலமாக அளித்துள்ளார். இந்த நிலங்கள் பற்றி குறிப்பிடும் போது இந்நிலங்கள் முன்பு முதற் குலோத்துங்கனின் 16 ஆம் ஆட்சியாண்டில் நில அளவை (Land Survey) செய்யப்பட்டது என்பதையும் அறிய முடிகிறது. இந்த நிலங்களின் வருவாயைக் கொண்டு (1) மூன்று நுந்தா விளக் கெரிப்பது, (2) கடுவாய் என்னும் காவிரியின் கிளை நதியில்இருந்து இறைவனுக்கு புனித நீராட்டுக்கு நீர் கொண்டு வருவது, (3) கருனாகர நல்லூரில் உள்ள புற்றிடங் கொண்டான் என்னும் நந்தவனத்தை பேணிக் காத்தல். (4) நடப்பூரில் இருந்து செங் கழுநீர் மாலைகள் கொண்டு வருவதற்கும். (5) பசுமடத்தில் (கோசாலை) உள்ள பசுக்களுக்கு வைக்கோல் அளிப்பதற்காகவும் ஏற்பாடு செய்யப்பட்டமை பற்றி விளக்குகிறது.

இக் கல்வெட்டினால் கி. பி. 1086ல் முதல் குலோத்துங்கன் காலத்தில் நில அளவை நடைபெற்றுள்ளது என்ற தகவலும் வரலாற்றுச் சிறப்புமிக்க குடவாயில் என்னும் ஊருக்கு இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் ''சோழகுலவல்லி சருப்பேதி மங்கலம்'' என்ற பெயர் இருந்தமையும் மட்டும் அறியப்படுகிறது.

கல்வெட்டு (TEXT)

1. ஸ்வஸ்தி ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு
யாண்டு ஐஉ (12) வது திருவாரூர் ருடையார் ஸ்ரீ
மூலஸ்தான முடையார்க்கு தேவதான இறையிலியாய்
இக் கோயில் ஆண்டபிள்ளை ஆண்டார் திரு நுந்தா
விளக்குக்கும் கடுவாய்த் திருமஞ்சன நீர் சுமப்பார்க்
-கும் தேவதானம் நந்திபுரமான கருணாகர நல்லூரில்
இவர் செய்விக்கிற புற்றிடங் கொண்டான் திருநந்தவன
-த்துக்கு ...

2. டிகளுக்கும் செங்கழுநீர் திருப்பள்ளித்தாமம் ஆக்குகைக்குய்
பனையூர்நாட்டு நடப்பூரான உத்தமசோழ மங்கலத்து
இவர் கொண்டுவிட்ட கு — ங்கழு நீர் திருப்பள்ளி
த்தாமம் ஆக்கும் குவளை கிழவனுக்கும் திருகோசாலைச்
-சுரவிகளுக்கு வைக்கோல் கொண்டிடுகைக்கும் இறுப்ப
தாக முன்னுடையாரும் பழம் பேரும் பிரமதேய
-மாய் வருகிற

3. படியும் முன்பு இறை கட்டின படியுந் தவித்து யாண்டு
ஐஉ (12) ஆவது பாசன முதல் தேவதான இறையிலி
இட்ட குலோத்துங்க சோழ வளநாட்டுப்பனை
-யூர் நாட்டு நடப் பூரான உத்தம சோழ மங்கலத்து
பிராமணரில் பாரத்துவாசி மாராயன் இடர் நீக்கி
-ணும் கவுதவன் சிராளன் ஆளுடையானும் உள்ளிட்
-டார் பக்கல் ஆண்டபிள்ளையாண்டார் விலை

4. கொண்டு ஊர் கீழ் இறையிலியாய் வருகிற—
இவ (—)கி (வ)உட்பட யாண்டு ஐஉ (12) ஆவது
பாசன முதல் தேவதான இறையிலியாய் வேறு பிரிந்த
எதிரிலி சோழநல்லூர் நிலம் முக்கால் அரையினால்
நிலவோ பாதி

பழவிறைகாசு கூறஅயனஉகு ணல்
நிச்சயித்த காசு கூறஎயஅற
அரைக்கால் நுஙவிஙன ஆவது
நிச்சயித்த காசு கூறசய அற கஙஙுசவு ரிச்ச

5. யித்த .....,த நிலத்தால் முன்பு நிச்சயித்த
நூலோராங்ங வதெ ஆக காசு கூாளஅலள
.....ஙரு இப்படி தவிரயாண்டு ஐஉ (12)
ஆவது பாசன முதல் வேலி க வுக்கு காசு ாள
ஆக இறைக்கட்டின (.....) (ள) ஞல் பத்தாறு
- க்கி காசு சாளயளாம் இத்தேவர்க்கு
செங்கழுநீர் திருப்பள்ளித் தாமம் ஆக்குதைக்கு
குலோத்துங்க சோழவளநாட்டுப் பணையூர் நாட்டு
நடப்பூரான உத்தம சோழ வளநாட்டுப் பணையூர்
நாட்டு நடப்பூரான உத்தம சோ

6. ழமங்கலத்து சுங்கந்தவிர்த்தருளின தேவர்க்கு
யாண்டு ஐசு (16) ஆவது அளவில் நீங்கலுக்
- குடலாக நீக்கின ஊருணி குளம்மாய் இவ்வூர்
பிராமணர் பக்கல் ஆண்ட பிள்ளையாண்டார்
கொண்டுடைய பிரமாணப் படி நிலமாய் முன்புடை
- யாரும் பழம் பேரும் தவிர்த்து யாண்டு ஐஉ (12)
ஆவது பாசன முதல் இத்தேவர்க்கு இறையிலியாய்க்
கூட்டின நிலம்உபதெசு ஆக எதிரிலி சோழ நல்லூர்
நிலம் தெஅ

7. இதில் சுங்கந் தவித் தருளின தேவர்க்கு யாண்டு
ஐசு (16) ஆவது அளவில் நிக்கலுக்குடலாய்
நீக்கின ஊருணி குளமாய் யாண்டு ஐஉ (12)
ஆவது பாசன முதல் செங்கழுநீர் திருப்பள்ளித்
தாமம் ஆக்குகைக்கு நீங்கின குளமும் கரையும்
கீ தெஉபகா நீக்கி (.....) ஞல்
காணிக்கடன் (ாளாகூயருள) ஞல்
பத்தாருக் கிகாசு சளாய என இதில் உடையார்
ஸ்ரீமூலஸ்தான முடையார் கோயிலில் எரியுன் திருஞு

8. ன் தாவிளக்கு 2-ம் உடையார் வீதிவிடங்கதேவர்
கோயில் எரியும் திரிநுந்தா விளக்கு 1ம்
ஆக திரு நுந்தா விளக்கு கூக்கு ஞள் ஒன்றுக்கு
————ஆகள் கூாகூயிரு (365)க்கு எண்ணெ
உ ————————லாதக————நீக்கி நி உ
லிஞல் (காசு 120) ஞம் கடிவாய்த் திருமஞ்சன

நீர் (——(ப் பார்க்கு கொற்றுக்கும்
இலக்கைக்கும் அடைத்த நிஉ லிஞல்
(120)ளம் புற்றிடங் கொண்டான் திருநந்தவன

9. க்குடிகள் பேர் 4 வர்க்கு அடைத்த (நீஉ) லிஞல்
320 ளம் குவளை கிழவன் ஒருவனுக்கு அடைத்த
(நிலம் வலி காசு 15 ளம்) திருக் கோசாலை சுரவி
—களுக்கு வைக்கோல் திரை 250 —த
நிலம் நாலுமா முக்காணிஞல் காசு 102 ளம் ஆக நிலம்எதை
நாலுமாக்கு காசு 477 ள
குலோத்துங்க சோழ வள நாட்டு செற்றூர் கூற்றத்து
குடவாயிலான சோழ குல வல்லிச் சரு ப்பேதிமங்

10. கலத்து கொழுந்தாக்கும் நிலத்துப் பழம் பெயர்
தவிர்ந்து யாண்டு 12 ஆவது பாசானமுதல் அந்த
ராயம் பாட்டம் உட் — இறையிலியாய்
வேறு பிறித்த நரசிங்க மங்கலம் நிலம் 3 லிஞல்
நிலவோபாதி பழஇறை காசு ங-உ ளஙஙசப
நிச்சயித்த ஓ பாதி காசு ளருயசள அரைக்கால் ஙஙதை
யாண்டு
12 ஆவது பாசன முதல் அந்தராயம் பாட்டம்

11. உட்பட தேவதான இறையிலி இட்டமைக்கு
இந் நிலத்துக்கு தரம் எழுதி புகுதாமையில்
தரமெழுதிப் புகுந்தால் தரவோ பாதியால்
வந்த நெல்லு
ஊரிற் சுருக்கி இந்நெல்லு நிலவோ
பாதிக்கு ஏறுமாகில் இறைக் கூட்டாக்கிக்
கொள்ளுவது.

திருவாரூர் கல்வெட்டு எண்—31

இடம் :- இரண்டாம் பிரகாரம் மேற்கு பிரகாரம் கீழ் புற சுவரில் உள்ளது.

மன்னன் :- இரண்டாம் குலோத்துங்கன்-

காலம் :- 7ஆம் ஆட்சியாண்டு கி.பி. 1140

செய்தி :- ''பூ மன்னு பதுமம்'' என்ற மெய்கீர்த்தியுடன் துவங்கும் இக் கல்வெட்டு மாமன்னன் இரண்டாம் குலோத்துங் கனின் அரசு ஆணையை (Royal order) குறிப்பிடும் வரலாற்று சிறப்பு வாய்ந்த கல்வெட்டாகும். மிக நீண்ட இக் கல்வெட்டு 30 வரிகள் தமிழில் எழுதப்பட்டுள்ளது. பின்பு 30 — 33 வரிகள், வட மொழியில் எழுதப்பட்டுள்ளது. இவ் வடமொழி பகுதி கல்வெட்டு எண், 33 ஆக இந்நூலில் வெளியிடப்பட்டுள்ளது.

மிக நீண்ட இக் கல்வெட்டில் நீள அளவைகளும், அழுதுபடி களின் க்ணக்குகளுமே அதிகம் உள்ளமையால் முழுகல்வெட்டை யும் (TEXT) இங்கு வெளியிடாமல் குறிப்பிட்ட சில பகுதிகளை மட்டுமே தருகிறோம்.

இக் கல்வெட்டின் முற் பகுதியில் சுந்தர மூர்த்தி நாயனார், பரவை நாச்சியார் திருமேனிகள் எடுக்கப் பட்டமையும், அவை களின் பூஜைகளுக்காக நிலம் இம் மன்னனால் அளிக்கப் பட்டதை யும், அவ்வாறு அளிக்கப்பட்ட ஊருக்கு ''அனபாய நல்லூர்' எனப்பெயர் இட்டமையையும் அறிகிறோம்.

இதனை கல்வெட்டு ''கோவி ராஜகேசரி பன்மரான திரிபுவன சக்ரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவருக்கு யாண்டு 7 ஆவது திருவாரூர் உடையார் ஸ்ரீ மூலஸ்தான முடையார் கோயி லில் எழுந்தருளியிருக்கும் ஆளுடைய நம்பிக்கும் பரவை நாச்சியா ருக்கும் அர்சனை போக இறையிலியாக பழம் பொருள் முன்னிறை கட்டின படியுந் தவிர்த்து யாண்டு 7 வது முதல் அனபாய நல்லூரென்னுந்த் திருநாமத்தால் ஒருராய் கூடின கேய மாணிக்க வளநாட்டு மருகல் நாட்டு திருவாதிரை மங்கலம் ஏறின நிலம் உட்பட—'' என்றும்' ''இங்களுட்டு தேவதானமான கங்கை கொண்ட சோழ நல்லூர் நின்றும் வேறு பிறிந்த அரங்கமங்கலம் முன்றுடை யாரும் பழம் பெயரும், முன்னிறை கட்டின படியுந் தவிர்த்து தானவிநோத நல்லூர் என்னும் திருநாமத்தால் அளித்தாகவும் கூறுகிறது.

மேலும் அழுது படிகளாக கறியமுது, உப்பமுது, நெய்யமுது, தயிரமுது ஆடைக்காயமுது, சர்க்கரை அமுது, இலையமுது, பருப் பமுது போன்றவைகளும். இவைகளுக்கு பயன்படும், உப்பு, சர்க்கரை, தேங்காய், சீரகம், நாடன் மஞ்சள், கருவாழைப்பழம்,

மிளகு, பாக்கு, கரும்பு போன்றவிற்றின் அளவு, நிறை இவைகளும் குறிக்கப்பட்டுள்ளது: சந்தனம், அகில், போன்ற வாசனைப் பொருள்களும், சந்தி விளக்குக்கான ஏற்பாடுகளும் குறிக்கப் பட்டுள்ளது.

நெய், மிளகு, சீரகம், பாக்கு பற்று தயிலம் செவிடு சிதாரி எண்ணை கைக்கோற்றுப் பெறுவார்க்கும் அர்சனை பண்ணுவான் ஒருவனுக்கு காசு ( ) திருப்பரிசாரகப் பேர் 3 வர்க்கு ( ) காசு பொற் பண்டாரமும் மடிவனப் பண்டாரமுஞ் செய்வான் ஒருவனுக்கு ( ) காசு திருப்பூமண்டபத்தான் ஒருவனுக்கு திரு நந்தவன முஞ்செய்து எழுந்தருளுதிரு நாளில் திருப்பள்ளித் தொங்கலும் எடுக்கும் பேர் 4 வர்க்கு கோயில் கணக்கனுக்கு காசு ( ) திருமடப்பள்ளி குசவற்க்கு திருப்பரிச்சட்டம் வாட்டும் வண்ணத்தானுக்கு திருமடைப்பள்ளி விறகு கொண்டிருவார் பேர் இரண்டுக்கு புத்தெச்சும் பெருக்கரிசியும் பெறுக்கு வாள் ஒருத்திக்கு சுங்கு காளம் திறுச் சிண்ணம் ஊதுவார்.....'' என கோயில் ஊழியம் செய்தவர்களின் பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது.

''எழுந்தருளும் திருநாள், அமாவாசித்திரு நாள் 12-ம் சங் கிராந்தி திருநாள் 8-ம் விஷுவயனத் திருநாள் 4-ம் கிராணத் திருநாள் இரண்டும் திருமார்கழி திருவாதிரை திருநாள் 1-ம் தைப்பூசத் திருநாள் 1-ம் ஆடிப்பூரத் திருநாள் 1-ம் ஆவணி அவிட்டம் திருநாள் 1-ம் பவித்திரம் சாத்தியருளும் திருநாள் ஐப்பசி சதயத் திருநாளில் எழுந்தருளும் திருநாள் 6-ம் திருபங்குனி உத்திர திருநாளைக்கு திருக்கொடி ஏற்றுக்கு திருமுளை சார்த்த எழுந்தருளும் திருநாள் 1-ம் திருநாளில் எழுந்தருளும் திருநாள் 10-ம் திருவாடித் திருநாளில் எழுந்தருளும் திருநாள் 9-ம் ஆகத் திருநாள் 56க்கு எழுந்தருளுவிக்கும் ஸ்ரீபாதம் தாங்குவார் பேர்'' .....என்று விழாக்களின் பட்டியலும், இறைவருவங்களை சுமந்து வருபவர்களின் பெயர்களாக ,'ஸ்ரீபாதம் தாங்குவார்கள்'' என்று குறிக்கப்பட்டுள்ளது.

அடுத்து ''இக்கோயில் எழுந்தருளியிருக்கும் ஆளுடைய பிள்ளையார்க்கும் திருநாவுக்கரசு தேவர்க்கும் வேண்டும் அர்சனைகளுக்கு இறுப்பதாக அற்சநாபோக இறையிலி இட்ட நிலத்திற்கு'' என்றும் கூறுகின்றது.

வர்லாற்றுச் சிறப்புடைய இக்கல்வெட்டு பெரிய புராணம் எழுதச் செய்த ''அனபாயன்'' என்ற விருதுடையவன் இரண்டாம்

குலத்துங்கனே என்பதை தமிழ் பகுதியில் உள்ள அனபாய நல்லூர் என்ற ஊர் பெயர் இட்டமையாலும், வடமொழி பகுதியில் மன்னன் பெயராக அனபாயன்என இருமுறை கூறப்படுவதனாலும் உணரப்படுகிறது.

திருவாரூர் கல்வெட்டு எண்-32

இடம்:- இரண்டாம் பிரகாரம் மேற்கு பிரகாரம் கீழ்புறச் சுவரில்—கல்வெட்டு எண் 31ன் கீழ் பகுதியில் தொடர்கிறது.

மன்னன்:- இரண்டாம் குலோத்துங்கன்

ஆண்டு:- —

செய்தி:- 31-ம் எண் கல்வெட்டில் இரண்டாம் குலோத்துங்கன் மூவர் முதலிகளுக்கு கோயில் எடுத்து பூஜைகளுக்காக அநபாய நல்லூர் என்னும் ஊரினை அளித்த சிறப்புச் செய்தி தமிழ் எழுத்துக்களில் வடிக்கப்பட்டுள்ளது. அக்கல்வெட்டின் இறுதியில் கிரந்த எழுத்துக்களில் வடமொழியில் இக்கல்வெட்டு தொடர்கிறது. இக்கல்வெட்டும் வரலாற்றுச் சிறப்பு பெற்ற ஒன்று. அநபாயன் என்ற பெயர் இரண்டாம் குலோத்துங்கனை குறிப்பதாகவும், மூன்றாம் குலோத்துங்கனை குறிப்பதாகவும் வரலாற்று ஆசிரியர்களுக்கு கருத்து வேறுபாடு உண்டு. ஆனால் இக்கல்வெட்டு இரண்டாம் குலோத்துங்கனே அநபாயன் என்று வலியுறுத்துகிறது. மேலும் பெரியபுராணம் எழுதத்துவங்கிய பின்பு இம்மாமன்னன் முதன் முதலில் மூவர் முதலிகளைப் போற்றுவதும் இக்கல்வெட்டின் வாயிலாகத்தான்,

கல்வெட்டு (TEXT)

கிரந்தத்தில் (வடமொழியில்) உள்ளதை அப்படியே தமிழில் எழுதப்பட்டுள்ளது.

1: ஸ்ரீமத் பிரஹ்மபூரீச வாகதிபதி ஸ்வ
ஸ்வாமிமித்ர ஸ்சயே தெப்யோ

2. ஹேம ஸபாதி நாத சரணந்நியஸ்த்தோ
ஷ்ந் மஸ்ததஹ்ரா ப்ர்தாத் பூமி

ஹிரண்யகம் ஸரஜ்ஜதாந் தநான் ஸோத்த
•மாந் ஸ்ரீயாரூர் அதிபஸ்ய மூல வஸதெள
தேவோ அநபா யோ நிருபஹ ஸக்சமயா
ுலயே ரகித தர்ம்ம பராநூபால

3. ஸ்ரீ லாந் ந்ரபாம்கிரி கமலாந்சிரஸா
-நமாமி வ்யாக்ராக்ரஹார வரஹேம
ஸபா நடேச பாதாரவிந்த மது துஹோ
அநபாய நாமா ஆளுடைய நம்பி மாதாக்கள்
இசை ஞாநியார் ॥ ஜனனீ பவதோ ஞான
சிவாசார்யகுலே அபவத்
4. சைவே கௌதமகோத்ரேஸ்மின் ஞான்யா
•ரவ்யா கமலாபுரீ

தமிழாக்கம்

பொன்னம்பலத்தில் ஆடுங் கூத்தனே தன் முடி
•யால் வணங்கும் அனபாயன் எனும் இம்மன்னன்
பிரம்மபுரியில் (சீர்காழியில்) உதித்தவரான ஞான
—சம்பந்தர், நாவுக்கரசரான அப்பரடிகள்.
தம்பிரான் தோழரான சுந்தரர் இவர்களுக்கும்

ஆரூர் திருமூலட்டானத்தில் கோயில் கொண்டுள்ள ஆரூரனுக்கும் (ஆரூர் அதிபஸ்ய) நிலம் பொன், வெள்ளி மற்றும் மிக உயரிய பொருள்கள் அனைத்தும் கொடுத்தான்.

அநபாயன் இம்மன்னன் புலியூரான தில்லையம்பதியில் (வியாக்ராக்ரஹார) பொன்னம்பலத்தில் ஆடுகின்ற அந்த நடேச பெருமானின் திருவடிகளாகிய தாமரைமலர்களை மொய்க்கும் வண்டு போன்றவனுவான். ஆளுடைய நம்பியான சுந்தரருடைய தாயாரான இசைஞாநியார் கௌதம கோத்திரத்தில் ஞான சிவாச்சாரியார் என்பவருக்கு மகளாக கமலாபுரி எனும் திருவாரூரில் பிறந்தார்.

திருவாரூர் கல்வெட்டு எண். 33

இடம் :- இரண்டாம் பிரகாரம் (மேற்கு பிரகாரம்) கீழ்புறச் சுவர்.

மன்னன்:- கல்வெட்டில் மன்னன் பெயர் குறிப்பிடப்பட வில்லை.

காலம்:- ஆட்சியாண்டு 13 நாள் 202 என்று குறிக்கப் பட்டிருந்தும் காலம் கணிக்க முடியவில்லை. கல்வெட்டின் எழுத் தமைதியை ஆராயும் போது 12 ஆம் நூற்றாண்டு சோழர் கால சாசனமாகவே உள்ளது.

செய்தி:- சோழ மன்னனின் (?) 13ஆம் ஆட்சியாண்டு 202 ஆம் நாளில் வீதிவிடங்கப் பெருமானின் திருமேனி தேவாசிரிய மண்டபத்திற்கு எழுந்தருள செய்யப்பட்டது. அவ்வமயம் மன்னது ஆணையை உயர் மட்ட அதிகாரியான தியாக வினேத கடிகை மாராயன் கூற முத்திரத்தான் என்பவன் இந்த சாசனத்தை எழுதியுள்ளான்.

இக்கல்வெட்டுச் சாசனத்தை வீதி விடங்க பெருமானே தன் திருவாயால் கூறி பின்பு எழுதியது போன்று வடிக்கப்பட்டுள்ளது.

தேவாசிரிய மண்டபத்தில் வீதிவிடங்கப் பெருமான் எழுந் தருளிய போது பூங்கோயில் நாயகத் தலைக்கோலி என்ற ஆடல் அரசி நடனமாடினாள். இதனை பெருமான் ரசித்துக் கொண்டு இருந்த போது, தன்னுடைய பிரஜையான (நம் மக்கள்)வீரசோழ அனுக்கர் என்பவர் மீது ''வீரனுக்க விஜயம்'' என்ற நூல் பாடின பூங்கோயில் நம்பி என்பவருக்கு வாயற்றூரில் $\frac{1}{2}$ வேலி நிலமும் கூத்தன் மனைகளில் ஒரு மனையும் அவருக்கும் அவருடைய வம்சத் தாருக்கும் காணியாக குடுக்க கட்டளை இட்டதை, உடன் இருந்த ''திருவாய்க் கேள்வி'' என்னும் உயர்மட்ட பதவி வகித்த அதிகாரி யான தியாக வினோத கடிகைமாராயன் கேட்டு, வீதிவிடங்கரின் கட்டளையை சாசனமாக எழுத உத்தரவிட்டமையால் முத்திரத் தான் என்பவன் எழுதியாக இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது.

இக்கல்வெட்டால் விழாக்காலங்களில் வீதிவிடங்கரின் திரு மேனி தேவாசிரிய மண்டபத்திற்கு எழுந்தருளச்செய்யப்படும் என்பதும், அங்கு நடனம் மற்றும் பாடலுடன் கூடிய கூத்து (நாடகம்) முதலியவையும் நடைபெற்றன என அறிய முடிகிறது. 12-ஆம் நூற்றுண்டில் ''வீரனுக்க விஜயம்'' என்ற நூல் இருந்த மையும், கூத்தாடும் பெருமக்களுக்கு நிலமும் மனைகளும் (கூத்தன் மனை) மன்னர்களால் அளிக்கப்பட்டமையும் உணர முடிகிறது.

மன்னர்கள் தாங்கள் அளித்ததாக கூறுமல் இறைவனே அளிப்ப தாக கூறிக்கொள்ளும் பண்பை பிரதி பலிக்கும் கல்வெட்டுக்களில் இதுவும் ஒன்று.

கல்வெட்டு (TEXT)

1. ஸ்வஸ்தி ஸ்ரீ யாண்டு 13 ஆவது நாள்
202 திருவாரூர் உடையார் வீதிவிடங்கதேவர்
தேவாசிரியன் திருக்காவணத்தே எழுந்தருளி
இருந்து பூங்கோயில் நாயகத் தலைக் கோலியை
ஆட்டங்கண்டருள நம் மக்கன் வீரசோழ அனுக்
–கரை வீரணுக்க விஜயம்

2. பாடின பூங்கோயில் நம்பிக்கு பிரமதேயம்
வாயற்றூரில் இறையிலி நிலமான கனகராயன் நில
மென்று பேர் கூவப்பட்ட நிலத்திலே நிலம் அளந்த
-படி நிலம் அரையும் தென்குளக்கரையில்
கூத்தன் மனைகளில் கிழக்கடையமனை 1 இவனு
-க்கும் இவன்

3. வம்சத்தார்க்கும் காணியாக கொடுத்தோமென்று
திருவாய் மொழிந்தருளி தியாகவிநோதக்கடிகை
-மாராயன் கேழ்வியால் கேழ்ப்பித்த படிக்கு
அருளால் இவை முத்திறத்தான் எழுத்து.

திருவாரூர் கல்வெட்டு எண்-34

இடம் :- இரண்டாம் பிரகாரம் (மேற்குப்பிரகாரம்) கீழ்புற -சுவரில் உள்ளது.

மன்னன் :- மூன்றும் குலோத்துங்கன்

காலம் :- ஆட்சியாண்டு 13 – கி. பி 1191.

செய்தி :- ''மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளின குலோத்துங்கதேவர்'' என்ற சிறப்பு மெய் கீர்த்தியால் இக்கல்வெட்டு மூன்றும் குலோத்துங்கனுடையது என்பது உறுதியாகிறது. இக்கல்வெட்டு மன்னனது ஆணையாயினும் மன்னன் திருவாய் மொழிந்ததாக கூறாமல்

ஆரூர் கோயில்கொண்டுள்ள வீதிவிடங்கப் பெருமானே கூறுவதாக அமைந்துள்ளது. (இறைவனே கூறிக்கொள்வதாக அமைந்த பிற கல்வெட்டுக்களும் இக்கோயிலில் உள்ளன)

குலோத்துங்கனின் 13வது ஆட்சியாண்டில் தைப்பூசத் திரு விழா நடைபெற்றது. அவ்வமயம் வீதிவிடங்கதேவரின் திருமேனி (தியாகராஜ சுவாமி) திருவீதியில் உலாவரும்போது சிவனடி யார் களின் விண்ணப்பத்திற்காக வீரவிச்சாதிர பல்லவரையர் இறைவனிடம் தீர்த்த குளத்துக்கு (தற்போதைய கமலாலய குளம்) மேல்கரையில் உள்ள திக்கு நிறைந்த வினாயகருக்கு அர்சனைக்காகவும், திருவமுதுக்காகவும் நாள் ஒன்றுக்கு குறுணி அரிசி வேண்டும் என விண்ணப்பம் செய்தார். 'திருவாய்க்கேள்வி' பதவி (அரசனது ஆணையை கேட்டு உடன் உத்தரவு அனுப்பும் அதிகாரி) வகித்த தமிழதரயன் என்பவனது விண்ணப்பத்தால் சிவனடியார் கூட்டத் தலைவரான மான் ஏந்துகையன் என்பவரையும், கோயில் நிர்வாக அதிகாரியான வீரவிச்சாதிர பல்லவரையனையும் இதற்கான ஏற்பாடுகளை செய்யுங்கள் என்று வீதிவிடங்கப் பெருமான் திருஉளம் அருளியதால் விச்சாதிர பல்லவரையன் இறைவன பெயரில் நிலங்கள் வி லை க் கு வாங்கியதாக இக் கல்வெட்டு கூறுகிறது. குலோத்துங்கனிடம் வீதிவிடங்கப் பெருமான் பவனி வரும் திருவிழாவின்போது சிவனடியார்கள் விநாயகர் கோவில் பற்றி முறையீடு செய்ய அதற்கென உடனே மன்னன் நிலம் வாங்க உத்தரவிட்டான். தான் உத்தரவிட்டதை பெருமையாக கூறிக்கொள்ளாத இப் பெருமன்னன் இறைவனே கூறுவதாக பணிவுடன் கூறிக்கொள்ளும் வரலாற்றுச் சிறப்பு இக்கல்வெட்டிற்கு உண்டு.

பல்லவரையர் விலையாகக் கொண்ட நிலங்களின் விபரம்:-

திருவாரூர் கூற்றத்து பிரமதேயமான புதுக்குடி ஊர் மக்களிடம் இருந்து நான்கு மா நிலமும் பனங்குடி மக்களிடம் இருந்து நான்கு மா நிலமும், ஆக இந்த 8 மா நிலமும் ஊர் சபைக்கு கட்டும் வரியான 'அந்தராயம்' என்னும் வரியும் அரசுக்கு (மன்னனுக்கு) கட்டும் வரியும் இல்லாத வகையில் விலைக்கு பெற்றுக் கொண்டு இத்துடன் தியாக விநோத தச்ச சதுர்வேதி மங்கலம் என்னும் ஊரினர் பிள்ளையாரின் திருவடிகளில் நீர் வார்த்துக் கொடுத்த நிலம் இரண்டு மாவும் சேர்த்து அரைவேலி (10 மா) நிலத்தை மகாவிரதி பாரதாயன் திருசிற்றம்பல

முடையான் என்பவன் பேரில் பரிசாரகக் காணியாக பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

இதன் வருமானத்திலிருந்து தன் பிள்ளையான விஜயகப் பெருமானுக்கு நாள் ஒன்றுக்கு குறுணி நாழுழியாக சோறு அமுது படைக்க வேண்டும் என்றும், தன் பிள்ளை (விஜயகப் பெருமான்) பேரில் உள்ள 70 குழி நிலத்தில் கோயில் மேற்பார்வையாளனால் வளர்க்கப்பட்ட தென்னை, மா மரங்களின் வருமானத்தினால் திரு விளக்கு எரிக்கப்படவேண்டும் என்று வீதிவிடங்கப் பெருமானாகிய நான் கூறுகிறேன், மேலும் இதனை இப்படியே கல்லில் வெட்டிக் கொள்க என்று மான் ஏந்துகையாளனையும், பல்லவரையனையும் கேட்டுக் கொண்டுள்ளேன் — என இக்கல்வெட்டு விரித்துரைக் கிறது.

கல்வெட்டு (TEXT)

1. ஸ்வஸ்தி ஸ்ரீ ஸ்ரீ திருபுவனச் சக்கரவர்த்திகள்
மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளின
ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு 13வது
உடையார் வீதிவிடங்கப் பெருமான் தைப்பூசத் திருநாள்
ஆட்டத்து வெளியில் திரு உலாச் செய்தருளா நிற்க
ஸ்ரீ மாயேசுரர் விண்ணப்பஞ் செய்தபடி பூங்
-குடையான் வீர விச்சாத்திரப் பல்லவரையர்
தீர்த்த குளத்துக்கு மேல் கரையில் எழுன் தருளு
-வித்த திக்கு நிறைந்த விஜயகப் பிள்ளையார்க்கு
அர்சனைக்கும் திரு அமது படிக்கும் ஞள்

2. ஒன்றுக்குக் குறுணி நாழுழி அரிசி பெறவேணு
மென்று விண்ணப்பஞ் செய்யத் திருவாக் கேழ்வி
தமிழதரயன் விண்ணப்பத்தால் சிமாயேசுர
-க் கண் காணி மாநேன்துகையாளனையும்
சிகாரிய வீர விச்சாதிரப் பல்லவரையனையும்
நிவன்தம் நிச்சயித்து குடுங்களென்று
திரு உளமாய் அருள பூங்குடையார் வீரவிச்
-சாதிரப் பல்லவரையர் திருநாமத்துக காணியாக்
விலைகொண்டேன் கேய மாணிக்க வளநாட்டுத்
திருவாரூர் கூற்றத்துப் பிரமதேசம் புதுக்குடி
ஊரவர்

3. பக்கலை நாலு மாநிலமும் இன்நாட்டுப் பனங்
குடி ஊரவர் பக்கலை நாலுமாநிலமும் ஆக
நிலம் எட்டுமாவும் அந்தராயங் கொள்ளா ஊர்
கீழ் இறையிலியாக விலை கொண்டேடன் என்றும்
தியாக விநோத தச்ச சதுர்பேதி மங்கலத் தார்
அந்தராயங் கொள்ளா ஊர் கீழ் இறையிலியாகப்
பிள்ளையார் சீ பாதத்திலே நீர் வாற்றது விட்ட
நிலம் இரண்டு மா ஆக நிலம் அரையும்
இக் கோயில் பரிசாதிருகக் காணி உடைய மகா
விரதி பார தாயன்

4. ச் சிற்றம்பல முடையான் திரு முத்தியாழ்வான்
பேரிலே அந்தராயங் கொள்ளா தரமிலி ஊர்
கீழ் இறையிலியாகப் பிரமாணம் பண்ணிக்
குடுத்தார்களென்று விண்ணப்ப பஞ்செய்ய இப்படி
இவ்வூரவர் பக்கலை ஊர் கீழ இறையிலி பெற்ற படிக்கும்
இப்படி நிவந்தமுங் கட்டின படிக்கும் நம் பிள்ளைக்கு
இரண்டு திருப்பரிசாரம் நாட்டின பேர் இரண்டுக்கும்
னுள் ஒன்றுக்கு சோறு குருணி நாழியாக வந்த
சோறு நிற்பதாகவும் நம்பிள்ளை இருப்பும் சிகார
-மும் குழி எழுபதிலும் இக்கோயில் பரிகாரி
ஆக்கின தெங்கு உள்ளிட்ட மா விருக்ஷம்
திருவிளக்கு உடலாக்க கொடுத்தோம் இப்படி
கல்வெட்டிக் குடுக்க வென்று சிமாயேசுர கன்
காணி மானேன்து கையனையும் சிகாரியம்
வீரவிச்சாதிரப் பல்லவரையனையும் திருவிளமாய்
அருளினூர்.

திருவாரூர் கல்வெட்டு எண் : 35

இடம்:- இரண்டாம் பிரகாரம் (மேற்கு பிரகாரம்) கிழ்புற சுவரின் உள்ளது.

மன்னன்:- இரண்டாம் குலோத்துங்கன்

காலம்:- 15 ஆம் ஆட்சியாண்டு கி. பி. 1147-48

செய்தி:- இரண்டாம் குலோத்துங்கனுடைய மெய்கீர்த்தியான ''பூமன்னு பதுமம்'' எனத் தொடங்கும் மெய் கீர்த்தி பகுதியும், மன்னனது ஆண்டு மட்டும் காணப்படுகிறது, கல்லெட்டு முற்றுப் பெறவில்லை.

கல்லெட்டு (TEXT)

1. ஸ்வஸ்திஸ்ரீ பூ மன்னு பதுமம் பூத்த வேமுலகுந்
தா முன் செய்தவத்தால் பருதி வழித்தோன்றி நெடுமரய்
இவனெனைச் சுடர்முடி சூடி இருநில மகளோ ரிமை
யிற் புணர்ந்து திருமகள் பணை முலைச் செயஞ்சாந்
தளைத்து பருமணி மார்வம் பனிவரை நிகற்ப செய
மகள் செஞ்சந்தன் சந்தனச் சுவட்டால் புயமிரு
கயிலைப் பொருப்பிட்டனத் தோன்றி திருமகள் -தானுமெங்
கோமகள் செவ்வாய் பவழச் சேயொளி படைத்தனன்
யானெனைத் தவளநன் நிறன் தனித் தொடையே னெனப்
புகழ்மகள் சிந்தை மகிழ தன் நாளினும் ஒரு குடை
நிலவும் பொறுபடைத் திகரி வெயிலுங் கருங்

2. கலியிருளினைத் துறப்ப நீடு பல்லூழி ஏழ் கடற் புறத்தி
னுங் கோடாச் செந்தனிக் கோலினி துலாவ மீனமுஞ்
சிலையும் சிந்தைத்து வானுயர் பொன் நெடு மேருவிற்
புலி வீற்றிருப்ப உம்பாயானை ஒரெட்டினுக்குந்
தம்பமென்னத் தனித்தனி திசை தோறும் விசைய
ஸ்தம்பம் நிற்ப பசிபகையானிதி.....து நீங்கி
மன்னுயிர் தழைப்ப மனுவாறு விளங்க மாதவர்
தவமும் மங்கையர் கற்பும் ஆதியந்தனர் ஆகுதிக்
கனலும் எழுகொண்டல் வீசு தன் புனலும்
மேதினி வளமும், சாதி ஒழுக்கமும், நீதியறமும்
பிறழாது நிகழப் பாவும் பழனப் பரப்பும் பனைக்
கைமாவும் அல்லது வந்தோ அறப்படுதல் கனவிலுங்
கண்டார் கரிதென வருந்திச் சு

2. னமிலும் பல்வேறு புள்ளினு மல்லது சிறையெனப்
படுத்தலின்றி நிறைபெருஞ் செல்வமோடு அவனி
வாழப் பல்லவர் தெலுங்கர் வாளுவர் கலிங்கர்
கோசலர் கன்னரர் கடாரர் சிங்கணர் தென்னர்
சேதிகர், திரிசுத்தர் வங்கரங்கர், வாத்திவர்

மத்திரர், கங்கரர், சோனகர் கைய்கயார்
ஈனரென்றறை கழல்வேந்தருமெல்லா அரைசரும்
முறைமையில் வரிந்த திறைகொணர்ந்திறைஞ்ச
இமயப் பொற் கோட்டிமையப் பாவையும் சிவனருள்
பெற்றுப் புவனமுழுதுடையாளிவன் திருஉள்ளத்
தருள் முழுதுடையாளென உடனிருப்ப
அம் பொன் மலர்கொடி செம்பியன் கிழானடியுடன்
திரு மணி மார்வத்தருளுடனிருப்ப செம்பொன்
வீரசிம் காசனத்துப் புவன முழுதுடையாளொடும்
வீற்றிருந்தருளிய கோவி ராஜ கேசரி பற்மரான
திரி புவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க
சோழ தேவர்க்கு யாண்டு 15 அவது.....

இக்கல்வெட்டு முற்று பெறவில்லை

திருவாரூர் கல்வெட்டு எண்-36

இடம் :- இரண்டாம் பிரகாரம் (மேற்கு பிரகாரம்) கீழ் புறச் சுவர்.

மன்னன் :- இராசராசன் ||

காலம் :- மன்னனது காலம் கி பி. 1146 - 1163 கல்வெட்டு சிதைந்துள்ளமையால் காலம் அறிய இயலவில்லை.

செய்தி :- இரண்டாம் இராஜராஜனின் மெய்கீர்த்தியான ''பூ மருவி பொழிலேழும்'' எனத் தொடங்கும் மெய்கீர்த்தி பகுதி மட்டும் காணப்படுகிறது. கல்வெட்டு சிதைந்தமையால் மற்ற செய்திகள் அறிய முடியவில்லை.

இம் மெய்கீர்த்தி பகுதியில் மன்னன் தன் நாட்டில் உள்ள தந்தை இல்லாதவர்களுக்கெல்லாம் தானே தந்தை என்றும்; தாயில்லாதவர்களுக்கெல்லாம் தானே தாயென்றும்; மைந்தர் இல்லாதவர்களுக்கெல்லாம் தானே புதல்வன் என்று கூறிக்கொள்ளும் மாண்பைக் காணலாம்.

கல்வெட்டு (TEXT)

1. பூமருவியபொழிலேழும் பொருப்பேழும் பூனை
நித்திலத்தாம நெடுங்குடை பொழிந்த தவள வெண்

-ணிலாக்குளிர் பொதியச் சுடர் சக்கரவெற்பின்னதன்
நடைச் சக்கரம் வெயிலெறிப்பச் சினபுலியுஞ் செங்கோலும்
அனைத்துயிர்க்கும் காவல் பூணப் ப———ன
மிசைப் பரஞ்சோதி பாற்கடல் நின்றெழுந்தருளி
மணி நெடுமுடி சுவித்தானென மண்மடந்தையைக்
கைப் பிடித்து மலர் மடந்தை மணியார வரைமார்
-விற் குடிவாழ புலமடந்தை கொழுனனுகிப் போர்
மடந்தையை மணம் புணர்ந்து பருதி முதற்
குலம் விளங்கச் சுருதிகள் ———

2. .....வரருள் வாய்ப்ப விழுந்த அரி சமயத்தை
அ..ள் எடுத்தாதியுகங் கொழுந்துவிட்டுத் தழைத்
தோங்கக் கோமாதறங் குளிர் தூங்க மாரி வாய்த்து
வளஞ்சுரக்கத் தாரணியோர் பிணி நீங்க நல்லோர்
—தங் கற்புயர நான் மறையோர் துறை வளர எல்லாருந்
தனித்தனியே வாழ்ந்தனம் யாமென மகிழ்ந்து
ஒருவருடன் ஒருவர்க்கும் ஒன்றினுடன் ஒன்றுக்
-கு வருபகை யகத்தின்றி விழைந்து காதலுடன்
சேர இந்திரன் முதல் திசா பாலர் என் மருமொறு
வடிவாகி வந்தபடியென நின்று மனுவாணை
தனி நடாத்திய.....பிணிப்புண்பன
வடி மணிச் சிலம்பே அரற்றுவன
சேலோடையே கலக்குண்பன.....

3. தேமாவே வடுப் படுவன மாமலரே கடிய
வாயின வருபுனலே சிறைப்படுவன காவுகளே
கொடிய வாயின, கள்ளுண்பன வண்டுகளே, பொய்
- யுடையன வனவேயே போர்மலிவன எழுகழனியே
மையுடையன நெடுவரையே மருளுடையன இன
மான்களே கயற்குலமே பிறழ்ந்தொழுகும் கைத்
தாயரே கடிந்தொறுப்பர் இயற் புலவரே பொருள்
வேட்பர் இசைப் பாணரே கூடஞ் செய்வார் என்று
கூறி இவன் காக்குந் திருநாட்டில் இயல் இதுவென
நின்று காவல் நெறி பூண்டு நெறியல்லது நினையாது
தந்தையில்லார்க்குத் தந்தையாகியும் தாயில்லோர்க்குத்
தாயர்ராகியும் மைந்தரில்லோர்க்கு மைந்தர்ராகியும்

4. மன்னுயிர்கட்கு உயிராகியும் விழுமிபெற்ற
புயனென்னவும் மெய்படைற்ற அருளென்னவும்

ஓர் பொருளென்னவும் முகம் பெற்ற பனுவல் என்னவும்
எத்துறைக்கும் இறைவனென்னவும்
அறஞ் செய் ——

திருவாரூர் கல்வெட்டு எண் 37

இடம்:- இரண்டாம் பிரகாரம் (மேற்கு பிரகாரம்) கீழ்புறச் சுவர்.

மன்னன்:- கல்வெட்டில் மன்னன் பெயர் குறிப்பிடப்பட வில்லை.

காலம்:- இரண்டாம் ஆட்சியாண்டும் 9வது நாளும் குறிப் பிடப்பட்டிருந்தாலும் மன்னன் பெயர் இல்லாமையால் ஆண்டு குறிப்பிட இயலவில்லை. கல்வெட்டின் எழுத்தமைதி கி.பி. 12-ம் நூற்றாண்டெழுத்தமைதியாகவே உள்ளது.

செய்தி:- பிராண உபகாரி சோழேந்திர சிங்க வீரத்தியாகத் தரையன் என்பவனுக்கு காணியாகவும் ஜீவிதமாகவும், மருத்து வன் ஒருவனிடமிருந்து வாங்கி அளிக்கப்பட்ட நிலம் பற்றி குறிப் பிடுகிறது. இந்த அறக்கொடையும் சோழதுங்க கடிகை மாராயன் விண்ணப்பம் செய்யவே இறைவன் அளித்ததாக கூறப் பட்டுள்ளது. உண்மையிலேயே இறைவன் பெயரால் மன்னன் அளித்தாலும் மன்னனது ஆணையான திருமுகம் எழுதியது ''திருமந்திர ஓலை'' என்ற உயர் பதவி வகித்த தொழுவூருடை யான் என்பவனாவான்.

கல்வெட்டு (TEXT)

1. ஸ்வஸ்திஸ்ரீ ।। யத்ஜசு (த்) த்ரய நிர்மா(ண)
தராண நிர்வாண கரணம் । திதிதம்
ஸாஸநம் சம்போ। ஸ்ரீபூர்வாரீரவாஸிந:
பிராண உபகாரி சாரைகு . . . . ஞன்
சோழேந்திரசிங்க வீர தியாகத்தரையனுக்கு
நம் அகம்படியாரில் மருத்துவற்கு

2. . . . .யான குடியில் காணியும் ஜீவிதமுமான நிலமாய்
மருத்துவன் பக்கல் தான் விலை கொண்டுடைய

பிரமாணப்படி நில முக்காலும் தனக்குந் தன்வார்க்கத்
தார்க்கும் காணியும் ஜீவிதமுமாகத் தந்தோம்
இன்னில மிரண்டாவது முதல்

3 .....கொண்டு அனுபவிக்கவென்று சோழதுங்க
கடிக மாராயன் விண்ணப்பத்தால் இரண்டாவது நாள்
ஒண்பதிலுல் பிரசாதஞ் செய்தருளத் திருமந்திர
—வோலே தொழுஞருடையான் எழுதின திருமுகப்படி.

திருவாரூர் கல்வெட்டு எண். 38

இடம் :- இரண்டாம் பிரகாரம் (மேற்கு பிரகாரம்) கீழ் புற சுவரில் உள்ளது.

மன்னன் :- இரண்டாம் குலோத்துங்கன்

காலம் :- 10ஆம் ஆட்சியாண்டு — கி.பி. 1142 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30ந் தேதி எழுதப்பட்டதாகும்.

செய்தி :- இரண்டாம் குலோத்துங்கனின் 10ஆம் ஆட்சி யாண்டில் கேய மாணிக்க வளநாட்டு திருவாரூர் கூற்றத்து பிரம தேய கிராமமான ராஜராஜபிரம்ம மங்கலத்து ஊர்ச் சனபையினர் திருவாரூர் திருக்கோயிலில் உள்ள தேவாசிரிய மண்டபத்தில் (தேவாசிரியன் திருகாவணம்) கூடினர். இவர்கள், வாயற்றூரில் உள்ள குலோத்துங்க சோழன் பெருங் குளத்திலிருந்து தினம் திருவாரூர் இறைவனுக்காக செங்கழுநீர் பூமாலைகள் அளித்து வரும் 12 தவசியர்களுக்காக $3\frac{1}{2}$ வேலி நிலத்தை விலைக்கு அளித் தனர். இதற்காக $157\frac{1}{2}$ அன்றாடு நற்காசுகளை விலையாகப் பெற்ற னர். தேவாசிரிய மண்டபத்தில் எழுதப்பட்ட இந்த சாசனம் ஆதிசண்டேஸ்வரர் பெயருக்கு வரி இல்லாத இறையிலி நிலமாக வும், குடி நீக்கா காணியாகவும் (இறைவனுக்கு அளிக்கப்பட்ட நிலத்தில் யாரேனும் குடியிருந்தால் அவை நீங்கலாக உள்ள நிலம் மட்டுமே) சாசனம் செய்து கொடுத்தனர்.

இதுமட்டுமின்றி ''திருநாவுக்கரசு'' என்று அழைக்கப்பட்ட நந்தவனம் ஒன்றின் பராமரிப்புக்காகவும் 67 அன்றாடு நற்காசு களைப் பெற்றுக் கொண்டு இறையிலியாகவும், குடி நீக்கா காணியா கவும் $1\frac{1}{2}$ வேலி நிலத்தை ஆதிசண்டேஸ்வரருக்கு சாசனம் செய்து கொடுத்தனர்.

217½ காசுகளுக்கு விற்ற இந்த 5 வேலி நிலத்தில் உள்ள மே நோக்கின மரங்கள், கீழ் நோக்கிய கிணறு உட்பட விட்டுக்கொடுத் தனர். இவ்வாறு விற்ற 5 வேலி நிலத்தின் சாகுபடியையும் இவர் களே ஏற்றுக்கொண்டனர். இதன்படி வேலி ஒன்றுக்கு இரண்டு போகங்களிலுமாக (கார்பாதி—பாசனம் பாதி) மொத்தம் 120 கலம் வீதம் நெல் அளக்கவும் ஒப்புக்கொண்டு, களத்திலே அளப் போம் என்றும்; பின்பு ஊர்சபைக்கு அளிக்க வேண்டிய நெல்மற்ற ஊர் செலவுகளை ஊரிலியே எடுத்துக்கொண்டு; களத்திலே மற்ற வகையில் வரும் நெல்லையும் (கலத்துவாய்—ஐஞ்ஞாழி நெல்) சுமைக்கூலிபோக உள்ள நெல்லையும் திருவாரூர் திருக்கோயிலுக்கே கொண்டு வந்து முதல் போகத்தில் (கார்பாதி) பாதியாகவும் இரண்டாம் போகத்தில் (பாசனம்) பாதியாகவும் கொடுப்பதாக சாசனத்தில் குறிப்பிட்டுள்ளனர். மேலும் அரசாங்கத்துக்கு கட்ட வேண்டியவரிகளையும் தாங்களே செலுத்துவதாகவும் சம்மதித்து இந்த சாசனத்தை கல்லிலும் செம்பிலும் (செப்பு தகட்டிலும்) வெட்டுவித்தனர் என்பது அறியப்படுகிறது.

இக்கல்வெட்டால் தேவாசிரிய மண்டபம் சபையினர் கூடும் போது மன்றமாக இருந்ததோடு சாசனங்கள் பதிவு செய்யப்படும் ஆவணமாகவும் இருந்தமை அறியப்படுகிறது. மேலும் குலோத் துங்க சோழ வாய்க்கால், குலோத்துங்க சோழன் பெருங்குளம், என்ற பெயர்கள் நடைமுறையில் இருந்தமையும் உணரமுடிகிறது. திருநாவுக்கரசர் பெயரால் நந்தவனம், திருவாரூர் இறைவனுக்கு செங்கழுநீர் மாலையை அணிவித்தல், சாசனங்கள் இறைவனுக்காக அளிக்கப்பட்ட நிலமாயினும் அவை ஆதி சண்டேஸ்வரர் பெயரில் ஆவணத்தில் பதிவு செய்யப்படுதல், 1 வேலி நிலத்திற்கு இரண்டு போகங்களிலும் 120 கலம் நெல் சாகுபடிதாரரால் அளக்கப் பட்டது போன்ற சிறப்புச் செய்திகளையும் காண முடிகிறது. நன் செய் பயிரான நெல் கார் காலத்தில் (மழை) ஒருமுறையும் காவிரி பாசனத்தால் ஒருமுறையும் ஆக இரண்டு போகங்கள் பயிரிடப் பட்டமையும், பலவகைப்பட்ட வரிகளை (அந்தராயம், பெருவரி, சிலவரி) எவ்வகையில் செலுத்தினர் என்பதும் அறியமுடிகிறது.

குலோத்துங்கனின் 10ஆம் ஆட்சியாண்டு இக் கல்வெட்டின் மெய்கீர்த்தியில்

''அருள்புரி சிமையப் பொற்கோட்டிமையப் பாவையும் சிவனும் போல்'' தானும் தன் தேவியும் செம்பொன் வீர சிங்காதனத்தில்

இருப்பதாகக் கூறிக் கொள்கிறான். பின்பு தான் சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணம் இயற்றப்படுகிறது. சிவனடியார்களைப் பற்றியும் - சிவபெருமானின் திருவருள் பெருமையையும் முற்றிலுமாக உணருகிறான், அவன் மனம் சிவனைப் போல் தான் என்ற அகந்தை உணர்வு நீங்கி தன்னை சிவனருள் பெற்ற அடியவனாகவே உணர்கிறான். இதன் பிரதிபலிப்பை இத்திருக் கோயிலிலேயே உள்ள அவனது 15ஆம் ஆண்டு கல்வெட்டில் காணலாம். அதில்

''இமையப் பொற்கோட்டு இமையப் பாவையும் சிவனருள் பெற்று'' *தன் தேவியுடன் வீரசிம்மாசனத்தில் வீற்றிருந்ததாக கூறிக் கொள்கிறான். இத்தகைய சிறப்பு பெற்ற இரண்டு கல் வெட்டுக்களையும் இத்திருக் கோயிலில் இரண்டாம் பிரகாரத்தி லேயே காணலாம். மேலும் வடமொழி கல்வெட்டுப் பகுதியில் தான் நடராசப் பெருமானின் பாதகமலங்களை மொய்க்கும் வண் டாக கூறிக் கொள்கிறான், இவை அனைத்தும் மன நிலையின் வேறு பாடுகளை சிறப்புறக் காட்டுகின்றன.

கல்வெட்டு (TEXT)

1. ஸ்வஸ்திஸ்ரீ பூமன்னு பதுமம் பூத்த வேழுலகு
நந் தாமுன் செய்தவத்தால் பருதி வழித் தோன்றி
நெடு மாவலிவனெனச் சுடர் முடி சூடி இரு நிலமகளை
உரிமையிற் புணர்ந்து திருமகள் பனைமுலைச் செந்
சாந்தனைந்து பருமணி மார்வம் பனிவரை நிகர்ப்ப
ஜயமகள் செழுந்தளச் சந்தனச் சுவட்டால்
புயமிரு கயிலைப் பொருப்பெனத் தோன்றி நாமகள்
தானும் எங்கோமகள் செவ்வாய்ப் பவளச் சே யொளி
-ப் படைத் தனியானெனத் தவள நன்னிறந் தனித்
தொடையேனெனைப் புகழ் மகள் சிந்தை மகிழ
நாளிலும் ஒரு குடை

2. நிலவும் பொருபடை திகரி வெயிலுங் கருங்கலி
இருளினைத் துரப்ப நீடு பல்லூழி எழுகடற் புறத்தி
-னுங் கோடாச் செந்தனிக் கோலினிதுலாவ
மீனமுஞ் சிலையுந் சிதைத்து வானுயர் பொன்னேடு
மேருவில் புலி வீற்றிருப்ப உம்பரி யானை ஒரெட்டினுக்

*தி. க. எண் 38.

கும் தம்பமென்னத் தனித்தனி திசை தோறும்
ஸிசைய ஸ்தம்பம் நிற்பப் பசி பகையானது தீது
நீங்க மன்னுயிர் தழைப்ப மனு வாறு விளங்க
மாதவர் தவமும் மங்கையுர் சுற்பும் ஆதி அந்தணர்
ஆகுதி கனலும் மீதெழு கொஞ்டல் ஸீசுதன்
புனலு மேதினி வளமுஞ் சாதி ஒழுக்க

3. மும் நீதி அறமும் பிறழாது நிகழப்பாவும் பழனப்
பரப்பும் பணைக்கைமாவு மல்லது வன்றஞப்
படுதல் கனவிலுங் காண்டற்கரிதென வருந்திப்
புனடையினும் பல்வேறு புள்ளினு மல்லது சிறையெனப்
படுதலின்று நிறைபெருஞ் செல்வமோடு அவணி
வாழப் பல்லவர் தெலுங்கர் ழாளவர் கலிங்கர்
சேரளர் கன்னடர்
சாடரர் தென்னவர் சிங்களர் கொங்கணர் சேதிகர்
திரிகத்தர் வங்கரங்கர் வத்தவர் மத்திரர்
கங்கர் சோனகர் கைகையர் ஜுனரென்றறைகழல்
வேந்தரும் எல்லா வரைசரும் முறைமையில் இவரிடம்
திறை கொணர்ந்திறைஞ்சவும் பேரிளம் பொ

4. ற்கொடி செம்பியன் கிழாணடி ஒருமருங்குடனமர்ந்
-திருப்ப அருள்புரி சிமையப் பொற் கோட்டிமைய
ப்பாவையுந் சிவனும்போல் உலக முழுதுடையா
ளென உடனிருப்பச் செம் பொன் வீர சிங்காதனத்து
புவன முழுதுடையாளொடும் வீற்றிருந்தருளிய
கோவிராஜ கேசரி பன்மரான திரி புவனச் சக்ர
-வர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழதேவர்க்கு
யாண்டு 10 ஆவது தனு நாயற்று பூர்வபட்சத்து
ஏகாதெசியும் திங்கட் கிழமையும் பெற்ற அசுவதி
நாள் கேய மாணிக்க வளநாட்டுத் திருவாரூர்
கூற்றத்து பிரமதேயம் ராஜராஜ

5. பிரமமங்கலத்து சபைக்கு சமைந்த கூட்டப் பெரு
மக்கள் வாசிஷ்டன் பரமேசுவரன் பெரிய நம்பிபட்ட
-னும் பாரத்துவாஜி கங்காதரன் பரமேஸ்வர பட்டனும்
கௌதமன் பரஞ்சோதி நஞ்சுண்டான் பட்டனும்
பாரத்துவாஜி தற்பரம் பொருள் இரவி பிரான் பட்டனும்
பாராசிரியன் பசுபதி தட்சிணமூர்த்தி பட்டனும் காசிபன்
ஆண்ட நாயகன் குனிக்கும் பிரான் பட்டனும் உள்ளிட்ட

இவ்வனைவோம் தேவாசிரியந் திருக்காவணத்தே
கூட்டம் குறைவற கூடியிருந்து குடி நீக்கா காணியாக
நிலவிலையாவணம் உடையார் ஸ்ரீ மூலஸ்தானமுடை
-யார் ஆதி சண்டேசுவரதே

6. வர்க்கு இறையிலி செய்து குடுத்த நிலமாவது
பவித்திரமாணிக்கவதிக்கு கிழக்கு ராஜராஜ
வாய்க் காலுக்கு தெற்கு உகூ சதுரத்து
மேற்கடைய கௌதமன் அடிகள் ஆளுடையான்பட்டன்
¼ காலும் இங்கே கூ ஞ் சதுரத்து கிழக்கடைய
தீர்க்க முளி அடிகள் திருசிற்றம்பலமுடையான் பட்டன்
½ அரையும் இங்கே நாலாஞ் சதுரத்து கிழக்கடை
-ய வாசவன் பரமேஸ்வரன் பெரியநம்பி பட்டன்
¼ காலும் இங்கே (.....) சதுரத்து மேற்கடைய
நிலம் அரை நீ

7. -க்கி இதன் கிழக்கு பாராசிரியன் பசுபதி தெட்சிணை
மூர்த்தி பட்டன் ¼ காலும் இதன் கிழக்கு பார்த்தி
-வன் குமரீஸ்வரமீதிருப்பான் தோளுடையான்
¼ காலும் இங்கே 4 ஞ் சதுரத்து பாராசிரியன்
பசுபதி தெட்சிணை மூர்த்தி பட்டன் நிலம் அரையில்
குளம் நிலம் ஒரு மா நீக்கி (.....) ஒண்பது
மாவும் இதன் கிழக்கு பரத்துவாஜி தற்பரம்
பொருள் கணநாதன் ¼ காலும் இவ்வதிக்கு
கிழக்கு குலாத்துங்க சோழ வாய்காலுக்கு தெற்கு
(.....) சதுரத்து மேற்கடைய கௌதமன் அடிகள்
சிவதேவபட்டன் ¼ காலும் இதன் கிழக்கு
கௌதமன் அடிகள் திருவெண்காடு

8. பட்டன் ¼ காலும் இங்கே 3 ஞ் சதுரத்து
மேற்கடைய பாரத்துவாஜி தற்பரம் பொருள் இரவி
பிரான் பட்டன் (.....) ஆறுமா ஆக 3½ இன்னில
மூன்றறையும் உடையார் திருவாரூருடையார்
ஸ்ரீ மூலஸ்தான முடையார்க்கு செங்கழுநீர் திருப்பள்ளி
-த்தாமம் ஆக்கும் வாயற்றார் குலோத்துங்க
சோழன் பெருங்குளத்து செங்கழுநீர் திருப்பள்ளித்
தாமம் ஆக்கும் தவசியர் பன்னிருவர்க்கு
கோற்றுக்கு இறுப்பதாக இத்தேவர்

ஆதிசண்டேஸ்வர தேவர்க்கு நாங்கள் இறையிலியாக
விற்றுக் குடுத்துக் கொள்வதான எம்மிலிசைந்த
விலைபொருள் அன்ருடு நற்காசு முாத்தால் காசு
இரண்டே காலாக காசு

9. 157 $\frac{1}{2}$ இக் காசு நூற்றம்பத்தேழரையும்
ஆவணக் களியே காட்டேற்றி கைச் செலவற
க்கு கொண்டு குடி நீக்கா இறையிலியாக செய்து
கொடுத்தோம் இன்னம் நாங்கள் இவ்வூர் ஆதி
சண்டேஸ்வர தேவர்க்கு விற்றுக் கொடுத்த நிலமாவது
திருவாருருடையார் ஸ்ரீ மூலஸ்தான முடையார்
திருநந்தவனம் திருமாளிகைக்கு தெற்கடைய
திருநாவுக் கரசென்று பேர் கூவப்பட்ட தமனகத்
திருநந்தவனத்துக்கு நந்தவனப் புரமாக விற்று
க்கு குடுக்கின்ற இவ்வூர் பவித்திரமாணிக்க வதிக்கு
நிழக்கு திங்கல ஆளி வாய்க் காலுக்கு ரு (...
...) சதுரத்து மேற்கடைய கு $\frac{1}{2}$ அரையும்
இவ்வதிக்கு (கீ) குலோத்துங்க சோழவாய்

10. க்காலுக்கு தெ ககூக சதுரத்து 1 லீவே
-லியும் ஆக ரு $1\frac{1}{2}$ ஒன்றரையும் இறையிலி செய்து
எங்களுக்கு குடிநீக்கா காணியாக விற்றுக்
குடுத்துக் கொன்வதான எம்மிலிசைந்த விலைப்பொருள்
அன்ருடு நற்காசு 60 இக்காசு அறுபதும் காட்டேற்றிக்
கைச் செல்லவரக் கொண்டு விற்று விலையாவணஞ்
செய்து குடுத்தோம் திருவாருருடையார் ஸ்ரீ மூலஸ்தான
முடையார் ஆதி சண்டேஸ்வர தேவர்க்கு ஆக ரு
5லிம் ஐய்வேலிக்கு காசு 217 $\frac{1}{2}$
இக்காசு இரு நூற்றெருரு பத்தேழரையும் கைச்
செலவரக் கொண்டு இந்நிலம் ஐய்வேலியில் மே
நோக்கின மரமும் கீழேக்கின கிணறும் உட்பட

விற்று விலையாவணஞ் செய்து குடுத்தோம்.

11 ஆதிசண்டேஸ்வர தேவர்க்கு சபைக்கு சமைந்த
இவ்வனேவோம் இன்னிலம் ஐய்வேலியும் எங்களுக்கு
குடி நீக்கா இறையிலியாக விற்றுக் குடுத்து இன்னிலம்
ஐவேலியும் கார்மறுவோடு வேலி ஒன்றுக்கு நூற்றிரு
-பதின் கலமாக வந்த நெல்லு எண்ணெழியும் வழுவிலா

மரக்காலால் கார்பாதி பாசனம் பாதியாக இட்டு
களத்தே அளக்க கடவோமாகவும் ஊர் படுமற்
சாதி அந்தராயம் எங்களூரிலே வைக்க கடவோ
மாகவும் இவர்சள் அளவு கொண்ட நெல்லிலே
கலத்துவாய் ஐஞ்ஞாழி நெல்லாக வந்த நெல்லு
சுமைக்கூலி கொண்டு நீக்கி உள்ள நெல்லு திருவாரூரிலே
கார்பாதி பாசனம் பாதியாக இட்டுக்குடுக்க
கடவோமாகவும் இப்படி சம்

12 மதித்து இன்னிலம் ஐய்வேலியும் குடி நீக்கா இறை
யிலி செய்து கொடுத்தோம் உடையார் திருவாரூருடையார்
ஸ்ரீமூல ஸ்தான முடையார் கோயில் ஆதிசண்டேஸ்
வர தேவர்க்கு இவ்வூர் சபைக்கு சமைத்த
வாசிஸ்டன் பரமேஸ்வரன் பெரிய
நம்பிபட்டனும் பாரத்துவாஜி கெங்காதரன்
பரமேஸ்வர பட்டனும் கௌதமன் பரஞ்சோதி
நஞ்சுண்டான் பட்டனும் பாரத்துவாஜி தற்பரம்
பொருள் இரவி பிரான் பட்டனும் பாலாஸ்ரீரின்
பசுபதி தெட்சிணமூர்த்தி பட்டனும் காசிபன் அண்ட
நாயகன் குனிக்கும் பிரான் பட்டனும் உள்ளிட்ட
இவ்வஹனவோம் இன்னிலத்துக்கு இவ்வூரில்
வந்த வெருவரி சிலவரி நாங்களே இருக்கக்க

13 டவோ மாகவும் சந்திரா தித்தவற் சாகுவதிதாக
எங்களுக்கக குடிநீக்கா காணியாக கல்லிலுஞ்
செம்பிலும் வெட்டிக்கொள்ளப் பெறுவதாக சம்மதித்
—தோம் இவ்வஹனவோம் இவர்கள் பணிக்க எழுதி
—னேன் இவ்வூர் மத்தியத்தன் வல்லமுடையான
உடையான் மாதேவனுன பிரம்ம பிரியனேன்.
இவை என்னெழுத்து. இப்படிக்கு இவை வாசிஸ்டன்
மாதேவனுன பிரம்ம பிரியனேன் இவை என் எழுத்து
இப்படிக்கு இவை வாசிஷன் பரமேஸ்வரன்.
பெரிய நம்பி பட்டனெழுத்து இப்படிக்கு இவை
காசிபன் அண்டநாயகன் குனிக்கும் பிரான்
பட்ட

14 னெழுத்து இப்படிக்கு இவை சுப்பிரமணியபட்
டன் எழுத்து இப்படிக்கு இவை பாரத்துவாஜிகங்
காத்தரன் பரமேஸ்வர்பட்டன் எழுத்து இப்படிக்கு

கௌதமன் பரஞ்சோதி நஞ்சுண்டான் பட்டன்
எழுத்து இப்படிக்கு இவை பாராஷரீயன் பசுபதி
தெட்சிணமூர்த்தி பட்டன் எழுத்து இப்படிக்கு இவை
கௌதமன் அடிகள் திருவெண்காடுபட்டன்
எழுத்து இப்படி அறிவேன் காசிபன் நீறணிந்தான்
ஆளுடையான் பட்டன் எழுத்து இப்படிக்கு
இவை பாரத்துவாஜி தற்பரம்பொருள் இரவி
பிரான் பட்டன் எழுத்து''

திருவாரூர் கல்வெட்டு எண். 39

இடம்:- இரண்டாம் பிரகாரம் (மேற்கு பிரகாரம்) கிழ்புற சுவரில் உள்ளது.

மன்னன்:- மாறவர்மன் குலசேகரபாண்டியன் I

காலம்:- 40-ஆம் ஆட்சியாண்டு – கி.பி. 1308 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் நாள் திங்கட்கிழமை

செய்தி:-

மாறவர்மன் குலசேகரபாண்டியனின் 40வது ஆட்சியாண்டில் வெட்டப்பட்ட இக் கல்வெட்டின்படி பாண்டிய குலபதி வள நாட்டு, எயில் நாட்டு கழனிவாயில் என்ற ஊரினனாகிய வேளான் கொங்கில் பிள்ளை என்பவன் திருவாரூர் இறைவனுக்காக அளித்த நிலங்கள்பற்றி குறிப்பிடுகிறது. இதில் மாறவர்மன் குலசேகரனின் 32 ஆம் ஆட்சியாண்டில் அளித்த நிலங்கள் பற்றியும் குறிப்பிடப் பட்டுள்ளது. இக் கல்வெட்டில் பஞ்சாங்க குறிப்புகளான ''மீன நாயற்று, அபரபட்சத்து தசமியும் திங்கள் கிழமையும் பெற்ற திருவோணத்து நாள்'' என்ற குறிப்பும்—கல்வெட்டின் இறுதியில் சக ஆண்டு 1229 என்றும் எழுதப்பட்டுள்ளது. இதற்கு சமமான ஆங்கில ஆண்டு கி.பி. 1308 மார்ச் மாதம் 18 ஆம் நாள் ஆகும். இக்கல்வெட்டே பாண்டிய மன்னனை பற்றி குறிப்பிடும் இத் திருக் கோயிலில் உள்ள முதல் கல்வெட்டாகும்.

கல்வெட்டு (TEXT)

ஸ்வஸ்தி ஸ்ரீ கோ மாறபன்மர் திருபுவனச் சக்
கரவர்த்திகள் ஸ்ரீ குலசேகர தேவர்க்கு யாண்டு

40 வது மீன நாயற்று அபரபட்சத்து தசமியும்
திங்கள் கிழமையும் பெற்ற திருவோணத்து நாள்
உடையார் திருவாரூருடையார் கோயில் கண்காணி
செய்வார்களுக்கும் கோயில் முதல் கரணத்தார்க்கும்
பாண்டி குலபதி வளநாட்டு எயில் நாட்டு கழனி
-வாயிலுடையான் வேளான் கொங்கில்ப் பிள்ளை
யானேன் இன்னைய நார்க்குத் திரு நாமத்துக்
காணியாகக் குடுத்த இத்தேவர்க்கு 32வது
முதல் இன்னுள் வரை நான் திருநாமத்துக்
காணியாகக் குடு . . . . வது கேய -
-மாணிக்க வளநாட்டு தேவூர்நாட்டு பிரமதே
-யம் சிறு நல்லூரில் இராசாக்கள் தம்பிரானுற்
-றுக்கு வடகரைப்பட்ட நிலத்து நான் பலர்
பக்கலிலும் என் பேராலும் என் மகன் தேவர்கள்
தேவன் பேராலும் இவன் தம்பி சாதவதெரியீயப்
பெருமாள் பெயராலும் விலை கொண்டு இவ்வூரில்
கௌதமன் கேசவபட்டன் பக்கல் பிடாவூர்
உடையான் . . பக்கல் கரதாவதியாக
நான் விலை கொண்டு கூழூர் மாடலன் திருச்சிற்
-றம்பல முடையான் தம் முன் பக்கல் இன்
-னையனூர்க்கு திருநாமத்துக் காணியாக
பேசி

2. விலை கொண்ட நிலமுமாய் என்னுதாய் நான்
இன்நாள் வரையும் அனுபவித்து போந்தவிலை
நிலங்களும் படுகைகளும் கொல்லைகளும
ஊர் நத்தத்து மனைகளுமாய் 32 வது
நாளிலும் இந்த நாற்பதாவது நாளிலும்
நான் திருநாமத்துக் காணியாகக் குடுத்து
இநிலங்களுக்கு விலை கொண்ட பிரமாணங்
-களும் குடுத்து இதுக்கு இட்டுக் கொடுத்தி
தடி. உள்வரிப்படி விலை காசு பத்தரையே
முக்காணியும் படுகை நிலம் இரண்டே
இருமாவரையும் கொல்லைகளும் தெற்கில் நத்த
-மும் நிலம் வேலியார்க நிலம் பதி மூன்றரையே
மூன்று மாக்காணியும் வடக்கில் ஊர் நத்தத்து
மாடலன் திருச்சிற்றம் பல முடையான் பட்டவர்

மனை ஒன்றும் கௌதமன் கேசவபட்டன்
மனையும் இற்றை நாளால் திருநாமத்துக்
காணியாகக் குடுத்தேன் கழனி வாயிலுடை
-யான் வேளான் கொங்கில்ப் பிள்ளையானேன்
இவை என் எழுத்து இன்னுளாவது சகாபிதம்
1229:

திருவாரூர் கல்வெட்டு எண். 40

இடம்: இரண்டாம் பிரகாரத்தின் மேற்குப்புற கோபுரத்தின் நுழைவாயிலில் தென்புறம் உள்ளது.

மன்னன்: இரண்டாம் தேவராயர்

காலம்: கி. பி. 1440 செப்டம்பர் 12ஆம் நாள்

செய்தி: இக்கல்வெட்டு கிரந்தத்தில் எழுதப்பட்டுள்ளது. ஓரிரு சொற்கள் தமிழில் உள்ளன. இதே கல்வெட்டுச் செய்தி கன்னட மொழியில் எதிர்புறம் வெட்டப்பட்டுள்ளது. அசனாலயன சூத்திரம், வசிஷ்த கோத்திரத்தைச் சார்ந்த சித்த ராசர் என்பவரின் மகனான நாகராசர் என்பவர்: தெட்சின சமுத்திராதிபதி லக்கண்ண தன்னநாயகர் என்ற விஜயநகர மன்னரின் பெயரில் இறைவன் வன்மீகநாதரின் திருத்தொண்டாக இந்த கோபுரத்தை கட்டியதாக குறிப்பிடுகிறது.

கல்வெட்டு (TEXT)

(கிரந்த எழுத்துக்களை தமிழில் தருகிறோம்)

1. ஸ்வஸ்திஸ்ரீ || சகாப்தம் 1362–ல்
2. மேல் செல்லாநின்ற ரௌத்ர சம்
3. வஸ்துரத்து பாத்ரபத சவிஜ்
4. ப்ரதமையும் ஸோமவாரமும் ரேவ
5. தி நட்சத்திரமும் பெற்றநாள் ஸ்ரீமன்மகா
6. பிரதான தட்சிண சமுத்திராதிபதி
7. லக்கண தண்ணா யாக்க உடையார்
தன்மத்திலே வசிஷ்ட

8. கோத்ரத்தீ ஆசலாயநம் சூத்தரத்தி சித்தராசர்

9. புத்ரநு நாகராசர் வல்மீக -நாததேவர் ஸ்ரீ

10. பாத சேவைக்குப் பண்ணி வித்தி சம்பவி

11. த்த ஸ்ரீ கோபுரம் ||

திருவாரூர் கல்வெட்டு எண்-41

இடம் :- இரண்டாம் பிரகாரத்தின் மேற்குப் புற கோபுரத்தின் நுழைவாயிலில் - வடபுறம்.

செய்தி :- திருவாரூர் கல்வெட்டு எண் – 40-ல் உள்ள அதே செய்தி கன்னட மொழியில் எழுதப்பட்டுள்ளது.

திருவாரூர் கல்வெட்டு எண்-42

இடம்: இரண்டாம் பிரகாரம் வடக்கு பிரகாரம் தென்புற சுவரில் உள்ளது.

மன்னன்: மூன்றாம் இராஜேந்திர சோழன்

காலம்: இம்மன்னனது 13ஆம் ஆட்சியாண்டான கி. பி. 1259லும், 20ஆம் ஆட்சியாண்டான கி. பி. 1265-66லும் 23ஆம் ஆட்சியாண்டான கி. பி. 1268-69லும் ஆக மூன்று முறை அளிக்கப்பட்ட நிலக்கொடை பற்றி குறிப்பிடுகிறது.

செய்தி: சுத்தமல்லி வளநாட்டு பாம்புணி கூற்றத்து சிறு நாங்கூருடையான் அழகப்பெருமாளான களப்பாளராயன் என்பவனும்,

பாண்டிய குலாசனி வளநாட்டு ஆற்காட்டுக் கூற்றத்து பிரம்பன் பொற்பதிக்கு நாயகன் திருவிடை மருதுடையானான விசையபாலன் என்பவனும் இம்மன்னனது 13, 20, மற்றும் 23ம் ஆண்டுகளில் நிலக் கொடையளித்தனர். 13ஆம் ஆண்டில் இவர்கள் செல்வத் திருவாரூரில் ராஜாக்கள் தம்பிரான் திருவீதி சன்னதி திருவீதியில் உடையார் அழகிய திருச்சிற்றம்பலமுடையார்–உடையார் பொற்பதிக்கு நாயக ஈஸ்வரமுடையார்

திருமேனிகளை எழுந்தருளுவித்தனர். இத்திருமேனிகளின் பூஜைகளுக்காக இவர்கள் பல ஊர்களில் நிலங்களை விலைக்கு வாங்கினர். அவ்வகையில் பள்ளியுமாராய மங்கலத்தில் திருநாமத்துக் காணியாகவும், பெரும்போரில் சில நிலங்களும், வாழ்குடி சபையினரால் வரி இல்லாத நிலமாக விற்பனை செய்த நிலமும் பெற்று அளித்தனர். அடுத்து 20வது ஆட்சியாண்டில் விசையபாலன் திருமாளிகை வினாயகப் பெருமானை எழுந்தருளுவித்து, அப்பெருமானின் பூஜைகளுக்காக பெரும்போர் என்னும் ஊரில் நிலங்களை விலைக்கு வாங்கி அளித்தனர்.

இறுதியாக இம்மன்னனின் 22வது ஆட்சியாண்டில் விசையபாலன், சுப்பிரமண்ய பிள்ளையாரின் திருமேனியை செய்து கொடுத்து பூஜைகளுக்காக பெரும்போர் என்னும் ஊரில் தன்காணியாக இருந்த நிலத்தை இறைவன் பெயரில் திருநாமத்துக் காணியாக மாற்றி அளித்தான் என்ற செய்திகள் காணப்படுகிறது.

கல்வெட்டு (TEXT)

1. ஸ்வஸ்திஸ்ரீ திருபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீராஜேந்திரசோழ தேவர்க்கு யாண்டு 13வது மீன நாயற்று அபரபச்சத்து திரதியையும் திங்கள் கிழமையும் பெற்ற திருவோணத்து நாள் சுத்தமலி வளநாட்டு பாம்புணிக் கூற்றத்து சிறு நாங்கூருடை

2. யான் அரையன் அழகப் பெருமாளான களப்பாளராயனும் பாண்டி குலா சனிவள நாட்டு ஆற்காட்டுக் கூற்றத்து பிரம்பன் பொற்பதிக்கு நாயகன் திருவிடை மருதுடையானை விசைய பாலனும் இவ்விருவோம் செல்வத் திருவாரூரில் ராஜாக்கள் தம்

3. பிரான் திருவீதி சன்னதி வீதியில் தென்பக்கத்து நாங்கள் எழுந்தருளுவித்த உடையார் அழகிய திருச்சிற்றம் பல முடையார்க்கும் உடையார் பொற்பதிக்கு நாயக ஈஸ்வரமுடையார்க்கும் பூஜைக்கும் நிவந்தம் பெறுவார்க்கும் வேண்டுவனவையிற்றுக்கும் உடலாக நா

4. ங்கள் பல ஊர்களிலும் விலை கொண்டு திருநாமத்துக் காணியாக விட்ட கேய மாணிக்க வள நாட்டு தேவ

-தானம் பள்ளியுமாராய மங்கலமுமான ராசாதிராசச் சருப்பேதி மங்கலத்து நிலம் இரண்டே முக்காணியும் தேவதானம் பெரும் போரில் நிலம்

5. முக்காலே நாலுமாக்காணியும் திறப்பு வாழ்குடி -யான இராச நாராயண சருப்பேதி மங்கலத்து விலை கொண்டு இவ்வூர் சபையார் ஊர் கீழ் இறையிலி செய்து தந்த நிலம் முக்காலே நாலுமாக்காணியும் ஆக விலைநிலம் மூன்றே

6. முக்காலே நாலு மாக்காணியும் திருநாமத்துக் காணியாக குடுத்தோம். களப்பாளராயனும் விசைய பாலனும் இவ்விருவோம் இப்படிக்கு இவை சிறுநாங் கூருடையான் அரையன் அழகப் பெருமாளான களப் -பாளராயன் எழுத்து இப்படிக்கு இவை

7. -வ விசைய பாலன் எழுத்து || இக் கோயிலில் இருப தாவது பிரம்பன் பொற்பதிக்கு நாயகன் திருவிடை மருதுடையானுன விசைய பாலனென் எழுந்தருளுவித்த திருமாளிகை விளையகப் பிள்ளையார்க்கு பூசைக்கும் நிவந்தம் பெறு

8. வார்க்கும் வேண்டுவன வையிற்றுக்கு உடலாகத் திருநாமத்துக் காணியாக நான்விட்ட கேய மாணிக்க வளநாட்டுத் தேவதானம் பெரும் போரில் என் காணியான நிலத்து புகைப்போதி என்று பேர் கூவப்பட்ட நிலத்து விலைநிலம் அரையும்

9. திருநாமத்துக் காணியாக குடுத்தேன் பிரம்பன் பொற்பதிக்கு நாயகன் திருவிடை மருதுடையானுன விசையபாலன் எழுத்து || இக் கோயிலில் 22 வது இவர் எழுந்தருளுவித்த சுப்பிரமண்ணியப் பிள்ளையார்க்கு பூஜைக்கும் நிவந்தம் பெறுவார்க்கும் உடலாக இந்தப் பெரும் போரிலும் பெரும் போர் பிரமதேயத்திலு

10. ம் என் காணியான நிலத்து திருநாமத்துக் காணி யாக நான் எழுதிக் குடுத்த சாதனப்படி தடி பல

வால் நிலம் காலே நாலுமா முக்காணி முந்திரி கீ
முக்காலே முக்கால் வீசும்-ம்
23வது பின்னனி மாதமுதல் திருநாமத்துக்
காணியாகக் குடுத்தேன் பிரம்பன் விசைய
பாலனேன் எழுத்து 11

திருவாரூர் கல்வெட்டு எண்-43

இடம்:- இரண்டாம் பிரகாரம்-வடக்கு பிரகாரம் தென்புற சுவர்.

மன்னன்:- மூன்றும் இராஜேந்திரன்.

காலம்:- 20 ஆம் ஆட்சியாண்டு—கி.பி. 1266 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் நாள் புதன்கிழமை.

செய்தி:- திருவாரூர் கூற்றத்து அடியக்கை சருப்பேதி மங்கலத்து (தற்போது இவ்வூர் அடியக்கமங்கலம் என்ற பெயரில் அழைக்கப்படுகிறது). ஊர் சபையினர் கூடி எழுதிய சாசனமே இக் கல்வெட்டாகும். செல்வத் திருவாரூரில் இராசாக்கள் தம்பிரான் திருவீதியில் அழகப் பெருமாள் மற்றும் விசைய பாலர் என்ற இருவர் கட்டுவித்த அழகிய திருச்சிற்றம் பல முடையார் திருக்கோயில் பொற்பதிக்கு நாயகீஸ்வரமுடையார் கோயில், இவைகளுக்கு பணிபுரியும் தவசியர்களுக்காக இரண்டு இடங்களில் நிலம் வாங்கி மேற்படி இருவரால் வரி இல்லாத நிலமாக அளிக்கப் பட்டது. இதனை ஏற்றுக் கொண்டு மேற்படி ஊர் சபையினரால் இச் சாசனம் செய்து கொடுக்கப்பட்டது. இவ்வாறு வாங்கப்பட்ட நிலங்களில் ஒன்று அழகிலும் அழகிய தேவத் தலைக்கோலி என்ற திருக்கோயில் நாட்டிய மகள் ஒருத்தியிடம் இருந்து பெற்றதாக குறிப்பிடுகிறது.

கல்வெட்டு (TEXT)

1. ஸ்வஸ்த் ஸ்ரீ உ திரிபுவன சக்கரவர்த்திகள்
ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர்க்கு யாண்டு 20 வது
மகர நாயற்று பூற்வ பட்சத்து திரயோதிசியும்
புதன் கிழமையும் பெற்ற புனர் பூசத்து நாள்
கேய மாணிக் கவள நாட்டுத் திருவாரூர்
கூற்றத்து பிரமதேயம் அடியக்கை சரு
பேதி மங்கலத்து மகா சபையோம்

செல்வத் திருவாரூரில் இராசாக்கள் தம்பிரான் திருவீதி சன்னதித் திருவீதி தென் சிறகில் சிறு நாங்கூருடையார் அழகப் பெருமாளான களப்பாளராயரும்

2. பிரம்பர் திருவீடை மருதூருடையாரான
விசைய பாலரும் எழுந்தருளிவித்த உடையார்
அழகிய திருச் சிற்றம்பல முடையாரும் உடை
யார் பொற்பதிக்கு நாய கீஸ்வரமுடையாரும்
கோயில் பூஜையும் செலுத்தித் திருப்பணியும்
செய்வித்து திருநந்தவணமும் செய்து திருப்பள்ளி
-த் தாமமும் பறித்து சேவித்து இருக்கும் தவசி
-யர்க்கு இத் திருவீதி வட சிறகில் பதி
-யிலாரில் உமையாழ்வியான அழகிலுமழகியு
தேவத் தலைக் கோலி பக்கல் இவர்கள்
விலை கொண்டு கற்பித்த மடத்துக்கு இறை
-யிலியாகக் குடு

3. த்த இந்த விசைய பாலர் முன்னளில் இராயூர்
ஆரா அமுது பட்டன் பக்கல் விலை கொண்ட
இராச விச்சாதிர வாய்க் காலுக்குத் தென்
-பக்கத்து ஆயப்பேரை ஓடையென்று பேர்
கூவப்பட்ட நிலத்துக்கு கீழ்பாற்கெல்லை
காரம்பிச் செட்டு நம்பி மூத்த பிரான்பட்டன்
நிலத்துக்கு மேற்கும் வேற்புறத்து பொன்னம்பி
-பட்டன் உள்ளிட்டார் நிலத்துக்கு வடக்
-கும் நம்பூர்க் காட்டுக்கை சந்திர பூஷண
பட்டன் உள்ளிட்டார் நிலத்திற்கு கிழக்கும் ...
..ய்க்கா

4. லுக்கு தெற்கும் நடுவுபட்ட நிலம் காலே
காணி அரைக் காணி முந்திரிகைக்கு கீழ்
மூன்றுமாவும் இந்நிலத்துக் கீழைத்தடியில்ப்
பொதுத்துரவிலோ பாதியும் உட்பட இம்
மடத்துக்கு சேஷமாக இவர் குடுக்கையில்
இந்நிலத்தால் வந்த தரப்படி நெல்லு ஐம்
-பத்து நாற்கலனே ஐங்குறுணி ஐஞ்ஞாழியும்
வெட்டி பரிவாரம் ஊர்க் கணக்க ஜுவிதம்
கோயிற்றமப் பேறு குடிமை கார்த்திகைப் பச்சை

உள்ளிட்டு மேல் வருவனவும் உட்பட
இம் மடத்து தவசியர்க்கு இறையிலி , , றவு

5. இந் நெல்லும் காசும் ஊரிலே ஒட்டுக்கு
உடலான நிலத்திலே ஏற்றி இறுக்கவும் இன்
னமும் இம் மடத்துக்கு இற்றை நாளில்
நாங்கள் இறையிலியாக

பண்ணிக் குடுத்த இவ்வூர்
கீழ் பக்கத்து திருவால் என்று பேர் கூவப்பட்ட
நிலத்துக்குக் கிழ்பார்க்கெல்லை உடையார்
திருவாரூருடையார் எண்ணை நிலத்துக்கு
மேற்கும் ,,,,,,,, நிலத்துக்கு வடக்கும்
திருக்கடவூர் அருளாளபட்டன் நிலத்திற்கு
கிழக்கும் உடையார் திருவாரூருடையார்
எண்ணை நிலத்திற்கு தெற்கும் நடுவுபட்ட
...— இந்நிலம் நாலுமாவரைக் காணிக்
கீழ் எட்டுமா முக்காணிக்கு தரப்படி நெல்லு
பதினறு கலனே தூணி ஐஞ்ஞாழி உழக்கும்
வெட்டி பரிவாரம் ஊர் கணக்கஜ்ஜீவிதம்
கோயிற்றமப் பேறு குடிமை கார்த்திகைப் பச்சை
உள்ளிட்டு மேல் வருவனவும் உட்பட நாமே
இறுக்கவும் இந்நிலத்துக்கு உடலாக நம்
மூரில் நீங்கலான குளங்களில் நம்பி குளம்
ஊரைவிட்டு வினியோகத்துக்கு உடல்லி
லாமையில் இத்தவசியர்க்கு நாம்
இறையிலியாக குடுத்த நிலம் நாலு மாவரைக்
கீழ் எட்டுமா முக்காணிக்கு வேண்டும்
நிலம் திருத்திப் பயிர் செய்து இந்நெல்லுக்கு
ஒக்கத்தரம் இட்டுக் கொள்ளக் கடவோமா
கவும் இந்நிலம் இத்தவசியர் இறையிலியாக
சந்திர்ராதித்தவற் அனுபவிக்கக் கடவார்களாக
வும்

7. பண்ணி மகாசபையோம் பணியால்
ஊர் கணக்கு கண்ணமங்கல முடையான்
நம்பியாழ்வான் எழுத்து என்றும் இவை
காரம்பிச்செட்டு அழகிய மணவாளபட்ட

னும் நாராயண பட்டனும் பெரிய நம்பி பட்டனும் சீரிளங்கோ பட்டனும் இளையாழ் வான் பட்டனும் கோமடத்து திருவரங்க நாராயண பட்டனும் தோராண சூரபட்ட னும் திருவிக்கிரம பட்டனும் நாராயணபட் டனும், நாரசிங்க பட்டனும், விஷ்ணுபட்ட னும், சிங்கபிரான் பட்டனும் ஸ்ரீகிருஷ்ண பட்டனும் ஸ்ரீராமபட்டனும் நம்பூர்க் காட்டுக்கைச் சீரிளங்கோ பட்டனும் சந்திர பூஷண பட்டனும் திருவரங்க மாளிபட்ட னும் தட்சிணை

8. மூர்த்தி பட்டனும் கோவிந்த பட்டனும் ஸ்ரீ கிருஷ்ண பட்டனும் திருவேங்கடபட்டனும் திவேதி கோமபுரத்து இருஷிகேசுவ பட்டனும் நாராயண பட்டனும், மகாதேவ பட்டனும் சிங்கபிரான் பட்டனும் மகாசுரை தியாக விநோத பட்டனும் உதைய திவாகரன் சேந்த பிரான் பட்டனும் தாராந்தூர் கேசவபட் டனும் இராயூர் ஆரா அழுது பட்டனும் ஸ்ரீ விஷ்ணு பட்டனும் சீராம பட்டனும் சுர . . . . . .அழகிய மணவாள பட்டனும் எழுத்தென்றும் இட்டது : உ.

திருவாரூர் கல்வெட்டு எண். 44

இடம் : இரண்டாம் பிரகாரம்---வடக்கு பிரகாரம் தென்புறசுவர்

மன்னன் : மூன்றாம் குலோத்துங்கன்

காலம் : 24 ஆம் ஆட்சியாண்டு நாள் 57 வது --- கி. பி. 1201 செப்டம்பர் திங்கள்

செய்தி : திருவாரூர் கல்வெட்டுக்களிலேயே மிகவும் குறிப்பிடத் தக்க கல்வெட்டாகும். இறைவனே கூறுவது போல் சாசனம் எழுதப்பட்டுள்ளது.

மூன்றாம் குலோத்துங்கன் பாண்டியர்களின் தலை நகரான மதுரையை அழித்து வீராபிஷேகம் விஜயாபிஷேகம் செய்து கொண்ட பின்பு, ''திரிபுவன வீர தேவன்'' என பட்டம் சூடிக் கொண்டான். ''திரிபுவன வீரன்'' என்ற பட்டத்தைக்குறிப்பிடும் தமிழக கல்வெட்டுக்களிலேயே இதுதான் காலத்தால் முதற் கல் வெட்டாகும். இக்கல்வெட்டின் துணை கொண்டு மதுரைப்போர் கி. பி. 1201க்கு முன்பு நிகழ்ந்திருக்கவேண்டும் என வரலாற்று ஆசிரியர்கள் கருதுகிறார்கள் ''நம் தோழன்'' என இறைவனே குறிப்பிடுவது போன்ற முறையில் வடிக்கப்பட்ட ஒரே கல்வெட்டும் இதுவேயாகும். ஆரூரராகிய சுந்தரமூர்த்தி நாயனாருக்கு அடுத்து தோழனாக அழைக்கப்படுவது இம்மன்னனைத்தான்.

இக்கல்வெட்டில் திருவாய்க்கேள்வி (மன்னனது ஆணையை கேட்டு ஓலையில் எழுதும் அதிகாரி) அணுக்கநம்பி; திருமந்திரஓலை (அவ்வாறு கேட்டு எழுதிய ஓலையை சரிபார்த்து, பதிவு செய்து அனுப்பும் அதிகாரி) ஸ்ரீநந்திகேஸ்வர மூவேந்த வேளான்; தியாக வினோத மூவேந்த வேளான் போன்ற உயர் அதிகாரிகளின் பெயர் களும் குறிப்பிடப்பட்டுள்ளன. இவர்களே இச்சாசனத்தில் கையப்பமிட்டவர்கள் ஆவர்.

திருவாரூர் திருக்கோயிலில் பணிபுரிந்த நூறு ஆண்டார்களுக்கு முன்பு சில ஊர்களில் நிலம் அளிக்கப்பட்டதாகவும், அவற்றை அவர்கள் சரிவர பேணாமல் சச்சரவிட்டுக் கொண்டமையால் திரும்பவும் அவற்றை சரிசெய்து அவர்களுக்கு அரசு அதிகாரிகளின் மேற்பார்வையில் வழங்கப்பட்டது. மன்னது ஆணையான இச் சாசனம் மன்னன் கூறுவதுபோல் அமையாமல் இறைவன்கூறுவது போன்று எழுதப்பட்டுள்ளது. ''இறையிலி பொத்தகம்'' என்பது வரியில்லாத நிலங்களின் கணக்குகள் அடங்கிய பதிவேடாகும் (Ledger of Taxless lands) இவை எவ்வாறு முக்கியத்துவத்துடன் திகழ்ந்தன என்பதையும் இக்கல்வெட்டால் அறியலாம்.

கல்வெட்டு (TEXT)

1. ஸ்வஸ்தி ஸ்ரீ—யஜ்ஜகது த்ரய நிர்ப்மண
த்ராண நிர்வாண காரணம் ததிதம் சாசநம்
சம்போகா ஸ்ரீபூர்வாரூர் வாசிநகா |—
நம்மை சேவைப்பண்ணி கும்பிட்டு இருக்கு

ஆண்டார்கள் பேர் நூற்றுவர்க்கும் நம் அடுக்களை
புறங்களான ஊர்களில் கேய மாணிக்கவளநாட்டு
சோழ கேரள நல்லூரில் அடைத்த நிலம் முப்பதேமுக்காலே
மூன்று மாவின் கீழ் முக்காலே ஒருமா முக்காணி
-யும் அருவ ை

2. மான வீருதராஜ பயங்கர சதுப்பேதி மங்கலத்து
ஊர் கீழ் இறையிலி பொத்தகப்படி நிலம் காலும்
குலோத்துங்க சோழவளநாட்டு களத் சாத்தங்குடியில்
ஊர் கீழ் இறையிலியில் அடைத்த நிலம் முக்காலே
ஒருமாவரை முந்திரிகை கீழ் அரையும் ஆக நிலம்
முப்பத்தொன்றே கீழ் முக்காலே நான்மாவரை
-யே அரைக்காணி கீழாறுமா முக்காணியில்
நாம் உலாப் போது மிடத்து முன்புகை

3. யதரும் குவளை வேலியுடையான் திருத்தூளி
அழகி யானுக்கு அருவலத்து ஊர் கீழ்
இறையிலியில் பொத்தகப்படி அடைத்த நிலம்
காலும் சோழகேரள நல்லூரில் அடைத்த நிலம்
இருமாவரையும் வயிராகிகள் இருவர்க்கு
களச் சாத்தங்குடியில் அடைத்த நிலம் அரையே
இருமாவரை முந்திரிகையும் நீக்கி பேர்
தொண்ணூற்றெழுவர்க்கும் சோழ கேரள
நல்லூர் நிலம் மு-

4. -ப்பதே முக்காலே அரைமாவின் கீழ் முக்
-காலே ஒரு மாமுக்காணியும் களச் சாத்த
-ங்குடியில் நிலம் நாலுமாவின் கீழரையும்
இவர்களுக்கு நா மடைத்த நாள் முதல்
நெல்லும் நிலமும் தங்களில் ஒக்க கூறிடா
மையாலே ஆண்டுகள் தோறும் அழித்து
கூறிட்டு வருகையாலே இந் நிலங்கள் ஒரு
வரும் உற்சாகம் பண்ணுமையாலே
தட்டுப்பட்டுவாரா நின்றதென்றும் தங்களில்
நெல்லும் நிலமும்

5, ஒக்கச் சேர்த்து சேர்த்தபடியே அனுப
விக்கப்பெற வேணுமென்று வீர ராஜேந்
-திர பல்லவரையனும் திருமுத்தின் சிவிகை

பெற்றனும் நமக்குச் சொன்னமையில்
நம் தோழன் திரிபுவன வீரனுக்கு இருபத்து
நாலாவது முதல் தங்களில் நெல்லும்
நிலமும் ஒக்கச் சேர்த்து எழுத வீர
ராஜேந்திரப் பல்லவரையனும் திருமுத்
தின் சிவிகைப் பெற்றனும் எழுத்திட்ட
கையடைப் படியே இவர்களுக்கும்
இவர் :

6. கள் வற்கத்தார்க்கும் காணியும் இறையிலியும்
ஆகச் சொன்னேம் திருவாய்க் கேள்வி அனுக்க
நம்பி விண்ணப்பத்தால் அருளால் எழுதினன்
திருமந்திர ஓலை ஸ்ரீ நந்திகேஸ்வர மூவேந்த
வேளானென்றும் இவை வீர ராஜேந்திரப்
பல்லவரையன் எழுத்தென்றும் இவை திருமுத்
தின் சிவிகை பெற்றன் எழுத்தென்றும் இவை
திருமந்திர ஓலை தியாக விநோத மூவேந்த வேளான்
எழுத்தென்றும் ஆண்டு இருபத்துஞலா

7. வது ஞள் ஐம்பத்தேழினுல் பிரசாதம் செய்தருத்து
11ஆ இப்போர் நூற்றுவரில் அரிவலத்து நிலத்
தால் போர் ஒன்றும் களச் சாத்தங்குடியில்
போர் இரண்டும் நீக்கி போர் தொண்ணூற் றெழுவர்
க்கு சோழ கேரள நல்லூரில் நிலமும் நெல்லும்
ஒக்கச் சேர்த்து போர் இருவர்க்கு கையடை
ஒன்றுக இவ்வூர் கணக்கு எயினூருடையான்
எழுத்தால் எழுதி இவலும் வீர ராஜேந்திரப்
பல்லவரையனும் திருமுத்தின் சிவி

8. கை பெற்றனும் எழுத்திட்ட கையடைப்படி கையி
யடை ஒன்றுக்கு செத்த கார் மறுநிலம் இரு
மாவரைக்கு மாத்தால் நெல்லு எண்கலனே
இரு தூணிப் பதக்காக இருபத்திரு கலனே
குறுணியும் ஒரு பூ நிலம் ஒண்பது மா முக்காணி
க்கும் மாத்தால் நெல்லு ஐங்கலனே பதக்கு
நாழியா நெல்லு ஐம்பதின் கலனே இருதூணி
முக்குறுணி அறுநாழியாக நிலம் அரையே இரண்
டு மாக் காணியால் வரிசைப் படிநெ-

9. ல்லு எழுபத்து முக்கலனே அறுநாழி குறுணி
வாசிநெல்லு அறுகலனே குறுணிஆக நெல்லு
எழுபத் தொண்பதின் கலனே குறுணி அறுனாழி
செலவளவு வாசி நெல்லு எழு குறுணி இருனாழி
நெட்டாளுக்கு நெல்லு இருதூணிக் குறுணி
பயறு கலனே இருனாழிக்கு நெல்லு இருகலனே
நாலுழி ஊர்க் கணக்கனுக்கு உறை நாழிக்கு
விட்ட நிலத்தால் நெல்லு எழு குறுணி முன்னாழி

10 தச்சனுக்கு விட்ட நிலத்தால் நெல்லு பதக்கு
நாவிசனுக்கு விட்ட நிலத்தால் நெல்லு எழுபத்
முக்குறுணி ஒருனாழி ஆக நெல்லு எழுபத்
தொன்பதின் கலனே எழுகுறுணி களச்
சாத்தங்குடியில் ஓபாதி நெல்லு ஐங்கு
றுணி ஆகபோர் இருவருக்கு நெல்லு
தொண்ணூற்றுக் கலத்துக்கு கையெ யடை
ஒன்றுக எழுதி எழுதிட்டது உ

திருவாரூர் கல்வெட்டு எண்-45

இடம் :- இரண்டாம் பிரகாரம் - வடக்கு பிரகாரம் தென் புற சுவர்

மன்னன் :- மூன்றுங்குலோத்துங்கன்

காலம் :- 39 ஆம் ஆட்சியாண்டு - கி.பி. 1216-17.

செய்தி :- இக் கல்வெட்டில் மன்னனது மெய்கீர்த்தியை குறிப்பிடாமல், 12வது வரியில், திரிபுவன வீர தேவரான மூன்றும் குலோத்துங்கனின் ஆட்சியாண்டு மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. இச் சாசனத்தில் அரையன் பிள்ளை யாழ்வி என்ற பெண் தன் மகன் அழகிய திருச் சிற்றம்பல முடையார் பெயரால் திருவாரூர் இறைவனுக்கு அளித்த நிலக்கொடை பற்றி விவரிக்கிறது. இவ்வாறு அளிக்கப்பட்ட நிலம் இப் பெண்ணின் பாதுகாவலரான (முதுகண்ணுக உடைய—Guardian) இராஜ ராஜ தேவனுன அனுக்கப் பல்லவரையன் என்பவன் பெயரில் இருந்தது என்பதும்; அவனும் இச்சாசனத்தில் கையப்பமிட்டுள்ளமையும் குறிப்பிடத் தக்க ஒன்று.

கல்வெட்டு (TEXT)

1. ஸ்வஸ்திஸ்ரீ | செயுங்கொண்ட சோழமண்டலத்து பல்குன்ற
-க் கோட்டத்து வாழைப் பந்தல் கண்ணந்தை அரையன்
ஜராஜராஜ தேவனை அணுக்கப் பல்லவரையனே முது
கண்ணுக உடைய திருவம்பல நல்லூருடையான் அரையன்
பிள்ளையாழ்வியேன் உடையார் திருவாரூர் சீ மூலத்தான

2. முடையார் கோயில் ஆதி தண்டேசுவர தேவர் திருமுன்பு
என் மகன் அழகிய திருச்சிற்றம்பல முடையார்க்கு
நன்முக நான் நீர் வார்த்துக் குடுத்த நிலமாவது
குலோத்துங்க சோழ வளநாட்டு வேளாநாட்டுச்
சிறுகூற்ற நல்லூரில் திருவம்பல நல்லூருடையானை
அ

3. ரையன் கங்கை கொண்ட சோழன் பக்கல் சீதனம்
பேற்றுடைய பொத்தகப்படி நிலம் எண்வேலியும்
நிலம் கலந்தவாற்றால் என்று எழுதினமையில் இன்
னிலம் பிறித்து தரவேனும் என்று திருவம் பல
முடையான் அரையன் கங்கை கொண்ட சோழனே

4. ச் சொன்மையில் இவர் பிரித்து நந்த படியாய்
கைக் கொண்ட காசு பாதியிறுக்கப் பற்றுப் உடை
யார் திருவாரூருடையார்க்குத் திருவிளக்குப்
புறமாய் ஒட்டுக் கடைத்து கோயில் தானத்தார் உடல்
கொண்டு வருகிற பொத்தகப்படி நிலம் பதிற்று வேலியில்
என் ஓபாதி நிலம் அ...

5. ரையே முக்காணியும் அனுபவிக்கும் மிடத்து ஊர்
நத்தத்து வடக்குடையவும் கடுவாயாற்றங் கறையில்
வடபக்கத்திலும் தென் பக்கத்திலும் கமுகு நின்ற
நிலத்திலும் அகயாற்று படுகையிலும் தென்பக்கத்து
கிழக்கடைய நீக்கவும் விளை நிலங்கள் பதிற்று
வேலி வாய்க்காலு -

6. -க்குக் கிழக்கு கீழ் கண்டமான நிலங்கள் கண்டம்
தோறும் கீழ்பக்கத்தே நீக்கவும் நின்ற நிலத்துக்
-குதிரை வட்டத்து குலைக்கு கிழக்கு தென் கண்டத்து
நிலமும் கிழக்கடைய நிற்க கடவதாகவும்
இனத் தோற்பட்டி இறை

7. —யிலி பொத்தகப்படி நிலம் வேலியும் சீமாகே
-சுர நல்லூருடையாற் விக்கிரம சோளீசுர
முடையார் தேவதானத்து இறுச்கும நிலம்
ஒன்றேய் ஒன்பதுமாக்காணியும் ஆகப்
பொத்தகப்படி நிலம் இரண்டே ஒண்பது
மாக்காணியும் பயிற் பிறித்து சொண்ட ஆதித்த
தேவன் மயக்கலில் மேற்கடைய நிலம்

8. இரண்டு மாமுக்காணி சிவதனமுடையான்
நிலம் இரண்டுமா மேலைப் பிச்சதேவன் மயக்கலில்
மேற்கடைய நிலம் இரண்டு மாவரைக் காணியும்
கூத்தபிரான் மறக்கலில் கிழக்கடைய நிலம்
ஆறுமாக் காணி அரைக் காணியும் குதிரைவட்டத்து
வட கண்

9. கண்டத்து அருமொழிநங்கை கிழக்கடைய நிலம்
மாகாணியும் தென்கண்டத்து மேற்கடைய நிலம்
கடைய நிலம் அரையே ஒருமா முக்காணியும்
இதன் கிழக்கு நிலம் ஆறுமா முக்காணி நீகி
கிழக்கடைய நிலம் மூன்றுமா முக்காணியும்
இதன் கிழக்கு நிலம் ஆறுமா முக்காணி நீக்கி
கிழக்கடைய நிலம் மூன்றுமா முக்காணியும்
நாற்றங்கால் நிலம் காலும் பிச்ச

10. ந்தேவன் தோட்டத்து நிலம் நான்மாவரையும்
ஆக நிலம் ஒன்றே முக்காலே நான் மாவரை இன்
ரு ஒன்றே முக்காலேனும் மாவரையும்
கீழை மாளிகையில் தெற் கடையக் குழி எழுபத்
தஞ்சரையும்.. ..... அம்பலத்து வடக்குப்
பழையாறு கிழவன் குடியிருப்பு மனையாய் சிறு
கண் பூருடையான் எதிரிலி சோழனுக்கு

11. விசத்தடைப் பரிவர்த்தனை பண்ணின மாளி
கையும் தனது தெற்கடையக் குழி முப்பதும்
ஆகக் குழி நூற்றஞ்சரையும் குடுத்த நிலத்
தின் மனை குழி முப்பத் திரண்டும் திரு
வெண்காட்டு விளாகத்துக் கொல்லையில்
கிழக் கடைய நிலம் ஒருமா முக்காணி
அரைக் காணி முன்திரிகையும் ஆக கொல்லை
-வட்ட நிலம் இரண்டே மாகாணி அரைக்
காணி முன்றி

12. ிகையும் நத்தம் குழி நூற்று முப்பத்து
ஏழரையும் ஆகப் பொத்தகப்படி நிலம் எண்
வேலியும் உடையாற் திருவாரூர் சீ மூலத்தான
முடையார் கோயில் ஆதி தண்டேசுர தேவற்
திருமுன்பு திரிபுவன வீர தேவற்கு முப்பத்
தொன்பதாவது (39) கார்முதல் நீர்வாற்த்து
குடுத்தேன் எனப் பத்தர் வாழைப் பந்தல்க்
கண்ணந்தை அரையன் இராஜராஜ தேவனை

13. அனுக்கப் பல்லவரையனே முதுகண்ணுக முடைய
சோறுடைய நாயகன் பிள்ளை யாழ்வியேன்
இன்னிலத்து தேவதான ஆண்டு முதல் திரு
-நாமத்துக் காணியான அம்மையப்ப நல்லூர் உடன்
கூட்டி உடல் கொண்டு வருகையில் கழுகு நின்ற
தரை உள்ளிட்ட நிலத்துமேல் ஏற்ற முண்டாகிலும்
உடல் துண்டமாகிலும் நாயனுர்க்கு ஆவது
இன்னிலம் எண் வேலியும் நாய

14. னுர்க்கு நாயாரசபடிக்கு இவை அனுக்கப்
பல்லவரையன் கணக்கு ..... கியலுடையான்
எழுத்து :- இப்படி அறிவேன் பூண்டி உடை
-யான் வேளான ஆளவந்தான் எழுத்து :-
இப்படி அறிவேன் சாத்தம்பாடி உடையான்
எழுத்து :- இவர்கள் வேண்ட இப் பிரமாணம்
எழுதினேன் இராஜராஜ பாண்(டி) நா

15. ட்டு முத்தூர் கூற்றத்து சிறுகண் பூரு
-டையான் உலகபி மன்னை எதிரிலி
சோழனேன் எழுத்து || மூலப் பிரமாணத்
-தில் இப்படிக்கு இவை திருவம்பலமுடை
-யான் ..... ணத்தா ... ன் கங்கை
கொண்டான் எழுத்து :- இப்படிக்கு இவை
சிறுகண்பூருடையான் திரு நட்டப் பெருமாள்
எழுத்து || - இப்படிக்கு இவை சிறுகண்
-பூருடையான் திருச்சிற்றம்பல முடையான்
எழுத்து :- இப்படி அறி

16. வேன் திருவம்பலமுடையான் திரு
-வாச்சிராம முடையான் இராஜராஜ

தேவனை விக்கிரம சோழ அங்கராயன்
எழுத்து IIஉ

திருவாரூர் கல்வெட்டு எண்–46

இடம் :- இரண்டாம் பிரகாரம் - வடக்கு பிரகாரம் தென் புற சுவர்.

மன்னன் :- விக்கிரமசோழன்

காலம் :- ஆட்சியாண்டு 8 சிங்கநாயற்று அமரபட்சத்து திருதியையும் செவ்வாய் கிழமையும் பெற்ற ரேவதிநாள் என்ற குறிப்பால் இக்கல்வெட்டு கி.பி. 1125 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18ந் தேதி வெட்டப்பட்டது என அறிய இயலுகிறது.

செய்தி :- விக்கிரம சோழனின் 8 ஆம் ஆட்சியாண்டில் வீர ராஜேந்திர தேவ மங்கலம் என்னும் ஊரில் இருந்த குதிரை சந்தையை சேர்ந்த வணிகன் (சாத்தில் இருக்கும்) குதிரைச் செட்டி சித்த செட்டி மகன் கங்கை செட்டி என்பவன் திருவாரூர் உடையார் ஸ்ரீ மூலஸ்தானமுடைய இறைவனுக்கு நுந்தா விளக் கெரிப்பதற்காக கோயில் பண்டாரத்தில் (Treasury) 17 காசுகளை முதலீடு செய்தான். இந்த 17 காசுகளையும் கடனுகப் பெற்றுக் கொண்டு அதன் வட்டித் துகையால் விளக்கெரிப்போம் என்று அதனை இத்திருக்கோயிலில் பணிபுரிந்த 49 சிவ பிராமணர்களும் பெற்றுக் கொண்டனர். இவ்வாறு கடனுக பெற்ற சிவப்பிரா மணர்கள் எழுதிக் கொடுத்த ஒப்பந்த சாசனமே இக் கல்வெட்டா கும்.

இச்சாசனப்படி இப் பிராமணர்கள் 17 காசுகளுக்கு வட்டி யாக 365 நாட்களுக்கு எண்ணை 91 நாழி உழக்கு என்ற அளவில் ஒவ்வோர் ஆண்டும் கொடுத்து ஒருநாள் கூட தவறுமல் இந்த நுந்தா விளக்கை எரிய விடுவோம் என்று கையப்பமிட்டு உறுதி மொழி எழுதிக் கொடுத்தனர்.

இந்த சாசனத்தை எழுதியவன் திருவாரூர் திருக்கோயிலின் முதல் கணக்கு அதிகாரியான வேட்கோவன் திருவாரூர் உடை யான் கூனி கணவதி என்பவனுவான். வேட்கோவன் என்பது தற் காலத்தில் வேளார் என அழைக்கப்படும் மட்பாண்டங்கள்

தயாரிக்கும் இனத்தவர்க்கு உரிய பெயராகும். இக்கல்வெட்டால் விக்கிரம சோழன் காலத்தில் மடப்பாண்டம் செய்யும் இனத்தைச் சார்ந்த வேட்கோவனை கூளி கணவதி என்பான் திருக்கோயிலில் உயரிய அந்தஸ்தான முதல் கணக்கனுய் பணி புரிய சமுதாயமும்-மன்னனும் அங்கிகரித்தனர் என்ற பேருண்மை புலப்படும் மேலும் முகத்தல் அளவை குவளை ஒன்றுக்கு ''புற்றிடங் கொண்டான் நாழி'' என்ற பெயர் இருந்தமையும் அறிய முடிகிறது.

கல்வெட்டு (TEXT)

1. ஸ்வஸ்திஸ்ரீ பூமாது புணரப் புவிமாது வளர
நாமது விளங்க ஜயமாது நிலவத் தன்னிரு பதமலர்
மன்னவர்சூட மன்னியவுரிமையால் மணிமுடி
சூடிச் செங்சோல் சென்று திசைதொறும் வளர்ப
வெங்கலி நீங்கி மெய்யறத் தழைப்பக் கலிங்க
மிரியக் கடல்மலே நடாத்தி வலங்கொளாழி
வரையாழி நடாத்தி இரு சுடரளவும் ஒருகுடை
நிழற்ற செம்பொன் வீர சிம்காசனத்து

2. முக்கோக்சிழானடிகளோடும் வீற்றிருந்
தருளிய கோப்பரகேசரி வன்மரான திருபுவன
சக்கிரவர்த்திகள் விக்கிரம சோழ தேவற்கு யாண்டு
8-வது சிங்களையற்று அமரபக்கத்து திரதியையும்
செவ்வாய்க் கிழமையும் பெற்ற ரேவதி நாள் கேய
மாணிக்க வளநாட்டுத் திருவாரூர் கூற்றத்து திருவாரூர்
உடையார் ஸ்ரீமூலஸ்தானமுடையார் கோயில் நில
நிவந்த முனடய சிவ பிராமணர் நாற்பத்தொண்

3. மர்க்கு சமைந்த சிவபிராமணன் கௌசிகன்
வீதிவிடங்கன் புற்றிடங் கொண்டார் ஸ்ரீபாதரட்
சையும் கவுசிகன் பரவை வீர சோழனை தில்லை
நாயக பட்டனும் கவுசிகன் அணியன் வீதிவிடங்
கனும் காசிபன் புற்றிடங் கொண்டான் பட்டனும்
பாரத்துவாஜி தூவாயன் ஆதிசதனும் பாரத்துவாஜி
துவாயன் தேவர் கண்டனும் பாராசரியன் சிவஞான
மேஷபாவகபட்டனும் சீகாக்கிரன மனுவான
புற்றிடங் கொண்டானும் காசிபன் கூத்தன் சியாரூர்
தேவனும் பாரத்துவா

4. -ஜி இராமன் திருமூலட்டான முடையானும்
கௌதவன் பூவணத் தடிகள் பந்தலும் காசிபன்தி
ஒளிவளர்விளக்கும் உள்ளிட்ட இவ்வனவோம்
மேலைமாராயர் படியான கோயிதுக் குறு
நாட்டு வீரராஜேந்திர தேவ மங்கலச் சாத்தில்
இருக்கும் குதிரைச்செட்டி சித்தசெட்டி மகன்
கங்கை செட்டிக்கு நாங்கள் உபயத்திட்டு கொடுத்த
பரிசாவது திருவாரூருடையார் ஸ்ரீமூலஸ்தான
முடையார்க்குத் திரு நுந்தோ விளக்கு கங்கை
செட்டிதேவர் பண்டாரத்து ஒடுக்கி

5. ன காசு ஈன இக்காசு பதின் ஏழும் தேவர்
ஸ்ரீபண்டாரத்தில் நின்றும் நாங்கள் கைக் கொண்டு
பலிசையால் திரு நுந்தா விளக்கு ஒன்றுக்கு நாள்
ஒன்றுக்குப் புற்றிடங் கொண்டான் நாழியால்
ஒக்கும் துடையுழக்கால் எண்ணை உழக்காக
நாள் முன்னூற்றறு பத்தஞ்சுக்கு எண்ணை
தொன்னூற்றெரு நாழி உழக்கும் இவ்வாண்டு
முதல் ஆண்டு தோறும் இந்த எண்ணை கொண்டு
இத்திரு நுந்தா விளக்கும் ஒன்றும் நித்தமும் முட்டாமல்
எரிக்கக்க

6. டவோமாக இக்காசு பதின்ஏழும் தேவர் ஸ்ரீ
பண்டாரத்தில் நின்றும் கைக்கொண்டோம் சிவபிரா
மணரோம் இத் திரு நுந்தாவிளக்கு எரிக்குமிடத்து
சந்திராதிச்சவர் சாசுவதியமாக நாங்களும் எங்கள்
வர்க்கத்தாரும் எங்களுக்கு அடைப்பான நிலமும்
நாங்கள் பெறக் கடவ பேறும் உள்ளதனையும்
நாங்களும் எங்கள் வர்க்கத்தாழும் எங்கள் பக்கல்
விலை கொண்டாரும் இத்திரு நுந்தாவிளக்கு ஒன்றும்
எரிக்கக் கடவோமாக இப்படி சம்மதித்து

7. கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்ளப் பெறுவானுக
சம்மதித்து உபயத்திட்டுக் குடுத்தோம் குதிரை
செட்டி சித்தை செட்டி மகன் கங்கை செட்டி
திருவாரூருடையார் ஸ்ரீமூலஸ்தானமுடையார்
கோயிலில் சிவபிராமணர் நாற்பதுதெண்மர்க்கு
சமைதே இவ்வனவோம் இவர்கள் பணிக்க
எழுதினேன் இக்கோயில் மூதல் கணக்கு வேட்

கோவன் திருவாரூருடையான் கூவி கணவதி
எழுத்து இப்படிக்கு காசிபன் நெமி நந்திஒளி
வளர்விளக்கினெழுத்து இது பரவை வீரசோழ
னெழுத்து

8. இது மனுவான புற்றிடங் கொண்டான் சயி
ஜைக்குயானமைக்கு கோயில் கணக்கு திருவாரூருடை
யான் எழுத்து கௌசிகன் புற்றிடங்கொண்டார்
ஸ்ரீபாதரட்சை சயிஜைக்கு யானமைக்கு ஒளிவார்
விளக்கினெழுத்து இது கூத்தன் சீயான்மைக்குத்
திருவாரூருடையர் எழுத்து கௌசிகன் அணியன்
வீதிவிடங்கன் எழுத்து. இப்படிக்கு சிவகுஜாதன்
இஷபவாகனன் பட்டன
எழுத்து இது இராமன் திருமூலட்டான
முடையான் எழுத்து தூவா

9. இப்படி காசிபன் புற..... ..
பன்மாகேசுவர ரட்சை

திருவாரூர் கல்வெட்டு எண். 47

இடம்: இரண்டாம் பிரகாரம்—வடக்குப் பிரகாரம்—தென் புறசுவரில் கிழக்கு பகுதியில் துவங்கும் முதல் கல்வெட்டு.

காலம்: கி. பி. 12ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் உள்ளது.

செய்தி: திருவாரூர் கல்வெட்டுக்களில் குறிப்பிடத்தக்க முக்கியமான கல்வெட்டாகும். இவ் வடமொழி கல்வெட்டு—கிரந்த எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளது.

பாண்டி குலாந்தக சதுர்வேதிமங்கலம் எனும் ஊரினைச் சேர்ந்த அந்தணாகள் ஒன்றுகூடி ஆகமங்கள், புராணம், வேதம் உபநிஷத்துக்கள் இவைகள் அடிப்படையில் ஆராய்ந்து ரதகாரர்கள் அல்லது கம்மாளர்கள் என்ற வகுப்பினைச் சேர்ந்தவர்களின் சமுதாய அந்தஸ்த்து, உரிமைகள் அவர்களுக்குரிய தொழில்கள் இவைகளை முறைப்படுத்திய அரிய செய்தியைக் கூறுகிறது.

அனுலோமாக்களைப் பற்றி பேசும் இக்கல்வெட்டு சோழர் கால சமுதாய அமைப்பினையும், சமுதாயம் தாழாமல் சமநிலைப் படுத்திய திறனையும் வெளிப்படுத்துகிறது.

திருவாரூர் கல்வெட்டு எண்-48

இடம்: இரண்டாம் பிரகாரம்—கிழக்குப் பிரகாரம் அனுக் கண் கோபுர வாயிலின் வடபுறம் உள்ளது.

மன்னன்: இரண்டாம் இராஜாதிராஜன்

காலம்: இரண்டாம் ஆட்சியாண்டு—கி. பி. 1164 மார்ச் மாதம் 30ஆம் நாள்

செய்தி: பழையனூர் உடையான் வேதவன முடையாளான அம்மையப்பனான ராஜராஜப் பெருவிலையாகக்கொண்டு இரண்டு இடங்களில் நிலம் வாங்கி, அந்நிலத்திலிருந்து விளையும் போனகப் பழநெல்லால் இறைவனுக்கு அமுது செய்ய வேண்டும் எனக்கூறி ஆதிசண்டேஸ்வரர் திருவடிகளிலே நீர்வார்த்துக் கொடுத்து, அளித்த சாசனமே இக்கல்வெட்டாகும்.

கல்வெட்டு (TEXT)

1. ஸ்வஸ்திஸ்ரீ|| கடல் சூழ்ந்த பார் மகளும் பூ மகளும்
கலை மகளும் அடல் சூழ்ந்த போர் மகளும் சீர் மகளும்
வந்து வாழ நாற்கடல் சூழ்புவி ஏழும் பாற்கடல்
போல் புகழ்பரப்ப ஆதியுகமாம் என்ன சோதிமுடி
டூனைந்து அருளி அறுசமையமும், ஐம்பூதமும் நெறி
யில் வந்து பாரிக்கத் தென்னவருஞ் சேரலருஞ்
சிங்களருஞ் முதலாய மன்னவர்கள் திறை சுமந்து
வந்திண்டிச் சேவிப்ப ஊழியூழியொரு செங்கோ—

2. ல் எழுபாரும் இனிதளிப்பச் செம்பொன் வீரசிம்
ஹா சனத்து உலகுடை முக்கோகிழானடிக
ளோடும் வீற்றிருந்தருளிய கோ ராஜகேசரி
வன் மரான திருபுவன சக்ரவர்த்திகள் ஸ்ரீராஜா
திராஜ தேவற்கு யாண்டு 2 மேஷ நாயற்று
பூர்வ பட்சத்து ஷஷ்டியும் திங்கட்கிழமையும்
பெற்ற புனர்பூசத்துநாள் ஜயங்கொண்ட

சோழ மண்டலத்து மேன்மலைப் பழையனூர் நாட்டு
பழையனூருடையான் வேதவன முடையா

3. ன் அம்மை அப்பனைராஜராஜ விழுப்பரையனேன்
உடையார் திருவாரூர் ஸ்ரீமூலஸ்தான முடை யார்
தேவதானத்து எனக்கு காணியாக ராஜராஜப்
பெருவிலை திருவீதி ஆண்டார் களிற் பெருஞார்
கிழவன் றென்றி மூவாயிரத்தொருவன் பேரில்
அனதி நாமத்தாற் கொண்டுள்ள காணியான
கேயமாணிக்க வளநாட்டுத் திருவாரூர்
கூற்றத்துத் திருவாரூர்ப்பால் ராஜராஜ
விளாக

4. நிலம்.. ஒன்றரையே ஒருமா முக்காணியும்
நொடியல் கருணைகடச்சேரியான ஸ்ரீநந்தீஸ்வர
விளாக நிலம்...இரண்டரையே மூன்றுமா
மூக்காணி முந்திரிகையாக . ...நாலேகாலே
அரைமா முந்திரிகையும் இக்கோயில் ஆதி சண்டே
ஸ்வரர் திருநாமத்திலே காணியாகத் திருப்
பூதியுதூட்டு விளாகமாய்க் கோயிலுழவு
முற்றுட்டாக்.

5. கப் போனகப் பழநெல் நட்டு அமுதுபடிக்கு
ஸ்ரீபண்டாரத்திலே அளக்கக் கடவதாக
ஆதிசண்டேஸ்வரர் ஸ்ரீஹஸ்தத்து நீர்
வார்த்துக் குடுத்தேன் ஜயங்கொண்ட சோழ
மண்டலத்து மேன் மலைப் பழையனூர் நாட்டுப்
பனழையனூருடையான் வேதவனமுடையான்
அம்மை அப்பனை ராஜ ராஜ விழுப்பரையனேன்

இக்கல்வெட்டின் கீழ் இரண்டாம் இராஜாதி ராஜனின் மெய் கீர்த்தியின் ஒரு பகுதி மட்டும் உள்ளது.

1. ஸ்வஸ்திஸ்ரீ கடல் சூழ்ந்த பாருமகளும் பூமகழும், கலை
மகளும்.....
போர் மகளுஞ்சீர்மகளும் மரிந்துவாழ நாற்கடல் சூழ்புவி
ஏழும்
பாற்கடல் போல் புகழ்பரப்ப ஆதியுகமா மென்னச்
சோதிமுடி

புனைந்தருளி அறுசமையமும் ஐம்பூதமுநெறியில் வந்து
பூர்க்குத்...

.....

திருவாரூர் கல்வெட்டு எண்-49

இடம்: இரண்டாம் பிரகாரம்-கிழக்கு பிரகாரம் அணுக்கன் கோபுர வாயிலின் தென்புறம்

மன்னன்: மூன்றாம் குலோத்துங்கன்

காலம்: 8ஆம் ஆட்சியாண்டு-கி. பி. 1184-85

செய்தி: ஜயங்கொண்ட சோழமண்டலத்து மேல் மலைப் பழையனூர் நாட்டு பழையனூருடையான் வேதவனமு.....
..(பெயர் கல்வெட்டில் சிதைந்துள்ளது—இவனது முழுப்பெயர் —வேத வனமுடையான் அம்மையப்பனான பல்லவராயன்) அளித்த மூன்று நுந்தா விளக்குகள் பற்றி குறிப்பிடுகிறது. இப் பெருமகன் இரண்டாம் இராஜாதிராஜனின் உயர் அதிகாரியாய் விளங்கியதோடு மூன்றாம் குலோத்துங்கன் காலத்திலும் உயிர் வாழ்ந்தவன். இவன் அளித்த பிற அறக்கொடைகள் பற்றியும் திருவாரூர் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

இந்த சாசனப்படி முன்பு சுங்கம் தவிர்த்த சோழரான முதற் குலோத்துங்கன் காலத்தில் செய்துகொண்ட ஓர் ஒப்பந்தப்படி புதுக்குடி என்ற கிராமத்தில் காணியாய் விடப்பட்டு பின்பு விளை நிலமாக திருத்தி விடப்பட்ட 9மா நிலத்தை வேதவனமுடையான் 3 நுந்தா விளக்கு எரிப்பதற்கு தானமாய் அருளினான். இந்த நிலங்களை திருவிசலூர் அடிகள் என்பவனும் ஏற்றுக்கொண்டு தினம் மூன்று விளக்குகளுக்கும் 3 உழக்கு *நெய் வீதம் ஆண்டொன்றுக்கு இருநூற்றெழுபத்து முன்னாழி மூவுழக்கு நெய் அளப்பதாக உறுதியளித்து சாசனத்தில் கையப்பமிட்டுள்ளனர்.

மேற் குறித்த மூன்று விளக்குகளும் முறையே திருவாரூர் மூலஸ்தானமுடைய இறைவர், வீதி விடங்கப் பெருமான், திருக் காம கோட்டமுடைய பெரிய நாச்சியார் இவர்கள் முன்பு ஏற்று விக்கப்பட வேண்டும் என்பதே வேதவன முடையானின் அறக் கொடையாகும்.

கல்வெட்டு (TEXT)

1. ஸ்வஸ்தி || புயல் வாய்த்து வளம் பெருகப்
பொய்யாத நான் மறையின் செயஷ்ணாய்ப்பத் திருமகளுஞ்
செயமகளுஞ் சிறந்துவாழ வெண்மதி போல்
குடைவிளங்க வெல்வேந்தர் அடி வணங்கி
முன் மடந்தை மனங்களிப்ப மனு நிதி தழைத்
தோங்கச் சக்கரமும் செங்கோலும் திக்கனைத்துஞ்
செலநடப்புக் கற்புகாலம் புவிகாப்ப.....

2. ப்பரகேசரி பதமரான திருபுவனச் சக்கரவத்
-திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழதேவற்கு யாண்டு
அ. துலா நாயற்று உடையார் திருவாரூர் ஸ்ரீ
மூலஸ்தான முடையார்க்கும் வீதி விடங்கப்
பெருமானுக்கும் திருக் காமக் கோட்டமுடைய
பெரிய நாச்சியாற்குந் திரு நுந்தா விளக்கெரிக்க
ஜயங்கொண்ட சோழ மண்டலத்து மேல்மலைப்
பழையனூர் நாட்டுப் பழையனூருடையான்
வேதவன மு.....

3. விளக்கு மூன்றுக்கு நாள் ஒன்றுக்கு நெய்
மூவுழக்காக நான் முன்னூற்றறுபத்தைஞ்சு
-க்கும் நெய் இரு நூற்றெழுபத்து முன்னுழி
மூவுழக்கும் தேவதானம் கேய மாணிக்க
வள நாட்டுத் திருவாரூர் கூற்றத்து பிரம
-தேயம் புதுக்குடியில் காணியாளர் பக்கல்
உடையார் சுங்கம் தவிர்ந்தருளின குலோத்துங்
-க சோழ தே .....

4. மாய் இவ்வூரவர் பக்கல் இவர்
விலை கொண்ட பிரமாணப்படி காணியாய்
விலை நிலமாய் திருத்தி விட்ட
இந்நிலம் ஆறுமாவும் இவ்வூர் காணி ஆளரில்
இழக்கந் திறத்து திருவிசலூர் அடிகள் பட்ட
னேன் கைக் கொண்டு திருநுந்தா
விளக்கு இரண்டுக்கு ஆட்டைக்கு அளக்கு
நெய் நூற்றெண்பத் திருநாழி உரியும் சேந்த
மங்கலத்திலும் இறையாங்குடியிலும் ....
..... வ ... ஆற்று ... அ ..

5. பாய இவர் திருத்திப் பயிர் செய்துவிட்டு
இறையாங்குடியில் ஆக
இந்நிலம் மூன்று மாவும் இறையான் குடியில்
இருகுகும் வெள்ளாளன் மாராய மங்கலமுடை
யான் வீதிவிடங்கனேன் கைக்கொண்டு
திருவிளக்கு ஒன்றுக்கு ஆட்டைக்கு
அளக்கு நெய் தொண்ணூற்றொரு நாழி உழக்கும்
அளக்க சடவோமாகவும் இப்படிக்கு
நாங்கள் அளக்கு மிடத்து இந்நிலம் நாங்கள்
வேண்டும் பயிர்செய்து முற்றூட்டுங் கொண்டு
இட்டபடி .....புற்றிடங்
தொண்டு .....

திருவாரூர் கல்வெட்டு எண்-50

இடம் :- இரண்டாம் பிரகாரம் — கிழக்கு பிரகாரம் அனுக்கன் கோபுரவாயிலின் தென்புறம்.

மன்னன் :- இரண்டாம் இராஜாதிராஜன்

காலம் :- ஒன்பதாம் ஆட்சியாண்டு— கி.பி. 1172

செய்தி :- வேதவனமுடையான் அம்மையப்பனை பல்லவ ராஜன் என்பான் இரண்டாம் இராஜாதிராஜனின் அமைச்சர் தலைவனாக பணியாற்றியவன். இவன் அளித்த அறக்கொடைகள் பற்றி மேலும் சில கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. திருவாரூர் மூலஸ்தான முடைய இறைவனுக்காக குலோத்துங்க சோழ வள நாட்டு, வேளாநாட்டு அம்மையப்ப நல்லூரில் 1500 காசுகள் விலையாக கொடுத்து நிலம் வாங்கி அளித்தமையை விவரிப்பதே இச் சாசனமாகும். இதில் அவன் சூலத்திய பல அதிகாரிகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அம்மையப்ப நல்லூர் என்னும் இவ்வூர் தற்போது அம்மையப்பன் என்ற பெயரில் திருவாரூருக்கு அருகில் உள்ளது.

கல்வெட்டு (TEXT)

1. ஸ்வஸ்திஸ்ரீ : கடல் சூழ்ந்த பாருமகளும் பூ மகளுங்
கலை மகளு மடல் சூழ்ந்த போர் மகளுஞ் சீர் மகளு
மமர்ந்து வாழ நாற்கடல் சூழ் புவி ஏழும் பாற்கடல்
போல் புகழ் பரப்ப ஆதியுகமா மென்னச் சோதி
முடி புனைந் தருளி அறுசமையமும் ஐம் பூதமும்
நெறியில் வந்து பாரிக்கத் தென்ன .....

8. சேவிப்ப வுழியுழி யொரு செங்கோல் எழுபாரும்
இனிதளிப்பச் செம்பொன் வீரசிம்காசனத்து
உலகுடை முக்கோக் கிழானடி களோடும் வீற்றிரு
ந்தருளிய கோராஜ கேசரி பன்மரான திருபுவன
சக்கரவர்த்திகள் ஸ்ரீராஜாதிராஜ தேவர்க்கு
ப்ராண்டு ஒன்பதாவது துலா நாயற்று அபர பட்
சத்து.....

9. மென்மலி பழையனூர் நாட்டுப் பழையனூருடையான்
வேதவனமுடையான் அம்மை அப்பனை பல்லவராஜ
னேன் உடையார் திருவாரூர் ஸ்ரீமூலஸ்தான முடை
யார்க்குக் காணியாக ஸ்ரீபாதத்து நீர்வார்த்துக்
குடுத்த நாள் ராஜாதிராஜப் பெருவிலை கொண்ட
நந்தியராஜரும் அமரகோனரும்.....

4. ங்க சோழப் பல்லவரயரும் புரவுவரி ஸ்ரீகரண
நாயகம் தந்தை நல்லூருடையாரும் எழுத்திட்ட
பிரமாணப்படி என் காணியான குலோத்துங்க
சோழ வளநாட்டு சிறுகூற்ற நல்லூர்ப் பிறிந்த ராஜராஜ
ன் பொத்தூரான அம்மையப்ப நல்லூர் நிலம்
ள ... ...

5. மதித்த காசு ஆயிரத்தை நூறு இக்காசு
ஆயிரத்தை நூறும் ஒடுக்கி இன்னிலம் நாற்தரை
யே ஒரு மாமுக்காணி அரைக்காணி முந்திரிகை
க் கீழ் ஒண்பது மாவரையும் நான் கொண்ட
பிரமாணப் படியே நாயனூர் ஸ்ரீபாதத்திலே
நீர்வார்த்துக் காணியாகக் குடுத்து இந்த
ராஜாதி ராஜப் பெருவிலைப் பிரமாண.....
... ...

திருவாரூர் கல்வெட்டு எண் 51-

இடம்: இரண்டாம் பிரகாரம்–கிழக்கு பிரகாரம் அனுக்கன் கோபுர வாயிலை ஒட்டி தென்புறம் உள்ளது.

மன்னன்: இரண்டாம் ராஜாதிராஜன்

காலம்: ஐந்தாம் ஆட்சியாண்டு–கி. பி. 1167

செய்தி: இக்கல்வெட்டு வரலாற்று சிறப்புடைய ஒன்று. மன்னனுடைய திருமுகம் (ஸ்ரீமுகம்—King's order) கல்வெட்டாகப் பொரிக்கப்பட்டுள்ளது. பல்லவராஜன் (திருச்சிற்றம்பலமுடையான் பெருமானம்பிப் பல்லவராயன் அல்லது வேதவனமுடையான் அம்மையப்பனை பல்லவராயன் என்ற உயர்மட்ட அதிகாரிகளுள் ஒருவன்) திருவாரூரில் நிகழ்ந்த ஒருமுறைகேட்டை மன்னனிடம் எடுத்துச் சொல்ல, அதற்கு மன்னன் எடுத்த நடவடிக்கையே இத்திருமுகமாகும்,

இத்திருமுகம் அனுப்பப்படுவதற்கு 40 ஆண்டுகள் முன்பு, விக்கிரம சோழனின் 9 ஆம் ஆட்சியாண்டில் (கி. பி. 1127-ல்) திருவாரூரில் செட்டிகளுக்கு நூற்று முப்பது மனையும், செக்காற்களுக்கும் (வாணியச் செட்டி) அவர்களை சார்ந்து உள்ளவர்களுக்கு இருபது மனையும், சோளேந்திர சிங்க வேளைக்காரர் என்ற படை வீரர்களுக்கு ஐம்பது மனையும் ஆக 200 குடியிருப்பு மனைகளையும் நீக்கி மற்ற வரி இல்லாத நத்தத்தை திருவாரூர் இறைவனுக்கு மடைவிளாகமாகவும், திருவாரூர் திருக்கோயிலில் பணி புரியும் ஊழியர்களுக்கு (பதிபாத மூலப்பட்டுடையப் பஞ்சசாரிய தேவகன்மாகள், மாகேஸ்வர கண்காணிகள், ஸ்ரீகாரியம் செய்வான் போன்றவர்களுக்கு) குடியிருப்பு மனைகளாக விக்கிரம சோழன் அளித்து ஆணையிட்டு ஓலையும் அனுப்பியுள்ளான். அதன்படி சில காலம் அனுபவித்தார்கள். பின்பு கோயில் ஊழியர்களுக்கான மனைகளையும் செட்டிகளே கைக்கொண்டு அனுபவித்ததால் ஊழியர்கள் பிற இடங்களில் (தங்கள் உரிமை பறிக்கப்பட்டு) குடியிருந்தமை பல்லவராஜனுல் கண்டுபிடிக்கப்பட்டது. முன்பு விக்கிரம சோழனுல் செட்டிகளுக்கும், செக்கார்க்கும், வேளைக்காரர்க்கும் அளிக்கப்பட்ட 200 மனைகள் தவிர திருவீதியில் உள்ள மனைகளை மீண்டும் நடவடிக்கைகள் மேற்கொண்டு கோயில் ஊழியர்களுக்கு அளித்ததோடன்றி, நத்தத்துக்கு நூறு காசு நஷ்ட ஈட்டுத்தொகை (Compensation) அளிக்கவும்; உத்தரவிட்டு பின்பு இவ்வாணையை ஊர் கணக்கில் பதிவு செய்யவும், திருக்கோயில் கல்லிலும் வெட்டுமாறும், உத்திரவிட்டமையை திறம்பட உரைக்கிறது இக்கல்வெட்டு.

விக்கிரம சோழனது ஆட்சிக்கு பின்பு இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன் போன்ற மன்னர்கள் ஆண்டபோதும் கண்டுபிடிக்கப்படாத ஓர் முறைகேடு பின்பு கண்டுபிடிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது நோக்குதற்குரிய ஒன்றாகும்.

கல்வெட்டு (TEXT)

1. ஸ்வஸ்திஸ்ரீ || திருபுவன சக்கரவர்த்திகள்
ஸ்ரீராஜாதிராஜ தேவர்க்கு யாண்டு ஐந்தா
வது நாள் பத்தொன்பதிலுல் பிரசாதஞ்
செய்தருளின திருமுகப்படி திருபுவன சக்கரவர்த்தி
கோ

2. நேரின்மை கொண்டான் திருவாரூர் உடையார்
ஸ்ரீமூலஸ்தானமுடையார் கோயிலில் பதிபாத மூலப்
பட்டுடைப் பஞ்சாசாரியத் தேவர் கன்மிக்கும்
ஸ்ரீ மாகேஸ்வரக் கண்காணி செய்வார்க —

3. வுக்கும் ஸ்ரீ காரியஞ் செய்வானுக்கும் திருவாரூர்
நகரத்து இறையிலி நத்தத்திலே இவ்வூர்ச்
செட்டிகளுக்கு நூற்று முப்பது மனையும் செக்கார்க்
குங் இவர்கள் அனுசாரத்

4. துள்ளார்க்கும் இருபதுமனையுஞ் சோளேந்திர
சிங்கன் வேளைக் காறர்க்கு ஐம்பது மனையுங்
குடியிருப்பாகவும் நீக்கி நின்ற நத்தம் உடையார்
ஸ்ரீ மூலஸ்தான முடையார்க்குத் —

5. திருமடைவிளா கமாய் நிவந்தக் காறர்க்குக்
குடியிருப்பாகவுங் கடவதாகவுங் கடவதாக
விக்கிரம சோழ தேவர்க்கு ஒன்பதாவது நாளிலே
ஓலை சென்று இப்படியே சிலநாள் அனுபவித்து வர
-ச் செ

6. ய்தே நிவந்தக் காறர்க்குக் குடியிருப்பான
மனைகளையுஞ் செட்டிகளே கைக் கொண்டார்களை
ன்றும் இவ்வூர் இறையிலி நத்தத்துத் திருவாரூர்
நகரத்துச் செட்டிகளுக்கு இவர்கள் குடியிருப்பான
தெற்கிற் புறத்திரு வீ —

7. ாதியும் இதன் தெற்கு இவர்களும் இவர்கள்
அனுசாரத்துள்ளாருங் குடியிருந்து கடைகட்டிப்
பரிமாறி வருகிற அவனி நாராயணப் பெருந்தெருவிற்
செக்கார் ஒழுகைக்கு மேற்கும் அகப்பிணவர்
தெருவுக் —

8. -கு வடக்கும் குடியிருப்பாகவும் செக்கார்க்கு
அவனி நாராயணப் பெருந்தெருவிற் செக்கார்

ஒழுக்கை என்கிற இதுக்குக் கிழக்குக் குடியிருப்
பாகவும் சோளேந்திர சிங்கன் வேளாக் காறர்
க்குத்தே

9. ற்கிற் புறத் திருவீதிக்கு வடக்கு ஐம்பது
மனை குடியிருப்பாகவும் நீக்கி நின்ற .....
மூடையார்க்குத் திருமடை விளாகமாய்
நிவந்தக்காரர் பல இடங்களிலும் குடியிருக்
கிறூர் திரு —

10. வீதியிலே சேர மனையெடுத்து இருக்கவும் திரு
வாரூர் நகரத்துக்கு .....
டுவருகிற காசிலே திருமடை விளாகமாய்
நிவந்தக் காறர்க்கு குடியிருப்பான நத்தத்துக்
கு நூ

11. –று காசு நாலாவது முதல் தவிர்ந்து நீக்கி நின்ற
காசு இந்நகரத்துக்கு .....ளவும்
இப்படிக்குக் கோயிலிலே கல்வெட்டவும் பெற
வேணுமென்று பல்லவராஜன் நமக்குச்சொன்
னமையில் இப்படி செய்யக் கடவதாகச் சொல்லிக்
கணக்கிலும் இட்டு .....களுக்குச்
சொன்னேம் திருவாரூர் இறையிலி நத்தத்திற்
தெற்கிற் புறத்திரு வீதியு .....

(கல்வெட்டு சிதைந்து முற்றுப்பெறவில்லை)

திருவாரூர் கல்வெட்டு எண்-52

இடம் :- இரண்டாம் பிரகாரம் – கிழக்கு பிரகாரம்
அனுக்கன் கோபுர வாயிலுக்கு தென்புறம்

மன்னன் :- முதலாம் குலோத்துங்கன்

காலம் :- 44 ஆம் ஆட்சியாண்டு – கி.பி. 1113 - 14

செய்தி :- கேய மாணிக்க வளநாட்டு திருவாரூர் கூற்றத்தைச் சேர்ந்த ப்ரமதேய கிராமமான புதுக்குடி ஊர் சபையினர் தேவாசிரிய மண்டபத்தில் கூடி, இத்திருக் கோயிலுக்கு விற்ற நில சாசனமே இக் கல்வெட்டாகும். இத் திருக்கோயிலில் உள்ள உலகுய்ய கொண்ட காமகோட்டத்தில் எழுந்தருளியிருக்கும்

உழை நங்கை என்ற இறைவியின் பூஜைகளுக்கும், தினசரி வழி பாட்டிற்குமாக நிலம் பெற வேண்டி திருவாரூரில் இருக்கும் பணி மகன் திரிபுவன முடையான் இராஜேந்திர சோழனை குலோத் துங்க சோழ மலையராஜபன்மர் 24 ½ கழஞ்சு பொன்னை திருவாரூர் கோயிலில் இருந்த ''தியாக விநோதன் பண்டாரத்தில்'' முதலீடு செய்தான். இதனை புதுக்குடி சபையினர் பெற்றுக் கொண்டு ஆதி சண்டேசுவர தேவர்க்கு இறையிலியாக (வரியில்லா நிலம்) எல்லா விதமான பாசன உரிமைகளுடன் நிலங்களை விற்றுக் கொடுத்த னர். ''தியாக விநோதன்மாடை'' என்ற எடைக்கல் (Standard weight) குறிப்பிடப்பட்டுள்ளது.

கல்வெட்டு (TEXT)

1. ஸ்வஸ்திஸ்ரீ புகழ்மாது விளங்க ஜயமாது விரும்ப
னிலமகள் னிலவ மலர் மகள் புணர உரிமையிற்
சிறந்த மணிமுடி சூடி மிநவர் நிலைகெட வில்லவற்
சூலதர எனை மன்நவர் இழியலுற்றழிதர
திக்கனைத்தும் தன் சக்கர நடாத்தி வீரஸிங்
-காதனத்து அவனி முழுதுடையாளொடு விற்றிருந்
தருளிய கோவிராச கேசரிவன்மர்

2. திருபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்
-க சோழதேவற்கு யாண்டு 44வது கேயமாணிக்
-க வளநாட்டுத் திருவாரூர் கூற்றத்து பிரமதேயம்
புதுக்குடியில் உறுப்புட்டூர் கன்னைய பட்டனும்
இழக்கந்திறத்து சங்கார சிங்கப்பட்டனும் கூவி
-ண்டூர் கோவிந்தப

3. -ட்டனும் உள்ளிட்ட சபையோம் திருவாரூர்
தேவாசிரிய.....வனத்து கூட்டங்குறைவற
கூடியிருந்து ஆதிசண்டேசுவர தேவர்க்கு
நிலவிலை யாவணம் இவ்வூர் இருக்கும் பணிமகன்
திரிபுவன முடையான் இராஜேந்திர சோழனை
குலோத்துங்க சோழ மலையராஜ பன்மர் உலகுய்ய
கொண்ட கா—

4. —மக் கோட்டத்து எழுந்தருளியிருக்கும் உமை
நங்கை.....மாற்றுக்கும் நிலைநிமந்தத்
-துக்கும் நிலங்கொள்ள தியாக விநோதன்

பண்டாரத்து மேற்படியார் மாடையொக்க
குடிஞைக் கல்லால் ஒடுக்கின பொன் இருபத்து
நாற்கழஞ்சு அரையும் நாங்கள் கைக்

5. கொண்டு இவ்வாதி சண்டேசுவரதேவர்க்கு
இப்பெ.....கொண்டு பொலியூட்டாக
சந்திராதிததவற் சாசுவதியமாக விற்றுக்குடுத்த
நிலத்து கீழ்பாற்கெல்லை ஸ்ரீமூலஸ்தான முடையார்
நம்பி திருக்கள் நிலத்துக்கு மேற்கும் வடபாற்கெல்லை
ஆலங்குளத்துக்கும் கொம்மடித்திட

6. -லுக்கும் தெர்க்கும் மேற்பார்க்கெல்லை ஸ்ரீ
மூலஸ்தான .....நிலத்துக்குக் கிழக்கும்
தென்பாற் கெல்லை நாட்டார் வாய்காலுக்கு வடக்கும்
ஆக இவ்விசைந்த பெரு நான்கெல்லை உள்தடியி
இரண்டினுல் குழி ஆயிரம் ஒரு நூற்று இருபத்து
அஞ்சிநால் நிலம் அரையே மாகாணி இன்நம்
இவர் -

7. க்கே விற்றுக்குடுத்த நிலத்துக்கு கீழ்பாற்க்கெல்லை
தச்சனிலத்து மேற்கும் தென்பாற்கெல்லை
ஆலங்குளத்துக்கும் கொம்மடித்திடலுக்கு
வடக்கும் மேல்பாற்கெல்லை ஸ்ரீ மூலத்தான
-முடையார் தெற்புறத்துக்கு கிழக்கும் வட
—பாற்கெல்லை கலிதிரன் வாய்க்காலுக்கு தெற்குமா
-க இவ்விசைந்த ெ-

8. -பரு நாங்கெல்லையுள் நடுவுபட்ட குழி முந்நூற்று
ஐம்பத்திநாலே முப்மாவரையும் இன்நம் இவர்க்
-கெய் விற்றுக்குடுத்த நிலத்துக்கு கீழபாறகெல்லை
தெறப்பு ததுக்கு மேற்கும் தென் பாற்கெல்லை செல்லூர்
எல்லைக்கும் நாட்டார் வாய்க்காலுக்கு வடக்கும்
மேல் பாற்கெல்லை புதுக்குடி வாய்க்காலுக்கு
கி-

9. -ழக்கும் வடபாற்கெல்லை வரியற்றூர் எல்லைவாய்
-க் காலுக்கும் கலிதிரன் வாய்க்காலுக்கு
தெற்க்குமாக இவ்விசைந்த பெரு நான்கெல்லையுள்
நடுவுபட்ட தடி யிரண்டினுல் க குழி எண்ணூற்று
இருபத்து ஐஞ்சினுல் நிலம் எட்டு மாக்காணியும்

இன்நம் இவற்கே விற்றுக் குடுத்த நிலத்துக்கு
கீழ் பாற்கெல்லை திருமேற் -

10. கோயில் ஆழ்வார் நிலத்துக்கு மேற்கும்
தென்பாற்கெல்லை கலி திரவாய்க்காலுக்கு
வடக்கு மேல்பாற்கெல்லை வாயற்றூர் எல்லைக்கு
கிழக்கும் வடபாற்கெல்லை . . . . கெங்யிலா னிந்த்
-துக்கும் திருமெய்காவலப் புறத்துக்கும் வட்ட
-மணியான் நிலத்துக்கும் தெற்குமாக இ விசைதெ
பெரு நான்கெல்லை உள்

11 நடுவுபட்டதடி இரண்டிநால் குழி மூவாயிரத்திரு
-னூற்று ஐம்பதிநால் நிலம் ஒன்றரையே இருமா
-வரையும் விற்றுக் குடுத்துக் கொள்வதான பொன்
இருபத்துனூற்க் கழஞ்சரை இப்பொன் இருபத்து
னூற் கழஞ்சரையும் ஆவணக் களியே கைச்
செலவரக் கொண்டு தெராதித்தவற் சாசுவதிக
-மாக இறையிலி பண்—

ணிக் குடுத்தோம் இவ்வாதி சண்டேசுர
தேவற்க்கு இப்புதுக்குடி சபையோம் இன் நில
த்துக்கு இதுவேய் விலை ஆவதாகவும்
இது வேய் பொருள் மாவறுதி பொருள் செல
வோலையாவதாகவும் இதுவல்லது வேறுபொருள்
மாவறுதிப் பொருள் செலவோலை காட்டக் கட
வரல்லாதாராகவும் இப்படி இசைதெது விலைக்
கறவிற்றுப் பொருள்

13 அறக் கொண்டு விற்று விலையாவணப் செய்து
குடுத்தோம் சந்திராதித்தவற் சாசுவதிக மாக
இறையிலி பண்ணிக் கொடுத்தோம் ஆதி
-சண்டேசுவர தேவற்க்கு இப்புதுக்குடி சபையோம்
இன்நிலத்து பண்டு நீர் பாயும் வாய்க்
கால்...ல் நீர் பாயப் பெறுவதாகவும்
பண்டு நீர் வாரும் படியே நீர் வாரவும்
பெறுவதாகவும் செய்நீர் வெட்டியு

14. மற்றும் திருவாசலில் போன்த குடிமை
செய்யக் கடவரல்லாதாராகவும் இப்பரிச்சைந்து
விலைக்கற விற்றுப் பொருளறக்கொண்டு விற்று
விலையாவணஞ்செய்து குடுத்தோம், இவ்வாதி

சண்டேசுவர தேவற்கு இப்புதுக்குடி சபைக்கு
—ச் சமைந்த உறுப்புட்டூர் வாமனபட்டனும்
உறுப்புட்டூர் நாராயணப்பட்டனும் இழக்க
திறத்து ஸ்ரீ நாரசிம்கபட்ட

15 -னும் உறுப்புட்டூர் சன்தெயபட்டனும்
கூவண்டூர் கோவிந்தபட்டனும் இவ்வனை
-வோம் உள்ளிட்ட சபையோம் இப்பரிசு
கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொள்ளப் பெறு
—வாராகவும் இப்பரிசு இசைசெது விற்றுக்
குடுத்தோம் ஆதிசண்டேசுர தேவற்கு உறுப்புட்
-டூர் நாராயணப்பட்டனும் இழக்கன் திறத்து
ஸ்ரீ நாரசிம்ஹபட்டனும் உறுப்பு —

16. ட்டூர் கன்தெய பட்டனும் கூவண்டூர் கோ
—விந்த பட்டனும் இவ்வனைவோம் பணியால் இ சந்த
—மாத்தூருடையான் கோவிந்தன் அபவன்
எழுத்து. உறுப்புட்டூர் வாமனபட்டன் எழுத்து
உறுப்புட்டூர் நாராயணபட்டன் எழுத்து இவை
உறுப்புட்டூர் கந்தைய பட்டன் எழுத்து இவை
இழுக்கன்திறத்து ஸ்ரீ நாரசிம்ஹ பட்டன்
எழுத்து

17. இவை கூவண்டூர் கோவிந்த பட்டன் எழுத்து
இவை உறுப்புட்டூர் வாமன பட்டன் எழுத்து
இவை கவுசியன் ஆதித்தன்னைய பிரான் எழுத்து
இவை காசீபன் சந்திர சேகர.....
எழுத்து இப்படி அறிவேன் பாரதாயன் நின்னை
வீற்றிருந்தான் எழுத்து ||.

திருவரிஞர் கல்வெட்டு எண்—53

இடம்:- இரண்டாம் பிரகாரம்—கிழக்கு பிரக்ர்ம் அனுகி கன் கோபுர வாயிலை ஒட்டிய தென்புறம்.

மன்னன்:- இரண்டாம் இராஜாதிராஜன்

காலம்:- 10ஆம் ஆட்சியாண்டு—கி.பி. 1173 பிப்ரவரி 27 செவ்வாய்க்கிழமை.

செய்தி :- இரண்டாம் இராஜாதிராஜனின் அமைச்சர் தலை வனாய் பணியாற்றிய வேதவனமுடையான் அம்மையப்பனான பல்லவராஜன் திருவாரூர் திருக்கோயிலினுள் அமைந்துள்ள திருக காமகோட்டமுடைய பெரிய நாச்சியார் கோயிலின் பரலோக ....மென்மொழி நாச்சியார் ஆகிய அம்மனுக்காக திருவாரூர் கூற்றத்து சோழ கேரள நல்லூரில் நிலம் வாங்கி அளித்த சாசனமே இக்கல்வெட்டாகும். இதில் இம்மன்னன் காலத்திய உயர் அதிகாரிகளின் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன,

கல்வெட்டு (TEXT)

1. ஸ்வஸ்திஸ்ரீ: || கடல் சூழ்ந்த பாரேழுந் திசையெட்டுங்
காத்து நின்று தடமாமதியென விளங்கித் தரளவெண்குடை
நிலாவெறிப்ப ஆழ்வரை வரப்பாக அடற்கலியைப்பிலத்
தொதுக்கி ஊழிதோறும் புகழோங்க ஓராழிவெயிற்
பரப்பக் கயல் சிலையில் சால்விளைய கனிருரெயிற்
கரங்குவிப்ப புய யாழியிற் போற்றி செய்ய புவி
மேருவில் வீற்றிருப்ப திருவானையுஞ் செங்கோலுந்
திசையெட்டுங் காவல்கொள்ளப் பெருவாழ்வுபெற்று
-யிரனைத்தும் பிழை....த்த....க்கவரச் சமய
மாறுந் தலையெடுப்பத் தருமு மருமறை

2. யு மோங்க அமைவில்லா மறுவொழுக்க மாதியாம்படி
நிலை நிற்க ஓர்ப்பினுந் தம்முறு கனவினும் ஒன் றெ டொன்று
பகையின்றிப் போர்ப்புலியும் புல்வாயும் புக்கொரு
துறை நீருண்ணப்பொன்னி நதியும் பொய்யாது

புயலும் புனல் கரவாது மன்னிய நெதி வளம்
பெருக்க விளைவயலின் வளம் சுரக்கப் போகபூமி
யிதுவென்னப் போகமெல்லாம் வந்தீண்டி ஏகவானை
அரசுரிமை எழுபொழிகளும் பெற்றதென்னப் பாற்கடலிற்
கார்க் கடல்ப் படிவாழ முடிசூடி ஆர்த்த வமராபி
-ஷேகச் செ

3. லிரசர் திளைத்தாட எவ்வுலகமும் இருள் நீங்க
வந்த கோமான் இவன் என்று கவ்வைதிரக் கலி
காலத் தாதிகாலங் காட்டினனென இவன்
காக்கும் புவியனைத்தும் யாவையும் நினைந்
தின்றருளியவன் காக்குமென அகிலலோக
ங்களும் அடியடையக் குலைபடுவன தெங்குகளே

கோட்படுவன இளங்கமுகே அலைபடுவன நீர்
நிலையே அதிர்படுவன இடியேறே தளம் படுவன
போர் வரம்பே தடைபடுவன கோபுரமே உளம்
படுவன சூள்மகளிரே யொறுப்புண்பன மத
-களிறே தடுப்புண்பன கோட்டகமே
தள்ளுண்பன

4. பூங்கொடியே கறைபடுவது நிறைமதியே பட்டுண்பன
அணியல்குலே பரிந்தாற்றுவ பரியாகமே குறை
படுவன குழற் சுருளே குழைவில்லன மணிக்
கொங்கையே மறைபடுவன சூற்காஞ்சியே
மால் கொள்வன வணங்கிடையே என்று பாடிப்பார்
வேந்தரிளங் களிற்றின் மேற்போகச் சென்றிறைஞ்சிப்
பார் வேந்தர் திருவாசற் புற நிற்பச் சேரலருந்
தென்னவருஞ் சிங்களருங் கொங்கணரும்
பேரரசு பெறவேண்டிப் பிரியாது சேவிப்பத் தம்மரசு
தாம் பெற்றுத் தம்முடனே

5. சூடிய் அம்மருங்குந் தேவியர்கள் அணிமங்கலம்
பெற்றருள வாளரசர் தலைகாக்க யாதவகுல
மரபில் வந்த சோளகுல மணி விளக்குச்
சோளகுல மாணிக்கம் மடநாண் முதற்
-கண நான்கின் வடிவு கொண்டு வளவ சேகரன்
உடனனையுந் திருவாணையுமுடன் செல்லமுடி
கவித்தாள் மண்ணரசர் வந்திறைஞ்ச
மகுடம் புனை வளவனுடன் பெண்ணரசும்
பெருந்தாயமும் பெறறருளும் பெண் பெருமாள்
உறையூரும் பேருரகையூமுதகையு மதுரா
புரியுமுறை முறை

6. யாண்டருளி முளரிநகர் துறந்தவன்னம்
பொன்னனசனஞ் சிங்கவணை போலங் கறிபகப்
பூஞ்சோலை முன்னேவல் நித்தல் முறை முறையே
பெறுமுலைப்பெருமாள் அளகநுதற்கயல் நயனத்
தம் பொற் குழைக் கொம்பென்ன உளமகிழ
வந்தருளிய உலகுடைய முக்கோக் கிழா
-னடியுடன் வாழி வாழி மணம் புணர்த் தூழி
யூழி பல வோங்கிச் செம் பொன வீர சிங
-கா சனத்து உலகுடை முக் கோக் கிழாண்டிகளோ
-டும் வீற்றிருந்தரு

7. ளிய கோவி ராஜ கேசரி பற்மரான திருபுவன
சக்கரவர்த்திகள் ஸ்ரீ ராஜாதிராஜ தேவற்கு
யாண்டு 10 வது மீன நாயற்று பூர்வ பட்
-சத்து தரயோதசியுஞ் செவ்வாய்க்கிழமையும்
பெற்ற மகத்துநாள் ஜயங்கொண்ட சோழ
மண்டலத்து மேன்மலைப் பழையனூர் நாட்டுப்
பழையனூருடையான் வேதவனமுடையான்
அம்மையப்பனை பல்லவராஜனேன்
உடையார் திருவாரூர் ஸ்ரீ மூலஸ்தான
—முடையார் கோயில் திரு

8. க் காமக் கோட்டமுடைய பெரிய நாச்சி
—யார் கோயிலிற் பரலோக ... ... மென்
மொழி நாச்சியார்க்கு கேய மாணிக்க
—வளநாட்டுத் திருவாரூர் கூற்றத்துச்
சோழ கேரள நல்லூரில் நான் இராஜாதி
ராஜப் பெருவிலெகொண்ட நந்தியர் ராஜ
—ரும் அமரகோனும், இராஜராஜ விழுப்பரையரும்
ஜனத்தரயரும் விசையராயரும் மூவேந்தயரும்
புரவுவரி ஸ்ரீ கரண நாயகம் கானூர் சிழவனும்
திருமந்திர ஓலை இராஜேந்

9. திர மூவேந்த வேளானும் எழுத்திட்ட பிரமாணப்
—படி நிலம் நாற்பத்தொன்றே சின்ன முங்
காணியாக இக்கோயில் ஆதி சண்டேஸ்வர
தேவர் ஸ்ரீ பாதத்து நீர்வார்த்துக் குடுத்தமை
—க்கு இவை பல்லவராஜனெழுத்து |

திருவாரூர் கல்வெட்டு எண்-54

இடம்: இரண்டாம் பிரகாரம்-கிழக்கு பிரகாரம் அனுக்கன் கோபுரவாயிலுக்கு தென்புறம்.

மன்னன்: மாறவர்மன் ஸ்ரீவல்லபதேவர் (பாண்டியன்)

காலம்: 35 ஆம் ஆட்சியாண்டு—கி. பி. 1342, ஆகஸ்ட்டு மாதம் 7ஆம் நாள்.

செய்தி: குலோத்துங்க சோழவளநாட்டு பனையூர் நாட்டு திருத்தொண்டீஸ்வரம் என்னும் ஊரினனாகிய தோளான் இராச

ராச அகளங்க நாடாழ்வான் என்பான் இத் திருக்கோயிலில் தினமும் ஒவ்வொரு சந்திப்பொழுதும் எட்டுபேர்கள் அத்தியயனம் (வேதபாராயணம்) பண்ண வேண்டும் எனக்கூறி: 13 வேலி விளைநிலமும் இரண்டாயிரத்து நானூற்றுப்பத்து குழி படுகையும் கொல்லையும் விலைசொடுத்து வாங்கி இத்திருக் கோயிலுக்கு அளித்த சாசனமே இக்கல்வெட்டாகும்,

இச்சாசனத்தில் கையப்பமிட்டவர்களில் ஒருவன் இக் கோயில் முதற்கணக்கு வேட்கோவன் திருவாரூருடையான் அவனியாளப் பிறந்தானான தேவன் கண்ட வேளான் என்பவனாவான். தலைமை கணக்கு அதிகாரியாக பணிபுரிந்த இவன் வேட்கோவர் (மட்பாண்டம் தயாரிக்கும் வகுப்பினர்) இனத்தவன் என்பதும், அன்றைய சமுதாய நிலையில் பயின்றவர்கள் எந்த இனத்தவராயினும் உயர் பதவி வகித்தனர் என்பதை இக்கல்வெட்டால் அறிய முடிகிறது. பாண்டிய மன்னர்கள் காலத்திய ஒருசில திருவாரூர் கல்வெட்டுகளில் இதுவும் ஒன்று.

கல்வெட்டு (TEXT)

1. ஸ்வஸ்தி ஸ்ரீ : கோமாறுபன்மர் திருபுவனச்
சக்ரவர்த்திகள் ஸ்ரீ சீவல்லப தேவற்கு யாண்டு
35 ஆவது முப்பத்தஞ்சாவது சிம்ஹ நாயற்
–று பூர்வ பட்சத்து பஞ்சமியும் புதன் கிழ
–மையும் பெற்ற சித்திரை..... .....

2. க்குடுத்த பரிசாவது இன் பேரால் முப்பத்து
நாலாவதுவரை சுரவித்துறைக்கு இட்ட கணக்
குப்படி நீக்கி நிலைக்கும் இராசராசன்
திருவீதி செங்கடை திருத்தோப்பு திருநந்த
–வனம் மாவடைக்கும் முப்பத்து மூன்றுவது
நீக்.....

3. படுகையும் கொல்லையும்.....390
ஆககுழி 2410 விளைநிலம் 13ல் இக்குழி
இரண்டாயிரத்து நானூற்று ஒருபதுக்கும்
விளைநிலம் 13ல் இக்குழி இரண்டாயிரத்து
நானூற்று ஒருபதுக்கும் விளைநிலம் பதின்
மூவேலிககும எம்மிலிசைந்த விலைப்பொருள்
அன்றுடு நற்காசினுல் ஆ (தி).....

4. த தொன்றும் விலையாவ தாகவும் இதுவே
பொருள் மாவறுதிப் பொருள்ச் செலவோலை
யாவ தாகவும் இப்படி சம்மதித்து விலைக்குற
விற்று விலை வ.....

5. த் தொன்றும் ஆவணக் களரியே காட்
டெற்றி கைச் செலவறக் கொண்டு விற்றுவிலை
பிரமாணம் பண்ணி குடுத்தேன் குலோத்துங்
—கு சோழ வள நாட்டு பனையூர் நாட்டு திருத்
தொண்டிசுரத்து தோளான் திருத்தொண்டிசுர
முடையார் இராச ராச

6. தேவர் கண்டப் பெருமாள் எழுத்து : உ
கோமாகிழான் கண்ணுடை விதியான் வளத்து
வாழ்வித்தான் எழுத்து கோமாகிழான் பெரிய
தேவன் புற்றிடங் கொண்டான் எழுத்து இந்த
தே.....

7. தம்பிக்காதன் தம்பிரான் தோழப் பிரமாரயன்
தற்குறியானமைக்கு இவை கோயில் முதற்
கணக்கு திருவாரூருடையான் தேவர் கண்ட
வேளான் எழுத்து இப்படி அறிவேன் கோயில்
சாமதாயம் புற்றிடங்கொண்ட நம்பியேன்
இப்படி அறிவேன் கோயிற் சாமதாயம் ஆலால
சுந்தர நம்பியே

8. நகரத்து பசயீந் செருவனூருடையான்
வளவ கோனேன் இப்படி அறிவேன் இக்
கோயில் கோயில் முதற்கணக்கு வேட்கோவன்
திருவாரூருடையான் அவனியாளப் பிறந்தானை
தேவன் கண்ட வேளானேன் இப்படி அறிவேன்
இத்.....

9. அத்தியயநம் பண்ணுமிடத்து நாளொன்று
- க்கு ஒரு சந்தி எட்டுப்பேராக அத்தியய
- னம் பண்ணவும். இப்படி சம்மதித்து
உதகபூர்வதன்மதான இறையிலியாக சந்தி
- ராதித்த வரையும் செல்லக் குடுத்தேன் திருத்
தொண்டிசுரமுடையான் இராசராச
அருளாங்களுடா.....

திருவாரூர் கல்வெட்டு எண். 55

இடம்: இராண்டாம் பிரகாரம்-கிழக்கு பிரகாரத்தில் உள்ள இராஜநாராயணன் மண்டபத்தின் வடபுறசுவரில் வட கீழ் திசை யில் தொடங்கி மண்டபத்தின் மத்திய பகுதிவரை எழுதப் பட்டுள்ளது.

காலம்: கி.பி. 12ம் நூற்றாண்டு சோழர் கால எழுத்தமைதி

செய்தி:- மிகப்பெரிய இந்த கல்வெட்டு இதுவரை படி எடுக்கப்படவில்லை. கல்வெட்டு பகுதியில் சுண்ணாம்பு பூச்சு அதிகமுள்ளபடியால் கல்வெட்டு செய்திகளை அறிய முடியவில்லை படி எடுத்தால் புயனுள்ள வரலாற்றுத் தகவல்கள் திடைக்கும்.

திருவாரூர் கல்வெட்டு எண். 56

இடம்;- இரண்டாம் பிரகாரம் வடக்கு பிரகாரம் வடபுற சுவர்.

மன்னன்:- கோப்பரகேசரிவர்மன் விக்கிரம சோழன்

காலம்:- 5ஆம் ஆட்சியாண்டு

செய்தி:- ஆரூர் இறைவனுக்கு அளிக்கப்பட்ட நிலம் பற்றி கூறும் சாசனமாகும்.

திருவாரூர் கல்வெட்டு எண். 57

இடம்:- இரண்டாம் பிரகாரம் வடக்குப் பிரகாரம் வடபுற சுவர்,

மன்னன்:- மூன்றாம் குலோத்துங்கன்

காலம்:- நான்காம் ஆட்சியாண்டு (கி.பி. 1182)

செய்தி:- திரிபுவனசக்ரவர்த்திகள் குலோத்துங்க சோழ தேவரின் நான்காம் ஆட்சியாண்டில் தனுர் நாயற்று பூர்வபட் சத்து திருவாதிரை நாளாம் வியாழனன்று குலோத்துங்க சோழ வளநாட்டு ஸ்ரீகடம்பன் உத்தம சோழ மங்கலத்து சபையோர் ஆரூர் திருக்கோயிலின் இராஜநாராயணன் திருமண்டபத்தில் கூடி

வைத்துக் கொடுத்த பரிசை விவரிக்கின்றது. அருமொழிதேவ வளநாட்டு தக்களூர் நாட்டு பருத்தியூரான அனபாய நல்லூரில் 2600 குழி நிலத்தை 29 காசுக்கு விற்றுக் கொடுத்த செய்தி கூறப் பெற்றுள்ளது.

திருவாரூர் கல்வெட்டு எண்-58

இடம்:- இரண்டாம் பிரகாரம் வடக்குப் பிரகாரத்தில் க எண். ஐம்பத்தேழினை அடுத்து எழுதப் பெற்றுள்ளது.

மன்னன்:- மூன்றாங் குலோத்துங்கன்

காலம் மூன்றாம் ஆட்சியாண்டு (கி.பி. 1181)

செய்தி:- இக்கல்வெட்டு சோழ மன்னன் குலோத்துங்கனின் மூன்றாம் ஆட்சியாண்டில் திருவாரூர் திருமண்டலிகாணியுடைய சிவபிராமணர்கள் விற்ற நிலவிலையாவணமாகும். எம் அப்பனார் வேம்பற்றூர் உடையார்க்கு தேவதானமாக அளிக்கப்பெற்ற செய்திகூறும் இச்சாசனத்தில் ஸ்ரீமாகேஸ்வர கண்காணி, திரு மண்டளீஸ்வர முடையார் வீதிவிடங்கன், திருக்கோயிலில் திருப் பதியம் விண்ணப்பிக்கும் (தேவாரம் பாடும்) வீதிவிடங்க தேவன், பொற்பண்டாரி செந்தாமரைக் கண்ணன் மண்டையாழ்வான், திருமண்டளிப்பிச்சன், கணக்கு புதுக்குவிடையான் என்பார்கள் கையொப்பமிட்ட செய்தியும் கூறப்பெற்றுள்ளது.

திருவாரூர் கல்வெட்டு எண். 59

இடம்: முதல் பிரகாரம் கிழக்கு பகுதியில் உள்ளது.

மன்னன்: முதலாம் குலோத்துங்கன்

காலம்: 23 ஆம் ஆட்சியாண்டு—கி. பி. 1092–93

செய்தி: முதற்குலோத்துங்கனின் ''புகழ் சூழ்ந்த புனரி'' எனத்தொடங்கும் மெய் கீர்த்தியுடன் தொடங்குகிறது கல்வெட்டு. கற்பலகைகள் திருப்பணியால் மாற்றப்பட்டமையால் செய்திகளின் சில பகுதிகள் கட்டுமானத்துள் புதைந்துள்ளன. திருவாரூரைச் சேர்ந்த நகரத்தார் இத்திருக்கோயிலுக்காக விற்றுக் கொடுத்த நிலம் பற்றி கூறுகிறது இச்சாசனம்.

கல்வெட்டு (TEXT)

1. .....,.....கழ்.....,,,வியில் பொன் நேமிய
ளவு தென் நேமி நடப்பவி,,,

15. ங் கங்க மண்டளமும் சிங்கணமென்னும் பாணி
இரண்டும் ஈண்டிய புகழ் ழோடு . . . .ண்டி மண்ட
.....(ம்)

16. பரித்தரங்கமும் பொரு பரித்தரங்கமும் தந்திர
வாரியும் உடைத்தாய் வன் து வட கடல் தென்கடல்
பா . . . . து போலத்.....

17. ப் பஞ்சவர் ஐவ்வரும் பொருதபோர் களத்து
அஞ்சி வெரு நெளித் தோடி அரண நப்புக்க.....
த்துடை.....

18. வர் தப்மை வநசரர் திரியும் கொற்ற விசைய ஸ்
தம்பம்.....த் திசை தோறும் நி.....

19. .....வம் மத்தவன் கிரி படுசைாய்யமுகந்
—நியும் கைக்கொண்டருளி தென்னுட்டெல்லை காட்டி
கு....

20. சும் பெற மா வேறியதன் வருவு தனித் தலைவரைக்
குறுகலர் குறையக் கோட்டாலுட்பட நெறி தோறு
.....கள் விட்ட ரு.....

21. புயத் தலங்களும் போல வீரமும் தியாகமும்
விளங்க பார் தொழச் சிவனிடத்து துமையெனத் திநசிந்
....ணி அவநிமு.....

22. வநுடன் கங்கை விற்றிரு தெதன மங்கையர் திலதம்
ஏழிசை வல்லபி ஏழுலகும் முடையாள் வாழியி.....
இகள் ஸ்ரீகு....

23. முழுதுடையாளோடும் வீரஸிம்காசனத்து
வீற்றிருந்தருளிய கோராஜ கேசரிபன்மரான திரிபுவன
சக்.....திகள் ஸ்ரீகு.....

24. ண்டு இருபத்து மூன்ருவது கேயமாணிக்க வளநாட்டு
திருவாரூர்க் கூற்றத்து திருவாரூர் நகரத்துச்
சமைந்த ச.....

25. மருகநகட்டு மூவேந்த வேளாளும் உருத்திரன்
கூத்தனை இராஜேந்திர சோழச்சி ரெட்டி யுமது
—கூருடை ய.....

26. னும் நீல துருடையான் சீ கண்டனும் த.....
நெரையனும் வீதிவிடங்கன் ஐயாரனை குலோத்துங்க
சோ.....முவையிரா
27. நாந குலோத்துங்க சோழ அ....தா.....ம்
செய்யான் சிறிய பந்தல் கூத்தனை இராஜ ராஜநாரா
யணச்.....ட்டி யும்சுய.....நாம்
28. நான வீதிவிடங்க சிரெட்டியும் .....வாரூர் நகரத்தோம்
திருவாரூருடையார் ஸ்ரீ மூலஸ்தான முடையார்.....
29. வறக் கூடியிருந்து இத்தேவர்... .....கொண்டு
ஆதிசண்டேஸ்வர தேவர்க்கு நாங்.....
30. தங்குளமென்று பேர் கூவப்பட்ட.....குள...
ளத்துக்கு வடக்கு எங்களூர்
31. .....க்கு எமக்கும் இதன் பொ.... ( )
விற்றுக் குடுத்த....
32. ——————————

திருவாரூர் கல்வெட்டு எண். 60

இடம்:- முதல் பிரகாரத்து நுழைவுக் கோபுர வாயிலின் வடபுறம்

இக்கல்வெட்டு இது வரை படி எடுக்கப் பெறவில்லை. மிகவும் சிதைந்துள்ளது.

திருவாரூர் கல்வெட்டு எண். 61

இடம்:- முதல் பிரகாரத்தின் திருச்சுற்று மாளிகையின் உப பீடத்தின் குமுதம் மற்றும் கண்டம் ஆகிய பகுதிகளில் முழுதும் சோழர்கள் கால கல்வெட்டுக்கள் காணப்பெறுகின்றன. அவற்றின் மேல் பன்நெடுங்காலமாக அடிக்கப்பெற்ற சுண்ணாம்புப் பூச்சினால் சாசனங்களைப் படிக்க இயலவில்லை. சுண்ணாம்புப் பூச்சுமுழுவதும் அகற்றப் பெற்றால் தான் எத்தனை கல் வெட்டுக்கள்உள்ளன என்பதை அறிய இயலும்.

திருவாரூர் கல்வெட்டு எண். 62

இடம்:- தியாகராஜ சுவாமி கருவறை தென்புற வெளிச் சுவரில் கொடுங்கைக்கு கீழாக பிரஸ்தளத்தில் துவங்கி பின்பு தென் மற்றும் மேற்கு நோக்கிய சுவர்களில் இக்கல்வெட்டுஉள்ளது

மன்னன் :- முதலாம் குலோத்துங்கன்

காலம் :- இருபத்து நான்காம் ஆட்சியாண்டு (கி.பி. 1094)

செய்தி:- "புகழ் சூழ்ந்த புணரி" என்ற முதலாம் குலோத்துங்க சோழனின் மெய் கீர்த்தியுடன் காணப்பெறும் இக் கல்வெட்டில், இம்மாமன்னனது இருபத்து நான்காம் ஆட்சி யாண்டில் சத்திரிய சிகாமணி வளநாட்டுத் திருநறையூர் நாட்டுப் பழையாறு சிறான் அருமொழி ராஜேந்திர சோழன் என்பான் திருவாரூர் இறையனார் ஸ்ரீமூலஸ்தான முடையாரின் திருமஞ் சனத்திற்காக (புனித நீராட்டல்) ஒன்பது இராஜராஜன் மாடை என்ற எடைக்குச் சமமான 3 கழஞ்சு, 1 மஞ்சாடி 1 குன்றி எடை யுள்ள பொன்னை ஆரூர் திருக்கோயில் பண்டாரத்தில் முதலீடு செய்தார் என்ற குறிப்பும் பின்னர் கேயமாணிக்க வளநாட்டுத் திருவாரூர் கூற்றத்து பிரமதேயம் வேலங்குடி மகாசபையினர் ஆரூர் திருக்கோயிலில் கொங்கவேளர் மண்டபத்தில்கூடி தங்களுக்கு சொந்தமான 450 குழிநிலத்தை இறையிலி நிலமாக ஆரூர் இறை வனுக்கு சண்டீகேசர் என்ற பெயரில் விற்றுக்கொடுத்து அதற் கென அருண்மொழி இராஜேந்திர சோழன் முதலீடு செய்த (திருமஞ்சனத்திற்காக) பொன்னை விலையாகப் பெற்றுக் கொண்ட செய்தி விவரிக்கப்பெற்றுள்ளது.

கல்வெட்டு (TEXT)

1. ஸ்வஸ்திஸ்ரீ புசழ் சூழ்ந்த புணரி யகழ் சூழ்ந்த
புவியிற் பொன்னேமியளவுந் தன்னேமி நடப்ப
விளங்கு சயமகளி யிளங்கோப் பருவத்துச்
சக்கர கோட்டத்து விக்கிரமத் தொழிலாற்
புதுமணம் புணர்ந்து மதவரை யீட்டம்
வயிராகரத்து வாரியயிர் முனைக்
கொந்தளவரசர் தந்தளமிரிய வாளுறை கழித்துத்
தோள்வலிகட்டிப் போர்ப்பரி நடாத்திக் கீர்த்தியை
வடதிசை வாகை சூடித் தென்றிசை தேமரு
கமலப் பூமகள் பொதுமையும் பொன்

2. நியாடை நன்னிலப் பாவையின் தனிமையுந்
தவிரப் யுனிதத் திருமணிமகுட முரிமையிற் சூடித்
தன்னடியிரண்டுந் தடமுடியாகத் தொன்னில
வேந்தர் சூடமுன்னி மனுவாறு பெருகக்

கலியாறு வறப்பச் செங்கோல் திசைதொருஞ்
செல்ல வெண்குடை இரு நிலவளாக மெங்களுந்
தனது திருநிழல் வெண்ணிலாத் திகழ வொருதனி
மேருவிற் புலிவிளையாட வார்கடற்
றீவாந் தரத்துப் பூபாலர் திறைவிடு கலஞ்
சொரி களிறு முறை நிற்ப விலங்கிய தென்னவ

3. ன் கருந்தலை பருந்தலைத் திடத்தன் பொன்
நகர்ப் புறத்திடைக் கிடப்ப விந் நாட்
பிற்குலப் பிறைபோல் நிற்பிழை யென்னுஞ்
சொல்லெதிர் கோடிற் றல்லது தன்கை
வில்லது கோடா வேள்குலத் தரசர்
அளத்தியிலிட்ட களிற்றின தீட்டமும்
பட்ட வெம்பரியும் விட்டதன் ஞானமும்
கூறின வீரமும் கிடப்ப வேறின
மலைகளு முதுகு நெளிப்ப விழிந்த
நதிகளுஞ் சுழன்றுடைந் தோட விழுந்த
கடல்களுந் தலைவிரித் தலமரக் குடதிசைத்
தன்னாளுகந்து

4. தானும் தானையும் பன்னளீட்ட பல
பலமுதுகும் பயந்தெதிர் மாறிய சயப்பெருந்
திருவும் பழியிகந்து கொடுத்த புகழின் செல்வியும்
வாளா ரொண்கண் மடந்தைய ரீட்டமும்
மீளாது கொடுத்த வெங்கரி நிரையும்
கங்கமண்டலமும் சிங்கண மென்றும்
பாணியிரண்டு மொருலிசைக் கைக்கொண்
டீண்டிய புகழொடு பாண்டி மண்டலங்
கொள்ளத் திருவுளத் தடைத்து வெள்ளம்
வருபரித் தரங்கமும் பொருபரிக் கலங்களும்
தந்திர வாரியு முடைத்தாய் வந்து வடகடல்
தென்கடல் படர்வது

5. போலத் தன்பெருஞ்சேனையையேவிப் பஞ்சவர்
ஐவரும் பொருத

6. போர்க்களத் தஞ்சி வெரிநளித் தோடி யரணெனப்
புக்க காடறத்துடைத்து நாடடிப் படுத்து
மற்றவர் தம்மை வனசரர் திரியும்
பெற்றை வெஞ்சுரமேற்றிக் கொற்ற விசயத்

அப்பந் திசைதொறு நிறுத்தி முத்தின்
சலாபமு முத்தமிழ்ப் பொதியிலு
மத்த வெங்கரிபடு மய்யச் சையமும்
கன்னியுங் கைக்கொண்ட ருளித் தென்னுட்
டெல்லை காட்டிக் கடன் மல்லை நாட்டுள
சாவேறெல்லாந் தனிவிசும் பேற
மாவேறிய தன் வருதினித் தலைவரைத்
குறுகலர் குலையக்

7. கொட்டாறுட்பட நெறிதொறு நிலைகளிட்
டருளி திறல் கொள் வீரசிம்மாசன

8. ந் திரிய விட்டருளி பொங்கொளியார் .....

9. ந்தியாகமும் விளங்கப் பார்தொழச் சிவ
னிடத் துமையெனத் தியாகவல்லி
உலக முழுதுடையாளிருப்ப வவளுடன்
கங்கை வீற்றிருந்தென மங்கையர்

10. திலகம் ஏழிசை வல்லபி யேழுலகு முடையாள்
வாழி மலர்ந்தினி

11. திருப்ப ஊழியும் புவனி முழுதுடையாளொடும்
வீரசிம்ஹாசன

12. த்து வீற்றிருந்தருளிய கோராஜகேசரி
பர்மராந திரிபுவந சக்கரவத்திகள் ஸ்ரீ

13. குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு
இருபத்து சலாவது கேயமாணி

14. க்க வளநாட்டு திருவாரூர் கூற்றத்து
திருவாரூர் உடையார் ஸ்ரீ மூலஸ்தாநம் உ

15. டையார்க்கு திருமஞ்சநம் நிசதப்படி
ஆடி அருளுகைக்கு கடுவாயி நின்

16 ரும் நிசதங் கலநேய் தூணிப் பதக்கு
நீர் கொடு வந்து திருமஞ்சந சாலையி

17 லே திருமஞ்சநம் புரக்குந் தபஸ்யர்க்கு
நாள்லொன்றுக்கு நெல்க்குறுணி இருநாழி
யாக சண்டேஸ்வரனெ

18 ன்னும் திருமடத்தேய் அமுதுசெய்ய மடப்
புறமாக ஷத்திரிய சிகாமணி வளநாட்டுத்
திருநறை

19 யூர் நாட்டுப் பழையாறு கிழான் அருமொழி
ராஜேந்திர சோழன் இத் தேவர் பண்டாரத்து
ஒடு

20 க்கிரு ராஜராஜன் மாடை யொன்பதக்கும்
குடிநிறை காசு கல்நிறை பொன் முக் கழஞ்செய்
மஞ்சாடி யு

21 க்குன்றி இப்பொன் முக்கழஞ்செய் மஞ்சாடி
யுங் குன்றியும் கெயமாணிக்க வளநாட்டுத்
திருவாரூர் கூற்றத்

22 து பரஹ்மதேயம் வேலங்குடி மஹாஸ

23 பையோம் திருவாரூர் உடையார் ஸ்ரீமூலஸ்தாந

24 மூடையார் கோயில் உள்ளாலே கொங்க வேளார்
மண்ட

25 பத்தே நாங்கள் கூட்டங் குறைவறக் கூடியிருந்து
இவ் வூ

26 ர் ஆதிசண்டேஸ்வர தேவர் பக்கல் நாங்கள்
கொண்டு

27 இறையிலி செய்து குடுத்த நிலமாவது கடுவாயி

28 வடகரை நாங்கள் வில்கின்ற நிலத்துக்கு
கீழ் பாற் கெ

29 ல் லே ஸபையார் ஸபையார் அரை சூரான்
அறுமா

30 வுக்கு மேற்கும் தென் பாற்கெல்லே உறுப்புட்டோ

31 வல்லசன்மன் உள்ளிட்டார் நிலத்துக்கும்
ர்ராஜேந்தர

32 ஸிம்ஹ விண்ணகர்ாழ்வார் இறையிலி நிலத்து

33 க்கு வடக்கும் மேல் பாற்கெல்லே ஸ்ரீ மூலஸ்தா

34 முடையார் நிலத்துக்கு கிழக்கும் வடபாற்கெல்லை

35 தேவன் . . . . நிலத்துக்கும் பாரசிவன் வெண்கா

36 டன் சிதரன் நிலத்திற்கு தெற்கும் ஆக இவ்விசை

37 ந்த பெரு நான் கெல் லையுள் அகல் பட்ட
ரு குழி

38 சாநிய மும் இந்நிலத்துக்கு முன்பு
நீர் பாயும் வ

39. ண்ணமேய் பாயவும் நீர் வாருமிடத்திலே
வா.....

40 வடக்கு குளத்திலே இறைக்க பெறுவதாகவும் நா

41 ங்கள் விற்றுக்குடுத்து சந்திராதித்தவல்
சாலா போகமா

42 ந இறையிலி செய்து குடுத்து ஆதிசண்டேஸ்
வர தேவ

43 ர் பக்கல் இப்பொன் முக்கழஞ்சே
மஞ்சாடியும் குன்

44 றியும் நாங்கள் கொண்டு இந்நிலத்துக்கு
எச்சோ

45 று.....கூற்றரிசி பெருவரி சில்வரி வெள்

46 ளான் வெட்டி வேலிக்காசு மற்றும் திருவர்சலில் தே

47 பாந்த குடிமை யெப்பேர் பட்டதும் நாங்களே
இறுக்

48 கக் கடவோமாக இக்குழி நானூற்றைம்
பற்றுச் சிந்

49 நமும் விற்றுச் சந்திராதித்தவற்
ஸாஸ்வதிகயாக இறை

50 யிலி செய்து கொடுத்தோம் ப்ர ஹ்மதேயம்
வேலங்கு

51 டி மஹாஸபையோம் இந்த ஸபை முன்
னிருந்து ழு

52 முச் செறுவிலே நடுவில் ஸ.....

(மீதமுள்ள கல்வெட்டுப்பகுதி பிற்கால கட்டுமானத்தில் புதைந்துள்ளது.)

திருவாரூர் கல்வெட்டு எண்-63

இடம் :— தியாகராஜசுவாமி திருக்கோயில் கருவறை தென் புறச்சுவர்.

மன்னன் :— பரகேசரிவர்மன் இரண்டாம் இராஜேந்திரன்

காலம் :- மூன்றாம் ஆட்சியாண்டு (கி.பி. 1051)

செய்தி :- இம்மன்னன் தன் தந்தையால் கற்றளியாக எடுக்கப் பெற்ற வீதிவிடங்க தேவரின் திருக்கோயிலில் மண்டபத்தை பொற் தகடுகளால் போற்றி அழகு செய்தான். மேலும் வீதிவிடங்க பெருமான் அமரும் சிம்மாசனத்து பொன் போர்த்துவதற்கு எவ்வளவு பொன் செலவிடப்பட்டது என்ற விபரங்களை அன்றைய எடைக்கல் அளவில் குறிக்கப் பெற்றுள்ளது.

கல்வெட்டு (TEXT)

1 ஸ்வஸ்திஸ்ரீ இரட்டபாடி ஏழரை இலக்கமுங் கொண்டு

2 கொல்லாபுரத்து ஐயஸ்தம்பம் நாட்டி பேராற்றங்கரைக்

3 கொப்பத்து ஆகவமல்லனை அஞ்சுவித்து அவன் ஆனையும் குதிரையு

4 ம் பெண்டிர் பண்டாரமும் கைகொண்டு விஜயாபிஷே

5 கம்பண்ணி வீரசிங்காசனத்து வீற்றிருந்தருளின கோ

6 ப்ரகேசரி பந்மரான உடையார் ஸ்ரீராஜேந்திர தேவர்க்கு

7 யாண்டு கூ—ஆவது தாள ஓட்டு வட்டில் பொன் நி-ழு அலகுப

8. டி குடிஞைக் கல்லால் நூற்று எழுபத்து ஒன்றே . . .
வாக இது ராஜராஜன் கா

9. சு நிறை கல்லால் எடுக்கவந்த பொன் நூற்று ஐம்பத்து ஒன்பது மாவும் செம்பின்மேல்

10. பொன் போர்த்ததில் பள்ளித்தொங்கல் மொட்டும்
(உசெபெக) இருநூற்று

11. இருபத்து ஒன்பதும் செம்பில்மேல் பொன் போர்த்த
(கொளாதகவும்) கோர்த்தகவும் குடம் செம்

12. பொன் ர நு ை ெ பம் சிவப்ராஹ்மணன்
தாமோதிரன் அருளன் கைவசம்

13. யிருந்த செங்கழுநீர் திருப்பள்ளித்தாமம் நாலாயிரத்து
நானூற்று எழுபத்து நாலுக்கு . . . . வந்த காசு எழுநூற்று
எழுபத்து

14. ஏழும் பழைய ஸிங்காஸநத்து உரித்து
முதலான வெள்ளித்தட்டு

15. ம் அப்பத்தட்டான கண்ணன் கற்றளியும்
இவ்வடி விளத்தோட்ட

16. ...ம் உள்ளிட்டார் வசம் பொன் முப்பத்து
ஒன்றே ..... பொன் மண்டபத்து பணிக்கு

17- இட்ட பொந்நில் குறைத்து கடமைக்கு இட்ட
பொந்நில்

18. ஈச் சொப்பிக்கை ஈ... மேற்படி கல்லால்
க உ 77 ... ை ச ப

19. ஆக பறைக்கிட்ட . . . . . எழுபத்து ஏழு...
இதில் மேற்படியாளர்களுக்கு

20. காணியாக உடையார் ஏறி யருளும் ஸிங்ஹா
ஸ நத்து உபபீடத்து

21. ஒடுக்கிந பொந் (. . . . .) கணக்கால்
ை உ நில் சுருக்க கெரா . . . . . ம் கம்புக்கால்

ூலகை அ நில் சுருக்கிந பொன் . . . .

23. கைக்கம்பில் சுருக்கிந பொன் ெ ப கா ா உ ை க
ப ா ப நடுவில் பத்மகண்டத்து

24. காலுமுகத்து பட்டிகை யிலும் எழுதகத்திலும்
சுருக்கிந பொந் ந ப

25. பம் நாலுமுகத்து பந்மத்து சுருக்கிந பொந்
நூற்று எழுபத்துநாலு கழஞ்சேய் ஏழுமஞ்சாடி

26. முத்தின் கீழ்வாய் எழுதகத்திலும் கண்டத்திலும்

27. ஆயிரத்து முந்நூற்று நாற்பத்து ஒன்றே... கழஞ்சும்
.. ...ம் ஸர்வ் வாங்க காலில் சுருக்கி ந ல க.....

28. உத்திரத்திலும் எழுதகத்திலும் சுருக்கி ந
பொன்

29. நில் தெற்கில்காலில் சுருக்கி ந பொன்
.....வடக்கில் காலில்

30. போர்த்தகிலும் வடிம்பிலும் சுருக்கிந பொன்
நூற்று பதினொன் கழஞ்சும் 77 மஞ்சாடியும்

31 நில் தெற்கில் காலில் சுருக்கின பொன் ஆயிரத்து
நூறு கழஞ்சும் ... ...

32 .. .. தோரண கிட்டத்தில் சுருக்கிந பொன்
.....

33 ..... ஏ மம கீழ் மகு ... ...

34 இப் பொன் நின் திருமண்டபத்தில் மேஞ்ச
பொன்னும் ஸிங்காஸ ந த்தில் மேஞ்ச .....

(முற்றுப் பெறாமல் உள்ளது)

திருவாரூர் கல்வெட்டு எண்-64

இடம்:- தியாகராஜ சுவாமி திருக் கோயில்–கருவறை தென் புறச் சுவர்.

மன்னன்:- இராஜகேசரிவர்மன் ஸ்ரீ விஜயராஜேந்திர தேவர் (முதலாம் இராஜாதி ராஜன்)

காலம்:- 31 ஆம் ஆட்சியாண்டு (கி.பி. 1049)

செய்தி:- 'திங்களேந்தரு' என்ற மெய்கீர்த்தியுடன் துவங்கும் இராஜாதிராஜனின் ஸ்ரீ மு க ம ா ன (ஆணை) இக் கல்வெட்டில் அதிகாரி சிவபாதசேகர நல்லூருடையான் வெண்காடன் திருநீல கண்டனான இருமுடி சோழ மூவேந்த வேளான் என்பான் கோயில் பண்டாரத்திலிருந்த சில தங்க, வெள்ளிப் பாத்திரங்களை,

உடையார் வீதி விடங்க தேவரின் சபையை பொன்மயமாக செய்வதற்காக பயன்படுத்த உத்தரவிட்டமையை விவரிக்கின்றது.

கல்வெட்டு (TEXT)

(1-28) ஸ் வஸ் தி ஸ்ரீ நிங்களோர் தருதன்றெங்கல்
வெண் குடைக் கீழ் நிலமக ணிலவ மலர் மகட்
புனர்ந்து செங்கோ லோச்சிக் கருங்கள கடிந்து
தன் சிறிய தாதை யுற்திருந் தமையனுங்
குறி கொடன் னிளங்கோக் கிளையு நெறியுணர்
தன்றிருப் புதல்வர் தம்மை யுந் துன்றெழில்
வானவன் வில்லவன் மீனவன் கங்க
னிலங்கையர்க் கிறைவன் பொலங் கழற் பல்லவன்
கன்ன குச்சியர்க்கா வலனெனப் பொன்னணி
சுடர்மணி மகுடஞ் சூட்டிப் படர் புக
ழாங்கவர்க் கவர் நா டருளிப் பாங்குற
மன்னு பல் லூழியுட் டென்னவர் மூவருள்
மாளு பரணன் பொன்முடி யாளப்
பருமணிப் பசுந்தலை பொருகளத் தரிந்து
வாரள வியகழல் வீரகே ரளனை
முனை வயிற் பிடித்துத் தனது வாரணக்
கதக் களிற்றினு லுதைப் பித்தருளி
அந்தமில் பெரும்புகழ்ச் சுந்தர பாண்டியன்
கொற்ற வெண் குடையுங் கற்றை வெண் கவரியும்
சிங்கா தனமும் வெங்களத் திழந்து தன் முடிவிழத்
தலைவிரித் தடிதளர்ற் தோடத் தொல்லை முல்லையூர்த்
துரத்தி யொல்கலில் வேணாட்டரசைச் சேணாட்
டொதுக்கி மேவு புகழி நாமகுட மூவர் கெட
முனிந்து மிடல் கெழு வில்லவன் குடார்மடிக் கொண்டு
தன் நாடு விட்டோடிக் காடு கொளிப்ப
வஞ்சியும் புதுமலர் மலைந்தாங் கெஞ்சலில் வேலைகெழு
காந்தளூர்ச் சாலை கலுமறுத் தாகல மல்லது மஞ்சற்
கேவுஞன் தாங்கரும் படையா லாங்கயன் சேனையுப்
கண்டப் பயனும் கங்காதனும் வண்டமர் களிற்றேடு
மடியத் திண்டிறல் விருதர் விக்கியும் விசயா தித்தனுங்
கருமுரட் சாங்க மய்யனு முதலியர் சமர பீரு வொத
துடைய விரிசுடர்ப் பொன்னேடைக் கரிவுசவி யோடும்
பிடித்துத் தள்ளுடையிற் சயங் கொண்டொன்னூர்

கொள்ளிப் பாக்கை யுள்ளெரி மடுப்பித் தொருதனித்
தண்டாற் பொருகட லிலங்கையர் கோமான் விக்கிரம
பாகுவின் மகுடமும் முன்றளக் குடைந்த தெற்றமிழ்
மண்டல முழுவதும் மிழற் றெழு கடலீழம் புக்கவிலங்
கேசனுகிய விக்கரம பாண்டியன் பருமணி மகுடமும்
காண்டகு தன்ன வாக்கித் தன் கன்னகுச் சியினும்
ஆர்கலி மீழஞ் சீரி தென் றெண்ணி உளங்கொளந்
நாடு தன் னுறவொரும் புகுந்து விளங்குமுடி
கலித்த வீரசலா மேகன் போர்களத் தஞ்சித்
தன் கார்க் களிறிழிந்து கவ்வை யுற்றோடக்
காதலி யொடுற் தள் றவ்வையைப் பிடித்து தாயைமூக்
கரிய ஆங்கவ மானட் நிங்குதற் காக
மீட்டும வந்து வாட்டொழில் புரிந்து வெங்களத்
துலற்தவச் சிங்களத் தரசன் பொன்னணி முடியுங்
கன்னரன் வழிவன்துரை கொளீழத் தரசனுகியசி
வல்லவ மதன ராசன் மெல்லொளித் தடமணி முடியுங்
கொண்டு வடபுலத் திருகா லாவதும் பொருபடை
நடாத்திக் கண்டர் தினகரன் நாரணன் கணவதி
வண்டலர் தெரியன் மதுசூதனனென் றெனைப் பல
வரைசரை முனை வயிற றுரத்தி வம்பலர் தரு பொழிற்
கம்பிலி நகருட் சளுக்கியர் மாளிகை தகர்ப்பித்
திறக்க மில் வில்லவர் மீனவர் வேள் குலச்
சளுக்கியர் வல்லவர் கௌசலர் வங்கணர்
கொங்கணர் சிந்துர ரையணர் சிங்களர் பங்களர்
சுந்திரர் முதலிய வரைசரிடு திறைகளும்
ஆறிலெரன் றவனியுட் கூறுசொள் பொருள்களும்
உகந்து நான் மறையவர் முகந்து கொளக் கொடுத்து
விசுவலோ கத்தும் விளங்க மனுநெறிநின்
றசுவமே தச்செய்

29. தரைசு வீற்றிருந்த ஜயங்கொண்ட சோழனென்னும்
புகழ் கோராஜகேசரி பந்மரா ந உடையார்
ஸ்ரீ விஜையரா

30. ஜேந்த்ர தேவர்க்கு யாண்டு கூ யசு ஆவது
.... வளநாட்டுத் திருவாரூர்க் கூற்றத்து
திருவாரூர் உடை

31. யார் ஸ்ரீ வீதிவிடங்க தேவர்க்கு எழுந்தருளி

இருக்க பொன் மண்டபம் செய்க என்று
அதிகாரிகள் ..... மூவேந்த தே

32. வளானுக்குத் சாத்த மங்கல முடையான்
அழுதன் சீராளந் ஸ்ரீ காரியத்து உடையார்
பண்டாரத்து நின்றும் வாங்கிந தங்

33. ங்கங்கள் . . . . அடிப்பரிசு கோரம் ச ம்
கச்சுக் கோரம் + ம் கலசம் + ம்
குழித்தட்டு + ம் ஆக உ ரு ை + ன்றி
ஞல் அலகு நிலைப்ப

34. டி குடிஞைக் கல்லால் பொன்
எடுக்க குறைந்த பொன்
நீக்கி பொன்

35. ஞல் ராஜராஜன் காசு நிறை
கல்லால் பொன் ரு இதில்
தட்டான் கண்ணந் கற்றளியும் ரேவடி
வெண் காட

36. நும் மன்றக் கூத்தநும் உள்ளிட்டார்
கண் காணியாக கொட்டி பொன் மண்டபத்து
அதிஷ்டாநத்து சுருக்கிந பொன் ந 7 7 க

37 7ப77வ காலிநில் சுருக்கிந பொன் +ா77
காயகப.....மேற்சட்டத்து மேல்
விதாநத்து கண்டம் ஒன்பதிலும் துலாமந

38 லிலும் சுருக்கின கெ ந 77 சை ச.....
உத்திரத்திலும் கண்ணிப் போதிகையிலும்
சுருக்கின . . . . க II ச ை ப வி கூ ம்
மூன்று

39 கத்தில் அன்ன மாலையில் சுருக்கின பொன்
நூற்று இருபத்து ஏழு கழஞ்சே ஏழு மஞ்சாடி
கூடுகபோதகத்தில் அகவாயும் புறவாயும்
சுருக்கிநபொன் (. . . . .) ... ...

40 ... சுருக்கின (.., ...) தாமரைப் பூ
ஒன்றிஞல் (... ... . .) செவியும் தூக்கமும்
பொன் || ரு ை க

41 ..... ஞல் பொன் ஆக பொன் (... ...
.. ..)ஞல் செய்வித்த பொன் நிந் திருமண்டப

42 சிவபாத சேகர நல்லூருடையாந்
வெண்காடந் திருநீல கண்டஞந அதிகாரிகள்
இருமடி சோழ மூ (வேந்த வேளார்)

43 இது பந் மா ஹே ஸ் வர ரக்ஷை ॥ ஷ

திருவாரூர் கல்வெட்டு எண்-64

இடம்:- தியாகராஜசுவாமி கருவறை தென்புறச்சுவர் கல்வெட்டு எண் 63 முடிவுற்றதும், அதனுடன் தொடர்ந்தே வெட்டப்பட்டு உள்ளது.

காலம்:- மற்ற ஆண்டுக்குறிப்புள்ள கல்வெட்டுக்களில் குறிப்பிடப் பெறும் பூண்டி வாட்கூத்தன் செம்பியன் மூவேந்த வேள் என்பான் பற்றியே இக்கல்வெட்டு குறிப்பதால் சோழப்பெருமன்னர்களான முதலாம் இராஜாதிராஜன் அல்லது இரண்டாம் இராஜேந்திரன் காலத்திய கல்வெட்டு என்பதை அறிய இயலுகிறது.

செய்தி :- அறந்தாங்கி பூண்டியர் கோன் வாட்கூத்தன் செம்பியன் மூவேந்த வேளான் என்பான் திருவாரூர் வீதிவிடங்க பெருமானுக்கு சிங்காதனத்திற்காக சிங்கத்தலையுடன் கூடிய திருவாசிகை, தோள் மாலை பதுமம், பூந்தொங்கல், புறக்குடை, பொற்பீடம், பொற்புதவு, பொற்தூண்கள் பொற் தோரணங்கள் முதலியவற்றை செய்தளித்ததோடு அவ்விறைவனுக்கு அமுது செய்ய மந்திர போனகமும் வைத்த செய்தியை அழகுதமிழ் பாக்களால் விவரிக்கின்றது.

கல்வெட்டு (TEXT)

1 ஸ்வஸ்திஸ்ரீ தென்முகுட மங்கைத் த..... ....
ண்டன் செம்பொ.....

2 .....ாமான செங்கரர்க்கு வீதிவிடங்கரர்க்குத்
தென்னரு ....குச் செய் வித்தான்முன் ॥–

3 ஸ்வஸ்திஸ்ரீ சிங்கற லவாசிகை தோள் மாலை
பதுமன் தளிர் பூந்தொங்கல் புறக் குடை சூழ்கை

4 ச் சமைத்தான் யெங்குஞ் சிறந்தோங்கு வீதிவிடங்
கர்க்கு செம்பொன்னுல் அறந்தாங்கி பூண்டியர்கோந்

5 பொன்னூர் பிரபையும் பொற்பீடமும் பொற்புதவும்
பொன்னுருள் தூணும் பொற் றேரணமும் தென்னூரூர்
ஆர்த

6 தன்புறர் குடையைஞ் செய்தான் அறந்தாங்கி
கூத்தன் றென் பூண்டியார் கோந் ॥உ

7 ஸ்வஸ்தி ஸ்ரீ புந்தி விரிசடை ஆரூரற் கழுது
செய மந்திர போநகம் வைப்பித்தான் செந்திருவின்
வம்பியறும் பூண்

8 முலை தோய் வண் பூண்டி வாட்க் கூத்தன்
செம்பியன் மூவேந்த வேள்

திருவாரூர் கல்வெட்டு எண்-65

இடம்:- தியாகராஜசுவாமி கருவறை தென்புறச்சுவர்

மன்னன்:- இரண்டாம் இராஜேந்திரசோழன்

காலம்:- எட்டாம் ஆட்சியாண்டு (கி.பி. 1059

செய்தி:- திருமாது புவியெனும் என்னும் இரண்டாம் இராஜேந்திரனின் மெய்கீர்த்தியுடன் தி க ழு ம் இக்கல்வெட்டு அதிராஜராஜ வளநாட்டுத் திருவாரூர் இறையனார் ஸ்ரீமூலஸ் தானம் உடையார் கோயில் தேவ கண்மிகள் எழுதிய சாசன மாகும். இத்திருக்கோயில் வீதிவிடங்கப் பெருமானின் பங்குனி உத்திரத்திருநாளன்று பால் அமுது செய்தருளவும் சிவயோகி களுக்கும் தபசியர்களுக்குமாக ஆயிரம் சட்டிச்சோறு அளிப்ப தற்கும், இறைவனின் திருமஞ்சநத்திற்கு நீர்கொணர்வானுக்கும், திருமஞ்சன நீரில் இடும் வாசனை திரவியங்களுக்குமாக இத்திருக் கோயில் பண்டாரத்தில் முதலீடு செய்த காசுபற்றி விவரிக்கின்றது மேலும் அமுது செய்வதற்குரிய நெல்,சட்டி சோறு இடுவதற்குரிய நெல் அளவு, திருமஞ்சனம் வைப்பான், குடம் இடும் குயவன் ஆகியோர்க்குரிய ஊதியம் பற்றியும் கூறுகின்றது. திருமஞ்சன சாலையில் உட்புற விதானத்தில் கட்டும் மேற்கட்டி புடவை, திருமஞ்சன குடத்தின் மேல் கட்டும் நீர் மூடு புடவை, ஜலபவித்திர

தீர்த்த பாத்திரத்தின் மேல் கட்டும் புடவை ஆகியவற்றுக்காகவும் முதலீடு செய்யப்பட்ட காசுபற்றியும் குறிக்கப்பெற்றுள்ளது.

இக்கல்வெட்டுத் தொடரின் இறுதிப் பகுதியில் இக்கல்வெட்டுத் தொடரின் சுருக்கச்செய்தி பாடலாக காணப்படுகின்றது.

கல்வெட்டு (TEXT)

(1-33) திருமாது புவியெனும் பெருமாதரிவர்தன் மாதேவியர்
களாக மீதொளிர் வெண்குடை யுயர்த்து
திண்கலி பெயர்த்துத்தன் சிறிய தாதையாகிய வெறுழ்வலிக்
கங்கைகொண்ட சோழனைப் பொங்கிகல் இழுமுடி சோழ
னென்றும் பெருமுரட்டன்றிருத் தம்பியர் தம்முள் வென்றி
-கொள் மும்முடிச் சோழனைத் தெம்முனை யடுதிறற்
சோழ பாண்டியனென்றுங் கோழி மன்றெடுகழல்வீரசோழ
-னைப் படிபுகழ் கரிகால சோழனென்றும் பொருதொழில்
வாள் வலித்தடக்கை மதுராந்தகனைச் சோழகங்க
னென்றுந் தோள்வலி மேவிகல் பராந்தக தேவனைச்சோழ
வயோத்திய ராசனென்றும் இருதயத்தன்பொடுகருது
காதலருள் இத்தலம் புகழிராசேந்திர சோழனைஉத்தமசோழ
னென்றுந் தொத்தணிமுகைய விழலங்கன் முடிகொண்ட
சோழனை இகல் விசயாலய னென்றும்புகர் முகத்தெழுயர்
களிற்றுச் சோழகேரளனை வார்சிலைச் சோழகேரளனென்
-றுந் திண்டிறற்கடாரங் கொண்ட சோழனைத் தினகரன்
குலத்துச் சிறப்பமர் சோழ கனகராசனென்றுங்
கனைகடற் படிகொண்ட பல்புகழ் முடிகொண்ட சோழனை
சுந்தரசோழனென்றுஞ் செந்தமிழ்ப் பிடிகளிற்றிரட்ட
பாடிகொண்ட சோழனைத் தொல்புலி யாளுடைச் சோழ
கன்னகுச் சியராசனென்றும் பின்னுந்தன் காதலர் காதலர்
தம்முள் மேதகு கதிராங் கனைகழல் மதுராந்தனை
வெல்படைச் சோழ வல்லப னென்றும் மானச் சிலைகை
-யோ ராணைச் சேவகனை நிருபேந்திர சோழனென்றும்
பருமணிச் சுடரணி மகுடஞ் சூட்டிப் படிமிசை நிகழு
நாளினுளிகல் வேட்டெ முந்து சென்றெறிண்டி ற லிரட்ட
மண்டல

மெய்தி நதிகளும் நாடும் பதிகளு ம நேகம் அழித் தனன்
வளவ னெனு மொழிப் பொருள் கேட்டு வேக வெஞ்
சளுக்கிய

ஆகவமல்லன் பரிபவ மெனக்கி தென்றெரி விழித் தெழுந்து
செப் பருந் தீரத்தக் கொப்ப த் தகவையிற் சென் றெ திரேன்
–றமர் தொடங்கிய பொழுதவன் செஞ்சர மாரிதன் குஞ்சர
முகத்தினுந் தன்னிருத் துடையினுங் குன்றுறழ் புயத்தினுற்
றைக்க வுந்தன் னுடன் களிறேறிய தொடுகழல் வீரர்கள்
முடியவும் வகையாலொருதனி யநேகம் பொருபடை
வழங்கியும்
மொய்ம்மபர் சளுக்கி தம்பி சயசிங்கனும் போர்ப்புலி
கேசியுந் தார்த்தச பன்மனு மானமன்னவரின்
முண்டலியூசோ
கையனும் ஆனலன் புகழாரையனுந் தேனிவர்
மட்டவிழங்கல்
மொட்டையனுந் திண்டிறல் நன்னி நுளம்பனுமெனுமிவர்
முதலினர் எண்ணிலி யரைசரை விண்ணகத் தேற்றி
வன்னிய ரேவனும் வயப் படை த் துத் தனுங் கொன்னவில்
படைக் குண்ட மய்ய னு மென்றின வெஞ்சின வரைசரோ
டஞ்சிச் சளுக்கி குலங்குலை குலை ந்து தலை மயிர் விரித்து
வெந்நுற் றெருளித்துப் பின்னுற நோக்கி க் கால் பரிந் தோடி.
மேல் கடற் பாயத் துரத்திய பொழுதச் செருக்களத் தவன்
விடு
சத்ரு பயங்கரன் கரபத்திரன் மூல பத்திரசாதி பகட்டரை
சநேகமும் எட்டு நிரை பரிகளு மொட்டக நிரைகளும்
வராக வெல் கொடி முதலிராச பரிச் சின்னமும்
ஒப்பில் சத்தியவ்வை சாங்கப்பையென்றிவர் முதல்
தேவியர் குழாமும் பாவைய ரீட்டமு மினையென
பிறவு முனை வயிற் கொண்டு விசையா பிடேகம் செய்து
தென்றிசை வயிற் போர்ப் படை நடாத்தித் கார்க் கட லில
-ங்கையில் விறற் படைக் கலிங்கர்மன் விரசலா மேகனைக்
கட களிற் றெடு படக் கதிர் முடி கடிவித் திலங்கையர்க்
கிறைவன் ;மானு பரணன் காதலரிருவரைக் களத்திடை
பிடித்து மாப் பெரும் புகங் மிக வளர்த்த

34 கோப்பரகேசரி பந்மரான உடையார் ஸ்ரீஇராஜேந்
திர தேவர்க்கு யாண்டு அ-வது அதிராஜரா

35 ஜ வளநாட்டுத் திருவாரூர்க் கூற்றத்துத் திருவாரூர்
உடையார் ஸ்ரீமூலஸ்தானம் உடையார் கண்மீகளோம்ட

36 டையார் வீதிவிடங்கதேவர் பங்குனி உத்திரத்துநாள்
—த்து பால் திருவமுது செய்தருள

37 —வது சிவயோகிகளுக்கும் தபசியர்களுக்கும்
——ஒன்றுக்கு படி— — —

38 —த்துக்கு சட்டிச் சோறு ஆயிரத்துக்கு வேண்டும்
நிவந்தங்களுக்கு

39 —ம் திருமஞ்ச ந சாலையில் திருமஞ்சநம் வைப்பானுக்கும்

40 — — — திரவியங்களுக்கும் — — —

41 — — —

42 — — ஒடுக்கின — —

43 — — — ஒன்றினுக்கு குடிஞை

44 — — — நாற்கழஞ்சே மு . .

45 — — — வேளான் கூத்தாடியான — —

46 — — — குடையான் அம்பலத்தாடி —

47 — — —ஸ்ரீமூலஸ்தான முடையார்க்கு சாத்தி—

48 — — —பலிசை நெல்லு நூற்று நாற்—

49 — — நிவந்தம் செய்யக் கடவோ மாக—

50 மூவேந்த வேளார் ஏவல்படி சட்டி— —

51 .....நெல்லு அஞ்ஞாழியும் புழு— — —— ——

52 க்கு கரி——— ——— ———

53 ———————— ஆக கரி மூன்றுக்கு நெல் ——————

54 — — — — மூன்றுக்கு நெல்லு உழக்கு . .

55 டும் சட்டி ஒன்றுக்கு நெல்லு உரியும் . . . .
நெல்லு உரியும் ஆக சட்டி ஒன்றுக்கு நெல்லுக்கு .

56 தூணியாக நாள் ஒன்றுக்கு சட்டி . . . . நெல்லு . . . . .
தூணியாக நாள் பத்துக்கு

57 சட்டி ஆயிரத்துக்கு நெல்லு எண்ப . . . . . தூணியும்
அடுவான் ஒருவனுக்கு நாள் பத்

58 துக்கு நெல்லு ஒரு தூளியும் . . . . . பத்து நாற்கலமும்
திருமஞ்சந சாலையில் திரு

59 மஞ்சநம் வைப்டாள் ஒருவனுக்கு நாள் ஒன்றுக்கு
நெல்லு குறுணி ஒரு நாழியும் திருமஞ்சந

60 த்து குண்டம் இலாமுச்சமும் ஏல அரிசியும்.....
ஸ்ரீ கிண்டழும் கொட்டழும் உள்ளிட்ட ஜலதிரவியங்
களுக்கு

61 நாள் ஒன்றுக்கு நெல்லு நாழழி.....குடம் இடுப்
ரசவனுக்கு நாள் ஒன்றுக்கு நெ

62 ல்லு இரு நாழியும் ஆக நாள் ஒன்றுக்கு நெல்லு
பதக்காக யாண்டு ஒன்றுக்கு நெல்

63 லு அறுபதின் கலமும் ஆக நெல்லு நூற்று
நாற்பத்து நாற்கலமும் இவனே திருமஞ்சநசாலை

64 க்கு திருமேற்கட்டி கட்ட புடவைக்கும் திருமஞ்சந
குடத்தின் மேல் நீர் மூடு புடவைக்கும்,

65 ஜலபவித்திர தீர்த்தத்துக்கும் புடவைக்கும் வாய்கட்டும்
புடவைக்கும் கொள்ள உடையார் பண்டார

66 த்து ஒடுக்கின காசு அஞ்சு கழஞ்சாலும் ஆண்டுவரை
பலிசை காசு அஞ்சுக்கும் புடவை

67 கொண்டு இப்படி இடக்கடவோமாகவும் இப்படி
சந்திராதித்தவல் ஆட்டாண்டு தோறும்
நிவந்தம் செய்

68 வதாக கல்வெட்டி கொடுத்தோம் உடையார்
ஸ்ரீமூலஸ்தான முடையார் தேவர் கண்மீகளோம்
இது

69 பன்மாகேஸ்வர ரட்சை:- அன்பர்க்குப்
பங்குனி நாள் சட்டி சோராயிரமும் நம்பர்க்குப்
நாடோறும் மஞ்சந

70 மூவடு புற்று மொய் தாரிராமன் முகில் தோய்
மதிளாரூர் வைத்தான் வலிவையராமன்

திருவாரூர் கல்வெட்டு எண்-66

இடம்:- தியாகராஜ சுவாமி கருவறை தென்புறம் உள்ள குமுதம், சுண்டம் ஆகிய அதிஷ்டான பகுதியில் உள்ளது.

மன்னன்:- முதலாம் குலோத்துங்கன்

காலம்:- 24 ஆம் ஆட்சியாண்டு (கி.பி. 1094)

செய்தி: ''புகழ் சூழ்ந்த புனரி'' என்ற மெய் கீர்த்தியுடன் துவங்கும் முதற்குலோத்துங்கனின் 24 ஆம் ஆட்சியாண்டில் கேய மாணிக்க வளநாட்டு திருவாரூர் கூற்றத்து திருவாரூர் ஸ்ரீமூலஸ் தானமுடையார் கோயிலில் ஒரு நுந்தா விளக்கு எரிப்பதற்காக .....ராஜநாராயண சிங்களத்தரையன் என்பான் தோன்னூற்றுறு ஆடுகளை முதலீடாக அளித்த செய்தி கூறப்பெற்றுள்ளது, இக் கோயிலின் நிமந்தக்காரன் அடிகள் பண்டிதனான லீர சோழ..... என்பானும் மற்றும் சிலரும் அவ்வாடுகளைப் பெற்றுக் கொண்டு' அவர்கள் செய்துகொண்ட ஒப்பந்தத்தை ஆரூர் திருக்கோயில் பண்டாரம் பொத்தகத்தில் எழுதி, அதன்படி அவ்வாடுகளை சாவா மூவாப் பேராடுகளாக ஒப்புக்கொண்டு, அவற்றின் வருமானத்திலிருந்து திருநீலகண்டம் என்ற அளவை குவளையால் 80 நாழி நெய்யை கோயில் பண்டாரத்துக்கு சந்திரன் சூரியன் உள்ளவரை தடையில்லாமல் அளப்பதாக செய்துகொண்ட சாசனமே இக்கல்வெட்டாகும். சாவா மூவாப் பேராடு என்பது, இவ்வாறு அளிக்கப்பட்ட 96 ஆடுகளை பெற்றுக் கொண்டான், எத்தனை ஆண்டுகள் சென்று பார்த்தாலும் அவனது ஆட்டுப் பண்ணையில் 96 ஆடுகளை அவன் பேண வேண்டும். இறக்கும் ஆடுகளுக்கும் மூப்பு எய்தும் ஆடுகளுக்கும் பதிலாக இளம் ஆடுகளை இட்டு எண்ணிக்கையை மாறாமல் காக்க வேண்டும். அதே சமயம் பெரும் எண்ணிக்கையிலிருந்து அவன் வளம் பெறவும் முடியும். உயிரினங்களை நிரந்தர முதலீடாக (Fixed Deposit) இடும் முறையை இங்கு காண முடிகிறது.

இக்கல்வெட்டின் முற்பகுதி முழுவதும் பின்னாளில் கட்டப் பெற்றுள்ள கட்டுமானத்துள் உள்ளது. தெளிவாகத் தெரியும் பிற் பகுதியை மட்டும் இங்கு காண்போம்.

கல்வெட்டு (TEXT)

1 .....யாண்டு உச ..... ராஜநாராயண
சிங்களத்தரையன் கேயமாணிக்க வளநாட்டு
திருவாரூர் கூற்றத்துத் திருவாரூர் உடையார்
ஸ்ரீமூலஸ்தான முடையார்க்கு வைத்த திரு நுந்தா
விளக்கு ஒன்று கக்கு கொடு வந்துவிட்டு

ஆடு தொளாற்றுறு இந்த ஆடு தொன்னூற்றுறு
இக்கோயிலில் நிமந்தக் காரன் அடிகள் பண்டித நாற
வீரசோழ.....(கட்டுமானத்துள் உள்ளது)

2 ன்னூற்று ஆறும் இவர்கள் கைக் கொண்டு
இத்தேவர் பண்டாரப் பொத்தகத்தி லெழுத்திலேற்றி
இவ்வாடு தொன்னூறு ஆறும் சாவா மூவாப் பேராடாக்கி
.....இந்நெய் தொன்னூற்று நாழியும்
சந்திராதித்தவல் திரு நீலகண்ட நாழியால் இத்தேவர்
பண்டார தறிலே அளக்க கடவார்களாகவும் இப்படி
நிமந்த முட்டாமெய் சந்திராதித்தவல் செய்யக்
கடவார்களாக இக்கோயில் கல்வெட்டினமைமிஸ்
இது [illegible]

திருவாரூர் கல்வெட்டு எண். 67

இடம்: தியாகராஜசுவாமி கருவறை தென்புற அதிஷ்டானத்தின் சண்டப்பகுதி கல்வெட்டு எண் 66ஐத் தொடர்ந்து காணப்படுகிறது.

செய்தி: இக்கல்வெட்டின் பெரும்பகுதி பிற்கால கட்டுமானத்துள் புதைந்துள்ளது. வயலாறை என்னும் ஊரினனாகிய ஆதித்தன் இரண்டு விளக்குகள் இத்திருக்கோயிலுக்கு இட்ட செய்தி கல்வெட்டுப் பாடலாக எழுதப்பெற்றுள்ளது.

கல்வெட்டு (TEXT)

1 .....கொற்கை அபயற்கி.....(கட்டுமானத்துள் உள்ளது)

2 .....டார் கென்றும்நிற்க வளங்கொள் வயலாறை
ஆதித்தன் வைத்தான் விளக்கிரண்டு நந்தாவிளக்.. ..

திருவாரூர் கல்வெட்டு எண். 68

இடம்: தியாகராஜசுவாமி கருவறை தென்புறச் சுவர்.

மன்னன்: முதற்குலோத்துங்கசோழன்

காலம்: ஆண்டுக் குறிப்பு உள்ள பகுதி பிற்கால கட்டுமானத்துள் உள்ளமையால் அறிய இயலவில்லை. ஆனால் கி. பி. 1070—1120க்குட்பட்ட கல்வெட்டு என்பது தெளிவு.

செய்தி:– திருவாரூர் ஸ்ரீமூலஸ்தான் முடையார் திருக் கோயிலுக்காக வாயற்றூர்ச் சபையினர் ஆதிசண்டிகேஸ்வரர் பெயரால் இறையிலியாக விற்றுக் கொடுத்த நிலம பற்றி குறிப் பிடுகிறது இக்கல்வெட்டு. இருபதின் கழஞ்சு பொன்னை விலை யாக பெற்றுக் கொண்டதும், அவர்கள் விற்ற நிலத்தின் நாங் கெல்லைகளும் குறிக்கப் பெற்றுள்ளது.

கல்வெட்டு (TEXT)

1 ஸ்வஸ்திஸ்ரீ புகழ்மரது விளங்க ஜெயமாது விரும்ப நிலமகள் நிலவ மலர்மகள் புணர...

2 வீரசிம்ஹாசனத்து உலகுடையாளொடும் வீற்றிருந் தருளிய கோவி ராஜகேசரி ... ...

3 பிரஹ்மதேயம் வாயற்றூர் பெருங்குறி மகா சபையோம் திருவாரூர் உடையார் ஸ்ரீமூலஸ்தா... ...

4 கோயில் ஆதி சண்டேஸ்வர தேவர் பேரால் இத்தேவர் பண்டாரத்தே பெ ... ...

5 .. ... இறையிலி செய்து கொடுத்த நிலம் இந்நிலம் . .

6 னுக்குப் களவாய்க்காலுக்கும் வடக்கும் மேற்பார்க்கெல்லை பாரத்துவாசி காசிபன் ... ...நிலத்துக்கு கிழக்கும்... ...

7 கொண்ட ராஜராஜன் மாடையோடொக்கும் செம்பொன் இருபதின் கழஞ்சு இப்பொன் இருபதின் கழஞ்சும்... ...

8 மாக...மற்றும் எப்பேப்பட்டதும் திருவாசலில் போந்த குடிமையெல்லாம் செய்து கொடுத்தோய் வாயற்றூர் பெருங்குறி மகா சபையோம்... ...

9 ... ...ர்க்கு பெருங்குறி மகாசபை

திருவாரூர் கல்வெட்டு எண்-69

இடம்: தியாகராஜசுவாமி கருவறை மேற்குப்புறச்சுவர்

மன்னன்: பரகேசரிவர்மன் இராஜேந்திரசோழன்

காலம்: கல்வெட்டில் ஆண்டுக் குறிப்பு சிதைந்துள்ளது. மன்னனின் ஆட்சிக்காலம் கி. பி. 1051–1063

செய்தி: ''திருமாதுபுவி என்னும்'' என்ற இரண்டாம் இராஜேந்திர சோழனின் மெய்கீர்த்தி பாடி, பின்பு இம்மன்னனது ஆணையை கூறுகிறது இக்கல்வெட்டு. இதில் பூண்டி உடையான் வேளான் கூத்தனான செம்பியன் மூவேந்த வேளான் என்பானை, இத்திருக்கோயிலின் கருவறை மற்றும் அர்த்த மண்டபம், கதவு நிலைகள், ஸ்ரீபாதபீடம், மகர தோரண திருவாசிகை, அனுக்கன் திருவாயில் ஆகிய பகுதிகளுக்கு பொற்தகடு போர்த்த உத்தரவிட்டமையை கூறுகிறது. கல்வெட்டின் பிற்பகுதி சிதைவு பெற்றுள்ளது.

கல்வெட்டு (TEXT)

இக்கல்வெட்டில் 1லிருந்து 26 வரிகளில்
இரண்டாம் இராஜேந்திர சோழனின் ''திருமாது''
புவியெனும் பெருமாதர் இவர்தன் மாதேவியர்.....
எனத் தொடங்கும் மெய்கீர்த்தி உள்ளது.
இதனை திருவாரூர் கல்வெட்டு எண்
-65ல் காண்க. 27 ஆம் வரியிலிருந்து
கல்வெட்டை இனிக் காண்போம்.

27. த்து மாப்பெரும் புகழ் வளர்த்த கோப்பர கேசரி
பன்மரான உடையார் ஸ்ரீ ராஜேந்திர.....

28. அதிராஜராஜ வளநாட்டுத் திருவாரூர் கூற்றத்து
திருவாரூர் உடையார் ஸ்ரீ மூலஸ்.....

29. ளான் அர்த்த மண்டபத்தில் தோணமுங்
கதவு நிலையும் கெர்ப கிருஹத்து.....

30. ங்கு கதவு நிலையும் உடையார்க்கு ஸ்ரீ பாதபீடமும்
மகர தோரணத் திருவாசிகையும்.....

31. யாகவும் உடையார் வீதிவிடங்கதேவர் கோயிலில்
அனுக்கன் திருவாயில் கதவு நிலையும் உடையார்.....

32. திருவாசிகை பாதம் உள்ளிட்டு அழகு மணியாக
பொன் சுருக்குக வென்று அதிகாரிகள் ராஜ.....

33. பூண்டி உடையான் வேளான் கூத்தநாத செம்பியன் மூவேந்த வேளாள்.....

(கல்வெட்டு சிதைவுற்றுள்ளது)

திருவாரூர் கல்வெட்டு எண். 70

இடம்:- தியாகராஜசுவாமி திருக்கோயில் கருவறையின் மேற்குப்புற சுவரில் உள்ளது.

மன்னன்:- முதலாம் இராஜேந்திர சோழன்

காலம்:- 31 ஆம் ஆட்சியாண்டு 244 ஆம் நாள் (கி பி 1043)

செய்தி:- இக்கல்வெட்டு மன்னனது ஆணையை (King's order) குறிப்பிடுகிறது. சில முக்கிய விழாக் காலங்களில் இறைவனுக்கு அபிஷேகம் செய்யும் திருமஞ்சன நீரில் வாசனை திரவியங்கள் சேர்ப்பதற்காக அளித்த நிவந்தங்கள் பற்றி, கூத்திரிய சிகாமணி வளநாட்டு, கூற்றத்து திருவாரூர் மூலஸ்தானமுடையார் கோயில் நிர்வாக அதிகாரிகளுக்கு மன்னன் பிறப்பித்த உத்தரவே ஆகும். இக் கல்வெட்டால் மன்னனது நட்சத்திரமான ஆடிமாத ஆதிரையும், மன்னனின் தந்தையின் (முதலாம் இராஜராஜன்) நட்சத்திரமான ஐப்பசி சதயமும் ஆரூர் கோயிலில் சிறப்பாக கொண்டாடப்பட்ட விழாக்கள் என்பதை அறிய முடிகிறது.

இராஜராஜன் காலத்திலும், பின்பு இராஜேந்திரன் காலத்திலும் திருவாரூர் கூற்றம் கூத்திரிய சிகாமணி வளநாட்டில் இடம் பெற்று திகழ்ந்தது என்பதையும் அறிகிறோம்.

இத் திருக்கோயில் நாட்டிய நங்கையர்களான தனியிலார் விழாக் காலங்களில் அரங்கம் ஏறுவதையும் சிறப்பாகக் குறிப்பிடுகிறது இக்கல்வெட்டு.

கல்வெட்டு (TEXT)

1. திருமுகப்படி கோனேரி மெய்கொண்டான் •
கூத்திரிய சிகாமணி வளநாட்டு திருவாரூர் கூற்றத்து திருவாரூர் உடையார் ஸ்ரீ மூலஸ்தான முடையார்க்கு ஸ்ரீ காரியம் செய்வானுக்கும் பதிபாதமூலப் பட்டுனடப் பஞ்சா சாற்றியத் தேவர் கண்மீகளுக்கும்.....

உடையார் புதியது அமுது செய்யத் திருமுளையட்ட
-வும் புத்தரிசி அமுதுக்கு நெல்லுக்கு பெய்யவும்
மாளவம்க்கு திருமுளையட்டவும் திருச்சுண்ணம்.....
பயிர்க்கு காப்பு கட்டவும் மார்கழி திருவாதிரைக்கு
திருமுளையட்டவும் திருச்சுண்ணம்.....
திருப்பூரத்திற்கு திருமுளையட்டவும் திருப்பணி
அமுது நெல்லில் பெய்யவும் ஆவணி அவிட்டத்
-திற்கு திருமுளையட்டவும் ஆண்டு உச்சிக்கு
திருமுளையட்டவும் அய்யர் பிறந்த அ

2. ருளிள அப்பிகை சதயதிருவிழா வரைவுக்கு
திருமுளையட்டவும் தீர்த்தத்துக்கு திருச்சுண்ணம்
இடிக்கவும் நாம் பிறந்த ஆடி திருவாதிரை
திருநாளில் திருவிழா வரைவு குருமுள
யட்ளவும் தீர்த்தத்துக்கு திருச்சுண்ணம்
இடிக்கவும் திருவரநெறி உடையார்க்கு
உரிமை செய்யவும் முன்பு பெற்றுடைய.....
கடவார்களெல்லாம் செய்யும் இடத்தே இவர்
-களில் முடிதிரச் செய்யவும் இத்தேவ திரு
விழாவில் தளியிலார் அரங்கேறும்
இடத்து முள்ளாங் கேரவும் திருவிழாவிலும்
திருவேட்டையிலும் தளியிலார் அரங்கம்
ஏறும் இடத்து... .. ...வென்று
திருமந்திர ஓலை சிங்காஸன மும்முடிச்சோழன்
எழுத்திலுலும் யாண்டு முப்பத்தொன்று
நாள் இருநூற்று நாற்பத்து நாலிலுல் கல்
வெட்டுவித்து..

திருவாரூர் கல்வெட்டு எண். 71

இடம்: தியாகராஜசுவாமி கருவறையின் வடபுறச் சுவரில் குமுதப்படையில் தொடங்கி மேற்குச் சுவரிலும் தொடர்கிறது.

மன்னன்: இராஜகேசரிவர்மனான முதலாம் இராஜாதிராஜ சோழன்

காலம்: 24ஆம் ஆட்சியாண்டு–(கி. பி. 1042)

செய்தி:- அணுக்கியார் பரவை நங்கையார் முன்பு தியங்குடி, மேலைமங்கலம் போன்ற ஊர்களில் விலை கொடுத்து வாங்கிய

நிலங்களின் நெல் வருவாயை அத் தேவியாரின் மறைவிற்குப் பின்பு மாமன்னன் இராஜாதிராஜ சோழன் இத் திருக்கோயிலில் எடுக்கப் பெற்ற இராஜேந்திரசோழன், பரவை நங்கையார் படிமங்களுக்கு பூஜை நைவேத்தியத்திற்காகவும் பரிச்சட்டத்திற் காகவும் பயன்படுத்த உத்தரவிட்டு, அவற்றின் அளவுகள் குறிப்ப தோடு மேலும் திருவரநெறியாம் திருக்கோயிலில் அரநெறியப் பரை ஆராதனை செய்யும் பிராமணன் ஒருவனுக்கு ஐம்பது கலம் நெல்லும், அவனுக்கே புடவைக்கு (ஆடைக்கு) நெல் 15 கலமும் அளிக்க ஆணை இட்டதோடு முன்பு அனுக்கியார் பரவை நங்கையாா செய்த அறக்கட்டளைகளை இம்மன்னன் மீண்டும் செம்மைப்படுத்திய செய்தியை விவரிக்கின்றது.

கல்வெட்டு (TEXT)

1. ஸ்வஸ்தி ஸ்ரீ திங்களேந் தரு தன்றெழுங்கல் வெண்குடை
கீழ் நிலமகணிலவ மலர் மகட் புணர்ந்து செங்கோ
லோச்சிக் கருங் கலி கடிந்து தன் சிறிய தாதையுந் திருத்
தமையனுங் குறிகொடன் னிளங் கோக் கிளையு நெறியுணர்
தன்றிருப் புதல்வர் தம்மையுந் துன்றெழில் வானவன்
வில்லவன் மீனவன் கங்கனிலங்கையர் கிறைவன்
பொலங் கழற் பல்லவன் கன்னகுச்சியர்க்கா வலனெனப்
பொன்னணி சுடர்மணி மகுடஞ் சூட்டிப் படர்புகழாங்
கவர்க் கவர் நாடருளிப் பாங்குற மன்னு பல்லூழியுட்
டென்னவர் மூவருள் மானு பரணன் பொன்முடி யானுப்
பருமணிப் பசுந்தலை பொருகளத் தரிந்து வாரள வியகழல்
வீர கேரளனை முனைவயிற் பிடித்துத் தனது வாரணக்
கதக்க ளிற்றினு லுதைப்பித் தருளி அந்தமில் பெரும் புகழ்ச்
சுந்தரபாண்டியன் கொற்ற வெண்குடையுங் சுற்றைவெண்
கவரியும் சிங்காதனமும் வெங்களத் திழந்து தன்
முடிவிழத் தலைவிரித்தடி தளர்ந்தோடத் தொல்லை
முல்லையூர்த் துரத்தி யொல்கலில் வேணாட்டரசரைச்
சேணுட்டொதுக்கி மேவு புகழிராமகுட மூவர்கெட
முனிந்து மாடல்கெழு வில்லவன் குடர் மடிக் கொண்டுதன்
நாடுவிட்டோடிக் காடுபுக் கொளிப்ப வஞ்சியும்
புதுமலர் மலைதாங்

2 கெஞ்சலில் வேலைகெழு காந்தளூர் சாலை கலமறுத்
தாகவ மல்லனு மஞ்சற் கேவுதன் தாங்கரும்

படையாலாங்கயன் சேனையுட் கண்டப் பயனும்
கங்காதரனும் வண்டமர் களிற்றெடு மடியத்
திண்டிறல் விருதர் விக்கியும் விசயாதித்தனுங் கருமுரட்
சாங்க மய்யறு முதலியர் சமரபீருவொத்துடைய
விரி சுடர்ப் பொன்னே டைக்கரி புரவியோடும் பிடித்துத்
தன்னுடையிற் சயங்கொண்டொன்னூர் கொள்ளிப்
பாக்கையுள்
ளெரி மடுப்பித் தொருதனித் தண்டாற் பொருகட
விலங்கையர்
கோமான் விக்கிரமபாகுவின் மகுடமும் முன்றனக்குடைந்த
தென்றமிழ் மண்ட முழுவதும் தும்மிழந்தெழுகடலீழம்
புக்க விலங்கேசனுகிய விக்கிரம பாண்டியன் பருமணி
மகுடமும் காண்டகுதன்ன வாக்கித் தன் கன்னக்குச்சி
-யினும் ஆர்கலியீழஞ் சீரிதென்றெண்ணி உளங்கொளந்
நாடுதன் னுறவொடும் புகுந்து விளங்கு முடி கவித்த
வீரசலாமேகன் போர்க்களத்தஞ்சித் தன் கார்ஆளிறி
-ழிந்து கவ்வையுற் றோடக் காதலி யொடுந்தன்
றவ்வையைப் பிடித்துத் தாயை மூக்கரிய ஆங்கவமானம்
நீங்குதற்காக மீட்டும் வந்து வாட்டொழில் புரிந்து
வெங்களத் துலந்தவச் சிங்களத் தரசன் பொன்னணி
முடியுங் கன்னரன் வழிவந்துரை கொளீழத்தரசனுகிய
சீ வல்லவ மதனராசன் மெல்லொளித் தடமணி
முடியுங்கொண்டு வடபுலத் திருகாலாவதும் பொருபடை
நடாத்திக் கண்டர் தினகரன் நாரணன் கணவதி
வண்டலர் தெரியன் மதுசூதனனென் றெனைப் பலவரை
சரை முனைவயிற்றுரத்தி வம்பலர் திருபொழிற் கம்பிவி
நகருட் சளுக்கியர் மாளிகை தகர்ப்பித் திளக்கமால்
வில்லவர் மீனவர் வேல்குலச் சளுக்கியர் வல்லவர்
கௌசலர் வங்கணர் கொங்கணர் சிந்துரையனர்
சிங்களர் பங்களர் அந்திரர் முதலிய வரைசரிடு திறைகளும்
ஆறிலொன்றவனியுட் கூறுகொள் பொருள்களும்
உகந்து நான் மறையவர் முகந்து கொளக்கொடுத்து
விசுவலோகத்தும் விளங்க மனு நெறிநின் றசுவமே
தஞ்செய்

3. திரைசூ வீற்றிருந்த ஜெயங்கொண்ட சோழன்
உயர்ந்த பெருபுகழ் கோராஜகேசரி பன்மரான
உடையார் ஸ்ரீ ராஜாதிராஜ தேவர்க்கு யசண்டு

உயள லாவது கூத்திரிய சிகாமணி வளநாட்டு
திருவாரூர் கூற்றத்து திருவாரூர் பெரியகோயில்
பதிபால மூலத்தாரிடை உடையார் ஸ்ரீ ராஜேந்திர
சோழதேவர் அணுக்கியார் நக்கன் பரவை
நங்கையார் இக்கோயில் தேவதானந் தீயங்
-குடியில் முன்பு விலைகொண்டுடைய நிலம்
ஒன்றே முக்காலே ஒருமாவிலைப்ப

4. ல நாராசத்தால் நெல்லு நூற்றெண்பதின் கலமும்
...ட்டக் காலாக்கி நெல்லு இருநூற்றெழுபதின்
கலம் இவரே திருவாரூர் நகரத்தாரிடை
திருவரநெறியுடையார் தேவதானம் மேன்மங்கலத்து
சபையார் விலை கொண்டுடைய நாலே மூன்றே மூன்று
மாக்காணியில் பளை நாராயத்தால் நெல்லு நூற்றம்பத்து
முக்கலனே தூணி இவை மட்டக் காலாக்கி நெல்லு
இரு நூற்று முப்பதின் கலம் ஆக இரண்டுரிலுமிவரே
கொண்டுடைய நிலம் அஞ்சே மாகாணி யிரு.....

5. ர் நிலத்திலே உடையார் ஸ்ரீ ராஜேந்திர தேவர்க்கும்
பரவை நாச்சியார்க்கும் திருவமுதுக்குட்பட பளை
நாராயத்தாலடைத்த நெல்லு அறுபத் தருகலனே
யிரு தூணி இவை மட்டக் காலாக்கி நெல்லு
நூற்றுக் கலம் இவகளூர்கே திருவமுதுக்கு
வேண்டுவனவையிற்றுக்கு குடுத்துக் குறையாக
தேவதானம் மேள் மங்கலத்து விலை கொண்டுடைய
நிலத்தில்ப் பளைநாராசத்தாலடைத்த நெல்லு
பதின் முக்கலனே தூணி இவை மட்டக் காலாக்கி
நெல்லு இருபதின் கலமும் இவர்களுக்கே பரிச்சட்
-டத்துக்கு காசு இரண்டாகக் காசு ஒன்றுக்குப்
பளை நாராசத்தால் நெல்லு

6. அய் கலனுகப் பளை நாராசத்தாலடைத்த
நெல்லு பதின் கலன் இவை மட்டக்காலாக்கி
நெல்லுப் பதினேங்கலம் திருவரநெறியுடையாரை
திருவாராதினை செய்கின்ற பிராஹமணன்
ஒருவனுக்கு பளைநார்சத்தால் நித்தநெல்லு
பதக்காக அடைத்த நெல்லு ஆம்பதின் கலம்
இவை மட்டக் காலாக்கி நெல்லு நொன்னூற்றுக்
கலமும் இவனுக்கே புடவை முதல் காசு

இரண்டுக்குப் பஸ நாராசத்தாலடைத்த நெல்லுப்
பதின் கலம் இவை மட்டக் காலாக்கி நெல்லு
பதினேங்கலம் திருவரநெறியுடை யார்க்கு
அணுக்கியார் பரவை நங்கையார் .....
7. யின் குடிகள் மூவர்க்கும் பேரால் நெல்லு
இருபதின் கலமாகப் பஸ நாராசத்தாலடைத்த
நெல்லு அறுபதின் கலம் இவை மட்டக் காலாக்கி
நெல்லு தொன்னூற்று கலம் உடையார் ஸ்ரீ ராஜே
திர சோழ தேவர்க்கும் பரவை நங்கையார்க்கும்
திருவமுதுக்கு மட்டக் காலாலடைத்த நெல்லு
நூற்றிருபதின் கலங் கொண்டு நிவந்தஞ் செய்யும்படி
உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர்க்கு
ஒரு சந்திக்கு அரிசி இரு நாழியாக மூன்று
சந்திக்கு அரிசி அறுநாழியும் பரவை நங்கை
-யார்க்கு ஒரு சந்திக்கு அரிசி இருநாழியும்
ஆக அரிசி குறுணி

திருவாரூர் கல்வெட்டு எண்-72

இடம்:- தியாகராஜ சுவாமி திருக்கோயில் கருவறையின் வடபுறசுவர்.

மன்னன்;- பரகேசரிவர்மன் இரண்டாம் இராஜேந்திர சோழன்.

காலம்:- எட்டாம் ஆட்சியாண்டு (கி.பி. 1059)

செய்தி:- "திருமாது புவி என்னும்" என்ற மெய் கீர்த்தியுடன் துவங்குகிறது. உய்ய கொண்ட வளநாட்டு, அம்பர்நாட்டு பொறக்குடி எனும் ஊரினனாகிய பொறக்குடியான்சூரி ஆதித்தன் எனும் சோழவிச்சாதிர விழுப்பரையன் என்பானும், மற்றும் திருவாரூர் நகர வணிகர்கள் சிலரும் சேர்ந்து இறைவனின் பூஜைகளுக்காகவும், திருமேனிகளுக்கு ஆடைகளுக்காகவும் பண்டாரத்தில் பொன் முதலீடு செய்ததை விவரிக்கின்றது. மேலும் கோயிலில் பாடுபவர்களுக்கும் மற்றபணிபுரிபவர்களுக்கும் இம்முதலீடு செய்யப்பட்ட பொன்னிலிருந்து காசு அளிக்கப்பட்டதையும் விவரிக்கின்றது. இதனை இக்கல்வெட்டு "...இக்கோயில் பாஞ்சாசரியர்க்கும் பாடுவார்க்கும், வாசிப்பார்க்கும் பொலி ஸைக்கும் குடுத்த காசு ....." என்று கூறுகின்றது.

தல்வெட்டு (TEXT)

இக்கல்வெட்டில் 1லிருந்து 25 வரிகளில் இரண்டாம் இராஜேந்திர சோழனின் ''திருமாது புவியெனும் பெருமாதர் இவர் தன் மாதேவியர்.. ...'' எனத் தொடங்கும் மெய்கீர்த்தி உள்ளது, இதனை திருவாரூர் கல்வெட்டு எண் 65ல் காண்க 26 ஆம் வரியிலிருந்து தல்வெட்டை இனிக் காண்போம்,

26 ஜேந்திர தேவர்க்கு யாண்டு அ ஆவது அதிராஜ
ராஜ வளநாட்டு திருவாரூர் கூற்றத்து திருவாரூர்
உடையார் ஸ்ரீமூலஸ்தான முடையார் கோயில் தே

27 வ கண்மீகளோம் உய்யகொண்டார் வளநாட்டு அம்பர்
நாட்டு புறக்குடி புறக்குடையான் சூற்றி ஆதித்தனை
சோழ விச்சாதிர விழுப்பரை

28 யன் உடையார் ஸ்ரீமூலஸ்தான முடையார்க்கு
சனிக்கிழமை ஞாயன்றும் புதன்கிழமை நாளும்
எண்ணெக் காப்புச் சாத்தி அருளி திருமஞ்

29 சநம் ஆடி திருஅமுர்து செய்தருள வேண்டும்
நிவந்தங்களுக்கு உடையார் பண்டாரத்து
ஒடுக்கினகாசு ஈ (100) இக்காசு நூறும்
திருவாரூர் நக

30 ரத்துக்கு சமைந்த வியாபாரி பெருந்திருக்
கோயிலில் பந்தலான ரஜேந்திர சோழத்தனம்
செட்டியும் மாதேவடிகள் திருமூலட்டான

31 மான ஜயங்கொண்ட சோழத் தளம் செட்டியும்
ஸ்ரீகண்டன் சிங்கபாணியும் வெண்காடன்
அம்பலத் தாடியும் இலக்குவனன் கோ

32 பாலனும் சந்திரன் வீதியம்பாச்சன் பொற்கம்
பனும் இருநீரணிந்தானும் விழுப்பரையனும்
உள்ளிட்ட நகரத்தார்கொண்டு யா

33 ண்டு அ வதிநெதிராம் ஆண்டு முதல் காசு
ஈ க்கு பொலிசை மட்டக்காலால் நெல்லு
நூறு ஆக ஆட்டாண்டு தோறும் சந்திராதித்தவல்
உடை

34. யார் பண்டாரத்தே மட்டக்காலால் அளக்கக்
கடவ நெல்லு நூறுகலம் இந்நெல்லு நூற்றுக்
கலமும் கொண்டு ஒராண்டு நாள் ரு ரா ல்
சனியும் புத

35. னும் நூற்று பத்துக்கு நாள் க க்கு எண்ணெயாக
காப்பு சாத்தி அருள எண்ணெ உ ரி வத ஆக
எண்ணெ (. . . .) நாள் க க்கு திருவிளக்கு
ரு க்கு எண்

36. ணெ (. . . . .) ஆக எண்ணெ (. . . .) ம் ஆக
எண்ணெ (. . . . .) விளக்கு ரு க்கு எண்ணெ
உ ரி 1க்கு நெல்லு முக்தாணி நெல்லு ஐம்பது
கலமும் திருமெய்பூச்சுக்கு (. . . .)

37. . . . . ஆக பயறு . . க்கு . . . . ளக்கு நெவிலாக
ஆக நெல்லி ரு க்கு (. . . .) பசுமஞ்சள்
உலரு பசுமஞ்சள்

38. . . . . ஸ்ரீகண்டஞ் சந்தந...
ஆக சந்தநம் கலகல்...திருப்பள்ளித்தாமத்துக்கு
. . . . . .

39. . . . . சிதாரி । லக்கு . . . .
திருவமுதுக்கு...பேர்நகப் பழவரிசி ஆக ரா சா சா

40. இரண்டஞ்சாக்கி (. . . . .) க்கு கறியமுது
ருக்கு (. . . . .) க்கு (. . . .) கறியமுதுக்கு
பருப்பு உ க க க பருப்பு

41. . . . . க்கு பயறு . . . . . க்கு நெல்லு । கலம்
. . . . . கலம் । க்கு கறியமுதுக்கு உப்பு . . . . .
உப்பு க் ஸ க்கு (. . . . .) க்கு கறியமுது

42. க்கு மிளகு உ லகளுக்கு மிளகு
அமுதுக்கு நெல்லு । கலம். . . . க்கு அமுதுக்கு
நெய் . . . . . ஆக நெய் . . . . .க்கு சற்கரை

43. ஸ க க சற்கரை கி ய சாலக்கு . . . . க்கு
வாழைப்பழம் ரா சா ஆக வாழைப்பழம் . . . . . .

44. . . . . தயிர் ஸ க க தயிர் ல க . . . க்கு . . . . . ,

அடைக்காயமுதுக்கு வெறுங்கா-ய் உ ழி ஆக
வெறுங்காய் (.....) க்கு (.....)

45. அடைக்காயமுது பற்று + கூ க பற்று கா க
க்கு (.....) + க்கு சூசக் கலத்துக்கு
(.....) விறகுக்கு.....

46. விள நாள் கொண்டு ஆட்டாண்டு தோறும்
சந்திராதித்தவல் இப்படி நிவந்தம் முட்டாமே
செய்யக் கடவோ மாகவும் இவரே

50. இத்திருநாள்கல் சார்த்தி அருள ஆட்டாண்டு
தோறு திருப்படி மாற்று க க்கும் திருப்பொற்
குடை ச க்கும் பாவாடைப் புடவைகளுக்கும்
உடையார் ப

51 ண்டாரத்து ஒடுக்கி ந காசு கூ இக்காசு
மூப்பதுக்கும் காசு க க்கு ஆண்டு வரை
பொலிசை காசு வ ஆக காசு எனக்கு கொண்டு
ஆட்டாண்டு

52 தோறும் சந்திராதித்த வல் இடக் கட வோமாகவும்
இவரே இதுக்கு திருநாள்களில் இக் கோயில்
பஞ்சா சாரியார்க்கும் பாடுவோர்க்கும்
வாசிப் பார்க்கும் ப

53 லிசைக்கு குடுத்த காசு ரு – இக்காசு ஐஞ்சுங்
கொடு ஆட்டாண்டு தோறும் சந்திராதித்தவல்
இப்படி நிவந்தஞ் செய்யக் கட வார்களாகவும்இ

54 ப்படி சந்திராதித்தவல் ஆட்டாண்டு தோறும்
நிவந்தம் செய்யக் கடவோ மா நோம் உடையோர்
ஸ்ரீ மூலஸ்தாந முடையார் கந் மி களோம்இ

55 ப் படிக்கு அற்றை நாள்களில் பரி தாரஞ் செய்யக்
கடவா நாந சிவ ப்ரஹ மணந் சிவசந்மா
தேவந் . . வாந உடையார் அமுது செ

56 ய் தருளிந சேஷம் கொள்ளப் பெறுவாந் நாக
கல் வெட்டு வித்துக் குடுத்தோம் தேவர் கந்மிகளோம்
இவை முதல் கணக்கு ஆதரூ

57 ர் உடையாந் மா நரராயணந் கங்கை கொண்
டாந்நெழுத்து இது ஸ்ரீ பந் மாஹேஸ்
வர ரக்ஷை ॥ —

திருவாரூர் கல்வெட்டு எண்-73

இடம்:- தியாகராஜசுவாமி கருவறை வடபுறச்சுவர்

மன்னன்:- பரகேசரி வர்மன் இரண்டாம் இராஜேந்திர சோழன்,

காலம்:- எட்டாம் ஆட்சியாண்டு கி. பி. 1059

செய்தி:- "திருமாது புவி எனும்" என்ற மெய்கீர்த்தியுடன் இக்கல்வெட்டு துவங்குகிறது. அதிராஜேந்திர வளநாட்டு பரவை சுற்றுப் பூண்டி என்ற ஊரினனாகிய உடையான் வேளான் கூத்த நான செம்பியன் மூவேந்த வேளான் என்பான் ஆரூர் இறைவனின் பூஜைகளுக்காக நூறுகாசுகள் கொடுத்து இறையிலி நிலம் வாங்கி திருக்கோயிலுக்கு அளித்த செய்தியும், அவனது சகோதரனான மாறன் எனும் செம்பியன் மூவேந்தவேளான் என்பான் நாள் தோறும் பனிரெண்டு சிவயோகிகளுக்கு அமுது செய்விப்பதற் காகவும், இறைவனுக்கு இரண்டு காதணிகள் செய்வதற்காகவும் நூறு காசுகள் கொடுத்து விஜயராஜேந்திர வளநாட்டு பிரமதேய கிராமமான புலிவலத்து ஊர் சபையினரிடமிருந்து இறையிலி நிலமாக பெற்ற செய்தியும் விரிவாகக் கூறப்பெற்றுள்ளது.

கல்வெட்டு (TEXT)

இக்கல்வெட்டில் 1 லிருந்து 28 வரிகளில் இரண்டாம் இராஜேந்திர சோழனின் "திருமாது" புவியெனும் பெருமாதர் இவர் தன் மாதேவியர்.... எனத்தொடங்கும் மெய்கீர்த்தி உள்ளது. இதனை திருவாரூர் கல்வெட்டு எண் 65ல் காண்க. இனி 29 ஆம் வரியிலிருந்து கல்வெட்டைக் காண்போம்.

29 மாப்பெரும் புகழ் வவத்த கோப்பரகேசரி
பந்மராகிய உடையார் ஸ்ரீராஜேந்திரவேதற்கு
யாண்டு அ-வது அதிராஜேந்திர

30 வளநாட்டு திருவாரூர் கூற்றத்து திருவாரூர்
உடையார் ஸ்ரீமூலஸ்தானமுடையார் மந்திர
போநகம் செய்தருள அதிராஜேந்தி

31 ரன் ராஜராஜ வளநாட்டு பரவைசுற்றுப் பூண்டி
உடையான் வேளான் கூத்தநானே செம்பியுன்
மூவேந்த வேளார் வைத்த .. ..

32 னக்கு திருவமுதுக்கு.....கறியமுது உடுக க்கு

33 ... ...

34 ... .

35 துக்கு நிலங்கொள்ள உடையார் பண்டாரத்து
ஒடுக்கிந காசு நூறு இவைற்றுள தேவதாநம்
இறையான்குடி நிலநிமந்தம்முடைய நிமந்தக்
காற ரோம் நாங்கள் கைக்கொண்ட காசு
னுல் நாங்கனேய் பணியும் இறையுஞ்செய்யக்
கடவோமாக நாங்கன் விற்றுக் குடுத்த இவ்வூர்
வேலங்குள

36 மென்றுபோர் கூவப்பட்ட நிலம் காலே கீழ் நாலுமா-ம்
தேவதாநங் காவிதி குடி நில நிமந்தம் முடைய
நிமந்தக் காறரோம் நாங்கள் கொண்ட காசு அ-னுல்
நாங்களே

37 பணியும் இறையுஞ் செய்யக் கடவோமாகவும்
நாங்கள் விற்றுக் குடுத்த இவ்வூர் இரட்டை குளமென்று
போர் கூவப்பட்ட நில காலே இருமா தேவதாந

38 புதியங்குடி நில நிமந்தமுடைய பதி பாத மூலபருடைய
பஞ்சாசரியர்களோம் நாங்கள் கொண்ட காசுக்கு
நாங்களே பணியும் இறை

39 யுஞ்செய்யக் கட வோமாக இவ்வூர் நாங்கள் விற்றுக்
குடுத்த புதுக்குளமென்று போர் கூவப்பட்ட நிலம்
காலே மும்மா நாலுமாவும் திருவாரூர் நகரத்தோம்
கொண்ட காசு உடு - ம்

40 நாங்களே பணியும் இறையுஞ் செய்யக் கடவோமாக
நாங்கள் விற்றுக் கொடுத்த தியங்குடி எங்கள்
காணியா ந மண்டபத்திருந்து தண்ணீரட்டி
நெருப்பெரி

30 வளநாட்டு திருவாரூர் கூற்றத்து திருவாரூர்
உடையார் ஸ்ரீமூலஸ்தானமுடையார் மந்திர
போநகம் செய்தருள அதிராஜேந்தி

31 ரன் ராஜராஜ வளநாட்டு பரவைசுற்றுப் பூண்டி
உடையான் வேளான் சூத்தநானே செம்பியுன்
மூவேந்த வேளார் வைத்த . . . . . .

32 னக்கு திருவமுதுக்கு.....கறியமுது உடுக க்கு

33 ... ...

34 ... ...

35 துக்கு நிலங்கொள்ள உடையார் பண்டாரத்து
ஒடுக்கிந காசு நூறு இவைற்றுள தேவதாநம்
இறையான்குடி நிலநிமந்தம்முடைய நிமந்தக்
காற ரோம் நாங்கள் கைக்கொண்ட காசு
டினுல் நாங்கனேய் பணியும் இறையுஞ்செய்யக்
கடவோமாக நாங்கள் விற்றுக் குடுத்த இவ்வூர்
வேலங்குள

36 மென்றுபேர் கூவப்பட்ட நிலம் காலே கீழ் நாலுமா-ம்
தேவதாநங் காவிதி குடி நில நிமந்தம் முடைய
நிமந்தக் காறரோம் நாங்கள் கொண்ட காசு அ-னுல்
நாங்களே

37 பணியும் இறையுஞ் செய்யக் கடவோமாகவும்
நாங்கள் விற்றுக் குடுத்த இவ்வூர் இரட்டை குளமென்று
பேர் கூவப்பட்ட நில காலே இருமா தேவதாந

38 புதியங்குடி நில நிமந்தமுடைய பதி பாத மூலபருடைய
பஞ்சாசரியர்களோம் நாங்கள் கொண்ட காசுக்கு
நாங்களே பணியும் இறை

39 யுஞ்செய்யக் கட வோமாக இவ்வூர் நாங்கள் விற்றுக்
குடுத்த புதுக்குளமென்று பேர் கூவப்பட்ட நிலம்
காலே மும்மா நாலுமாவும் திருவாரூர் நகரத்தோம்
கொண்ட காசு உடு - ம்

40 நாங்களே பணியும் இறையுஞ் செய்யக் கடவோமாக
நாங்கள் விற்றுக் கொடுத்த தீயங்குடி எங்கள்
காணியா ந மண்டபத்திருந்து தண்ணீரட்டி
நெருப்பெரி

41 ப்பான டு களு ஸம் உடையார் ஸ்ரீ மூலஸ்தா ந
முடையார் கன்மிகளோம் கொண்ட காசு
கூ-க்கு நாங்கள் விற்றுக் குடுத்த திரு நந்தவநம்
ராஜ ராஜ நில.....

42 ந் கீழ் மூலையில் பாழாய் சிடந்த நிலம் காலும்
ஆக காசு நிய – க்கு விற்றுக் கொடுத்த நிலம்
கூஉப இந்நிலம் மூன் றேய் இரண்டு மாவும்
இந்நிலங்கள் திருத்தினை

43 துந் கூலியாக குடுத்த காசு ருய–ம் ஆக
காசு நூறுக்கும் இந்நிலம் முந்றைய் இரண்டு மா
-வுங் கொண்டு இந்நிவந்தஞ் செய்யத் கடவோ
மாக கல் ஞ

44 வட்டிக் குடுத்தோம் உடையார் ஸ்ரீமூலஸ்தானமுடையார்
பதிபாத மூலப்பட்டுடையப் பஞ்சாசரிய தேவகந்மிக
ளோமும் திருவாரூர் நகரத்தே

45 ாமும் மேற்படியார் தமயந் யாண்டு அ-ஆவது
அதிராஜராஜ வளநாட்டு திருவாரூர் கூற்றத்து
திருவாரூர் உடையார் ஸ்ரீமூலஸ்தானமுடை

46 யார் கந்மிகளோம் ராஜராஜ வளநாட்டு
பரவை சுற்றுப்பூண்டி பூண்டி உடையான்
வேளாந் மாறநாந செம்பியந் தெந்கரை
நாட்டு மூவேந்தவேளார்
-கும் சிவ சோதுகள் கலம் ய உக்கு
-கு அரிசி உ ய க க அரிசி

47 நிச
கலம் க-கூ -ம வண்ணம் நெல்லுக கூஉகூ
கூய க்கு பதக்கே -லம் ரு-ம் கறி
-ம் குறு கூலி நெல்லு
கூ-ச்சு... -து

48 கலம் 2-ம் மிளகு..க்கு நெல்லு பஉ
கலமும் நெய்.....மோர்க்கு.....
வெறுங்காய் உ-சக்கு..... வெற்றிலைப்
பற்றுக்கு

49 .....விறகு விலேய்க்கு நெல்லு ச குசக்
கலத்துக்கு நெல்லு முப்பது கலமும்
அடுவார்க்கு நெல்லு க கூ இந்நெல்

க ச ம் கொண்டடுவாநாக திருவாரூர்
இருக்கும் ப்ராஹ்மணந் தெ

50. களசிகன் சியாரூர் விடங்கனும் இவந் வற்க
கத் தாரும் அடக்கட வாராகவும் ஆக
நெல்லு நூற்று ஒரு கலத்துக்கு மட்டக்காலால்
நெல் கலம் நூறு ஆக நெல்லு இருநூற்று
பத்துக்கு .....ராகா ளக்கு உ ளை

51. டயார் பண்டாரத்து ஒடுக்கிந காசு ரா
இக்காசு நூறும் விஜயராஜேந்திர வளநாட்டு
ப்ரஹ்மதேயம் புலிவலத்து ஸபையார்
வசம் குடுத்த இவர்

52. க்கு இறையிலி செய்து தந்த நிலம்
இன்னிலந்
இரண்டே மும்மாவரை அரைக்காணி
முந்திரிகையும் கொண்டு இந்நிவந்தஞ்
செய்வதாகக்கல்

53. வெட்டிக் கொடுத்தோம் உடையார் ஸ்ரீ மூலஸ்
தானமுடையார் கந்மிகளோமும் புலி
வலத்து ஸபையோமும் 12
மேற்ப்படி யாந் யாண்டு அ ஆவ

54. து அதிராஜராஜ வளநரட்டு திருவாரூர்
கூற்றத்து திருவாரூர் உடையார் வீதிவிடங்க
தேவர்க்கு சாத்தியருள ராஜராஜ வளநாட்டுப்
பரவை சு

55 ற்று பூண்டி பூண்டி உடையாந் வேளான்
மாறநாந செம்பியந் தென்கரை நாட்டு மூவேந்த
வேளாந் புஷ்பமாக செய்த திரு கொந்தளம்பூ
ஒந்று ராஜ ராஜன் காசு நிறை கல்லால்
ரா பதின் கா.....ம் உழ வாந் சலகாம்
இவை பந்மாஹேஸ்வர ரக்ஷை ॥ ஷ

திருவாரூர் கல்வெட்டு எண். 74

இடம்:- தியாகராஜ சுவாமி கருவறை வடபுறச் சுவர்

மன்னன்:- இரண்டாம் இராஜேந்திர சோழன்

காலம்:- எட்டாம் ஆட்சியாண்டு (கி.பி, 1059)

செய்தி:- கங்கை கொண்ட சோழபுரத்தினனாகிய செய்ய பாதம் என்பான் வீதிவிடங்க தேவரின் தேவியான சிவகாம சுந்தரிக்கும், வீதி விடங்கரின் நம்பிராட்டியார்க்கும் (நின்ற கோலத்திலுள்ள சிவகாமியம்மை மற்றும் அமர்ந்த விடங்கரின் அருகமர்ந்துள்ள அம்மை) அளித்த விலையுயர்ந்த மணிகளையும், ஆபரணங்களையும் பற்றி விவரிக்கின்றது. இக் கல்வெட்டின் கடைப் பகுதியில் அழகிய வெண்பாக்கள் உள்ளன. அப்பாடலில் வீதி விடங்கப் பெருமானின் தேவி சுட்டப்படுவதாலும், கல்வெட்டு வரி எண் 27-ல் ''வீதி விடங்க தேவர் நம்பிராட்டியார்'' என்ற குறிப்பு காணப் பெறுவதாலும் வீதி விடங்கர் திரு மேனி சோமாஸ் கந்தர் திருமேனிதான் என்பதை வலியுறுத்துகின்றது.

கல்வெட்டு (TEXT)

இக் கல்வெட்டில் 1லிருந்து 24 வரிகளில் இரண்டாம் இராஜேந்திர சோழனின் ''திருமாது புவியெனும் பெருமாதர் இவர் தன் மாதேவியர்'' எனத் தொடங்கும் மெய்கீர்த்தி உள்ளது. இதனை திருவாரூர் கல்வெட்டு எண் 65ல் காண்க. இனி 25 ஆம் வரியிலிருந்து கல்வெட்டைக் காண்போம்.

25 ... ... ஸ்ரீ ராஜே

26 ந்த்ர தேவற்கு யாண்டு அ -ஆவது அதி
ராஜேந்திர வளநாட்டு திருவாரூர் கூற்றத்து
திருவாரூர் உடையார் ஸ்ரீ மூலஸ்தானமுடையார்
கோயிலில்

27 உண்டியார் வீதிவிடங்க தேவர் நம்பிராட்டியார்க்கு
சாத்தி அருளக் கங்கை கொண்ட சோழபுரத்து
ள்ளால் கங்கை கொண்ட சோழபுர மடிகையில்

28 பெரு மாக்களுருடையான் வேளான் செய்ய
பாதம் இட்ட மாநிக்க

ஆரத்தில் மும் மாறுங்கு கண்டடம் ஈ டம்
தநித் தாலிக் கண்டடம்

29 ☐உ -ம் ஆக கண்டடம் ☐ரு — இவற்றுள்க்
கட்டிந மாணிக்கம் ☐வம தைப்புத்தாலி
மாணிக்கம் உ☐க-ம் ஜாதி வயிரம்
ர எ-ம் ஜ பக்க

30 த்தில் தடவிக் கட்டின மாணிக்கம் உ-ம்
பூத்து எ☐க -ம் கொளுவும் கொக்குவாயும்
படு கண்ணும் நாலியும் கள்ளிப்பூசம் படு
கண் உ

31 -ம் இடையில் கண்டடம் உ ம் கோத்த நூலும்
அரக்கும் உட்பட காசு நிறைகல்லால்
நு☐உ பளு மாணிக்க ஆரம் க இது
பந் மாஹே

32 ஸ்வர ரக்ஷை ॥உ பூட்டிநான் மாணிக்க
நல்ல வயிர பூரைம் சேட்டு நீர் ஆரூரன்
தேவர்க்கு கோட்டு மா கோப்பை நகர்
வென்ரூர்க்கியாரை மாக்களூர்

33 டைட்டி நிமர் மாக்களூர் செப்பமிகு செய்யப்
பாதம் ॥ தெந்நாரூர் வீதி விடங்கப் பெருமான்
தேவிக்கு பொந்நார மணி ஆரம் பூட்டிநான்
மிந் நாரும்

34 திண் கைய்யார் வேல் செய்ய பாதம்
செழு முகில் போல் வண்கையாந் மாக்கையார்
மன் ॥ - மேவு புகழ் ஆரூர் வீதிவிடங்க
பெருமான் தே

35 தவி சிவகாம சுந்தரிக்கு வாவி அணி
ஆரம் மாக்களூர் மன் செய்ய பாதம் மணி
ஆரம் பூட்டி நான் வந்து । ஸ்வஸ்திஸ்ரீ ॥

திருவாரூர் கல்வெட்டு எண்-75

இடம்:- இக்கல்வெட்டு தியாகராஜ சுவாமி கருவறை வட புற அதிஷ்டானத்தில் பத்மம் குமுதம் கண்டடம் ஆகிய பகுதிகளில்

தொடங்கி மேற்கு மற்றும் தென்புற அதிஷ்டானங்களில் வெட்டப் பெற்றுள்ளது.

மன்னன்:- முதலாம் இராஜேந்திரசோழன்

சூலம்:- 20ஆம் ஆட்சியாண்டு கி.பி. 1032

செய்தி :- வரலாற்று முக்கியத்துவம் பெற்ற கல்வெட்டு ''திருமன்னிவளர'' என்ற மெய்கீர்த்தியுடன் துவங்கும் இக்கல் வெட்டு உடையார் வீதிவிடங்க தேவருக்கு அளிக்கப்பெற்ற பல வகையான ஆபரணங்கள், நிலங்கள், விளக்குகள் போன்றவற்றை பட்டியல் போட்டு விவரிக்கின்றது. மாமன்னன் இராஜேந்திர சோழனின் 18 ஆம் ஆட்சியாண்டில் வீதிவிடங்கப் பெருமானின் திருக்கோயில் செங்கற்கட்டுமானமாய் இருந்ததை கருங்கற் கோயிலாய் மாற்றி அமைத்தது, இம்மாமன்னனின் அன்புக் காதலியான அனுக்கியர் பரவை நங்கையே என்பதையும் கூறு கின்றது. இப்பெண் கற்கோயிலாக மாற்றி அமைத்தது மட்டு மின்றி 20643 கழஞ்சு எடையுள்ள பொற்தகடுகளைக் கொண்டு கருவறையின் விமானத்தையும், சுற்று சுவர்களையும் வாயிலையும் அலங்கரித்தான் என்றும், 42000 பலம் எடையுள்ள செப்புத் தகடு களைக் கொண்டு கதவுகள், மண்டபத் தூண்களை அலங்கரிக்கச் செய்தாள் என்றும் கூறுகின்றது.

உடையார் வீதிவிடங்க தேவர் கோயிலில் குடத்திலும், வாய் மடையிலும், நாலு நாசியிலும் உள்குட்டத்திலும்.....என்று கூறுகின்றது.

இதுமட்டுமன்றி இந்நங்கை அளித்த பல்லாயிரக்கணக்கான கழஞ்சு எடையுள்ள அணிகலன்களின் பட்டியலும் கொடுக்கப் பட்டுள்ளது. 428 முத்துக்கள் 7 மாணிக்க கற்கள் 36 வைரக் கற்களையும் கொண்ட அணிகலன்களும் அளிக்கப்பட்டன. ''பச்சை பாவை உமை நங்கை'' ''பாவை சரியா முலை நங்கை'' என்ற இரு பாவை விளக்குகளும், 15579 பலம் எடையுள்ள பிரமாண்டமான 28 குத்து விளக்குகளும் அளித்தனை குறிப்பிடுகிறது.

மேலும் இராஜேந்திரனின் 16-18ஆம் ஆட்சியாண்டுகளில் வீதிவிடங்கரின் கோயில் கற்றளியாக மாற்றப்பட்டதும் 18ம்ஆட்சி யாண்டில் 38ம் நாள் தொடங்கி 199ம் நாளில் பொற் தகடுகளும்

செப்புத்தகடுகளும் பொறுத்தும் வேலை பூர்த்தியடைந்ததாகவும், பின்பு 21ஆம் ஆட்சியாண்டில் மாமன்னன் இராஜேந்திரன் நங்கை பரவையாருடன் வீதிகளில் தேரில் பவனி வந்த பின்பு உடையார் வீதிவிடங்கதேவரின் திருக்கோயிலுக்கு வந்ததாகவும், அவர்கள் இருவரும் நின்று வீதிவிடங்கனை தரிசித்து அந்த இடத்தில் நினைவாக விளக்கு ஒன்றினை வைத்ததாகவும் கூறுகிறது இக் கல்வெட்டு இதனை—

——''உடையார் ஸ்ரீ ராஜேந்திரசோழதேவரும்
அணுக்கியார் பரவை நங்கையாரும் நிற்குமி
டந்தெரியும் குத்து விளக்கொன்றும் . . . .''

என்று இயம்புகிறது.

சிறப்புச் செய்திகள் பல பேசும் இக்கல்வெட்டினால் இன்று நாம் காணும் தியாகராஜசுவாமியின் கற்கோயில் பரவை நங்கை என்ற இராஜேந்திரனின் அணுக்கியரால் கட்டப்பட்டது என்பதும், அத்தேவி மாமன்னனால் மிகவும் மதிக்கப்பட்டவர் என்பதையும் அறிகிறோம். இத்தேவி இக்கோயிலுக்கு செய்த அறத்தொண்டுகளும், கொடைகளும் மற்ற மாமன்னர்கள் அளித்தது அனைத்தையும் மிஞ்சுகிறது.

கல்வெட்டு (TEXT)

திருமன்னி வளர விருநில மடந்தையும் போர்ச்சயப்
பாவையுஞ் சீர்த்தனிச் செல்வியுந் தன்பெருந் தேவியராகி
யின்புற நெடிதிய லூழியுளிடைதுறை நாடும் தொடர்வன
வேலிப்
படர் வன வாசியும் சுள்ளி ச் சூழ் மதிற் கொள்ளிப் பாக்கை
-யும் கண்ணற் கருமுரண் மண்ணைக் கடக்கமும்
பொருகட லிழத்தரசர் தமுடியும் ஆங்கவர்
தேவிய ரோங் கெழின் முடியும் முன்னவர் பக்கற்
றென்னவர் வைத்த சுந்தரமுடியு மிந்திரனுரமும்
தெண்டிரை யீழ மண்டல முழுவதும் எறிபடைக்
கேரளன் முறைமையிற் சூடும் குலதனமாகிய பலர்புகழ்
முடியும் செங்கதிர் மாலையும் சங்கதிர் வேலைத்
தொல்பெருங் காவற் பல் பழந் தீவும் செருவிற்
சினவி யிருபத் தொருகால் அரசுகளை கட்ட பரசுராமன்
மேவருஞ் சாந்திமத் திவரண்ட கருதி இருத்திய

செம் பொற்றிடுத்தகு முடியும் பயங்கொடு
பழிமிக முயங்கியில் முதுகிட் டொளித்த
சயசிங்களப்பரும் புகழொடு பீடிய விரட்பபாடி
யேழரை யிலக்கமு நவநிதிக் குலப்பெரு மலைகளும்
விக்கிரமவீரர் சக்கரக் கோட்ட மு முதிர்பட வல்லை
மதுரை மண்டலமும் காமிடை வளை இய நாமனைக்
கோணமும் வெஞ்சின வீரர் பஞ்சப் பன்னியும்
பாசடைப் பழன மாசுணி தேசமும் அயவில்வண்
கீர்த்தி யாதி நக ரகலையிற் சந்திரன் றெல்குலத்
திந்திர ரதனை விளை யமர் களத்துக் கிளையொடுங்
பிடித்துப் பல தனத்தொடு நிறைகுல தனக் குவையும்
சிட்டஞ் செறிமிளை யொட்ட விஷயமும்
பூசுரர் செருநற் கோசலநாடும் தன்ம பாலனை
வெம்முனை யழித்து வண்டுறை சோலைத் தண்ட
பூத்தியும் இரணசூரனை முரணறத் தாக்கித்
திக்கணை கீர்த்தி தக்கணலாடமும் கோவிந்த
சந்தன் மாவிழித் தோடத் துங்காத சாரல்
வங்காள தேசமும் தொடுகழற் சங்கு கொடடலீ
மகிபாலனை வெஞ்சமர் வளாகத் தஞ்ச வித்தருளி
ஞண்டிறல் யானையும் பெண்டிர் பண்டாரமும் நித்தில்
நெடுங்கடலுத்தர லாடமும் வெறிமலர்த் தீர்த்தத்நெறி
புனற் கங்கையும் அலைகடல் நடுவுட் பலகலஞ்
செலுத்திச் சங்கிராம விசையோத்துங்க வர்மனுகிய
கடாரத் தரசனை வாகையும் பொருகடல் குப்பக்கரி
-யொடு மகப்படுத்துரிமையிற் பிறக்கிய பெருநிதிப்
பிறக்கமும்
ஆர்த்தவனகநகர்ப் போர்த் தொழில் வாசலில்
விச்சாதிரத்
தோரணமு மொய்த்தொளிர் புனை மணிப் புதவமுமுங்
கனமணிக் கதவமும் நிறைசீர் விசயமுந் துறைநீர்ப்
பண்ணையும் வண்மலை யூரெயிற்றென்மலையூரும்
ஆழ்கடலகழ் சூழ் மாயிருடிங்கமும் கலங்கா
வல்வினை இலங்கா சோகமும் காப்புறு நிறைபுனல்
மாப்பப் பாளமும் காவலம் புரிசை மேவி லிம்
பங்கமும் விளைப் பந்தாருடை வளைப்பந்தாரும்
கலைத்தக்கோர் புகழ் தலைத் தக்கோலமும்
தீதமர் பல்வினை மாதமாலிங்கமும் காலாமுதிர்
கடுந்திறல் லிலாமுரி தேசமும் தேனக்கவார்

பொழில் மானக்கவாரமும் தொடுகடற் காவற்
கரடுமுரட் கடாரமும் மாப்பொரு தண்டாற்
கொண்ட கோப்பரகேசரி வன்மரான
உடையார் ஸ்ரீராஜேந்திர சோழதேவர்க்கு யாண்டு
இருபதாவது உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர்
அனுக்கியார்
பரவை நங்கையார் கூத்திரிய சிகாமணி வளநாட்டு
திருவாரூர் கூற்றத்து திருவாரூர் உடையார்
வீதி விடங்கதேவர் திருக்கற்றளி எடுப்பித்து
உடையார் வீதி விடங்க தேவர்
அனுக்கியார் பரவை நங்கையார் யாண்டு
இஅ (18) -வது நாள் நஅ (38) முதல்
நாள் ரகூஇக (199) வரை உடையார்
வீதி விடங்க தேவர் கோயிலில் குடத்திலும்
பத்மத்திலும் கும்பிலும் சிகரத்திலும் வாய்
மடையிலும் நாலு நாசியிலும் உள் குட்டத்தி
லும் ஆக பந்தயம் கழஞ்சோடு ஆயிரத்து
நானூற்று ஒன்றினாலும் முக்கழஞ்சோடு
ஆயிரத்து நானூற்று முப்பத்தெட்டினாலும்
இரு கழஞ்சோடு இரண்டாயிரத்து ஒரு
நூற்று ஒரு பத்தெட்டினாலும் தகடு
நூற்றம்பத்தெட்டினாலும் சீரிணி நூற்
றொருபத்தினாலும் குடிளைக் சுல்லால்
மேய்ந்த பொன் இருபதினாயிரத்து அறுநூற்று
நாற்பத்து முக்கழஞ்சே ஏழு மஞ்சாடியும்
வீதி விடங்க தேவர் கோயிலும் இக்
கோயில் முன்பில் மண்டபத்து சூழ்ந்த
கொடுங்கையிலும் சோபான கூடத்திலும்
கதவிலும் மேய்ந்த பொன் நிறை நாற்பத்து
ஈராயிரத்து ..... அருமொழி கூத்தனை
யோகமாராயன் உடையார் வீதி விடங்க
தேவர்க்கு சாத்தி அருளக் கொடுத்த
முத்தின் வடம் ஒன்று இதனுல் முத்து
பதின் ஐஞ்சும் இராஜவர்க்கம் இரண்டு
பவழம் இரண்டும் தாளியம்பம் இரண்டும்
கோத்த அனுமடல் . . . . இராஜராஜன்
காசு நிறை கல்லால் நிறை முக்கழஞ்சே மூன்று

யாண்டுமெ (17) வது நாள் நூற்றெண்பதிஞல்
ஊடையார் ஸ்ரீராஜேந்திர சோழதேவர் அனுக்
ரியார் பரவை நங்கையார் வைத்த பொன்னின்
கைச்சாமரை ஒன்று இது அலகு நிலைப்படி
குடிஞைக்கல்லால் பொன் நாற்பத்து ஐப்புதின்
கழஞ்சே இரண்டு மஞ்சாடியும் இவரே
நாளது கொடுத்து பொன்னின் கைச் சாமரை
ஒன்று இதில் கடையில் காவில் கட்டின
பச்சைப் பொத்திக் கல்லு எட்டும் தடவிக் கட்டின
பெடி ஜாதிக்கல்லு பதின்எட்டு இத்திருக்கை
கழலில் கட்டின பச்சை பொன் போனகக்
கல்லு பத்தும் படிகை இருபதும் இதன்மேல்
நீலை கழலில் கட்டின பச்சை பொத்திக்கல்லு
பத்தும் படிக சாதிக் கல்லு...பச்சை
பொத்திக்கல்லு பத்தும் படிக ஜாதிக்கல்லு இருபது
இதன் மேலால் பலகையில் கட்டின பச்சை
பொத்திக்கல்லு பதின் ஆறும் படிசுசாதிக்
கல்லு எட்டும் இதன் மேலால் கட்டின
பச்சை பொத்திக்கல்லு எட்டும் இதன் மேலால்
பலகையில் கட்டின பச்சை பொத்திக்கல்லு
படிகக் கட்டின பச்சை பொத்திக்கல்லு
எட்டும் இதன் மேலால் பலகையில் கட்டின
பச்சை பொத்திக் கல்லு படிகக் கல்லு ஆறும்
படிக சாதிக்கல்லு முப்பத்து இரண்டும்
உட்பட பொன்னின் கைச் சாமரை ஒன்று இது
வாங்கி நிறை எடுத்தமையில் திலலை இழநிள
உடையார் வீதிவிடங்க தேவரை திருவாராதனை செய்யும்
பத்துடையான் தாமோதிரன் அருமொழியும் எடுத்த
பாதம் ஆசாரியெனும் உடையார்க்கு பணிமார்
கொடுதது நாளது மேற்படியார் கொடுத்த பொன்னின்
கைச் சாமரை ஒன்று இது அலகு நிலைபடி குடிஞைக்
கல்லால் பொன் நாற்பத்தொன்பதின் கழஞ்சே இரண்டு
மஞ்சாடியும் ஆறுமா இது உடையார் வீதிவிடங்க
தேவர் பணிமார் மேற்படியார் வசம் கொடுத்து
மேற்படியார் கொடுத்த பொன்னின் நாண் ஒன்றும்
இதில் கோத்த மாணிக்கம் ஒன்றும் நடுவு தடவிக்
கட்டின மாணிக்கம் ஒன்றும் வயிரம் கொஞவும்

கொக்குவாய் உட்பட... ..மேற்படியார் கொடுத்த
ஒற்றைச் சங்கு ஒன்று இதில் கட்டின பொன் உட்பட
இராஜராஜன் காசு நிறை முன்னூற்று முப்பது
கழஞ்சரை இது உடையார் வீதிவிடங்க தேவர்
திருவாராதனை செய்யும் மேற்படியார் வசம்
கொடுத்து யாண்டு பதினாராவது நாள் எண்பத்தெட்
-டினுல் உடையார் வீதிவிடங்கதேவரை திருவாரா
தினை செய்யும் மேற்படியார் வசம் கொடுத்து
யாண்டு இருபதினுல் யாண்டு பதினாராவது
நாள் எண்பத்து எட்டினுல் இரசனைக் குறையும்
தண்டாக... .. .. ..தினையில் கண்ட
... .வெள்ளை ஒன்று விளாசு பட்டிகை யாக
தைத்த பொன்னின் தகடு ஆறினுலும் மேற்படி
கல்லால் எடுக்க வந்த நிறை ஆறு கழஞ்சே முக்கால்
மூன்று மஞ்சாடியும் மேற்படியார் குடுத்த பூ தோய்த்த
பரிச் சட்டத்தில் முக மிரண்டிலும் விளிம்பிரண்டிலும்
விளாசு பட்டிகையாக தைத்த பொன்னின் தகடு மேற்படி
கல்லால் நிறை பதினேழு கழஞ்சே காலே குன்றியும்
உடையார் வீதிவிடங்கதே வரை திருவாராதினை செய்யும்
மேற்படியார்கள் வசம் கொடுத்து மேற்படியார் கொடுத்த
படி.

மக்கலம் ஒன்றும் இதில் தடவிக் கட்டின பச்சைக் கல்லும்
ஒன்றும் பட்ட எண்பத்தாறும் தந்தக்கையும்
இதனில் கட்டின செம்பும் செம்பின் மேல் பூசின
பொன்னும் உட்பட படிமக் கல் மூன்றினுல் நிறை
முப்பதின் பலம் உடையார் வீதி விடங்க தேவர்.....
... ... ஒன்றினுல் நானுற்றம்பதின்
நாளது மேற்படியார் வரக் காட்டின முகுழ
அலகும் பொன்கட்டின திரு தட்டினுல்
ஓரணையும்
மேற்படியார் வரக் கட்டின செம்பின் மேல் பொன்
சுருக்கின இது உடையார் வீதி விடங்க தேவரை
திருவாராதினை செய்யும் மேற்படியார் வசம்
யாண்டு இருபதாவது நாள் இருநூற்று முப்பத்தெட்டினுல்
இத்தேவர்க்கு ஸ்ரீ காரியம் செய்கின்ற வாள்கொளி
புத்தூருடையான் முன்பு பண்டாரப் பொத்தகத்து
ஆன முதலில்லாமையில் முதல் எடுத்து

மேற்படியார் வரக் காட்டின திரு அபிஷேகம் ஒன்று இதில்
சிகாமணி ஆக கடடின மாணிக்கம் ஒன்றுட்பட
மாணிக்கம் நூற்றிருபத் தொன்றும் . . . . . ஐநூற்று
ஒருபத்தைந்தும் மாதகம் நாற்பத்தொன்றும் கோத்த
முத்து நாற்பத்து மூன்றும் வரையில் கட்டின இப்பி
ஒன்றும் முத்துகோத்த நூலுட்பட இராஜராஜன்
காசு நிறைகல்லால் எடுத்துவந்த நூற்றெழுபத்து காலும்
மேற்படியார் வரக் காட்டின வீரப்பட்ட மொன்றினுல்
மாணிக்கம் முப்பத்தாறும் வயிரம் நூற்று இருபதும்
முத்து நாற்பத்தாறும் முத்து கோத்த . . . . . நானூற்று
ஐந்தும் முத்து முப்பத்தி நாலும் முத்து கோத்த
நூலுமுட்பட
மேற்படி கல்லால் இருபத்தைஞ் கழஞ்சே ஆறு மஞ்சாடியும்
மேற்படி பாகு வலயம் ஒன்றும் மாணிக்கம் பதினலும்
மரகதம் ஒன்றும் வயிரம் தொன்னூற்று எழுபத்து
முப்பத்து மூன்றும் முத்து கோத்த நூலுமுட்பட மேற்படி
கல்லால் நிறை இருபத்து முக் கழஞ்சே எண்பது
திருக்கை வலயல் ஒன்றினுல் .... இரண்டினுல்
மாணிக்கம் நாலும் வயிரம் இருநூற்று
நாற்பத்தொன்பதும் மோள நீள . . . . . இரண்டினலும்
உட்பட மேற்படி யார் ..... மேற்படி கல்லால்
நிறை இருபத்தறு கழஞ்சே ஆறு மஞ்சாடியும் மேற்படி
ஒன்றின் கண்டம் இரண்டினில் மாணிக்கம் பதினெட்டும்
வயிரம் இருநூற்று ஐம்பத்து இரண்டும்
ஆன இரண்டு முட்பட கல்லால் நிறை இருபத்து
முக் கழஞ்சே முக்காலே மஞ்சாடியும் மேற்படியும்
நிறை காசு நிறை கல்லால் மாணிக்கம் இருபத்தி நாலும்
வயிரம் இருநூற்று நாற்பத்தி ஆறும் . . . . . .
ஆணி இரண்டுமுட்பட மேற்படி கல்லால் நிறை
இருபத்து நாற்கழஞ்சரையே நாலு மஞ்சாடி
கல்லால் நிறை முப்பத்தைஞ் கழஞ் சரையே
இரண்டு மஞ்சாடியும் குன்றியும்.....திருவடிக்காரை
ஒன்றினுல்..... மாணிக்கம் இரண்டும் வயிரம்
இருநூற்று எண்ணூற்று நாலும் பொன்னில் வெள்ளி ஆன
இரண்டுமுட்பட கல்லால் நிறை முப்பத்து நாள்
கழஞ்சே யாண்டு பதினுரு நாள் எண்பத்து
எட்டினுல் மேற்படியார் வரக் காட்டின உத்மா கிரகத்துக்கு
நாம் முன்னர் வைத்த பிராமணர்க்கு வெண்கலத்

தளிகை ஒன்றினுல் நிறை மூப்பதின் கலமும் மேற்படி
பாதலொன் றினுல் நிறை இருபத்தொன்றின் பலம் மேற்படி
பாதலொன்றினுல் நிறை முப்பத்து முப்பலமும் ஆக இரு
நிறை
தொன்னூற்றுருபத்திரண்டு பதினேந்தாவது நாள் நூற்று
இருபத்தினுலில் மேற்படியார் வரக் காட்டின எண் சான்
நிலத்து விளக்கு ஒன்றின் நிறை இரண்டாயிரத்து நூற்று
முப்பதின் பலம் மேற்படி எண் சான் நாலுவிரல்
நீளத்து விளக்கு ஒன்றினுல் நிறை மூவாரயித்து
...பலமும் மேற்படி ஒண்பது சான் நீளத்து விளக்கு
ஒன்றினுல் நிறை இரண்டாயிரத்து நூற்று
ஏழுனுல் பலம் மேற்படி ஒண்பது சான் நீளத்து விளக்கு
ஒன்றினுல் நிறை இரண்டாயிரத்து நானூற்று ஐம்பது
பலமும் மேற்படி ஒண்பது சான் நீளத்து விளக்கு
ஒன்றினுல் நிறை இரண்டாயிரத்து நானூற்று ஐம்பது
பலமும் ஆகவிளக்கு ஆறினுல் நிறை
பதினென்காயிரத்து தொன்னூறு பலமும் கால்கோல்
நீளத்து விளக்கு ஒன்றுன் நிறை ஆயிரத்து எழுநூற்று
முப்பது பலமும் மேற்படி இரண்டரை அரைக்கால்
கோல் நீளத்து விளக்கு ஒன்றினுல் நிறை ஆயிரத்து
நானூற்று 34 பலமும் மேற்படி முக்காலே
அரைக்கால் கோல் நீளத்து விளக்கு ஒன்றினுல்
..நிறை ஐ நூற்று ஐம்பது பலமும் ஒன்றரைகோல்
நீளத்து விளக்கு ஒன்றினுல் நிறை ஐ நூற்று நாற்பதின்
பலமும் மேற்படி முக்கால் கோல் நீளத்து
விளக்கு ஒன்றினுல் நிறை 750 பலமும் இரண்டே
முக்கால் கோல் நீளத்து விளக்கு ஒன்றினுல் நிறை
ஆயிரத்து... ... ...பலமும் முக்கால் கோல் நீளத்து
மேற்படி விளக்கு ஒன்றினுல் நிறை நூற்று இருபத்தெட்டு
பலமும் ஒன்றே முக்கால் கோல் நீளத்து பித்தளை
விளக் கொன்றின் நிறை அறுநூற்று அறுபதின் பலமும்
ஒன்றே முக்கால் கோல் நீளத்து விளக்கு ஒன்றினுல்
நிரை நூற்று முப்பது பலமும் ஒன்றே முக்கால் கோல்
நீளத்து விளக்கு ஒன்றினுல் நிறை... ..பலமும் இரண்டு
... .ஒன்றரைகோல் நீளத்து பத்து பித்தளை
விளக்கு ஒன்றினுல் நிறை ஐநூற்று இருபத்தைந்து
பலமும் ஒன்றரை கோல் நீளத்து விளக்கொன்றினுல்
நிறை நானூற்று ஐம்பதின் பலமும் இருகோல் நீளத்து

விளக்கு ஒன்றினுல் நிறை ஆயிரத்து எழுநூற்று ஐம்பது
பலமும் இருகோல் நீளத்து விளக்கு ஒன்றினுல் நிறை
... ... பலமும் அரைக்கால் கோல் நீளத்து
விளக்கு ஒன்றினுல் நிறை எண்ணூற்று ஐம்பதின் பலமும்
ஆக விளக்கு இருபத்திரண்டும் யாண்டு இருபதாவது
நாள்... ...யார்க்கு ஸ்ரீராஜேந்திர சோழ
தேவரும் அனுக்கியார் பரவை நங்கையாரும்
தோர்மேலெழுந்தருளி புகுதிக்கி நிலுட
வைத்த விளக்கொன்றினுல் நிறை மூவாயிரத்து... ...
... .நாள் நூற்று முப்பதினுல் மேற்படியார்
வரக்காட்டின உடையார் ஸ்ரீமூலஸ்தானமுடையார்
கோயிலில் உள்ளாளே குத்துவிளக்கு இரண்டும்
உடையார் ஸ்ரீராஜேந்திர சோழதேவரும்
அனுக்கியார் பரவைநங்கை யாரும் நிற்குமிடந்
தெரியும் குத்துவிளக்கு ஒன்றும் வீதிவிடங்க
தேவர் கோயிளல்...குத்திவிளக்கு மூன்றும்
பாவை விளக்கு இரண்டும் கொடிவிளக்கு பன்னிரண்
-டு நெய்தாங்கி உள்ளிட்டு ஒரு பதின் மூன்றும்
பள்ளித் தொங்கல் ஆக விளக்கொன்றும் ஆக விளக்காறும்
உடையார் வீதிவிடங்க தேவர் கோயிலில் சூழ எரியும்
விளக்கு நாலும் யாண்டு பதினாராவது முன்
பண்டார பொத்தகத்து இசைனேக்குரை
-யுடையான் சோதினேயில் கண்ட விளக்கு
பெருந்தரம் அருமொழி.....வந்த நிறை
ஆயிரத்து முன்னூற்றுப் பலமும் மேற்படியார்
கொடுத்த விளக்கொன்று இது அலகு நிலைப்படி
இருநூற்றென் பத்தொன்பதின் பலவென்று இ..
எடுக்க வந்த நிறை ஆயிரத்து இநுநூற்றையம்பதின்
பலம் யாண்டு இருபது நாள் நூற்று மூன்றினுல்
அணுக்கியார் பரவை நங்கையார்க்கு வந்த ஆ..
..ச் சட்டதி.....ன ரி நுழை..
தூக்கத்தில் முத்து ஒண்பதும் இதனில் திருப்பூ
பதினொன்றும் தடவிக் கட்டின கல்லொன்றும்
வட்டப்பூ ஒன்றினுள் முத்திருபத்து மூன்றும்
தடவிக் கட்டின கல் ஒன்றும் காப்பு பதினொன்றும்
மயிலொன்றினில் முத்தேழும் பச்சை பொத்திக்
கல்லு நாலும் தடவிக் கட்டின நூலும்

திருப்பூ . . . . .கல்லு . . . . . தடவிக் கட்டின
. . . . . குட்டப்பூ ஒன்றினுல் முத்திருபத்தெட்டும்
செய்த தாலியினுல் முத்து இருபத்தினுலும் குடப்பூ
ஒன்றினில் முத்து இருபத்தெட்டு தடவிக்கட்டின
கல்லு மூன்றும் தருப்புதினுலும் கெழுந்தொன்றினில்
முத்து இருபத்தேழும் இதில் தடவிக்கட்டின கல்லு
ஒண்பதும் . . . . . தாலி ஒன்றினில் கள்ளிப்பூ
பன்னிரண்டும் வட்டக்கண்ண பன்னிரண்டும் மாம்
பொன் ஒன்றும் தாலி யொன்றினில் மாணிக்கம்
ஒன்றும் தடவிக்கட்டின கல்லு ஒன்றும்
வயிரம் ஆறும் கொக்குவாய்யொன்றும் உள்ளிட்ட
மாணிக்கத் தாலி . . . . . முக்காலும் . . . . . ஒன்றினில்
நிறை . நூற்றெட்டும் மாணிக்கம் மூன்றும்
வயிரம் ஒண்பதும் கொளுவுங் கொக்குவாயும்
கோத்த தூலுமுட்பட நிறை ஐங்கழஞ்சே முக்காலே
மஞ்சாடியும் திரமக் கூட்டுக்கும் . . . . . .
இக்கட்டை முத்து வாள் இரண்டினுல் முத்துநாலும்
இதில் கோத்த நூபலுடறிறை கழஞ்சே மூன்று மஞ்சாடியும்
குன்றியும் முத்துங் முத்திரண்டினில் தடவிக் கட்டின
கல்லு இரண்டும் தருப்பு ஆறு இது . . . . . மஞ்சாடியும்
குன்றியு முத்தினுட முத்திரண்டின் தடவிக் கட்டின
கல்லு இரண்டும் தருப்பு ஆறும் நிறை கழஞ்சே
எழுமஞ்சாடியும் குன்றியும் கெம்பு மோதிரம்
இரண்டினில் தடவிக்கட்டின கல்லு இரண்டும்
தருப்பு பதினுரும் இதனில் பொன்னுமுட்பட
நிறை கழஞ்சரையே மூன்று மஞ்சாடியும்
பச்சை பாவை உமை நங்கைக்கு மேற்படியார்
வரக்காட்டின இரட்டை மணி ஒன்றினுல்
முத்து நாலும் பொன்னுமுட்பட நிறை காலும்
கம்பி ஒன்றினுல் ஓரனையினுல் நிறை மூன்று
மஞ்சாடியும் ஒன்றைத்தாலி மணி ஒன்றினுல் நிறை
காலே கழஞ்சே மூன்று மஞ்சாடியும் முத்து வடம்
ஒன்றினுல் முத்து நாலும் கோத்த நூலு முட்பட
நிறை மூன்று மஞ்சாடி பச்சை பாவை உமை
நங்கைக்கு கையில் பரிசில் சிந்தாமணி
ஆறினுல் பொன் கழஞ்சே இரண்டு மஞ்சாடியும்
இடையில் முத்துவடம் ஆறினுல் . . . . உட்பட

நிறைகாலே மஞ்சாடியும் காலில் பரிசில் சிந்தாமணி
ஆறினுல் பொன் கழஞ்சே ஏழு மஞ்சாடி.....
கழஞ்சரையே இரண்டு மஞ்சாடியும் குன்றியும்
காலில் மையிலா ,,,,,, மஞ்சாடியும்
இரண்டு ,,,,,,,, விளாப்பட்ட டிகை தைத்த சிவப்பு
ழீலையும் பொன்னுமுட்பட நிறை கழஞ்சரையும்
அரையில் கட்டின முடக்கில் தைத்த முத்தின் பட்டிகை
ஒன்றினுல் முத்து நூற்று ஐம்பத்து ..... நாலும்
கொளுவும் கொக்குவாயும் உட்பட நிறை
கழஞ்செய் இரண்டு மஞ்சாடியும் இதில்
தவலினுலினுல் முத்து தொன்னூற்று மூன்றும்
பலகை ஒன்றும் கொக்கு வாய்முட்பட
நிறை கழஞ்சும் இந்த பாவை சரியா முலை நங்
கைக்கு பொன்னின் இட்ட வாளில் பொன்
காலே குன்றியும் கம்பி இரண்டினுல் பொன்
காலும் இசாடியுங் குன்றியுங் முத்து கோர்த்த
மணியும் தாலியும் மொன்றினுல்.....நிறை
கழஞ்சே மஞ்சாடியுங் குன்றியுங் முத்துவடம்
ஒன்றினுல் முத்து இருபத்திரண்டும்
கோத்துநூலுமுட்பட நிறை மூன்று மஞ்சாடியும்
கையில் வடமும் சரியுமே முன்கை
.....னுல் பெரன் முக் கழஞ்சே
காலும் கிளியின் க.....த்திலேறின காரை
ஒன்றினுல் பொன் மஞ்சாடியும் மட்டப்பரிசு
பன்னி.....கட்டின முத்தின் கள்ளிப் பூ
ஒன்றினில் முத்து தொன்னூற் றஞ்சு...
கொளுவும் கோத்த.....

(முன் மண்டபக்கட்டுமானத்தில் உள்ள பிற்கால இணைப்பு களால் கல்வெட்டின் பிற்பகுதி மூடப்பட்டுள்ளது.

திருவாரூர் கல்வெட்டு எண்-77

இடம் :- முதல் பிரகாரம் – தியாகராச சுவாமி கருவறை முன் மண்டபம் வடபுறச்சுவர்.

மன்னன் :- இரண்டாம் இராஜேந்திர சோழன்

காலம் :- 9-ஆம் ஆட்சியாண்டு—கி. பி. 1061 – 61

செய்தி :- வேளான் மாறன் என்னும் செம்பியன் தென்..... என்பவன் திருவாரூர் மூலஸ்தான முடைய இறைவர்க்கு சந்தி நேரங்களில் நடக்கும் பூசைகள் மற்றும் ''நடுவில் இராஜேந்திரன் சந்தி'' என்ற பூசைக்குமாக கோயில் பண்டாரத்தில் காசுகளை முதலீடு செய்து வைத்திருந்தான். இதில் கி. பி. 1060-61 ஆம் ஆண்டில் திருவாரூர் கூற்றத்தைச்சேர்ந்த வேலங்குடி என்ற பிரம தேய கிராமத்தின் பெருங்குறி சபையினர் நூற்று நாற்பத்தைந்து காசுகளை திருக்கோயிலில் இருந்து பெற்றுக்கொண்டு நிலம்விற்றுக் கொடுத்த செய்தியைக் குறிப்பிடுகிறது, 145 காசுகளுக்குச் சமமாக 72½ கழஞ்சு பொன்னைப் பெற்றுக் கொண்டதையும் விளக்குகிறது இக்கல்வெட்டுச்சாசனம்,

கல்வெட்டு (TEXT)

1. ...தவியர்களாக நீதியுள் நிகழு நாளினுள்
இ கல்வெட்டெழுந்து சென்றரு முனை கொப்பத்தாகவ
மல்லனேடு பொரு சயப் புரியுங் காலை யரி நிகர்த்த...

2 ...ஐன் முந்தி நற்பாடு எதித்து நேராமரை சரை நெடு விசும்
ருணபேற்றி அந்துர வானத்தரம்பையர் எதிர் கொள
இந்திரலோக மெய்திய பின் குந்தள நற்படை.....

3. ...ளிதன் குஞ்சரமெற்றிற் தன் நடற்மேல் கூற்றெனக் கடா வி
தெரிகணை முதலியர் பொருபடை வழங்கி மொய்ம்பியல்க
ளுக்கி தம்பி ஜயசிங்கனும் போர் புலைக்கேசி.....

4. ..னு மிவர் முதலியர் வெண்ணலி அரைசரை
விண்ணகத் தேற்றி யாயிடை எதிர்நிலார் காகிலை துரந்த
செஞ்சரமாரி தன் குஞ்சர முகத்திலுந் திருத்துடையிலு ங்
குன்று...

5. ...றிய தொடுகழல் வீரர் மடியவும் வகையா தொரு த னிப் புக்கப்
பொரு தொழில் சளுக்கி வெற்ற வேழத்தை மிடல் கெட முட்டுவித் த
தொற்றை வேலவன் நிரத்துயத்த...

6. கடிழிந்து குலகுல குலிதெது தலைமயிர் விரித்து
வெண்ணுற நெளித்துப் பின்னுற நோக்கி அன்னிய ரெது

னும் வயற்படைக் குத்தனும் கொன்னவில் படைக்
குண்டமனும்.....

7. ...ந் தலையாகி னெரு வீழுந்னேட மென் கொண்டாங்கு
குருமதிர் கரபத்திர முதல் பொரு களர் அனேகமும்
பரியின் தொகுதியும் ஊரிய தேவியரையும் வராக
வேல் கொடி மு.....

8. ..மூனவயிற் கவர்ந்து போர்கள வளர்த்துப்
பார்திவராளேர் முன்னரும் செய்தறியாது பின்னரும்
செய்தமென்றெண்ணற்கரியாது கையகலந்தன்றி
னப்..

9. ..ழிஞிர்ததெம் புதரு புனலால் திக்குநள் பெ...
புன் நோக்கமும் களத்தேய் விஜாயா பிஷேகம்
விசை மிகச் செய்து வீரசிங்காசனம் திரிய விட்டோ
கோ நங்க.....

10. ...ய்யா றின்றிகா லொழுக நோண்து தன்றிரு க்காத
லனன போதலர் தெரியல் கங்கை கொண்ட சோழ
னேயும் அங்கவன் திருமகனுன இருநிலங்
காவலான் வந்த பெருமானேயும்.....

11. ...வளவன் மும்மடி சோழனேயும் நீர்ப்படை
வீர சோழனேயும், வேல் மதுராந்த கனேயும்
தாரமர் திரள்தோள் தன்னே
தன் திருமகன் ராஜேந்திர சோழனேயும் தரபதி
இருமடி சோழனே ராஜாதிராஜன் சுரதி நன்குணரும்...

12 ...சோழன் சோழகங்கன்றெடுகழல் உத்தம சோழனென்று
சுடர் நவமணி புனைந்தருமுடி சூட்டி தென்னவர்
முதலியர் நிருபரைத் தாங்கவர் க்கருளி கார்க் கடலி...

13 ...க்கலிங்கர்மன் வீரசலாமெகனைக் களிற்றெடும்
படக் கதிர் முடி தடித்தபின் முந்தையில் கொப்பத்து
வந்தழிளுக்கி ஆங்கெர்மதிய் பரிபவம் இன்னகர்
நிகல.. ..

14 இன்பாயின துறந்து துன்பம் தவிரப் பலவிரதம் தலை
நின்று வர்க்கடல் கிளந்தெளக் கிளர் படைப் பரப்பி
வன்றுளங்க நின்ரூர் கலிமுடக் காற்ருரமர் புரிவுழி... ..

15 ..டிறல் மல்லியன் முதலியர் பலபடை அரைசரும்
பொருக் களத்தவிய இருகயன் முதலியர் மன்னவர்
தம்மொடு மைந்தன் மிக்கலனெடு தன்னிலே... ..

16 புரி தன்றண்டின முன்னுள் சென்றெறிடு தனிவேழம்
முத்து டலியாங்கவனை இருமடிமென் கொண்டருளி
பொருவலி மாப்பெரும் புகழ் மிக வளர்த்த கோப் பர.:,,

17 ...ற்கு யாண்டு 9 ஆவது அதி ராஜேந்திர
வளநாட்டு திருவாரூர் கூற்றத்து பிரம தேயம்
வேலங்குடி பெருங்குறி சபையோம் இன் நாட்டுத்
திருவாரூருடை யார் ஸ்ரீ மூலஸ்தா... ....

18 ற் ஸந்திக்கும் நடுவில் ராஜேந்திர சந்திக்கு
பூஜைக்கு வேண்டும் நிவந்தம் செய்ய ராஜராஜ
வளநாட்டுப் பரவைச் சுற்றுப் பூண்டிப் பூண்டி உடைய
வேளான் மாறனை செம்பியன் தென்— — —

19 ...டுக்கின காசில் நாங்கள் கொண்டகாசு னூற்று
நால்ப் பத்தைஞ்சி நால் காசு ஒன்றினுக்குப்
—பொன் அரை கழஞ்சாக பொன் எழுபத்திருகழஞ்ச
—ரைக்கு பொன் கழஞ்சுக்குபனை நாரா சத்
—தால் நெல்—. —

20 கலத்துக்கு திருவாரூர் உடையார் ஸ்ரீ மூலஸ்தான
முடையார் கன் மிகளுக்குச் சந்திராதித்தவல் இறையிலி
யாக நாங்கள் விற்றுக் குடுத்த நிலமாவது எங்களூர்
நிலம் வானவராயிந் தென் கரைக் கலி.....

21 ...வரையே அரைக் காணியும் விற்றுக்கொடுத்தோம் விற்றுக்
கொடுத்த நிலத்துக்குக் கீழ் பாற்கெல்லை ஸபையோம்
நிலத்துக்கு மேற்கும் தென்பாற் கெல்லை அபிமான
—மேரு வாய்க்காலுக்கு வடக்கும் கி .....

22 ...ந்தி காமத்து சப்பன நகர மவித்தன் நிலத்துக்கும்
கிழக்கும் வடபாற்கெல்லை வானவாய் நீர் ஓடு கால்
-லுக்கு தெற்கும் ஆக இவ் விசைந்த பெரு நான் கெல்லையு
-ளும் அகப்பட்ட நிலம் ஒன்றேய் இருமாவரை .....

23 ...நிலம் சரிவும் நங்கை பத்துமாக நிலம் ஒன்றே காலே
அரைக் காணியும் விற்றுக் குடுத்ததற்கு கீழ்பாற்கெல்லை
நந்தி காமத்து சப்பம் பிகர மவித்தன் மக்கள்
நிலத்துக்குப் திருமூலட்டானன் விடங்கன் நி .....

24 .. ல் பால் கெல்லை ஊர்வாய்க்காலுக்கு கிழக்கு வடபாற்
கெல்லை சுபையோம் சிக்கருடையான் பத்துக்கு தெற்கும்
ஆக நிலம் ஒன்றே காலே அரைக் காணியும் பத்துக்
கண்டத்து.....

25 ...றுக் காலும் உறுப்புட்டூர் கேசுவ கர மவித்தன் மகன்
ஸ்ரீ வாசு தேவகரமவித்தன் நாற்றுக்காலுமாக நிலம்
இரண்டு மாக்காணிக்கு கீழ் பாற் கெல்லே திரு நாராண
வாய்க்காலுக்கு மேற்கும் தென் பாற் கெ.....

26 ...கெல்லே உறுப்புட்டூர் மதுராந்தக கரமவித்தன் நிலத்துக்கு
தெற்கும் இ நிலம் இரண்டு மாக்காணியும் ஆக
இவ்வனைத்து நிலமுமாக நிலம் இரண்டரை இந்நிலம்
இரண்டரை
யும் உண்ணி.. .. .. ..

27 ...த்துக் குழி உள்ள தெல்லாம் சந்திராதித்தவல் சாஸ்வதிக
மாக இறையிலியாக விற்றுக் குடுத்தோம் திருவாரூர்
உடையார் ஸ்ரீ மூலஸ்தானமுடையார் கன்மிகளுக்கு
வேலங்குடி பெரும்.....

28. இங்களுக்கு இதுவே விலே ஆவணமும்
பொருள் மாவருதி பொருள் செலவோலே யாவதாகவும்
இது வல்லது வேறு பொருள் மாவ..

29. ..கவும் இந்நிலங்களுக்கு பண்டு பாயும்
வண்ணமே பாயவும் வாரும் வண்ணமே
வாரப்பெறு வதாகவும் இந்நிலங்களில்
வந்த இறையும் எச்சோறு கூற்று நெல்.....

30. இருக்க கடவர்களல்லாதாராகவும்
செம்பிலும் வெட்டிக்கொள்ளப் பெருவார்களாகவும்
இப் போகத்திற்கு அழிவு செய்யில்...

31. விகள் பட்ட ராஜ தண்ட படுவோமாகவும்
இப்பரிசு விலேக்கறவிற்று பொருளறக் கொண்டு
விற்று விலேயாவணம் செய்து கொடுத்தோம்.
திருவாரூர் உடையார்

32. சபையோம் இப்பரிசு சபை பணிக்க பணிக்
கேட்டெழுதினேள் இவ்வூர் மத்தியஸ்தன்
பிச்சன்தேவர் கண்டனேன் இவை என்
எழுத்து இப்படிக்கு இவை வைகாசனன்

33. மண்டை கிரம வித்தனேன் இப்படி அறிவேன்
நம் ஊர் நரசிங்க கிரம வித்தனேள் இப்படி
அறிவேன் இவ்வூர் பிராமணன் உலோக சந்திரு
மலேய...,,,

34. இவ்வூர் வேட்கோவன் பெரும்புரக்..னேன்

35 இப்படி அறிவேன் ... ... கிரம வித் தனேன்
இப்படி அறிவேன் உருப்புட்டூர் கருமாணிக்க.....

36 பொள்ளம் புரத்து கிரம வித்த னேன் இப்படி அறிவேன்
வெள்ளப் பொள்ளம் புரத்து அங்காடி கிரமவித்தனேன்
இப்படி அறிவேன் வற்றனூர் மூத்த கோ.....

37 டி அறிவேன் முழுச் செருவல் பொம்ப விந்த
கிரம வித்தனேன் யாண்டு ஒண்பதாவது அதி
ராஜராஜ வளநாட்டு திருவாரூர் கூற்றத்து
திருவாரூர் உடை .....

38 மூலஸ்தான உடையார்க்கு சிருகாலை சந்திக்கும்
உச்சியம் போது சந்திக்கும் நடுவு ராஜேந்திரன்
சந்திக்கும் வேண்டும் பூஜைக்கும் ராஜராஜ
வளநாட்டு ரவைச் சுற்றுபூண்டி பூண்டி
உடையான் வேளான் மாறனை செம்பியன்
தென்கரை நாட்டு வேளான் நிவந்தஞ் செய்தபடி
உடையார்க்கு திரு அமுதுக்கு பழவரிசி
குறுணி...

39 கரியமுது ... உப்பமுது ... மிளகு ...
நெய்யமுது ... வானழப்பழம் ... அடைக்காயமுது
... இலைச் சுற்று உ க்கு வெற்றிலை பற்று
ஜல பவித் திரத்துக்கு குச கலத்துக்கும் திரு
விளக்கெண்ணை நாழிக்கும் ஸ்ரீ கண்ட மஞ்சனம்
ஒண்ணில் பருப்பு அமுதுக்கு .....
திருப்பள்ளித்தாமம் தொடுப்பானுக்கு திருமஞ்நீர்
கலநீர் கொண்டு வருவானுக்கு ...

40 யார்க்கும் செய்வானுக்கும் திருபதியம்
விண்ணப்பம் செய்வானுக்கு இடக்கை
வாசிப்பானுக்கு திருமஞ்ச நத்துக்கு
கொட்டும் உவச்சர்க்கு மட்டக் கால்கல்
நெல்லு...

41 நாளைக்கு வேண்டும் திருப்பரிசட்டத்திற்கும்
திருப் பொற்றுடை நாலுக்கு நெல்லு உ ம்
ஆக திரு நந்தவனந்தில் திருப் பள்ளித் தாமம்
பரிச்சு கோ.....

42 கோடு வந்து தொடுப் பார்க்கும்.....வேண்டு
வன செய்ய இருவர்க்கும் கௌசிகனுக்கும்
திருவேகம்பனுக்கும் இவன் வர்க்கத்தார்க்குமே
காணியாவதாகவும் இது பன் மாகேஸ்வர
ரக்ஷை:—

திருவாரூர் கல்வெட்டு எண்–78

இடம் :- முதற் பிரகாரத்தில் தியாகராஜ சுவாமி சன்னதிக்கு வடபுறம் தரையில் உள்ளது.

மன்னன் :- தஞ்சை மராட்டிய மன்னனை முதலாம் சரபோஜி மகாராஜா.

காலம் :- கி.பி. 1717 ஏப்ரல் 12ம் நாள்.

செய்தி :- இக்கல்வெட்டு சரபோஜி மன்னனல் வெட்டுவிக்கப் பட்டதாயினும் அதில் தனது முன்னவர்களான சாஹஜி (சகசி) மற்றும் ஏகோஜி மகராஜாக்களின் பெயர்களும் குறிப்பிடப் பட்டுள்ளது. இதில் கலியாண்டு 4818ம் சக ஆண்டு 1639 ஹே விளம்பிதமிழ் ஆண்டும், சித்திரை 15ம் நாள் வெள்ளிக்கிழமை குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்குச் சமமான ஆங்கில ஆண்டு கி. பி. 1717 ஏப்ரல் 12ஆம் நாளாகும்:

இந்நாளில் பூர்வபட்சமும் திரையோதிசியும்; ஹஸ்த நட்சத் திரமும் உள்ள நல்லோரையில் ஸ்ரீ தியாகராஜ சுவாமி மற்றும் வன்மீசனுதசுவாமி ஆலயத்திலுள்பட்ட மகா சிவலிங்கம், திருக் கோயில் இவைகளுக்கு அட்ட பந்தனம் செய்யப்பட்டதை குறிப் பிடுகிறது.கி.பி. 1717ல் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றமைக்கு இக்கல்வெட்டேசான்று.

கல்வெட்டு (TEXT)

1 கலியுக ஆதியான ந-
2 -ாள் முதல் சென்ற வருஷம்
3 4 818 சாலிவாக
4 ன சகாப்தம் 1639
5 * ..... இதன்மேல் செல்லா நி
6 - ன்ற ஏவிளம்பி வருஷம் சித்

7 திரை மீயரு உ பூறுவ பட்சம்
8 திறையோதெசியும் அ
9 ஸ்த நட்சத்திரமும் சுக்கிர
10 - வாரமும் ஸ்ரீ மற் தியாரா
11 - ச சுவா மியார் வன்மீகனு
12 - த சுவா மியார் ஆலயத்திலு
13 - ட்பட்ட மகா சிவலிங்கம்
14 - திருக்கோவில் அட்ட டெ
15 - பந்தனம் முதல்லாக சு
16 –ல்ப முதலிறந்து போ
17 னத்தை பண்ணி வித்
18 த பலன் மகா மண்ட
19 லே சுவரன் ராச மா
20 னிய ராச ஸ்ரீ ஏகோ
21 சி மகராசா சாயபு சக
22 -சி மகராசா சர போ
23 சி மகாராசா தற்மம் ||

குறிப்பு:– * இலக்கங்களை பிரித்து எழுதாமல் இணைத்தே எழுதப்பட்டுள்ளது.

திருவாரூர் கல்வெட்டு எண். 79

இடம்:- வன்மீக நாதர் (புற்றிடங் கொண்டார்) கருவறை மேற்கு சுவர் குமுதம் மற்றும் கண்டவரிகளில் உள்ளது.

மன்னன்:- தஞ்சை நாயக்க மன்னன் விஜயராகவ நாயக்கர்

காலம் :- சகம் 1552+1=1553 பரசோர்பதி ஆண்டு சித்திரை மாதம்—(கி.பி. 1631)

செய்தி:- திருக்கோயில் ஸ்ரீகாரியம் பார்ப்பார் சிலர் தம் கடமையிலிருந்து தவறியதால் பொற்பண்டாரத்து இருப்பு குறைய மன்னன் விசையராகவ நாயக்கர் பிரமராயர் மற்றும்விழுப்பரையர் என்பார் இருவரிடம் பொற்பண்டாரத்து பாதுகாப்பு உரிமையை வழங்கியதை விவரிக்கின்றது. இக்கல்வெட்டு தியாகராஜ சுவாமியே திருவாய் மொழிந்து கூறுவது போன்ற நடையில் எழுதப்பெற்றுள்ளது.

கல்வெட்டு (TEXT)

ஸ்வஸ்திஸ்ரீ சகார்த்தம்
ஊநிறைநெய்உன் மேல் செல்லா நின்ற
பிரசோர்பதி வருஷம் சித்திரை மீ நில்
திருவாரூர் பெரிய கோயில் பொற்பண்டாரத்தில்
திருவாபரணமும் வன்மீக நாத சுவாமியார்க்கு
பொற்பண்டாரப்பெட்டி உள்பட நாளது வரைக்கும்
விராமரராயர் வசமாக இருந்து பூட்டு முத்திரை
உள்பட ஒருவன் வசமாக இருந்தபடியினுலே
தியாகராசசுவாமி திருவாய் மலந்து
அரு ... விசைய ராகுவநாயக்கர்
அவர்கள் . . தான

2 வருந்தரும் பெருமாள் முதலியார்க்கும்
பேர்களுமாக நின்ரடயம் பண்ணி ஒருவன்
ஆக திருவாபரணம் எடுக்க மேற்படி துரக்கவும்
ஒன்னாது அது சேதி பிழையாக இருக்குது
என்று தலத்துக்கு எசமானர்களாய் இருக்க
பேர்கள் திருவாபரணப் பெட்டியா பொற்பண்டார
வாசல் வன்மீக நாதசுவாமியார் திருவாபரணப்
பெட்டி உட்பட முத்திரைபோட்டுத் துரவுகோலும்
அவர்கள் வசத்திலே இரு .....

3 போது பிரமராயர் முகாமா கிழாரும்
(விஸ்வநாத) விழுப்பதரையர் இவர்கள்க்கு
இருக்க பிரியா கூட இருந்து பெட்டிக் கெல்லாம்
உள்ச்சாபாடு போட நாளது திட்டம் கண்ட
படிக்கு திருவாபரணப்பெட்டி திருவாபரண
சோற்றியம் பொற்பண்டார வாசல் முத்திரைச்
சோஷம் வந்தால் அந்தக் குற்றம் பிரம்ம
-ராயரும் விழுப்பதரையரும் உத்தரிக்க
இந்த இரண்டுபேர்குள்ளே ஒருவர் ஒருவர்
சந்தையம் சொன்னுல் சந்தையம் உள்ளவர்

4 இரண்டுதிரவரும் இருக்ககடவேனுக
மேற்படி சந்தையம் ... தெரிஞ்சு
குடுத்த ...து சுத்தன் ஆகாமல் போனவன்

5 முச்சூட்டும் அவனே இருக்க கடவானாகவும்
..... இரண்டு பேர்களும் அனுபவித்து
கொள்வார்

6 .. ..
கிழான் வழுத்து நம்பவ பங்களத்தரையன்
எழுத்து பிரியர் எழுத்து மாயேசுரமுதல்
பிரமராயர் எழுத்து விழுப்பதரையர் எழுத்து:

திருவாரூர் கல்வெட்டு எண்-80

இடம்:- முதற் பிரகாரத்தில் மூலஸ்தானத்திற்கு வடபுறம் தரையில் பாவப்பட்டுள்ள கல்லில் உள்ளது.

மன்னன்:- தஞ்சை நாயக்க மன்னனன அச்சுதப்பநாயக்கன்

காலம்:- கி.பி. 1564

செய்தி:- சகம் 1482 ஆம் ஆண்டு உத்திரோற்காரி ஆண்டு பங்குனி மாதம் வெட்டப்பட்ட இக்கல்வெட்டில் அச்சுதப்ப நாயக்கரின் தந்தையான சேவப்ப நாயக்கரின் பேரால் தர்மமாக அளிக்கப்பட்ட சர்வ மானியம் பற்றி குறிப்பிடுகிறது. கல்வெட்டு பல இடங்களில் சிதைந்துள்ளது.

கல்வெட்டு (TEXT)

1 ஸ்வஸ்திஸ்ரீ || சக
2 சம்வஸ்தம் 1482
3 மேல் செல்லா நின்ற
4 உதிரோற்காரி வருஷம்
5 பங்கூநி மீ 29உ நெடுங்கு
6 ன்ற.....செவ்வப்ப நாயக்கர்
7 அய்யனுக்கு புண்ணியமாக
8 அச்சுதப்ப நாயக்கர்.....ார்
9 யிப்படி பெரும்.....சர்
10 கோயிற் சிற்பி..... அ
11 ரை மனே செ———காரி
12 கடைக் கூட்டு———ஓ
13 கை கழிச்சு ச———வ மாநி
14 -யம் பண்ணி———கிரபா

15 ——————யிலெ
16 ல உதகம் பண்ணி ந
17 படியாலே யிந்தப்படிக்
18 கு அரைமஹ சோடி
19 அதிகாரி கடைக்கூட்டு
20 சோடி புறவகையும்
21 ஆ சந்திராற் க ஸ்தா
22 பிதமாக சறுவ மானியமா
23 க கட்டளை யிட்ட படியா
24 லெ முன்னுக்கு யா
25 தொருத் தரும் யிந்த
26 தற்மத்துக்கு அருத
27 ம் பண்ணுமல் நடத்
28 திவரவும் யிந்த தற்ம
29 த்துக்கு யாதொருத்
30 தர் அகுதம் பண்ணி
31 ஞல் கெங்கை கரை
32 யிலே காராம் பசுவை
33 யும் தன் மாதா பிதா
34 வையும் தன் கையால்
35 கொன்ற தொஷத்தி
36 லெ பொக கடவர்கள்
37 ஆகவும் உ

திருவாரூர் கல்வெட்டு எண். 81

இடம்: வன்மீக நாதர் திருக்கோயில் முன் மண்டபம் வடபுற அதிஷ்டானம்.

மன்னன்: மூன்றாம் இராஜேந்திரசோழன்

காலம்: 27 ஆம் ஆட்சியாண்டு—கி. பி. 1273

செய்தி: சுத்தமல்லி வளநாட்டு பரம்புனிக் கூற்றத்து சிறு நாங்கூருடையான் அரையன் அழகிய திருச்சிற்றம்பல முடையான் என்பான், திருவாரூர் திருக்கோயிலில் திருப்பள்ளி அறை உமை நங்கை நாச்சியார் முன்பு எரிவதற்காக நான்கு திருவிளக்குகள் இட்டதோடு அதன் பராமரிப்பிற்காக நிலம் அளித்த செய்தி கூறப் பெற்றுள்ளது.

திருவாரூர் கல்வெட்டு எண்-82

இடம்: வன்மீகநாதர் திருக்கோயில் முன் மண்டபம் வடபுற அதிஷ்டானம்

மன்னன்: இரண்டாம் இராஜராஜன்

காலம்: 12வது ஆட்சியாண்டு—கி. பி. 1158

செய்தி: ஜெயங்கொண்ட சோழமண்டலத்து மேன் மலை பழையனூர்நாட்டு பழையனூர் உடையார் வேதவனமுடையான் அம்மையப்பனான பல்லவராஜர் வீதிவிடங்கப் பெருமான் மூன்பு திருவிளக்கு எரிப்பதற்காக அளித்த அறக்கொடைபற்றி விவரிக் கின்றது. இதன்படி 365 நாட்களுக்கு நெய் நூற்று எண்பத்திரு நாழிஉரி அளிக்க வேண்டும் என்றும், கோவில் நிவந்தக்காரர் களான சுரவிமேய்க்கும் இடையன் நம்பிடாரம்-பனான தியாக வினோதக்கோன் 61 ஆடுகளையும், மந்திரக்கோன் 61 ஆடுகளை யும் திருக்கோயிலில் இருந்து பெற்றுக்கொண்டு பல்லவராஜர் இட்ட கட்டளையை மேற்கொள்ள செய்து கொண்ட ஒப்பந்தமே இச் சாசனமாகும், வேதவனமுடையான் அம்மையப்பன் பல்லவ ராஜர் என்ற இப் பெருந்தகையாளர் திருச்சிற்றம்பலமுடையான் பெருமானம்பிப் பல்லவராயன் இறந்த பின்பு இரண்டாம் இராஜாதிராஜசோழனின் அமைச்சர் தலைவனாக பணிபுரிந்த வர். ஆரூர் திருக்கோயிலுடன் நெறுங்கிய தொடர்புடையவர். விழுப்பரையர் மரபினருமாவார்.

திருவாரூர் கல்வெட்டு எண்-83

இடம்:- வன்மீகநாதர் திருக்கோயில் முன் மண்டபம் வட புறச்சுவர்.

மன்னன்:- சாளுவதிருமலை தேவமகாராஜன்

காலம்:- 15ஆம் நூற்றாண்டு

செய்தி:- விருபாட்ச தேவமகராயர் விஜயநகர் பேரரசராய் இருந்தபோது சோழ மண்டலத்து மகா மண்டலேஸ்வரனாய் திகழ்ந்த சாளுவ திருமலைய்யதேவ மகாராஜன் ஆரூர்கோயிலுக்கு இட்ட கட்டளைபற்றி கூறுகிறது. இதில் திருப்பதி முதலான பல் கோயில்களுக்கு அளிக்கப்பெற்ற கட்டளைகளையும் குறிப்பிடு கிறது.

இக் கல்வெட்டின் மெய்கீர்த்தி பகுதியில் ''ஸ்ரீமன் மகா மண்டலேசுவரன், மேதினி கண்டன் சாளுவ தாணி வாரத்தி புவன ராய கண்டன் சம்புவராய ஸ்தாபனச்சாரியன் விபாடராஜ வர்க்க சாளுவ பகைத்த வன்னியர்குல காலன் சாளுவத் திருமலையய்ய தேவமகராஜன்'' என்று புகழ் பாடுகிறது. சவுமிய சம்வஸ்திரத்து மகர ஞாயிற்று அபர பட்சம் திருவோணம் ஆதித்த வாரம் குறிக்கப் பெற்றுள்ளது.

திருவாரூர் கல்வெட்டு எண். 84

இடம்:- வன்மீகநாதர் திருக்கோயில் முன் மண்டபம் வட புறச் சுவர்.

மன்னன்:- சாளுவ தேவப்பய்ய தேவ மகாராஜன்

காலம்:- 15 ஆம் நூற்றாண்டு.

யெ்தி:- திருமலையய்ய தேவ மகாராஜாவின் புதல்வனான (புத்திரன்) சாளுவ தேவப்பய்ய தேவ மகாராஜன் திருவாரூர் தியாகராஜ சுவாமியார்க்கு இட்ட அறக் கட்டளைகள் பற்றி விவரிக்கின்றது. ''சுபமஸ்த்து சகாப்தம் 1412 மேல் செல்லா நின்ற தாரண சம்வத்சரத்து மகர ஞாயிற்று . . . . ரையும் புத வாரமும் பெற்ற கேட்டை நட்சத்திரத்து நாள் ஸ்ரீமன் மகா மண்டலேசுவரன் மேதினி சுரகண்டன் கட்டாரி சாளுவ திரிபுவன சமுத்திரன் விபாடராயன் மூவராய நஞ்சாகிய தெக்ஷன சாளுவ தேவப்பய்ய தேவமகாராஜன் ..... என்று தொடர்கிறது இக் கல்வெட்டு.

முக்கிய குறிப்பு:

ஆரூர் வீதி விடங்கப் பெருமானுக்கு சோழப் பேரரசர்கள் காலத்தில் ''தியாக விநோதன்'' என்ற பெயர் கல்வெட்டுக்களில் காணப்படினும் முதன் முதலாக ''தியாகராஜன்'' என்ற பெயர் 15 ஆம் நூற்றாண்டில் வெட்டுவிக்கப் பெற்ற இந்தக் கல்வெட்டில் தான் காணப்படுகிறது. பின்னர் 1631ல் இத்திருக் கோயிலில் வெட்டுவிக்கப் பெற்ற விஜயராகவ நாயக்கர் கல் வெட்டிலும், மராத்தியர், சேதுபதிகளின் செப்பேடுகளிலும் ''தியாகராஜர்'' என்ற சொல்லாட்சியே திகழ்கிறது.

இக் கல்வெட்டின் இறுதியில் 4 தனித்தனி கிரந்த கல்வெட்டுகள் உள்ளன. இவை ஆரூர் போற்றிய உன்னத இசை மரபுபற்றி விளக்கும் அபூர்வ கல்வெட்டுக்களாகும்.

திருவாரூர் கல்வெட்டு எண். 84 ஏ
இசை மரபு கல்வெட்டுக்கள்

இடம்: வன்மீகநாதர் திருக்கோயில் முன் மண்டபம் வடபுறச் சுவர் கல்வெட்டு எண் 84ன் தொடர்ச்சி

மன்னன்: சாளுவ தேவப்பய்ய தேவ மகாராஜன்

காலம்; 15ஆம் நூற்றாண்டு

செய்தி: தியாகப் பெருமான் மீது பாடப்பெற்ற வடமொழி பாடல் இசை அடிப்படையில் வெட்டுவிக்கப் பெற்றதாகும். நாக பந்தம் என்ற இக்கல்வெட்டில் இரண்டு நாகங்கள் பிணைந்துள்ள உருவம் உள்ளது. ஒன்று முழு உருவமும் பிரிதொன்று பாதி உருவமும்தான் காணப்படுகிறது, பாம்பின் உடலிலும், வெளிப் புறமும் பல கிரந்த எழுத்துக்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக உள்ளனபந்தத்தில் உள்ள எழுத்துக்களை பலகோணங்களில் படித் தாலும் அழகிய இசை அடிப்படையில் யாக்கப்பெற்ற பாடல் உருவாகும். அது தியாகப் பெருமானைப் போற்றும் கிரந்தப் பாடலாகும்.

கல்வெட்டு (TEXT)

(சமஸ்கிருதம்–கிரந்த எழுத்துக்களில் உள்ள பாடலைத் தமிழ் எழுத்துக்களில் தருகிறோம்.)

த்யாகராஜ நமஸ்ஸு
சிவாபதே கா கால
ரமா நிலையாளி

திருவாரூர் கல்வெட்டு எண்-84B

(கல்வெட்டு எண் 84ன் தொடர்ச்சி)

மாலை மாற்றுக் கல்வெட்டு

தமிழக இசை மரபில் மாலை மாற்று என்ற மரபு மிகத் தொன்மையர்னதாகும் கி பி. 7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் சீர்காழியில் பாடிய தேவாரத்தில் மாலை மாற்றுப் பதிகம் பாடியுள்ளார். இதில் முன்பிருந்து பின்பும், பிறகு பின்பிருந்து முன்பும் படிக்கும் போது ஒரே மாதிரியான பாடல் கிடைக்கும். இம்மரபைத் தொடர்ந்து கி. பி. 15ஆம் நூற்றாண்டில் ஆரூர் திருக்கோயிலில் இரண்டு மாலை மாற்றுப்

பாடல்கள் தியாகப் பெருமான் மீது வடமொழியில் பாடப் பெற்று கிரந்த எழுத்துக்களில் காணப்படுகிறது.

கல்வெட்டு (TEXT)

தாஸ யாத த்யாக ராஜ
ஜரா கத் யா
தயா ஸதா

திருவாரூர் கல்வெட்டு எண். 84C

(கல்வெட்டு எண் 84 Aன் தொடர்ச்சி)

இக்கல்வெட்டும் மாலைமாற்று மரபில் வெட்டுவிக்கப்பெற்ற வடமொழி (கிரந்த) பாடலாகும்.

கல்வெட்டு (TEXT)

க தி ஸாத நதான ரக்ஷா
க்ஷார தாந நதஸாதிக

திருவாரூர் கல்வெட்டு எண்-84 D

(கல்வெட்டு எண் 84 Aன் தொடர்ச்சி)

முதலில் ஒரு கல்வெட்டுப்பாடலும் (வடமொழி - கிரந்தம்) பின்னர் சக்கரபந்தம் ஒன்றும் உள்ளது.

கல்வெட்டு (TEXT)

கோபுரமந்த : புரம் ப
நிருபுரமபி நைவ
வித்விஷாம ஸஹஸ்தே
ஸ்ரீ கோப திப்ப நிருபதே
த்ர புராந்தக நாம
தே ஸார்த்தம்

(சக்கரபந்தம்)

திருவாரூர் கல்வெட்டு எண்-85

இடம்: சண்டிகேசர் திருக்கோயில் புறச்சுவர்கள் மற்றும் கொடுங்கைகளில் உள்ளது.

மன்னன்: சோழர்கள் கால கல்வெட்டு

குறிப்பு: இக்கல்வெட்டு இதுவரை படி எடுக்கப்பெறவில்லை மிகப்பெரிய இக் கல்வெட்டில் நில விலை ஆவணங்கள் பற்றிய செய்திகளே உள்ளன.

திருவாரூர் கல்வெட்டு எண் 86

இடம்:- கமலாம்பாள் திருக்கோயில் முன் மண்டபம் கிழக்கு நோக்கிய சுவரில் உச்சிஷ்ட வினாயகர் கோயிலை ஒட்டி உள்ளது.

மன்னன்: பாண்டியமன்னன் வீரபாண்டிதேவர்

காலம்: ஆட்சியாண்டு இருபத்து ஒன்று

செய்தி: கேய மாணிக்க வளநாட்டுத் திருவாரூர் கூற்றத்து செல்வத் திருவாரூரில் சுந்தரபாண்டியன் திருவீதியில் வடசிறகில் சோழவினாயகப் பிள்ளையார் கோயில் திருப்பணி செய்வித்த அரங்கில் ஆடுவான் என்பார் அப்பிள்ளையார்க்கு திருநாமத்துக் காணியாகவிட்ட நிலத்தின் நான்கெல்லைகளை இக் கல்வெட்டு விவரிக்கின்றது.

கல்வெட்டு (TEXT)

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கோமாரபன்மர் திருபுவனசக்கரவர்த்திகள்
வீரபாண்டிய தேவர்க்கு யாண்டு உயக ஆவது
இஷப நாயிற்று பூர்வபட்சத்து

2 பூசத்துநாள் கேயமாணிக்க வளநாட்டு திருவாரூர்
கூற்றத்து செல்வ திருவாரூர் சுந்தர பாண்டியன்
திருவீதியில் வடக்கில் சிறகில்

3 இச் சோழ விணயக பிள்ளையார் திருக்கோயில்
திருப்பணி செய்விக்கும்

4 அறங்கில் ஆடுவானேன் இப்பிள்ளையார்க்கு காணியாக

... ...

5 நாமத்துக் காணிக்கு விட்ட இத்திருவீதியில் .....
கீழ்பார்க்கெல்லை தமிழ் பல்லவரையன் மனைக்கும்
தென்பார்க்கெல்லை ..

6 லெஇப்பிள்ளையார் திருவிருப்பு தலை அகலங்கோல்
அஞ்சிலை நூழி நாற்பத்து ஏழு குழிக்கும்
கிழக்கெல்லை இற்றைநாளால் இவர்க்கு திருநாமத்துக்
காணியாக ..

7 விலையில் நடுவுபட்ட தலை அகலங்கோல்
நாலே முக்கால் குழி நாற்பத்தைந்திற்கும் ..

8. நாற்பத் தைந்தும் குழி இதன் வடக்கும் கெல்லை .. ..

9. தென் பார்க்கெல்லை தமிழ் பல்லவரையன் மனைவாய் .., ...
திரு நாமத்துக் காணியாக

10 கொண்ட பிள்ளை மனைக்கு வடக்கு மேற்பார்க்
கெல்லை சொக்கலுடையார் உய்ய கொண்ட
பிள்ளை தோட்டத்துக்கு ... ...

11 இந் நான் கெல்லையுள் நடுவுபட்ட
நாருநூ-ம் இக்குழி
நூற்றம்பத்தைந்தும் இருநூறும் திருநாமத்துக்
காணியாக... ... .

(இக் கல்வெட்டின் ஒரு பகுதி உச்சிஷ்ட விநாயகர் கோயில் கட்டுமானத்தினுள் காணப்படுகிறது).

திருவாரூர் கல்வெட்டு எண்-87

இக் கல்வெட்டு கிழக்கு இரண்டாம் கோபுரத்தின் மேற்குப் புற அதிஷ்டானத்தின் (வட பகுதி) கண்டப் பகுதியில் உள்ளது. காரை மிகுதியாக பூசப்பட்டுள்ளதால் படிக்க இயலவில்லை. இது வரை படி எடுக்காத கல்வெட்டுக்களுள் இதுவும் ஒன்று.

திருவாரூர் கல்வெட்டு எண்-88

இக் கல்வெட்டு கிழக்கு இரண்டாம் கோபுரத்தின் நுழைவு பகுதியில் வடபுறம் உள்ளது. இக் கல்வெட்டு இதுவரை படி எடுக் கப்பெறவில்லை; சுண்ணாம்பு பூச்சினால் படிக்க இயலவில்லை,

திருவாரூர் கல்வெட்டு எண்-89

இக் கல்வெட்டு கிழக்கு வெளி மதிலில் ஆரூரன் கல்யாண மண்டபத்திற்கு பின்புறம் உள்ளது. கி. பி. 15 - 16 ஆம் நூற் றாண்டு கல்வெட்டாக இருக்கலாம். இடங்கை வலங்கை பிரிவி னர் பற்றி இக் கல்வெட்டு கூறுகிறது. இதுவரை படி எடுக்கப் பெறவில்லை.

திருவாரூர் கல்வெட்டு எண்-90

இடம்:- மூன்றாம் பிரகாரத்தின் மேற்குப்புற சுவரில் கோபுரத்தின் இடபுறம் உள்ளது.

காலம்:- பிற்காலக் கல்வெட்டு.

செய்தி:- சம்ஸ்கிருதத்தில் உள்ள இக் கல்வெட்டு கிரந்த எழுத்துக்களில் எழுதப்பெற்றுள்ளது. இக் கல்வெட்டில் அனந்தீஸ்வரம் மற்றும் தேவ தீர்த்தம் இவைகளைக் குறிப்பிடு கிறது. பிராமணர்களால் செய்யப் பெற்ற சில புனித நிகழ்ச்சி களைப் பற்றி விவரிக்கின்றது. கல்வெட்டு வரிகள் முழுமையாக இல்லாததால் அனைத்து செய்திகளும் அறிய இயலவில்லை.

கல்வெட்டு (TEXT)

1. ஸக்தேரா க்நேயதிக பாகே தேவ தீர்த்த
2. ஸ்ய பூர்வத அநந்த்ரே ஸ்வர நாம் நாதத் ஸ்ர்வப.. ... ...
3. அநாசநம் | க | கிரயந்த ப்ராஹ்மணை புக் த்யா ... ...
4. பராயணை அத்ய புணஸ் ய திதிர்நிரு தவெ ... — ...
5. புணஸ்யதா வரா | உ | யோ ஸ்யாதஸ்யவ தி தெள .. ..
6. நரஹ குர்த்தியா ஆவ்ரஜாகரம் அநரேந்திர ஸ்வ... ....

7 ஸ மோகூம் லஹூத்தர்த் தார்வம்
ll கூ ll கூ.. ... .

திருவாரூர் கல்வெட்டு எண். 91

இடம்: கமலாலயம் எனும் திருக்குளத்தின் நடுவில் உள்ள நாகராஜர் கோயிலில் உள்ளது. துண்டு கல்வெட்டு

காலம்: பிற்காலம்

செய்தி:- நிலசாசனம் பற்றிக் குறிப்பிடும் இக்கல்வெட்டில் ஆகரவல்லபன் என்பான் இத்திருக் கோயில் கட்டுவதற்கு கல் அளித்தமை பற்றியும் கூறுகிறது.

இதுவரை கண்ட கல்வெட்டுக்கள் தவிர இத்திருக்கோயிலில் சுவற்றில் புதைந்து சுண்ணாம்பு பூச்சுக்களால் மறைக்கப்பெற்றிருக்கும் கல்வெட்டுக்கள் பல உள்ளன. மேலும் தரையில் பல இடங்களில் ஒரிரு வரி கல்வெட்டுக்கள் உள்ளன. இவற்றில் பல கலைஞர்களின் பெயர்கள் உள்ளன. ஓதுவார்கள், நயினார்கள், நட்டுவனார்கள் போன்ற பலரின் பெயர்களைக் காணமுடிகிறது. இவற்றை எல்லாம் படி எடுத்துத் தொகுத்தால் திருவாரூர் திருக்கோயிலின் வரலாற்றுச் செய்திகளை மேலும் அறிய இயலும். எதிர்காலத்தில் இதனைச் செய்ய முனைவோம்.

பின் இணைப்பு

சயாம் சிற்பம்-பர்மா எழுத்து-தமிழர் கொடை

(இரா. நாகசாமி, தொல்வியல் பேரறிஞர்)

தொல்வியல் பேரறிஞர் டாக்டர் இரா. நாகசாமி அவர்கள் தினமணி நாளேட்டில் ஆரூர் சிற்பம் பற்றி எழுதிய கட்டுரை:

''சார், விபூதி பிரஸாதம் வாங்கிக்கோங்கோ!'' என்று ஏதோ நினைப்பில் மூழ்கி இருந்த என்னைக் கூப்பிட்டார் தியாகராஜ சுவாமியை ஆராதிக்கும் குருக்கள். நான் திருவாரூரில் தியாகராஜ சுவாமி சந்நிதியில் அப்பொழுது நின்று கொண்டிருந்தேன். திருவாரூர் தியாகராஜரின் தெய்வீக அழகை எப்பொழுதும் பார்த்துக் கொண்டே இருக்கலாம். எவ்வளவு பெரியார்களின் மனத்தில் பக்திப் பெருக்கையும், நுண்ணிய கலை உணர்வையும், இசை வெள்ளத்தையும் தோற்றுவித்த பெருமான் இவர்! அப்பர், சம்பந்தர், சுந்தரர், மனுநீதி சோழர், முசுகுந்த சக்ரவர்த்தி போன்ற ஆன்றோர்கள் எல்லாம் உய்ந்த இடம். முதலாம் இராஜேந்திர சோழன் காலத்தில் அவனுடைய அணுக்கி பரவை என்பவள்தான் இப்பொழுதுள்ள தியாகேசர் கோயிலை கருங் கல்லால் கட்டினாள். அவளது பக்தியில் இராஜேந்திர சோழனுக்கு அளவில்லாத ஈடுபாடு. அவளைத் தன் தேரில் ஏற்றித் தன் அருகில் வைத்துக் கொண்டான். திருவாரூரைச் சுற்றி உலாவாக அழைத்து வந்தான். தியாகேசர் முன்னர் இருவரும் அருகருகே நின்று வணங்கினர். அந்த இடத்தில் இராஜேந்திரன் ஒரு விளக்கு செய்து வைத்தான். அந்த இடத்தில்தான் நான் இப்பொழுது நின்று கொண்டிருந்தேன். சோழர்களின் மனத்துக்குப் பிடித்த தெய்வம் தியாகேசர். அது போல் பின்னர் தஞ்சையை ஆண்ட மராத்திய மன்னர்களும் தியாகேசரிடம் அளவிலாப் பக்தி பூண்டிருந்தனர். மராத்திய மன்னர்கள் காலத்தில் திருவாரூர் தியாகேசப் பெருமான் மீது பல நாட்டிய நாடகங்கள் இயற்றப்பட்டன. அவ்வாறு இயற்றப்பட்ட ''தியாகேசர் குறவஞ்சி'' என்ற நாடகம் அண்மைக்காலம் வரையில் இக்கோயிலில் நாட்டியமாக நடிக்கப் பட்டு வந்தது. இவையெல்லாம் அப்பொழுது என் நினைவிற்கு வந்தன.

தியாகேசருக்கு பக்கத்தில் இரண்டு வாள்கள் உறையிட்டு வைக்கப்பட்டிருக்கும். ராஜா அல்லவா தியாகராஜர் ஆதலால்

அவர் அருகில் வேறு எங்கும் காணமுடியாத இரண்டு வாள்களைத் தரிசிக்கலாம். பண்டைய காலத்தில் அரசர்கள் அவை தெய்வ சக்தி உடையனவாகக் கருதினர். அவற்றிற்கு வழிபாடும் செய்தனர் தெய்வத்திடமிருந்து தங்களது வாள்களைப் பெற்றுப் போருக்குச் செல்லும் மரபும் உண்டு. தியாகராஜரின் அருகில் வைக்கப்பட்டு இருக்கும் இந்த வாள்களைப் பார்த்தபோது, சோழ அரசுகளுடைய நினைவும் அவர்கள் காலத்தில் இருப்பது போன்ற ஒரு பிரமையும் எனக்கு இருந்தது. அந்த நிலையில் ஆழ்ந்திருந்ததால் ஆராதனை செய்யும் குருக்கள் வந்ததையே நான் கவனிக்கவில்லை. அதனால் தான் அவர் என் கவனத்தைத் திருப்ப வேண்டியதாயிற்று.

பழைய வரலாற்றிலும் கலையைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்த எனக்கு அவர் கையில் வைத்திருந்த விபூதிபாத்திரம் கண்ணில் பட்டது. விபூதியை வாங்கிக் கொண்டே அந்தப் பாத்திரத்தை உற்றுப் பார்க்க ஆரம்பித்தேன். அவர் அந்தப் பாத்திரத்தை எனக்குக் காண்பித்தார். வெள்ளியினாலான அந்தப் பாத்திரம் எனக்கு வியப்பை அளித்தது. அது நம் நாட்டில் செய்யப்பட்டது அல்ல. பர்மா, மலேசியா முதலிய நாடுகளைத் தாண்டி சயாம் நாட்டில் செய்யப்பட்ட அருமையான ஒரு கலைப் பொருள் அது. வெள்ளியால் ஆனது; அதைச் சுற்றிலும் எழிலான உருவங்கள் இடம் பெற்றிருக்கின்றன. அனுமன், வாலி, சுக்ரீவன், காகுத்தன் அவர்களது உருவங்களும் உயிர்த் துடிப்போடுகூடிய யானை, சிங்கம் இவைகளின் உருவங்களும் அதில் காணப்படு கின்றன. சிங்கத்தினுடைய முகம் சயாம் நாட்டுச் சிற்பம் என்று தெளிவாகக் காட்டுகிறது. அதேபோல்தான் வாலி, சுக்ரீவன், அனுமன் ஆகியோருடைய உருவமும் ஆடை அணிகலன்களும் காணப்படுகின்றன. ஆனால் இத்தப் பாத்திரத்தின் விளிம்பில் தமிழில் ஒரு வாசகம் பொறிக்கப்பட்டிருக்கிறது. அது ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டதாகத் தோன்றுகிறது. அதில்

"வங்காரம், பேரையூர், சடையப்பப்பிள்ளை மகன் ஆறுமுகத்தாபிள்ளை, தியாகராஜசாமிக்கு உபயம், எடை ரூ. 23.5..." என்று தமிழ் எழுத்தால் எழுதப்பட்டிருக்கிறது. இது எனக்கு வியப்பை அளித்தது. அந்தப் பாத்திரத்தை வாங்கிப் பார்த்தேன். அதன் அடிப்பகுதியில் புரியாத எழுத்தில் ஏதோ எழுதியிருந்தது. நம்பர் 89 என்று ஒரு எண்ணும், ஒரு சிங்கத்தின் உருவமும் அதில் காணப்பட்டன (படம்-2). அதைப் படம் எடுத்து வந்தேன். அவை அடையாறில் வசிக்கும் நண்பர் டும்னைசன்

என்பவரிடம் காண்பித்தேன். அவர் அது பர்மிய மொழியில் பர்மிய லிபியால் எழுதப்பட்டிருக்கிறது என்று கூறினார். அவர் அன்புடன் வாசித்துத் தந்த செய்தி இது.

''மாங்குவே என்ற பெண்மணியுடையது இந்தப் பாத்திரம். அதனுடைய எடை 17 ரூபாய் 12 அணா'' என்று எழுதப் பட்டிருக்கிறது என்று கூறினார். 89 என்பது அந்தப் பெண்மணி தன்னுடைய பதிவேட்டில் இட்ட எண்ணாக இருக்கக்கூடும். ஆனால் இந்தப் பாத்திரத்தின் கலைப் படைப்பை காணும் பொழுது இது பர்மாவில் செய்யப்பட்டது அல்ல என்று தெரிகிறது. சயாம் நாட்டிலிருந்து பர்மாவுக்கு வந்து அங்கிருந்து தமிழ்நாட்டைச் சார்ந்தவர் அதை வாங்கி வந்து திருவாரூரில் தியாகேசர் கோயிலில் கொடுத்து இருக்கிறார் என்பதும் தெரிய வந்தது. கலைப் பொருள்கள் தேசத்தைக் கடந்து, காலத்தைக் கடந்து, மனித குலத்தை இணைக்கவல்ல சக்தி வாய்ந்தவை என்பதை இப்பாத்திரம் நமக்கு எடுத்துக் காட்டுவது போல எனக்குத் தோன்றிற்று.

பல பொருள்களை வெறும் உயிரற்ற கலைப் பொருள்களாகவே காண்போர் உண்டு. ஆனால் நம் நாட்டவர் எவை எல்லாம் உயர்ந்த படைப்புகளோ அவற்றை தெய்வத்துக்கு அர்ப்பணித்து அதில் பேரின்பம் கண்டனர். இதைக் கொடுத்த ஆறுமுகத்தா பிள்ளை அந்த மரபைப் பின்பற்றி இருக்கிறார். எத்தனையோ இலட்சக் கணக்கான மக்களுக்கு இந்த அருமையான கலத்தில் இருந்து தியாகேசருடைய அருட் பிரசாதமாக விபூதி கொடுக்கும் கலனாக இது திகழ அந்த அன்பர் நினைத்து கோயிலுக்கு கொடுத் திருக்கிறார். கலைகள் வந்து சேரும் புண்ணிய இடமாக கோயில்கள் திகழ்ந்தன என்பதற்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டு என்ற நினைப்போடு விபூதியையும் தரித்துக் கொண்டு வெளியே வந்தேன். அப்போது என் மனத்தே சயாம், பர்மா, இந்தியா ஆகிய மூன்று நாடுகளிலும் நான் இருப்பது போன்ற உணர்வு வெள்ளத்தில் மிதந்து வந்தேன்.

தமிழ்த்தாத்தா உ. வே. சாமிநாதையர் அவர்களின்
மாணவர் உயர்திரு வரகூர் **வ. வேணுகோபாலன்**
அவர்களின்

திருவாரூர் பற்றிய கட்டுரை

சோழ மண்டலத்தில், காவிரியின் தென் பகுதியில் விளங்கும் திருநகர் திருவாரூர். சரித்திரம், இலக்கியம், புராணம் ஆகியவற்றுல் புகழ் கொண்ட நகர் திருவாரூர்.

திருவாரூரின் பழமையைப் பற்றிச் சில கருத்துக்களை அறிவது இன்றியமையாததொன்றுகும்.

''சோழமன்னர்கள் முடி சூடுவதற்குரிய நகரங்கள் ஐந்தனுள் ஒன்றாக இருந்ததன்றி, அவர்களுடைய இராசதானியாக உள்ளதும், சங்கர சேவகன் என்னும் சோழராசனது வேண்டுகோளின்படி, ஸ்ரீதியாகேசர் அரச வடிவம் தாங்கிப் பல வருடம் அரசாட்சி செய்ததும், மனுநீதிச்சோழர் ஒரு பசுவின் குறையைத் தீர்த்தற்பொருட்டு, தம் செல்வப் புதல்வன் மீது தேரைச் செலுத்தித் திருவருளை வெளிப்படுத்தியதும், ஸ்ரீதியாகேசர் பாதம் சிவக்கப் பசுந்தமிழ் வேண்டிப் பரவை தன்பால் தூது அன்று சென்ற பெருமை வாய்ந்ததும் ஸ்ரீசுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத்தொகையை அருளிச் செய்தற்கும், தெய்வத் திருமுறைகளை வெளிப்படுத்திய அபயகுல சேகர மகாராசா முதலியோர் அரசாட்சி, செய்தற்கும் இடமாயிருந்ததும் இத்தலமே''

[உ. வே. சாமிநாதையர்—முன் திருவாரூருலா]

இவ்வாறு ஸ்ரீமத் ஐயரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

'கி. மு. 3, 4ம் நூற்றாண்டில் திருவாரூரை ஆட்சிபுரிந்த மனுச் சோழனின் திருக்குமரன் குளக்கோட்டன் என்பவன், இலங்கை சென்று அந்நாட்டிலே, கோயிலும் குளமும் ஏற்படுத்தியவன், என்று இலங்கை வரலாறுகளான மகாவம்சமும் தீபவம்சமும் கூறுகின்றன, அப்போது இலங்கையில் ஆட்சிபுரிந்த பெண்மணி 'ஆடகசுந்தரி' என்றும் கூறுகின்றன.

கி. மு. 4, 5 நூற்றாண்டுகளுக்கு முற்பட்டவராகத் தமிழ் வரலாறு, தெளிவுறக் கூறும் நூல் தொல்காப்பியம். தமிழ் மொழிக்கு இப்போது முதல் நூலாக அறியப் பெறும் நூல் தொல் காப்பியம். தமிழ் மூவேந்தர்களைப் பற்றித் தொல்காப்பியம் குறிப்பிடுவது

வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பில்
போந்தை வேம்பே ஆரென வரூஉம்
... ... மாலை சூடிய மாபெருந்தானை
யரான சேரன், பாண்டியன், சோழன்

மூவரையும் குறிப்பிடுகின்றது. போந்தை என்பது பனம்பூ, வேம்பு என்பது வேப்பம்பூ' ஆர் என்பது ஆத்திப்பூ. இம்மூவகைப் பூக்களையும் அடையாளமாகச் சூடியவர் மூவேந்தர். தொல்காப் பியத்தில் குறிப்பிட்டவாறு 'ஆர்' என்ற ஆத்திப்பூ மாலையைச் சூடியவர் சோழர் என்பது விளங்கும் உண்மை.

சோழ மன்னர்கள் ஆத்திமாலை சூடிய பெருமை உடையவர்கள். 'ஆர்' என்ற ஆத்திப் பூவை அடையாளப் பூவாக அணிந்தவர்கள். அதுமட்டுமன்று 'ஆர்' என்ற பெயரைக் கொண்ட ஊரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தவர் சோழ மன்னர்.

ஆர் ஊர் என்பது, சோழ மன்னர்களின் அடையாளப்பூவான ஆத்திப் பூவைக் குறிப்பிடும் ஊராகும்.

உறந்தை, பழையாறை, குடந்தை, தஞ்சை போன்ற சோழர் தலைநகரங்களுக்கு முன்னரே திரு ஆரூர் சோழர் தலைநகராக விளங்கியது என்பது அறிய வேண்டிய உண்மையாகும்.

எனவேதான் சோழ மன்னர்கள் ஆரூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்ததுடன், தியாகேசரையும் ஆட்சி புரியச் செய்து வழிபட்டு வரும் மரபு ஏற்பட்டதாகும்.

சோழருக்கும் ஆரூருக்கும் உள்ள பிணைப்பு உய்த்துணரத் தக்கது. சோழ மன்னர் தலைநகராக விளங்கிய ஆரூரில், வழிவழியே சோழ மன்னர் காலம் முதல் மராட்டியர் காலம் வரை அத் தொடர்பு மாறவில்லை என்பதும் பல நூற்றுக்கணக்கான கல்வெட்டுச் சான்றுகளாலும் இலக்கியங்களாலும் அறிய முடிகின்றது.

கி.பி. முதல் இரண்டு நூற்றாண்டுக் காலத்தில் விளங்கிய கடைச் சங்க காலத்துக்கு முன், இடைச் சங்கம் முதற் சங்கம் ஆகிய கால எல்லையில், திருஆரூரே சோழர் தலைநகர் என்பதை அறிய முடிகிறது.

பிற்காலச் சோழர்களும், தங்கள் வழிபடு கடவுளான திருவாரூர் ஸ்ரீ தியாகராஜர்க்கு உரிய, தியாகக்கொடியும், தியாக விநோதன் என்ற பெயரும் கொண்டனர் என்பதும் அறியத்தக்கது. (Sil V 175)

கி.பி. 12ம் நூற்றாண்டின் இறுதியில் மகாகவி கம்பர் தம் காலத்துச் சோழமன்னனை மூன்றும் குலோத்துங்கனை

:''சென்னிநாட் டெரியல் வீரன் தியாகவிநோதன்,
தெய்வப் பொன்னி நாட்டு''
(ராமா. யுத். மருத்துமலை. 58)

என்று புகழ்கின்றார். ஆரூர்த் தியாகேசனின் பெயரைச் சோழ மன்னன் புகழ் பெயராகக் குறிப்பிடுகின்றார். இம் மன்னனின் மெய் கீர்த்தியில் ''வீரக் கொடியொடு தியாகக் கொடி எடுத்து'' என்று கூறப்படுகின்றது.

இம்மன்னன் காலத்து அதிகாரிகளும் 'தியாக விநோதன்' என்ற பெயரைத் தாங்கினர். ''தியாகவிநோதன்''
(MER. No 260/1920)

''தியாகவிநோதன் மூவேந்த வேளான்'' (28/1927)
''தியாகவிநோதபட்டன்'' (169/1927)

மேலும் சில ஊர்களுக்கும் தியாகவிநோதன் பெயரை இம்மன்னன் வழங்கச் செய்ததை அறியலாம்

''தியாகவிநோத நல்லூர்'' (SII. Vol, VIII P 254)
''தியாகவிநோதனாற்றூர்'' (290/1927)

இம்மன்னனுக்கு முன்னிருந்த மன்னரும் தியாகபரணன், தியாக சமுத்திரம் என்று பெயர் கொண்டிருந்தமை அறியலாம்.

எனவே, ஆரூர்த் தியாகேசரிடம் சோழமன்னர் கொண்டிருந்த பேரபிமானத்தையும் பக்தியையும் நன்குணரலாம்.

ஐந்து தமிழிசை நாட்டிய நாடகத்தில் ஆரூர்ச் செய்திகள்

கி. பி. 1684–1172 வரை தஞ்சை வளநாட்டின் அரசனாக ஆட்சிபுரிந்த சகசிமன்னன் மகாராஷ்டிர வம்சத்தின் குல தீபமாகத் தோன்றியவர்.

தென்னகத்தில் சோழ மண்டலத்தில் ஆட்சி புரிந்த சகசி மன்னனின் ஆட்சியில் பல்கலையும் வளர்ந்தது. தமிழ், தெலுங்கு, மராத்தி, வடமொழி, ஹிந்துஸ்தானி மொழியில் வளர்ச்சி பெற்றன. இதற்கு எடுத்துக்காட்ட பஞ்சபாஷா விலாஸம் என்ற நாடகம்.

தமிழ் மொழியில் தேர்ந்த புலவர்களும் இம்மன்னன் அவையில் சிறப்பித்தார்கள். தமிழ் மொழி வளர்ச்சிக்கு இம்மன்னன் பேராதரவு தந்தவன். திருவாரூர் வைத்யநாத தேசிகர் முதலானோர் இம்மன்னனைப் பெரிதும் பாராட்டினர்.

இம்மன்னன் வேண்டுகோளின்படி, தமிழ் இசை நாட்டிய நாடகங்கள் ஏழு இயற்றப்பெற்றன திருவாரூர் தியாகேசக் குறவஞ்சியும், சந்திரிகாஹாஸை விலாஸம் என்ற நாடகமும், திருவாரூரைப் பின்னணியாகக் கொண்டு படைக்கப் பெற்ற இசை நாட்டிய நாடகங்கள்.

தியாகேசர் குறவஞ்சி முழுமையாக, ஆரூர் வீதி விடங்கப் பெருமானான தியாகராசரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்ட இசை நாடக நூல்.

சோழ நாட்டை ஆட்சி புரிந்த மராத்திய மன்னன் சகசி சோழமரபு. போற்றிக் காத்தவன் சோழ மன்னர்களின் குலதெய்வமான ஆரூர்த் தியாகராசரை, சகசி மன்னனும், பெரிதும் ஈடுபட்டு வழிபட்ட சிறப்பை பன்னூல்களும், இக்குட முழக்கு விழாவில் திரு. பாலசுப்ரமணியன் அரிதின் முயன்று படைத்து வெளியிடும், நூலில் நன்கு காணலாம்.

ஆரூர் தியாகராசரையே, சோழர் குலத்தினர் வழிபடும் கடவுளாகக் கொண்டவர்கள். மாமன்னன் இராஜராஜன், தாம் எழுப்பித்த ராசராசேச்சுரம் பரமசுவாமியை, தஞ்சாவூரு

விடங்கன் என்று போற்றி வழிபட்டுப் புகழ் பெற்றான். மாமன்னன் இராஜராஜன், சதய நட்சத்திரத்தில் பிறந்தவன்.

மராட்டிய மன்னன் சகசி வேந்தனும் சதய நட்சத்திரத்தில் பிறந்தவன்.

சந்திரிகா ஹாசை நாடகத்தில் ''சதயன் அனைவரையும் காக்க வல்லோன்'' (பா. 25) என்று நாடக ஆசிரியர் குறிப்பிடு கிறார்.

சதய நட்சத்திரத்தில் பிறந்த மாமன்னன் இராஜராஜனும் சகசியும், திருவாரூர் தியாகராஜரை வழிப்பட்ட சிறப்புக்கு எத்துணைப் பொருத்தம் உள்ளது வன்பதை அறியலாம்.

''சோழ மண்டலாதிபன் (30) சோழ இராஜேந்திரன் (8) ''சோழேந்திரன்'' (10) (11) (12) (20) என்றே, தமிழ் நாடகம், சகசியைக் குறிப்பிடுகிறது.

சந்திரிகா ஹாசை நாடகம், திருவாரூரில் சகசி மன்னன் அரண்மனையில் நிகழ்ந்தது என அறியப்படுகிறது. (நாடகம் பக்கம் 47)

மாளவ நாட்டு மன்னனின் மகள் சந்திரிகா ஹாஸை, திருவாரூரில் கோயில் கொண்டுள்ள வன்மீக நாதரை வழிபட்டு. தனக்கு தகுதியுள்ள கணவனை அடைய வேண்டி பூசனை செய் கிறாள். அங்கே வந்த சிவயோகசித்தன், சந்திரிகா ஹாசைக்கு உதவுகிறார். சகசி மன்னன் மகாசிவபக்தன், ஆனதால் வன்மீக நாதனின் அருளால் தான் சகசியை அடையமுடியும். அம்மன்னனே உனக்கு ஏற்ற கணவன் என்றுகூறி, சகசிக்கும் சந்திரிகா ஹாசைக்கும் மணம் முடித்து வைக்கிறார்.

இந்நாடகம், கமலாபுரம் என்ற திருவாரூரில் வன்மீக நாத சுவாமி கோயிலில் நிகழ்ந்த நிகழ்ச்சியாகக் கூறப்பட்டுள்ளது.

நாடகத்தின் ஆரம்பமான மங்கள சுலோகத்தில், 'மகனீய தியாகேசுனிகி மங்களம்' என்றும் 'மாசிவ தியாகேசுனிகி மங்களம்' என்றும் கூறப்படுகிறது.

நாடக நூலின் காப்பு விருத்தத்தில்

''அந்தமாம் திருவாரூரில் அருள்கமலாலயம்மன்
மைந்தனும் விட்டலாசல் மதகரி காப்புத்தானே''

என்று ஆரூர்க் கோயில், கமலையம்மன் விட்டவாசல் விநாயகரையும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாடகத்தின் தரு 5ல் ''வாசவ ஸந்நுதா சாமகானப்பிரியா வன்மீகேசுவரா'' என்று எட்டு வரிகளிலும் வன்மீகேசுவரரைக் குறிப்பிடுகிறது.

தரு 22 ல் ''அளகைப் பதியூரா, கமலாலயம்மனே வாழ்த்திய கொடை கர்ணு சகசேந்திரா'' என்று சகதி புகழப்படுகிறான்.
தரு 28ல் ''அன்பாய் கமலைக்கு அனேகம் அருச்சிக்கும் சகசேந்திர மோகா'' என்று சகசியைச் சிறப்பிக்கின்றது.
தரு 29ல் ''கமலை மாதைப் பணிதீரா'' என்று கூறுகிறது.
தரு 31ல் ''சிறந்த கமலை மாதை தினம் கருத்தினில் மருவ நிற்பவனுக்கு மங்களம்'' என்று கூறுகிறது.

சோழ மன்னர்களால் வழிபடப் பெற்ற ஆரூரில் கோயில் கொண்ட வன்மீகேசுவரர், தியாகேசர் கமலையம்மன் விட்டவாசல் கணபதி ஆகியோரை, மராட்டிய மன்னனை சகசி மன்னன் வழிபட்ட பெருமைக் குரியவன் என்பதும், சோழ மன்னரைப் போன்றே, சோழ மண்டலத்தை ஆட்சி புரிந்த மன்னன் சகசி, சோழ மரபு வழியே திரு ஆரூர்த் தலத்தில் ஈடுபாடு கொண்டிருந்த சிறப்பை சந்திரிகா ஹாசை நாடகம் சிறப்புறச் செப்புகின்றது.

திருவாரூர்த் தேர்

''திருவாரூர் தேரழகு திருவிடைமருதூர் தெருவழகு'' என்பது ஒருபழமொழி தமிழகத்து திருக்கோயில்களில் உள்ள தேர்களிலெல்லாம் சிறந்ததொரு அழகும், தொன்மைச் சிறப்பு முடையது ஆரூர் தேர். இதன் வடிவமைப்பு மற்ற ஊர்த் தேர்களினின்றும் மாறுபட்டது. வட்ட அல்லது எண்பட்டை வடி, அடியமைப்பு இல்லாமல் சதுர, செவ்வக அமைப்புகளிலேயே அடிப்பீடமும், தேர் சூரையும் அமைந்துள்ளது. இங்கு தியாகப் பிரமான், கமலாம்பாள் முற்றும் பரிவார தேவதைகளுக்கு கெல்லாம் தேர் உண்டு. தேர்த்திருவிழாவில் திருக்கோயிலை சுற்றியுள்ள நான்கு திருவீதிகளிலும் ஆரூர் வீதிவிடங்கராம் தியாகப்பெருமான் பவனி வருவார்.

சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பு இத் திருக்கோயிலின் தொன்மைத் தேர் பெருந் தீ விபத்திற்குள்ளாகி சிதைந்தது. பின்னர் புதியதோர் தேர் செய்யப்பெற்றது. புதிய தேருக்கு அண்மைக் காலத்தில் திருச்சி பாரதமிகுமின் நிறுவனத்தினர் தேர் அச்சும், சக்கரங்களும் உருவாக்கித் தந்தனர் தற்போதுள்ள தேர்களில் மிக எழில் வாய்ந்த தேர்சிற்பங்கள் (மர சிற்பங்கள்) உள்ளன. சென்னையில் அண்மையில் கட்டப்பெற்ற வள்ளுவர் கோட்டம் கூட திருவாரூர் தேரின் வடிவமைப்பில் கட்டப் பெற்றுள்ளது

தமிழகத்திலுள்ள மிகப் பெரிய தேர்களான திருநெல்வேலி நெல்லையப்பர் திருத்தேர், ஸ்ரீவில்லிபுத்தூர் திருத்தேர்கள் போன்று ஆரூர் தேர் மிகப்பெரிய தேராகத் திகழ்கிறது. ஆரூர் கிழக்கு வீதியில் எல்லா தேர்களுக்கும் உரிய திருத்தேரேற்றுக் கூடங்கள் எழிலோடு அமைந்துள்ளன. மேலும் இத்தேரேற்று கூடங்களை ஒட்டியே திருத்தேர்கள் நிலை அமைந்துள்ளது. இயற்கையின் சீற்றங்களினால் பழுதுறா வண்ணம் தகுந்த பாதுகாப்பு கொடுக்கப் பெற்று தேர்கள் நிலையில் உள்ளது பாராட்டுதற்குரியதாகும்.



ஆருர் தேர்


கதிகாடடி
முறைகாரி-
அஞ்சாதே
வரி-
சந்திரசேக்
சாரிகடடெ